
"ஸைக்கோ"
ஸாருநாதன்
கல்கி ராஜேந்திரன்

# ஸைக்கோ ஸாரநாதன்



கல்கி ராஜேந்திரன்

வானதி பதிப்பகம்
23, தீனதயாளு தெரு,
தி.நகர், சென்னை – 17.

# முன்னுரை

**ஹி**ந்து நாளிதழில் 1971 ஜூலை 28ஆம் தேதி இடம் பெற்றிருந்த ஒரு செய்தி:

பம்பாய், ஜூலை, 27உ, -ஸிந்தி தால்வாய் என்றும் ஒரு பெயர் கொண்ட ராமன் ராகவ், சித்தம் சரியில்லாதவன் ஆதலால் தன் சார்பில் வழக்குரைக்க இயலாதவன் என்று பம்பாய் உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மகாராஷ்டிர அரசு சுப்ரீம் கோர்ட்டுக்கு வழக்கைக் கொண்டு சென்றிருக் கிறது.

1967-69 காலகட்டத்தில் ராமன் ராகவ் குறைந்த பட்சம் ஒன்பது கொலைகளாவது புரிந்திருக்க வேண்டும் என்று அவன் மீது குற்றம் சாட்டப் பட்டிருக்கிறது. மேலும் 1956 முதல் 1969 வரை பதினாலு வருடங்களில் அவன் மொத்தம் நாற்பத் திரண்டு கொலைகள் புரிந்திருக்கலாம் என்று கருதப் படுகிறது.

ஸெஷன்ஸ் கோர்ட் ராமன் ராகவ்வுக்கு தூக்குத் தண்டனை விதித்தது. இதை உறுதிப்படுத்த ஹைகோர்ட்டில் வழக்கு நடந்தபோது ராமன் ராகவ் சார்பாக வழக்காடிய வக்கீல், அவன் சித்த சுவாதீனம் இல்லாதவன் என்றும் அதனால் தன் சார்பாக வழக்குரைக்க இயலாதவன் என்றும் சாட்சியங்கள் வழங்கினார். இதை ஏற்று ஹைகோர்ட், மரண தண்டனையை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை ஒத்திப்போட்டது.

இவ்வாறு ஹைகோர்ட் செய்த முடிவை எதிர்த்தே, தற்போது மகாராஷ்டிர அரசு வழக்கை சுப்ரீம் கோர்ட்டுக்கு எடுத்துச் சென்றிருக்கிறது.

★ ★ ★

**வா**லிப வயதில் ஒரு முறை கொடைக்கானல் சென்று அதன் அழகில் சொக்கிப்போனேன். எந்த அளவுக்கு எனில், சேமித்த பணத்தைக் கொண்டு அங்கே இருபது செண்ட் நிலம் வாங்கி, கடன் பெற்று சிறு வீடு கட்டும் அளவுக்கு. Melody (இன்னிசை) என்று அந்த வீட்டுக்குப் பெயர் சூட்டினேன். ஐந்தாறு ஆண்டுகள் அந்த வீட்டை குடும்பத் தினருடன் விடுமுறைகளில் பயன்படுத்தினேன். அதன் பிறகு ஒரு பொருளாதார நிர்ப்பந்தம் காரணமாக வீட்டை விற்றுவிட்டேன். எனினும் இனிய நினைவுகள் நிலைத்தன.

எனக்கு எத்தனையோ இன்பமளித்த இடத்துக்கு ஒரு சிறு கைமாறுபோல 1972ல் கொடைக்கானலை நிலைக் களனாகக் கொண்டு இந்த நாவல் எழுதினேன். இதில் வரும் பத்மநாபன் குடும்பம் என் குடும்பமேதான். ஆனால் மற்ற கதாபாத்திரங்கள் முற்றிலும் கற்பனை. சம்பவங்களும் அப்படியே. கொடைக்கானல் குறித்து தரப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை. 1972ன் விலைவாசிகள் மட்டும் இன்று பொருந்தாது.

முன்பக்கத்தில் ராமன்ராகவ் பற்றி ஓர் உண்மைச் செய்தி படித்தீர்கள். அந்தச் செய்தி என்னை ரொம்பவும் பாதித்தது. ‘அவனை சைக்கோ ஸாரநாதன் என்ற பெயரில் கொடைக் கானலில் உலவ விட்டால் என்ன நடக்கும்?’ என்ற கற்பனையின் விளைவுதான் இந்த நாவல்.

என் நாவல்களை புத்தக உருப் பெறச் செய்வதில் வானதி பதிப்பக உரிமையாளர் திரு. திருநாவுக்கரசு காண்பித்து வரும் ஆர்வத்துக்கு என் இதயபூர்வ நன்றி.

**கல்கி ராஜேந்திரன்**

கஸ்தூர்பாநகர்,
சென்னை-20.

# 1. பயண ஏற்பாடு

சாருலதா திரைப் படத்தைப் பார்த்துவிட்டு மத்தியானம் மூன்று மணி அளவில் வெளியே வந்தார் 'அன்னம்!' பத்திரிகையின் துணையாசிரியரான திருவாளர் பத்மநாபன். 'ஏர்கண்டிஷன்' செய்யப்பட்டுக் குளுகுளுவென்றிருந்த தியேட்டரை விட்டு வெளியே நூற்று மூன்று டிகிரி வெய்யிலில் அடியெடுத்து வைத்ததும் சித்திரவதைக்கு உள்ளானவர் போல் தவித்தார்.

இந்த வெய்யிலில் இனி பஸ்ஸைப் பிடித்து ஆபீசுக்குப் போவதென்பது உசிதமாகப் படவில்லை அவருக்கு. வீட்டுக்குப் போவது என்று தீர்மானித்த உடனேயே உஷ்ணமும் சற்றுத் தணிந்து விட்டதுபோல் தோன்றியது!

அவர் வீட்டுக்கு வந்து சேர்ந்தபோது மணி நான்கு. அம்புஜம், "யார் அது? இந்த வேளையில்....?" என்று முணு முணுத்தபடியே தரையில் விரித்துப் படுத்திருந்த புடைவைத் தலைப்பை எடுத்துச் சரியாகப் போர்த்திக் கொண்டு வாசலுக்கு வந்தாள்.

கம்பிக் கதவு வழியாக வெளியே தன் கணவனின் உருவம் தெரிந்ததும் வியப்பும் மகிழ்ச்சியுமாக ஆணியில் தொங்கிய சாவியை எடுத்துப் பூட்டைத் திறந்தாள், "ஏது இன்னிக்கு இவ்வளவு சீக்கிரம்...?" என்று கேட்டபடியே.

''கொஞ்சம் வெளியே போக வேண்டியிருந்தது. காரியம் முடிஞ்சப்போ மணி மூணு ஆயிடுத்து. நேரே வீட்டுக்கு வந்துட்டேன்.''

''அது என்ன, உங்க ஆபீஸிலே ஏதாவது காரியம்னா சித்தெ வெய்யில் தாழ அனுப்பமாட்டாளா?''

''வெய்யில் ரொம்ப உக்கிரமா இருக்குன்னுதான் அனுதாபப்பட்டுக் கொஞ்சம் ஏ.ஸி.யை அனுபவிக்கட்டு மேன்னு போகச் சொன்னாளோ, என்னவோ?''

''ஏ.ஸி.யா....?'' என்று கேட்ட போதே சட்டென்று அம்புஜத்துக்குப் புரிந்துவிட்டது! ''மாட்னிக்குப் போயிட்டு வரேளா? அதை முதல்லேயே சொன்னால் என்ன?''

''எடுத்த எடுப்பில் சினிமாவுக்குப் போயிட்டு வந்தேன்னு சொன்னால் நீ, அவரசப்பட்டு அரங்கேறிய குழந்தை பரதநாட்டியம் ஆடுகிற மாதிரி குதிப்பியே! வீட்டுக்காரன் வேறே 'சுவரெல்லாம் வெடிப்பு விட்டுடுத்து; கண்டிராக்டர் ஏமாத்திட்டார்'ன்னு நாளைக்கு ரெண்டு தரம் புலம்பிட்டுப் போறான்!''

''ஏன் நான் டான்ஸ் ஆடினா இடிஞ்சு விழாத மாதிரி உறுதியா சொந்தத்தில் நீங்க ஒரு வீடு கட்டுங்களேன்; யார் வேண்டாங்கறா?''

''சேச்சே! இந்தக் காலத்தில் யாராவது வீட்டிலே போய்ப் பணத்தைப் போடுவாளோ? பாங்கு வட்டிகூடத் தேறாது தெரியுமா?''

''ரெண்டு லட்ச ரூபாயைக் கையிலே வைச்சுண்டு* என்ன பண்றதுன்னு தெரியாமெ முழிக்கிற மாதிரிதான் உங்க பேச்சுக் கிழியறது!''

★ 1972ல் எழுதிய நாவல். இன்று இருபது இலட்சம் இருந்தால்கூட ஒரு ஃபிளாட் வாங்க முடியாது!

''நான் லட்சாதிபதியோ இல்லையோ; அம்புஜத்தின் அதிபதியா இல்லாட்டாலும் பதியா இருக்கேனே, அது போதாதா'' -பத்மநாபன் சட்டையைக் கழற்றி ஆணியில் மாட்டிவிட்டுக் கைகால் கழுவிக்கொள்ளக் குளிய லறைக்குப் போனார்.

அம்புஜம் சிரிப்பை அடக்கிக்கொண்டு காஸ் அடுப்பில் வெந்நீர் கெட்டிலை வைத்துவிட்டு வந்தாள்.

''விமர்சனம் எழுதறேன் என்கிற சாக்கில் நீங்க மட்டும் வாரத்துக்கு மூணு சினிமா நாடகம்னு பார்த்துட்டு வந்துடறேள்.''

''என் பிழைப்பே அதுதானே? அழைக்கிறவன் 'குடும்பத் தோடு வந்து அனுபவியுங்கள்' என்று சொல்றானா?''

''எல்லாம் நீங்க மனசு வைச்சா என்னையும் அழைச்சுண்டு போகலாம்.''

''இதோ பார்! இன்னிக்கு நான் சினிமாப் பார்த்துட்டு வந்ததுக்காக நீ கோபப்படறது நியாயம் இல்லை. ஏன்னா இது உனக்கு பிடிக்காத படம்.''

''ஆமாம், அப்படிச் சொல்லித் தப்பிச்சுக்குங்கோ.''

''இல்லை, அம்புஜம், இது உண்மையிலேயே ரொம்ப உசத்திப் படம்!''

''இதைத்தான் 'ஆடிங் இன்ஸல்ட் டு இன்ஜரி'ன்னு நாலாவது ஃபாரத்திலே என் டீச்சர் சொல்லிக் கொடுத்தா.''

''அட இழவே, அதை நீ இன்னும் ஞாபகம் வைச்சுண் டிருக்கியா? இதுக்குத்தான் பெண்களைப் படிக்கவே வைக்கக் கூடாதுங்கறது. நான் சொல்லவந்தது என்னன்னா, பிரபலமா எல்லாருக்கும் பிடிக்கும்னா சத்யஜித் ரேயின் படத்தைத் தினசரி மூன்று காட்சிகள்னு போடாமல் மத்தியானம் பன்னிரண்டு மணி காட்சியாகத் திரையிடு

*வானேன்? அதுவும் வாரத்தில் ஒரே ஒரு நாள், ஒரே ஒரு காட்சி. அப்படி நலே நாலு வாரத்துக்குப் 'புக்' பண்ணி யிருக்கானாம் புண்ணியவான் இந்தப் படத்தை!"*

*"அதென்ன, நண்பகல் காட்சி? சிவராத்திரிக்கு நள்ளிரவுக் காட்சி போடுவாளே, அதற்குப் போட்டியா?"*

*"எவ்வளவு அசௌகரியமான நேரமானாலும் தரமான படங்களைப் பார்க்க ஆசைப்படுகிற தரமான ஆசாமிகள் சிரமத்தைப் பார்க்காமல் வந்துடுவா என்று தியேட்டர் காரனுக்கு ஒரு நம்பிக்கை!"*

*"ஓகோ! உங்களைத் தரமான ஆசாமி இல்லைன்னு யாராவது நெனைச்சுண்டுடப் போறாளேன்னுதான் போனேளாக்கும்!"*

*"நீ தலைகீழா மாத்திச் சொல்லறே. பிறத்தியாருக்காக எத்தனையோ பாடாவதிப் படங்களைப் பார்த்தாச்சு; அவற்றைப் பற்றி எழுதியுமாச்சு. இதை எனக்காகப் போய்ப் பார்த்தேன். விமர்சனம் எழுதச் சொல்லி யாரும் கூப்பிடக் கூட இல்லை!"*

*"அதென்னவோ என்னையும் குழந்தைகளையும் எங்கே யாவது அழைச்சுண்டு போங்கோன்னா மட்டும் உங்களுக்கு எங்கிருந்தோ திடும்மென்று ஓர் அலுப்பு வந்துடறது."*

*"இவ்வளவுதானே, உன் குறை? நாம எல்லாருமா சேர்ந்து ஜம்முன்னு கொடைக்கானலுக்குப் போயிட்டு வரலாம்; சரிதானா?"*

*சந்தோஷம் தாங்காமல், "எப்போ, எப்போ?" என்று வினவியபடி கணவனுக்குப் பக்கத்தில் இழைந்த மாதிரி ஊஞ்சலில் வந்து உட்கார்ந்துகொண்டாள் அம்புஜம். பத்ம நாபனின் காதுகளின் பின்புறமும் கழுத்தின் பின்புறமும் ஜிவ்வென்று சூடேறிச் சிவந்தன.*

அந்த இனிய துன்பத்தைத் தாங்க முடியாததால்தானோ என்னவோ அவர், "கெட்டிலிலே வெந்நீர் தளைக்கிற சத்தம் கேட்கிறதே!" என்றார்.

"உடனே துரத்திப்பிடுங்கோ! சித்தே சகஜமா இருக்கப்படாது!"

அம்புஜம் இறங்கிச் சமையலறைப் பக்கம் சென்றாள். பத்மநாபன் தமக்குள் சிரித்துக்கொண்டார்.

ஆயிற்று, இன்னும் ஒன்றிரண்டு மாதங்கள் போனால் அவர்களுக்குத் திருமணமாகி இருபது வருஷங்கள் பூர்த்தி யாகப் போகிறது. அமெரிக்கக் கணக்குப்படி "ஸெவன் இயர் இட்ச்" மூன்று முறை ஏற்பட்டிருக்க வேண்டும். கல்யாணமாகி ஏழு வருஷங்களுக்குப் பின் கணவனுக்குப் பழகிய உருவத்தில் ஓர் அலுப்பும் புதிய உருவத்தை நாட வேண்டும் என்ற ஓர் அரிப்பும் ஏற்பட்டுவிடுமாம்! இந்தக் கருத்தை மையமாகக் கொண்டு, செத்துப் போன மரிலின் மன்றோ நடித்த சினிமாகூட ஒன்று வந்ததே! ஆனால் பத்மநாபனுக்கு இப்படியெல்லாம் ஒரு சஞ்சலமும் ஏற் பட்டதில்லை என்பதோடு நாளாக நாளாக அம்புஜத்தின் மீது அவருக்குப் பிரியம் வளர்ந்துகொண்டே போயிற்று. இது அவருக்கே சில சமயம் ஆச்சரியம் அளித்ததுண்டு. மணி மணியாக மூன்று குழந்தைகளைப் பெற்றுத் தந்தபின் அவளை முன்னைவிட மும்மடங்கு அதிகமாக நேசிக்க ஆரம்பித்தார். முன்போல் அவள் தலை பின்னிப் பூ வைத்துக்கொள்வதில்லை என்பதோடு கொண்டை போட்டுக் கொள்ள அவளுக்குச் சவுரி வேறு தேவைப் பட்டது. வேணியால் அதை அலங்கரித்தாள். ஆனால் பத்ம நாபனுக்கும் இப்போதெல்லாம் கேசத்தைக் கொண்டை போட்டுக் கொண்டால்தான் பெண்களுக்கு அழகு என்றும் பின்னல் தொங்கினால் ஏதோ சிறுபிள்ளைத்தனமாக

இருப்பது போலவும் தோன்றியது. அம்புஜத்தின் முக வாய்க்குக் கீழ் இரண்டாவது முகவாய் என்று சொல்லத்தக்க அளவுக்குச் சற்றுச் சதை எட்டிப் பார்த்தது இன்று. ஒடிந்து விழுகிற மாதிரி இருந்த காலம் மாறிச் சில ஆண்டுகளே ஆகிவிட்டன. இதோ, அவள் ஒரு பொய்க் கோபத்துடன் ஊஞ்சலிலிருந்து குதித்துக் கால்களைத் தரை அதிர எடுத்து வைத்துச் சமையலறை நோக்கி நடந்து போகிறாளே, அப்போது அவள் பின்புறத்தைப் பார்க்கையில், 'சற்றுப் பருமன்தான்' என்று சொல்லத் தக்க அளவிலேயே இருந்தாள். ஆனால் என்ன ஆச்சரியம்! அவள் ஒல்லியாக இருந்த காலத்தில், 'பெண்கள் கொடி போலத்தான் இருக்க வேண்டும்' என்று எண்ணிய பத்மநாபன், தற்போதெல்லாம் 'கொஞ்சம் பூசின மாதிரி இருந்தால்தான் பெண்களுக்கு அழகு' என்று கருத ஆரம்பித்திருந்தார்! முன்பெல்லாம் அவள் அதிகமாகப் பேச மாட்டாள். அப்போது அவர், 'அடக்கம் தான் பெண்களுக்கு அணிகலன்' என்று எண் ணினார். ஆனால் இன்றோ அவள் அதிகமாகப் பேசுவது மட்டுமா? உரிமையுடன் வம்புக்கு இழுக்கிறாள்; வாதாடு கிறாள்; அவரைக் கிண்டல் பண்ணவே செய்கிறாள்! அவரும் 'இப்படிக் கலகலப்பாக இருந்தால்தான் நன்றா யிருக்கிறது! ஊமையாக, உம்மணாமூஞ்சியாக இருந்து பயன் என்ன' என்று நினைக்க ஆரம்பித்திருந்தார். மாறி மாறிச் சொற்சிலம்பம் பண்ணி விளையாடுவதில் ஓர் அலாதி ஆனந்தம். குழந்தைகள் சில சமயம் அம்மா கட்சி பேசும்; சில சமயம் அப்பா கட்சி பேசும். ஒரே கும்மாளம் தான்!.... வார்த்தைகளில் அனல் தெறிக்கும்; உள்ளங்களோ காலைப் பனி படர்ந்தாற்போலக் குளிர்ந்து கிடக்கும்.

அவர்கள் தனித்திருக்கும் போதோ இருபது வருஷங்கள் நெருங்கிப் பழகிய உரிமையில் அம்புஜம் சில சமயங்களில் அவர் திடுக்கிடும்படியான காரியங்களைச் செய்வாள்.

கதையோ, விமர்சனமோ, கட்டுரையோ அவர் மும்முரமாக எழுதிக் கொண்டிருக்கும்போது திடுதிப்பென்று பின்புறமாக வந்து அவர் கழுத்தைக் கட்டிக் கொண்டுவிடுவாள். சில தருணங்களில் அவர் சாய்வுநாற்காலியில் உட்கார்ந்து படித்துக்கொண்டிருக்கும் போது, 'என்ன படிக்கிறீர்கள்?' என்று அதில் ஆர்வம் காட்டுவது போல் நடித்து நாற்காலி யின் கரத்தில் அமர்வாள்; சரேலென்று அப்படியே அவர் மடியில் நழுவி விடுவாள். இப்படியெல்லாம் நடந்து கொள்ளப் புதிதாக மணம் புரிந்து கொண்ட ஒருத்திக்கு எப்படித் தைரியம் வரும்? பழகப் பழகப் பாலும் புளிக்கும்; இருபது ஆண்டுகளில் தாம்பத்தியமும் அலுக்கும் என்று எந்த முட்டாள் சொன்னது?

நாளடைவில் பத்மநாபன் அம்புஜத்தினுடைய அன்பின் இந்தத் திடீர் விகசிப்புக்களை எதிர்பார்க்க ஆரம்பித்தார்; ஏன், அவற்றுக்காக ஏங்கவேகூடச் செய்தார். ஆனால் தாம் எதிர்பார்ப்பது போல் காட்டிக் கொள்ள மாட்டார். அவ்விதம் காட்டிக் கொண்டால் அந்த இன்பத்தில் ஒரு மாற்றுக் குறைந்துவிட்டது போல் உணர்ந்தார்.

இப்போதும் அவ்வாறேதான் அவர், 'கெட்டில் கொதிக்கிறது' என்று கூறி அவளை அனுப்பி வைத்தார், சமையல் கட்டுக்கு. எனினும், அவள் தன்னிடம் ஏமாற்ற மடைந்துவிடப் போகிறாளே என்ற பயமும் பிடித்துக் கொண்டது அவரை. அவசரம் அவசரமாக, "நீ பக்கத்தில் உட்கார்ந்திருந்தால் எனக்கென்ன முள்ளா குத்துகிறது? காப்பியைச் சாப்பிட்டுக் கொண்டே சாவகாசமாகப் பேசலாமேன்னு சொன்னேன், அவ்வளவுதான்" என்றார்.

"சாவகாசமா நீங்க உட்கார்ந்துண்டு பேசப்போறேளா? வானம் இருட்டிண்டு வரதா பாருங்கோ; வெளியே துணி காயறது."

இதற்கு இடக்காகப் பதில் சொல்லப் பத்மநாபனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அதனால் சும்மா ஊஞ்சலாடிய படி உட்கார்ந்திருந்தார். சற்று நேரத்தில் மணக்க மணக்கக் காப்பியுடன் வந்தாள் அம்புஜம்.

“நீ சாப்பிடலையா?”

“குழந்தைகள் வர நேரமாச்சு; அவாளுக்குக் கொடுத் துட்டுச் சாப்பிடறேன். நீங்க சொல்லுங்கோ, எப்போ கிளம்பறோம், கொடைக்கானலுக்கு?”

“பரீட்சையெல்லாம் முடிஞ்சதும் புறப்பட வேண்டியது தான்.”

“நிஜமாத்தான் சொல்றேளா? பணத்துக்கு என்ன பண்ணுவேள்?”

“டோண்ட் வொர்ரி, கள்ள நோட்டு அச்சடிக்கப் போறதில்லை!”

“அதுக்கு ரொம்பச் சாமர்த்தியம் வேணும்; உங்களால் முடியாதுன்னு எனக்குத் தெரியும்! கிடக்கு, சொல்லுங்கோ பணத்துக்கு நீங்க எங்கே போவேள்?”

“நீ இப்படிப் பக்கத்தில் வந்து உட்காரு, சொல்றேன்!”

“சித்தெ முன்னாடி உட்கார்ந்தப்போ என்னைத் துரத்தி அடிச்சேளே?”

“அப்போ காப்பி எனக்குத் தேவையா யிருந்தது.”

“ஆக, பெண்டாட்டியைவிடக் காப்பிதான் முக்கியம்?”

“சந்தர்ப்பச் சூழ்நிலையையொட்டி ஒவ்வொன்றின் மதிப்பு கூடவோ குறையவோ செய்யறது. டிசம்பர் மாசத் திலே யாராவது கொடைக்கானல் போக நினைப்பாளா? இன்னும் அரை மணி, கால் மணியிலே குழந்தைகள் பள்ளிக்கூடம் விட்டு வந்துட்டான்னா உன்னைப் பக்கத்தில் வந்து உட்காரச் சொல்வேனா?”

"காற்றுள்ள போதே தூற்றிக்கொள்!" என்று சிரிப்பினூடே கூறியபடி அம்புஜம் அவர் அருகில் வந்து அமர்ந்தாள்.

பத்மநாபன் சொன்னார்: "என் நாவல், 'சோலைக் குயில்' இருக்கோல்லியோ....?"

"இல்லாமே என்ன? அதுதான் அலமாரி நிறைய அடுக்கி வைச்சுக் காட்டறானே, புத்தகத்தைப் பிரசுரிச்சவன். எப்போ போய்க் கேட்டாலும் 'விற்கலை' பாட்டுத்தான்."

"அதுக்கென்ன பண்ணறது? இந்தக் காலத்திலே மனுஷாளிடம் பணம் இல்லை. பணம் இருந்தாலும் புத்தகம் வாங்க மனம் இல்லை. பிளாக்கிலே ஐந்து மடங்கு காசு கொடுத்து ஐந்து டிக்கெட் வாங்கிண்டு முதல் நாள், முதல் காட்சி சினிமாவுக்குப் போறான். காசு கொடுத்து ஒரு புத்தகம் வாங்க மாட்டான். லைப்ரரிகளிலோ அரசாங்கம் ஒதுக்கற பணம், வேலை பார்க்கிறவாளுக்குச் சம்பளம் கொடுக்கவே சரியாப் போயிடறதாம். ஏன்னா, நூலகங்களின் எண்ணிக்கை அதிகமாப் போச்சாம். அப்படியே ஏதாவது புத்தகமோ மலரோ வாங்கினாலும் அதிலே அமைச்சர்கள் படம் ஏதாவது இருக்கான்னு முதல்லே பார்க்கிறா...."

"அது எப்படியோ போகட்டும். நீங்க விஷயத்துக்கு வாங்கோ."

"நீ எங்கே அதுக்கு அனுமதிக்கிறே? நான் பசிக்கிறது சாதம் போடுன்னு ஆரம்பிச்சா நீ கோடியாத்துக் குப்பு மாமி ஏகாதசி விரதம் இருந்தன்னைக்கே செத்துப் போனான்னு முடிச்சு வைச்சுப் பசியை விரட்டிப் பிடறே!"

"சரி, நன் விரட்டறதும், புரட்டறதும் கிடக்கட்டும்; நீங்க சோலைக் குயிலைப் பத்திக் கூவுங்கோ!"

"சோலைக் குயிலை இந்திய நாட்டின் பதினாலு பாஷைகளிலும் மொழிபெயர்த்து...."

"பதினாலு அலமாரிகளில் அலங்காரமா அடுக்கி வைக்கப் போறாளாக்கும்; விற்கலைன்னு!"

"பதினாலு என்ன, மகராஜனா இருபத்து நாலு அல மாரிகளிலே வேணுமானாலும் அடுக்கிண்டு போகட்டும். நமக்கென்ன? எத்தனைக்கெத்தனை விற்காமல் இருக்கோ அத்தனைக்கத்தனை அது உசத்திப் புஸ்தகம் என்பது உறுதியாகும் இல்லையா?"

"உறுதியாகணும்னா அட்டைக்குப் பதில் இரும்புத் தகட்டைப் பயன்படுத்தி பைண்டு பண்ணச் சொல்லுங் களேன்! கிடக்கு, இதுக்கும் நம்ம கொடைக்கானல் பயணத்துக்கும் என்ன சம்பந்தம்?"

"இருக்கு அம்புஜம்; பதினாலு மொழிகளிலே பெயர்க்கும் உரிமையை வாங்கிண்டு, அதற்காகத் தேசிய புத்தக நிறுவனத்திலே எனக்கு மூவாயிரம் ரூபாய் கொடுத்திருக்கா!"

அம்புஜம் பதில் பேசவில்லை.

பத்மநாபன் அப்படியே அவள் தோள்களை அணைத்துக் குலுக்கி எடுத்தார், உற்சாக மிகுதியில். "அப்பாடா! முதல் தடவையா உன்னை வாயடைச்சுப் போகப் பண்ணிட் டேன் பார்த்தியா?" என்றார்.

"ஆமாம், மூவாயிரம் என்றதும் நம்முடைய அத்தியா வசியத் தேவைகளெல்லாம் கண்ணெதிரே வரிசையா கியூவிலே வந்து நிற்க ஆரம்பிச்சுடுத்து. நல்ல காலம் பொறக் கும்னு இருபது வருஷமா ஒத்திப் போட்டுண்டிருக்கோமே? முதல்லே இரும்பு பீரோ ஒண்ணு, அப்புறம் ஒரு வெந்நீர் பாய்லர்..."

''சேச்சே! நம்முடைய தேவைகள்தாம் முடிவில்லாத பட்டியலா என்றைக்குமே இருந்திண்டிருக்கே, அம்புஜம். அதெல்லாம் அப்புறம் பார்த்துக் கொள்ளலாம். ஆயிரம் ரூபாய் கடனை அடைச்சுடறேன். பாக்கி ரெண்டாயிரத் துன் ஒரு மாசம் லீவு போட்டுட்டுக் கிளம்பறேன். ஹாய்யா கொடைக்கானல் போய் ரெண்டு வாரமோ மூணுவாரமோ இருந்துட்டு வருவோம். போற இடத்திலே ஒரு கவலை இருக்கப் படாது; செட்டு சிக்கனம்னு பேசப்படாது. முதல் வகுப்பு ரயில் பயணம், முதல்தரமான ஹோட்டல் வாசம்; குழந்தைகள் கேட்கிறதை வாங்கித் தரணும்; டாக்ஸியில் நினைச்ச இடமெல்லாம் போய்ச் சுற்றிப் பார்க்கணும்.''

''ஆக பத்துப் பதினைஞ்சு நாளைக்குப் பணக்காரராளா இருப்போமேங்கறேள்!''

''ஆமாம், இரண்டாயிரத்துக்கும் ஒற்றை ரூபா நோட்டுக்களா வாங்கி வைச்சுண்டு இடது கையாலும் வலது கையாலும் வாரி விடப் போறேன்.''

''அதுவும் வாஸ்தவம்தான்; கொடைக்கானலில் கோடை விடுமுறையைக் குழந்தைகளோடு போய் அனுபவிக் கிறதுன்னு தீர்மானிச்சாச்சு. அப்புறம் செலவு பண்ணப் பயந்துண்டே இருந்தால் சந்தோஷத்திலே பாதியை அது சாப்பிட்டுவிடும். இங்கேதான் பைசாக் கணக்குப் பார்க் கிறோமே, அங்கே வேறே போய் எதுக்கு நம்ம தரித்திரத்தைக் காட்டணும்?''

''நினைக்கிறச்சேயே கிளுகிளுக்கிறது அம்புஜம்'' என்று அவள் காதருகே போய் ரகசியம் பேசும் குரலில் அவர் சொன்னபோது, தொனித்த அன்பையும் துடித்த இதழ்களை யும் மிருதுவாய்ப் படிந்த மூச்சுக் காற்றையும் அவள் ஒரே சமயத்தில் உணர்ந்து சிலிர்த்து நெளிந்தாள்.

''அம்மா! அம்மா!'' என்று வாசலில் குரல் கேட்டது.

"காலேஜ் விட்டு மீனா வந்தாச்சு" என்று கூறி, தன்னைச் சரேலென்று விடுவித்துக்கொண்டு வாசலுக்கு விரைந்தாள் அம்புஜம்.

இந்த இடையூறினால் பத்மநாபன் ஏமாற்றமடைய வில்லை. அம்பாக அவள் விடுவித்துக் கொண்டு போனாலும் சற்று நேரம் பொறுத்து அந்த அம்பு திரும்பவும் அம்புறாத் தூளியில் வந்து அடைக்கலமாக அமர்ந்துவிடும் என்பது அவருக்குத் தெரிந்ததுதானே?

★ ★ ★

## 2. ஸைக்கோ ஸாரநாதன்

ரயில் கிளம்ப இன்னும் அரை மணி நேரம் இருந்தது.

''உட்கார்ந்திருங்கோ, சாயங்கல பேப்பர் கிடைக்கிற தான்னு பார்த்துண்டு வரேன்'' என்று சொல்லிவிட்டுப் பெட்டியிலிருந்து கீழே இறங்கினார் பத்மநாபன்.

''ஃபஸ்ட் கிளாஸிலே ரிஸர்வ் பண்ணிட்டு இத்தனை சீக்கிரம் வரவேணுமா?'' என்றாள் மீனா அலுத்துக் கொள்பவளாக.

''உன் அப்பாதான் ஐந்து மணியிலேயிருந்து பறந்து கொண்டிருந்தாரே? மூணாங் கிளாஸிலே முண்டியடிச்சு ஏறின பழக்கம் நம்மை எங்கே விடும்!'' என்று அம்புஜம் மகளுக்குப் பதில் சொன்னாள்.

இதைக் காதில் வாங்கிக் கொள்ளாதவர் போல் கீழே இறங்கிச் சென்று 'மெயில்' பேப்பர் வாங்கிக் கொண்டு திரும்பினார் பத்மநாபன். பிளாட் ஃபாரத்தில் நின்றபடியே பிரித்து ஓர் உதறு உதறிப் படிக்கத் தொடங்கிய சமயம், இரண்டாவது பெண் அனுசூயா 'அப்பர் பர்த்' திலிருந்து கீழே இறக்கிவிடச் சொல்லித் தாயாரைக் கேட்டுக் கொண்டிருந்தாள்.

''இந்தாடி, அனு! எதுக்கு இப்படி என்னைப் படுத்தறே? அப்பர், லோயர்ன்னு மாறி மாறி எட்டு தரம் ஏறி இறங்கியாச்சு!''

''நான் எங்கே எட்டுத் தரம் ஏறினேன். இதோடே ஏழு தடவைதான் ஆச்சு'' என்று விரல்களைப் பிரித்துக் காட்டினாள் அனு.

"தம்பி நர்ஸரி ரைம் சொல்றானோ இல்லியோ 'கூஸி கூஸி காண்டர்'னு; அது ஞாபகம் வந்திருக்கும். அதான் 'அப் ஸ்டேர்ஸ் அண்டு டவுன் ஸ்டேர்ஸ்'னு ஏறி இறங்கிண்டே இருக்கா!" என்றாள் மீனா.

"நான் ஒண்ணும் 'கூஸி கூஸி காண்டர்' இல்லே; நீதான் 'பெர்ஷியன் கேட்'!"

"சீ, போ! ஏதாவது உளறாதே!"

"நான் ஏன் உளறப் போறேன்? உன் காலேஜ் பிரெண்ட்ஸ் அப்படித்தானே பேர் வைச்சிருக்கா உனக்கு?"

'பாரசீகப் பூனை!'-தினசரி படித்துக் கொண்டிருந்த பத்மநாபன் தமது கவனம் திருப்பப்பட்டதாகக் காட்டிக் கொள்ளாமலே ஒரு முறை தம் மூத்த மகளை நோட்டம் விட்டார். 'பாரசீகப் பூனை!' நன்றாகத்தான் பெயர் சூட்டியிருக்கிறார்கள்! உருண்டை முகம், கதுப்புக் கன்னங்கள். கண்கள் அதிக நீளமில்லை; அகன்று ஏறத்தாழ வட்ட வடிவில் இருந்தன. அவற்றில் திருப்தியும் அமைதியும் ததும்பிக் கொண்டிருந்தன. அது போகட்டும், அவள் உட்கார்ந்திருக்கும் நிலையைத்தான் பார்ப்போமே என்றால் அதிலும் பெயர்ப் பொருத்தம் இருக்கவே செய்தது. கால்களைத் தூக்கி ஒருக்களித்த மாதிரி மடக்கிக் கொண்டு ஒரு மூலையில் சுருண்டாற்போல் சாய்ந்து அவள் நாவல் படித்துக்கொண்டிருப்பதானது ஒரு பூனை சோபாவில் சொகுசாகப் பதுங்கிப் படுத்திருப்பது போல்தான் தோன்றியது.

அவள் 'எனிட் பிளைட்டன்' பருவத்தைத் தாண்டி 'டெனிஸி ராபின்ஸ்' பருவத்தை அடைந்திருந்தாள். அவள் படித்து முடித்து அடுக்கியிருக்கும் டெனிஸி ராபின்ஸ் நாவல்கள் ஐம்பதோ அறுபதோ இருக்கும்.

'திரும்பத் திரும்ப இந்த டெனிஸி ராபின்ஸ்தானா? நான் உன் வயசிலே ஸ்காட்டையும் டூமாஸையும் ஆர்க்ஸியையும்

படிச்சு முடிச்சாச்சு' என்று சொல்லத் தோன்றியதுண்டு பத்மநாபனுக்கு. பிறகு, 'வேண்டாம், அவள் ரசனை தானாகவே மாறும்' என்று பேசாமல் இருந்துவிட்டார். 'ஒரு காலத்தில் பெர்ரி மேஸன் கதைகள் எத்தனை படித்துப் போட்டிருக்கிறோம்? இப்போ படிக்கத் தோன்றுகிறதா? கிரஹாம் கிரீன், ஓஹாரா, ஸ்டீன்பெக் என்று தானே, லைப்ரரியிலும் புத்தகக் கடையிலும் தேடி எடுக்கிறோம்?'

மீனா இந்தக் காலத்துக் கல்லூரிப் பெண்கள் பலரைப் போல், ஜீன்ஸ், லுங்கி, ஸ்ட்ரெச் பாண்ட், ஸல்வார் கம்மீஸ், பெல்பாட்ஸ் என்றெல்லாம் இறங்காமல் புடைவை உடுத்து கிறாளே, அதுவே தெய்வ அநுக்கிரகம் என்று ரொம்பத் திருப்தியாகவும் சந்தோஷமாகவும் இருந்தது அவருக்கு. அவளை அதிகமாகத் திருத்த வேண்டிய அவசியம் நேர்ந்ததில்லை. புத்தி சொல்லும்படியாக அவள் எப்போதும் நடந்து கொண்டதில்லை. இதனாலெல்லாம் பெற்றோருக்கு அவளிடம் அன்பு பெருகியதுடன் அவள் சிறியவளே யானாலும் மதிப்பும் மிகுந்திருந்தது. கோலம் போட்டது போல் அவள் பல டிசைன்களில் நெற்றிக்கு இட்டுக் கொள்ள மாட்டாள். புடைவைக்கு 'மாட்ச்' ஆகிறதோ இல்லையோ பளிச்சென்று சிவப்புக் குங்குமப் பொட்டுத் தான். வேறு நிறம் கிடையாது. அதனால் அழகு என்ன குறைந்தா போய்விட்டது? வானுலகச் சந்திரனும் பூவுலக ரோஜாவும் நீருலக அன்னமும் லேட்டஸ்ட் ஃபாஷனையா கண்டன? ஆனால் அவை அழகில்லை என்று யாராவது சொல்லிவிட முடியுமா? மீனாவுடைய அழகு அத்தகையது- அடக்கமானது, சாந்தி அளிப்பது.

**அ**னுதான் பெரிய வாயாடி. விஷமமும்கூட. 'எப்படி அளைத் திருத்தப் போகிறோம்?' என்ற கவலை பல சந்தர்ப்பங்களில் பத்மநாபனை ஆட்கொண்டதுண்டு. ''போகப் போகச் சரியாகிவிடும். கவலைப்பட வேண்

டாம்'' என்று அம்புஜம் சொல்வாள். அதிலும் விசு பிறந்த பிறகு அவள் பிடிவாதம் அதிகமாகியிருக்கிறது.

விசுப் பயலுக்கு மூன்று முடிந்து ஆறு மாதங்களாகப் போகிறது. தலையைத் தடவித் தடவி, ''திருப்பதி கோவிந்தா!'' என்கிறான் அடிக்கடி. கொடைக்கானல் குளிரில் பாதிக்கப் படாமல் இருக்க மொட்டைத் தலைக்குக் கம்பளிக் குல்லாய் வாங்கியிருந்தாள் அம்புஜம். ஆறேழு வாரங்கள் ஆகிவிட்டன; இன்னும் ஒரு மாசம் போனால் தலை வாரலாம் அவனுக்கு.

இப்போதே புதுச் சொக்காய் போட்டால்தான் ஆயிற்று என்று அவன் தாயாரை நச்சரித்துக் கொண்டிருந்தான். ''அடேய்! அது புதுச் சொக்காய் இல்லைடா, ஸ்வெட்டர்! மலை மேலே குளிரும்போது போட்டுக் கொள்ளணும்; இப்போ போட்டுண்டால் வேர்த்துக் கொட்டும்'' என்று அம்புஜம் சொல்லிப்பார்த்ததில் பயன் இல்லை.

''கொட்டட்டும், நன்னா வேர்த்துக் கொட்டட்டும்!'' என்று அவன் கோபத்துடன் அழுத்தந் திருத்தமாய்க் கூறினான்.

இவற்றையெல்லாம் அரைகுறையாகப் பார்த்துக் கொண்டும் கேட்டுக்கொண்டும் பத்மநாபன் பத்திரிகைத் தலைப்புச் செய்திகளில் கண்ணோட்டம் செலுத்தியபடி இருந்தார். திடீரென்று அவரது முழுக் கவனத்தையும் ஈர்க்கும் விதமாகச் செய்தி ஒன்று அவர் கண்களில் தட்டுப் பட்டது. ''ஸைக்கோ ஸாரநாதன் போலீஸ் பாதுகாப்பி லிருந்து தப்பினான்'' என்ற தலைப்பைப படித்ததுமே அவருக்குச் சுற்றுச் சூழ்நிலை எல்லாம் மறந்து போயிற்று. நாளிதழில் அச்சம்பவத்துக்கு அதிக முக்கியத்துவம் தரப்பட வில்லை. ஆனால் பத்மநாபனுக்கு என்னவோ உலகச் செய்திகளெல்லாம் ஏற்படுத்தாத பரபரப்பையும் சுவாரசியத் தையும் கட்டம் கட்டிப் போட்டிருந்த இந்தச் சிறிய நிகழ்ச்சி

அலைபாய்ந்தது. அவர் கண்கள் அந்தச் செய்தியைப் படிக்க, மனம் ஸைக்கோ ஸாரநாதனைப் பற்றிய எண்ணங்களில் பாய்ந்தது.

★ ★ ★

பம்பாயில் ஸைக்கோ ஸாரநாதன் பதினாலு ஆண்டுகளில் மொத்தம் நாற்பத்திரண்டு கொலைகள் புரிந்திருப்பதாகப் போலீஸார் கருதுகின்றனர். பல வருஷங்களாக அவன் பிடிபடவேயில்லை. கடைசியில் அவன் போலீஸாரிடம் அகப்பட்டுக் கொண்டபோது, கடைசி மூன்று ஆண்டுகளில் நடந்த ஒன்பது கொலைகளுக்கு மட்டுமே அவன் மீது வழக்குத் தொடுத்தார்கள். மற்றக் கொலைகள் நடந்து ரொம்பக் காலம் ஆகிவிட்டபடியால் அவன் மீது கேஸ் ஜோடிக்கத் தக்க தடையங்கள் ஏதும் அகப்படவில்லை. ஆயின் என்ன, மூன்றாண்டுகளில் நடந்த ஒன்பது கொலைகளை அவன் செய்ததாக நிரூபித்தால் போதாதா? ஒன்பது தடவை அவனைத் தூக்கிலே போடலாமே! இந்த எண்ணத்தில்தான் மகராஷ்டிர அரசு அவன் மீது வழக்குத் தொடுத்தது.

ஆனால் போலீஸார் சற்றும் எதிர்பாராத சில திருப்பங்கள் வழக்கு ஆரம்பமானபோது உருவாயின. ஸாரநாதன் சார்பில் வழக்காட யாரும் இல்லை. வக்கீலுக்குத் தர தன்னிடம் பணம் இல்லை என்று அவன் கூறிவிட்டான். அப்போது கோர்ட்டாரே அவனுக்காக ஒரு வழக்கறிஞரை நியமிக்க முன்வந்தார்கள். ஒருவன் குற்றவாளிதான் என்பது நூற்றுக்கு நூறு சந்தேகமின்றி நிரூபிக்கப்படலாம் என்றாலும்கூட அவனுக்கு வழக்காடச் சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என்று சட்டம் சொல்கிறது.

இந்தச் சமயத்தில் பானர்ஜி என்பவர் திடும்மென்று கறுப்புக் கோட்டுடன் கோர்ட்டில் எழுந்து நின்று "மை

*லார்ட்! குற்றவாளி சார்பில் நான் வழக்குரைக்க அனுமதி வழங்க வேண்டும்'' என்றார்.*

**நீ**திபதி ஒரு புன்னகையை அடக்கிக் கொண்டார். பானர்ஜி முன்னுக்கு வந்து கொண்டிருந்த இளம் வழக்கறிஞர். இந்தக் கேஸில் தாம் சம்பந்தப்பட்டால் ரொம்பவும் பிராபல்யம் அடையலாம் என்பதைக் கருதியே வந்திருக்கிறார் என நீதிபதிக்குப் புரியாமலில்லை. ஆனால் பானர்ஜி, நீதி தேவதைக்குத் தம்மால் இயன்ற காணிக்கை யைச் செலுத்தத் தாம் முன்வந்திருப்பது போலவே நடந்து கொண்டார்! ஸாரநாதனும், அந்த வழக்கும், நடந்த கொலைகளும் ஒருபுற மிருக்கட்டும். இவற்றையெல்லாம் விட முக்கியமான விஷயம், குற்றம் சுமத்தப்பட்ட ஒரு வனுக்குத் தன் சார்பில் வழக்காட உரிமை உள்ளது; அந்த உரிமை காப்பாற்றப்பட வேண்டும்- இந்தப் பெரு நோக்குடன்தான் ஸாரநாதனின் வக்கீலாக இருக்க ஒப்புக் கொள்வது போல காணப்பட்டார் பானர்ஜி!

ஸாரநாதனை இதுபற்றிக் கேட்டபோது அவன் ரொம்ப அலட்சியமாகச் சூள் கொட்டித் தலையாட்டி வைத்தான். தன்னால் பணம் கொடுக்க முடியாது என்னும்போது வந்து வாய்க்கிற வக்கீல் எவனாயிருந்தாலென்ன, பைசா பெயர் வதாயிருந்தாலல்லவோ பெரிய வக்கீல், கத்துக்குட்டி வக்கீல் என்றெல்லாம் யோசனை பண்ணவேண்டும்?

நீதிபதி, பானர்ஜியைத் தம் அருகில் அழைத்தார். ''நாற்பத்திரண்டு கொலைகளைப் புரிந்ததாகக் கருதப் படுபவன் சார்பில் வழக்காடுகிறாய் என்பதால் உனக்கு அவப்பெயர்கூட வந்து சேரலாம், அதை உணர்ந்திருக் கிறாய் அல்லவா?'' என்று கேட்டார்.

''நன்றாக உணர்ந்திருக்கிறேன். அதற்கும் துணிந்துதான் வந்திருக்கிறேன்'' என்றார் பானர்ஜி.

இப்போது நீதிபதிக்கு அவரிடம் நம்பிக்கை ஏற்பட்டது. பிரபலமடைய ஒரு வழி என்ற எண்ணம் ஒரு பக்கம் இருக்கலாம்; ஆனால், வழக்கை முழுமூச்சுடன் நடத்தி இறுதி வரையில் போராடுவான் என்பது நிச்சயம் என்று உணர்ந்தார். ஸாரநாதனுக்கு அவரையே வழக்கறிஞராக நியமித்து வழக்கைச் சில வாரங்களுக்கு ஒத்திப் போட்டார்.

பானர்ஜி கடமையால் உந்தப்பட்டுக் காரியம் செய்வது போல் ஆரம்பத்தில் நடித்தாலும் போகப் போக அவருக்கு மெய்யாலுமே தாம் மேற்கொண்ட பணியில் ஆழ்ந்த ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது. நாற்பத்திரண்டு கொலைகள் என்ன, அதற்கு அதிகமாகவே ஒன்றிரண்டு கொலைகளை ஸாரநாதன் செய்ததாகக் கூறப்பட்டால்கூட அவனை விடுவிக்க வேண்டும் என்று உறுதியாக நினைத்தார். 'இந்தக் கொலைகளை ஸாரநாதன் செய்யவே இல்லை; அவனுக் குள்ளிருந்த இன்னொரு ஆன்மா இவனை ஆட்டிப் படைத் தது. அதன் கருவியாக இவன் விளங்கினான், அவ்வளவே' என்று நிச்சயித்துக் கொண்டார். இப்படிப்பட்ட முடிவுக்கு அவர் வரக் காரணமாயிருந்தவர் டாக்டர் குஹா.

டாக்டர் குஹா, டாக்டர் பட்டம் பெற்ற டாக்டர்; அல்லது 'டாக்டர் ஸ்கொயர்டு. அதாவது, டாக்டராகிய இவர், பல ஆராய்ச்சிகள் செய்து டாக்டர் பட்டம் பெற்றார். ஒன்றுக்கு இரண்டாக டாக்டர் பட்டம் பெற்றும் தம்மைக் கலைஞர் என்று வர்ணித்துக் கொள்வதிலேதான் இவருக்கு ஆசை! மருத்துவமே ஓர் அற்புதக் கலை என்பார். ஆகவே, இவரைக் "கலைஞர் டாக்டர்" என்று சொல்ல லாம்! -நியூராலஜியில் (நரம்புச் சிகிச்சை) விசேஷத் தேர்ச்சி பெறத் தொடங்கி ஸைக்கியாட்ரி (மன நோய் மருத்துவம்) வரை வந்து அத்துடன் பட்டங்களுக்கெனப் படிப்பதை

முடித்துக் கொண்டவர். ஆனால் படிப்பதை நிறுத்தியவ ரல்ல.

அமெரிக்காவில் இவர் மான்யம் பெற்று ஆராய்ச்சிகள் செய்தார். அதன்பின் அங்கேயே சில காலம் தொழில் நடத்தினார்.

கணவன் தினம் இரவு இரண்டு மணிக்கு மேல் வீடு திரும்புவதால் தன் தலையெல்லாம் நரைத்துப் போவதாகச் சொல்லிக்கொண்டு வருவாள் மனைவி, மனோதத்துவ நிபுணரான அவரிடம். 'உன் தலை நரைத்துப் போனதால் தான் அவன் தினம் இரவு இரண்டு மணிக்கு வருகிறான்; உன்னைவிட வயதில் ரொம்பச் சிறியவனை நீ கல்யாணம் பண்ணிக் கொண்டது பிசகு' என்று எடுத்துரைத்து சமாதானப்படுத்தி அனுப்புவார்.

இன்னும் 'பக்கத்து வீட்டு நாய் என்னைப் பார்க்கும் போதெல்லாம் ஏன் குரைக்கிறது?' என்று கேட்டுக்கொண்டு வருபவன், 'சென்ற வருஷத்தைவிட இந்த ஆண்டு நிறு வனத்தில் லாபம் குறைந்துவிட்டதே' என்று கவலைப் பட்டுக்கொண்டு வருபவன், 'மாமியாரைப் பார்க்கும் போதெல்லாம் அவள் கழுத்தை நெரித்துக் கொன்றுவிட வேண்டும் போலிருக்கிறதே' என்று பதறியபடி வருகிறவன் என்று இவ்வாறு பலதரப்பட்ட மனிதர்களுக்குச் சிகிச்சை செய்து அனுப்பினார்.

**அ**வ்வப்போது பாரத நாடு பற்றிய செய்திகளையும் பத்திரிகைகளைத் தருவித்துப் படித்துக் கொண்டிருந்தார். இங்கே தலைவர்கள் நடந்துகொள்கிற விதத்தையும் தேசம் போகிற போக்கையும் கவனித்து வந்தவருக்கு, 'அடடா, என்னைப் போன்ற மனநோய் மருத்துவர்களுக்கு இந்தியாவில் ரொம்பக் கிராக்கி இருக்கும் போலிருக்கிறதே; அங்கே நடப்பதெல்லாம் பைத்தியக்காரத்தனமாக வல்லவா

'தோன்றுகிறது' என்று பட்டது. உடனே புறப்பட்டு விட்டார், பாரத புண்ணிய பூமிக்கு. தமது அமெரிக்க மனைவி விவாகரத்து செய்துவிடுவதாகப் பயமுறுத்திய தைக் கூடப் பொருட்படுத்தாமல் தாய்நாட்டுச் சேவைக் கென ஓடோடியும் வந்தார்.

ஆனால் அவருடைய துரதிர்ஷ்டமோ அல்லது நாட்டின் தலைவிதியோ, அரசியல் பெருந் தலைவர்கள் யாரும் சிகிச்சைக்கு அவரிடம் வரவில்லை. சினிமா நட்சத்திரம் ஆக வேண்டும் என்று ஏங்கி நலிந்த எக்ஸ்ட்ராக்கள்; நட்சத்திர மவுசு போய் இருட்டடிப்புக்கு ஆளாகித் தவித்த மாஜி நடிக நடிகையர்கள்; இருக்கிற பெயரையும் புகழையும் பத்திர மாகக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமே என்று சதா கவலைப்பட்டு உருகிக் கொண்டிருந்த பிரபல நட்சத் திரங்கள் என்று பெரும்பாலும் சினிமா வட்டாரத்தினரே அவருடன் தொடர்பு கொண்டனர். பம்பாயின் செல்வத்தில் புரளும் சமூகத்திலிருந்தும் சிலர் அவரைத் தேடிவந்தனர். "என் மகன் என் எதிரேயே குடிக்கட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை; ஆனால் ஒவ்வொரு தடவையும் மேஜைக்கடியில் உட்கார்ந்து கொண்டுதான் குடிப்பேன் என்கிறான்; அதைத்தான் என்னால் தாங்க முடியவில்லை. அவமானமாயிருக்கிறது" என்று சொல்லிக் கொண்டு ஒரு தொழில் வர்த்தக சாம்ராஜ்ய அதிபர் வந்து சேர்ந்தார். இப்படி எத்தனையோ. சில சமயங்களில் டாக்டர் குஹா, தமக்கு எப்படி இன்னும் பைத்தியம் பிடிக்காமல் இருக்கிறது என்று அதிசயப்பட்டதுண்டு!

இவ்வாறு டாக்டர் குஹாவுக்குத் தம் தொழிலிலேயே கொஞ்சம் அலுப்பும் சலிப்பும் ஏற்படத் தொடங்கிய சமயத்தில்தான் அவர் ஸாரநாதன் வழக்கு பற்றிப் பத்திரிகை களில் படித்தார். அவன் சார்பில் வழக்காடக் கோர்ட்டாரே ஒரு வக்கீலை நியமித்திருப்பதை அறிந்ததும் பானர்ஜியை நேரில் போய்ச் சந்திப்பது என்று தீர்மானித்துக் கொண்டார்.

# 3. ஹிப்பி இளைஞன்

பாதுகாப்பிலிருந்து தப்பிய சைக்கோ ஸாரநாதனின் புகைப்படம் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. சிறையில் அவனை அடைக்கு முன்னர் போலீஸார் எடுத்த படம் அது. அவன் தொடக்கத்தில் தமிழ் நாட்டிலிருந்து வடக்கே வந்தவனாதலால் ஒருவேளை இப்போது தமிழகத்துக்கே அவன் திரும்பியிருக்கக் கூடும் என்று போலீஸார் அநு மானிப்பதாகச் செய்தி கூறியது. மக்களை எச்சரிக்கையாக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டது.

அவனுக்கு மனநோய் வைத்தியம் புரிந்த டாக்டர் குஹாவைக் கொன்றுவிட்டுத் தப்பியிருக்கிறான். இச் சம்பவம் நிகழ்ந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டிருந்தன. பம்பாய் சுற்றுவட்டாரத்தில் அவனைச் சல்லடை போட்டுத் தேடிப் பார்த்துப் பயன் இல்லாததால் இப்போது போலீஸாரே பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுத்திருக் கிறார்கள். படத்தில் காணப்படும் அவனை எங்கேயாவது பார்க்க நேர்ந்தால் உடனே அருகிலுள்ள போலீஸ் நிலை யத்துக்குத் தகவல் கொடுக்குமாறும் போலீஸ் அறிக்கை கேட்டுக்கொண்டது.

இச் செய்தியைப் படித்துக் கொண்டிருக்கையில் பத்மநாபன் தமது தோளும் கழுத்தும் சேருமிடத்தில் யாரோ விரல்களைப் பதித்து மெல்ல வருடுவது போல் உணர்ந்தார். அவ்வளவுதான். ''போலீஸ்! போலீஸ்!'' என்று உளறி

மடித்துக் கொண்டு பத்திரிகை கரங்களில் கசங்கத் திடுக்கிட்டுத் திரும்பினார்.

"என்ன ஸார்! ஸைக்கோ ஸாரநாதனையே நேரில் பார்த்துவிட்டது போல் பதறுகிறீர்கள்!" என்று கேட்டான் அவர் அருகில் நின்று கொண்டிருந்த ஒரு ஹிப்பி இளைஞன்.

அவனைக் கண்ட மறுகணம் பத்மநாபனின் மனம் அமைதியுற்றது. பரபரப்புடன் ரயில் பெட்டியின் ஜன்னல் அருகே வந்து, "என்ன? என்ன?" என்று வினவிய தம் மனைவி மக்களை "ஒன்று மில்லை" என்று அடக்கிவிட்டு மீண்டும் ஹிப்பி இருந்த பக்கமாய்த் திரும்பினார்.

"அது என்னன்னா, இந்தச் செய்தியைப் படிச்சுட்டு ஸைக்கோவைப் பற்றியே நினைச்சுண்டிருந்தேனா, அப்போ தோளிலே எறும்பு ஊர்ந்ததோ என்னவோ, தெரியல்லே..."

"உடனே ஸைக்கோவே உங்க கழுத்தைநெரிக்க வந்துட்டான்னு முடிவு கட்டிட்டீங்களாக்கும்! உங்க தோள் மேலே எட்டிப் பார்த்து ஸைக்கோ ஸாரநாதன் பற்றிய செய்தியைப் படித்தேனில்லையா? அப்போ என் தாடி உரசி யிருக்கும்!"

"இருக்கலாம்; வெலவெலத்துத்தான் போயிட்டேன்... ஸார் எதுவரைக்கும் போறாப்பலே?... இந்தாங்க பேப்பர் பார்க்கிறீங்களா?"

அந்த ஹிப்பி அதை வாங்கி வைத்துக் கொண்டான். "தலைப்புச் செய்திகளை உங்க பின்னாடி நின்னபடியே பார்த்துட்டேன்; விவரமா ரயில் நகர்ந்தப்புறம் படிச் சுட்டாப் போச்சு. நான் கொடைக்கானல் போறேன்... நீங்க?"

"அடே! என்ன ஆச்சரியம்! நாங்களும் அங்கேதான் போறோம்."

"இதிலே என்னப்பா ஆச்சரியம்? வருஷா வருஷம் ஓராயிரம் பேராவது கோடைக்காலத்திலே மலை ஏறி இறங்க மாட்டார்களா?"

மீனா ரயிலுக்குள் இருந்தபடியே தம்மை 'இறக்கி'யதைக் கவனியாதது போல் பத்மநாபன் தொடர்ந்தார்: "ஸெகண்ட் ஸீஸனுக்குப் போனால் இன்னும் நன்றாயிருக்கும். ஆனால் அப்போ விடற லீவிலே குழந்தைகள் கொலு வைக்க ணும்னு ஆசைப்படறா. சரி, இப்போதைக்கு நூற்றி எட்டு டிகிரி வெய்யில்லேயிருந்து தப்பிச்சுப்போமேன்னு கிளம்பிட்டேன்."

"ஆமாம், கோடை பிறந்தால் கொடைக்கானலுக்கு வருஷா வருஷம் போயிட்டு வர மாதிரிதான் பேச்சுக் கிழியறது உன் அப்பாவுக்கு" என்று அம்புஜம் மீனாவிடம் முணுமுணுத்தாள்

"என் ஒய்ஃபும் குழந்தைகளும்தான் உள்ளே இருக்கா. குடும்பம் பெரிசாகி விட்டாலும் ஃபஸ்ட்டிலேயே தாராளமா இடம் இருக்கிற மாதிரி பிரயாணம் செய்து பழகிட்டேன்; - செலவைக் கணக்குப் பண்ணறதுக்கில்லை. மூணாங் கிளாஸிலே என்னமா அடைஞ்சுண்டு போறது?"

"பரம்பரைப் பணக்காரன் மாதிரி பேசினேன் பார்த்தாயா?" என்று கேட்பது போல் பத்மநாபன் தம் மனைவியை நோக்கி ஒரு முறை கழுத்தைச் சொடுக்கினார். தொடர்ந்து, "மொத்தம் நாலரை டிக்கட்டு; ஐந்து பர்த் உண்டு. ஒன்றை வேண்டாம்னு வைச்சுட்டு ஐந்து பேரும் ஒரே கம்பார்ட்மெண்டிலேயே போறோம்- பையனைத் தரையில் படுக்கப் போட்டுக்கலாம்" என்றார்.

"ஓகோ! அப்படின்னா நீங்க ஒரு பர்த்தைத் தியாகம் பண்ணிட்டதாலே பக்கத்தில் இருக்கிற 'கூப்பே'யில் நான் மட்டும் தனியாயிருப்பேன்."

*''தனியா ஏன் இருக்கணும்? தூக்கம் வர வரைக்கும் எல்லோரும் சேர்ந்து பேசிண்டே போனால் போச்சு.''*

*இப்படிக் கூறும்போதே பத்மநாபனுக்கு ஏன் சொன்னோம் என்றிருந்தது. ஹிப்பி என்றாலே அவருக்கு அலர்ஜி. அவர் அவனை ஒதுக்கவே விரும்பினார். ஆனால் ஒரு பத்திரிகையாளர் என்ற முறையில்-மனசுக்குள் என்ன எண்ணினாலும்- வெளிப்படையாக அவர் எல்லாரிடமும் அன்பாகவும் சுமுகமாகவும் பேசிப் பழகிவிட்டார். அந்தப் பழக்கம் இங்கே காலை வாரிவிட்டுவிட்டது.*

*''ஏன்னா! மணி அடிச்சுட்டாப் போலே இருக்கே, ஏறிக்கோங்களேன்'' என்று அம்புஜம் உள்ளேயிருந்தபடி குரல் கொடுத்தாள்.''*

*பத்மநாபன் அவள் விருப்பப்படி நடந்து கொண்டபோது அந்த ஹிப்பியும் இன்னொரு முறை அழைக்கக் காத்திராமல் அதே அறையில் வந்து அமர்ந்துவிட்டான்.*

*''உங்க பேரு? தெரிஞ்சுக்கவே யில்லையே?'' என வினவினார் பத்மநாபன்.*

*''என் பேரா? என் பெயரையா கேட்கறீங்க? ஏன்? எதற்கு?'' என்றான் அந்த ஹிப்பி.*

*திடுமென்று விநோதமான முறையில் அவன் தனக் குள்ளேயே சுருண்டு கொள்வது பத்மநாபனுக்கு ஆச்சர்ய மளித்தது.*

*''ஒரு பேச்சுக்குக் கேட்டேன். விருப்ப மில்லையானால் நீங்கள் சொல்லவேண்டாமே?'' என்றார்.*

*''ஊரைச் சொன்னாலும் பேரைச் சொல்லக் கூடாது. ஸார்!'' என்றான் அவன், சிரிப்பு வராமல் சிரித்து.*

"இதென்ன வேடிக்கை? உங்க பேரை நாங்க தெரிஞ் சுண்டால் என்ன தப்பு? உங்களுக்கு என்ன நஷ்டம் அதிலே?"

"சும்மா தமாஷ் பண்ணினேன், ஸார்! என் பெயரை நான் சொல்லாட்டா நீங்க தெரிஞ்சுக்க முடியாதா என்ன? அதுதான் வெளியிலே டைப் அடிச்சு ஒட்டியிருக்கானே!"

"இவன் குரல் இலேசாக நடுங்குகிறதோ?" என்று எண்ணினார் பத்மநாபன்.

"எனக்குத் தெரியும், இவர் பேரு" என்றாள் அனு. "இவர்தான் ஹிப்பி மாமா!"

"ஹிப்பி மாமா! ஹிப்பி மாமா!" என்று கைகொட்டினான் விசு.

"கரெக்ட்! ஹிப்பி மாமான்னே நீங்கள்ளாம் கூப்பிடுங்க, ஓ.கே.?"

ரயில் நகர்ந்தது.

"உண்மையைச் சொல்லணும்னா எனக்கு ஹிப்பிகளை அவ்வளவாகப் பிடிக்காது, ஸார்!" என்றார் பத்மநாபன். "நான் உங்களைப் பற்றிச் சொல்றதா நினைக்காதீங்க; பொதுவாப் பேசறேன்."

"என்ன? அவங்களிடம் உங்களுக்கு ஏன் வெறுப்பு?"

"கழுத்து வரை முடி; கழுவப் படாத தாடி மீசை; ஆரஞ்சு நிற ஜிப்பாவில் பச்சை நிறப் பூக்களும், ஊதா நிற இலை களும் டிசைன்; நீல நிற பாண்ட்; ஆந்தைக் கண் மூக்குக் கண்ணாடி; கழுத்திலே கண்ணாடி மணிமாலை-என்ன வேண்டிக் கிடக்கு?"

"என்னை அப்படியே கச்சிதமா வர்ணிச்சுட்டீங்க- எழுத் தாளர் இல்லையா? அதை அப்பவே தெரிஞ்சுக்கிட்டேன். ஆனால் ஒரு திருத்தம்-இது ஜிப்பா இல்லே, குரு ஷர்ட்; இது பாண்ட் இல்லே, பெல் பாட்ஸ்."

*"பெல் பாட்ஸோ ஹெல் பாட்ஸ்ஸோ- எனக்குப் பிடிக்கவில்லை, சுவாமி!"*

*"ஹிப்பிகளின் உடை விஷயம் உங்களுக்கு ஒப்புதலாயில்லை என்ற ஒரு காரணத்துக்காக மட்டும் நீங்கள் அவர்களை வெறுக்கலாமா? ஹிப்பி இயக்கம் எதனால் தோன்றியது என்பது உங்களுக்குத் தெரியுமா?"*

*"மிஸ்டர்! என்னை எழுத்தாளன் என்றீர்கள். முதல்லே நான் ஜர்னலிஸ்ட்; அப்புறம்தான் எழுத்தாளன்."*

*"சரி, சொல்லுங்க."*

*"வியட்நாம் போரை அமெரிக்க இளைஞர் சமுதாயம் வெறுத்ததால் உருவானது ஹிப்பி இயக்கம். மனிதன் மனிதனைக் கொல்வதைத் தவிர்த்துப் பரஸ்பரம் அன்பு செலுத்த வேண்டும் என்பது அதன் நோக்கம். மலர்கள் அதன் சின்னம்.*

*"ஆனால் அமெரிக்க ஹிப்பி இயக்கம் இந்தியாவுக்கு- சிறிய அளவில்தான் என்றாலும்- பரவுவானேன்? அதுதான் எனக்குப் புரியவில்லை."*

*"ஏன் நீங்கள் விவரித்த கொள்கைகள் நல்லவையல்லவா? அவை ஏன் இங்கு பரவக் கூடாது?"*

*"செல்வம் கொழிக்கும் அமெரிக்காவில் எல்லாவித வாழ்க்கை வசதிகளும் பெருகிவிடவே அவர்களை ஈர்க்கும் லட்சியப் பிடிப்புக்கள் இன்றி இளைஞர்கள் அலைந்தார்கள். ஹிப்பிகளானார்கள். போரை வெறுத்தது சரி, செல்வத்தைத் துறந்தது சரி. ஆனால் சோம்பித் திரிவதோடு நில்லாமல் கொடிய பழக்கவழக்கங்களுக்கும் அவர்கள் அடிமைகளாகிறார்கள்! எண்ணவே கூசுகிற கெட்ட நடத்தைகளைப் பயில்கிறார்களே! அந்த இயக்கம் இங்கே நமது இளைஞர்களைப் பீடிப்பானேன்? அந்த இயக்கத்தில் உள்ள நல்ல அம்சங்களை இவர்கள் பின்பற்றுகிறார்களா,*

இல்லையோ, கொடிய பழக்கங்கள் சுலபமாகத் தொற்றிக் கொள்ளும். இந்தியா என்ன, அமெரிக்காபோல் செல்வத்தில் உயர்ந்துவிட்டதா; அல்லது இங்கே இளைஞர்களுக்கு லட்சியக் குறிக்கோள்களுக்குத்தான் பஞ்சமா?''

''அப்பா ஒண்ணும் மீட்டிங்கிலே பேசலேடீ, கையைத் தட்டிவிடாதே!'' என்று திறந்த வாய் மூடாமல் கேட்டுக் கொண்டிருந்த அனுவைப் பார்த்துச் சொன்னாள் அம்புஜம்.

அதைப் பொருட்படுத்தாமல் பத்மநாபன் முடிவுரை நிகழ்த்தினார்: ''அதனால்தான் ஸார், எனக்கு ஹிப்பிக் கோலத்தில் இந்தியனைக் கண்டால் கோபம் கோபமாய் வருகிறது. அமெரிக்க ஹிப்பிகளிடம் உள்ள கொஞ்ச நஞ்சம் அனுதாபமும் எனக்கு இவர்களிடம் கிடையாது!''

''உண்மையில் எனக்குக்கூட இந்த ஹிப்பிகளிடத்தில் மோகமோ அனுதாபமோ ஒண்ணும் கிடையாது ஸார். ஏதோ இதுதான் இந்தக் காலத்தில் லேட்டஸ்ட் ஃபாஷன் அப்படீன்னு சொல்லிக்கிடறாங்க. நானும் டிரஸ் பண்ணிக்கிறேன், அவ்வளவுதான்.''

''ஐ ஆம் கிளாட். நீங்க இப்படிச் சொன்னதுக்காக உங்க வாய்க்குச் சர்க்கரை போடணும். ஆனா இப்போ எங்க கிட்டே இருக்கறது மனோகரம்தான். அம்புஜம் டின்னைத் திறந்து ஸாருக்குக் கொஞ்சம் பட்சணம் ஸாங்க்ஷன் பண்ணு!''

''நான் திறக்கறேன்; நான் திறக்கறேன்'' என்று அனுவும் விசுவும் போட்டி போட்டுக் கொண்டிருந்தபோது, ''நீங்க சாப்பிட்டாச்சா? இங்கேயே சாப்பிடலாம். இன்னும் நாலு பேர் வந்தாலும் காணுகிற மாதிரிதான் அம்புஜம் சமையல் பண்ணிக் கொண்டு வந்திருப்பாள். பத்து நாளைக்கான பட்சணங்கள் வேறு. யோசிக்காதீங்க'' என்று சொல்லிப் பத்மநாபன் அந்த ஹிப்பியை வற்புறுத்தினார். ஹிப்பிகள்

விஷயத்தில் அவன் தம்முடன் ஒத்த கருத்துடையவனா யிருந்ததில் அவருக்கு அவ்வளவு உற்சாகம்!

**சா**ப்பிடும்போது, "அப்பா! ஸைக்கோ ஸாரநாதன்னு என்னமோ பேசிண்டிருந்தேளே, என்ன விஷயம்?" என்று கேட்டாள் மீனா.

"இப்போ எதுக்கு அதெல்லாம், ராத்திரி வேளையிலே?" என்றாள் அம்புஜம்.

"நெருப்புன்னா வாய் வெந்துடுமா, மாமி?" என்றான் ஹிப்பி, "இந்த ஸைக்கோ ஸாரநாதனை கோர்ட்டிலே விசாரிச்சப்போ நான் பம்பாயிலேதான் இருந்தேன். ஒரு நாள் வேடிக்கையா கோர்ட்டுக்குப் போனேன். உசந்தா ஒரு இருபதடி தூரம் இருக்கும், அவனுக்கும் எனக்கும் இடையிலே. இவனா நாற்பத்திரண்டு கொலைகளைப் புரிந்தவன்னு கண்களைக் கசக்கிண்டு ஒரு தடவைக்கு நாலு தடவையாய்ப் பார்த்தேன். நம்பவே முடியலே. இப்போ என்னைப் பார்த்தால் கொலைகாரன்னு உங்களுக்குத் தோணுமா? அப்படித்தான் அவனும் பார்க்கச் சர்வ சாதாரணமாக இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமாங்கிற மாதிரி இருந்தான்."

"அப்படிப்பட்டவன் எதுக்காக நாற்பத்திரண்டு கொலைகள் பண்ணணும்?" என்று மீனா கேட்டாள்.

"அதுதான் ஆச்சர்யம்! அவனுக்குத் திடீரென்று அடக்க முடியாத ஒரு வெறி வந்துவிடுகிறதாம். அப்போ கையிலே ஒரு மணிக் கயிற்றைச் சுற்றி எடுத்துக்கொண்டு கிளம்பி விடு கிறானாம். தனியாக யாராவது அகப்பட்டுக் கொள்ளும் போது அவங்க கழுத்திலே கயிற்றைச் சட்டென்று சுற்றி, இறுக்கி..."

"போதும், போதும்! கேட்கவே சகிக்கலை; நீங்க அதை ஆக்ஷனோடு வேறே சொல்லிக் காட்டறேளே!...

குழந்தைகள் ராத்திரி சொப்பனம் கண்டு உளறி அடிச்சுண்டு எழுந்திருக்கப் போறதுகள்'' என்றாள் அம்புஜம் அந்த ஹிப்பியைப் பார்த்து.

''இருந்தாலும் அந்த எமகாதகப் பயல் போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்பிச்சுண்டுட்டான், பார்த்தீர்களா, அப்பா? அது எப்படிச் சாத்தியமாயிற்று? டாக்டர் குஹா விடம் மன நோய் மருத்துவத்துக்கென்று இவன் போயிருந் தாலும் போலீஸ் பாதுகாப்பின்றியா சென்றிருக்க முடியும்? பிறகு அவரைக் கொன்றுவிட்டு இவன் கம்பி நீட்டுவது எப்படி சாத்தியமாயிற்று?'' -மீனா ஒரு கையால் சாப்பிட்ட வாறே இன்னொரு கையால் அந்த ஹிப்பியிடமிருந்து தினசரியை வாங்கி, பெட்டி கட்டிப் போட்டிருந்த செய்தியை இதற்குள் படித்துவிட்டிருந்தாள். பத்திரிகை யைத் திருப்பிக் கொடுத்தவாறே மேற்படி கேள்வியைக் கேட்டாள்.

''அதையெல்லாம் போலீஸ் அதிகாரிகள் பேப்பர்காரன் கிட்டே சொல்வாளா? மானம் போயிடாதா? இதைக்கூட மூணு நாட்கள் கழிச்சு வேறே வழியில்லாமல்தான் சொல்லி இருக்கா. மேற்கொண்டு ஏதாவது ஒரு கொலை நடந்து விட்டால், 'ஸைக்கோ தப்பித்துக் கொண்ட விவரத்தை ஏன் வெளியிடலை? ஜனங்களுக்கு எச்சரிக்கை செய்திருந்தால் அவர்கள் முன்ஜாக்கிரதையாக இருந்திருப்பார்களே; கொலையைத் தவிர்த்திருக்கலாமே' என்று எவனாவது கேட்டுடுவான். அதுக்குப் பயந்துதான் மூணு நாளைக்கு மேல் விஷயத்தை மறைக்கால் நிருபர்களைக் கூப்பிட்டு அனுப்பிவிட்டார்கள்.''

''இதே மூணு நாளைக்குள்ளே அந்த ஸைக்கோவைக் கண்டுபிடிச்சு அரஸ்ட் பண்ணியிருந்தால், 'அவன் எவ்வளவு சாமர்த்தியமா தப்பிச்சுக்கப் பார்த்தான். இவா அதுக்கு இடம் கொடுக்காமே எப்படி வல்லவனுக்கு வல்லவனா

...ந்துண்டா' என்றெல்லாம் விவரமாகச் சொல்லியிருப்பா'' என்றாள் அம்புஜம்.

''அவா எவ்வளவுதான் இந்த மானக்கேட்டை மூடி மறைக்க முயன்றாலும் முடியாது, அம்புஜம்! பத்திரிகைச் சுதந்திரம் இன்னும் அடியோடு பட்டுப் போயிடலே. நிருபர்கள் சும்மா விடமாட்டார்கள். போலீஸ் தரப்பு செய்தி வந்த சூட்டோடு பிரசுரமாகியிருக்கு. மேற் கொண்டு தகவல்கள் சேகரிக்க நேரம் இருந்திருக்காது. ஆனால் நாளைப் பத்திரிகையில் நிருபர்கள் தூண்டித் துருவிக் கண்டுபிடித்த விவரங்கள் வெளியாகும் பார்!''

ஹிப்பி ஒரு கொட்டாவி விட்டான். ''காலம்பற பார்க்கலாம் ஸார்!'' என்று சொல்லிவிட்டுப் பத்திரிகையைக் கையில் எடுத்துக்கொண்டு எழுந்தான். ''போய்க் கையைக் கழுவிண்டு அப்படியே படுத்துக்கறேன்'' என்று கூறி நடந்தான்.

இலைகளையெல்லாம் வாரி வெளியே எறிந்தாள் அம்புஜம். ஜன்னல் வழியே கையைக் கழுவிக் கொண்டு படுக்கைகளை விரிக்கத் தொடங்கினார் பத்மநாபன். ''ஏதோ ஹிப்பி மாதிரி உடுத்திண்டாலும் தான் ஒரு ஹிப்பி இல்லைங்கிறானே, அந்தமட்டும் சந்தோஷம்'' என்றார்.

மீனா கோபமாகக் கூறினாள்; ''நீங்க நினைக்கிறது தப்பு. நிலைமையைத் தலைகீழா மாத்தறேள். ஹிப்பிகளைப் பிடிக்காது; அவர்கள் கொள்கைகளில் அக்கறை இல்லை என்பவன் உடை மட்டும் ஹிப்பி பாணியில் அணி வானேன்? எதுக்கு இப்படி வேஷம் போடணும்? இந்த ஆசாமியே போலி, அயோக்கியன்னு எனக்குத் தோணறது.''

''இந்தா மீனா! நம்ப குடும்பத்தில் கதை எழுத உன் அப்பா ஒருத்தரே இப்போதைக்குப் போதும். நீ வேறே கற்பனைக் குதிரையைத் தட்டிவிடாதே'' என்று அவள்

வாயை அடைத்தாள் அம்புஜம். பின்னர், "எனக்கென்னவோ அவனைப் பார்த்தால் நல்ல பிள்ளையா லட்சணமாத்தான் தோணித்து; உங்க அக்கா பெண்ணுக்கு வரன் வரன்னு அடிச்சுக்கறாளேன்னு ஞாபகம் வந்தது" என்றாள்.

"நல்ல வேளை, அவனை ஜாதகம் கேட்காமல் விட்டியே!" பத்மநாபன் சிரித்தபடியே தலையணையைத் தட்டிப் போட்டார்.

"ஜாதகம் கேட்கலைன்னாலும் விலாசத்தையாவது விசாரிச்சு வைச்சுக்கலாம் இல்லையா?"

"என்னம்மா இது? அவன் என்ன ஜாதியோ, குலமோ? என்னென்னவோ சொல்லிண்டே போறியே! அப்பா வேணும்னா இந்த காலத்தில் ஜாதி வித்தியாசம் பார்க்கக் கூடாதுன்னு நினைக்கலாம். ஆனால் அத்தை அப்படி இல்லையே!"

"எல்லாம் நம்மளவா மாதிரிதான், மாமா மாமின்னு வாய் நிறையக் கூப்பிட்டு வக்கணையா அழகாப் பேசறான்."

"பேச்சை வைத்து இந்தக் காலத்திலே எதையும் சொல்ல முடியாது, அம்மா. நம்ம தெருவிலேயே இருக்கிற ஆளும் கட்சிக்காரரா என்னைப் பார்த்து, 'குழந்தே! ஆத்திலே அப்பா இருக்காளா'ன்னுதான் கேக்கறா. அவா நம்ம வீட்டுக்குள்ளே வந்துட்டா அப்பா எப்படிப் பேசறாங்கறே? 'வாங்க, இருந்துக்கிடுங்க. என்ன சாப்பிடறீக? கொஞ்சம் காப்பி கொண்டாறச் சொல்லட்டுங்களா'ன்னு கேட்கிறாளா இல்லையா?"

மீனா நடித்துக் காட்டியதைப் பார்த்துப் பத்மநாபன் உள்பட அனைவருமே சிரித்தார்கள். அது ஓய்ந்ததும் பத்மநாபன் கூறினார்: "அவனிடம் போய் என்னன்னு

விசாரிக்கிறது? கடைசிவரைக்கும் அவன் தன் பெயரைக் கூடச் சொல்லலையே! செங்கல்பட்டில் இறங்கி வெளியே ஒட்டியிருக்கிற 'லிஸ்ட்'டைத்தான் பார்க்கணும்.''

பத்மநாபன் இவ்வாறு சொன்னாரே ஒழிய, செங்கல் பட்டில் ரயில் வண்டி நின்றபோது, அவர் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். அந்தப் பெட்டியில் விழித்துக் கொண்டிருந்தவள் மீனா ஒருத்திதான். ஆனால் அவளுக்குத் தனியே கீழே இறங்கத் தயக்கமாகவும் ஓரளவு பயமாகவும்கூட இருந்தது.

பத்மநாபன் செய்யத் தவறிய காரியத்தை அந்த ஹிப்பி ஞாபகமாகச் செய்தான். டிக்கெட் எடுத்தபோது எனக்கு நானே சூட்டிக் கொண்ட புதுப் பெயரை அதற்குள் மறந்து போனேனே! என்ன அசட்டுத்தனம்! நான் ஏதாவது ஒரு பெயரைச் சொல்லி வைக்கப் பின்னால் அந்தப் பத்திரிகைக் காரன் இதில் ஒட்டப்பட்டுள்ள வேறு பெயரைப் பார்த்துத் தொலைத்தானானால் சந்தேகம் ஏற்பட்டு விபரீதமாக முடியுமே! நல்லவேளை தப்பித்தோம். இப்போதாவது நன்றாக மனனம் செய்து கொள்வோம், புதுப் பெயரை' என்று எண்ணியவனாய், ''அமிர்தலிங்கம், அமிர்தலிங்கம்'' என்று திரும்பத் திரும்ப மிருதுவான குரலில் சொல்லிக் கொண்டே பிளாட்ஃபாரத்தில் அலைந்தான் ஹிப்பி.

★ ★ ★

# 4. குஹாவுக்கு 'குட்பை'!

கொடைக்கானல். ''ஹாப்பி ஹாலிடே'' என்ற ஹோட்டல். இருபத்தி நாலாம் நம்பர் அறையில் அந்த ஹிப்பி கட்டிலில் அமர்ந்து ஒரு கத்திரிக்கோலால் சர்வ ஜாக்கிரதையாக முதல் நாள் 'மெய்ல்' பத்திரிக்கையில் வெளியாகியிருந்த ஸைக்கோ ஸாரநாதனின் புகைப் படத்தைக் கத்திரித்து எடுத்தான். பின்னர் 'ஸெல்லோ டேப்'பினால் அதை டிரெஸ்ஸிங் டேபிள் நிலைக் கண்ணாடியில் ஒட்டினான். கதவு தாளிடப்பட்டிருக்கிறதா என்று பார்த்துவிட்டு, ஜன்னல்களின் திரைச் சீலைகளையும் இழுத்து மூடியபிறகு வந்து கண்ணாடி எதிரே ஒரு ஸ்டூலில் அமர்ந்தான். பின்னர் மெல்ல, நிதானமாகத் தன் தாடியைப் பிய்த்து எடுத்தான். முகத்தில் ஒரு நாள் வளர்ச்சியுள்ள மயிர் இருந்ததால் ஒட்டப்பட்டிருந்த தாடி, மீசை ஆகியவற்றைப் பிய்ப்பது அத்தனை சுலபமாக இல்லை; ஏன் வேதனை யாகக்கூட இருந்தது. எந்தவிதமான 'பவரு'ம் இல்லாத வெறும் கண்ணாடி பொருத்தப்பட்ட ஆந்தைக் கண் மூக்குக் கண்ணாடியைக் கழற்றிப் போட்டான். தலை வழுக்கையை மூடி, கழுத்துவரையில் நீண்ட டோப்பாவை அகற்றினான். ஒப்பனை நீங்கப் பெற்றதும் அவன் நிலைக் கண்ணாடியில் ஒட்டப்பட்டிருந்த படத்தையும் அதன் அருகில் தெரிந்த தன் பிரதிபிம்பத்தையும் ஒப்பிட்டுப் பார்த்தான். டோப்பாவை பிரஷ்ஷால் நீவி விட்டபடியே. ''துளிக்கூட வித்தியாசம் இல்லை; ஜெயிலில் ஃபோட்டோ

நன்றாகத்தான் எடுத்திருக்கிறார்கள்'' என்று முணுமுணுத்த போது அவன் அதரங்களில் ஒரு திருப்திமிக்க புன்முறுவல் அரும்பியது. கண்கள் பளபளத்தன. உள்ளங் கைகள் ஒன்றை ஒன்று தடவிக் கொடுத்தன, விரல்கள் மடங்கி மடங்கி விரிந்தன.

நிலைக்கண்ணாடியில் பெரிதாகத் தெரிந்த அவன் முகம் சிறுத்துக்கொண்டே போய் அவன் முழுஉருவம் இப்போது தெரிந்தது. அது மட்டுமல்ல, அவன் கைதிக் கூண்டில் நிற்பதும் புரிந்தது. சுற்றிலும் வழக்கறிஞர்களும் பார்வை யாளர்களும் நீதிபதியும் நீதிமன்றத்தில் பணியாற்றும் பிறரும் இருந்தார்கள். வழக்கு விசாரணை நடந்து கொண்டிருந்தது. டாக்டர் குஹா, ஆணித்தரமாக, அழுத்தந் திருத்தமாகச் சாட்சி சொன்னார்: ''நான் கைதியை ஒரு நாள் இரு நாட்கள் அல்ல, இரண்டு வாரம் கோர்ட்டார் அனுமதி பெற்றுப் பரிசோதித்திருக்கிறேன். தீர்மானமாகச் சொல்கிறேன். ஸ்ரரநாதன் கொலைக் குற்றம் சாட்டப் பட்டுத் தூக்கில் தொங்கவேண்டியவன் அல்ல. மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டு மனோதத்துவ நிபுணர்களிடம் சிகிச்சை பெறவேண்டியவன்.''

நீதிபதி குறுக்கிட்டார்; ''டாக்டர் குஹா! அவனுக்குத் தண்டனை விதிப்பதா இல்லையா, என்ன தண்டனை கொடுப்பது என்றெல்லாம் நிர்ணயிக்க வேண்டியது என் பொறுப்பு. என் வேலையில் நீங்கள் தலையிட வேண்டாம். நீங்கள் அவனைப் பரிசோதித்ததில் என்ன கண்டீர்கள்? அதை மட்டும் சொல்லுங்கள், போதும்!''

''மன்னிக்க வேண்டும். உணர்ச்சி வேகத்தில் பேசி விட்டேன்'' என்றார் டாக்டர் குஹா.

''அதை என்னால் நம்பமுடியவில்லை. இந்த வழக்கில் ஆரம்பத்திலிருந்தே ஒரு 'ஸென்ஸேஷன்' ஏற்பட்டுப் போய்

விட்டது. அந்தப் பரபரப்பில் பங்குபெற்றுப் பிராபல்யம் அடைய வேண்டும் என்ற எண்ணம் பலருக்கு ஏற்படுவது இயற்கை. ஆனால் உங்களைப் போல் கௌரவமான நிலையில் இருந்து தொழில் நடத்துபவர்கள் மனத்தைக் கட்டுப்படுத்தத் தெரிந்துகொள்ள வேண்டும்.''

''யுவர் ஆனர்! நான் ஏற்கனவே பேரும் புகழும் அடைந்தவன். எனக்குப் புதிதாகப் பிராபல்யம் ஏதும் வந்துவிடப்போவதில்லை; அதை நான் வேண்டவும் இல்லை.'' சூடாகப் பதில் சொன்னார் குஹா.

நீதிபதியும் சளைக்கவில்லை. ''அப்படியானால் அதற்குத் தகுந்தாற்போல் நடந்து கொள்ளுங்கள். நீங்கள் மேற்கொண்ட பரிசோதனைகளையும் அவற்றின் முடிவுகளையும் பற்றி மட்டுமே இங்கு பேசுங்கள். குரலை உயர்த்தாமல், பதறாமல் அமைதியாகச் சொல்லுங்கள்'' என்றார்.

★ ★ ★

**டா**க்டர் குஹா, பானர்ஜியைத் தேடி வந்தபோது பிராபல்யம் அடையலாம் என்ற எண்ணம் அவருக்கு இல்லாமல் போகவில்லை. அவருக்குப் பணம் இருந்தது; போதுமான அளவு இருந்தது. ஆனால் பணத்தைக்கூட ஒரு நிலையில் 'போதும்' என்று கருதிய மனம் புகழைக் குறித்தும் அவ்வாறே நினைக்க மறுத்தது. மனோதத்துவ நிபுணரான அவருக்கு இந்த மனோதத்துவம் புரியாமல் போகவில்லை. வழக்கறிஞர்களோ அல்லது டாக்டர்களோ விளம்பரம் செய்துகொள்ளக் கூடாது என்பது அத்தொழில் களில் எழுதப்படாத ஆனால் அனுசரிக்கப்படுகிற ஒரு சட்டம். ஆனால் விளம்பரம், அதை ஒதுக்குவது சாத்தியமில்லாத வகையில் தானாகவே வந்தால் யார்தான் வேண்டாம் என்பார்கள்? டாக்டர் குஹாவுக்கு இப்போது

அப்படி ஒரு சந்தர்ப்பம். அவர் வழக்கறிஞர் பானர்ஜியைப் போய்ப் பார்த்தாரேயாகில், அது மனநோய் மருத்துவ உலகின் நலனுக்காகத்தான் இருக்கும்; ஒரு மனிதன் அநியாயமாகத் தூக்கிலிடப்படுவதைத் தவிர்ப்பதற்காகத் தான் இருக்கும். ஆனால் அதன் விளைவாகப் பாரத நாட்டின் பத்திரிகைகள் ஒன்றுவிடாமல் அனைத்திலும் தம் பெயர் அடிபட்டுப் பிரபலமடைந்தால் அதற்கு அவர் என்ன செய்ய முடியும்? பானர்ஜி தமது சாட்சியத்தின் காரணமாக வழக்கில் வென்று விடுவாரேயானால் அப்போது பிராபல்யத்துடன் பெரும் புகழும் வந்து சேரும்தான். ஆனால் இப்படித் தம் பெயர் கொடிகட்டிப் பறக்குமே என்பதற்காகக் கடமையைச் செய்யாமல் இருந்துவிட முடியுமா? இப்படித் தமது புகாழசைக்கு ஒரு சமாதானத்தையும் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுதான் டாக்டர் குஹா, பானர்ஜியைப் போய்ப் பார்த்தார். அவர் யோசனையின் பேரில்தான் பானர்ஜி, "குற்றவாளியை ஒரு மனோதத்துவ நிபுணர் பரிசோதிக்கக் கோர்ட்டார் அனுமதிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

இந்தக் கோரிக்கைக்கு நீதிபதி இணங்கினார். டாக்டர் குஹா, ஸாரநாதனுடன் பல நாட்கள், பல மணி நேரம் பேசினார்.

பேசப்பேச, அவன் பேசுவதை இவர் கேட்கக் கேட்க, உண்மையாகவே அவனுக்கிருந்த மனோ வியாதியிலும் அதைக் குணப்படுத்துவதிலும் இவருக்குத் தீவிர ஈடுபாடு ஏற்பட்டுவிட்டது. தொடக்கத்தில் இருந்த பிராபல்யம் அடையலாம் என்ற நோக்கம் பின்னணிக்குப் போய் அடியோடு மறைந்தேவிட்டது. அதற்குப் பதில் இப்போது மனநோய் உள்ள இவனைக் கொலைகாரன் என்று கருதுவது பெருந்தவறு; இவனுக்குத் தூக்குத் தண்டனை கிடைக்காமல் காப்பதே தமது தலையாய கடமை; இவனது

மனநோயைக் குணப்படுத்துவதே இனி தமது முக்கிய குறிக்கோள் என்றெல்லாம் ஒரு லட்சிய வெறி உண்டாகி விட்டது. இத்தனை கொலைகளையும் அவன் திட்டமிட்டு, செய்யவேண்டும் என்று தீர்மானித்துச் செய்யவில்லை. அவனையும் மீறிய ஓர் உந்துதலால் அவனாலேயே தவிர்க்க முடியாத ஒரு வேகத்தில் செய்துவிட்டான் என்று தீர்மானமாக நம்பினார்.

கட்டிய மனைவியை ஓர் இளைஞன் ஒரு மாதம் இரண்டு மாதம்கூட அணைக்காமல் உறுதியாக இருக்க லாம். ஆனால் அதன்பிறகு அடக்க முடியாத ஒரு வெறி அவனை ஆட்கொள்ளுமல்லவா? அப்படித்தான் இவனையும் அவ்வப்போது கொலை வெறி பீடிக்கிறது; ஆட்டிப்படைக்கிறது. இந்த மனோவியாதி இருப்பதால் இவன் உள்ளம் எவ்வளவு துன்பப்படுகிறது; அதை வெளியே சொல்லிக் கொள்ளவும் முடியாமல் இவன் எவ்வளவு தூரம் சங்கடத்துக்குள்ளாகிறான்; இந்த வியாதி இவனுக்கு ஏன் ஏற்பட்டது; எப்படி இவனைக் குணப் படுத்துவது? - இவையெல்லாம் பின்னால் கண்டுபிடித்துத் தீர்மானிக்க வேண்டிய விஷயங்கள். வழக்கு ஸாரநாதனுக் குச் சாதகமாக முடிந்த பிறகு யோசிக்க வேண்டியவை. இப்போதைக்கு அவன் பரிதாபத்துக்குரியவன் என்பதை நிரூபித்தாலே போதும்.

**போ**லீஸாரின் சாட்சியங்கள் பழுதில்லாமல் இவன் கொலைகாரன் எனச் சுட்டிக்காட்டிய போதிலும் டாக்டர் குஹாவின் சாட்சியத்தை நீதிபதியினால் புறக்கணிக்க முடியவில்லை. ஸாரநாதன் கொலை செய்தான்; ஆனால் அவன் முன்கூட்டியே திட்டமிட்டு எதையும் செய்ய வில்லை. என்ன செய்கிறோம் என்று தெரியாமலேயே செய்தான்-இந்த முடிவுக்குத்தான் நீதிபதி வரவேண்டி யிருந்தது. அதே சமயம் ஸாரநாதனை விடுதலை செய்வதும்

முடியாது. அவனால் சமூகத்துக்கு ஆபத்து என்பதோடு, நடந்த கொலைகளுக்கு அவன் முழுமையாக இல்லாவிடினும் பெருமளவுக்குப் பொறுப்பு ஏற்றேயாக வேண்டும்.

"....ஆகவே இவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கிறேன்." -நீதிபதி தீர்ப்பைப் படித்துவிட்டு எழுந்து செல்ல முற்பட்ட சமயம் டாக்டர் குஹா, "மைலார்ட்! மைலார்ட்! ஒரு விண்ணப்பம்!" என்றார்.

"என்ன?" - அதிருப்தியைத் தெரியப்படுத்தப் புருவங் களைச் சுருக்கி, நேரமாகிவிட்டதை உணர்த்தக் கைக் கடிகாரத்தைப் பார்த்தார் நீதிபதி.

"மைலார்ட்! கைதியைச் சிறைச் சாலையில் போடுவதுடன் நின்றுவிடக் கூடாது. சிறையில் கைதிகள் நோய் வாய்ப்பட்டால் அவர்களை ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போய் சிகிச்சை பெற வசதி செய்யவேண்டியது போலீஸார் கடமை. அந்தக் கடமையை ஸாரநாதன் விஷயத்திலும் அவர்கள் நிறைவேற்ற வேண்டும். வாரம் ஒரு முறை அவர்கள் என் மருத்துவ மனைக்கு ஸாரநாதனைத் தக்க பாதுகாப்போடு அனுப்பி வைக்கட்டும், சிகிச்சைக்கு."

"நீங்கள் சொல்வதில் நியாயம் இருக்கிறது, மிஸ்டர் குஹா! ஆனால் போலீஸார் கைதிகளை மருத்துவமனைக்கு அழைத்துப் போவதைத்தான் நான் கண்டிருக்கிறேனே ஒழிய ஒரு டாக்டர் தாமாகவே கைதிக்குச் சிகிச்சை செய்ய முன்வந்து பார்த்ததில்லை."

"மைலார்ட்! நான் இதை ஸாரநாதனிடம் கொண்ட கருணையினாலோ அல்லது எனக்குச் செல்வமோ புகழோ கிடைத்துவிடும் என்பதற்காகவோ சொல்லவில்லை. மனநோய் மருத்துவத்துறை இதனால் பயன் அடையக்கூடும் என்பதொன்றே என் நோக்கம். ஸாரநாதனிடம் இருப்பது ஓர் அபூர்வமான மனநோய். அதனை மேலும் ஆராய்ந்து

காரணங்களையும் சிகிச்சை முறைகளையும் கண்டறிய விரும்புகிறேன். மேலும் இவன் கொலைகாரன் எனப் போலீஸார் கருதுவதால் இவனைத் தகுந்த டாக்டரிடம் அழைத்துப் போகும் விஷயத்தில் அவர்கள் அலட்சியமாய் இருக்கக் கூடும்.''

பானர்ஜி இந்தச் சமயத்தில் துள்ளி எழுந்து, ஸார நாதனின் வழக்கறிஞர் என்ற முறையில் டாக்டர் குஹாவின் கோரிக்கைக்கு மேலும் அழுத்தம் கொடுத்துப் பேசினார்.

''கைதியின் வழக்கறிஞர் சமர்ப்பித்துள்ள கோரிக்கையை நீதிமன்றம் ஆமோதிக்கிறது. போலீஸார் தக்க ஏற்பாடு களைச் செய்ய வேண்டும் என்று இந் நீதிமன்றம் உத்தர விடுகிறது.'' இவ்வாறு கூறிவிட்டு நீதிபதி தமது தனி அறைக்குச் சென்றார்.

★ ★ ★

டாக்டர் குஹாவின் அறையில் ஒரு மேஜை. மண்ணும் எருவும் கலந்து பரப்பினால் தோட்டம் போடலாம்; அத்தனை விசாலமானது! ஆனால் அது அவ்வாறு பயன் படாமல், டாக்டர் குஹாவின் 'டை பின்'னில் இருந்த வைரத்தோடு போட்டி போட்டுக்கொண்டு பளபளத்தது. அதன் பின்னால் ஒரு நாற்காலி. அது சுழலும், முன்னும் பின்னும் சாயும், உயரும், தாழும், ரப்பர்ச் சக்கரங்களின் மீதாக 'விர்ர்'ரென்று ஓசையின்றி நகரும். ரப்பர் குஷன் வைத்து மிருதுவான தோலினால் மூடித் தைக்கப்பட்ட ஆசனம் அது. ஆபீஸில் மாம்பலகையால் செய்த நாற்காலியிலேயே உடலை அஷ்ட கோணலாக வளைத்துக் கொண்டு தூங்கும் திறன் படைத்த ஆசாமிகள் இதில் உட்கார்ந்து பார்க்க வேண்டும். ஓ! அப்புறம் கும்ப கர்ணனை எழுப்பிய படலம்தான் நடக்க வேண்டி யிருக்கும். ஏதோ தேன்கூட்டின் அருகில் இருக்கிறோமோ

என்று நினைக்கும்படி அறையில் 'ஹம்ம்ம்' என்று ஓர் ஓசை. குளு குளு சாதனம் வழங்கும் தாலாட்டுத்தான் அது. முத்தைப் பொடி செய்து குழைத்துப் பூசியிருக்கிறார்களோ என்று எண்ணும்படி சுவர்களில் ஒரு வழவழப்பு, வெண்மை. டாக்டர் பெற்ற பட்டங்கள் பல அவற்றில் சட்டம் போட்டு மாட்டப் பட்டிருந்தன. போனால் போகட்டும் என்பதுபோல் ஒரே ஒரு இயற்கைக் காட்சிப் படத்துக்கும் இடம் இருந்தது. ஜன்னலை இளம் நீல நிறத்தில் 'வெனீஷியன் ப்ளைண்ட்' மறைத்தது. மங்கலான செயற்கை ஒளியை மறைவாகப் பொருத்தப்பட்டிருந்த டியூப் லைட் சிந்தியது.

அறையின் ஒரு பக்கத்தில் 'கௌச்'. அது கட்டிலுமல்ல; தொட்டிலுமல்ல. தாழ்வான, அகலமான, விசுப்பலகை போல்தான். ஆனால் ஒரு பக்கம் சற்று உயர்த்திக் கொள்ளலாம், சாய்ந்த நிலையில் படுக்க விரும்பினால். அதிலும் மென்மையான தோல் போர்த்திய ரப்பர் குஷனிங் நெடுகிலும் உண்டு.

அதில் படுத்தால்... ஐயோ! சுகமாவது சுகம்! ஆனால் பாவம், மன நோய் உள்ளவர்களுக்கு அதில் படுத்தாலும் சாந்தி கிடைக்காது. அதற்கு மேல் ஓர் ஊசியும் போடுவார் டாக்டர் குஹா. அவர்கள் உடலைத் தளர்த்தி, மனத்தை இலேசாக்கிப் பேச வைப்பார், கேட்பார்-இதுதான் அவர் சிகிச்சை முறை.

இந்த இடத்துக்கு வந்து, இத்தகைய சிகிச்சையைத்தான் கடந்த ஆறு மாதங்களாய்ப் பெற்றுவந்தான் ஸாரநாதன். டாக்டர் குஹா அவனுக்கு ஒரு ஜோடி பைஜாமா-ஜிப்பா கூட வாங்கிக் கொடுத்தார். தம்மைக் காண வரும்போது அவன் சிறைச்சாலை உடைகளைக் களைந்துவிட்டு இவற்றை அணிந்து வரவேண்டுமெனப் பணித்தார்.

ஒரு முறை ''மார்னிங் நியூஸ்'' நிருபர் டாக்டர் குஹாவைப் பேட்டி கண்டு எழுதினார். பொதுவாக மன நோய் மருத்துவம் பற்றி அமைந்த பேட்டியின் இடையில் ஸாரநாதன் பற்றியும் சில வார்த்தைகள் சொன்னார், டாக்டர். அவன் பூரணமாகக் குணமடையவில்லை என்றாலும் அவன் நிலையில் அபிவிருத்தி காணப்படுவ தாகக் கூறினார்.

வெறும் வாயையே மெல்லுகிற நிருபருக்கு அவல் கிடைத்தது போலாயிற்று இந்தச் செய்தி. மனநோய் மருத்துவம் பற்றிக் குஹா சொன்ன பல விஷயங்களை யெல்லாம் கழுத்தைப் பிடித்துப் பின்னால் தள்ளினார். ''ஸைக்கோ ஸாரநாதன் விடுதலை பெறுவானா?'' என்று பேட்டிக் கட்டுரைக்குத் தலைப்புக் கொடுத்தார். ஸார நாதனின் மனநோய் குணமடைந்து வருகிறதென்றும் அவன் முழுமையாக சொஸ்தமடைந்து விட்டால் சமூகத்தில் அவன் ஒரு கண்ணியமான, நல்ல மனிதனாக வாழ முடியும் என்றும், அப்படி ஒரு நிலை உருவாகும்போது அவனைத் தொடர்ந்து சிறையில் வைத்திருப்பது சரியாகுமா என்ற சட்டரீதியான கேள்வி எழுகிறதென்றும் நிருபர் எழுதினார். அவன் ஒரு ஸைக்கோவாக இருந்தபோது செய்த தவறுகளுக்கு அவனைப் பொறுப்பாக்க முடியாது எனில், குணமடைந்து விட்டபிறகு அவனைப் போலீஸ் பாதுகாப்பி லிருந்து விடுவித்துவிட வேண்டியதுதானே முறை? என்ற வினாவை எழுப்பியிருந்தார். மேலும் இதுபற்றிப் பிரபல வழக்கறிஞர் பானர்ஜியைக் கேட்டபோது அவர் இது விஷயமாகத் தாம் இப்போது ஒன்றும் சொல்வதற்கில்லை என்றும் யோசித்துச் சட்ட நுணுக்கங்களை ஆராய்ந்து பார்த்த பிறகே பதில் கூற முடியும் என்றும் தெரிவித்ததாக நிருபர் விவரித்திருந்தார்.

இதை யெல்லாம் படித்தபோது குஹாவுக்குச் சிரிப்பு வந்தது. 'இன்னும் முட்டையே இடவில்லை. அதற்குள் கோழிக் குஞ்சுகளை எண்ண ஆரம்பித்தாகிவிட்டது! நிருபரைக் குறைகூறி என்ன பயன்? ரொம்பக் கௌரவ மான பத்திரிகைகள் என்று சமீப காலம்வரை கருதப்பட்டு வந்த தினசரிகளும் சஞ்சிகைகளுமே இப்படித்தானே இன்று 'ஸென்ஸேஷ'னைத் தேடிப் போகின்றன? ஆங்கில மாகட்டும், பிராந்திய மொழிகளாகட்டும் எம்மொழிப் பத்திரிகைகளானாலும் ஸெக்ஸும் ஸென்ஸேஷனும்தான்!'

அந் நிருபர் ஒரு பரபரப்பை வாசகர்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக இப்படி எழுதியது எவ்வளவு பெரிய தவறு என்பது விரைவிலேயே தெரிந்து போய்விட்டது. ஏனெனில் இதே நேரத்தில் ஸாரநாதன் டாக்டர் குஹாவுக்கே 'குட்பை' சொல்லத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டிருந்தான்!

★ ★ ★

# 5. டி.ஐ.ஜி விஜயம்

பத்மநாபன் குடும்பத்தினர் பயணக் களைப்புத் தீர வெந்நீரைத் தாராளமாக விட்டுக்கொண்டு குளித்து விட்டுப் புத்தாடை உடுத்திச் சாப்பாட்டுக் கூடத்தை நோக்கி நடந்தனர்.

அறையைப் பூட்டிக்கொண்டு வந்த பத்மநாபன் முன்னால் சென்ற மனைவியையும் மக்களையும் பின்தொடர்ந்தார்.

"அம்மா! அதோ, அந்த மரங்களை நெருங்கி வந்து கொண்டிருக்கும் மேகத்தைப் பாரேன்! கையால் தொடலாம்போல் எத்தனை கிட்டத்தில் இருக்கு!" என்று அதிசயத்துடன் தாயாருக்குச் சுட்டிக் காட்டினாள் மீனா.

அப்போதுதான் குளித்து அலங்கரித்துக் கொண்டு வந்திருந்தார்கள் என்பதோடு மனோரம்மியமான புதிய இடத்துக்கு வந்த மகிழ்ச்சி காரணமாய் உடலெங்கும் ஒரு மலர்ச்சி விகசிக்கும் அவர்கள் தோற்றம் மலைய மாருதம் போல் நெஞ்சைக் குளிர்விப்பதாய் இருந்தது.

'நம்முடைய கண்ணே பட்டுவிடும் போலிருக்கே! அனசூயாவுக்கு நாம் புதிதாக வாங்கிக் கொடுத்திருக்கும் 'பாக்ஸ்' காமிராவால் அம்மாவையும் பெண்ணையும் சேர்த்து நிற்க வைத்து ஒரு ஃபோட்டோ எடுக்க வேண்டும்!' என்று தமக்குள் சொல்லிக் கொண்டார் பத்மநாபன். 'இன்னும் ஓரிரு வருஷங்கள் போனால் மீனா அம்புஜத்தை

விட நாலு அங்குலம் உயர்ந்து விடுவாள்! சீக்கிரம் கல்யாணத்தைப் பண்ணி வைத்துவிட வேண்டும்!'

'அவளுக்கு இப்போ என்ன அவசரம்? பார்த்துக் கொள்ளலாம்' என்று அலட்சியப்படுத்திக் கல்யாணத்தை ஒத்திப் போட்டுவிட்டுப் பின்னால் கையைப் பிசைந்து கொண்டு நின்ற பெற்றோர்கள் சிலரைப் பத்மநாபன் அறிவார். அதே தவற்றைத் தாமும் செய்துவிடக் கூடாது என்பதில் அவர் குறியாக இருந்தார். இருபது வயது வரை பரவாயில்லை, இருபத்திரண்டானால் மாப்பிள்ளை கிடைப்பது சிரமம்; அதற்கு மேல் போனால் ஆபத்து என்று தமக்குள் கணக்கிட்டு வைத்திருந்தார் அவர்.

பத்மநாபனின் சிந்தனை தடைப்படும் விதமாக, "என்னங்க, ரூமெல்லாம் வசதியாயிருக்கா?" என்று கேட்டார், கைகூப்பி வணக்கம் செலுத்திய ஒருவர். பிறகு தம்மைத் தாமே அறிமுகப்படுத்திக் கொண்டார்:

"நான்தானுங்க இந்த ஹாப்பி ஹாலிடேயை நடத்தறது. ஏதாவது வேணுமானால் சொல்லுங்க, ஏற்பாடு செய்து தரேன்; வெந்நீர் சரியா வருதில்லே?"

"ஓ! எல்லாம் சௌகரியமாகவே இருக்கு" என்றார் பத்மநாபன், அங்கு வந்தது முதல் அம்புஜம் கூறிய பல குற்றங்குறைகளை ஒதுக்கித் தள்ளியவராக. குறைகளைப் பட்டியல் போடப் பண்பாடு இடம் தரவில்லை.

"அன்னம் பத்திரிகை நம்மதுதானுங்களே?"

"இல்லவே இல்லை!" அலறிப் புடைத்துக் கொண்டு மறுதளித்தார் பத்மநாபன். "அதில் நான் துணை ஆசிரியராகப் பணியாற்றுகிறேன், அவ்வளவுதான். நீங்க பெரிய பொறுப்பை எல்லாம் என் தலையில் கட்டாதீங்க. கற்பனையில்கூட அவ்வளவு சுமையைத் தாங்க முடியாது என்னாலே."

அவரிடமிருந்து தப்ப முயன்றவர்போல், "சாப்பிட்டு விட்டு வரேன்" என்று கூறி நகர்ந்தார் பத்மநாபன். அவருக்காக அம்புஜமும் குழந்தைகளும் காத்திருந்தார்கள்.

"போங்க, போங்க. பசங்களெல்லாம் பசியோடே இருக்கும்" என்றார் தனராஜ்.

"என்ன சொல்கிறார்?" என்று வினவினாள் அம்புஜம், பத்மநாபன் தனராஜை விட்டுப் பிரிந்து அவர்களை நெருங்கியபோது.

"ரூம் ரிஸர்வ் பண்ணச் சொல்லிக் கடிதாசு போட்ட போது ஆபீஸ் 'லெட்டர்ஹெட்'டில் எழுதிட்டேன் போலிருக்கு, ஞாபகம் இல்லாமல். அவன் அன்னம் பத்திரிகையே எனக்குத்தான் சொந்தம்னு முடிவு பண்ணிட் டான்! இதிலேயிருந்து என்ன தெரியறதுன்னா. அப்படிப் பட்ட பெரும் செல்வந்தர்கள்தான் இங்கே வந்து தங்குவான்னு! ஆக, நாம் சரியான இடத்துக்குத்தான் வந்து சேர்ந்திருக்கோம், ஆரம்பத்தில் நாம் போட்ட திட்டத்தின் பிரகாரம்."

"அது என்ன பெரிய மனுஷாளோ, ஆடம்பர ஹோட்டலோ எனக்கு ஒண்ணும் புரியலை. கட்டில்லே உட்கார்ந்தா மெத்தைக்குப் பஞ்சு அடைக்கிறதுக்குப் பதில் எலிகளைப் பிடிச்சுத் திணிச்சு இருக்கிற மாதிரி குண்டும் குழியுமா இருக்கிறதோடே கீங்கீங்னு கத்த வேறே செய்யறது. ரூமை விட்டு வெளியே வந்தால் வராந்தாவில் கண்ணாடியெல்லாம் ஒடிசலும் விரிசலுமாய் இருக்கு. ஜன்னலுக்குக் கொக்கிதான் இல்லே, புது கர்ட்டனாவது போடப்படாதா? கதவுக்கெல்லாம் ஒரு பெயிண்ட் அடிக்கக்கூடாதா? மேஜை நாற்காலி ஒவ்வொண்ணும் இரண்டு பாட்டில் வார்னிஷைக் குடிக்கத் தயாராயிருக்கும் போலிருக்கு!"

"உஷ்! அம்மா அவர் வரார்; அக்கம் பக்கம் பார்த்துப் பேசு" என்று கிசுகிசுத்தாள் மீனா.

"என்னங்க இன்னும் நிக்கறீங்க? உட்காருங்க!" என்று நாற்காலிகளை இழுத்துவிட்டு உபசரித்தார் தனராஜ். "இந்தாப்பா, இந்த டேபிள்ளே இலையைப் போடு சீக்கிரம்" என்று அதட்டினார்.

"இந்த ஹோட்டலைக் கட்டி எத்தனை வருஷங் களாச்சு?" என்று அவரைக் கேட்டாள் அம்புஜம். அவள் குரல் சண்டைக்கு இழுப்பது போன்று தொனிக்கவே பத்மநாபன் பயந்து போனார்.

ஆனால் தனராஜ் இந்தக் கேள்வியால் ரொம்ப உற்சாகமடைந்தவராகக் காணப்பட்டார். இதற்காகவே காத்திருந்தவர் போல ஒரு நாற்காலியை அவர்கள் அருகே இழுத்துப் போட்டுக்கொண்டு பேச ஆரம்பித்தார்.

"இதெல்லாம் ஒரு காலத்திலே ஆர்மி பாரக்ஸ்ஸா இருந்ததுங்க. நான் சொல்றது பிரிட்டிஷ் ஆட்சிக்காலம். வோர்ல்ட் வார்டு பீரியட்!"

"அப்போ அடித்த பெயிண்ட் தான்" என்று முணுமுணுத்தாள் அம்புஜம்.

"அம்மா, பிளீஸ்!" என்று பேசாதிருக்கும்படி ஜாடையாகக் கெஞ்சினாள் மீனா.

அம்புஜம் சொன்னது தனராஜ் காதில் விழுந்ததோ இல்லையோ, அவர் தொடர்ந்தார்; "அந்த நாளிலே ராணுவத்திலேயிருந்து பெரிய பெரிய ஆபீஸருங்க இங்கே விடுமுறையில் வந்து தங்குவாங்க."

"அதுதானே பார்த்தேன். இந்த ஹோட்டலே ஓர் அலாதியான விதமா அமைஞ்சிருக்கேன்னு."

"ஆமாங்க, ஒரே கட்டடமா மாடி மேலே மாடியா இல்லாமே இரண்டு இரண்டு அறைகளா தனித் தனிக்

கட்டிடங்களாயிருக்கும். இங்கொன்றும் அங்கொன்றுமாய் விசாலமான இடத்தில் பரவலாகக் கட்டியிருக்காங்க.''

''அதிலே ஓர் அலாதி அழகு, அமைதி எல்லாம் இருக்கு. ஐ லைக் திஸ் பிளேஸ்'' என்றார் பத்மநாபன்.

''இந்தா ஸாருக்கு இன்னொரு அப்பளாம் போடு'' என்றார் தனராஜ்.

''இப்போ புதுசா ஒரு அப்பளாம் வரவழைக்கிறேன்; சாப்பிட்டுப் பார்த்துச் சொல்லுங்க. மதுரையிலே ஓர் அநாதை அசிரமம் நடக்குது. அவங்க இப்படி ஊறுகாய், அப்பளாம், கூடை நாற்காலின்னு பல பொருள்களைச் செய்து விற்கிறாங்க. இத்தனை நாட்களா நான் அம்மாமி அப்பளாம்தான் வாங்கறது. இந்த ஸீஸனிலேதான் இவங்க வற்புறுத்திக் கேட்டதாலே மாத்தினேன். ஒரு தர்ம ஸ்தாபனத்துக்கு உதவின மாதிரியும் ஆச்சு இல்லீங்களா?''

பத்மநாபன் தலை யாட்டியபடியே, ''வருஷத்தில் மூணு மாசம் உங்களுக்குப் பிஸினஸ் நடக்குமா?'' என்றார்.

''ஸெகண்ட் ஸீஸன் இரண்டு மாசமுங்க. வருஷத்திலே நாலு மாசம் ஃபுல்லா இருக்கும். ரெண்டு மாசம் சுமாரா இருக்கும். பாக்கி நாளெல்லாம் பூட்டி வைச்சுட வேண்டியதுதான் ஹோட்டலை.''

'இந்த அறைக்குப் போய் இத்தனை வாடகையா? என்று கேட்டாயே காரணம் இப்போ புரிகிறதா?' என்று வினவுவதுபோல் தம் மனைவியைப் பார்த்துத் தலையைச் சொடுக்கினார் பத்மநாபன். பின்னர் மீண்டும் தனராஜை நோக்கினார். ''ஆட்கள்?''

''ஒருத்தர் இரண்டு பேர் தவிர பாக்கி யெல்லாம் ஸீஸனுக்கு மட்டும் வேலைக்கு வரவங்கதான். இதோ சாதத் தட்டோடு வருகிற பையன் மதுரையிலே

படிச்சுக்கிட்டிருக்கான். என்ன தம்பி? எந்த வகுப்புப் படிக்கிறே நீ?''

''பியூஸி... சாதம் வைக்கவா?'' என்றான் பையன்.

அவனுக்குப் போதும் என்று கை நீட்டிவிட்டு, நல்ல ஏற்பாடுதான் என்றார் பத்மநாபன்.

''அடுத்த வருஷம் இன்னும் நல்லா இருக்குங்க. கட்டிலுக்கெல்லாம் டன்லப்பில்லோ மாத்தப் போறேன். அதுக்கு மட்டுமே இருபத்திரண்டாயிரம் ரூபாய் வரைக்கும் ஆகிறது.''

''ஒவ்வொரு வருஷமும் வருகிறவர்களிடமெல்லாம் இவர் இதையே சொல்லிண்டிருப்பார் போலிருக்கு-அடுத்த வருஷம் இன்னும் பிரமாதமாயிருக்கும்னு!'' அம்புஜம் மகளிடம் இவ்வாறு காதோடு காதாகக் கூற மீனா சிரித்து விட்டாள்.

''என்ன சொல்றாங்க அம்மா?'' என்று தனராஜ் கேட்க, அம்புஜம் சரேலெனப் பின்வாங்கத் தீர்மானித்தவளாய் அவர்கள் பேச்சு எதையுமே செவிமடுக்காதவள் போல, ''சாப்பிடேண்டா சீக்கிரம்! நீ சாப்பிட்டு முடிக்கிறதுக் குள்ளே ஸீஸனே முடிஞ்சுடும்! மெட்ராஸுக்குக் கிளம்ப வேண்டியதுதான்!'' என்று விசுவை மிரட்டினாள்.

''நான் சொல்றேன், ரூம் வாடகை கொஞ்சம் அதிகம் என்று என் ஒய்ஃப் அபிப்ராயப்படுகிறாள். உண்மையில் எனக்கும் அப்படித்தான் தோன்றுகிறது'' என்றார் பத்மநாபன்.

''பணத்தைக் கொடுத்தாலும் பளிச்சென்று அறைகள் இருந்தால் தேவலை'' என்று தைரியமாகச் சொன்ன அம்புஜம், ''அழுது வடியறது'' என்று அடங்கிய குரலில் கூறினாள்.

''அம்மா! நான் கேக்கறேன்னு கோவிக்காதீங்க. கொடைக்கானலுக்கு எதுக்காக வரது? அறைக்குள்ளே உட்கார்ந்து அது அழுது வடியறதைப் பார்த்து நாமும் விசனிக்கவா? இரவு படுக்க மட்டும்தான் நீங்க ரூமுக்கு வரணும். பாக்கி நேரமெல்லாம் வெளியே சுத்தணும். நிறைய நடக்கணும்; இயற்கைக் காட்சிகளை, மலைகளை, அருவிகளை, பட்சிகளை, ஓடைகளையெல்லாம் ரசிக்கணும். 'பிக்நிக்' போகணும். ஏரியில் ரோயிங் செய்யணும். ஹார்ஸ் ரைட் பண்ணணும். இவற்றையெல்லாம் செய்தா மனசு சந்தோஷமா யிருக்கும். பஸ்ஸில் ஏறிக்கிட்டு பேரீஜம், ஸில்வர் காஸ்கேட், பில்லர் ராக்ஸ் போன்ற இடங்களுக்கெல்லாம் போயிட்டு வாங்க. நம்ம ஹோட்டல் பஸ்ஸே இங்கேயெல்லாம் உங்களை அழைச்சுக்கிட்டுப் போகும். சார்ஜ் கிடையாது. இப்படியெல்லாம் சுத்தி அலைஞ்சுட்டு வந்தீங்கன்னா கபகபன்னு பசிக்கும். கொடைக்கானலுக்கு வரவங்களுக்கு முக்கியமா குளிக்கத் தாராளமா வெந்நீர், பசிக்கு நல்ல சாப்பாடு - இவைதான் தேவை. இவற்றை நான் தரேன்.''

''சமையல் ரொம்ப நல்லாத்தான் இருந்தது'' என்று ஒப்புக்கொண்டாள் அம்புஜம்,- அவர் பேச்சில் மிரண்டு போய் அல்ல; மனம் விட்டுத்தான் கூறினாள்.

''உங்களை மாதிரி லேடீஸ், சமையல் நல்லா இருந்ததுன்னு சொல்லும்போதுதான் எனக்குத் திருப்தி'' என்றார் தனராஜ். ''இன்னொரு பிளேட் ஃப்ரூட் ஸாலட் கொண்டு வரச் சொல்லட்டா பாப்பாவுக்கு?''

அம்புஜம், ''வேண்டாம் வேண்டாம்'' என்றபோதே அனுவும் விசுவும் ''வேண்டும்! வேண்டும்!'' என்றார்கள்.

''ஒரு பிளேட் போதும்; ஆளுக்குப் பாதியா எடுத்துக் கட்டும்'' என்றாள் அம்புஜம்.

தனராஜ் அதற்கு ஏற்பாடு செய்துவிட்டுத் தொடர்ந்தார்:

“நீங்க ஃப்பிராங்க்கா பேசறதை நான் வரவேற்கிறேன். ஆனா நான் பணத்தைப் பிடுங்கறதா மட்டும் நினைக் காதீங்க. ஸார் எழுத்துத் தொழில்லே கஷ்டப்பட்டுச் சம்பாதிக்கிறார். பணத்தோட அருமை அவரைப் போலவே எனக்கும் தெரியும். என்னோட ஃபாதர் விறகு வெட்டிக் கிட்டுப்போக இந்தக் காடுகளுக்கு வருவார். பள்ளிக் கூடத்திலே லீவு விடறப்போ. நானும் வந்து கோடாலி புடிச்சு உதவியிருக்கேன். மலையை விட்டு இறங்கி விறகு விற்போம். அது ஒரு காலம் நாலைஞ்சு விறகுத்தொட்டி அவருக்குச் சொந்தமாச்சு. சண்டை. சமயத்திலே நல்லா சம்பாதிச்சார். யுத்தம் முடிஞ்சதும் இந்த இடத்தை ராணுவத்தினரிடமிருந்து கட்டடங்கள் உள்படச் சல்லிசா ஏலத்திலே எடுத்தார். பேரிக்காயத் தோப்பாக்கலாமா? உருளைக்கிழங்கு பயிர் பண்ணலாமான்னு யோசிச்சுக் கிட்டிருந்தார். ஹோட்டல் வைக்கலாம்னு யாரும் நினைக்கலே. எனக்குத்தான் தோணிச்சு. நான் இன்னிக்குச் சௌகரியமா யிருக்கேன். என் பெயரைப் பிரபலப்படுத்திக் கிட்டு இருபது பஸ் வேறே ஓடுது.”

“ரூமுக்குப் போனதும் உன் அப்பாவை மறக்காமெ இவர் சொன்னதை யெல்லாம் குறிச்சுக்கொள்ளச் சொல்லு. பத்திரிகையிலே போட்டோ போட்டு எழுத வேண்டி யிருக்கும்” என்று அம்புஜம் தன் மகளிடம் ரகசியம் பேசினாள்.

“ஸார் சொன்னார், இங்கே அமைதியா இருக்குன்னு. அவர் எழுத்தாளர். அவருக்குத்தான் அமைதியின் அருமை தெரியும். ஆனா பிஸினஸுக்கு இந்த இடம் அசௌகரியமா இருக்கு. எல்லாச் சாமானும் டவுன்லேருந்து பத்து மைல் தூரம் எடுத்துக்கிட்டு வரணும். ஆனால் இந்த ஹோட்டல் கொடைக்கானல் டவுனிலேயே இருந்தால் இந்த அமைதி

கிடைக்குமா? நீங்கள் வெளியே போகத்தான் வேணும்: ஆனால் இந்த ஹோட்டல் அமைந்திருக்கிற நிலப்பரப்பை யும் ஒரு தடவை சுற்றி வாங்க. இயற்கையோடு அப்படியே மனசு ஒன்றிப் போயிடும். அத்தனை விஸ்தாரமான இடம். அழகான இயற்கைக் காட்சிகள்.''

''அதுக்கென்ன, கொடைக்கானலில் திரும்பிய பக்கமெல்லாம் இயற்கைக் காட்சிகள்தான்'' என்றாள் அம்புஜம்.

''ராத்திரி குளிரும்போது போர்த்திக்கொள்ளக் கம்பளி வேண்டும் என்று கேட்டால் அதற்கு எக்ஸ்ட்ரா சார்ஜ் பண்ணறீங்களே? அது சரியாகத் தோணலை எனக்கு'' என்றார் பத்மநாபன்.

''ஸார்! கொடைக்கானலுக்கு வந்தால் குளிரும்னு தெரியாதா? நீங்க கம்பளி எடுத்துக்காமல் வந்தால் அது எங்க குற்றமா?''

''எங்களோட தப்பாகவே இருந்துட்டுப் போகட்டும். ஒரே ஒரு காரியம் மட்டும் உடனே பண்ணுங்க. எங்க அறைக்கு வெளியே வராந்தாக் கதவில் கண்ணாடி ஒடைஞ்சிருக்கு. அது வழியா சில்லுன்னு காத்து வீசறது, ரத்தம் உறைகிற மாதிரி. அதிலே இன்னொரு ஆபத்து என்னன்னா அந்த ஓட்டை வழியா யார் வேணுமானாலும் கையை விட்டு உள்பக்கம் தாழ்ப்பாளைத் திறந்துடலாம். ராத்திரி திருடன் வந்தாக்கூடத் தெரியாது. பத்திரமில்லை'' என்றாள் அம்புஜம்.

''நான் உடனே கவனிக்கிறேன், அம்மா!'' என்றார் தனராஜ். ''பாருங்க ஸார்! லேடீஸ் வந்தாங்கன்னா அவங்க கண்ணுக்குன்னு இதுமாதிரி சில விஷயங்கள் பளிச்சுன்னு தென்படும். நாமெல்லாம் இதைக் கவனிக்காமல் அலட்சியப்படுத்தி விடுவோம்.''

இவர்கள் இப்படிப் பேசிக் கொண்டிருந்தபோதே ஹாப்பி ஹாலிடேயில் தங்கியிருந்த பல விருந்தினரும் சாப்பாட்டுக் கூடத்துக்குள் வருவதும் உணவருந்திவிட்டுத் திரும்பிச் செல்வதுமாய் இருந்தார்கள். இச்சமயத்தில் கூடத்தின் வாசலில் ஒரு போலீஸ்காரர் தோன்றினார். அவர் மலைப் பிரதேசத்துக்கு ஏற்றதாக நீலநிறக் கம்பளிச் சொக்காயும் பாண்டும் அணிந்திருந்ததால்தானோ என்னவோ பத்மநாபனின் கவனம் அவர்பால் சட்டென்று ஈர்க்கப்பட்டது. தொப்பி மட்டும் மற்ற எல்லாப் போலீஸ் காரர்களையும் போல் சிவப்பு, கறுப்பு நிறத்தில்தான் அணிந் திருந்தார். அந்தப் போலீஸ்காரர் இப்படியும் அப்படியு மாகக் கூடத்தைக் கண்களால் துழாவிவிட்டுத் தனராஜ் மீது பார்வை விழுந்ததும் விடுவிடுவென்று அவரை நோக்கி வந்தார்.

பத்மநாபன் ஒரு கணம் துணுக்குற்றார். ஆனால் அடுத்த கணமே அந்தப் போலீஸ்காரர் ரொம்பப் பணிவாயும் அடக்கமாயும் குனிந்து தனராஜிடம் தணிந்த குரலில் பேசுவதைக் கண்டு மனம் தெளிந்தார்.

தனராஜ் சொன்னார்: "டி.ஐ.ஜி. வந்திருக்காருங்க. அவரை நானே போய் ரிஸீவ் பண்ணறதுதான் மரியாதை. அவருக்கு அறையைக் காட்டிக் கொடுத்துட்டு வந்துடறேன்." தனராஜ் எழுந்து விரைந்தார்.

"யார் வந்திருக்காளாம்?" - அம்புஜம் கேட்டாள்.

"டி.ஐ.ஜி. - டெபுடி இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆஃப் போலீஸ்!"

"அவர் எதுக்கு இங்கே வரணும்?"

"ஏன் அவருக்கு மட்டும் விடுமுறை வேண்டாமா? ஹாலிடேயை 'என்ஜாய்' பண்ண வந்திருப்பார்" என்றாள் மீனா.

*"ஆமாம்! ஸைக்கோ ஸாரநாதன் தப்பிச்சுக்கிட்டுப் போயிட்டான்னு பேப்பரிலே எல்லாம் திமிலோகப்படறது. அவனைத் தேடிக் கண்டுபிடிக்காமே இவருக்கு விடுமுறை என்ன கேடு!"*

*"ஒருவேளை அவனைத் தேடிண்டுதான் வந்திருப்பாரோ என்னவோ?"*

*"சிவ சிவா! அந்தக் கொலைகாரப் பாவி இங்கே எதுக்கு வரணும்?"*

*இப்படி அம்புஜம் கேட்ட அதே தருணத்தில் அமிர்த லிங்கம் அந்தக் கூடத்தின் வாசலில் தோன்றினான்.*

*"டி.ஐ.ஜி. ஸைக்கோவைப் பிடிக்கிறாரோ இல்லையோ. இந்த ஹிப்பி வேஷக்காரனையாவது பிடிச்சுண்டு போய்க் கம்பி எண்ண வைக்கலாம்" என்றாள் மீனா.*

*அப்போது அந்த ஹிப்பி அமிர்தலிங்கம், சாப்பாட்டுக் கூடத்துக்குள் நுழைந்து முன்னேறிக் கொண்டிருந்தான். மீனா கூறியது அவன் காதில் அரைகுறையாகவேனும் விழுந்துவிட்டதோ? இல்லையானால் அவன் கண்கள் ஏன் இப்படி அனல் பறப்பது போல் சிவந்து பளபளக்க வேண்டும்? ஏன் இப்படி அவன் விரல்களைப் பிசைந்து கொள்கிறான்?*

*"மீனா! நீ இன்னொரு தடவை இப்படிப் பேசினால் எனக்குக் கெட்ட கோபம் வரும்" என்று எச்சரித்தார் பத்மநாபன். "யார் பேரிலும் நாம் வெறுப்பை இந்த அளவுக்கு வளர்த்துக்கொள்ளக் கூடாது, தெரிந்ததா?"*

*அப்பா அம்மாவுக்கு முன்னால் சாப்பிட்டுவிட்டுக் கை கழுவிக் கொண்டு வந்திருந்த அனசூயா, தம்பியிடமிருந்து பம்பரத்தைத் தன் கையில் வாங்கிக் கெண்டாள். "சாட்டை சுத்தறதுக்கு நான் சொல்லித் தரேண்டா" என்று கூறி இடக்*

கரத்தில் பம்பரத்தைப் பிடித்துக் கொண்டு வலக் கரத்தால் மெல்ல அதில் கயிற்றைச் சுற்றினாள்.

''ஹல்லோ அமிர்தலிங்கம்! இன்னிக்கு என்ன புரோகிராம் உங்களுக்கு? கால்ஃப் ஆடப் போறீங்களா?'' என்று கேட்டார் பத்மநாபன்.

அருகில் வந்துவிட்ட போதிலும் அமிர்தலிங்கம் உடனே பதில் கூறவில்லை. அந்த ஹிப்பியின் கண்கள் பம்பரக் கயிற்றில் நிலைகுத்தி நின்றன!

★ ★ ★

# 6. தாற்காலிக விடுதலை!

அனசூயாவின் விரல்கள் பம்பரக் கயிற்றின் மீதாக விளையாடியதானது, அமிர்தலிங்கத்தின் எண்ணங்களைப் பின்நோக்கிக் கொண்டு சென்றது. ஏறக்குறைய இதேபோன்ற ஒரு கயிறுதான் அன்று அவன் கரத்திலும் விளையாடியது. ஆனால் டாக்டர் குஹாவுக்கு அது வினையாகவல்லவோ முடிந்தது!

வழக்கம் போல்தான் அன்றும் அவன் டாக்டர் குஹா வாங்கிக் கொடுத்த பைஜாமா ஜிப்பாவை அணிந்து அவருடைய மனநோய் மருத்துவ மனைக்கு வந்தான். சாதாரண உடையில் போலீஸார் இருவர் காவலாக அவன் பின்னோடு சதா இருந்தனர். போதாததற்கு அவர்களில் ஒருவன் கைத் துப்பாக்கி ஒன்றை மறைவாக வைத்துக் கொண்டிருந்தான். முன் தடவைகளைப் போலவே இன்றும் வாசல் அறையில் இருந்த ரிஸப்ஷனிஸ்ட் அழகி அவர்களைப் பார்த்துப் புன்முறுவல் பூத்தாள். அமரச் சொல்லி விட்டு 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' பத்திரிகையில் ஆழ்ந்தாள். அந்த வரவேற்பு அறையில் இரு போலீஸாருக்கும் மத்தியில் அவன் உட்கார்ந்து காத்திருந்தான். டாக்டருடன் இருந்த ஒரு நோயாளி வெளிவந்ததும் ரிஸப்ஷனிஸ்ட் அந்த நோயாளியிடம் பணம் வாங்குவதில் கருத்துச் செலுத்தியபடியே ஸாரநாதனுக்கு ஜாடை காட்டினாள். உள்ளே செல்ல இவ்விதம் அனுமதி கிடைத்ததும் வழக்கம் போலவே போலீஸார் இருந்த இடத்திலேயே இருக்க, ஸாரநாதன் மட்டும் டாக்டரின்

தனி அறைக்குள் நுழைந்து கதவைச் சாத்தினான். வழக்கத்தி லிருந்து மாறுபட்டு எதுவும் நடந்துவிடவில்லை-ஒரே ஒரு விஷயம் தவிர! ஸாரநாதன் சென்ற தடவை டாக்டரைப் பார்க்க வந்தபோது தெருவில் ஒரு 'ஸேஃப்டி பின்'னைக் கண்டெடுத்தான். அதை அவன் தன் சட்டையில் குத்திக் கொள்வதைப் போலீஸாரும் பார்த்தார்கள். ஆனால் ஒன்றும் சொல்லவில்லை. 'கிறுக்கு! தரையில் கிடக்கும் அற்பப் பொருளைக்கூடப் பொறுக்கிக் கொள்கிறது' என்று நினைத்தார்களோ. அல்லது 'ஒரு ஸேஃப்டி பின்னால் என்ன துன்பதை யாருக்கு இவன் விளைவித்துவிடப் போகிறான்?' என்று அலட்சியப்படுத்தினார்களோ, தெரியாது. ஆட்சேபிக்கவில்லை. ஆனால் இம்முறை டாக்டரை ஸாரநாதன் பார்க்க வந்தபோது அவன் அணிந்திருந்த பைஜாமா நழுவாமல் இடுப்பில் நிற்க உதவியது அந்த ஸேஃப்டி பின்தான்! பைஜாமாவில் இருந்த கனமான நாடா தனியே உருவி எடுக்கப்பட்டு அவனால் நன்கு முறுக்கேற்றப்பட்டுத் தடிமனான ஒரு கயிறாக உருமாறி இடுப்பில் இலேசாகச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. அந்தச் சுருக்கு முடியை ஸாரநாதன் கரத்தின் ஒரு நொடிப்பிலே அவிழ்த்துவிட முடியும். அடுத்துக் கையின் ஒரு வீச்சிலே அந்தக் கயிறு அவன் விரல்களினூடே நெளிய முடியும். மூன்றாவது வினாடியில் அது ஒரு கழுத்தைச் சுற்றி வளைத்து இறுக்க முடியும்!

சிறைச்சாலையில் இருந்த நாட்களில் ஸாரநாதனின் பலவீனமான மனத்தினுள்ளே மறுபடியும் கொலை வெறி படிப்படியாக அதிகரித்துக் குமுறிக் குமைந்து அவனைத் திணற அடித்துக் கொண்டிருந்தது. அதற்கு இன்று விடுதலை கிடைக்கப்போகிறது என்று நினைக்கும்போதே அவன் மனம் ஓரளவு இலேசாகிவிட்டது. நேற்று வரையில் மன உளைச்சல் காரணமாக அவன் கைகள் பரபரத்துக் கொண்டிருந்தன; உடல் முறுக்கேறி இருந்தது. இப்போது உணர்ச்சிக் குவியல் சரிய ஒரு வாய்ப்பு ஏற்படப் போகிறது

என்ற எண்ணத்தினாலேயே உடல் தளர்ந்திருந்தது. அப்பா! கொந்தளிப்பு அடங்கப் போகிறது என்று எதிர்பார்க்கும் போதே இத்தனை நிம்மதி பெற முடியும் என்றால் அந்தச் சந்தர்ப்பம் சரியான விதமாகப் பயன்படுத்தப்பட்டு அணை உடைந்து வெள்ளம் வெளியேறிவிட்டால் எத்தனை சாந்தி கிடைக்கும்! அந்த ஒரு தவிப்பு மிக்க இன்பத்தை அநுபவிக்க அவன் அவசரப்பட்டான்.

டாக்டர் கேட்டுக் கொள்வதற்கு முன்பாகவே அவன் சாய்மானப் படுக்கையில் உடலை நீட்டிக் கண்களை மூடினான். ஜிப்பாவின் ஒரு கையை உயர்த்தி ஊசி போடும் இடத்தை அம்மணமாக்கினான். ஊசி பட்டதுமே ஒலியைப் பீச்சும் கிராமஃபோன் ரிகார்டு போல் இவனும் சுருக்கென ஊசி துளைத்ததும் மளமளவென்று பேசத் தொடங்கி விட்டான்.

வழக்கத்தை விட அவன் வெகு உற்சாகமாகக் காணப் பட்டது டாக்டர் குஹாவுக்கு ஆச்சர்யம் அளித்தது. சாதாரணமாக அவனைப் பேச வைப்பது என்பது அவ்வளவு சுலபமாய் இராது. பேசினாலும் தடங்கல்கள், இடர்பாடு கள் இன்றி வார்த்தைகள் வளர்ந்ததில்லை. தயக்கம், முட்டுக் கட்டை, திணறல்! சோடா பாட்டிலினுள் அமுக்கி வைக்கப்பட்ட வாயுவாக எண்ணங்கள் தேங்கும். இன்று மூடி திறக்கப்பட்டதுபோல் நினைவுகள் கொப்பளித்தன. தமது சிகிச்சைமுறை பலன் அளிக்கத் தொடங்கிவிட்டதென அவர் இறுமாந்து போனார்!

டாக்டர் குஹா மேஜையருகே போய்க் காகித 'பேடு'ம் பென்சிலும் எடுத்துவந்து அவன் அருகே இருந்த வசதி மிக்க நாற்காலியில் அமரும்வரைகூட அவன் காத்திருக்கவில்லை. பல காட்சிகளை விவரிக்க ஆரம்பித்துவிட்டான்.

திடுமென்று அவருக்கு அவன் உள்ளம் வெட்ட வெளிச்ச மாகி விட்டது போல் தோன்றியது. அதன் ஏக்கங்களையும்

விரக்திகளையும் புரிந்து கொள்வது சாத்தியம்தான் எனப் பட்டது. அம் மனத்தின் ஆசைகளும் அடிமைத்தனங்களும் எதையோ பற்றிக்கொள்ள முயன்ற அதன் வீரமும், அந்த எதுவோ வழுக்கி விட்டு விடவே தடுமாறிய மனத்தின் அவல நிலையும் அவருக்கு அர்த்தமாயின.

தம்மிடம் சிகிச்சைக்கு வந்துள்ள இந்த நோயாளியிடம் அவருக்குப் பச்சாத்தாபம் பொங்கியது. அதே சமயம் வெற்றிக் களிப்பிலும் அவர் ஆழ்ந்து போனார். தகர்க்க முடியாதது என நேற்றுவரை அவர் கருதிய மனக் கோட்டை இன்று தனது வாசல் கதவுகளை அகலத் திறந்து வைத்துக்கொண்டு அவரை வரவேற்றது. இவ்விதம் அது சரணடைந்து விட்டபிறகு உள்ளே சென்று ஆராய்வதும் அதனைத் திறம்பட ஆள்வதும் எளிதே யல்லவா?

அவன் உள்ளத்தினுள்ளே புழுதி படிந்து அழுக்கேறி அழுத்திக்கொண்டிருந்த பல காட்சிகள் இன்று துடைக்கப் பெற்றுப் பளிச் பளிச்சென்று ஒன்றன் பின் ஒன்றாய் அவர் கண்ணெதிரே விரிந்தன. குறிப்பெடுத்துக் கொள்ளக்கூட மறந்து டாக்டர் குஹா அவற்றைப் பார்த்துக் கொண் டிருந்தார்.

**காட்சி 1:** சிறுவன் தாயைக் கொஞ்சுகிறான். வாரி அணைத்திருக்கும் அவள் முத்த மழை பொழியத் தயாராகிறாள். அவன் சிரம் அவள் கழுத்தில் ஒண்டிக் கொண்டிருக்கிறது. அந்தக் கழுத்து...! அது பளிங்கு- அன்னம்- பால்- சங்கு! இவையெல்லாம் பொருந்தும்; எதுவுமே பொருந்தாது! உறுதியானதுதான். ஆனால் ரத்த நாளங்கள் பசுமையாக ஓடுவது தெரியும்! ராஜ கம்பீரம் - பெண்மையின் நளினம்! மென்மை...! ஆ! மென்மை! பஞ்சு, நுரை, வசந்தம்! இத்தகைய ஒரு கழுத்தில் அவன் விடும் மூச்சு சுருண்டெழுந்து மீண்டும் அவன் கன்னத்தையே தாக்கும்போது ஏற்படுகிற அலாதி இன்பத்தில் அவன் கண்கள் கிரங்குகின்றன.

**காட்சி 2:** பையன் இப்போது கொஞ்சம் வளர்ந் திருக்கிறான். ஆயின் இன்னும் அம்மா செல்லமாகவே இருக்கிறான். அவன் தாய் முன்னிலும் அழகாயிருக்கிறாள். எடுப்பான மேனி எழில் கொஞ்சும் வதனம். ஒப்பிட்டுப் பார்க்க வேண்டுமானால் தேவலோகத்திலிருந்து ரம்பை, ஊர்வசி என்று யாரையாவது அழைத்து வர வேண்டும். வர்ணனை தேவையென்றால் காளிதாஸனைத் தருவிக்க வேண்டும். ஆயினும் என்ன, உடலின் பலப்பல அவயவங் களின் அழகுகளை ஒன்றுகூட்டி ஓர் அழகுத் தத்துவமாக வைத்தாலும் அது, அந்தக் கழுத்தின் அழகுக்கு முன்னால் தலைகுனிய வேண்டியதுதான்!

இக்காட்சியில் கவினுறு கழுத்தின் பல தோற்றங்கள் தெரிகின்றன. மகனின் கை கழுத்தைச் சுற்றி வளைக்கிறது; அவன் அதரங்கள் கழுத்தை முத்தமிடுகின்றன; கண்கள் கழுத்தில் புதைந்து இருளைத் தருவித்துக் கொள்கின்றன; அவன் உடலே கழுத்திலிருந்து தொங்குகிறது; விரல்கள் கழுத்தை வருடுகின்றன. கிளு கிளுப்பு, சிலிர்ப்பு, சிரிப்பு! கழுத்தின் வெண்மையைப் பளிச்சென்று எடுத்துக் காட்டு கிறது மூன்று சரத்தில் ஒரு கருக மணி மாலை. தாலிச் சரடு தனியே தொங்குகிறது. தழையத் தழைய.

★ ★ ★

டெலிஃபோன் மணி அடித்தது. "ஸாரநாதனுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்து விட்டது. அடுத்த ஆசாமி வந்து காத்திருக்கிறார்."

ரிஸப்ஷனிஸ்ட்டின் குரல் கேட்டதும் எரிந்து விழுந்தார் டாக்டர் குஹா. "எந்தத் தலைபோகிற காரணமானாலும் என்னைத் தொந்தரவு செய்யாதே! காத்திருக்க முடியா தென்றால் திருப்பி அனுப்பு அவனை!"

ரிஸப்ஷனிஸ்ட்டுக்கு இது புது அனுபவம். கோபத்துடன் அவள் டெலிபோனை வைத்துவிட்டு, அடி உதட்டை

மென்றுகொண்டே உட்கார்ந்திருக்கும் ஒரு மாஜி நடிகரை- அடுத்து உள்ளே செல்ல வேண்டிய நோயாளியை- வெறுப் புடன் பார்த்தாள். "நீங்கள் சற்று நேரம் காத்திருக்கத்தான் வேண்டும்" என்று கூறிவிட்டு மீண்டும் 'ரீடர்ஸ் டைஜஸ்டி'ல் ஆழ்ந்துபோனாள்.

டெலிஃபோனை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது, ஸாரநாதன் அறையினுள் உலாவ ஆரம்பித்து விட்டதைக் கண்டார் டாக்டர் குஹா. நல்லவேளை, இந்த டெலி ஃபோன் இடையூறினால் அவன் பேசுவதை நிறுத்திவிட வில்லை. நடமாட ஆரம்பித்திருந்த போதிலும் நா அசைந்து கொண்டேதான் இருந்தது. அவன் சிந்தனை ஓட்டத்தைக் கலைக்காமல், ஓசைப்படுத்தாமல் அமர்ந்தார் டாக்டர் குஹா. செவிப்புலன்கள் மேலும் கூர்மையாயின. படுத்தபடி பேசுவதைவிட நடந்தபடி பேசுவது அவனுக்கு எளிதா யிருக்குமானால் அவ்வாறே செய்யட்டும். ஆனால் ஊசி போட்டிருப்பதால் ஒருவேளை அவன் கொஞ்சம் நிலை தடுமாறலாம். அச்சமயம் பாய்ந்து சென்று தாங்கிப் பிடித்துக் கொள்ளத் தயாராயிருந்தால் போதும்.

**காட்சி 3:** சிறுவனுடைய கேசத்தைப் பிடித்து இழுத்துத் தாயிடமிருந்து அவனைக் கிழிப்பது போல் பிரித்துப் போடுகிறான் ஒரு முரடன். அவனைப் பார்த்தால் பத்தாண்டுகள் சிறையில் கழித்துவிட்டு வந்தவனைப்போல் தோன்றுகிறது. சிவந்த விழிகள், சிக்கேறிய தலை, நெற்றி வடு, நுரை தள்ளும் வாய்! நினைவுகள் மணக்குமா என்ன? பின்னர் எங்கிருந்து இந்தச் சாராய வாடை வீசுகிறது? "வயசு பன்னிரண்டாகிறது; இன்னும் அம்மா கிட்டே என்னடா கொஞ்சல்?" என்று கேட்கும் பாவனை அந்த முரடன் முகத்தில் தெரிகிறது. 'அதற்குக் காரணம், தகப்பன் என்ற ஸ்தானத்தில் வைத்து அச்சிறுவன் மதித்துப் போற்ற வேண்டிய ஒருவன் பத்து வருஷங்களாய்க் குடும்பத்தை விட்டுப் பிரிந்து சிறைத் தண்டனையை அனுபவித்து

வருவதுதான்' என்று அந்த முரடனுக்கு எடுத்துச் சொல்ல அங்கே யாரும் இல்லை. தோலாக உரித்து அறைக்கு வெளியே வீசப்பட்ட சிறுவன் மிரண்டு பீதியுடன் தரையில் கிடந்து நடுங்குகிறான்.

**காட்சி 4:** சாத்தப்பட்டிருக்கும் கதவுக்கு வெளியே சிறுவன் ஏக்கத்தோடும் கோபத்தோடும் காத்திருக்கிறான். தனக்கே, தன் ஒருவனுக்கு மட்டுமே இந்நாள் வரை உரியவளாய் இருந்த அம்மாவை அந்த முரடன் அறைக் குள்ளே அடிப்பதும் கேட்கிறது, அணைப்பதும் புரிகிறது. மார்கழி மாதத்துக் கோலத்தின்மேல் மாட்டுச் சாணம் விழுந்தாற்போல் இந்தக் கயவன் ஏன் என் அம்மாவை இப்படி அசிங்கப்படுத்துகிறான்? அம்மாவை மீண்டும் எப்போ பார்ப்போம்? அவளிடம் தஞ்சம் புகுந்து விம்மி அழுது, கண்ணீரால் அவள் கழுத்தை நீராட்டிப் புனிதப் படுத்த வேண்டுமே!...

ஸாரநாதனின் மனமண்டபத்தில் ஓவியக் கண்காட்சி ஒன்றைப் பார்த்துக் கொண்டிருந்தார் டாக்டர் குஹா. ஒவ்வொரு படத்தையும் நுணுகி ஆராய்ந்தார். ஒவ்வொன்றும் கதையை வளர்த்தது; அவன் மன நோயைப் புரிந்து கொள்ளும் முயற்சியில் அவர் முன்னேற்றம் காணவும் உதவியது.

**ஸா**ரநாதன் டாக்டர் குஹாவுக்குப் பின் புறமாக உலா வந்து கொண்டிருந்தான். இது அவ்வளவு சரியல்ல; அவனை நம் கண்ணெதிரே நடமாட விடுவதுதான் நல்லது என்று டாக்டர் குஹாவின் அறிவின் அடிவாரத்தில் தந்தி மீட்டியது போல் ஓர் எண்ண அலை எழுந்தது. ஆனால் ஸாரநாதனின் கதை விரிந்துகொண்டே போகப் போக அந்தக் கதைக் கடலில் இந்த மெளன அலை கலந்து இருந்த இடம் தெரியாமல் கரைந்து போயிற்று. ஆர்வம் அறிவுக்குத் திரை போட்டது. டாக்டர் குஹா சிறு தவறு செய்துவிட்டார்.

**காட்சி 5:** *கதவு திறந்திருக்கிறது. முரடன் மகனைத் தூக்கித் தோள் வரை உயர்த்தி உத்தரத்திலிருந்து தொங்கும் அவன் தாயைக் காட்டுகிறான். 'வேண்டாம், வேண்டாம்' என்று சிறுவன் கால்களை உதைத்துக் கொண்டும் கூடத் தகப்பன் கேட்கவில்லை; பலவந்தப் படுத்துகிறான்.*

*தாயின் கழுத்தில் மகனுடைய பார்வை நிலைக்கிறது. அதில் ஏன் அப்படி நீலம் படர்ந்திருக்கிறது? ஏன் ஜீவனற்றுத் தோன்றுகிறது? மனோரஞ்சிதத்தின் மென்மையும் சுகந்தமும் உடைய அந்தக் கழுத்து இப்படி மரக்கட்டை போல் தோற்றமளிப்பது எதனால்? படுக்கையைச் சுற்றிக் கட்டும் கயிறு அம்மாவின் கழுத்தைச் சுற்றி வளைக்கக் காரணம் என்ன? அந்தக் கயிற்றின் இறுகிய பிடியினுள் அம்மா அடிக்கடி கண்ணிலே ஒற்றிக் கொள்ளும் தாலிச் சரடு சிக்கி யிருக்கிறதே! நீண்ட கண்டத்தினைப் பெருமை யோடு அலங்கரித்த கருகமணி மாலை அறுந்து போய் பாதி நெஞ்சிலே உராய்வதும் பாதி தரையில் சிதறிக் கிடப்பதும் ஏன்? தாயின் ஆடைகள் ஏன் இப்படி அலங்கோலமா யுள்ளன? அவள் விழிகள் ஏன் இப்படிப் பிதுங்கி... ஐயோ! பார்க்கப் பயமா யிருக்கிறதே! வீரிட்டு அலறுகிறான் சிறுவன், அருவருப்பும் பயங்கரமும் அடைந்து.*

*(சினிமாவானால் இந்தக் கட்டத்தில நிச்சயம் மின்னலும் இடியும் மழையும் தோன்றும் என்று நினைத்தார் டாக்டர் குஹா. ஒரே ஒரு விநாடி புன்முறுவல் தோன்றி மறைந்தது அவர் முகத்தில். அடுத்து அந்தச் சோகக் கதையில் அவர் மனம் மீண்டும் லயித்தது.)*

*அதோ அந்த முரடன்-பெண்டாட்டியைத் தூக்கிலே போட்டது மல்லாமல் அவள் உத்தரத்திலிருந்து தொங்கு வதை மகன் பார்க்க வேண்டும் என்று கட்டாயப்படுத்திய கிராதகன்-ஏதோ சொல்கிறானே? என்ன கூறுகிறான்?*

*'பத்து வருஷங்கள் இவள் எப்படி பதிவிரதையாக இருந்திருக்க முடியும்? இத்தனை அழகான ஒருத்தியை*

ஊர்க் காலிகள் பத்து வருஷங்களாகச் சும்மாவிட்டு வைத்திருப்பார்களா? இவளுக்குச் சாப்பாட்டுக்குத்தான் வேறு என்ன வழி? அதனால்தான்! அதனால்தான்! மகனே, பெண்களை நம்பாதே, நம்பவே நம்பாதே!'

★ ★ ★

"அடப்பாவி! இப்படி ஓர் அபத்தமான, ஆதாரமற்ற சந்தேகத்துக்காகவா அவளைத் தூக்கிலே தொங்கவிட்டாய்? சிறுவன் ஒருவனின் பரிமளமான மனத்தைப் பேதலிக்கச் செய்தாய்?" டாக்டர் குஹா இவ்வாறு கேட்டு முடிய வில்லை.

அதற்கு முன்னால் தம் கழுத்தில் ஒரு பாம்பு நெளிவது போல் உணர்ந்தார். அதனைத் தட்டிவிட யத்தனித்தார். அறிவின் உத்தரவுக்குக் கரம் கீழ்ப் படியும் முன்னரே கழுத்தில் அந்தப் பாம்பு ஜிவ்வென்று சுருண்டு சுருங்கி இறுக்கியது. 'பாம்பல்ல இது! கயிறு! ஐயோ! மூச்சு முட்டு கிறதே! கத்தலாமென்றாலும் தொண்டை எழவில்லையே! தன்னை ஸைக்கோ ஸாரநாதன்தான் கொல்லப் பார்க் கிறான்! அடேய்! என்னை விடுடா, விடு! உனக்கு நல்லது செய்ய வந்தவன் நான். நான் சொல்வது அவனுக்குக் கேட்க வில்லையே! தவறு, தவறு! என் குரல்தான் எழும்பவில்லை! ஐயோ, நான் என்ன செய்வேன்? கண்கள் இருண்டு போகின்றன; மூச்சு முட்டித் திணறுகிறது! ஸாரநாதா! உனது நாற்பத்து மூன்றாவது கொலை இது! ஆனால் மறக்காதே, நீ என்னை ஜெயிப்பதற்கு முன்னால் நான் உன்னை வென்று விட்டேன்! நோயுற்ற உன் மனத்துக்குள் புகுந்து பார்த்துவிட்டேன்! உன் மன நோய்க்கான காரணங்களை ஆராய்ந்தறிந்து கொண்டுவிட்டேன்! இனி நான் செத்தாலும் வெற்றி என்னுடையதுதான்! வெற்றி! வெற்றி! அது இப்படித்தான் இருண்டு கிடக்குமா? இருள், மோனம், சூன்யம். சூன்யத்துக்கும்கூட இடமில்லாத ஒரு நிலை!...

ஸோரநாதனின் கரங்கள் தளர்ந்தன. அவனைப் பொறுத்தவரையில் இது உணர்ச்சிக் குவியலின் சரிவு! இருள், மிதப்பு. மயக்கத்துக்கும் நினைவுக்குமிடையே ஓர் ஊசலாட்டம். அமைதி, அளப்பரிய ஆனந்தம். நிர்மலமான நிர்வாண நிலை! இன்பத்தின் எல்லை, நெடு மூச்சு, விடுதலை!

தாற்காலிக விடுதலை! மறுபடியும் உணர்ச்சிக் குவியல்கள் படிப்படியாக உயர்ந்து நெஞ்சை அடைத்துத் திக்குமுக்காடப் பண்ணிக் கைகளைப் பரபரக்க வைக்கும் வரை; கண்களை ஒரு கயிற்றைத் தேடி அலையச் செய்யும் வரை அவனுக்கு விடுதலை!

அந்த விடுதலையை உறுதிப் படுத்திக்கொள்ள அவன் விடுவிடென்று அந்த அறையை ஆராய்ந்தான். அலமாரியில் அகப்பட்ட டாக்டருடைய 'ஸூட்' ஒன்றை அணிந்து கொண்டான். அவர் மேஜை இழுப்பறையில் இருந்த மூவாயிரத்துச் சொச்சம் ரூபாயை பாண்ட் பாக்கெட்டில் எண்ணிப் பாராமலேயே செருகிக் கொண்டான். அவரு டைய கறுப்பு மூக்குக் கண்ணாடியையும், தொப்பியையும் அணிந்து அறையை விட்டு வெளியேறினான். வரவேற்பு அறையில் இருந்தவர்களுக்கு முதுகைக் காட்டியபடி மாடிப் படிகளில் இறங்கி வீதியை அடைந்தான்.

ரிஸப்ஷனிஸ்ட்டின் தலை சுவாரசியமான 'ரீடர்ஸ் டைஜஸ்ட்' கட்டுரையை விட்டு மேலே உயரவில்லை. ஆண்-பெண் உறவு பற்றிய கட்டுரை ஒன்று அப்பத்திரிகை யில் பிரதி மாதமும் நிச்சயம் உண்டு.

மஃப்டியிலிருந்த போலீஸ்காரர்கள், 'நோயாளி உள்ளேயே இருக்க டாக்டர் மட்டும் எங்கே இவ்வளவு அவசரமாகப் போகிறார்?' என்று நினைத்தார்கள். அடுத்து டாக்டரால் பரிசோதிக்கப்படவிருந்த மாஜி நடிகர், "டாக்டர் எங்கே கிளம்பிவிட்டார்? திரும்பி வர

நேரமாகுமா?'' என்று ரிஸப்ஷனிஸ்டைக் கேட்டார், காத்து அலுத்த தொனியில்.

ரிஸப்ஷனிஸ்ட்டின் முகம் புதிராகியது. அவள் எழுந்து ஆடையைச் சரிசெய்து கொண்டாள். கைப்பையிலிருந்து கண்ணாடியை எடுத்து ஒரு தடவை தன் முகத்தைப் பார்த்துக் கொண்டாள். பின்னர் ஒய்யாரமாய் நடந்து டாக்டரின் அறைக் கதவைத் திறந்து உள்ளே நுழைந்தாள்.

ஓரிரு விநாடிகள் கழிந்தன. அந்த அறையினுள்ளிருந்து 'வீல்' என்ற பீதி நிறைந்த பெண் குரல் வெளிப்பட்டது. போலீஸாரில் ஒருவன் ஃபோனுக்குப் பாய்ந்தான். மற்றொருவன் டாக்டரின் அறைக்குள் எட்டிப் பார்த்து விட்டுத் தலைதெறிக்க தெருப்பக்கம் ஓடினான்.

ஆனால் ஸாரநாதனுக்குத் தேவையான சில விநாடிகள் கிடைத்துவிட்டன. அவன் ஒரு டாக்ஸியில் ஏறி வெகுதூரம் போய்விட்டான். அடுத்த சில நிமிடங்களில் டாக்ஸியை அனுப்பிவிட்டு அவன் நடைபாதையில் பொய்த்தாடி மீசைகளை விற்றுக் கொண்டிருந்த ஒரு வியாபாரியிடம் பேரம் பேசினான். பின்னர், நவீன பாணி ஹிப்பி உடை களை விற்கும் ஆடம்பரமான துணிக்கடை ஒன்றினுள் நுழைந்தான்.

★ ★ ★

# 7. நீ இருக்க அவன் எதற்கு?

**கொ**டைக்கானல் ரோடு ஸ்டேஷனில் இறங்கியதும், பக்கத்துக் 'கூப்பே'யில் இருந்த ஹிப்பியின் பெயர் அமிர்த லிங்கம் என்பதை ரயில் பெட்டிக்கு வெளியே ஒட்டப் பட்டிருந்த ரிஸர்வேஷன் பட்டியல் தாளிலிருந்து தெரிந்து கொண்ட பத்மநாபன், பிளாட்ஃபாரத்தில் அவனைக் கண்டதும். "என்ன மிஸ்டர் அமிர்தலிங்கம்!" என்று ரொம்ப நாள் பழக்கப்பட்டவர்போல் அழைத்து, "ரூமெல் லாம் ரிஸர்வ் பண்ணி யிருக்கீங்களா?" என்று கேட்டார்.

"இனிமேல்தான்; மலை ஏறிப் போன பிறகு தான் பார்க்கணும்" என்றான் அவன். "உங்க விஷயம் என்ன?"

"நான் பத்து நாளைக்கு முன்னாடியே லெட்டர் எழுதிப் போட்டுட்டேன். ஃபோனிலும் பேசிட்டேன். 'அட்வான்ஸ்' அனுப்புன்னு கழுத்தறுத்தான். 'ஏண்டா நம்பிக்கை யில்லையா'ன்னு கேட்டால் 'அதுதான் வழக்கம்' அப்படீன்னான். சரி, எப்படி இருந்தாலும் கொடுத்து அழப்போறோம்; அதில் ஒரு பங்கை முன்கூட்டியே செலுத்தறதிலே என்ன நஷ்டம்னு தந்தி மணி ஆர்டராகவே அனுப்பிட்டேன், இருநூறு ரூபாய்."

"என்ன ஹோட்டல் அது? இத்தனை கெடுபிடியுடன்?" என்றான் அமிர்தலிங்கம்.

"மதுரை, மெட்ராஸிலே யிருந்தெல்லாம் பெரிய மனு ஷங்க வந்தா அங்கேதான் தங்கியாகணும். அதனால்தான்

அவங்க ஜபர்தஸ்தும் அதிகமாயிருக்கு'' என்றார் பத்மநாபன், தாம் ஒரு பெரிய மனிதன் என்பதைச் சொல்லாமல் சொல்லிக் கொள்ளும் விதமாக. ''ஹாப்பி ஹாலிடேன்னு பேரு. உள்ளதிலே டீஸண்ட் ஹோட்டல் அதுதான்னு கேள்விப்பட்டேன். தனியாகப் போனா ஸெகண்ட் ரேட் ஹோட்டலானாலும் பரவாயில்லை. ஃபாமலியோடு போகறச்சே வசதியா இருக்கணும், பாருங்க.''

''சரி, நானும் அங்கேயே வந்துடறேன்'' என்றான் அமிர்த லிங்கம்.

பஸ்ஸில் போகும்போது தமக்குப் பக்கத்திலேயே அமர்ந்திருந்த அமிர்தலிங்கத்திடம், ''கொடைக்கானலில் எப்படிப் பொழுது போக்குவதாக உத்தேசம்?'' என்று கேட்டார் பத்மநாபன்.

''பொழுதுக் கென்ன, தானாகப் போய் விடுகிறது.''

''யூ ஆர் மிஸ்டேக்கன். இப்போ அப்படித்தான் தோணும். அங்கே போய்ப் பத்துப் பதினைந்து நாட்கள் இருக்கணும்னா ஒரு திட்டம் போட்டுக்கணும்; இல்லேன்னா போர் அடிச்சுடும். இப்போ என்னையே எடுத்துக்குங்க. நம்ம ஆபீஸிலே அடுத்தாற்போல் ஒரு நாவல் எழுதச் சொல்லி என்னைக் கேட்டிருக்காங்க. அதுக்கான ஒரு பிளாட்டை இங்கே இருக்கச்சே உருவாக்கிவிடலாம் என்கிற எண்ணத்தோடேதான் வந்திருக்கிறேன்.''

''சரியாய்ப் போச்சு! அங்கே வந்தும் உச்சி மோட்டைப் பார்த்துண்டு உட்கார்ந்திருக்காதீங்கோ! நாலு இடங்களுக்குப் போகணும், வரணும்'' என்றாள் அம்புஜம்.

அமிர்தலிங்கம் சிரித்தான்.

''உச்சி மோட்டை மட்டுமில்லை; மலைச் சிகரங்களை, ஏரியின் நீர்ப்பரப்பை, பசும் புல் தரையை, மரங்களடர்ந்த மலைச் சரிவை எல்லாம் பார்ப்பேன். ஆனால் என்னுடைய

கண்களால் உனக்குப் பார்க்க முடியுமானால் அங்கெல்லாம் வெறும் பச்சை நிறத்தை மட்டும் காண மாட்டாய். அந்தக் காட்சிகளைப் பின்புலனாகக் கொண்டு அருமையான புதிய நாடகம் அரங்கேறுவதைப் பார்ப்பாய்!''-சற்றுச் சூடாகப் பேசினார் பத்மநாபன்.

''உங்களுக்கு இருக்கிறது டெலிவிஷன் கண் களோன்னோ, காங்க்ரீட்டைப் பார்த்தால்கூட சினிமாக் காட்சிதான் தென்படும்!''

''கொடைக்கானலில் எப்படி பொழுது போக்கலாம்?'' என்றான் அமிர்தலிங்கம்.

''இதுதான் உங்களுக்குப் ஃபர்ஸ்ட் டிரிப்பா? அதனால் தான் இப்படிக் கேட்கிறேள். அங்கே இங்கிலீஷ் கிளப் இருக்கு- டென்னிஸ் ஆடலாம்; கால்ஃப் கிளப் இருக்கு; ரைடிங் கிளப் இருக்கு; போட்கிளப் இருக்கு. இதிலே எதிலாவது சேர்ந்துண்டு 'ஆக்டிவ்'வா இருக்கலாம். இதை விடச் சிரம சாத்தியமான காரியங்களைப் பண்ணணும்னா மவுண்டனீர்ஸ் கிளப்பிலோ, எக்ஸ்ப்ளோரர்ஸ் கிளப்பிலோ சேர்ந்து மலை ஏறலாம், கானகங்களை ஆராயலாம். இப்படி ஏதாவதொன்றில் சுருசுருப்பாக ஈடுபடவில்லையானால் அலுப்பு ஏற்படுவது மட்டுமல்ல, மனமும் உடலும்கூடக் கெட்டுவிடும்!''

''தாங்க்ஸ்! நான் கால்ஃப் கிளப்பிலே சேரலாம்னு பார்க்கறேன்.''

''முன்னமேயே ஆடிப் பழக்கம் உண்டோ?''

பின்னாலிருந்து அம்புஜம் குறுக்கிட்டாள்: ''இதற்கு என்ன பழக்கம் வேண்டியிருக்கிறது? பந்தை மட்டையால் தட்ட வேண்டியது, அதும் பின்னாடியே நடந்து போய் நிற்க வேண்டியது; மறுபடியும் பந்தைத் தட்டவேண்டியது;

மறுபடியும் நடை, தட்டு, நடை, தட்டு நடை! இவ்வளவு தானே!''

''இந்தா அம்புஜம்! நீ பாட்டுக்கு மடிசார் வைச்சுக் கட்டிண்டு கால்ஃப் ஆடப் போயிடாதே, கொடைக் கானலில்!'' என்றார் பத்மநாபன், தம் மனைவியைத் திரும்பிப் பார்த்து. பின்னர் அமிர்தலிங்கத்திடம் தொடர்ந்தார்: ''இவளைப் போல்தான் ரொம்பப் பேர் நினைத்துக் கொள்கிறார்கள், அது ரொம்பச் சுலபம்னு.''

''உண்மையில் நீங்கள் இப்போ சொன்ன அதே காரணத்துக்காகத்தான் நானும் அதைத் தேர்ந்தெடுத்தேன்'' என்றான் அமிர்தலிங்கம். ''மற்றபடி எனக்குக் கால்ஃப் விளையாட்டின் விதிமுறைகள்கூடத் தெரியாது.''

''சோம்பல் பேர்வழிகளுக்கு ஏற்ற சாவகாசமான ஆட்டம்னுதான் தோன்றும். ஆனால் உண்மையில் அது ரொம்பச் சிரமம்!''

''நீங்க ஆடியிருக்கேளா?'' என்று அம்புஜம் கேட்டாள்.

''நெருப்பைத் தொட்டுப் பார்த்துத் தான் தெரிஞ்சுக் கணுமா சுடும்னு? மேம்புல் மேய்பவர்களுக்கு எதுவுமே எளிது; ஆனால் அந்த ஆட்டத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்று தீவிரமாக நினைப்பவர்களுக்குக் கால்ஃப் ஆட்டம் கஷ்டம்தான். நல்ல தேகப்பயிற்சியும் கூட. நீங்க ஆடுங்க ஸார்! நல்ல, ஹை கிளாஸ் ஸொஸைட்டியிலே 'மூவ்' பண்ணுகிற வாய்ப்புக் கிடைக்கும், கால்ஃப் கிளப்பிலே!''

இப்படியாகப் பேசிக் கொண்டு வந்த ஞாபகத்தில்தான் பத்மநாபன் இன்று அமிர்தலிங்கத்தைக் கேட்டார், ''என்ன புரோகிராம் உங்களுக்கு? கால்ஃப் ஆடப் போறீங்களா?'' என்று.

ஆனால் பதில் கிடைக்கச் சற்று நேரமாயிற்று. அனசூயா வின் கரங்களில் நெளிந்த கயிறு ஸாரநாதனுக்கு ஏதேதோ நினைவுகளை ஏற்படுத்தின. அவற்றிலிருந்து விடுபட்டு அவன் மீண்டும் அமிர்தலிங்கமாக மாறி, பத்மநாபனிடம் திரும்பி வரக் காலதாமதமாயிற்று. "என்ன கேட்டீர்கள்?" என்று அவன் வினவ இவர் தம் குரலுக்குக் 'கார்பன் காப்பி' எடுத்துக் கொடுத்தார்.

"ம்... இன்னிக்கு இல்லை; இலேசாத் தலை வலிக்கிறது. கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கலாம்னு பார்க்கிறேன்."

"அது ஒண்ணுமில்லை; சேஞ்ச் ஆஃப் க்ளைமேட்-அவ்வளவுதான். சில பேருக்கு வரும்; ஒரே நாளிலே அட்ஜஸ்ட் ஆயிடும்" என்று கூறிக் கைகழுவிக்கொண்டு வந்தார் பத்மநாபன். "திடீர்னு எலிவேஷன் ஜாஸ்தியாய்ப் போய் அட்மோஸ்ஃபியரிக் பிரஷர்லே ஒரு வித்தியாசம் ஏற்படுது பாருங்க, அதுதான் காரணம்."

இதற்குள் ஒரு மேஜைக்கு முன்னால் சாப்பிட அமர்ந் திருந்த அமிர்தலிங்கத்திடம் ஒரு ஸர்வர் வந்து குனிந்து, "நான்வெஜிடேரியன் எல்லாம் அந்த பில்டிங் ஸார்!" என்று ஜன்னல் வழியாகத் தெரிந்த ஒரு சிறு கட்டிடத்தைச் சுட்டிக் காட்டினான்.

பத்மநாபன் காதில் இது விழாமல் போகவில்லை. "இன்னிக்கு ஒரு நாள்- ஃபர்ஸ்ட் டே- சைவச் சாப்பாடே இருக்கட்டும். லைட்டா நிறுத்திக்குங்க. மண்டை கனக்குதுங்கறீங்களே!" என்று அறிவுரை வழங்கினார், மேல் துண்டில் கையைத் துடைத்தவாறே.

"ஏன்னா! சித்தே இப்படி வாங்கோ," என்று அழைத்த அம்புஜம், "இங்கே அசைவச் சாப்பாடு கூட உண்டா?" என்று அருவருப்புடன் கேட்டாள். மற்றவர் காதில் விழாதவாறு சம்பாஷணை தொடர்ந்தது.

*"அவனிடம்தான் நீ ஜாதகம் கேட்கப் போனாய். உன் நாத்தனார் பெண்ணுக்கு!" என்று நினைவூட்டினாள் மீனா.*

*"அவன் எப்படியோ போய்த் தொலையட்டும்; நாம் எதுக்கு இங்கே இருக்கணும்?" என்றாள் அம்புஜம்.*

*"ஏதாவது உளறாதே! சைவம் அசைவம்னு தனித் தனியாப் பிரிச்சுத்தானே வைச்சிருக்கா?"*

*"மாமிசத் துண்டத்தை எடுத்துப் போட்டுட்டுச் சாம்பார்னு பரிமாறிட்டான்னா என்ன பண்றது?"*

*"பாபத்தைப் போக்கக் கூவத்திலே ஸ்நானம் பண்றது! அம்புஜம், எனக்குக் கோபத்தை வரவழைக்காதே! தனித் தனி சமையல் அறை, தனித் தனி சாப்பாட்டுக் கூடம், தனித் தனி சமையல்காரர்கள் என்று எல்லாம் கச்சிதமாய் இருக்கு. நான் பார்த்துட்டேன்; மேலே பேசாதே! மீனா! உனக்குந் தான் சொல்றேன். லோகத்திலே அசைவச் சாப்பாடு சாப்பிடுகிறவர்களை யெல்லாம் வெறுத்துட முடியுமா என்ன? வி ஆர் லிவ்விங் இன் நைன்டீன் ஸெவண்டீஸ்!"*

**அ**ப்போது சாப்பாட்டுக் கூடத்தின் வாசல் வழியாக ஹோட்டல் முதலாளி தனராஜ் ஒருவரை மரியாதை யாகவும் அதே சமயம் ரொம்பப் பெருமையுடனும் அழைத்து வருவதைப் பத்மநாபன் பார்த்தார். அந்த ஒருவரின் பின்னாலேயே ஏறத்தாழ அவரைப் போலவே தோற்றம் அளித்த ஓர் இளைஞன் வந்தான்.

முன்னவரிடம் அதிகாரத் தோரணையுடன் அநுபவத்தின் விளைவாகப் பக்குவமும் படர்ந்திருந்தது. பின்னவனிடம் இளமை மிடுக்குடன், 'நான் சிறியவன்' என்ற அடக்கமும் மிகுந்திருந்தது. இருவரிடமும் காணப்பட்ட அகன்ற மார்பு, அடங்கிய வயிறு வைரமேறிய கைகள் ஆகியவை நன்கு தேகாப்பியாசம் செய்து உடலைக் கட்டுமஸ்தாக வைத்துக் கொள்வதில் சிரத்தை காட்டுபவர்கள் என்பதை விளம்பரப்

படுத்தின. உயர்ந்த பர்மாத் தேக்கினால் செதுக்கப்பட்டு நன்கு பாலிஷ் ஏற்றப்பட்ட பதுமைகளைப் போல் அவர்கள் ஒரு தேஜஸைப் பரப்பினார்கள். இளைஞனிடம் இல்லாத சில முதுமைக் கோடுகளும் நரையும் முதியவரிடம் இருந்தன. முதியவரிடம் காணப்படாத மகிழ்ச்சியும் குறுகுறுப்பும் இளைஞனிடம் இருந்தன. இளைஞன் ஆள்காட்டி விரலால், மேல் உதட்டின் அடிவாரத்தில் வெகு சிரத்தையாகக் கத்தரித்து விடப்பட்டிருந்த மீசையை அடிக்கொரு தடவை தடவிவிட்டுக் கொண்டான். பெரிய வருக்கு மீசை இல்லை. மிக அதிகமான வித்தியாசத்தை அவர்கள் கண்களிலேதான் பளிச்சென்று காண முடிந்தது. வயதானவர் கண்களில் அலுப்பும் களைப்பும் குடி கொண்டிருந்தன. வாலிபனோ, வாழ்க்கை என்னும் பாதையில் எதிர்ப்பட்ட யௌவனம் என்ற மாளிகையின் வாயில் கதவுகளை அப்போதுதான் திறந்திருந்தான். உள்ளே சென்றால் என்னென்ன அற்புதங்கள், புதிர்கள், திகைப்புகள், இன்பங்கள் காத்திருக்குமோ என்ற ஆவல் குறுகுறுப்புடன் அவன் கண்கள் பளபளத்துக் கொண் டிருந்தன. வசதி மிக்கவர்கள், விடுமுறையை அனுபவிக்க வந்தவர்கள் என்பதை அவர்கள் உடை தெளிவாக்கியது. கருநீல டெர்ரிகாட் பேண்ட்டும் பெரிய பெரிய மஞ்சள் பூக்கள் போட்ட பச்சை நிற புஷ் ஷர்ட்டுகளும் அணிந் திருந்தனர். பழுப்பு நிறத்தில் காஷுவல் ஷூஸ்தான் அணிந் திருந்தனர் என்றாலும் அதுவும் பளபளக்கத்தான் செய்தது.

அவர்களின் எடுப்பான தோற்றமும் அத்தருணத்துக்கு ஏற்றாற்போல் உடை அணிந்திருந்த விதமும் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளையும் மணியையும் நிமிஷத்தையும் வினாடி யையும் ரசிப்பவர்கள் என்ற எண்ணத்தை உண்டாக்கின. அந்த ரசனை மனம் போன போக்கில் வாழ்வதால்

ஏற்பட்டதல்ல; ஒரு நியதிக்கும் கட்டுப்பாட்டுக்கும் கடமை உணர்வுக்கும் உட்பட்டிருப்பதாலேயே உண்டான ஒன்று.

**த**னராஜுடன் வந்த அந்த முதியவர் யார் என்பது பத்மநாபனுக்குப் பார்த்தவுடனேயே தெரிந்து போயிற்று. பத்திரிகையாளர் அல்லவா அவர்? "டி.ஐ.ஜி.ன்னு சொன்னானே அம்புஜம், அரைகுறையா! டி.ஐ.ஜி., ஸி.ஐ.டி.ன்னு சேர்த்துச் சொல்லி யிருக்கணும்! பேர், நடராஜன்" என்று அவர் தம் மனைவிக்கு விளக்கினார். அவர்கள் வரும் வழியிலேயே சற்று ஒதுங்கினாற்போல் தனராஜ் தம்மை அறிமுகப்படுத்துவார் என எதிர்பார்த்தவராகக் காத்திருந்தார்.

ஆனால் டி.ஐ.ஜி., ஸி.ஐ.டி.யை முழுக்க முழுக்கத் தமக்கே உரியவராக்கிக் கொள்வதில் தனராஜ் முனைந் திருந்தார். அவர் பகிர்ந்து கொள்ள முன்வராவிட்டால் என்ன? பத்மநாபனா விடுகிறவர்? அவர்கள் இவரைத் தாண்டி அப்பால் செல்ல இருந்த தருணத்தில் பத்மநாபன், "நமஸ்காரம் ஸார்! நைஸ் டு ஸீ யூ ஹியர்" என்றார்.

நடராஜன் இவரை இன்னாரென்று புரிந்துகொள்ள முடியாமல் புருவங்களை நெரிக்கத் தொடங்கியதும், "ராஜ ரத்தினம் ஸ்டேடியத்திலே நடந்த ஸ்போர்ட்ஸ் மீட் பற்றிய படங்கள் போட்டு எழுதியிருந்தோமே 'அன்னம்' பத்திரிகை யிலே, பார்த்தீங்களா? நல்ல ஆக்ஷன் ஷாட்ஸா சிலது கிடைச்சுது; சில படங்கள் டிராமாடிக்கா இருந்தனன்னு கூடச் சொல்லலாம்" என்று நாசூக்காகத் தம்மைப் பற்றிச் சொல்லிக்கொண்டார் பத்மநாபன்.

"ஓ யெஸ்! நீங்க அன்னிக்கு பிரஸ் கான்ஃபரன்ஸுக்குக் கூட வந்திருந்தீங்களே?" என்று கேட்டு மலர்ந்த முகத்துடன் கை குலுக்கினார் நடராஜன். "எக்ஸ்கியூஸ் மீ! பெயர் என்னன்னு சொன்னீங்க?"

"பத்மநாபன், அப்பா!" என்று இடைமறித்துக் கூறினான் இளைஞன். "ஜர்னலிஸ்ட் மட்டுமில்லை நாவலிஸ்ட்டும் கூட. பத்மம் என்கிற புனை பெயரிலே எழுதறீங்க இல்லையா? ரொம்ப நாவலாசிரியர்களுடைய பெயர் நமக்குப் பழக்கமாகி யிருக்கும்; ஆட்களை அடையாளம் தெரிஞ்சுக்க முடியாது. ஆனால் இவருடைய நூல் ஒன்றைச் சமீபத்திலேதான் நான் படிச்சேன். 'சோலைக் குயில்'னு டைட்டில். ஜாக்கெட்டிலே இவர் படத்தையும் போட்டிருந்தார்கள்.

"ஓ! என் புஸ்தகத்தை நீ படிச்சிருக்கியா? அப்போ உன் கிட்டே ஜாக்கிரதையாகத்தான் இருக்கணும்" என்றார் பத்மநாபன், உடம்பெல்லாம் கிளுகிளுப்பதை மறைத்துக் கொண்டு.

தந்தை மகன் இருவருமே சிரித்து விட்டனர். "பயப்படுவதாக நடிக்கக்கூட வேண்டியதில்லை, நீங்க. ரொம்பப் பிரமாதமாக இருந்தது."

'அலமாரியில் அடுக்கி வைச்சிருக்குன்னு கேலி பண்ணுவியே, பார்த்தியா? விஷய ஞானமுள்ளவர்கள் விரும்பிப் படிக்கிறார்கள்' என்று தமது மனைவிக்குச் சொல்கிற பாவனையில் கண்களால், அவளை ஒரு வெட்டு வெட்டினார் பத்மநாபன். அதே சமயத்தில் அந்த இளைஞன் தொடர்ந்து கூறியவற்றால் அவருக்குச் சுரத்துக் குறைந்து போக, அம்புஜத்தின் முகத்தில் விஷமப் புன்னகை அரும்புவதைக் கண்டு பல்லைக் கடித்துக்கொண்டார். இளைஞன் சொன்னான்: "உங்கள் புத்தகத்தின் தலைப்பு மட்டும்தான் எனக்குப் பிடிக்கவில்லை. சப்புன்னு போச்சு. இன்ஃபாக்ட் ஒரு நண்பன் சிபாரிசு பண்ணியிருக்கலைன்னா நான் அந்தப் புத்தகத்தை வாங்கியே இருக்கமாட்டேன். தலைப்பிலே கவர்ச்சி இல்லாததுதான் காரணம்."

இப்போது அம்புஜம், பத்மநாபனைப் பார்த்த பார்வை, 'இந்த லட்சணத்தில் புத்தகங்களை அலமாரியில் அடுக்காமல் என்ன பண்ணுவது?' என்று கேட்பது போலிருந்தது.

"ரங்கன் எப்பவுமே மனசில் உள்ளதைப் பளிச்சுன்னு சொல்லிவிடுவான். ஒளிவு மறைவு இல்லாமல் ஃபிராங்கா பேசணும்னு கத்துக் கொடுத்துப் பழக்கிட்டேன். நீங்க ஒண்ணும் தப்பா நினைச்சுடாதீங்க" என்றார் தந்தை.

"அதனாலென்ன? ஐ வெல்கம் கிரிடிஸிஸம்" என்றார் பத்மநாபன். "நல்லதையும் சொன்னான், குறையையும் குறிப்பிட்டான், அவ்வளவுதானே?"

"சாப்பாடு ஆச்சா அல்லது பத்திரிகைக்கு 'அன்னம்'ன்னு பேர் வைச்சதோடே திருப்தி அடைஞ்சுட்டீங்களா?" என்று புன்முறுவலுடன் கேட்டார் நடராஜன்.

"எங்களை அன்னக்காவடிகள்னு யாராவது நினைச்சுடக் கூடாதேங்கறதுக்காகத்தான் அட்டைப் படத்தில் மட்டுமின்றி உள்ளேயும் இரண்டு இடங்களிலே வாராவாரம் அன்னப் பட்சியின் பொம்மை போட்டுக் காட்டறோம்" என்று சிரித்துக் கொண்டே சொன்ன பத்மநாபன், "நீங்க உட்காருங்க; நாங்க சாப்பிட்டுக் கையலம்பியாச்சு" என்றார்.

"தண்ணீர் கலந்த பாலானாலும் நீரை விலக்கிப் பாலை மட்டும் உண்ணும் ஆற்றல் அன்னத்துக்கு உண்டாம்; அதுபோல் அப்பாவும் நல்லதை மட்டுமே பிரசுரிப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்" என்றாள் மீனா.

"உங்க மகளா? ரொம்ப கேர்ஃபுல்லா பேசறாளே! 'சொல்லிக்கொள்கிறாரா' உங்க அப்பா!"

"இவங்க சொல்றதிலேயும் ஒரு பாயிண்ட் இருக்கு அப்பா!" என்று மீனாவின் கூற்றுக்கு விரிவுரை வழங்க முன் வந்தான் ரங்கநாதன். "அன்னம் பாலை மட்டுமே தனியே

பிரிக்கும் என்பதை விஞ்ஞான ரீதியாக ஒப்புக்கொள்ள முடியாது; அதே போல் இவங்க நல்லதை மட்டுமே பிரசுரிக்கிறாங்க என்பதையும் முழுக்க முழுக்க ஒப்புக்கொள்ள முடியாது. பத்மநாபன் ஸார் எவ்வளவு ஜாக்கிரதையாக இருந்தாலும் ஏதாவது அபத்தம் வந்து அவரையும் அறியாமல் ஓரிரு சமயங்களில் புகுந்துகொள்ளும். ஒண்ணுமில்லைன்னா ஆபாசப் படத்துடனும் அசங்கியமான வாசகத்துடனும் ஒரு விளம்பரம் வந்து சேரும். அதைப் போடவும் முடியாமல் நிராகரிக்கவும் இயலாமல் இவர் கிடந்து அவஸ்தைப்படுவார்!''

''பத்திரிகைத் துறையிலே பத்து வருஷ அனுபவம் உள்ளவன் போல் பேசுகிறான் ஸார், உங்க மகன்!'' என்று நிஜமாகவே வியந்து போற்றும் முகமாகக் கூறினார் பத்மநாபன்.

''இந்தாப்பா ஸாருக்கு ரசம் கப்பிலே கொடு'' என்று உபசாரம் செய்துவிட்டுப் பத்மநாபன் தொடர்ந்தார்: ''நீங்கள் எங்கே இவ்வளவு தூரம்? ஏதாவது இன்வஸ்டிகேஷன் சம்பந்தமாய்க் காம்ப் போட்டிருக்கேளா?''

''பத்திரிகைக்காரர் வேலையைக் காட்டாதீங்க, ஸார்! நான் இங்கே ஓய்வுக்காக ஹாலிடேயில் வந்திருக்கேன். போலீஸ் வேலையை யெல்லாம் பதினைஞ்சு நாளைக்கு மூட்டை கட்டி வைச்சாச்சு.''

''ஒரு சேஞ்ச் வேண்டியதுதான். அதிலும் நீங்க ரெண்டு பேரும் சேர்ந்து வந்திருக்கேளே அதுதான் ரொம்ப சந்தோஷமா இருக்கு. இந்தக் காலத்தில் அப்பாவும் பிள்ளையுமாச் சேர்ந்து விடுமுறையில் கிளம்பறது என்கிறதே ஓர் அபூர்வக் காட்சி. காலேஜ் நண்பர்களோடுதான் புறப்படுவேன் என்று சொல்லாமல் ரங்கன் உங்களுடன் வந்திருக்கிறானே, பெரிய விஷயம் ஸார், அது!''

"நீங்கள் மட்டுமென்ன? குடும்பத்தோடுதானே வந்திருக் கீங்க?" என்றான் ரங்கன், மீனாவை விழுங்கியபடியே. அவள் முகம் ஜிவ்வென்று சிவந்துவிட்டது. ஆயினும் தலை குனியக் கூடாது என்று பிடிவாதத்துடன் உட்கார்ந்திருந் தாள். நரம்புகளிலெல்லாம் இனியதொரு நடுக்கம் பரவியது.

பத்மநாபன் நடராஜனை நோக்கினார்: "நாம் குடும்பச் சூழலிலிருந்து ஓர் அடி விலகினால் பிள்ளைகள் பத்தடி அப்பால் போய் விடுவார்கள். அப்புறம் அவர்களை மறுபடி யும் இந்த வட்டத்துக்குள் கொண்டு வந்து சேர்க்கிறது பெரும் பாடாகப் போயிடும்."

"வாஸ்தவம்" என்றார் நடராஜன். "ஆனால் ரங்கனுக்கு நான் சரியான கம்பெனியாக முடியுமா என்று சில சமயம் எனக்கே சந்தேகமாகப் போய்விடுகிறது. பாசம் வேறே, தோழமை என்கிறது வேறே இல்லையா?"

"அதைப் பற்றிக் கவலைப்படாதீங்க. இவன் வயது வாலிபன் ஒருத்தனை நேற்றுத்தான் சந்திச்சேன். இவனுக் காகவே நான் அவனை அறிமுகம் செய்துண்ட மாதிரி இருக்கு. இன்டலிஜண்ட் சாப். அமிர்தலிங்கம்னு பேரு. இருவரும் நல்ல நண்பர்களாய் விளங்கலாம்."

இவ்வாறு கூறியபடியே பத்மநாபன் அமிர்தலிங்கம் அமர்ந்திருந்த இடத்தைப் பார்த்தார். நாற்காலி காலியாக இருந்தது. தமது அறிவுரையை ஏற்காமல் அவன் அசைவ உணவு உட்கொள்ளப் போய்விட்டான் என்று புரிந்தது. "சற்று முன் இங்கேதான் இருந்தான்" என்றார்.

"ஸி.ஐ.டி. வரார்ன்ன உடனே அந்த ருத்திராட்சப் பூனை ஓடிப் போய்ப் பதுங்கியிருக்கும்" என்றாள் மீனா.

ரங்கன் குபீரென்று சிரித்தான். நடராஜன் புன்னகை யுடன், "என்ன சொல்கிறாள் உங்கள் மகள்?" என்று கேட்டார்.

"அது ஒன்றுமில்லை ஸார். அவன் கொஞ்சம் ஹிப்பி பாணியில் உடை அணிந்திருந்தான். அது இவளுக்குப் பிடிக்கவில்லை."

"உடையை மட்டுமில்லை, அந்த ஆளையும் பிடிக்கவில்லை" என்றாள் மீனா.

"மீனா!" என்றார் பத்மநாபன் அன்புடன் எச்சரிக்கிற குரலில்.

"திஸ் இஸ் எ ஃப்ரீ கண்ட்ரி டாடி!" என்றாள் மீனா. "பிரிட்டனில் பிறந்திருந்தால் எனக்கு இன்று ஓட்டுரிமை கூட உண்டு!"

"போட்டியே ஒரு போடு!" என்று வாய் விட்டுப் பாராட்டி, ரங்கன் அவளைப் பார்த்ததானது, 'நீ என் எதிரே இருக்கும்போது என்னுடன் நட்புரிமை பூண எவனோ அமிர்தலிங்கத்தைப் போய்ச் சிபாரிசு பண்ணுகிறாரே உன் அப்பா?' என்று கேட்பது போலிருந்தது.

★ ★ ★

# 8. படகில் பிரமீளா

கொடைக்கானலுக்கு அவர்கள் வந்து மூன்று நாட்கள் ஆகிவிட்டன. மாலை நாலரை மணி சுமாருக்குப் பத்மநாபன் குடும்பம் கொடைக்கானல் ஏரி அருகே இருந்தது. 'ஜிக் ஸா பஸில்' ஒன்றின் படத்தைக் கலைத்துப் பல துண்டங்களாக்கி, அதில் ஒரு துண்டத்தை மட்டும் தனியே எடுத்து வைத்தால், அதன் எல்லைக் கோடு எத்தனை வளைவுகளுடன் காணப்படுமோ அப்படி, அந்த ஏரியின் கரை நெளிவு சுளிவுகளுடன் இருக்க, அந்தக் கரையை ஒட்டினாற்போல் அமைந்திருந்த பாதையும் அதே அளவுக்கு வளைவுகளுடன் விளங்கியது. ஒரு முறை சுற்றி வந்தால் மூன்று மைல். நடக்கத் தெம்பு உள்ளவர்களுக்கு அருமையான நடைபாதை; உன்னதமான தேகப்பயிற்சி.

இவர்கள் போனபோது வானம் இலேசாக இருட்டிக் கொண்டு வந்தது. மழை கொட்டும் என்பதற்கான அறிகுறி யும் இன்றி, இதமான வெய்யிலை உணரலாம் என்ற ஆசைக்கும் இடம் தராமல் ஓர் இரண்டுங்கெட்டான் நிலை. சிலுசிலு வென்று இலேசாகக் காற்று வீசி முகத்திலும் கரங்களிலும் பட்டதால் உடலைக் கவ்விக் கொண்டிருந்த ஸ்வெட்டரின் கதகதப்பை நன்றாக ரசிக்க முடிந்தது. ஆடை நனையாத அளவுக்குத் தூற்றல் இங்கொன்றும் அங்கொன்று மாய் விழுந்தது. வானம் பன்னீர் தெளித்து ஏரியுடன் இவ்வாறு விளையாடியபோது, ஏரியில் மத்தாப்பூப் பொறிகள் தெறிப்பது போல் நீர்த் துளிகள் சிதறின. 'வானம்

கூடலுக்கு முன்னோடியாகச் சரஸமாடுவதால் ஏரிக்கு மெய்சிலிர்ப்பு உண்டாகிறதோ?' என்று எண்ணத் தோன்றியது.

"எத்தனை தண்ணி பாரு! எத்தனை தண்ணி பாரு!" என்று அகன்று பரந்து கிடந்த ஏரி நீரை, கரத்தின் வீச்சிலே முழுமையாகச் சுட்டிக் காட்டி அதிசயித்தான் விசு. அலை எழும்பாமல் அமைதியாக இருக்கும் நீர்ப்பரப்பை இதற்கு முன் இத்தனை பெரிய அளவில் அவன் கண்டதேயில்லை.

ஏரியைச் சுற்றி நெடிதுயர்ந்திருந்த யூகலிப்டஸ்களைப் பார்த்து விட்டு, "அப்பா! இங்கே மரங்களெல்லாம் எத்தனை உயரம் வளர்கின்றன!" என்று ஆச்சரியப்பட்டாள் அனசூயா.

"ஏன், இந்த நகரம்தான் எத்தனை உயரத்தில் இருக்கிறது! ஏழாயிரத்துச் சொச்சம் அடி இல்லையா!" என்று கணக்குச் சொன்னாள் மீனா. பஸ்ஸில் உயரே ஏறி வந்தபோது வழியில் ஆங்காங்கே இருந்த அறிவிப்புப் பலகைகளைக் கருத்துடன் கவனித்திருந்தாள் அவள்.

"ஊரும் அதில் உள்ள மரங்களும் உயர்ந்திருப்பது போல் மனித மனங்களும் உயர்ந்தால் தேவலாம்" என்றார் பத்மநாபன்.

"பிளீஸ்! வேண்டாம்! தத்துவம் பேசாதீங்கோ! எனக்குத் தலைவலி வந்து விடும்" என்றாள் அம்புஜம்.

"இதையே சினிமாவில் சிவாஜி கணேசன் சொன்னால் 'ஆகா! சூச்சூசூ!' என்றெல்லாம் அனுபவிப்பாய்."

"ஆனால் நீங்கள்தான் சிவாஜி கணேசன் இல்லையே? அதனால் குறைப்பட்டுக் கொள்ளவும் நியாயம் இல்லை" என்றாள் அம்புஜம்.

"நான் சிவாஜியா இல்லாமல் போகலாம்; ஆனால் என்னை மாதிரி ஒருத்தன் எழுதித் தரதைத்தான் அவர்

சினிமாவிலே பேசறார்! அதை மறந்துடாதே!'' என்றார் பத்மநாபன்.

''சரி, சரி; இப்போ படகிலே போகப் போறேளா? இல்லே குதிரை சவாரியா?'' என்று குழந்தைகளைப் பார்த்துக் கேட்டாள் அம்புஜம்.

''போட் போட்'' என்று மீனாவும் அனசூயாவும் பர பரக்க, ''குதிரை, குதிரை!'' என்று விசு துள்ளிக்குதித்தான்.

''முதல்லே போட், அப்புறம் ஹார்ஸ் ரைட்'' என்று சமரசம் செய்ய முயன்றாள் அனு.

''முதல்லே குதிரை சவாரி; அப்புறம் போட்'' என்றான் விசு விடாக்கண்டனாக.

''குழந்தைகளைப் போய்க் கேட்டுண் டிருந்தால் எப்படி? நீங்க ஒரு முடிவெடுக்கணும்'' என்றாள் அம்புஜம்.

''அழகுதான் போ! குழந்தைகள் அபிப்பிராயத்தைக் கேட்டது நீ!'' என்று ஞாபகப்படுத்த முற்பட்டார் பத்ம நாபன். அதற்கு முன்பாகவே அம்புஜத்தைச் சங்கடமான நிலையிலிருந்து மீட்கவென்றே வந்தவர்போல் படகு கிளப் அதிகாரி ஒருவர் சம்பாஷணையில் குறுக்கிட்டார்: ''போட் வேணுமா ஸார்? பத்துநிமிஷம் காத்திருக்கணும்.''

''அதுக்கென்ன? இப்படி பெஞ்சில் உட்கார்ந்திருந்தால் போச்சு'' என்றார் பத்மநாபன். ஐந்து பேரும் வரிசையாக அமர்ந்து ஐந்து நிமிஷம்கூட ஆகியிருக்காது; இரண்டே பேர் ஏறக்கூடிய ஒரு சிறு படகு கரையை நோக்கி வந்தது. நீரைக் கிழித்துச் செல்ல வசதியாக மெலிந்து நீண்டிருந்த அதனை மிக லாகவமாகச் செலுத்திக்கொண்டு வந்தாள் எழிலார்ந்த நங்கை ஒருத்தி. அவளுடைய அழகைக் கண்கள் கவனிப்ப தற்கு முன்பாக அவளுடைய பகட்டான அலங்காரத்தையே பார்த்தன. அலங்காரத்தை மனத்தில் பதிய வைத்த

பிறகுதான் அழகு, 'இதோ நானும் இருக்கிறேன்' என்று தயக்கத்துடன் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டது!

அந்தப் படகு கரை தட்டச் சுமார் பத்துப் பதினைந்தடி தூரம் இருந்தபோது, "அடே! பிரமீளான்னா வந்திருக்காள்!" என்று வியப்பு மிகுதியில் கூவியவாறு எழுந்தாள் அம்புஜம்.

அடுத்த கணம் விசுவைத் தவிர மற்ற மூவருக்கும்கூடப் புரிந்து விட்டது, பிரபல சினிமா நட்சத்திரம் பிரமீளாவை மிக அருகில் சந்திக்கும் பாக்கியம் தங்களுக்குக் கிடைத்து விட்டதென்று. விசுவுக்கு மட்டும் பாவம், அந்தச் சந்திப்பின் மகத்துவம் புரியும் வயதாகவில்லை, இன்னும்!

படகு கரையோரம் வந்ததும், போட் கிளப் அதிகாரி ஒருவர் பெருமிதம் பொங்கும் முகத்துடன் அதை இழுத்துப் பிடித்துக் கொண்டு, "பார்த்து இறங்குங்க... பார்த்து... பார்த்து" என்று ரொம்ப அக்கறையுடன் எச்சரிக்கை செய்தார்.

அம்புஜம் கிடைத்த வாய்ப்பைக் கைநழுவ விடாமல் சரேலென்று இரண்டடி முன்னால் எடுத்து வைத்தாள். ஆடும் படகிலிருந்து நிலையான தரைக்குத் தடுமாறாமல் பிரமீளா வந்துசேரக் கை கொடுத்து உதவினாள்.

"தாங்க்ஸ்" என்றாள் பிரமீளா.

"நன்னாயிருக்கு, உங்களுக்கு இந்தச் சின்ன உபகாரமாவது பண்ணக் கொடுத்து வைத்திருந்ததே எனக்கு" என்றாள் அம்புஜம். அத்துடன் விடவில்லை. இந்தச் சந்தர்ப்பம் போனால் வராது என்பது அவளுக்குத் தெரியாததா? தொடர்ந்தாள்: "உங்க வீட்டுக்கு மூணாவது வீட்டிலே வெராம கிருஷ்ணன்னு இருக்கார் இல்லையா? அவர் வய்ஃபை எனக்கு நன்னாத் தெரியும். பள்ளிக்கூடத்திலே நாங்க ஒண்ணாப் படிச்சவா. உங்க வீட்டுக்குக்கூட ஒருதரம்

நவராத்திரியின் போது வந்திருக்கிறதா நளினி சொல்லியிருக்காள்.''

''அடுத்த நவராத்திரிக்கு நீங்களும் வாங்க, அழைப்பு அனுப்பறேன்'' என்று சிரித்தாள் பிரமீளா.

'வழியில் நின்று கண்டவர்களுடன் என்ன பேச்சு?' என்ற பாவனையில் ''ம்... ம்... போகலாம்'' என்று விரட்டுவது போல் சொன்னாள் பிரமீளாவின் தாயார் கனகம்.

அதைப் பொருட்படுத்தாமல் அம்புஜம், ''அவசியம் வரேன்'' என்று வாக்களித்து விட்டு, ''அது சரி, என்ன இவ்வளவு சீக்கிரம் ரோயிங் பண்ணக் கிளம்பித் திரும்பியும் வந்துட்டேள்? மணி நாலரைதானே ஆறது?'' என வினவினாள்.

''சாயந்திரம் ஆனால் கூட்டம் சேர்ந்து விடுகிறது. உங்களுக்குத் தெரியுமே, சினிமா நட்சத்திரம்னா மொய்த்தெடுத்து விடுகிறார்கள். அதிலேருந்து தப்பிக்கத்தான் சீக்கிரமாக வருகிறேன் ஏரிக்கு. துடுப்பு வலிப்பது நல்ல எக்ஸர்ஸைஸ். கொடைக்கானலில் சும்மா உட்கார்ந்திருந்தால் உடம்பு ஊதிடும். அப்புறம் இளைக்கப் படாதபாடு படணும்.''

''மேலும் இங்கேதான் மத்தியான நேரமானாலும் வெய்யில் தெரியாதே. அதனால்தான் தைரியமா கிளம்பி வந்துட்டேள். ஆனால் உடம்பு கறுத்துடும். ஜாக்கிரதையாப் பார்த்துக் கோங்கோ!''

''கறுத்தால் என்ன? மேக்கப் மேன்னு ஒருத்தர் எதுக்கு இருக்கார்?'' என்றாள் பிரமீளா, புன்னகை செய்து.

''போவோமா?'' என்று பொறுமை இழந்த தொனியில் கேட்டாள் அவள் தாய் கனகம்.

"போக வேண்டியதுதான். சரி, உங்க விலாசம் கொடுங்க. இல்லாட்டி நவராத்திரி அழைப்பு உங்களுக்கு எப்படி அனுப்பறது?"

"பார்த்தேளா! உங்களைப் பார்த்துப் பேசின சந்தோஷத்திலே எல்லாம் மறந்து போறது" என்ற அம்புஜம் கணவர் பக்கம் திரும்பி, "ஏன்னா உங்க விஸிட்டிங் கார்ட் ஒண்ணு கொடுங்கோளேன்" என்றாள்.

பத்மநாபன் பர்ஸ்ஸிலிருந்து ஒரு விஸிட்டிங் கார்டை எடுத்துக் கொண்டிருக்கும்போதே, "அன்னம் பத்திரிகையின் துணை ஆசிரியராக இருக்கிறார். பத்மநாபன்னு கேள்விப்பட்டிருப்பேளே? பத்மம் என்கிற புனைப்பெயர் தான் பிரசித்தம்" என்று சொல்லிக் கொண்டு போனாள் அம்புஜம்.

"ஓ! ரொம்ப சந்தோஷம்" என்று கரம் குவித்து முகமன் கூறினாள் பிரமீளா.

"தொடர் கதைக்கிடையிலே ஒரே ஒரு அத்தியாயம் நீங்க எழுதியிருந்தேளே, படிச்சேன்" என்றார் பத்மநாபன், தலையை இலேசாக ஆட்டியபடி. ஒவ்வொரு சினிமா நட்சத்திரமும் ஒவ்வொரு வாரம் எழுதி வளர்த்த தொடர் கதையை அவர் குறிப்பிட்டார். "திலகம் பத்திரிகையிலே எழுதினேள், இல்லையா? கலாஸ்ரீயும் ஜெய்வீராவும் எழுதினதுக்கு இடையிலே ஒரு வாரம் நீங்க எழுதியிருந் தேளே, நன்னாத்தான் இருந்தது; என்ன குறை அதிலே?"

பிரமீளா கலகலவென்று வெள்ளை உள்ளத்தோடு சிரித்தாள். "ஒரு விஷயம் நன்றாயில்லை, பிடிக்கவில்லை என்பதை இதைவிட நாசூக்காக வேறு ஒருத்தரும் சொல்ல முடியாது ஸார்!" என்றாள்.

"அடுத்தாற்போல் எந்தப் பத்திரிகையில் உங்கள் தொடர்கதையை எதிர்பார்க்கலாம்?" என்று கிண்டலை மறைக்காத தொனியில் கேட்டார் பத்மநபான்.

"ரொம்பக் கோபமா இருக்கீங்க போலிருக்கே" என்றாள் பிரமீளா.

"நான் என்ன மகாத்மா காந்தியா? எனக்கு ஏன் கோபம் வரக் கூடாது?" என்றார் பத்மநாபன். "சினிமாவில் நான் நடிக்க முன்வந்தால் சிரிப்பாயிருக்காதா உங்களுக்கு?"

"அப்படி யிருக்கும்போது சினிமா நடிகையான நான் எதற்காகப் பேனா பிடிக்கணும்னு கேட்கிறீங்க?"

"நீங்க எழுதறதிலே தப்பில்லை அம்மா. ஆனால் எழு தணும் என்கிற வேகமும் துடிப்பும் பரபரப்பும் உங்களுக்கே ஏற்பட்டு எழுதணும். எவனோ கேட்டுண்டான் என்கிறதுக் காக எழுதறதும் ஓர் எழுத்தா?"

"ஸார்! உங்களுடைய முதல் கேள்விக்கு உங்களுடைய இரண்டாவது கேள்வியே பதில் சொல்லிடுச்சு. நான் எழுதக்கூட இல்லை, என் பெயரைப் பயன்படுத்திக் கொள்ள அனுமதிச்சேன், அவ்வளவுதான். இப்போ இதுக்குப் பதில் சொல்லுங்க: -நான் இப்படி செய்ததாலே தமிழ் இலக்கியத்துக்குப் பெரிய ஆபத்து ஏதோ வந்து விட்டதாக உண்மையிலேயே நீங்க நம்பறீங்களா? நான் எழுதினதாகச் சொல்லப்பட்டதே அது மாதிரி நூறு கதைகள் வரலாம்; ஆனால் 'பத்மம்' என்ற பெயரிலே நீங்க ஒரு நாவல் எழுதினால் போதும், அந்த ஒரு நாவல் இந்த நூறு தொடர்கதைகளால் ஏற்பட்ட இழுக்கைத் துடைத்து எறிந்து விடும். ஆக மொத்தம் எதுக்காக நீங்க பயப்படறீங்க?"

"பயப்படத்தான் வேண்டும், தாயே!" என்றார் பத்மநாபன்.

"ஸார்! தயவுசெய்து என்னைத் 'தாயே' 'அம்மா' என்றெல்லாம் கூப்பிடாதீங்க! எனக்குப் பயமாயிருக்கு!"

''பெண்கள் எல்லோரையும் அன்னையாகப் பாவிப்பது நமது பண்பாடு. வயது வந்த யாரையும் தாயே என்று அழைப்பதில் தவறில்லையே?''

''பண்பாடு இருக்கட்டும் ஸார்; என் ஸ்டார் வால்யூ பற்றித்தான் எனக்குக் கவலை! 'தாயே, தாயே!' என்றால் ஒவ்வொரு வருஷமும் பட்ஜெட் வெளியானவுடன் பங்கு மார்க்கெட் சரியறமாதிரி என் ஸ்டார் வால்யூவும் சரிஞ்சுடும். பிரமீளான்னே கூப்பிடலாமே?''

''சரி பிரமீளா! அப்படியே ஆகட்டும்.''

''நீங்க ஏதோ சொல்ல வந்தீங்க; குறுக்கே பேசிட்டேன்...''

''ஆமாம், உங்களுக்குப் பதிலா ஒருத்தரைக் கதை எழுத அனுமதிக்கிற நீங்கள், உங்களுக்குப் பதிலாக உங்க செக் புஸ்தகத்தில் உங்கள் கையெழுத்தைப் போட ஒருவரை அனுமதிப்பீங்களா?''

''நான் ஏமாந்து போனால்தான் ஒருத்தர் அந்த மாதிரி செய்ய முடியும்.''

''செக் புத்தக விஷயத்திலே நீங்கள் ஏமாந்து போனால் தான் நடக்கும். ஆனால் கதை எழுதற விஷயத்திலே உங்களை நீங்களே ஏமாற்றிக் கொள்ளவும் பிறரை ஏமாற்றவும் தயாராகி விடுகிறீர்களே, ரொம்பச் சுலபமாக!''

''அதிலே எனக்குப் பணம் நஷ்டம். இதிலே யாருக்கு என்ன நஷ்டம்?''

''சமூகத்துக்கே நஷ்டம். தரக் குறைவான, ஆபாசமான கதை கட்டுரைகளை எழுதுகிறவர்கள்கூட உங்களைப் போல்தான் வாதம் புரிகிறார்கள். 'இந்த ஒரு கதையை நான் எழுதிவிட்டால் சமூகம் கெட்டுக் குட்டிச் சுவராகப் போய்விடப் போகிறதா?' என்று கேட்கிறார்கள். ஒவ்

வொருவரும் இப்படியே சமாதானம் சொல்லிக் கொண்டு ஆபாசக் களஞ்சியங்களை உருவாக்குகிறார்கள்.''

''நானும் தெரியாமல்தான் கேட்கிறேன், ஒரு மோசமான கதையைப் படிப்பதாலோ ஓர் ஆபாச சினிமாவைப் பார்ப்பதாலோ மனிதன் மட்டமானவனாகி விடுவானா சார்? அப்படியானால் சமூகத்தில் கயவர்களைத் தவிர வேறு யாரையுமே பார்க்க முடியாது!''

''உங்களுடைய வாதத்தை நான் ஒப்புக்கொள்வதாகவே வைத்துக்கொள்வோம். தரக் குறைவான எழுத்தினால் சமூகத்துக்குக் கேடு இல்லை என்றால், உயர்தரமான எழுத்தினால் சமூகத்துக்கு நன்மையுமில்லை என்றாகிறது. அதாவது எழுத்துக்குச் சக்தியே இல்லை என்று அர்த்தம்!

''ஆனால் சரித்திரம் அப்படிச் சொல்லவில்லை, பிரமீளா! அடிமைத்தளை ஒழிய 'அங்கிள் டாம்ஸ் காபின்' என்ற நாவல் பெருந் துணை புரிந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. பங்கிம்சந்திரரின் எழுத்து வங்கத்தில் புரட்சிகரமான மாறுதல்களை ஏற்படுத்தியது. பாரதியாரின் பாடல்கள் சுதந்திரக் கனலைக் கொழுந்து விட்டு எரியச் செய்ய வில்லையா? கல்கியின் சிவகாமியின் சபதம் பிரசுரமான பிறகு அதன் காரணமாக எத்தனை இல்லங்களில் சதங்கை ஒலி கேட்க ஆரம்பித்தது தெரியுமா? அந்த நாவலால் தமிழகத்தின் தொன்மையான சிற்பக் கலையில் புதிய ஆர்வம் மக்களுக்கு உண்டாகவில்லையா? அரிஸ்டாட்டி லும் ஸாக்ரட்டீஸும் பிளேட்டோவும் எழுதியவை இன்றளவும் மனித நாகரிக வளர்ச்சிக்குத் துணை புரிந்து வருகின்றன அல்லவா? ஆக, எழுத்துக்குச் சக்தி இல்லை என்று எப்படிக் கூற முடியும்?''

**உ**ணர்ச்சியுடன் அவர் பேசி முடித்தபோது பிரமீளா சுற்றுச் சூழலில் இருந்த மலைகளுடன் போட்டியிட்டவாறு

மலைத்து நிற்க, பத்மநாபன் கரத்திலிருந்த விஸிட்டிங் 'கார்டை வாங்கி அவளிடம் தந்தாள் அம்புஜம். 'இவர் எப் போதுமே இப்படித்தான்; உணர்ச்சி வசப்பட்டு விட்டால் கொஞ்சம் படபடன்னு பேசிவிடுவார். அதை ஒண்ணும் நீங்க பொருட்படுத்த வேண்டாம். அடுத்த தடவை நவராத்திரி கொலுவைக்கிறச்சே என்னை மறக்காதீங்கோ'' என்றாள்.

பிரமீளா இளநகை புரிந்து, ''இவருக்கா மாமி நான் நவராத்திரி அழைப்பு அனுப்பணும்? உங்க பேரையும் இதில் எழுதித் தந்துட்டா மறக்காமல் இருக்கலாம்'' என்று கூறியபடியே பத்மநாபனிடம் விஸிட்டிங் கார்டைத் திருப்பித் தந்தாள். ''ஸார்! உங்க ஒய்ஃப் பெயரை மேலே எழுதுங்க; அப்புறம் கார்டுக்குப் பின்புறம் உங்க கையெழுத் தையும் போட்டுத் தாங்க, ப்ளீஸ்!''

அவர் அவள் கோரிக்கைக்குக் கீழ்ப்படிய, பிரமீளா அம் புஜத்திடம் பேச்சைத் தொடர்ந்தாள்; ''ரொம்ப நாளாகவே நான் இவருடைய ஃபான். 'முழுமை' என்ற தலைப்பிலே ஒரு நாவல் எழுதினாரே அது ஒண்ணு தவிர பாக்கி எல்லாத்தையும் படிச்சிருக்கேன். அந்த ஒரு புத்தகம் மட்டும் எத்தனையோ முயற்சி பண்ணியும் எனக்குக் கிடைக்கவே யில்லை. முழுமையைத் தேடி அலையறேன்!''

''அதைப் பூஜை அறையில்தான் கண்டுபிடிக்க முடியும் அதுதான் நாவலின் 'தீம்'கூட. இப்போ சத்தியா அது அச்சில் இல்லை. என்னிடம் இருக்கிற பர்ஸனல் காப்பியை அனுப்பறேன் உங்களுக்கு'' என்றார் பத்மநாபன்.

விஸிட்டிங் கார்டை வாங்கிக் கைப் பையில் போட்டுக் கொண்டாள் பிரமீளா. அவள் பக்கத்தில் இத்தனை நேரமாகப் பொறுமையின்றி நின்றுகொண்டிருந்த அவள் தாயார். ''ம்...ம் போகலாம். கூட்டம் சேர்ந்துவிடும்'' என்றாள்.

"போகலாம், அம்மா!" என்று கடுப்புடன் அலுத்துக் கொண்ட பிரமீளா, பத்மநாபனிடம் கூறினாள்: "சின்னத் தனத்தையே எல்லாரும் தினம் தினம் பார்த்துக் கொண்டு ஆற அமரக் காரியங்களைச் செய்கிறோம். உயர்ந்த மனிதர்களை எப்போதோ ஒரு முறை அபூர்வமாகச் சந்திக்கிறோம்; அப்போது அவசரப்படும்படியாக இருக்கு! வேடிக்கைதான்!"

"நான் இன்றைக்கு உயர்ந்த மனிதனாக உங்களிடம் நடந்து கொள்ளவில்லை, அதற்காக வருத்தப்படுகிறேன்" என்றார் பத்மநாபன்.

"இப்போ மனம் விட்டுச் சொல்றீங்களே, வருத்தப்பட றேன்னு அதுவே உயர்ந்த குணத்தைத்தானே காட்டுகிறது? மேலும் நாம் என்ன சிண்டைப் பிடிச்சுக்கிட்டுச் சண்டையா போட்டோம்? ஒரு ஹெல்தி டிஸ்கஷன் அவ்வளவுதானே?" என்ற பிரமீளா, "ஹலோ பாப்பா!" என்று விசுவிடம் ஒரு விநாடி குனிந்து கொஞ்சினாள். பின்னர் அனுவையும் மீனாவையும் தட்டிக் கொடுத்துப் புன்முறுவலுடன் 'டாட்டா' சொல்லிவிட்டுக் கிளம்பினாள்.

அவள் தலை மறைந்ததும், "எத்தனை நல்ல மாதிரியா இருக்கா? அவகிட்டே போய் எதுக்கு உங்க இலக்கிய சர்ச் சையை யெல்லாம் வைச்சுக்கறேள்?" என்றாள் அம்புஜம்.

"யாராவது ஒருத்தர் சொல்லத் தானேடி வேணும்? இவள் வீட்டுப் பூனை குட்டி போட்டால்கூட அது பெரிய நியூஸ் ஆயிடறது, இந்தக் காலத்திலே. 'எத்தனை குட்டிகள்? அவற்றுக்கு என்ன பெயர்?' என்று எல்லா விவரமும் அச்சில் வந்துடறது."

"அது மட்டுமா? பூனைக் குட்டிகளை மடியில் வைச்சிண்டிருக்கிற மாதிரி ஃபோட்டோகூடப் பிடிச்சுப் போட்டுடுவா" என்றாள் மீனா.

*"பத்திரிகைக்காரா அடிக்கிற கூத்துக்கு இவள் என்ன பண்ணுவாள், பாவம்! எத்தனை சகஜமா பழகறா பார்த்தேளோ?"*

*"அவள் பக்கத்திலேயே ஒரு கடுவன் பூனை அவசரப் படுத்தியபடியே நின்னுண்டிருந்ததே அதுதான் அன்தாங்க பிள்!" என்று கடைசி வார்த்தையில் ஆங்கிலத்தையும் தமிழையும் கலந்து உச்சரித்தாள் மீனா.*

*"மீனா! எத்தனை தடவை உனக்குச் சொல்லியிருக்கேன், முதல் பார்வையிலேயே ஒருவர் மீது நல்லெண்ணத்தையோ அல்லது வெறுப்பையோ உருவாக்கிக் கொள்வது தவறு என்று?"*

*"ஆமாம், அந்த டிபன் காரியரைப் பற்றி ஓர் அபிப்பிரா யம் ஏற்பட அவளை எட்டு தரம் பார்க்கணுமாக்கும்" என்று மீனா தன் தாயிடம் முணுமுணுத்ததானது படகு கிளப் அதிகாரி கூறிய வார்த்தைகளில் அடங்கிவிட்டது, நல்ல வேளையாக!*

*"ஸார், போட் ரெடி!" என்றார் அவர்.*

*"நல்ல படகாய்ப் பார்த்துக் கொடப்பா!" என்றார் பத்மநாபன். "அதோடு துடுப்புப் போடறதுக்கு ஓர் ஆளையும் அனுப்பு. எங்களில் யாருக்கும் படகு ஓட்டவும் தெரியாது; படகு கவிழ்ந்தால் நீந்தவும் தெரியாது!"*

*"ஐயோ! இதென்ன அபசகுனமா பேசிண்டு!" என்றாள் அம்புஜம்.*

★ ★ ★

# 9. சுருதி சேர்ந்தது

அம்புஜமும் குழந்தைகளும் படகில் அமர்ந்து விட்டார்கள். பத்மநாபன் மட்டும்தான் பாக்கி. அவரும் ஒரு காலைத் தூக்கிவிட்டார், படகினுள்ளே மெல்ல இறங் கும் நோக்கத்தில். சரியாக அந்த விநாடியில், "உங்களை எங்கேயோ பார்த்திருக்கேனோ?" என்று பின்னால் ஒரு குரல் கேட்கவே, தடுமாறிப் பின்னர் சமாளித்து நிமிர்ந்து திரும்பினார் பத்மநாபன்.

"ஆச்சு, மறுபடியும் ஓர் அபசகுனம்" என்று அடங்கிய குரலில் அம்புஜம் அலுத்துக் கொண்டாள். "கிளம்புற சமயத்தில் ஓர் அசட்டுக் கேள்வி; அதுவும் ஒற்றைப் பிராமணனிடமிருந்து."

"அம்மா, 'அநாவசியமாத் தாமதமாகிறதே' என்று வேணுமானால் கவலைப்படு. நானும் சேர்ந்துக்கறேன். சகுனமெல்லாம் பார்த்துச் சங்கடப்படாதே" என்றாள் மீனா, தண்ணீரை அளைந்து கொண்டே. அவள் மனம் இன்று ரொம்ப உற்சாகமாக இருந்தது. அதற்குக் காரணம் இல்லாமலும் போகவில்லை.

"விழத் தெரிஞ்சாரேடி உன் அப்பா!" என்று அம்புஜம் கூறியதை அவள் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை. நீரையும் வானையும் மலைச் சிகரங்களையும் மதர்ப்புடன் வளர்ந்திருந்த மரங்களையும் ஒன்றுசேரப் பார்த்தபோது அந்த ஒரு புலனின் ஆணைக்குட்பட்டு மற்ற நான்கு புலன்களும் செயலற்றுப் போயின போல் அவள்

மெய்ம்மறந்து கண் விழிகளை மட்டுமே நாலாபுறமும் சுழல விட்டுக் கொண்டிருந்தாள்.

கரையில் பத்மநாபன் கேட்டார்: "யாரு, திருச்சேறை பஞ்சாபகேசன்தானே?" ஒற்றை நாடியான மனிதர், உச்சிக் குடுமி, விசிறி மடிப்புடன் சரிகை அங்கவஸ்திரம், பஞ்சக் கச்சம் வைத்துக் கட்டிய வேஷ்டி, நடுத்தர வயதைக் கடந்து விட்ட தோற்றம். பார்த்த உடனேயே அடையாளம் கண்டு கொண்டார் பத்மநாபன்.

"ஆமாம்! நீங்க... நீங்க...?"

"பத்மநாபன்... அன்னம் பத்திரிகை!"

"ஓஹோ! பார்த்தேளா! அதுதான் எங்கேயோ பார்த்த மாதிரி இருக்கே, இருக்கேன்னு யோசிச்சுண்டு இருக்கேன்."

"எங்கே, இந்தப் பக்கம்? ஏதாவது கச்சேரியா?"

"ஆமாம். பெரியகுளத்திலே பெரிய மிராசுதார். அவா வீட்டிலே கல்யாணக் கச்சேரி. அது முடிஞ்சதும் கொடைக் கானல் கிட்டத்தில்தான் இருக்குன்னு கேள்விப்படவே பார்த்துட்டுப் போகலாமேன்னு பஸ் ஏறி வந்தேன். இங்கே என்னடான்னா குளிர் நடுக்கி எடுக்கிறது. எலும்பு வரைக்கும் குளிர்றதுங்காணும்!"

"எலும்பு வரைக்கும் என்ன வரைக்கும்? உமக்குத் தோலை விட்டா அடுத்தது எலும்புதானே? காலமே இங்கே வயலின் சாதகம் பண்ணினீரா? சங்கதியெல்லாம் சுலபமா விழுமே?"

"கிண்டல் பண்ணறேள்!" என்று நீட்டி முழக்கிக் கூறிக் கண் சிமிட்டினார் பஞ்சாபகேசன்.

"கிடக்கு; படகிலே ஒரு ரவுண்டு சுத்திட்டு வரலாம், வரேளா?"

"அதுக்கென்ன, போயிட்டு வந்தாப் போச்சு" என்று கூறிய அவரைக் கைத் தாங்கலாகப் பற்றி இறக்கி அமரச்

செய்துவிட்டுப் பத்மநாபன் தாமும் உட்கார்ந்து கொண்டார். "அம்புஜம்! ஸாரைத் தெரியுமில்லையா உனக்கு?" என்று கேட்டு அறிமுகப்படுத்தி வைத்தார் தம் மனைவிக்கு. "பின்னோடேயே இருந்தால் பொழுது போறதே தெரியாது நமக்கு. ரொம்பத் தமாஷ் பேர்வழி. ஒரு சமயம் இவர் என்ன பண்ணினார் தெரியுமா? கல்யாணத்திலே முகூர்த்தம் முடிஞ்சதும் எல்லாரோடேயும் பந்தியில் சாப்பிட உட்கார்ந்தார். லாடு பரிமாறினார்கள். இவருக்கு ஸ்வீட்னா ரொம்பப் பிரியம். ஒண்ணுக்கு ரெண்டாகச் சாப்பிட்டார். அப்படியும் ஆசை தீரலை. நாலு லட்டு பொட்டலம் கட்டிக் கொடுங்கோன்னு கேட்டு வாங்கிண்டார். மத்தியானம் ஒரு குட்டித் தூக்கம் போட்டார். சாயங்காலம் அதே கல்யாணத்தில் ரிஸப்ஷன் கச்சேரி. பாடகர், மிருதங்க வித்வான், இவர் எல்லாரும் மேடையில் உட்கார்ந்தாச்சு. வயலின் பெட்டியைத் திறந்து வாத்தியத்தை எடுத்தார். வர்ணம் முடிஞ்சுது. திடீர்னு பாடகர் ஒரு துள்ளுத் துள்ளி எழுந்தார். வேஷ்டியை உதறிண்டு தத்திங்கிண்ணத்தோம் போட்டு மேடையில் குதிச்சார். அப்புறம் எல்லோருமே பரபரப்போடு எழுந்து மேடையை விட்டு இறங்கிட்டா. காரணம் என்ன தெரியுமோ? பந்தியிலே கேட்டு வாங்கிய லட்டுப் பொட்டலத்தை மனுஷன் வயலின் பெட்டிக்குள் பத்திரப்படுத்தி வைச்சிருக்கார்! மேடை பூரா ஒரே எறும்பு!"

அம்புஜமும் அனசூயாவும் புரிந்து கொண்டு ஒரேயடியாகச் சிரித்தார்கள்; விசு ஏதோ புரிந்ததுபோல் நடித்துச் சிரித்தான். மீனா மட்டும் சிரிக்கவில்லை.

**ப**டகு மெல்ல நகர்ந்து செல்ல ஆரம்பித்ததுமே, மீனாவின் இதயமும் இனிய கற்பனைகளில் மிதக்க ஆரம்பித்துவிட்டது. அந்தக் கற்பனையில் பங்குபெற ரங்கனையும் அவள் கைநீட்டி வரவேற்று விட்டாள்! அவள் உலகமே இப்போது அலாதியான ஒன்றாக இருந்தது!

"இவர் சொல்றது ஒண்ணும் பொய்யில்லை!" என்று உறுதிப் படுத்தினார் திருச்சேறை.

"சின்ன வயசிலிருந்து எனக்கு ஸ்வீட் ரொம்பப் பிடிக்கும். அந்த நாளிலே ஹோட்டலில் பில் போட மாட்டான். 'பஞ்சாமிக்குப் பத்தணா'ன்னு என் பேர் சொல்லிக் கத்துவான். 'ஐயோ! பத்தணாவுக்கா இந்தப் பிள்ளையாண்டான் சாப்பிட்டான்?' என்று யாராவது நினைத்துவிடக் கூடாதே என்பதால் தனித் தனியா நாலு ஹோட்டலிலே நுழைந்து நாலு விதமான ஸ்வீட்களைச் சாப்பிட்டுவிட்டு வருவேன்!"

இந்தச் சமயத்தில் கரையோரமாகச் சில வெள்ளைக் காரக் குழந்தைகள் நீந்திக் கொண்டிருப்பது பத்மநாபன் கண்களில் பட்டது.

"அதோ பார், அம்புஜம்! எத்தனை லாகவமா அந்தக் குழந்தைகள் நீஞ்சறா? அந்த மாதிரி சின்ன வயசிலேயே பழக்கிட்டா கவலையில்லை" என்றார்.

"பட்டணத்திலே எங்கே போய் நீஞ்சப் படிக்கிறது? கூவம் தானே இருக்கு?" என்றாள் அம்புஜம்.

"ஆடிப் பெருக்கின்போது ரயில் மேலேயிருந்து காவிரி யில் குதிப்போம் அந்த நாளிலே!" என்றார் திருச்சேறை பஞ்சாமி.

"இன்னிக்கும் இளம் காளைங்க அங்கேயெல்லாம் குதிச்சு நீஞ்சத்தான் செய்யறாங்க" என்றான் படகோட்டி. "ஆனா இங்கே நல்லா நீஞ்சத் தெரிஞ்சவங்க பாடுகூடத் திண்டாட்டம்தான்! அதோ போர்டு போட்டிருக்கு பாருங்க, என்ன எழுதியிருக்கு?"

பத்மநாபன் தொலைவில் இருந்த அறிவிப்புப் பலகை யைச் சிரமப்பட்டுப் படித்தார். "ஸ்விம் அட் யுவர் ஓன்-ரிஸ்க்!' ஏம்பா, பச்சைப் புள்ளைங்க நீஞ்சுது. 'ஆபத்துலே

மாட்டிக்கிட்டா நாங்க பொறுப்பாளி இல்லை'ன்னு போர்டு போட்டுப் பயமுறுத்தறாங்களே!"

"அந்தக் குழந்தைங்க வெள்ளைக்காரப் புள்ளைங்க ஸார்! குளிர் தேசத்திலேயிருந்தே வந்தவங்க. பெற்றவங்க பக்கத்தில் இருக்க, பையப் பைய இறங்கிக் கரையோர மாகவே நீஞ்சிப் பழக்கப் படுத்திக்கிடுவாங்க. குளிர் அவங்களுக்கு லட்சியமில்லே. நீங்க தண்ணியைத் தொட்டுப்பாருங்க, எப்படி ஜில்லுன்னு இருக்குன்னு."

"ஐஸ் மாதிரிதான் இருக்கு" என்று ஒப்புக் கொண்டார் பத்மநாபன், அவன் கூறியபடி செய்து பார்த்துவிட்டு.

"இப்படித்தான் ஒரு மனுஷன் விஷயம் தெரியாமே ரெண்டு வருஷங்களுக்குமுன் காலங் கார்த்தாலே வந்து குளிக்கலாம்னு கரையிலே யிருந்து தொப்புன்னு குதிச் சுட்டான்."

"அடடா! அப்புறம்?"

"அப்புறம் என்ன? குளிரிலே கையும் காலும் விரைச்சுப் போச்சு; அசைக்க முடியலே! யாரும் வந்து காப்பாத்தறதுக்கு முன்னாடி கைலாசம் போய்ச் சேர்ந்துட்டான்."

"சூச்சூச்சூ!"

"அல்லி, ஆம்பல் கொடிகள் வேறே இருக்கு. அவற்றிலே கால் மாட்டிக்கிட்டாலும் ஆபத்துத்தான்!"

"ரொம்ப ஆழமோ?" என்றார் பத்மநாபன்.

"பத்து ஆள் ஆழம் தாராளமா இருக்கும்" என்றான் படகோட்டி. விசுவைச் சுற்றியிருந்த அம்புஜத்தின் கரம் இறுகியது. "பழனிக்கு இங்கேயிருந்துதான் தண்ணீர் கொண்டு போறாங்க."

'பத்மினி' என்று பெயர் கொண்ட ஒரு படகு அப்போது அவர்கள் படகருகே எதிர்த் திசையில் சென்றது.

"படகுகளுக்குக் கூட சினிமா நட்சத்திரங்களின் பெயர் களைத்தான் வைக்கிறார்கள்" என்றார் பத்மநாபன்.

"குலமா குணமா ஷூட்டிங்குக்குப் பத்மினி வந்தபோது அதன் ஞாபகார்த்தமாக அவள் பெயரைப் படகுக்கு வைத்திருப்பார்கள்" என்றாள் அம்புஜம்.

"அவங்க வரவேயில்லை அம்மா!" என்றான் பட கோட்டி. தனக்கு விஷயஞானம் இதில் மிகுதியாக இருப்பது குறித்து அவனுக்கு ஒரே மகிழ்ச்சி. "கதையிலே தான் பத்மினியும் சிவாஜியும்கூட இங்கே வருவதுபோல் இருக்கிறது. ஆனால் ஷூட்டிங்குக்கு இங்கே வந்தது வாணிஸ்ரீயும் ஜெய்சங்கரும் மட்டும்தான். சிவாஜி-பத்மினி காட்சிகளை ஸ்டுடியோலேயே எடுத்துச் சமாளிச்சுட்டாங்க. அவுட்டோரில் ஜெய்-வாணிஸ்ரீ ஜோடியையும் இன்டோரில் சிவாஜி-பத்மினியையும் மாறி மாறிக் காட்டறச்சே, நாலு பேருமே இங்கே வந்திருந்த மாதிரி சினிமாப் பார்க்கிற வங்களுக்கு ஒரு பிரமை ஏற்படுது!"

"ஜெமினி கணேசனுக்குக் கூட இங்கு வீடு இருக்காமே?" என்றார் திருச்சேறை.

"உம்... பேர் ஷோலா ஃபால்ஸ் போறச்சே நீங்க பார்க்கலாம்."

"கொடைக்கானலில் பார்க்க வேண்டிய காட்சிகள் பட்டியலில் அவசியம் அதையும் சேர்த்துக்க வேண்டியது தான். மெட்ராஸில் எந்த டூரிஸ்ட் பஸ்ஸும் சினிமா நட்சத்திரத்தின் வீட்டு வாசல்லே நிற்காமல் போவதில்லை."

ஏரிக் கரையோரம் அமைந்திருந்த சாலையில் ஒரு பெரிய கார் பவனி வந்தது. "அதோ பிரமீளா போறாளே! டாட்டா சொல்லுடா விசு!" என்றாள் அம்புஜம். தானும் கையசைத்துப் பிரமீளாவின் கவனத்தைக் கவர்ந்து விட்டாள். பிரமீளா சட்டென்று நிமிர்ந்து ஜன்னல்

வழியாகப் பின்புறம் எட்டிப் பார்த்துப் பதிலுக்கு 'டாட்டா' கூறியதும் அம்புஜத்துக்குப் பெருமை பிடிபடவில்லை.

"நீ ஏன் பிறந்தநாளைக்குக் கூப்பிடும்படி கேட்கலை? நவராத்திரியோடு நிறுத்திண்டுட்டே?" என்றார் பத்மநாபன்.

"இவள் ஒண்ணும் கேக் வெட்டிப் பிறந்த நாள் கொண் டாடறதில்லை. எனக்குத் தெரியும். நளினி சொல்லி யிருக்கா. நாலு பேரைக் கூப்பிடற"துன்னா நவராத்திரிக்கு மட்டும்தானாம்!"

"இருக்கும், இப்போதெல்லாம் கேக் வெட்டிப் பிறந்த நாள் கொண்டாடற பழக்கம் அரசியல்வாதிகளுக்குப் படிஞ்சு போச்சு. சினிமா நட்சத்திரங்கள் அதை விட்டுட வேண்டியதுதானே?"

"குழந்தையை உங்களுக்கு ரொம்ப நாளாத் தெரி யுமோ?" என்று கேட்டார் திருச்சேறை பஞ்சாபகேசன்.

"குழந்தையா, எந்தக் குழந்தை?"

"பிரமீளாவைத்தான் கேட்கிறேன்."

"இன்றைக்குத்தான் அறிமுகமாச்சு."

"குழந்தை ரொம்ப நல்ல மாதிரி."

"என்னய்யா, மடியிலே வைச்சிண்டு சீராட்டினவன் மாதிரி சதா குழந்தை குழந்தைன்னு சொல்லிண் டிருக்கேள்?"

"அப்படிச் செய்திருக்க வேண்டியவன்தான், ஏதோ காலத்தின் கோளாறு ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு திசையில் போயிட்டோம்."

"என்ன சொல்றேள், நீங்க?" என்றார் பத்மநாபன் திடுக்கிட்டு.

"அந்தக் கனகா நம்ம ஊர் பக்கம்தான் சுவாமி. ரெண்டு கச்சேரிகூடப் பண்ணிக் கேட்டிருக்கேன். அப்புறம் தான்

புரிஞ்சுது, இவளுக்கும் சங்கீதக் கலைக்கும் ரொம்பத் தூரம்னு. வேறு ஒரு கலைக்காகவே பிறந்து வளர்ந்த வள்னும் தெரிஞ்சு போச்சு. அதிலே இவளுக்கு நிகர் யாருமில்லே!'' பஞ்சாபகேசன் கண் சிமிட்டினார்.

''ஓகோ, அப்படின்னா பால்யத்திலே கனகாவை நிறைய சந்திச்சிருக்கேள்!''

''சந்திக்கிறதாவது? மாசக் கணக்கில் அவளுடைய மந்தகாசத்தில் மயங்கிக் கிடந்திருக்கிறேன், சுவாமி! அந்தக் காலத்திலே அவள் ரதின்னா அதிலே அணுவளவும் பொய் யில்லை. எங்கிட்டே அவளுக்கு அலாதிப் பிரியம்!'' பஞ்சாபகேசனின் குரல் தணிந்து கொண்டே வந்தது. பத்மநாபனுக்கு மட்டும் கேட்கிற குரலில் மேற்கூறிய வற்றைச் சொன்னார்.

''வெளுடா, ராஜா, வெளு!'' என்றார் பத்மநாபன், நண்பர் முதுகைத் தட்டிக் கொடுத்து.

''இன்றைக்குப் படகிலே உங்களோடு சுற்றி வருகிற மாதிரி நேற்று அவர்களோடு ஒரு ரவுண்டு வந்தேன்!''

''பலே! அப்போ பழைய தொந்தம் இன்னும் விடவில்லை?''

''கனகத்துக்கு விட்டுப் போச்சு. அவளுக்கு உதறல் கண்டுடுத்து. நான் இப்போ அப்பா உரிமை கொண்டாடி பிரமீளாவுக்கு இருக்கிற சொத்திலே பங்கு கேட்க வந்துடு வேன்னு பயம்! அடையாளம் தெரிஞ்சுக்காத மாதிரியே இருந்தாள். ஆனால் அப்போ பாருங்கோ, ஒரு அதிசயம்! குழந்தை ஏதோ ஏக்கத்தோடு என் முகத்தைப் பார்த்தது. தகப்பனார் இல்லாத குறைங்கறேன்! எழுதி வைச்ச மாதிரி முகம் காட்டிடுத்து.

'அம்மாவும் பொண்ணும் தனியாப் போறேள்... ஜாக்கிரதையாப் போங்கோ'ன்னு கரையில் நின்றபடி சொன்னேன்.''

''பிரமீளா என்ன நினைச்சுண்டாளோ? 'நீங்களும் வாங்களேன்'னாள். முன்னே பின்னே தெரியாத ஒருத்தரை இப்படி அழைக்கணும்னா அதுக்கு என்ன பேரு?''

''அதிகப்பிரசங்கித்தனமா?''

''கிண்டல் பண்ணறேள்!'' என்று ரப்பர் கயிறாக வார்த்தைகளை இழுத்துச் சொன்னார் திருச்சேறை. ''பாசங் காணும், ரத்த பாசம்! எனக்கு உடம்பு சிலிர்த்துப் போச்சு! 'அம்மா, குழந்தை'ன்னு அழைச்சுக் கட்டிண்டு அழணும் போலே இருந்தது!''

''யாரை? அம்மாவையா? குழந்தையையா?''

கேலியை லட்சியம் செய்யாமல் திருச்சேறை தொடர்ந்தார்: ''அவளையும் அறியாமல் ஏதோ உள்ளுணர்வு உந்தியிருக்கு சுவாமி, என்னைப் படகில் ஏற அழைக்கும்படி. மூக்கைக் கவனிச்சீரா? என்னுது மாதிரியே எடுப்பா இல்லையா? அவள் அம்மாவுக்கு ஏது அந்த மாதிரி மூக்கு? வெறும் குடை மிளகாய்! குழந்தை என் முகத்தையே பார்த்துண்டு துடுப்புப் போட்டாள். எத்தனை லாகவம்ங்கறேள்!''

''நீங்க வயலினில் 'போ' போடறதை விடவா?''

''நீங்க சொல்றதிலே ஒரு பாயிண்ட் இருக்கு. இல்லாட்டா வாய் வார்த்தையாகத்தான் என்றாலும்கூட 'உங்களை அப்பா மாதிரி நினைக்கிறேன்'னு சொல்வாளா?''

''ஓ! அந்த அளவுக்குப் போயிடுத்தா?''

''அப்புறம் பேச்சு வளர்ந்து, கனகமும் என்னோடு ரெண்டு வார்த்தை பேசினாள். ஆனால் பழைய விஷயங்கள் எதையும் அவள் சொல்லலை. நானும் ஞாபகப் படுத்தலை. பணம், நெஞ்சிலே இருக்க வேண்டிய மனசை உள்ளங்காலுக்கு மாற்றிவிடும். அந்த நாளில் நான் சம்பா

திக்காத பணமா, கனகாவின் மடியில் கொட்டாத பணமா? பழைய கதை எதுக்கு? சொத்தைப் பறிச்சுண்டுடுவேன்னு இன்றைக்கு அவள் பயப்படறாள்னு தெரிஞ்சுபோச்சு. அவள் மனசைப் புரிஞ்சுண்ட பிறகும் அவளைச் சங்கடத்துக்கு உள்ளாக்குவானேன்? நிம்மதியா அவளே அனுபவிச்சுட்டுப் போகட்டும்னு விட்டுட்டேன்.''

''உண்மையிலேயே இது தியாகம்தான்'' என்றார் பத்மநாபன். ''உங்க மனசே தங்கம்; பொன்னுக்கும் பணத்துக்கும் ஆசைப்படலை. இன்னொருத்தனா இருந்தால் பயமுறுத்தி அகப்பட்டதைச் சுருட்டாமல் விடமாட்டான்.''

படகு கரைக்கு வந்து சேர்ந்தது.

''எங்கே ஜாகை?'' என்று கேட்டார் பத்மநாபன்.

''அருணகிரி விலாஸ். ஊர் திரும்ப இன்னும் இரண்டு நாட்களாகும்னு கார்டு போட்டுட்டேன். கனகமும், பிரமீளாவும் ஹில்டனில் தங்கியிருக்கா.''

''நாங்க ஹாப்பி ஹாலிடே. அதோ ஹோட்டல் பஸ் காத்துண்டிருக்கு, வரட்டுமா?''

**அ**வரிடமிருந்து கழற்றிக் கொள்ள அவ்வாறு சொன்னாரேயொழிய பஸ் கிளம்ப இன்னும் நீண்ட நேரம் இருந்தது. சற்றுத் தூரம் போனதும் விசுவையும் அனசூயாவையும் குதிரைகளின் மேல் ஏற்றிவிட்டார் பத்மநாபன். ''ஜாக்கிரதையாக அழைத்துக்கொண்டு போப்பா'' என்று குதிரைக்காரனிடம் சொன்னார். ''நடந்து போனாலே போதும்.''

அம்புஜமும் மீனாவும் அவருடன் சேர்ந்து காலாற ஏரியைச் சுற்றி நடந்தார்கள்.

''ஆரம்பிச்சான்னா முடிக்கவே தெரியாது பஞ்சாமிக்கு'' என்றார் பத்மநாபன். ''இவன் பிறந்து வளர்ந்ததிலேயிருந்து

இன்னும் சாகறதுக்கு முன்னால் செய்து முடிக்க வேண்டிய காரியங்கள் வரை எல்லாவற்றையும் சொல்லியாகணும்.''

''பஸ் கண்ணிலே தென்பட்டதோ, பிழைச்சோமோ? அது கிளம்பப் போறதுன்னு ஒரு சாக்கு அகப்பட்டது, அப்பாவுக்கு. நல்ல ஐடியா!''

பத்மநாபன் எதையோ நினைத்துச் சிரித்தார். ''மதுவிலக்கை ரத்துப் பண்ணினார்கள் பாரு; அன்றைக்கு இந்த மனுஷனுக்கு ஒரு வேடிக்கையான அனுபவம் நேர்ந்தது.''

''என்ன, என்ன?'' என்றாள் மீனா ஆர்வத்துடன்.

''அவரைப் பார்த்தாலே வேடிக்கையாக இருக்கு; மேற்கொண்டு தமாஷான அனுபவம் வேறேயா?'' என்றாள் அம்புஜம்.

''கேளு! கச்சேரிக்கு முன்னாடி, கிரீன் ரூமிலே சுருதி சேர்த்துண்டு இருக்கா. அப்போ ஒருத்தன் வந்து உட்கார்ந்துண்டு, 'ஃபாண்டா கொண்டு வரவா? காப்பி சாப்பிடறேளா'ன்னு உபசாரம் பண்ணினான். பஞ்சாமி, அவன் சங்கீத வித்வானோட வந்திருக்கிறதா நினைச்சுண்டு இருக்கான். சங்கீதவித்வான், மிருதங்கம் மார்க்கபந்துவோட சிஷ்யன் அவன்னு நினைச்சுண்டு இருக்கார். மார்க்கபந்து திருச்சேறை பஞ்சாமியோடு அந்தப் பயல் வந்திருக்கிறதாக எண்ணிண்டிருக்கார்.

''ஆச்சு, சுருதியெல்லாம் சேர்த்துண்டு மேடையிலே போய் உட்கார்ந்தாச்சு. இந்த ஆசாமியும்-யாரு? உபசாரமெல்லாம் பண்ணினானே அவன்-பாடகர் பக்கத்திலே வந்து உட்கார்ந்துண்டான்.

''கல்யாணசுந்தரம் வர்ணம்பாடினார். இவனும் ஜமாவா சேர்ந்துண்டான். அப்புறம் அவர் ராக ஆலாபனை ஆரம்பித்தார். இவன் விடலையே! அதற்கும் பின்பாட்டுப் பாட ஆரம்பிச்சுட்டான்!''

"தொலைஞ்சுது!" என்றாள் அம்புஜம்.

"கல்யாணசுந்தரத்தால் அதுக்கு மேல் தாங்க முடியலை. மெல்ல நம்ம திருச்சேறை பஞ்சாமிகிட்டே, 'உங்க ஆளை மேடையை விட்டு இறங்கச் சொன்னாத் தேவலையே' என்றார்.

" 'என் ஆளா? நான் இவர் உங்களோடு வந்திருக்கார் என்று நினைச்சுண்டிருக்கேனே' என்றார் பஞ்சாமி.

"இரண்டு பேரும் மிருதங்கம் மார்க்கபந்துவைப் பார்க்க, அவர் உதட்டைப் பிதுக்கினார்."

"நல்ல கூத்து" என்றாள் மீனா.

"பாக்கியையும் கேளு!" என்று சுவாரசியமாகத் தொடர்ந்தார் பத்மநாபன். "சபா காரியதரிசி வருகிற பெரிய மனுஷாளை வரவேற்க முதல் கேட்டருகே நின்னுண்டிருக்கார். ஒரு சமயம் மேடையை அவர் பார்த்தபோது பஞ்சாமி அவருக்கு ஜாடை காட்டி மேடைக்கு வரவழைச்சார். காதோடு ரகசியமாய்ச் சொன்னார், கச்சேரி செட்டுக்குச் சம்பந்தமில்லாத ஒருவர் மேடையில் உட்கார்ந்துண்டிருக்கிறதை.

"காரியதரிசி கீழே இறங்கிவிட்டார். அவனை எழுப்பறது தமக்குக் கௌரவக் குறைவுன்னு நினைச்சாரோ அல்லது பயந்துதான் போய்விட்டாரோ தெரியாது. வாசல்லே நின்று கொண்டிருந்த ஸ்கவுட்டிடம் போய் விஷயத்தைச் சொல்லி விரலால் ஆளைச் சுட்டிக்காட்டி அனுப்பினார்.

"அழகுதான்" என்றாள் அம்புஜம்.

"கிளைமாக்ஸ் இனிமேல்தான்!" என்றார் பத்மநாபன். அந்த ஸ்கவுட் என்ன செய்தான் தெரியுமா? நேரே திருச்சேறை பஞ்சாபகேசன் பின்னால் போய் நின்னுண்டான். 'ஸார், எழுந்திருங்க! கீழே இறங்குங்க!' என்று அதட்டினான். இவர் முகத்தைப் பார்க்கணுமே? உடம்பெல்லாம் வெலவெலத்துப்போய் வியர்த்துக் கொட்டி..."

பத்மநாபன் முடிக்கு முன்னரே அம்புஜமும் மீனாவும் மலைச் சரிவுகளில் எதிரொலிக்கிற மாதிரி பெரிதாகச் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள், அடக்க மாட்டாமல்.

''அடடா! அந்தச் சாரணன்தான் எவ்வளவு ஞானஸ்தன்'' என்றாள் மீனா, சிரிப்பு ஓய்ந்ததும்.

''பணம் கொடுப்பார்களா என்பது பற்றிக்கூடக் கவலைப் படாமல் கச்சேரி செட்டில் அழையாத விருந்தாளியாக வந்து சேர்ந்து கொண்டானே, அவனுக்கு நன்னா 'சுருதி' ஏறியிருந்தது! ஆக, மதுவிலக்கு ரத்தானதில் ஃபர்ஸ்ட் காஷுவால்டி நம்ம பஞ்சாமிதான்!''

தமாஷாகப் பேச்சு தொடர்ந்தது. சுமார் ஒரு மணி நேரத்துக்குப் பிறகு பஸ்ஸில் ஏறி ஹாப்பி ஹாலிடே ஹோட்டலுக்கு வந்து சேர்ந்தது பத்மநாபன் குடும்பம்.

**ப**ஸ்ஸை விட்டு இறங்கியதும் பக்கத்தில் ஒரு ஜீப்பில் நடராஜன் ஏறிக்கொள்ள யத்தனிப்பதைப் பார்த்தார் பத்ம நாபன். அருகே ஓர் இன்ஸ்பெக்டரும் இரு ஜவான்களும் வேறு நின்றார்கள்.

''என்ன ஸார்? அஃபிஷியல் பிஸினஸ்ஸா? ஹாலி டேன்னு சொல்லிண்டு வந்தேளே, பாவம்!'' என்றார் பத்மநாபன்.

''என்ன செய்யறது, சொல்லுங்க? கால்ஃப் கிளப் பக்கத் திலே ஒரு டிராஜடி. ரொம்பப் பயங்கரம்! திரும்பி வந்த பிறகு விவரமா சொல்றேன்'' என்று கூறிவிட்டு ஜீப்பில் ஏறினார் டி.ஐ.ஜி., ஸி.ஐ.டி. ஜீப் விரைந்தது.

'கால்ஃப் கிளப்' என்றதும் பத்மநாபனுக்கு அமிர்த லிங்கத்தின் நினைவு வந்தது. தமது அறைக்குச் செல்லும் போதே வழியில் அவன் அறை வாசலையும் கவனித்தார். கதவு பூட்டியிருந்தது!

★ ★ ★

# 10. தற்கொலை முனை

கல்யாணமாகி ஒரு வருஷத்துக்குள்ளாகவே வனஜா வுக்கும் தனக்கும் ஒத்துவராது என்பது தினகரனுக்குப் புரிந்து போய்விட்டது. தனக்கு மட்டுமென்ன, தன்மான முள்ள ஆண் பிள்ளை எவனாயிருந்தாலும் சரி, அவளைக் கணவனாக அடைந்திருந்தானேயானால் அவளுக்கும் அவனுக்கும் ஒத்து வராதுதான். அவள் எப்படிப்பட்டவள் என்பதை ஒரே வார்த்தையில் சொல்லி அவளை விட்டுப் பிரிந்துவிட அவனால் முடியும். ஆனால் அந்த வார்த்தை யைச் சொல்ல அவன் நாக் கூசியது. அவளை விட்டுப் பிரிய சுய கௌரவம் இடம் தரவில்லை.

இத்தகைய ஒரு நெருக்கடியில் அவன் அவளோடு தொடர்ந்து வாழ்ந்தான், வேறு வழியில்லாமல். இப்படிப் பட்ட நிலையில் அவனைச் சிக்க வைக்கத்தான் ஆரம்ப முதல் அவளும் திட்டம் போட்டாள் என்பதையும் அவன் புரிந்து கொண்டான்.

காதல் என்ற மூன்றெழுத்து ஒருவனைச் சர்வ வல்லமை பொருந்தியவனாகவும் செய்ய முடியும். முட்டாளாக்கி விடவும் முடியும். இதை இப்போது உணர்ந்திருந்தான் தினகரன்.

உறவிலேயே அவனுக்கு மாலையிட ஒருத்தி காத்திருந் தாள். ஆனால் திண்டுக்கல்லிலிருந்து மதுரைக்கு உத்தியோக நிமித்தம் வந்த தினகரன், பக்கத்துக் கட்டடத்தில் மின்சார

அலுவலகத்தில் வேலை பார்த்துவந்த வனஜாவின் வட்டக் கருவிழிகளில் தன்னை இழந்தான். இத்தனைக்கும் தொடக்கத்தில் அவள் இவனை லட்சியம் செய்யக்கூட இல்லை.

அதனால் என்ன? தேனீக்கள் ரோஜாவில் வந்து மொய்க்கத் தோதாக அதற்கு நிறம் இருக்கிறது, மணம் இருக்கிறது, தேனும் இருக்கிறது. இவை போதாவா? 'தேன் எடுக்க இங்கே வரவும்' என்று அறிவிப்புப் பலகையா எழுதி வைக்க வேண்டும்? வனஜாவின் வசீகரமான கண்கள், வாளிப்பான தோற்றம், வனப்பான அலங்காரம்-இவை தினகரனைக் கிறங்க வைத்தன. இப்படிப் பலரை இவை கிறங்க வைத்திருக்கின்றன; பல தேனீக்களுள் தானும் ஒரு தேனீ என்ற விவரம் மட்டும் அப்போது அவனுக்குத் தெரியவில்லை.

பெற்றோருடன் சண்டை போட்டுக் கொண்டு, முறைப் பெண்ணின் மனத்தைச் சுக்கு நூறாக்கிப் பிடிவாதமாக வனஜாவை மணந்து கொண்டான். தனிக் குடித்தனமும் வைத்தான். பின்னே இத்தனை நடந்த பிறகு திண்டுக் கல்லுக்குப் போனால் தன் முதுகு திண்டு திண்டாகிவிடும் என்பதுகூடவா அவனுக்குத் தெரியாது?

வனஜா ஓரிரண்டு மாதங்கள் அவனிடம் பிரியமாக இருந்தாள். தன் தாயாரைச் சமைத்துப் போடச் சொல்லி விட்டு வழக்கம் போல் ஆபீஸுக்குப் போய் வந்தாள். இரண்டு பேர்களுடைய வருமானமும் இருந்தால் நல்லது தானே; எதிர்காலத்தில் இரண்டு குழந்தைகள் பிறக்கும் போது இப்போது சேமித்து வைக்கக்கூடிய பணம் பயன்படுமல்லவா என்று நினைத்தான் தினகரன்.

சில மாதங்கள் கழித்து வனஜா, ஆபீஸ் வேலை அதிகம் என்று சொல்லித் தாமதமாக வீட்டுக்கு வர ஆரம்பித்தாள். போகப் போகச் சந்தேகம் தட்டியது தினகரனுக்கு. இனி

சந்தேகத்துக்கு இடமில்லை என்று உறுதியானதும் அவன் மனம் விட்டுப் பேசினான் வனஜாவிடம். தனக்கு விஷயம் தெரிந்து போய்விட்டது என்பது புரிந்ததும் அவள் பயந்து நடுங்குவாள் என்று எதிர்பார்த்தான். அப்போது, நடந்ததை மறந்து அவளை மன்னித்துவிடத் தயாராய் இருப்பதாகச் சொல்ல வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டான். புதிய வாழ்க்கை தொடங்கலாம் என்று பெருந்தன்மை யுடன் கூறிச் சமாதானப் படுத்தவும் தயாராய் இருந்தான்.

ஆனால் அவனுக்குப் பேரதிர்ச்சி காத்திருந்தது. வனஜா பயப்படவோ மன்னிப்புக் கோரவோ இல்லை என்பதோடு, "இத்தனை நாட்கள் ஆயிற்றா உங்களுக்கு இதைப் புரிந்து கொள்ள?" என்று ஏளனச் சிரிப்போடு கேட்டாள்.

இதயத்தில் விழுந்த இவ்வளவு பலமான அடியை எப்படித்தான் அவன் தாங்கிக் கொண்டு நின்றானோ? அந்த அதிர்ச்சியைவிட, அவளை முழுமையாகப் புரிந்து கொண்ட தால் ஏற்பட்ட திகைப்பு அதிகமாயிருந்ததே அவன் நிலை குலையாதிருக்கக் காரணமாய் இருந்திருக்கலாம்.

விவாகம் என்பது அவளுக்கு ஒரு பாதுகாப்பு. அதைப் பெற உள்ளூர்வாசிகள் பலரிடம் முயன்று தோல்வியுற்றாள். கடைசியில் தினகரன்தான் வெளியூர்க்காரனானதால் ஏமாந்து போய் அவள் வலையில் விழுந்தான். அப்படி அவன் சிக்கும் வரை அவளும் அவனிடம் இன்முகம் காட்டி வந்தாள். மாங்கல்யச் சரடைப் பெற்றபின் பாராமுகம்தான். அவள் ஒரு சக்கரம். ஓரிடத்தில் நிலையாக இராமல் சுற்றிக் கொண்டேயிருக்கத்தான் ஆசைப்பட்டாள். ஆனால் என்றாவது ஒரு நாள் இயக்கம் நிற்கத்தான் வேண்டும். அப்போது படுத்துவிடாமல் நிமிர்ந்தே இருக்க வேண்டு மானால் சக்கரம் தனித்து இருக்காமல் தன்னை ஓர் அச்சாணியுடன் பொருத்திக்கொள்ள வேண்டும். அந்த

அச்சாணிதான் அவன். இவ்வாறு திட்டமிட்டுத்தான் தன்னை அவள் கணவனாக ஏற்றுக் கொண்டிருக்கிறாள்.

மதுரையின் ஜனத்தொகையில் அத்தனை பேருக்குமில்லா விட்டாலும் காலே அரைக்கால்வாசிப் பேருக்காவது வனஜா எப்படிப்பட்டவள் என்பது நிச்சயம் தெரிந்திருக் கும். ஆனால் தன் பெற்றோருக்கு இந்த விவரம் எட்டக் கூடாதே என்று அவன் கவலைப்பட்டான். அதைவிட நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகலாம்! எப்போதாவது விருந்தினர், உறவினர் என் திண்டுக்கல்லிலிருந்து வருவார்கள். அப்போது அவளிடம் கெஞ்சிக் கூத்தாடி தனது இல்லத்தரசியாக, படிதாண்டாப் பத்தினியாக நடிக்க வைத்தான். தானும் அவளிடம் சிரித்துப் பேசி நடித்தான். ஊருக்குத் திரும்பித் தன் பெற்றோரிடம் அவர்கள் தான் சௌக்கியமாக, சந்தோஷமாக இருப்பதைச் சொல்லு வார்கள். அப்பாவும் அம்மாவும் மகிழ்வார்கள். கல்யாண விஷயத்தில் மகனிடம் ஏற்பட்ட விரோதம், தாங்களே நேரில் வந்து அவன் குடும்பம் நடத்துவதைப் பார்க்கத் தடையாக நின்றது. ஆனால் மனம் கிடந்து அடித்துக் கொண்டது. அதனால் உறவினர்கள், நண்பர்கள் மதுரைக்கு ஏதாவது காரியமாகப் போனால், "அந்தக் காலாடிப் பயல் ஒருத்தன் இருக்கிறானே, முடிஞ்சால் அவனை எட்டிப் பார்த்துட்டு வாங்க" என்று சொல்லி அனுப்புவார் தந்தை.

**கா**தல் காதல் என்று வாதாடி யாரை எதிர்த்து நின் றானோ அவர்களுக்கு, இன்று தான் காதலில் படுதோல்வி அடைந்ததோடு புழுதியில் புரட்டப்பட்டும் இருப்பது புரிந்துவிடக் கூடாது என்பதில் அவன் சர்வ ஜாக்கிரதை யாக இருந்தான். வேஷம் போட்ட நேரம் போக மிகுதி நாட்களில் கர்மமே என்று காலத்தை ஓட்டினான். நண்பர்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் கிண்டல் செய்வதைத் தாங்கிக்கொள்ளப் பழகி விட்டான்.

ஒரு நாள் வனஜா 'வீடு திரும்பிய போது அவள் காரியாலயத்தில் பெரிய பதவியில் இருக்கும் ஒருவரை உடன் அழைத்து வந்தாள். 'ஸாருடைய ஒய்ஃப் குழந்தைகளோடு பிறந்த வீட்டுக்குப் போயிருக்காங்க. ஹோட்டலில் சாப்பிடலாம்; ஆனால் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது. பியூனிடம் ரொட்டி வாங்கிக்கிட்டு வரச் சொல்லிக் காசு கொடுப்பதைப் பார்த்தேன். மனசு கேட்கலை. நம்ம வீட்டிலேயே சாப்பிடலாம்னு சொல்லி அழைச்சுக்கிட்டு வந்துட்டேன்'' என்றாள் வனஜா. ''அம்மாவுடைய சமையல் ரொம்ப ருசியாயிருக்கும்; இவரை வேணுமானால் கேட்டுப் பாருங்க. கடந்த மூணு வருஷங்களா நாளைக்கு மூணு வேளை தவறாமல் சாப்பிட்டிருக்கார்.... ஏங்க ஒரு நாளைக்காவது தரம் குறைஞ்சிருக்குமா?''

''சமையல் தரம் குறைந்தால் பாதகமில்லை, நடத்தையில் தரம் குறைந்தால் என்ன செய்ய?'' என்றான் தினகரன்.

அந்த உயர் உத்தியோகஸ்தர் சுருக்கென்று ஏதோ தைத்ததுபோல் நிமிர்ந்தார். ''உங்களுக்குப் பிடிக்கலைன்னா நான் போயிடறேன். நான் வரமாட்டேன்னுதான் சொன்னேன்'' என்றார் நாக்குழற.

''வேண்டாம், ஸார்! நீங்க இருங்க. இதுவரைக்கும் வனஜா எனக்குப் பிடிக்கும் பிடிக்காது என்று கேட்டுக் காரியம் செய்து என்னை அவமானப்படுத்தியதில்லை. இன்றைக்குப் புதுசாக அந்த வேதனை வேறு எனக்குச் சேர வேண்டாம்!''

இவன் கூடமாகப் பேசியது அவருக்குப் புரியவில்ல. யோசித்துப் புரிந்து கொள்ள வனஜா விடவும் இல்லை. ''இவர் எப்பவும் இப்படித்தான் ஸார், ஒருத்தருக்கும் புரியாமல் ஏதாவது தமாஷா பேசிக்கிட்டே யிருப்பார். நீங்க சிரம பரிகாரம் பண்ணிக்கிடுங்க. அடுப்பங்கரையில்

எட்டிப் பார்த்துட்டு வந்துடறேன்'' என்றாள். தினகரனை யும் கையைப் பற்றி இழுத்துக் கொண்டு சென்றாள்.

''எவ்வளவு பெரிய அதிகாரி நம்ம வீடு தேடி வந்திருக்கார்; அழகா நாலு வார்த்தை பேசப்படாதா? உங்க மாமாவும் சித்தப்பாவும் வரும்போது நான் எப்படி அநுசரணையா நடந்துக்கறேன்?'' என்று கேட்டாள். படபடவென்று பேசியதுடன் நில்லாமல் ஒரு பையை எடுத்துக் கொடுத்து, ''மார்க்கெட்டுக்குச் சீக்கிரம் போய் ஒரு கிலோ தக்காளியும் அரைக் கிலோ கோசும் வாங்கிக்கிட்டு வாங்க. அவருக்குத் தக்காளி சூப்பெ ரொம்பப் பிடிக்கும்'' என்றாள்.

பையை எடுத்துக் கொண்டு போன தினகரன், ராஜா தியேட்டர் வாசலில் 'கியூ' நிற்பதைக் கண்டவுடன் அந்த வரிசையில் தானும் நின்றுவிட்டான், வேதனை படிந்த உள்ளத்துக்குத் தாற்காலிக விடுதலையேனும் கிடைக் கட்டும் என்ற நினைப்பில்.

இரவு இரண்டேகால் மணிக்குத் திரும்பிய அவன், கதவைத் தட்டியபோது அலங்கோலமான நிலையில் வந்து வாசல் கதவைத் திறந்தாள் வனஜா. ''எதுக்கு இப்படி ஆர்ப்பாட்டம் பண்றீங்க? மெல்லத் தட்டக்கூடாதா? அவர் அசந்து தூங்கிக்கிட்டிருக்கார். கலாட்டா பண்ணி னால் தொந்தரவா இருக்காதா?'' என்றாள்.

''தண்டச் சோற்றுக்கு வந்த அந்தத் தடியன் இங்கேயே கட்டையையும் கிடத்திப்பிட்டானா?'' என்று கேட்டான் தினகரன்.

''பிறகு என்ன பண்ணச் சொல்றீங்க? எல்லாம் நீங்க செய்த காரியம் தானே? கறிகாய் வாங்கி வரப்போனவர் ஆளையே காணோம். காத்திருந்து காத்திருந்து பார்த்துக் கடைசியில் பக்கத்து வீட்டுப் பையனை அனுப்பி வாங்கி வரச் சொன்னேன். சமையல் முடிஞ்சு சாப்பிட்டுத்

தாம்பூலம் தரிக்க மணி ஒன்பதே முக்கால், பத்தாயிடுத்து. அவர் சொக்கிக் குளம் போகணும். பத்து மணிக்கு மேலே எப்படிப் போவார், அவ்வளவு தூரம்? அதனால்தான் நான் இங்கேயே படுத்திருந்துவிட்டு நாளைக்குப் போகலாமே என்று சொன்னேன். பேசிக்கிட்டிருந்தோம், நேரம் போனதே தெரியலை. சற்று முன்னால்தான் அவர் பால் சாப்பிட்டுவிட்டுப் படுத்தார்.''

மூன்று வருஷங்களாகக் குமுறிக் கொண்டிருந்த ஆத்திரத்தை யெல்லாம் சேர்த்து வைத்துப் 'பளார்' என்று ஓர் அறை விட்டான் தினகரன். எதிர்பாராத தாக்குதலில் அவள் வீரிட்டு அலறக்கூடச் சக்தியற்றவளாய் அறையின் ஒரு மூலையில் சுருண்டு விழுந்தாள். விழுந்தவள் எழுந் தாளா என்று கூட அவன் பார்க்கவில்லை. வாசல் கதவைப் படீரென்று சாத்திவிட்டுப் போய்விட்டான்.

ஒரு கடையில் சப்பாத்தியும் இன்னொரு கடையில் பாலும் சாப்பிட்டுவிட்டு இரவு முழுதும் கால் போன போக்கில் அலைந்தான். அலைபாயும் மனத்துக்கு அமைதி யில்லை. 'அவள் எல்லை மீறிவிட்டாள். ஆண்மை என்பது அடக்கப்பட்டிருந்தாலும் அழிந்தா போய்விட்டது? மறுபடியும் அந்த வீட்டில் அடியெடுத்து வைக்க முடியுமா, தன்னால்? அவளுடன் இனியும் சேர்ந்து வாழ்வதா?'

பொழுது விடிகிற சமயத்தில் அவன் பஸ் நிலையத்தின் அருகே இருந்தான். கொடைக்கானலுக்கு ஒரு பஸ் கிளம்பிக் கொண்டிருந்தது. பாக்கெட்டில் மளிகைக் கடைக்காரனுக்கும் வண்ணானுக்கும் கொடுத்தது போகச் சம்பளப் பணத்தில் பாதிக்கு மேல் பாக்கியிருந்தது. யோசித்துக் கொண்டிராமல் ஏறிவிட்டான்.

'கொடைக்கானலின் அமைதியான சூழ்நிலை தனக்கு நிம்மதி தருமா? அதன் அழகு, விகாரமான ஓர் உள்ளத்தை

*மறக்கத் தனக்கு உதவுமா? தண்ணென்ற அந்தக் காற்று தன் இதயத்தின் எரிச்சலைத் தணிக்குமா?'*

கொடைக்கானலில் தினகரன் இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்தான். ஏரியையும் அருவியையும் பார்த்தான். கோக்கர்ஸ் வாக்கில் நடந்தான். குறிஞ்சி ஆண்டவர் கோயிலில் கும்பிட்டான். எதிலேயும் சாந்தி கிடைக்க வில்லை. பில்லர் ராக்ஸுக்கு அவன் வந்து சேர்ந்தபோது, நெல்லிக்காய் மூட்டையை அவிழ்த்தாற்போல் ஒரு டூரிஸ்ட் பஸ் பயணிகளை வெளியே கொட்டியிருந்தது.

பில்லர் ராக்ஸ் என்பவை தொலைவில் இரண்டு தூண்களாகத் தெரிந்தன. ஒரு மலை உச்சிதான் அது. ஆனால் சிகரமாய் இல்லாமல் அசாதாரண பலமுள்ள ஓர் அரக்கனால் முனை சீவி விடப்பட்டது போல் மேற்புறம் தட்டையாகத் தோற்றம் அளித்தது. அதே அரக்கன் தன் வாளால் மேலிருந்து கீழாகவும் ஒரு போடு போட்டிருக்க வேண்டும். பாறை பிளவுண்டு இடையில் ஓர் அதள பாதாளத்தைத் தேக்கிக்கொண்டு நின்றது. இந்த வெடிப்பு காரணமாகத் தான் அம்மலை இரு தூண்கள் போல் தோற்ற மளித்து, 'பில்லர் ராக்ஸ்' என்ற பெயரும் பெற்றிருக்கிறது.

"என்னங்க, கைடு ஸார்! இங்கே யிருந்துதான் பார்க் கணுமா பில்லர் ராக்ஸ்ஸை? அதுங்கிட்டே போக முடியா துங்களா?"

"போகலாமே!" என்றார் கைட். "உங்கள் உயிரைப் பற்றிக் கவலை இல்லை என்றால் சுற்றி வளைச்சுக்கிட்டு ஓர் ஒற்றையடிப் பாதை வழியே போகலாம்."

"பாதை இருக்கில்லே? பிறவு என்ன? அதோடு நடந்தாப் போவுது. பயம் எதுக்கு?"

"ஓநாய், மலைப் பாம்பு, சிறுத்தை இதுகள் ஏதாவது நடமாடும் என்கிற பயம்தான். அவை விருந்து சாப்பிட்டு

முடிஞ்சதும் எலும்புகளைத் துடைச்சுப் போட்டது மாதிரி கொத்தி எடுக்கக் கழுகுகளும் ராஜாளிகளும் காத்துக்கிட்டு இருக்கும். ஆனால் நீங்கதான் டார்ஜானுக்குத் தம்பி மாதிரி சவால் விட்டுப் பேசறீங்களே? ஒருவேளை தேவர் ஃபிலிம்ஸ்ல வேலை பார்க்கறீங்களா!''

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். இதுபோன்ற சுற்றுலாப் பயணங்களில் கைட், நகைச்சுவை என்று கருதிச் சொல்வதற்கெல்லாம் சிரிக்க வேண்டும் என்பது எழுதி வைக்கப் படாத சட்டம்.

''ஏங்க, வேட்டைக்காரங்க போகலையா? அது மாதிரி கையிலே துப்பாக்கியோடு போறது. பல பேர் போயிருக் கிறதால்தானே ஒற்றையடிப் பாதையே ஏற்பட்டிருக்கு?''

''வாஸ்தவம். நான் மறுக்கலை. இன்னைக்கும் ஏதாவது ஜோலியா காட்டுக்குள்ளே போறவங்க இருக்கத்தான் செய்யறாங்க. அவங்களுக்குப் பழக்கம். நமக்கு எதுக்கு அதெல்லாம் என்று சொல்ல வந்தேன். நாலு வருஷங் களுக்கு முந்தி ஒருத்தன் இப்படித்தான் பில்லர் ராக்ஸுக்குப் பக்கத்திலே போய்ப் பார்க்கிறேன்னு கிளம்பிப் போனான். திரும்பி வரவேயில்லை!''

''சிறுத்தையா, ஓநாயா, எதுக்கு அடிச்சுது அதிர்ஷ்டம்?''

''இரண்டுக்கும் கொடுத்து வைக்கவில்லை. அந்த முனைக்கே போயிட்டான். அதோ அந்தப் பிளவு இருக்கே-கிடுகிடு பள்ளம்-அதன் உச்சியில் நின்னுக்கிட்டு எவ்வளவு ஆழம்னு எட்டிப் பார்த்தான். தலை சுற்ற ஆரம்பிச்சுது...''

''உள்ளே விழுந்துட்டானா?''

''நல்லா கேட்டீங்க, விழுந்துட்டானான்னு. கொம்பு நுனியிலே அரிவாள் கட்டி மாங்காய், புளியம் பழம் எல்லாம் பறிப்பாங்களே தெரியுமில்லே?''

''ஆமாம்!''

''அது மாதிரி நீண்ட கொம்பு முனையில் அரிவாளைக் கட்டி உள்ளே இறக்கித்தான் அவன் உடலை மேலே தூக்கினாங்க. அதுவும் முழுசா வந்ததுங்களா? கிடையாது! கை ஒரு தடவை, கால் ஒரு தடவை....''

''கண்ணறாவி! போதும், போதும்! இதையெல்லாம் ஏன் சொல்றீங்க?''

''நீங்க கேட்டதால்தான் சொல்லும்படி யாச்சு.''

எல்லாருக்கும் இடம் விட்டு ஓர் ஓரமாய் ஒதுக்குப் புறமாய் நின்றுகொண்டிருந்த தினகரன் பார்த்துக் கொண்டு இருக்கையிலேயே அடர்த்தியான பஞ்சுப் பொதி போன்ற ஒரு மேக மண்டலம் வந்து அப்படியே பில்லர்ராக்ஸைக் கவ்வி விழுங்கிவிட்டது! அது ஒரு மலை, உறுதியான பாறை. அதையும் அடியோடு மேக மண்டலம் மறைத்து விட்டது, திரை போட்டு விட்டது! 'என் வாழ்க்கைக்கும் இப்படியே திரை போட்டுவிடலாம். ஜன கன மண...! பில்லர் ராக்ஸின் உச்சிக்குப் போகும் பாதையைக் கேட்டறிந்து கொண்டு சென்று அந்தப் பாறைப் பிளவையே என்னை அடக்கம் செய்யும் சமாதியாக்கி விடலாம். வழியில் புலி சிறுத்தைக்கு இரையாக நேர்ந்தால் ரொம்ப நல்லதாய்ப் போயிற்று. அவ்வளவு தூரம் நடக்கும் வேலை மிச்சம்!'

மேகம், கவ்விய வேகத்திலேயே மலையைக் கக்கி விட்டும் போய்விட்டது. ''அதோ, அதோ!'' என்று சிலர் இப்போது தெற்றெனத் தெரிந்த தூண்களைச் சுட்டிக் காட்டினார்கள்.

''சரி சரி, தற்கொலைக்கு ஏற்ற இடத்தைப் பார்த்தது போதும், வேறே எங்கேயாவது போகலாம்'' என்றார் ஒருவர்.

"தற்கொலைக்கு ஏற்ற இடம்னு அதை மட்டுமே நான் சொல்ல மாட்டேன், ஐயா!" என்றார் கைட். "அந்த ஆசாமி தற்கொலை செய்துகொள்வதற்காக அவ்வளவு தூரம் போகவுமில்லை. அந்த சிகரத்தைத் தொடுவது அவனுக்கு ஒரு சவாலாக இருந்திருக்கு. அவன் மரணம் ஒரு விபத்து. ஆனா தற்கொலை பண்ணிக்க விரும்புகிறவர்களுக்கு கொடைக்கானலில் திரும்பிய பக்கமெல்லாம் அதள பாதாளமும் கிடுகிடு பள்ளத்தாக்கும் இருக்குதே. போதாக் குறைக்கு கால்ஃப் கிளப் பக்கத்தில் போர்டு வேறு எழுதி வைச்சிருக்காங்க, 'ஸூயிஸைட் பாயிண்ட்' என்று. தற் கொலைக்கு வசதியான இடம் என்பதால் தானே அப்படி ஒரு பெயர் வைச்சிருக்காங்க, அந்த இடத்துக்கு? அதன் பக்கத்திலேயே காரிலோ, பஸ்ஸிலோ சிரமப்படாமல் போய் இறங்கலாம்!

"அந்த இடத்தையும் நாம் பார்க்கலாம், பிக்னிக் முடிஞ்ச பிறகு. எல்லாரும் டிஃபன் பொட்டலத்தைப் பிரிச்சிக்கிட்டு மரத்தடியிலோ பாறை மேலோ அல்லது இங்கே சர்க்கார் உங்கள் பணத்தில் உங்களுக்காகப் போட்டு வைச்சிருக்கிற வசதியில்லாத காங்க்கிரீட் பெஞ்சுகளிலோ உட்கார்ந்து சாப்பிடுங்க. ஆனால் தயவுசெய்து டிஃபன் பொட்டலக் காகிதங்களைக் கண்ட இடத்தில் வீசி எறியாதீங்க. கேட்பார் யாரும் கிடையாது என்றாலும் நாம் கடமை உணர்ச்சியோடு நடந்துக்குவோமே!"

கைட் குட்டிப் பிரசங்கத்தை முடித்ததும் உல்லாசப் பயணிகள் டிஃபன் பொட்டலங்களைப் பிரிக்க ஆரம்பித் தார்கள்.

அந்தக் கூட்டத்தைச் சேர்ந்த ஒருவனாயில்லாதபோது அவர்கள் சாப்பிடுவதைப் பார்த்துக் கொண்டு அங்கே நிற்கத் தினகரன் விரும்பவில்லை. புறப்பட்டான்.

*பில்லர் ராக்ஸுக்கு அவன் ஒரு பஸ்ஸில் வந்து இறங்கிக் கொண்டிருந்தான், அந்த வழியாக ஏதோ ஒரு கிராமத் துக்குப் போகிற பஸ். வருகிற வழியில் கால்ஃப் கிளப் கட்டடத்தைக் கவனித்திருந்தான். சாலையின் இரு புறங்களிலும் கால்ஃப் ஆட வசதியாக விசாலமான புல் தரைகள் இருப்பதையும் பார்த்திருந்தான். ஆங்காங்கே வட்ட வடிவமாகப் புல் செதுக்கப்பட்டு வழுவழுப்பான சம தரை தெரியும். நெம்பர் பலகை தாங்கிய கழியும் நடப் பட்டிருக்கும்.*

*'கால்ஃப் கிளப் கட்டடம் இங்கிருந்து சுமார் அரை மைல் அல்லது முக்கால் மைல் தூரம்தான் இருக்கும். இறக்கம்; விடுவிடுவென்று நடந்து போய்விடலாம். அதன் பக்கத்தில் தானே ஸுயிஸைட் பாயிண்ட்-தற்கொலை முனை-இருப்பதாகச் சொன்னார் கைட்!'*

*பில்லர் ராக்ஸைப் பார்வையிட வசதியாக அரசினர் சற்றுத் தாழ்வாக அமைத்திருந்த அழகிய சிறிய பூங்காவி லிருந்து கிளம்பிப் படிகளில் ஏறிச் சாலையில் அடியெடுத்து வைத்தான் தினகரன். அந்தக் கணத்தில் அவன் கண்களில் ஏற்கனவே அறிமுகமான ஒரு முகம் தட்டுப்பட்டது. 'ஆ! வனஜாவுடன் அதே காரியாலயத்தில் வேலை செய்கிறவன் அல்லவா இவன்? நல்லவேளை! அவன் தன்னைப் பார்க்கவில்லை! அதோ இன்னொருவன்! அவனும் அதே ஆபீசில் பணியாற்றுகிறவன்தான். அடேடே! இந்தப் பஸ்ஸில் சுற்றுலாக் கிளம்பியவர்களில் ஒரு பகுதியினர் வனஜா வேலை பார்க்கும் அதே காரியாலயத்தைச் சேர்ந்த வர்கள் போலும்! அவர்களில் பலருக்கு என்னைத் தெரியுமே? அவர்கள் கண்களில் தட்டுப்படாமல் போய் விடுவதுதான் நல்லது. பார்க்க மாட்டார்கள். இந்தக் கூட்டத்தினிடையில் அவர்கள் கவனத்திலிருந்து தப்பி ஒதுக்குப்புறமாய்ச் சென்றுவிடுவது சிரமமல்ல. வெள்ளிக்*

கிழமை ஏதோ ஒரு பண்டிகை; பிறகு செகண்ட் ஸாட்டர்டேயும் ஞாயிற்றுக் கிழமையும். சேர்ந்தாற் போல் கிடைத்த மூன்று நாட்கள் விடுமுறையைப் பயன் படுத்திக் கொண்டு உல்லாசப் பயணம் கிளம்பி இருக்கிறார்கள். ஒருவேளை வனஜாவும்...'

மின்னலென அவன் உள்ளத்தில் இந்த எண்ணம் பாய்ந்த அதே விநாடியில் அவன் கண்களும் அவளைக் கண்டு விட்டன! அதுவும் எப்படி? அவள் பக்கத்திலேயே அந்த உயர் உத்தியோகஸ்தன் மருதாசலம் நின்று கொண்டு அவள் இடுப்பில் தன் கையை உரிமையோடு சுற்றி வளைத்துத் தொலைவில் இருந்த எதையோ சுட்டிக்காட்டிக் கொண்டிருந்தான். அவர்கள் முதுகுதான் அவனுக்குத் தெரிந்தது. ஆனால் சந்தேகமில்லை, அவர்களேதான்! 'சீ! அதே காரியாலயத்தில் வேலை பார்க்கும் சக ஊழியர்கள் எதிரிலேயே இப்படி வெட்கமின்றி இழைவதா? அடிப் பாவி! மூன்று நாட்களாய்க் கணவனைக் காணோமே என்று கொஞ்சங்கூடக் கவலைப்படாமல் இவனோடு சேர்ந்து உல்லாசப் பயணம் கிளம்பிவிட்டாயா? வனஜா! உன்னுடைய இந்தக் கண்ணறாவி நாடகத்தை இனியும் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருக்க என்னால் முடியாது. இதோ நான் 'அவுட்பாஸ்' வாங்கிக் கொண்டு போகிறேன்!'

இவ்வாறு எண்ணமிட்டவாறே 'ஸுயிஸைட் பாயிண்ட்' என்ற பெயர்ப் பலகையை நாடி விடுவிடுவென்று நடந்தான் தினகரன்.

★ ★ ★

# 11. தீர்க்க தரிசனப் பாறை

தற்கொலை முனையை நோக்கித் தினகரன் சென்று கொண்டிருந்தபோது, ஏற்கெனவே பல சந்தர்ப்பங்களில் வனஜாவிடம், ''செத்துத் தொலைக்கிறேன்'' என்று தான் சொல்லியிருப்பது அவன் நினைவுக்கு வந்தது. அவளுடைய கேவலமான நடத்தையைச் சகிக்க முடியாமல் அவன் இவ்வாறு கூறிய ஒரு சமயத்தில் அவள் கிண்டலாகச் சொன்ன பதில் இதுதான்; ''செய்யுங்கள்; ஆனால் ஞாபக மாக 'நான் தற்கொலை செய்து கொள்கிறேன்' என்பதாக ஒரு காகிதத்தில் எழுதிப் பாக்கெட்டில் வைத்துக் கொள்ளுங்கள். போலீஸார் கொலை என்று தவறுதலாக நினைத்துவிடப் போகிறார்கள்.''

'ஆமாம், அதிலும் உண்மை இருக்கத்தான் செய்கிறது' என்று எண்ணினான் தினகரன். 'நாம் இறந்துபோன பிறகு அனாவசியமான குழப்பங்களுக்கு இடம் தருவானேன்?'

கால்ஃப் கிளப் அருகே சாலையில் அமைந்திருந்த ஒரு சிறிய பாலத்தின் மதில் மீது அமர்ந்தான். சூரிய ஒளி குளிருக்கு இதமாக அவனை அணைத்தது. அந்த இனிமையை அனுபவிக்கும் மனநிலையா அவனுக்கு? பையிலிருந்து டைரியை எடுத்து ஒரு தாளைக் கிழித்தான். அதில் தான் தற்கொலை செய்து கொள்வதாயும் தன் மரணத்துக்கு யார் மீதும் சந்தேகப்பட வேண்டாம் என்றும் பால் பாயிண்ட் பேனாவால் எழுதிச் சட்டைப் பையில்

வைத்துக் கொண்டான். பின்னர் தற்கொலை முனையை நோக்கி நடந்தான்.

கால்ஃப் கட்டடத்தின் முன்னால் அழகிய பசும் புல் தரை மைதானம். பக்கவாட்டில் வேலி எடுத்து ஸூயிஸைட் பாயிண்டுக்குப் போகக் குறுகலான பாதை ஏற்படுத்தியிருந்தார்கள். அதன் மீதாக நடந்தான் தினகரன். அம்முனையை அடைந்த பிறகு சுற்றுலாப் பயணிகளுக்குப் பாதுகாப்புத் தர அங்கு பலமான ஏற்பாடு செய்யப் பட்டிருப்பதைப் பார்த்தான். யாரேனும் தவறிப் போய் அந்தக் கிடுகிடு பள்ளத்தில் விழுந்துவிடக் கூடாதே என்பதற்காக உயரமான மதிள் சுவர் எழுப்பி அதன் மேல் முள் வேலிக் கம்பியும் போட்டிருந்தார்கள். தொலைவில் கால்ஃப் கிளப் சிப்பந்திகள் ஒரு 'லான்மோவர்' இயந்திரத்தின் உதவியுடன் புல் வெட்டும் பணியில் ஈடுபட்டிருந்தார்கள். 'இந்தச் சுவர்மீது தான் ஏறினாலோ வேலியைத் தாண்டிக் குதித்தாலோ அவர்கள் கவனிக்கப் போவதில்லை. அப்படியே அவர்கள் பார்வையில் தான் பட்டுவிட்டாலும் தன்னைத் தடுக்க அவர்கள் ஓடி வருவதற்குள் அப்பால் பாய்ந்து விடலாம். ஐயாயிரம் அடியோ அல்லது ஆறாயிரம் அடியோ தன் உடல் விர்ரென்று கீழ் நோக்கி விழும். நமது வேகம் என்னவாக இருக்கும்? புவி ஈர்ப்பு சக்தி பற்றிக் கல்லூரியில் படித்தது மறந்தே போயிற்று... தலை ஏதோ ஒரு பாறையைத் தாக்கிப் பிளவுபடும்போது வினாடி நேரம் வேதனை 'சுரீல்' என்று உடல் முழுதும் பாயும். ஒரே ஒரு விநாடிதான்! அப்புறம் இந்தப் பள்ளத்தாக்கில் நிலவும் பூரண அமைதியைத் தானும் அடைந்துவிடலாம்! நாம் சமாதி அடையப்போகும் இடத்தை முதலில் நன்றாக ஒரு தடவை பார்த்துக் கொள்ளலாம்...'

மாட்சிமை என்ற சொல்லைப் பல சந்தர்ப்பங்களில் பலர் கூறக் கேட்டிருக்கிறான் தினகரன். ஆனால் மாட்சிமை

என்பதன் பொருளை முழுமையாக உணர இந்த இடத்துக் குத்தான் வரவேணும் என்று இப்போது அவனுக்குத் தோன்றியது. வானளாவ உயர்ந்த மலைகள் மாட்சிமை யோடு விளங்கின. அதன் உச்சியிலிருந்து பாதாளம் நோக்கிப் பாய்ந்த சரிவிலே மாட்சிமை துலங்கியது. மலைகளை மருவ வந்த மேகக் கூட்டங்களின் மாட்சிமை தெற்றெனத் தெரிந்தது. மலைகளின் பக்கங்களைக் கவ்விக் கொண்டு வளர்ந்துவிட்ட அடர்ந்த கானகங்களின் மாட் சிமை காணக் கிடந்தது. இத்தனையையும் உள்ளடக்கிய வானக் கூரையின் மாட்சிமையும் நன்கு உணரத் தக்கதாய் இருந்தது.

திரும்பிய திக்கெல்லாம் அவன் மாட்சிமையை, மகோன்னதத்தை, மாண்பினைக் கண்டான். அந்தக் கண்கொள்ளாக் காட்சிகளினிடையே அவனுடைய பிரச்னைகள் அற்பத் தனமானவையாகப் பட்டன.

'மனிதனின் பிரச்னைகள் மட்டுமென்ன, மனிதனின் சாதனைகளும் அற்ப சொற்பம்தான். இதைச் செய்தேன், அதை வென்றேன் என்று மார் தட்டுகிறானே; -இந்நாள் வரை மனிதன் சாதித்துள்ளவை எல்லாவற்றையும் ஒன்று சேரப் பார்த்தால்கூட அவை இதோ என் கண்ணெதிரே தோன்றும் ஆண்டவனின் இந்தப் படைப்புக்கு ஈடாகா! எத்தனை அழகு, எவ்வளவு பெரிய கலைஞன்!

'ஆண்டவனுக்கும் ஓர் ஆசை! தனது கலைத் திறனால் உருவானவற்றைத் தான் மட்டும் பார்த்து ரசித்தால் போதாது. வேறு பலரும் அவற்றைக் கண்டு ஆனந்திப்ப தைத் தான் பார்த்து மன நிறைவுபெற வேண்டும்! இதற் காகத்தானோ என்னவோ அவன் மனிதனைப் படைத்தான், அவனுக்குக் கலையுள்ளத்தையும் கொடுத்தான்! இறைவ னுடைய சிருஷ்டி எழிலெல்லாம் தான் அனுபவிக்கக் காத்திருக்கும்போது அவற்றை விட்டுவிட்டு வனஜா

வுடையது போன்ற ஒரு விகாரமான மனத்தை நினைத்துத் தான் துன்பப்பட்டுக் கொண்டிருப்பதில் என்ன பயன்? அந்த வனஜாவும் கடவுள் என்ற அதே கலைஞனால் உருவாக்கப்பட்டவள்தானே என்றால், ஓவியன் தூரிகையை உதறியபோது தவறுதலாகப் பட்டுவிட்ட கரிய மை என்றோ, சிற்பி செதுக்கியபோது எதிர்பாராத விதமாக மூளியாகிவிட்ட சிலை யென்றோ அவளை நினைத்து ஒதுக்கி விட்டுப் போக வேண்டியதுதான். குப்பையில் எறிய வேண்டிய படத்தை என் மனத்தில் அன்பெனும் சட்டம் போட்டு மாட்டிக் கொண்டது என் தவறு.

'வனஜா எக்கேடாவது கெட்டுப் போகட்டும். எனக்கு ஆண்டவன் சிருஷ்டித்த இந்த உலகமே இருக்கும்போது அவளுக்காக நான் ஏன் புனிதமான என் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும்? அத்தனை பெரிய தியாகத்தை என்னிடம் எதிர்பார்க்க அவளுக்குத் தகுதி ஏது?'

எந்த இடத்தில் சமாதி அடைந்து சாந்தி பெற விரும்பினானோ, அந்த இடம் அவனை ஏற்காமலேயே அவனுக்குச் சாந்தி கிட்ட வழி வகுத்து விட்டது! தற்கொலைச் சீட்டைப் பையிலிருந்து எடுத்துச் சுக்குநூறாகக் கிழித்தான் தினகரன். ஸூயிஸைட் பாயிண்டிலிருந்து தாள்களைப் பறக்க விட்டான். அவை மெல்ல அசைந்தாடி மிதந்து அடிவாரம் நோக்கி இறங்கத் தொடங்கின.

வந்த வழியாகவே திரும்பி நடந்து பிரதான சாலையை அடைந்தான். அதே சமயம் டூரிஸ்ட் பஸ் ஹாரனைப் பலமாக முழக்கிப் பயணிகளின் உற்சாகத்தைப் பிரதிபலித்த வாறு வருவது தெரிந்தது. 'ஆகா! 'பிக்னிக்' முடிந்து தற்கொலை முனையைப் பார்க்க வந்துவிட்டார்கள். அந்தச் சனியன் வனஜாவின் கண்களில் நான் தட்டுப்படவே கூடாது!'

பரபரப்புடன் அக்கம் பக்கத்தில் பார்த்தான் தினகரன். 'ஹில்டாப் ரோட்' என்று ஓர் அறிவிப்புப் பலகை தென்பட்டது. விடுவிடுவென்று அந்தப் பாதை வழியே ஏறத் தொடங்கினான். 'ஒரு மாபெரும் மலைத் தொடரின் இடையில் ஒரு மலைமீது அமைந்துள்ள கோடை வாச ஸ்தலத்துக்கு நாம் வந்திருக்கும்போது அதன் மத்தியில் ஒரு குன்றையும் அந்தக் குன்றை அடைய ஒரு பாதையையும் அல்லவா காண்கிறோம்?-ஒட்டகத்தின் முதுகு வீங்கிக் கொண்ட மாதிரி இது என்ன வேடிக்கை!' பாதையில் ஏறிச் செல்லும்போதே இப்படி ஓர் எண்ணம் ஏற்படப் புன்னகையுடன் நடையைத் தொடர்ந்தான்.

குன்றின் உச்சியில் விசாலமான ஒரு பாறை. சுமார் முப்பது பேர் நெருக்கி அடித்து உட்கார்ந்துகொண்டு கதை கேட்கலாம் அத்தனை அகன்றது. ஏறத்தாழ சமதரையும் கூட. அங்கு இப்போது ஈ காக்காய் இல்லை. அதன் சுற்று வட்டாரத்தில் ஒரு பக்கம் புதர்களும் மரங்களும் மண்டிக் கிடந்தன. இன்னொரு புறம் பிளம் மரங்களும் பேரிக்காய் மரங்களும் செழித்து வளர்ந்திருந்தன. பழுத்துச் சிவந்த பிளம் பழங்களும் பம்மிப் பருத்த பேரிக்காய்களும் கொய்து சுவைக்கப்படக் காத்திருந்தன.

இவை இல்லாத இன்னொரு திக்கில் சற்றுப் பார்வை யைச் செலுத்தினால்... அடேயப்பா! அந்தக் காட்சி ஏற்படுத்தும் உணர்ச்சிகளின் விளைவாக நாம் வாயடைத் தல்லவா போய் விடுகிறோம்! பிறகு அதை வர்ணிப்பது எப்படி?

இப்படி நாம் திகைத்துத் திணறுவோம் என்பதால் நமக்கு உதவுவதுபோல் அந்தப் பாறைக்கு ஒரு பெயர் சூட்டி அந்தப் பெயரை ஒரு பலகையில் எழுதி ஒரு மரத்தில் ஆணி அடித்துப் பொருத்தியு மிருக்கிறார்கள்: ''ராக் ஆஃப் விஷன்'' -தீர்க்க தரிசனம் தரும் பாறை!

அந்தப் பாறையின் மையத்தில் போய் அமர்ந்து அந்தக் காட்சியைப் பார்த்தான் தினகரன். 'ஆண்டவனைக் கோயிலில் போய்த் தேடுவதைவிட இந்த மாதிரி ஓரிடத்தில் அவனைச் சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம், அவனுடன் ஐக்கியமடைந்தும் விடலாம்' என்று அவனுக்குத் தோன்றியது. நல்ல வேளையாகப் பாதுகாப்புக்காகச் சுவரோ, முள் வேலியோ எதையும் எழுப்பி இயற்கையை களங்கப்படுத்தவில்லை அங்கே. அடடா! சிறுவன் ஒருவன் கடற்கரையின் ஈர மணலில் குன்றுகளைச் சமைப்பது போலல்லவா இறைவன் இங்கே அலட்சியமாக மலைகளைப் பிடித்து வைத்திருக்கிறான்! மனிதன் மீதுள்ள கருணையால் அவன் உச்சவரம்புச் சட்டம் எதற்கும் தன்னை உட்படுத்திக் கொள்ளாமல் லட்சோப லட்சம் ஏக்கர்களில் வனங்களைப் பயிர் செய்தும் வைத்திருந்தான். இந்தச் சிகரங்களைவிட உயர்ந்தவன்; இம் மலைகளைப் போல் நிலையானவன்; மெய்யானவன்; இவ் வனங்களைப் போல் உள்ளத்தில் என்றும் பசுமையானவன் என்பதை மானிடனுக்கு உணர்த்தத்தான் இந்த அற்புதங்களைச் சிருஷ்டித்தானா? இறைவனை சர்வ வியாபி என்று இந்த இடத்தில் வைத்து அழைக்கும்போதுதான், அந்தக் காரணப் பெயர் அர்த்தபுஷ்டியுடன் தொனிக்கிறது. ஏனெனில் உலகம், அண்டம், பேரண்டம் அனைத்தையும் கடந்து நின்று, அனைத்தையும் ஒரு நியதிக்குள் அடக்குகின்ற அந்த சர்வ வியாபியின் திருச்சபையில் அமர்ந்திருக்கும் ஆனந்த அனுபவத்தை, உலகின் ஒரு சிறு பகுதியான இந்த மலைகளைப் பார்க்கும்போதே எவ்வாறோ அடைந்து விடு கிறோம். ராக் ஆஃப் விஷன்!- பொருத்தமான பெயர்தான்!

**பி**ன்னால் காலடிச் சத்தம் கேட்டது. சில கூழாங்கற்கள் உருண்டன. யாரோ வெகு வேகமாக ஏறி வருகிறார்கள். இலேசான சிரிப்பொலியும் கேட்கிறது.

*பாவம், தினகரன்! அவன் ஒரு விவேகானந்தராகவோ அல்லது வேறு ஒரு யோகியாகவோ மாறிவிடும் மனப் பக்குவத்தை இன்னும் பெறவில்லையே! சுவாமியைப் பற்றி எண்ணினாலும் சமாதி நிலையை அடைந்துவிடவில்லையே! ஆகவே திரும்பிப் பார்த்தான். கீழே, சற்றுத் தொலைவில்... 'வனஜாவும் அவள் காதலனும்...(சீ! காதலன் என்ற அழகான வார்த்தையை இவனுக்குப் பயன்படுத்தி அதை அழுக்காக்குவானேன்?)... அவள் ஆசைநாயகன் மருதா சலமும் அல்லவா வருகிறார்கள்! அதோ அந்தத் திருப்பத் தைக் கடந்தால் அவர்கள் என்னைப் பார்த்துவிட முடியும். இந்தப் பீடைகளிடமிருந்து தப்பலாம் என்று பார்த்தால் மறுபடியும் என் எதிரிலேயே வந்து நின்கின்றனவே! எங்கே யாவது நான் ஒளிந்து கொள்ளத்தான் வேண்டும். அந்தப் பேரிக்காய் மரத்துக்குப் பின்னால் பதுங்கினால் என்ன?'*

*தினகரன் அவ்வாறே செய்தான்.*

*'சுற்றுலாக் கூட்டத்திலிருந்து இவர்கள் பிரிந்து அவசரம் அவசரமாய் முன்னால் வந்திருக்கிறார்கள். அப்படி முந்திக் கொண்டு முன்னேறி வந்தது தனிமையை அனுபவிக்கவா? அல்லது தனிமையில் அனுபவிக்கவா? சீச்சீ! அந்தக் கண் ராவிக் காட்சியை இந்தக் கண்களால் பார்க்க வேண்டுமா? தேவையில்லை! நன்றாக என்னை இங்கு மறைத்துக் கொண்டு, கண்களையும் மூடிக் கொண்டுவிடுகிறேன்...'*

*பரிதாபம்! தினகரன் அண்ட பேரண்டத்தையும் அவை அனைத்தையும் கடந்து நின்றவனையும் சற்று முன்புதான் நினைத்துப் பார்த்தான். என்றாலும்கூட இன்னமும் அவன் அளப்பரிய ஆசாபாசங்களைக் கொண்ட மனிதனாகத்தான் இருந்தான். ஆகவே 'கண்களை மூடிக் கொண்டு விடு கிறேன்' என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாலும் நடப்பதை விழி பிதுங்கப் பார்க்கவே செய்தான். மரத்தின்*

மறைவில் தன்னை மறைத்துக் கொள்ளத் தீர்மானித்தாலும் எட்டிப் பார்க்க அவன் தவறவில்லை.

அந்நிலையில் அவன் கண்டது அவன் உடலையெல்லாம் தகிக்கச் செய்தது.

மற்றவர்களுக்கு முன்னதாக உச்சியை அடைய வேண்டும் என்று விரைந்தோடி வந்ததால் அவ்விருவருக்கும் இன்னும் இரைத்துக் கொண்டிருந்தது.

''இன்னும் இரண்டு நிமிஷங்களில் மந்தையாக வந்து நிற்பார்கள், சீக்கிரம்!'' என்று கூறிச் சிரித்தான் மருதாசலம். விம்மி விழும் நெஞ்சம் வனஜாவுக்கு இன்னும் அடங்க வில்லை. சிரிக்க முடியாமல் சிரித்தபடி அவனுடைய கை வளையத்துக்குள் கட்டுப்பட்டாள். இருவரது சிரிப்பும் விரைவில் நின்றுவிட்டது. அதரங்களுக்கு வேறு வேலை இருந்ததால்.

தினகரனுக்குத் தெரியாத புதிய விஷயம் ஏதும் இல்லை. ஆனால் துரதிர்ஷ்டவசமாக இன்று அவன் பார்க்கும் படியாக அவன் கண்ணெதிரேயே இப்படி நடந்துவிட்டது. அவன் உடல் முறுக்கேறி விடைத்துக் கொண்டது.

'இங்கு வந்ததும் இறைவனைப் பற்றி என்னவெல்லாம் உயர்ந்த எண்ணங்கள் என் உள்ளத்தில் எழுந்தன? அவ்வளவு தோன்றாது போனாலும் இந்த அதியற்புதமான இயற்கைக் காட்சிகூடவா கவனத்தைக் கவராமல் போய் விடும்? உடல் வேட்கைக்குத் தீனி போடுவது ஒன்றுதான் காரியமா? உலகில் மனிதனாகப் பிறந்தது அதற்காக மட்டும் தானா? இங்கு வந்து வந்தனைக்குரிய இந்தத் திருச்சபையைக் களங்கப் படுத்தி விட்டார்களே!' கோபம் உள்ளத்தில் அக்கினியாக மூண்டெழக் கண்கள் தணலாகிச் சிவந்தன.

'இந்தத் தெருவோர நாய்களை, குப்பைமேட்டுப் பன்றிகளை இப்படியே விட்டுவைக்கக் கூடாது. ஒரு

பாய்ச்சல், கரங்களின் ஒரு வீச்சு-அவ்வளவுதான், அதல பாதாளத்தில் அலறிக் கொண்டு விழுவார்கள், சாவார்கள். உலகம் பெருமளவுக்குத் தூய்மைப்படும்; ஆனால் நரகம் கூட இவர்களை வரவேற்க வெட்கப்படும்!'

தினகரன் மரத்தின் மறைவிலிருந்து வெளிப்பட்டு ஓடிச் சாடினான். 'டிராகுலா'வைச் சந்தித்து விட்டதுபோல் அவர்கள் இவனைப் பார்த்தது தினகரனுக்குத் தெரிந்தது. அப்புறம் எல்லாம் கலங்கலாகியதுடன் மங்கவும் செய்தன; மறைந்தும் போயின!

★ ★ ★

# 12. ராஜாவுக்கு ஆபத்து!

ஏரியில் படகிலே உல்லாசமாகச் சுற்றி விட்டுத் திரும்பி வந்த பத்மநாபன் குடும்பம் ஹோட்டல் அறையில் சற்று நேரம் சீட்டாடிவிட்டுச் சாப்பாட்டுக்குக் கிளம்பியது. குளிரை எதிர்த்துப் போராடவும் இருளைத் தாக்கி வீழ்த்த வும் ஸ்வெட்டர் முதலான பலமான பாதுகாப்புக் கவசங் களுடனும் டார்ச்லைட் ஆயுதத்துடனும் புறப்பட்டது.

சாப்பாட்டுக் கூடத்தை நோக்கிப் போகும் வழியில், ரங்கன் தன் அறைக்கு வெளியே வராந்தாவில் கிடந்த ஒரு நாற்காலியில் 'சிவனே' என்று உட்கார்ந்திருப்பதானது சாத்தியிருந்த கண்ணாடி ஜன்னல் கதவுகள் வழியே தெரிந்தது. தனியே அவன் பொழுது பேகாமல் அமர்ந்திருப் பதைப் பார்க்கப் பத்மநாபனுக்குப் பாவமாய் இருந்தது.

"அப்பா கடமையாற்றப் போய் விட்டார்; மகன் கில்லிங் டைம்" என்றாள் மீனா, அவருடைய பரிவைக் கூட்டும் விதத்தில்.

பத்மநாபன் படியேறினார். வாசல் கதவு திறந்ததும், "என்ன, சாப்பிடப் போகலையா?" என்றார்.

"இல்லை, அப்பா வரட்டுமே என்று காத்திருக்கிறேன்."

"அவர் எப்போ வருவாரோ? போன காரியம் முடிஞ்சு தானே திரும்பணும்? நீ வா; நாம் சாப்பிடப் போவோம். அப்பாவிடம் நான் சொல்லிக்கறேன்."

''சரி'' என்று கிளம்பினான் ரங்கன். உற்சாகத்தை மறைத்துக்கொள்ள அவன் முயலவில்லை.

''ஸ்வெட்டர், ஸ்வெட்டர்!'' என்று கரிசனத்துடன் ஞாபகப்படுத்தினாள் மீனா.

சற்று நேரத்தில் சப்பாத்தியும் ஸாகுவும் ஆவி பறக்கும் நிலையிலேயே இதமாக வயிற்றுக்குள் இறங்கிக் கொண் டிருந்தன அனைவருக்கும்.

''மீனா! நடராஜன் ஸாருக்குச் சாப்பாடு எடுத்து வைக்கச் சொல்லிவிட்டுப் போகணும். ஞாபகம் வைச்சுக்கோ'' என்றார் பத்மநாபன். பிறகு ரங்கநாதன் பக்கம் திரும்பி, ''இப்படி அவர் அடிக்கடி ஏதாவது ஜோலியா கிளம்பிட் டார்னா உங்களுக்கு நேரத்தை ஓட்டறது கஷ்டமாகத்தான் இருக்கும்'' என்றார் அனுதாபத்தோடு.

''அவரோடு கிளம்பி வந்ததே தப்போன்னு தோணும் சில சமயம். கோபம் கோபமாக வரும். ஆனால் அவர் திரும்பி வந்த உடனேயே எல்லா மனத்தாபமும் பறந்துவிடும். இங்கேயாவது ஓரளவுக்கேனும் அவருடன் இருக்க முடிகிறதே. சென்னையில் ஒரே வீட்டில் அவர் யாரோ நான் யாரோ என்பது போலத்தான் இருப்போம்.''

''அப்படி இருந்தாலும் அப்பாவும் பிள்ளையும் பாசத் துடன் ஒட்டுதலாயிருக்கேளே!''

''ஸார்! நினைவறிந்து நான் என் தாயாரைப் பார்த்த தில்லை. தாய், தந்தை, நண்பர் எல்லாம் எனக்கு அவர்தான். ஒவ்வொரு நாளும் பத்து நிமிஷங்கள்தான் என்னுடன் செலவிட முடியுமென்றாலும் அந்தப் பத்து நிமிஷங்கள் முழுமையாக எனக்கே தந்து விடுவார். ஏக்கத்தைத் துடைத்து நெஞ்சமெல்லாம் இனிக்கச் செய்துவிடுவார்.''

''நான் பம்பாயில் ஒரு பிரமுகரைப் பேட்டி காணச் சென்றிருந்தபோது, இடையில் அவருக்கு ஒரு ஃபோன்

வந்தது. 'நாலரை மணிக்கு வா, அப்போதான் கொஞ்சம் ஃபிரீயா இருப்பேன்' என்று இவர் ஃபோனில் சொன்னார். பின்னர் ஃபோனை வைத்துவிட்டு என்னைப் பார்த்து, 'என் மகன்; ஏதோ காரியமா என்னைச் சந்திக்கணுமாம்' என்றார். எப்படி இருக்கிறது கதை? அப்பாவைப் பார்க்கப் பிள்ளை அப்பாயிண்ட்மெண்ட் ஃபிக்ஸ் பண்ணிக் கொள்ளணும்!''

சிரிப்பு அடங்கிய பிறகு ரங்கன் சொன்னான்: ''எங்கள் நிலைமை அவ்வளவு மோசமில்லை. என்றாலும் இங்கே விடுமுறைக்கென்று வந்த பிறகும் அவருடன் அதிக நேரம் உறவாட முடியாதது ஏமாற்றமாகத்தான் இருக்கிறது.''

''சொல்லி விடுகிறதுதானே இவர்; 'நான் லீவில் இருக்கேன் சுவாமி! என்னைத் தொந்தரவு பண்ணாதே'ன்னு?''

''நோ நோ! அது அவருக்குப் பிடிக்கவே பிடிக்காது. டியூட்டி என்று வந்துவிட்டால், யூனிஃபாரம் அணிந்த ஒருவர் உதவி என்று கேட்டுவிட்டால், அதை அவர் இடையூறாகவே நினைக்க மாட்டார். சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு அதில் இடமே இல்லை. எனக்கும் அவரது இந்தப் போக்கு பழகிப் போய்விட்டது.''

''பரவாயில்லை. உங்களுக்குப் பேச்சுத் துணைக்கு நாங்கள் இருக்கிறோமே, உற்சாகமா யிருங்கள்'' என்றாள் அம்புஜம்.

''ரொம்ப தாங்க்ஸ் அம்மா!'' என்றான் ரங்கன். ''உங்களை அம்மா என்று நான் கூப்பிடுவதில் உங்களுக்கு ஆட்சேபணை இல்லையே?''

''தாராளமாகக் கூப்பிடு, ரங்கா!'' என்றாள் அம்புஜம் பெருமிதத்துடன்.

''அம்மா! இவர் வயசிலே உனக்குப் பிள்ளை இருக்கணும்னா உனக்கு இன்னும் இரண்டு வயசு கூடிடும்; ஞாபகம் இருக்கட்டும்'' என்றாள் மீனா.

"ரங்கன் மாதிரி எனக்கு ஒரு பிள்ளை இருந்தான்னு சொன்னால் நான் இப்பவே தொண்டு கிழவியாகிவிடத் தயார்" என்றாள் அம்புஜம்.

"நான் இதை மறக்கவே மாட்டேன், அம்மா" என்ற ரங்கனுக்குக் கண்ணீர் தளும்பி விட்டது. கர்சிப்பை எடுத்து இல்லாத வியர்வையைத் துடைத்துக் கொள்வது போல் பாசாங்கு காட்டிக் கண்ணீரை ஒற்றினான். அவன் நடிப்பு யாரையும் ஏமாற்றவில்லை.

**அ**றைக்கு அவர்கள் திரும்பிச் சற்று நேரத்தில் வாசல் கதவு தட்டப்பட்டது. "செஸ் ஆடத் தெரியுமா ஸார்?" என்று கேட்டுக் கொண்டே ரங்கன் உள்ளே நுழைந்தான். தன் கையில் பர்ஸ்போல வைத்திருந்த ஒரு பையின் 'ஜிப்'பைப் பிடித்து இழுத்தான். அது புத்தகம் போல் பிரிந்தது. உள்ளே செஸ் போர்டும் காய்களும் சிறிய அளவில் இருந்தன.

"இந்த வருஷம் என் பிறந்த நாளுக்கு அப்பா வாங்கிக் கொடுத்தது" என்றான் ரங்கன். ரோஸ் வுட்டினாலும் தந்தத்தாலும் ஆன செஸ் போர்டு-காய்கள் என்றும் பர்ஸ் போன்ற மேலுறை உயர்ரகத் தோலினால் ஆனது என்றும் பத்மநாபன் கவனித்தார்.

"மீனாதான் சுமாராக ஆடுவாள்" என்ற பத்மநாபன் மகளைப் பெயர் சொல்லி அழைத்தார். அடுத்த கணம், "செஸ்தானே? இதுவரையில் என்னை யாரும் தோற்கடித்த தில்லை" என்று சொல்லிக்கொண்டே உள் அறையை மறைத்த திரையைத் தள்ளிக்கொண்டு வந்து அமர்ந்தாள் மீனா. வெளியே ரங்கன் குரல் கேட்டதுமே உள்ளே அவள் அவனைச் சந்திக்கத் தயாராகி விட்டிருந்தாள் என்பது பத்மநாபனுக்குப் புரியாமல் போகவில்லை.

அவர் குளிரை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தித் தாளிட்டுவிட்டு வந்து வோட்ஹவுஸின் நகைச்சுவையில் ஆழ்ந்தார். புத்தகம் படிக்கையில் தம்மை மறந்து அவர் சிரித்தபோது 'எதற்குச் சிரிக்கிறீர்கள்?' என்று கேட்க ஆள் இல்லை. உள்ளே விசுவைத் தூங்கப் பண்ண முயன்ற அம்புஜத்தை அவன் தூங்கப் பண்ணி விட்டு அவளுடைய தாலிச் சரட்டுடன் விளையாடிக்கொண்டிருந்தான். அனசூயா கண்ணயர்ந்து பத்து நிமிஷங்களுக்கு மேலாகி விட்டது. மீனாவும் ரங்கனும் இந்த உலகிலேயே இல்லை! வாசல் கதவின் உடைந்த கண்ணாடி வழியே சில்லென்று காற்று புகுந்தபோது முகத்தைச் சுளித்துக் கொண்டு பத்மநாபன் நிமிர்ந்தார். அப்போது செஸ் ஆட்டம் ரொம்ப ரொம்ப நிதானமாகவே முன்னேறுவதைக் கவனித்தார். ஒவ்வொரு தடவையும் அவர்கள் காயை நகர்த்துவதற்கு முன்னால் ஒன்றிடம் ஒன்று சிறைப்பட்ட கண்கள் விடுதலைக்குப் போராட வேண்டியிருந்தது; எங்கெங்கோ உல்லாசமாகத் திரிந்து கொண்டிருந்த மனங்களைக் காதைப் பிடித்துத் திருகி இழுத்து வரவேண்டி யிருந்தது! இந்த லட்சணத்தில் ஆட்டம் முடிவது எப்போது?

பத்மநாபன் பெரிதாக ஒரு கொட்டாவி விட்டார், அவர்களுக்குக் கேட்குமாறு.

**மீ**னா புரிந்து கொண்டாள். நன்றாகக் கவனித்துப் பார்த்து ஒரு காயை நகர்த்திவிட்டு, "ராஜாவுக்கு ஆபத்து!" என்றாள்.

"இந்த ராணியால் தாக்கப்படத்தானே காத்திருந்தான் ராஜா!" என்று சொல்லிவிட்டு செஸ் பலகையை மடக்கி, ஜிப்பை இழுத்து மூடிக்கொண்டே எழுந்தான் ரங்கன், தன் அறைக்குத் திரும்ப.

★ ★ ★

# 13. வனதேவதை அருவி

வனதேவதைகள் விளையாடும் இடம் என்றால் அது அசாதாரண அழகோடுதான் இருக்க வேண்டும் என்று நினைத்துக்கொண்டே 'ஃபேரி ஃபால்ஸ்' என்ற அருவியை நோக்கி மெல்ல நடந்து சென்றனர் பத்மநாபனும் அவரது குடும்பத்தினரும்.

விசுப்பயல் தலையில் ஒரு தொப்பியை அணிந்து தோளி லிருந்து ஒரு விளையாட்டுத் துப்பாக்கியையும் தொங்க விட்டுக்கொண்டு ராணுவ நடை போட்டான். வேட்டைக் காரன் என்ற நினைப்பு அவனுக்கு. மலைச் சரிவுகளையும் புதர்கள் அடர்ந்திருந்த பகுதிகளையும் பத்தடிக்கு ஒரு தடவை சுட்டிக் காட்டி, "எங்கேயாவது புலி பார்த்தால் சொல்லு; ஷூட் பண்ணிடறேன்" என்றான்.

பத்மநாபனும் அவனுடைய திருப்திக்காகச் சற்று நேரத்துக்கொரு தடவை பரபரப்படைந்தவர் போல் நடித்து, "அதோ கரடி! சுடு! சுடு! சீக்கிரம்! மேலே பாய்ஞ்சுடும்!" என்று கூறி அவனுக்குச் சமதையாக விளையாடியபடியே சென்றார்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு அவர்கள் ஃபேரி ஃபால்ஸை அடைந்தார்கள். ரொம்ப தூரம்தான். ஆனால் பேசிக் கொண்டே நிதானமாக நடந்ததாலும் குளிர்ந்த சூழலில் வெய்யில் கதகதப்பாக இருந்ததாலும் சிரமமே தெரிய வில்லை, குழந்தைகளுக்குக்கூட. அருவியை

நெருங்கியபோது அவர்களுக்கு ரொம்ப ஏமாற்றமாகவே இருந்தது.

"சென்னை கார்ப்பொரேஷன் குழாயில் கூட இன்னும் கொஞ்சம் அதிகமாக ஜலம் வரும்" என்றாள் அம்புஜம்.

ஒரு பிரும்மாண்டமான பாறைமீதாக வழிந்து குளமாகத் தேங்கியிருந்தது நீர். அதிகமாக அருவி கொட்டாததால் இந்நீர் இலை தழைகள் விழுந்து அழுகிக் கறுப்பாகக் காட்சியளித்தது. குளம் நிரம்பிவிட்டதால் வழிந்தோடிய நீர் மிக மிகச் சிறிய ஓடையாகச் சலசலத்துச் சென்றது.

"வனதேவதைகள் வளைய வரக்கூடிய இடமாகத் தென்பட வில்லையே?" என்று வருத்தப்பட்டாள் மீனா.

"குட்டிச்சாத்தான்கூட வராது" என்றாள் அம்புஜம்.

"ஒரு மழை பெய்தால் களை கட்டிவிடும். ஸெகண்ட் ஸீஸனுக்கு வரலாம்" என்றார் பத்மநாபன்.

"அடடா! நினைச்சுண்டால் கப்பல் மாடல் காரிலே ஏறிண்டு கொடைக்கானலுக்கு வருகிற மாதிரிதான் பேச்சு கிழியறது."

"ஏன் அம்புஜம், 'நாம் வரலாம்' என்று சொன்னேனா? ஸெகண்ட் ஸீஸனுக்குத் 'தண்ணீர் வரலாம் இங்கே' என்றேன்!"

மீனா கொல்லென்று சிரிக்க, அம்புஜம் தோளில் தன் முகவாயை இடித்துக் கொண்டாள்.

"அதோ பார் அம்புஜம்! அனசூயா சொக்காய் விளிம்பை அகலமாய் விரித்துப் பிடித்துக் கொண்டு, குதிகால்களை உயர்த்தி மெல்ல ஓடுகிறாள், தன்னையே வனதேவதையாக எண்ணிக் கொண்டு! அதைப் பார்த்துச் சந்தோஷப்படேன்! கண்ணெதிரே இருக்கிற வன தேவதையை விட்டுவிட்டு இல்லாத குட்டிச் சாத்தானை ஏன் தேடுகிறாய்?"

*ஒரு பட்டாம் பூச்சியைப் போல் இங்குமங்கும் பாய்ந்து சுற்றினாள் அனசூயா, அம்புஜமும் பத்மநாபனும் பேச்சு சுவாரசியத்தில் தங்களை மறந்தனர், குளத்தின் விளிம்பில் நின்று, விசு, வாலுடன் கூடிய தவளைக் குஞ்சுகளை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தான். மீனா ஒரு பாறை யின் மீது ஒய்யாரமாகச் சாய்ந்து, மலைச் சிகரங்களைப் பார்த்தபடி மீண்டும் பகற் கனவுகளில் ஆழ்ந்தாள். செஸ் விளையாட்டுக்கு அடுத்தபடி வேறு என்னென்ன விளை யாட்டுக்களை அவள் கற்பனை செய்து கொண்டிருந் தாளோ?*

**தி**டீரென்று *"என்னை விடு! என்னை விடு!" என்று அனசூயா கத்துவது கேட்டது.*

*பத்மநாபன் திடுக்கிட்டுச் சுற்று முற்றும் பார்த்தார். குழந்தையைக் காணோம்! "அனசூயா! அனசூயா!" என்று குரல் கொடுத்துக் கொண்டே சத்தம் வந்த திசையை நோக்கித் தலை தெறிக்க ஓடினார்.*

*ஃபேரி ஃபால்ஸின் இடப்புறத்தில் சென்ற சிறிய பாதையோடு போனபோது அது ஒரு பாறையைச் சுற்றி வளைக்கும் திருப்பத்தில், அமர்தலிங்கத்தின் கரங்களுக் கிடையில் அகப்பட்டுக் கொண்டு அவன் தோள்களை அனசூயா குத்திக் கொண்டிருப்பதைப் பார்த்தார் பத்மநாபன். அமிர்தலிங்கம் பெரிதாகச் சிரித்தானே ஒழியப் பிடியைத் தளர்த்தி அவளை இறக்கி விடவில்லை.*

*பத்மநாபன் வரும் காலடி ஓசை கேட்டதும் இருவரும் திரும்பிப் பார்த்தனர். அனசூயாவின் கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் வடிந்து கொண்டிருந்தது.*

*"உங்கள் பெண்ணுக்கு எத்தனைக் கெத்தனை அழகு இருக்கோ, அத்தனைக்கத்தனை நெஞ்சழுத்தமும் இருக்கு.*

ஒரு முத்தம் கொடுன்னா மாட்டாளாம்! ஒரே பிடிவாதம்!'' என்றான் அமிர்தலிங்கம்.

பத்மநாபன் கிட்டத்தில் வந்ததும் அனசூயா பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரமாக அவர் பக்கம் சரிந்தாள். தகப்பனாரிடம் வந்து சேர்ந்த பிறகும் அவர் தோளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு விம்மலைத் தொடர்ந்தாள். அவள் முதுகைத் தடவிக் கொடுத்தவாறே. ''இவ்வளவுதானே! நான் என்னமோ ஏதோன்னு பயந்துட்டேன்'' என்றார் பத்மநாபன்.

''நீங்க பயந்ததிலும் அர்த்தமிருக்கு. ஊரை விட்டு ஊர் வந்திருக்கும்போது குழந்தைகளைத் தனியாக விடக்கூடாது, ஸார். விபரீதமாய் ஏதாவது நடந்துபோச்சுன்னா அப்புறமாக கையைப் பிசைஞ்சுண்டு நிற்கறதிலே என்ன பிரயோசனம்? அதுவும் கொடைக்கானலில் மேடு பள்ளம், ஏரி குளம்னு திரும்பிய பக்கமெல்லாம் ஆபத்துத்தான்.''

''குழந்தை ரொம்பப் பயந்துட்டாள்'' என்றார் பத்மநாபன். அவள் முதுகைத் தட்டிக் கொடுத்தவாறே, ''என்ன ஆயிடுத்து அனு? நீ ஸ்வீட்டா இருக்கேன்னு மாமா ஒரு முத்தம்கேட்டா, அதுக்குப் போய் இப்படி விசும்பி அழணுமா?'' என்று ஆசுவாசப்படுத்தினார்.

''ஒருவேளை என் தாடியைப் பார்த்துப் பயந்துட்டாளோ என்னவோ?'' என்றான் அமிர்தலிங்கம்.

''அது சரி, என்ன இப்படி ஏகாந்தமாக உட்கார்ந்திருக்கீங்க?''

''தனிமையில் ஓர் இனிமை இருக்கத்தானே செய்கிறது? நாவலாசிரியரான உங்களுக்கு இதை நான் சொல்லியா தர வேண்டும்?''

''உங்கள் தனிமையை நான்தான் வந்து கெடுத்துட்டேன்.''

"நோ நோ யூ ஆர் வெல்கம். எங்கே உங்க ஃபிரெண்டு டி.ஐ.ஜி? உங்க பின்னோடு வரலையா?"

"ஸி.ஐ.டி.க்கும் ஜர்னலிஸ்டுக்கும் ஏது ஸார் ஓய்வு? அவர் லீவிலே வந்திருந்தாலும் லோக்கல் போலீஸ் உதவிக்கு அழைத்தால் போகாமலிருக்க மனசு இடம் தராது. அதே மாதிரிதான் நானும். இங்கே சந்திக்கிற மனிதர்கள், பார்க்கிற காட்சிகள் சம்பாஷணைகள் எல்லாம் மனத்தில் பதிந்து விடுகின்றன. பின்னால் கொடைக்கானல் பற்றி நாவலோ கட்டுரையோ எழுதும்போது இந்த அனுபவங்கள் பயன் படுகின்றன. அந்த விதத்தில் பார்க்கும்போது இதை எனக்கு விடுமுறை என்று கருதவா முடியும்?"

"அம்மா கிட்டே போகலாம். அப்பா!" என்றாள் அனசூயா.

"அப்புறம் சந்திக்கிறேன், ஸார்!" என்று சொல்லி விட்டுக் கிளம்பினார் பத்மநாபன்.

"இதோ நானும் வந்துவிட்டேன்" என்று கூறித் தரையில் விரித்திருந்த துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு கிளம்பினான் அமிர்தலிங்கம்.

**அ**னசூயாவைக் கீழே இறக்கி நடத்தி அழைத்துக் கொண்டு திரும்பியபோது எதிரே அம்புஜம் விசுவைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு பரபரப்புடன் வருவ தைப் பார்த்தார் பத்மநாபன். தொலைவில் இருந்தபடியே, "ஒன்று மில்லை, கலவரப் படாதே" என்று கத்தி அவள் துரித நடைக்குத் தடை விதித்துச் சிரமத்தைக் குறைத்தார்.

நிதானமாக எல்லாரும் ஃபேரி ஃபால்ஸைத் திரும்பவும் அடைந்தபோது அதற்குள் அங்கே டி.ஐ.ஜி. நடராஜனும் ரங்கனும் வந்திருக்கக் கண்டனர். மீனாவுக்கருகே ஒரு பாறைமீது அவர்கள் அமர்ந்திருக்க, மூவரையும் வெய்யில் கும்மாளமாகக் குளிப்பாட்டிக் கொண்டிருந்தது.

''என்ன ஸார், அஃபிஷியல் ஒர்க்கிலிருந்து ஓய்வு கிடைத்ததா?'' என்றார் பத்மநாபன்.

''ஏதோ, ஒருமாதிரியா சற்று நேரத்துக்கு என்னை விடுவிச்சுக்கிட்டு வந்தேன்.''

''இப்போதான் அமிர்தலிங்கத்திடம் சொல்லிண்டிருந் தேன். பத்திரிகையாளருக்கும் போலீஸ்காரருக்கும் ஓய்வு ஏதுன்னு... இரண்டு நாளா சிரமப்படறேளே, குற்றவாளி யைக் கண்டுபிடிச்சேளா, இல்லையா?''

''குற்றவாளியா? குற்றம் நடந்திருக்கிறது என்று நிரூ பணம் ஆனால் அல்லவோ குற்றவாளியைக் கண்டுபிடிக்கிற பிரச்னை எழும்?''

''அப்படின்னா தீர்க்க தரிசனப் பாறைக்கு வந்த பிறகும் கூடக் கண் தெரியாமல்தான் அவன் கீழே விழுந்து விட்டான் என்கிறீர்களா?''

''நீங்க சொல்கிற மாதிரி அது யதேச்சையாக நடந்து விட்ட ஒரு விபத்தாக இருக்கலாம்; அல்லது தற்கொலை யாகவும் இருக்கலாம்.''

''இல்லாது போனால் யாராவது அவனைத் தள்ளி விட்டு விட்டு உங்ககிட்டே பிடிபடாமல் தப்பிச்சுக்கிட்டும் இருக்கலாம்'' என்றான் அமிர்தலிங்கம்.

''அதுவும் சாத்தியம்தான்'' என்று டி.ஐ.ஜி. தலை யாட்டினார்.

''சரிதான், உங்களுடன் பழகிய தோஷத்தால்தான் தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மையையே சிருஷ்டித்திருப் பானோன்னு நினைக்கும்படி பேசறீங்களே!''

''வேறே எந்த விதமாகப் பேசச் சொல்றீங்க மிஸ்டர் பத்மநாபன்?'' என்று இலேசாகக் கடுமை தொனிக்கக் கேட்டார் நடராஜன். பிறகு அமிர்தலிங்கத்தைச் சுட்டிக் காட்டி, ''இதோ இவரையும் சேர்த்து மொத்தம் இருபத்

திரண்டு சுற்றுலாப் பயணிகள் அந்தப் பக்கம் உலாத்திக் கொண்டிருந்திருக்கிறார்கள். யார் பேரிலேன்னு சந்தேகப் படறது?'' என்று கேட்டார்.

''நீங்க எதுக்கு அங்கே போய்ச் சேர்ந்தீங்க?'' என்று அமிர்தலிங்கத்தை வினவினார் பதம்நாபன்.

''நான் கால்ஃப் ஆடிப் பழகினேனில்லையா? களைப்பா யிருந்தது. கிளப் கட்டட வாசலில் பிரம்பு நாற்காலிகளும் மேஜைகளும் போட்டிருந்தாங்க. கலர் கலரா பெரிய குடையும் விரிச்சு வைச்சிருந்தாங்க.''

''உலகையே ஒரு குடை நிழலின் கீழ் ஆளவேண்டும் என்று எத்தனையோ மன்னர்களும் சர்வாதிகாரிகளும் முயன்றிருக்கிறார்கள்; நீங்கள் ஒரு குடை நிழலையாவது ஆளலாமேன்னு அங்கே போய் உட்கார்ந்தீங்களாக்கும்!''

சிரிப்பு ஓய்ந்ததும் அமிர்தலிங்கம் தொடர்ந்தான்: ''ஒரு கோக் கொண்டு வரச் சொல்லி உறிஞ்சிக்கிட்டிருந்தேன். அப்போ ஒரு பட்டாளம் ஸூயிஸைட் பாய்ண்டைப் பார்த்துவிட்டுத் திரும்பி இந்தப் பக்கம் மலை ஏறிச்சு. என்னவோ மேலே போறாங்களே, அந்தப் பாதை எங்கே கொண்டு போய் விடுகிறதுன்னு பார்ப்போமேன்னு நானும் கிளம்பி அவங்களோடு சேர்ந்துக்கிட்டேன். பத்தடி நடந் திருப்போம். 'வீல்'னு ஒரு சத்தம். எல்லோரும் விழுந்தடிச்சு ஓடினோம். அந்த விளிம்பிலே யிருந்து எட்டிப் பார்த்தோம். அதள பாதாளத்திலே ஒரு மனுஷன் குப்புற விழுந்து கிடந்தான்!...''

''இவர் இப்படிச் சொல்றார். ஆனால் மற்ற சுற்றுலாப் பயணிகள், 'இவர் யாரோ புது ஆசாமி எங்களுக்குத் தெரியாது; இவர் எங்களோடு வந்து சேர்ந்துக்கிட்டதாகச் சொல்கிறாரே ஒழிய நாங்கள் இவரைக் கவனிக்கலை; நாங்க பாட்டுக்கு எங்களுக்கிடையில் பரிகாசமாப் பேசிச் சிரிச்சுக் கிட்டுப் போனோம்; அப்போ 'வீல்'னு சத்தம் கேட்டது;

மேலே ஓடிப் போய்ப் பார்த்தோம்' அப்படீங்கறாங்க. ஆனால் அதனால இவருக்கு ஒண்ணும் நஷ்டம் இல்லை. இறந்து போன தினகரனைக் கொல்வதற்கு இவருக்குக் காரணம் ஒண்ணுமில்லையே? அவனுக்கும் இவருக்கு மிடையில் எந்த விதமான சம்பந்தமோ தொடர்போ கிடையாதே.''

''இறந்துபோனது யாருன்னு சொன்னீங்க? தினகரனா? அவனைப் பற்றி வேறு ஏதாவது விவரம் தெரிந்ததா?''

''தெரியாமல் என்ன? சர்க்கிள் இன்ஸ்பெக்டர்கிட்டே யிருந்து எனக்குத் தகவல் கிடைத்து நான் போவதற்குள் இருட்டிவிட்டது. ஆனாலும் ஜீப்பிலிருந்த சர்ச் லைட்டுக்கு நீளமான ஒயர் கனெக்ட் பண்ணி வெளிச்சம் போட்டுப் பார்த்தேன். அப்புறம் போலீஸ்காரர் ஒருவருக்குத் தைரியம் சொல்லி அவர் தோளிலும் இடுப்பிலும் கயிற்றைக் கட்டிப் பிடிச்சுக்கிட்டு மெல்ல இறக்கினோம். இந்தப் போலீஸ் காரர்தான் கால்ஃப் கிளப் பக்கம் அன்று டியூட்டியில் இருந்தவர். உயரே போனவர்கள் பரபரப்புடன் திரும்பி வந்து விவரம் சொன்னதும் இன்ஸ்பெக்டருக்குக் கிளப்பி லிருந்தே ஃபோன் செய்தவர் இவர்தான். கெட்டிக்காரர். பஸ் ஏறி நழுவிடப் பார்த்த சுற்றுலாப் பயணிகளை விசாரணை முடியறதுக்கு முன்னாடி கிளம்பக் கூடாதுன்னு தடுத்து நிறுத்திட்டார்...''

இச்சமயத்தில் விசுப் பயல் பத்மநாபனின் மடிமீது ஏறி அவர் காதோடு ஏதோ கிசுகிசுத்தான். ''சரி, சரி! அக்காவைக் கேட்டு வாங்கிக்கோ'' என்றார் அவர், இடையூறினைப் பொறுக்க மாட்டாதவராக. ''மீனா! குழந்தை பிஸ்கட் கேட்கிறானே, எடுத்துத் தரப்படாதா? சாப்பிடத்தானே கொண்டு வந்தேள், இல்லே திருப்பி எடுத்துப் போகவா?'' என்று சற்றுக் கடுமையாகவே பேசினார்.

"இங்கே வாடா கண்ணா! நான் தரேன்; அப்பாவைத் தொந்தரவு பண்ணாதே" என்று கூறி ஏக்கத்துடன் தகப்பனார் மடியை விட்டு இறங்கிய மகனை இழுத்து அணைத்துக் கொண்டாள் அம்புஜம்.

"கான்ஸ்டபிள் இடுப்பிலே கயிற்றைக் கட்டி இறக்கினீர்கள்... பிறகு?" -பத்மநாபன் கேட்டார்.

"கீழே இறந்து கிடந்தானே அவனை மறுநாள் பகலில் தான் மேலே கொண்டு வரமுடியும் என்பது நிச்சயமாகி விட்டதால் அப்போதைக்கு அவன் பாக்கெட்டுகளை மட்டும் பரிசோதிக்கச் சொன்னேன்."

"என்ன கிடைச்சுது?"

"ஒரு பர்ஸ், ஒரு டயரி இரண்டும். பர்ஸில் கொஞ்சம் பணம், மளிகைக் கடை பில் இவை தவிர வேறு ஒண்ணும் இல்லை. டயரியில் பெயர், வீட்டு விலாசம், ஆபீஸ் விலாசம் இரண்டும் இருந்தன. ஆனால் டயரி எழுதும் பழக்கம் அவனுக்கு இல்லை. ஏதோ சில ஞாபகக் குறிப்புகள், வண்ணான் கணக்கு போன்றவற்றைத்தான் டயரியில் எழுதியிருந்தான்."

"இவ்வளவுதானா?" என்று ஏமாற்றத்துடன் வினவிய பத்மநாபன், "ஆனால் அதில் கேள்விக் குறி எழுப்பிய ஒரு விஷயத்தையும் நான் கவனித்தேன்" என்று டி.ஐ.ஜி. கூறியதும் மீண்டும் உற்சாகம் அடைந்தவராக நிமிர்ந்தார்.

"டயரியில் ஒரு தாள் கிழிக்கப்பட்டிருந்தது" என்றார் டி.ஐ.ஜி.

"அதிலிருந்து என்ன ஊகிக்கிறீர்கள்?"

"ஊகத்துக்கென்ன? எத்தனை விதமான ஊகங்களுக்கு அது இடமளிக்கும் என்பது நாவலாசிரியரான உங்களுக்குத் தெரியும். யாராவது ஒரு நண்பனுக்கு அவன் தன் விலாசத்தை எழுதிக் கிழித்துக் கொடுத்திருக்கலாம். அல்லது

அவன் எழுதி வைத்திருந்த ஏதோ ஒரு விஷயம் பிறர் கண்ணில் படக் கூடாது என்பதற்காக அதில் அக்கறை கொண்டுள்ள யாரோ ஒருவர் அவனுக்குத் தெரிந்தோ தெரியாமலோ அதைக் கிழித்துப் போட்டிருக்கலாம். ஆனால் ஊகங்களால் யாதொரு பயனுமில்லை. கோர்ட்டில் சாட்சியங்களைத்தான் சமர்ப்பிக்க வேண்டும், ஊகங்களை அல்ல.''

மீனா பிஸ்கட் பொட்டலத்தைப் பிரித்திருந்தாள். கரகரப்பான மொனாகோ உப்புப் பிஸ்கட். விருந்துண்டவனுக்குக்கூட நாவில் ஜலம் ஊறும் அதைப் பார்த்தால். இவர்களுக்கோ நடந்து வந்த களைப்பு. பத்மநாபன் எப்போது கை நீட்டலாம் என்பதைக் கணிக்க விழிகளைக் கண்ணோரத்துக்குச் செலுத்தினார். ஆவலுடன் காத்திருக்கும் விசுவைக்கூட அலட்சியம் செய்துவிட்டு முதன்முதலில் நாலு பிஸ்கட்களை எடுத்து மீனா, ரங்கன் கரத்தில் வைப்பதை அவர் கவனித்தார். அப்போது அவள், தன் விரல்கள் அவனது உள்ளங் கையில் படாதவாறே சுலபமாகக் கொடுத்திருக்கலாம். ஆனால் அவள் அவ்வாறு செய்யவில்லை. தேவைக்கு அதிகமாகவே அவள் விரல்கள் அங்கே உறவாடிக் கொண்டிருந்தன. அவள் கண்கள் சவால் விடுவது போல் அவன் முகத்தை ஏறிட்டு நோக்கின. உண்மையில் ரங்கன்தான் சற்றுக் கூச்சப்பட்டு முகம் குனிந்தான். 'அவள் கல்லூரித் தோழிகள் வர்ணிப்பது போல், பாரசீகப் பூனைதான் என் மகள்; ஆனால் பாய்ந்தால் புலி!' என்று தமக்குள் நினைத்துக் கொண்டார் பத்மநாபன். தாயும் தந்தையும் கதை கேட்கும் சுவாரசியத்தில் தன்னைக் கண்காணிக்க மாட்டார்கள் என்று எண்ணிக் கொண்டாளா இவள்? 'அம்புஜம்! இதைக் கவனித்தாயா என்று ஜாடை காட்ட நினைத்துப் பத்மநாபன் தம் மனைவி பக்கம் திரும்பினார். அவளும்

தன் மகளின் போக்கைக் கவனியாதது போல் கவனித்து வருவதைக் கண்டுகொண்டார். 'சரி, அப்புறம் பேசிக் கொள்ளலாம்' எனத் தீர்மானித்தவராய் அவர் மீண்டும் டி.ஐ.ஜி.யை ஏறிட்டு நோக்கினார்.

"இறந்து போனவன் பெயர் தினகரன் என்பதும் அவன் விலாசமும் தெரிந்தபிறகு அத்தருணத்தில் அந்தப் பக்கம் இருந்த சுற்றுலாப் பயணிகள் அனைவரையும் விசாரித் திருப்பீர்கள். எல்லோரும் ஒரு முகமாகத் தினகரன் என்ற பெயர் கொண்ட யாரையும் எங்களுக்குத் தெரியாது என்று சொல்லியிருப்பார்கள். 'அப்படியானால் சரி' என்று எல்லாரையும் பஸ்ஸில் ஏற்றி அனுப்பி விட்டீர்களாக்கும்."

"எல்லோரையும் பஸ் ஏற்றி அனுப்பியது என்னவோ வாஸ்தவம்தான். ஆனால் அவர்களில் சிலர் தினகரனை எங் களுக்கு நன்றாகத் தெரியும் என்றுதான் சொன்னார்கள்!"

"என்ன? என்ன? அப்படி ஒப்புக் கொண்டவர்களையுமா அனுப்பிட்டீங்க?"

"ஆமாம். விலாசத்தை மட்டும் குறித்துக் கொண்டேன். கேஸ் ஜோடிப்பது என்று கேள்விப்பட்டிருக்கிறீர்களா? அப்படி ஜோடிப்பதற்குக்கூட வகையாக ஒரு விஷயமும் அகப்படவில்லை. நான் என்ன செய்ய?"

"தினகரனை அவர்களுக்கு எப்படித் தெரியுமாம்?"

"கணவனை மனைவிக்குத் தெரியாதா?"

"என்னது? சுற்றுலாப் பயணிகளில் தினகரனின் மனைவியும் ஒருத்தியா?"

"ஆமாம்; தினகரன் என்ற பெயரையும் விலாசத்தையும் சொன்ன உடனே நன்றாக ஒப்பாரி வைத்துப் பலமாக அழுதாள். கணவன் இறந்து விட்டானே என்றுகூட அவளுக்குக் கவலை இல்லை. விதவை என்ற ஒரு சொல்

தன்னிடம் வந்து ஒட்டிக் கொண்டுவிட்ட அருவருப்புத் தான் அவளுக்கு அதிகமாக இருந்ததாகத் தோன்றியது.''

''அதாவது கணவன்-மனைவியிடம் சுமுகமான உறவு இல்லை!'' என்று கூறியபடியே தம் கரத்துக்கு வந்து சேர்ந்த பிஸ்கட்டைச் சுவைத்தார் பத்மநாபன். கதையும் சுவை யாகத் தான் இருந்தது அவருக்கு.

''ஆமாம், விசாரணையின்போது அவள் நடத்தை கெட்டவள் என்பது புரிந்தது. தினகரன் மனம் நொந்து போய்த் தன் வீட்டிலிருந்து கிளம்பி வந்திருக்கிறான், கொடைக்கானலுக்கு. அவன் இங்குதான் வந்திருக்கிறான் என்று தெரியாமலே இவளும் அவன் வீட்டை விட்டுப் போன இரண்டாம் நாள் தன் காரியாலய சக ஊழியர்கள் சிலருடன் இந்தச் சுற்றுலாக் கோஷ்டியில் சேர்ந்து புறப்பட்டு வந்திருக்கிறாள்.''

''அடி கிராதகி!'' -இதுவரை மௌனமாக எல்லா வற்றையும் கேட்டு வந்த அம்புஜம் இப்போது பொறுக்க முடியாமல் இடைமறித்துக் கூறினாள்: ''அகமுடையானைத் துரத்தி அடித்த கையோடு இவளுக்குச் சுற்றுலா வேறு கேடா?''

''அவளுடன் வந்த ஆபீஸ் சகாக்கள் அனைவருக்கும் அவள் கணவன் தினகரனைத் தெரியும். அவர்களில் ஒருவர் பெரிய அதிகாரி. இப்போது அவளுடன் சிநேகமாக இருப்பது அவர்தான். அவருக்கு முன்னால் எத்தனையோ.''

''கொலை செய்ததன் நோக்கம், காரணம் என்று தேடி அலைஞ்சீங்களே ஸார்! இங்கே இருக்கே காரணம்-அழகா, ஸ்பஷ்டமா உள்ளங்கை நெல்லிக் கனி போல. தன் உல்லாச வாழ்க்கைக்கு இடையூறு செய்யும் கணவனைத் தீர்த்துக் கட்ட நினைத்திருக்கலாம். அல்லது அவள் காதலன்-அந்த அதிகாரி-தினகரனை ஒழித்துவிட எண்ணி யிருக்கலாம் இல்லையா?''

''மோடிவ் இருக்கு...'' நீதி மன்ற வார்த்தையைப் பயன்படுத்தினார் நடராஜன். ''ஆனால் சாட்சியம் இல்லையே? சுற்றுலாப் பயணிகள் 'வீல்'னு சத்தம் கேட்டதும் ஓட்டமும் நடையுமாகச் சென்று, பாதாளத்தில் விழுந்து செத்துக் கிடக்கும் ஒருவனைப் பார்த்து விட்டுப் பரபரப்புடன் திரும்பிக் கீழே இறங்கி வந்த சமயம், அப்போதுதான் இந்தக் காதலர்கள் இருவரும் மெல்ல ஹில்டாப் ரோட்ல் ஏற ஆரம்பிப்பதைக் கண்டார்கள். 'என்ன ஆச்சு? எதுக்கு இப்படிப் பேயைக் கண்ட மாதிரி ஓடி வர்றீங்க' என்று இவ்விருவரும் கேட்டதற்கு அவர்கள் 'ஒரு துர்மரணம் நேர்ந்து விட்டது' என்று சொல்லி யிருக்கிறார்கள்.''

''ஆகமொத்தம் தினகரனின் மனைவியும் அவள் ஆசைநாயகனும் ஹில்டாப் ரோட்டில் ஏறவே யில்லை? ராக் ஆஃப் விஷனைப் பார்க்கவே யில்லை?''

''சாட்சியங்கள் அந்த முடிவுக்குத்தான் நம்மை வரச் செய்கின்றன. மற்றவர்கள் கீழே-கால்ஃப் கிளப் அருகே ஸூயிஸைட் பாயிண்ட்டைப் பார்த்து முடிவதற்கு முன் பாகவே இவர்கள் மெல்லத் தனியே பிரிந்துவிட்டார் களாம். கொடைக்கானல் டவுனுக்குப் போகும் பிரதான சாலையில் கைகோத்தபடி காலாற நடந்தார்களாம். நண்பர்களுடன் திரும்பவும் சேர்ந்துகொள்ள வந்தபோது சுற்றுலாக் கும்பல் ராக் ஆஃப் விஷனிலிருந்து அவசரம் அவசரமாய் இறங்கி வருவதைக் கண்டார்களாம். காதலர்கள்-கள்ளக் காதல்தான் என்றாலும்-சற்று நேரம் தனித்து உலாவி விட்டு வர ஆசைப்பட்டதில் வியப் பில்லையே?''

''கள்ளக் காதலா இது? பகிரங்கப் பச்சைக் காதல் என்று சொல்லுங்கள்!'' என்றார் பத்மநாபன் அருவருப்புடன். ''நீங்கள் அவளைச் சும்மா விட்டிருக்கக் கூடாது.''

"மிஸ்டர் பத்மநாபன்! என்னை நம்புங்கள். ஒரு சின்ன சாட்சியம் கிடைத்திருந்தாலும் அவளைப் பிடித்து லாக்அப்பில் தள்ளி சந்தோஷப்பட்டிருப்பேன். ஆனால் அமிர்தலிங்கம் உட்பட மொத்தம் இருபது பேர் சொல்கிற சாட்சியத்துக்கு எதிராக நான் என்ன செய்ய முடியும்?"

"இந்த மாதிரி நீங்கள் சாட்சியம் இல்லைன்னு எல்லாரை யும் அனுப்பிவிடப் போக ஊரிலே எப்படி யெல்லாம் வதந்தி பரவி விடுகிறது. பார்த்தீங்களா?"

"வதந்தியா, என்ன வதந்தி? என் காதுக்கு ஒண்ணும் எட்டவில்லையே?"

"உங்க காதிலே படுகிற மாதிரி பேசுவாங்களா? டி.ஐ.ஜி. என்றால் பயமாயிராதா? ஆனால் நேற்று நாங்கள் எல்லாருமே ஏரிக் கரையில் படகுக்காகக் காத்திருந்தபோது அந்தப் பேச்சு அடிபடுவதைத் தெளிவாகக் கேட்டோம்."

"எந்தப் பேச்சு? என்ன கேள்விப் பட்டீர்கள்?"

பத்மநாபன் சற்றுத் தயங்குவதுபோல் காணப்பட்டார். வதந்தியைப் பரப்புவது தமக்கு அழகா என யோசித்தாரோ என்னவோ? ஆனால் அம்புஜம் வார்த்தைகளைச் சீன வெடிக் கட்டாக வெடித்தாள்: "வடக்கே போலீஸ் பாதுகாப்பிலிருந்து தப்பித்துக் கொண்ட சைக்கோ ஸாரநாதன் கொடைக்கானலுக்கு வந்துவிட்டானாம். ராக் ஆஃப் விஷன் அருகே தினகரன் விபத்தில் இறக்கவில்லை யாம். சைக்கோவின் வேலைதானாம் அது!"

இதைக் கேட்டுவிட்டுப் பெரிதாகச் சிரித்தார் டி.ஐ.ஜி. "நான்ஸென்ஸ்!" என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தார். அமிர்தலிங்கமும் அவர் சிரிப்பில் சேர்ந்துகொண்டு அட்ட காசமாக நகைத்தான்.

★ ★ ★

# 14. அனசூயாவுக்கு ஓர் அனுபவம்!

**தொ**டர்ந்து சிரித்துக்கொண்டே எழுந்து டி.ஐ.ஜி. நடராஜன் சோம்பல் முறித்தார். "கிளம்புவோமா? காலாற நடந்தால் ஹோட்டலைச் சென்றடையும்போது சாப்பாட்டு நேரம் சரியாக இருக்கும்" என்றார்.

அம்புஜம் தவிர மற்றவர்களும் எழுந்தார்கள். அவள் மட்டும் மடியில் தூங்கிவிட்டிருந்த விசுப்பயலைப் பத்ம நாபன் தூக்கிக் கொள்ளக் காத்திருந்தாள். "என்னவோ நீங்க ஒரேயடியாச் சிரிச்சு மழுப்பறேள்" என்றாள் அவள், நடராஜனை ஏறிட்டுப் பார்த்து. "ஆனால் நீங்க ஸைக்கோவைப் பிடிக்கத்தான் இங்கே வந்திருக்கணும்னு சில பேர் பேசிக்கிறதையும் நாங்க கேட்டோம். ஊரிலே பீதி பரவிவிடக் கூடாது என்பதற்காக நீங்கள் லீவில் வந்திருப்பதாகச் சொல்லிக்கிறேளாம்."

"பீதி பரவக்கூடாது என்றால் இந்த மாதிரி வீண் வதந்திகளை உங்களைப் போன்றவர்கள் பேசிப் பரப்பக் கூடாது" என்றார் நடராஜன் கண்டிப்பது போல.

"அதெப்படி ஸார் முடியும்? வம்பு பேசுவதில் உள்ள சுவாரசியம் வேறு எதிலே இருக்கு, சொல்லுங்க?" என்று தாயாருக்குத் துணை நின்றாள் மீனா.

"காலமெ ஒன்பது மணியிலிருந்து ராத்திரி ஒன்பது மணி வரை யார் எப்போ டெலிஃபோன் செய்தாலும் எங்க வீட்டு

ஃபோன் என்கேஜ்டாகத்தான் இருக்கும். ஏன்னா, ஒண்ணு மீனாவும் அவள் அம்மாவும் அவா சிநேகிதிகளிடம் அரட்டை அடிச்சுண்டிருப்பா; இல்லாத போனா ஃபோன் ரிப்பேரா இருக்கும். ஆக மொத்தம் என் சௌகரியத்துக்காக என் வீட்டில் வைக்கப்பட்ட ஆபீஸ் டெலிஃபோனை நான் மட்டும் உபயோகப் படுத்தறதே யில்லை'' என்று குறைப் பட்டுக் கொண்ட பத்மநாபன் ஒரு ஹூங்காரம் செய்து விசுவைத் தூக்கித் தோளில் சாத்திக்கொண்டார்.

''வம்போ தும்போ, கேட்டதுக்குப் பதிலைக் காணோமே?'' என்று கூறியபடியே அம்புஜம் மணலை நீக்கப் புடவையை உதறிக் கொண்டாள்.

''இதோ பாருங்கம்மா, பம்பாயில் போலீஸாரிடமிருந்து தப்பிச்சுக்கிட்ட ஸைக்கோ ஸாரநாதன் கொடைக்கானல் பக்கம் வந்தான் என்கிறதுக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. ராக் ஆஃப் விஷன் அருகே நேர்ந்த துர் மரணத்துக்கு அவன்தான் காரணம் என்று நினைக்க ஒரு சாட்சியமும் இல்லை... வாங்க போகலாம்'' என்று சொல்லிக் கொண்டே நடந்தார் நடராஜன். மற்றவர்களும் அவரைப் பின்தொடர்ந்தார்கள்.

''அப்படியானால் அது தற்கொலை என்கிறதுதான் உங்க முடிவா?'' -பக்கத்தில் நடந்த பத்மநாபன் கேட்டார்.

''நீங்க ஒரு பத்திரிகையாளர் என்கிறதைக் காட்டிக் கொள்றீங்க. துருவித் துருவிக் கேள்வி கேட்டு என் வாயைப் பிடுங்கப் பார்க்கிறீங்க. ஒண்ணு சொல்றேன். 1969ம் வருஷத்தில் மட்டும் நம் பாரத நாட்டில் எத்தனை தற்கொலைகள் நடந்திருக்கின்றன தெரியுமா? நாற்பத்தி மூவாயிரத்து அறுநூற்றி முப்பத்து மூணு! இவற்றில் ஏறத்தாழப் பாதி தற்கொலைகளுக்கான காரணங்கள் இன்று வரையில் கண்டுபிடிக்கப்படவேயில்லை! ஆகவே, இதையும் தற்கொலை என்று கருதுவதற்கான சாத்தியக்

கூறுகள் அதிகம். ஆனாலும் சொல்கிறேன்-அதுவும் கடைசித் தடவையாக: தி கேஸ் இஸ் நாட் குளோஸ்ட்! தற்கொலையா, கொலையா அல்லது விபத்தா என்பது பற்றி நான் எந்த ஒரு முடிவுக்கும் இன்னும் வரவில்லை. நீங்கள் நினைப்பது போல் இது ஸைக்கோ செய்த காரியம் என்று நம்புவதற்கும் ஒரு தடயமும் அகப்படவில்லை. நான் யார் பேரிலாவது சந்தேகப்பட்டு அரெஸ்ட் பண்ணினாலும் அவனையோ அல்லது அவளையோ குற்றவாளி என்று சொல்லமாட்டேன். அதற்கு எனக்கு அதிகாரம் கிடையாது. இந்தக் காரியத்தை இன்னார் செய்திருக்கலாம் என்று நம்புவதற்கு இன்னின்ன சாட்சியங்கள், தடயங்கள் இருக்கின்றன என்று சுட்டிக் காட்டுவேன்; அவ்வளவுதான். குற்றவாளி என்று தீர்ப்புக் கூற வேண்டியவர் நீதிபதி. அவர் அவ்வாறு கூறும் வரையில் யாருமே குற்றவாளி இல்லை.''

**பா**தை ஏற்றமாக இருந்தது. விசுவைத் தூக்கிக் கொண்டு நடப்பது பத்மநாபனுக்குச் சிரமமாக இருந்தது. பிறக்கும் போதே அவன் எட்டு பவுண்டு. 'நல்ல போன் வெய்ட்' என்று லேடி டாக்டர் சொல்லிச் சந்தோஷப்பட்டுக் கொண்டாள் அப்போது. இன்று மூன்று வருஷ வளர்ச்சியும் சேர்ந்து கொள்ளவே பத்மநாபனுக்கு இரைத்தது. ரங்கனைத் தூக்கிக் கொள்ளச் சொல்லலாமே என்று எண்ணியவராகத் திரும்பிப் பார்த்தார்.

அவனும் மீனாவும் அருகருகே தோளும் தோளும் இடித்துக் கொள்ளாத குறையாக நெருக்கியடித்துக் கொண்டு நடந்து வருவதைப் பார்த்தார். விரல்கள் தொட்டுக் கொண்டன; ஆனால் நடக்கும் வேகத்தில் யதேச்சையாகப் பட்டுவிட்டதுபோல் அவர்கள் நடந்து கொள்ளத் தவறவில்லை. 'இவர்கள் இருவரும் இன்று ஃபேரி ஃபால்ஸுக்கு வருவது என்று ஏற்கனவே பேசி வைத்துக் கொண்டிருந்திருப்பார்களோ?' என்று யோசிக்க

*ஆரம்பித்தார் பத்மநாபன். ஹோட்டலில் தங்கி யிருப்பவர்களுக்கென்றே பிரத்தியோகமாக உள்ள பஸ் இன்று ஃபேரி ஃபால்ஸுக்கு வரவில்லை. பேர்ஷோலா ஃபால்ஸுக்குப் போவதாகச் சொன்னார்கள். சௌகரிய மாகப் பஸ்ஸிலேயே போய் வந்துவிடலாம் என்றுதான் பத்மநாபனும் அம்புஜமும் திட்டம் போட்டார்கள். ஆனால் மீனா, ஒரே பிடிவாதமாக, 'நடந்து போனாலும் பரவா யில்லை; ஃபேரி ஃபால்ஸுக்குத்தான் போக வேண்டும்' என்று ஒற்றைக் காலில் நின்றாள். 'ரங்கனுக்கு ஏமாற்றமாகி விடப் போகிறதே என்றுதான் அவள் அப்படி முரண்டு பிடித்தாளா?'*

*"ரங்கன்! ஐ நீட் யுவர் ஹெல்ப்" என்று சொல்லி விசுவை அவன் கரங்களில் தள்ளிவிட்டார் பத்மநாபன்.*

*"வித் பிளஷர்!" என்று பதில் உரைத்து ரொம்பப் பிரியத்துடன் அவன் குழந்தையை வாங்கிக் கொண்டது அவருக்குத் திருப்தியளித்தது. 'அப்பாவும் பிள்ளையும் அருமையான மனிதர்கள்தாம்... ஆனாலும்... இருந்தாலும்... ஜாதி என்கிற அந்த ஒரு பிரச்னை இருக்கிறதே! சம்பந்தம் என்று வந்தால் யார் யார் எப்படி எப்படி இதை ஏற்பார் களோ புரியவில்லையே? ஆண்டவனே, பெரிய சோதனை வைத்து விடுவாய் போலிருக்கிறதே, எனக்கு? வயதுப் பெண்ணையும் அழைத்துக் கொண்டு எதற்காகக் கொடைக் கானலுக்கு வந்தோம் என்று வருத்தப்படும் வேளை வந்துவிட்டதோ?...'*

*"அப்படியானால் நீங்க ஸைக்கோவைத் தேடிண்டு இங்கே வரலை?... கோவிச்சுக்காதேங்கோ! எதுக்குக் கேக் கறேன்னா, பாக்கியிருக்கிற பத்துப் பன்னண்டு நாளையும் பயமில்லாமல் நிம்மதியா கழிச்சுட்டு வீட்டுக்குத் திரும்ப லாம், பாருங்கோ!" என்றாள் அம்புஜம்.*

"ஸைக்கோவைத் தேடிக்கிட்டு நான் வரலை; விடுமுறை யில்தான் வந்தேன். இது சத்தியம். ஆனால் ஸாரநாதன் இங்கே வந்திருந்தால் அவனைக் கண்டு பிடிப்பது அப்படி ஒன்றும் சுலபமாயிராது. சிறை உடைகளைக் களைந்து விட்டு அவன் சாதாரண பைஜாமா ஜிப்பா அணிந்து டாக்டரைப் பார்க்க வந்தான். டாக்டர் குஹாவைக் கொன்றுவிட்டுப் போலீஸாரிடமிருந்து தப்பியபோது அவன் டாக்டரின் உடைகளை மாட்டிக் கொண்டிருந்தான். ஆக, தலைமறைவாக இருக்க எப்படியெல்லாம் வேஷம் போடலாம் என்று புரிந்துகொள்கிற அளவுக்கு அவனுக்குச் சிந்தனைத் தெளிவு இருக்கிறது என்றாகிறது. இப்போது எந்த ரூபத்தில் இருக்கிறானோ, யாருக்குத் தெரியும்?"

"பார்த்தேளா, பார்த்தேளா! சித்த முன்னாடிதான் அவன் இங்கே வரவேயில்லைன்னேள்; இப்போ, அவனை எப்படி அடையாளம் புரிஞ்சுக்கிறதுன்னு கேக்கறேள்!"

"அவன் இங்கே வரவில்லை என்று நான் சொல்ல வில்லையே, அம்மா" என்றார் நடராஜன், அலுப்புத் தட்டும் குரலில். "அவன் இங்கே வந்தான் என்பதற்கான சாட்சியம் ஏதுமில்லை என்றுதான் சொன்னேன்."

"அப்படியானால் அவன் இங்கே வந்திருக்கலாம்னு ஒப்புக்கொள்றேள்!"

"அவன் இங்கேயும் வந்திருக்கலாம், அல்லது ஊட்டிக் கும் போயிருக்கலாம். டில்லிக்கோ, புவனேசுவரத்துக்கோ ரயில் ஏறியிருக்கலாம். ஒருவேளை திருச்சியில் ஏதாவது ஒரு சந்தில் இப்போ அவன் உலவிக் கொண்டிருக்கலாம். நான் எப்படிச் சொல்ல முடியும்?"

"ஸார்! இப்படியெல்லாம் நீங்கள் பேசினால் இவங் களுக்கு உங்ககிட்டே மதிப்பு ரொம்பக் குறைஞ்சுடும். 'ஸைக்கோ ஸாரநாதன்தான் இதைச் செய்திருக்கான். அவனை எப்படியாவது கண்டுபிடிச்சுக் கட்டி வைச்சு

உதைச்சு உண்மையைக் கக்க வைக்கப் போறேன்' என்று டிராமாட்டிக்கா ஏதாவது சொல்லுங்க" என்றான் அதுவரை வாளாவிருந்த அமிர்தலிங்கம்.

நடராஜன் சிரித்தார். "உண்மைதான். ஐயான் ஃபிளெமிங், ஜேம்ஸ் பாண்ட் என்று ஓர் ஒற்றனை சிருஷ்டித்துத் தமது நாவல்களில் உலவவிட்டாலும் விட்டார், துப்பறிபவர்களைச் சுற்றி ஒரு கிளாமர் உருவாகிவிட்டது."

"ஆனாலும் அவருடையது முதல்தரப் படைப்புத்தான்" என்றார் பத்மநாபன். "அவர் பாணியில் எத்தனையோ பேர் எழுதுகிறார்கள். எல்லாம் வெறும் பூஜ்யம். புவர் இமிடேஷன். அதே போல் அசல் 007 சினிமாக்களும் வந்து விட்டன; அவற்றைப் பார்த்துக் காப்பி அடித்து உதவாக் கரைத் திரைப்படங்களும் வந்துவிட்டன."

"யதார்த்த ரீதியில் நோக்கினால் ஸி.ஐ.டி.யின் வாழ்க்கை அத்தனை பரபரப்பானதாக இருப்பதில்லை. ஒற்றர்கள் நிலையும் இதுவேதான். ஜேம்ஸ் பாண்ட் இரண்டு பணக் காரப் பெண்களை ஒருவர்பின் ஒருவராகக் கட்டி அணைப்பான். ஒருத்தி அவனிடம் மயங்கி ரகசியங்களை வெளியிட்டுவிடுவாள். மற்றொருத்தி அவனை மயக்கி ஏமாற்றப் பார்ப்பாள். ஆனால் பாண்ட் என்றுமே ஏமாறுவதில்லை. அவளை உதறிவிட்டுக் காரில் ஏறி விரைவான். ஆபத்து, பல குண்டர்கள் உருவில் அவனை மற்றொரு காரில் பின்னால் துரத்திக் கொண்டுவரும். எத்தனை பேரானால் என்ன? ஜூடோ பிடியும் கராட்டே அடியும் 007ஐக் காக்கும். அவன் துப்பாக்கி என்றுமே குறி தப்புவதில்லை. இஷ்டத்துக்குக் கொல்லலாம். கேட்பார் கிடையாது. எப்போதும் வெற்றிதான் அவனுக்கு.

"ஆனால் ஓர் அசல் ஒற்றன் அல்லது ஸி.ஐ.டி.யின் வாழ்க்கை அப்படிப்பட்டதல்ல. ஒற்றன் எந்த விநாடியில்

*தன் வேஷம் அம்பலமாகிவிடுமோ என்று சதா பயந்து செத்துக் கொண்டிருக்கிறான். ஏனெனில், பிடித்தால் உடனே அவனை விசாரணைகூட இன்றித் தூக்கில் தொங்கவிட்டு விடுவார்கள். மரணம் என்பது மட்டுமல்ல, அவமானம் மிக்க மரணம். அவனிடம் துப்பாக்கி உண்டு; ஆனால் தூக்கில் தொங்க விடுவதற்குப் பதில் தற்கொலை செய்து கொண்டு சாகலாமே என்பதற்காகத்தான் அதை வைத்திருப்பான். பெண்களுடன் அவனுக்குத் தொடர்பு உண்டு. ஆனால் அநேகமாக அவர்கள் கிழவிகளாகவோ விபசாரிகளாகவோதான் இருப்பார்கள். ஒரு ஸி.ஐ.டி.யின் வாழ்க்கை இதைவிடப் பரிதாபம். நாள்தோறும் மணிக் கணக்கில் அவன் கால் கடுக்க நிற்கிறான் அல்லது அலைகிறான். இரவில் தூக்கம் பிடிக்காமல் சிந்தித்துச் சிந்தித்து அவன் தலை நரைத்துப் போகிறது... கேடிகள், சோதாக்கள், வேசிகள் போன்றோருடன் தொடர்பு வைத்துக் கொண்டு அவ்வப்போது அவர்களுக்கு வாய்க்கரிசி போட்டுத் தகவல்களைச் சேகரிக்கிறான். யாரையாவது இவன் தப்பித் தவறிக் கை நீட்டி அடித்துவிட்டால் உடனே, தன் அதிகார எல்லையைத் தாண்டி இவன் நடந்து கொண்டதாக வழக்கு இவன் பேரிலேயே சுமத்தப்படும்! கொஞ்சம்கூட சுவாரசிய மற்ற, டல், மெக்கானிகல் லைஃப்!''*

''இந்தக் கூத்துக்காகத்தான் ஸார் நான் துப்பறியும் கதைகளே எழுதறதில்லை'' என்றார் பத்மநாபன். ''விரு விருப்பா எழுதினால் ஜேம்ஸ்பாண்ட் டைப்னு லேபிள் ஒட்டிப்பிடுவாங்க. யதார்த்த நோக்கில் எழுதினால் அறுவைன்னு முடிவு கட்டி ஒருத்தரும் படிக்கமாட்டாங்க!''

*''நீங்க ஸயன்ஸ் ஃபிக்ஷன் எழுதுங்க ஸார். மேனாடு களில் எத்தனை விஞ்ஞானக் கதைகள், நாவல்கள் வந்திருக் கின்றன பார்த்தீங்களா? தமிழ் எழுத்தாளர்களில் யாருமே*

இந்தத் துறையில் இதுவரை கவனம் செலுத்த வில்லையே!" என்றார் டி.ஐ.ஜி. (ஸி.ஐ.டி.)

"ஐயோ! தலை கீழா நின்னாலும் அப்பாவுக்கு ஸயன்ஸ் வராது!" என்றாள் மீனா கலவரம் தொனித்த குரலில். "பிப் பெட்டுக்கும் பியூரெட்டுக்கும் வித்தியாசம் தெரியாதவர் ஸயன்ஸ் ஃபிக்ஷன் எழுதவா?"

"அதென்னவோ வாஸ்தவம்தான் ஸார்!" என்றார் பத்மநாபன். "உங்களுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை; நான் ஒரு ஃபார்மஸி கிராஜுவேட். அந்தத் துறையில் நான் இறங்கமாட்டேன்னு சத்தியம் செய்து கொடுத்ததின் பேரிலேதான் என் புரொபஸர் போனால் போகட்டும்னு எனக்கு பாஸ் போட்டுட்டார்!"

நடராஜன் பெரிதாகச் சிரித்தார். "ரொம்ப நல்ல காரியம் செய்தார். உங்க பேராசிரியர். மருந்துகள் தயாரிப்பது என்றால் என்ன இலேசான காரியமா? நோயாளிகளின் உயிருடன் விளையாடலாமா?"

இப்படிக் கிண்டலும் வேடிக்கையுமாகப் பேசிக் கொண்டே அவர்கள் ஹாப்பி ஹாலிடேயை அடைந் தார்கள். விசு மீண்டும் தோள் மாறினான். "அப்புறம் சந்திக்கலாம்" என்று கூறி மூன்று திக்குகளில் அவர்கள் பிரிந்து சென்றார்கள், தங்கள் தங்கள் அறையை அடைய.

**ப**த்மநாபன் இருந்த அறை பெரிய ஃபாமிலி ரூம். நாலு கட்டில்கள், டிரஸ்ஸிங் டேபிள் எல்லாம் உண்டு. அறையின் பின்புறம் தனி பாத்ரூம். முன்புறம் இருந்த வராந்தா இந்த அறையையும் பக்கத்தில் இருந்த மற்றொரு ஃபாமிலி ரூமையும் இணைத்தது. அந்தக் கட்டடத்தில் இரண்டே அறைகள்தாம். இப்படியே பரவலாக இருந்த பல்வேறு சிறு கட்டடங்கள் ஒவ்வொன்றிலும் இரண்டு அல்லது நான்கு அறைகள் மட்டுமே இருந்தன.

வராந்தா என்று பெயரே ஒழிய அங்கும் கண்ணாடிச் சுவரும் கண்ணாடி ஜன்னல்களும் கண்ணாடிக் கதவுகளும் உண்டு. மழைச் சாரலும் குளிர்ந்த காற்றும் உள்ளே வரா திருக்க வராந்தாவில் இப்படி மூன்று புறங்களிலும் கண் ணாடி பதித்திருந்தார்கள். அதே சமயம் கண்ணாடியினூடே வெளிப்புறமிருந்த மலைகளுடனும் வானங்களுடனும் பார்வையால் தொடர்பு கொள்ள முடியுமல்லவா? இயற்கை யுடன் இந்தக் கண்ணுறவு இல்லையானால் கொடைக் கானல் வந்துதான் என்ன பிரயோஜனம்?

கண்ணாடிக் கதவில் ஒரு கண்ணாடி மட்டும் உடைந்து போயிருந்தது. இப்போதுகூட உள்ளே வர அந்தக் கதவைத் திறந்தபோது அது பத்மநாபன் கண்களை உறுத்தியது. ஹோட்டல் முதலாளி தனராஜிடம் மறுபடியும் ஒரு தடவை இது பற்றிச் சொல்ல வேண்டும் என்று நினைத்துக் கொண்டார். வராந்தாவில் கிடந்த சில நாற்காலிகளுள் ஒன்றில் 'அப்பாடா' என்று களைப்புடன் உட்கார்ந்தார். "சாப்பாட்டு நேரத்துக்கு இன்னும் அரை மணி நேரம் இருக்கு, அம்புஜம்! ஒரு பாட்டுப் பாடேன்" என்றார்.

"பெண் பார்க்க வந்தப்புறம் இன்னைக்குத்தான் எனக்குப் பாடத் தெரியும்னு ஞாபகம் வந்ததாக்கும்?"

"இந்தா, ரொம்பப் பிகு பண்ணிக்காதே! ஏதோ இப்போ சாவகாசமா இருக்கிறதாலே பாடச் சொல்றேன்."

"வெய்யில் நன்னா காயறதே, அழுக்குத் துணிகளைக் கசக்கிப் பிழிஞ்சு உலர்த்தி விடலாமேன்னு பார்த்தேன்."

"இந்தா, இப்போ நீ உடனே பாடப் போறயா, இல்லே நான் பாடட்டுமா?"

"அடடா! விஞ்ஞானம் தப்பிச்சுதுன்னு நினைச்சோம், சங்கீதம் மாட்டிக் கொண்டு விட்டதே, உங்களிடம்!"

மீனாவுக்கு வேர்க்கடலை திருடித் தின்னப் போன நரி 'எனக்குப் பாடணும் போல வரது' என்று கூறிய கதை ஞாபகம் வந்தது. அக்கம் பக்கத்து அறைகளில் உள்ளவர்கள் தடியைத் தூக்கிக் கொண்டு வராமல் இருக்க வேண்டுமே என்று கவலைப்பட்டவளாய் மிரட்சியுடன் பார்த்தாள்.

அந்தப் பிரமையும் மிரட்சியும் நீங்கு முன்னரே பத்மநாபன் பாட ஆரம்பித்து விட்டார் உற்சாகமாக, "மாமவ பட்டாபிராமா...!" என்று.

"ஐயோ! போதும், போதும், இந்தப் பாட்டைக் கேட்டால் பட்டாபிஷேகத்துக்கு எழுந்தருளிய ராமர், மறு படியும் காட்டுக்கே போறேன்னு ஓடிடுவார், சீதையையும் இழுத்துண்டு!" என்றாள் அம்புஜம்.

"ஏய்! வெய்யில் வீணாப் போறது; எதுக்குடி இன்னும் இங்கேயே நின்னுண்டிருக்கே, துணியைத் துவைக்காமல்?" என்று மனைவியை மிரட்டுவது போல் கேட்டார் பத்மநாபன், ஆயினும் அவர் முகம் மலர்ந்திருந்தது.

"நல்ல வேளை! அப்பாவுடைய 'கோப ரூம்' இங்கே இல்லை" என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள் அனசூயா. அவள் குறிப்பிட்டது அவர்கள் வீட்டில் பத்மநாபனின் தனி அறை. அங்கே தம் மேஜை எதிரே அவர் உட்கார்ந்து விட்டாரானால் காப்பி அல்லது டீ கொண்டு வந்து வைப் பதற்குத் தவிர வேறு எதற்கும் யாரும் உள்ளே நுழையக் கூடாது. இந்தக் கட்டளையை வீட்டில் யாரேனும் ஒருவர் கடைப்பிடிக்காது போனால் எரிமலையாக வெடிப்பார்.

"சேச்சே! ஹாலிடேலே வந்திருக்கும்போது யாராவது குழந்தைகளைக் கோவிச்சுப்பாளா?" என்று அனசூயாவைக் கட்டி அணைத்துக் கொண்டார் பத்மநாபன். "மேலும் என் பாட்டு ஒண்ணும் உசத்தி இல்லேன்னு எனக்கே நன்னாத் தெரியும் கண்ணு. சும்மா தமாஷுக்குப் பாடினேன்!"

"அப்பா பாடறதைக் கேட்டதும் அனசூயா அழுதது ஞாபகம் வரது! ஏண்டி, ஃபேரி ஃபால்ஸிலே எதுக்குடி அப்படி அலறினே?" என்று தங்கையைக் கேட்டாள் தமக்கை மீனா.

அனு கூறினாள்: "அந்த ஹிப்பி மாமா இல்லே? அவர் கண்ணை மூடிண்டு தரையில் படுத்துண்டிருந்தார். 'ஹிப்பி மாமா! ஹிப்பி மாமா!'ன்னு கூப்பிட்டேன். மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தார். அப்புறம் என்னமோ மாதிரி என்னை முழிச்சுப் பார்த்துட்டுத் திடீர்னு பாஞ்சு என்னைக் கட்டிப் பிடிச்சுண்டுட்டார். எனக்குப் பயமாப் போச்சு! எப்படி இறுக்கினா தெரியுமா! மூச்சு விடவே முடியாது போல் ஆயிடுத்து... ம்... அப்புறம்... 'நீ தான் என் அம்மா வாம்; நான்தான் உன் குழந்தையாம்; ஒரு முத்தம் கொடு தாயே!' அப்படின்னு கெஞ்சறார்டி! எனக்கு வெக்கமாப் போச்சு. என்னை விடு, விடுங்கறேன்; விடவே மாட் டேன்னு இறுக்கிப் பிடிச்சுண்டு கொஞ்ச ஆரம்பிச்சுட்டா. சீ! அவர் தாடியும் மீசையும் எனக்குப் பிடிக்கவேயில்லை. அதான் அப்படி கத்தினேன்."

"சனியன்" என்று வைதாள் மீனா. "ராக் ஆஃப் விஷனிலேயிருந்து அந்தத் தினகரனுக்குப் பதில் இவன் விழுந்திருக்கப்படாதோ?"

பத்மநாபன் குறுக்கிட்டார். "மீனா! உனக்கு எத்தனை சொன்னாலும் தெரிய மாட்டேனென்கிறது. நீ பேசற விதம் கொஞ்சம்கூடச் சரியில்லை. அழகான ஒரு குழந்தையைப் பார்த்தால் கொஞ்சணும்னு லோகத்தில் எத்தனையோ பேருக்குத் தோணறது. அதுக்காக ஒருத்தரை வெறுக்க லாமா? திட்டலாமா?"

"அப்பா! அழகான ஒரு குழந்தையைப் பார்த்தால் வாரி அணைச்சுக்கணும்னு சில பேருக்குத் தோணறது அதிசய மில்லே. ஆனால் அந்தக் குழந்தை புதிய அந்த மனிதரிட

மிருந்து தன்னை விடுவிச்சுக்க முயற்சி செய்யறதும் இயற்கைதானே? அந்த மனுஷன் நல்லவனா யிருந்தால் குழந்தையின் உணர்ச்சியை மதிச்சுச் சட்டுன்னு இறக்கி விட்டுடுவான். அப்படியில்லாமே ஒரு சிறுமியைப் பலவந்தப்படுத்தி முத்தம் கொடுக்கச் சொல்கிறவன் ராட்சதனாகத்தான் இருக்கணும்!''

பத்மநாபனால் இதை மறுத்துரைக்க முடியவில்லை. மௌனத்தில் ஆழ்ந்தார். அதோடு இன்னொரு விஷயமும் அவர் உள்ளத்தில் குறுகுறுப்பை ஏற்படுத்தியது. 'நீதான் அம்மாவாம்; நான் தான் குழந்தையாம்; எனக்கு ஒரு முத்தம் கொடு தாயே' என்று அமிர்தலிங்கம் தம் மகளிடம் விளையாடினான் என்ற செய்தியானது விநோதமாகத் தோன்றியது அவருக்கு. சாப்பாட்டு நேரம் நெருங்க நெருங்க அவருக்குப் பசி வயிற்றைக் குடைய ஆரம்பித்து விட்டது. நீண்ட தூரம் நடந்திருந்ததால் உடல் தளர்ந்து போய், எரி பொருளைக் 'கொண்டா கொண்டா' என்றது. பம்மென்று உப்பிய பூரியையும் ஆவி பறக்கும் சப்ஜியையும் நினைத்துக் கொண்ட அவர். அனசூயா கூறியவற்றை யெல்லாம் வெகு சீக்கிரம் மறந்து போனார். கதவில் ஒரு கண்ணாடி உடைந்திருப்பதை ஹோட்டல் முதலாளி நடராஜின் கவனத்துக்குக் கொண்டு வரவேண்டும் என்று எண்ணியதையும் அவ்வாறே மறந்துவிட்டார்.

மீனாவுக்கு அமிர்தலிங்கத்தை முதன்முதலில் எழும்பூர் ரயில் நிலையத்தில் சந்தித்தபோதே பிடிக்கவில்லை. அவனிடம் அவளுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பு கடந்த சில நாட்களில் வெகுவாக வளர்ந்துவிட்டிருந்தது. இப்போது அனசூயா கூறியவற்றால் அது இன்னும் அதிகரித்திருந்தது.

'ரங்கனுடன் பேசச் சந்தர்ப்பம் கிடைக்கும்போது இந்த அமிர்தலிங்கத்தைப் பற்றியும் அவர் காதில் போட்டு வைக்க வேண்டும்' என்று தனக்குள் அவள் எண்ணிக்கொண்டாள்.

*கூடவே இன்னொரு நினைப்பு: 'அவரைத் தனிமையில் சந்திக்க வாய்ப்புக் கிட்டும்போது போயும் போயும் இந்தத் தறுதலை ஹிப்பியைப் பற்றித்தானா பேச வேண்டும்? வேறு எத்தனையோ பல இனிய கதைகள் இல்லையா பேச?'*

*மீனாவும் அனசூயாவுக்கு ஏற்பட்ட அனுபவத்தை விரைவில் மறந்து போனாள்.*

★ ★ ★

# 15. அழகு ராணி

**ஹா**ப்பி ஹாலிடே ஹோட்டலில் சிறுவர்களுக்கென ஒரு சிறிய விளையாட்டுத் திடல் இருந்தது. பசும்புல்வெளி, ஒன்றிரண்டு நிழல்தரு மரங்கள். சிறுவர்கள் மிதித்துப் பாழ டித்துவிடுவார்கள் என்ற எண்ணத்தில்தானோ என்னவோ அந்த இடத்தில் மலர்ச் செடிகள் எதுவும் பயிராக்கப்பட வில்லை. இரண்டு 'ஸீ-ஸா'க்கள், மூன்று ஊஞ்சல்கள், ஒரு சறுக்கு மரம்-இவை அந்த விளையாட்டு மைதானத்தில் இருந்தன. அந்த நேரத்தில் அங்கு அனசூயாவையும் விசுவ நாதனையும் தவிர வேறு குழந்தைகள் இல்லை. அவ்விரு வரும் 'ஸீஸா' ஆடிக் கொண்டிருந்தார்கள். சம எடை உள்ளவர்கள்தாம் 'ஸீ-ஸா' நன்றாக ஆட முடியும். விசுவின் எடையைவிட அனசூயாவின் எடை கூடுதலாக இருந்த படியால் அவள் இருந்த பக்கத்தை விசு எவ்வளவோ முயன்றும் உயர்த்த முடியவில்லை. இதனால் இருவருக்கும் இடையில் வாக்குவாதம் முற்றியது.

சமாதானம் செய்விக்கப் பக்கத்தில் இருந்த மீனா சிறிது நேரம் முயன்று கடைசியில் அலுத்துப் போகவே அவ்விடம் விட்டு அகன்றாள். சற்றுத் தொலைவில் இருந்த சறுக்கு மரம் நோக்கி அவள் கால்கள் அவளை இட்டுச் சென்றன. ஏணியின் எதிர்ப்புறம் சறுக்கு மரத்தின் சரிவான பகுதி அருகே நின்றவள், திடும்மென்று நினைத்துக் கொண்ட வளாய் அதில் முதுகைப் பதித்து ஒய்யாரமாய்ச் சாய்ந்து கொண்டாள். சறுக்கு மரம் விளையாடிய குழந்தைகளின்

பாதங்கள் மீண்டும் மீண்டும் பாய்ந்து வந்து தாக்கியதால் குழி விழுந்திருந்த பூமியில் கால்களை நன்றாக ஊன்றிக் கொண்டு நாற்பது டிகிரி கோணத்தில் படுத்திருப்பது. அலாதியானதொரு சுகானுபவமாக இருந்தது. மரநிழல் பரவியிருந்த அந்த இடத்தில் மற்றப் பகுதிகளைக் காட்டிலும் சில்லிப்பு கூடுதலாகத்தான் இருந்தது. கதகதப்பை விரும்பியவளாகத் தன்னைத் தானே தழுவிக்கொள்ளும் விதத்தில் முழங்கைகளை மடித்துத் தோள்களைக் கொக்கி போட்டாற்போல் விரல்களால் பற்றிக் கொண்டாள். ஊசி இலைகளுடன் கூடிய ஒரு மரத்தின் இடுக்குகள் வழியே சூரியஒளி நூற்றுக் கணக்கான மத்தாப்பூப் பொறிகளாக அவள் கண்களுக்குத் தென்பட்டது. திடுமெனச் சில பொறிகள் மறைவதும் புதிதாகப் பல பளிச்சிடுவதுமாக மரத்தில் ஒரு மாயாஜாலம் நிகழ்ந்து கொண்டிருந்தது. கடந்த சில நாட்களாகவே நிலவிய சுருசுருப்பற்ற வாழ்க்கையும் ஒவ்வொரு வேளையும் சுவையான பலமான விருந்தாக அமைந்த ஹோட்டல் சாப்பாடும் மீனாவிடம் ஒரு மதமதர்ப்பை வளர்த்து விட்டிருந்தன. இப்போதுகூடக் காலைச் சூரியனின் ஒளிச் சிதறல்களைப் பார்க்கும்போது கண்கள் கூசாவிட்டாலும் இமைகளை மூடிக்கொண்டு பகற்கனவு காணவேண்டும் போலிருந்தது அவளுக்கு. அந்த ஆசைக்கு அடிமையாகி அவள் விழிகளை மூடியதும் உடனே வெகு சுலபமாக ரங்கநாதனைத் தன் அருகில் வரவழைத்துக்கொள்ள முடிவதை உணர்ந்தாள்.

**ச**ற்றுநேரத்தில் விசு அழைக்கும் குரல் கேட்டது: "ரங்கன் மாமா! ஸீஸாவை இந்தப் பக்கம் கொஞ்சம் அழுத்துங்கோ, பிளீஸ்!"

அனசூயா உடனே போட்டிக் குரல் எழுப்பினாள்: "அழுத்தாதீங்கோ மாமா!"

"நான் ரெண்டு பேருக்கும் 'ஹெல்ப்' பண்ணறேன், நடுவிலே நின்னுக்கிட்டு" என்றான் ரங்கன்.

கற்பனையில் தான் காண முற்பட்ட ரங்கன் நிஜமாகவே பக்கத்தில் வந்துவிட்டார். ஆனால் அந்தக் கற்பனை ரங்கனுக்கும் இந்த அசல் ரங்கனுக்கு எவ்வளவு வித்தியாசம்!

'கற்பனை ரங்கன் என்னைக் கண்டதும் நேரே என்னிடமே ஓட்டமாக ஓடி வருகிறார். ஆனால் இவர் என்னடாவென்றால் என் தம்பி, தங்கையுடன் விளையாடப் போய்விட்டார்! அந்த ரங்கன் தற்போது என்னை நெருங்கித் தரையில் மண்டியிட்டு அமர்ந்து ஒய்யாரமாகச் சாய்ந்து கிடக்கும் என் உடலை ஆர்வத்தோடு உச்சந் தலைமுதல் உள்ளங்கால்வரை பார்க்கிறார். எத்தனை பார்த்தாலும் தாகம் தணியாமல் என் தேகம் முழுவதும் ஒரு கிளுகிளுப்புப் பரவும் விதமாகக் கண்களால் ரசிக்கிறார். ஆனால் உண்மை ரங்கன் 'ஸீ ஸா'வை இந்தப் பக்கமும் அந்தப் பக்கமுமாக ஆட்டியபடி விசுவையும். அனுவையும்தான் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருக்கிறார். கற்பனை ரங்கன் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல் திணறிக் கடைசியில் வந்தது வரட்டும் என்று துணிந்து என் முகத்தைத் தம் இரு கைகளாலும் அள்ளுகிறார். ஆனால் அசல் ரங்கனுடைய கரங்கள் விசுவைத்தான் கட்டி அணைத்துத் தூக்குகின்றன. கற்பனையில் ரங்கன் குனிந்து இலேசாக இதழோடு இதழ் பதிக்க முற்படுகிறார். ஆனால் கண்ணுக்கு மெய்யான ரங்கன் விசுவின் கன்னத்தில் பெரிதாக ஓசைப்படுத்தி முத்தமிடுகிறார். அனசூயாவின் பொறாமையை உணர்ந்தவராய் அவளுடனும் விளையாடத் திரும்புகிறார்.'

நல்லவேளை! கற்பனையில் நாம் கண்டதுபோல் ரங்கன் நடந்துகொள்ளவில்லை என்ற நிம்மதி ஒரு பக்கமும் நான் கற்பனை செய்ததுபோல் ரங்கன் நடந்து கொள்ள

வில்லையே என்ற ஏக்கம் ஒரு புறமும் மீனாவின் உள்ளத்தில் 'ஸீ ஸா' ஆட அவள் நிமிர்ந்தெழுந்தாள்.

அப்போதுதான் அவளைக் கவனித்தவன் போல், "அடேடே! நீதான் இங்கே இருக்கிறாயா? நான் பிட்டுனியா மலர்களுக்கிடையில் ஒரு டாலியா பெரிதாகப் பூத்திருக்கிறதாக்கும் என்று நினைத்தேன்" என்றான் ரங்கன்.

மீனாவின் முகம் குப்பென்று சிவந்தது. ஏற்கெனவே சீதோஷ்ண நிலையினால் சிவப்பேறியிருந்த கன்னங்கள் இப்போது ப்ளம் பழங்களாயின. தன் காதலன் தனக்கு ஏமாற்றமும் அளிக்காமல் அதே சமயம் வரம்பு மீறியும் நடந்து கொள்ளாமல் இருப்பதில் அவளுக்குப் பெருமித உணர்வும் தோன்றியது. அவன் குறிப்பிட்டது என்ன என்பது அவளுக்குப் புரியாமல் போகவில்லை. அவள் அணிந்திருந்த இளம் நீல நிற காலி-ஸிந்த் புடைவையில் வெள்ளை, ரோஸ், மஞ்சள் ஆகிய நிறங்களில் ஏராளமான சிறிய பூக்கள் அள்ளித் தெளித்தாற்போல் அச்சிடப்பட்டிருந்தன. அவற்றைத்தான் சிறிய பிட்டுனியா மலர்ப் படுகை என்று அவன் வர்ணித்தான். அதன் இடையில் பெரிதாகப் பூத்திருந்த டாலியா மலராக அவள் முகத்தைத் தான் அவன் ஒப்பிட்டுச் சொன்னான்.

**அ**வளுக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியவில்லை. "புடவை அம்மா வுடையது" என்றாள். உடனே, 'என்ன இப்படி அசட்டுத்தனமாக உளறுகிறோம்? அத்தனை அழகாகப் பேசிய அவர் மனம் மகிழ்கிறாற்போல் பளிச்சென்று இரண்டு வார்த்தைகள் சொல்லத் தெரிகிறதா எனக்கு' என்று தன்னைத்தானே நொந்து கொண்டாள்.

ரங்கன் கலகலப்பாகச் சிரித்தான். "நமக்கென்று துணிமணிகள் ஏராளமாய் இருந்தாலும், அப்பா அல்லது அம்மாவுடையதை எடுத்து உடுத்திக் கொள்வதில் உள்ள

சுகம் வருமா? என் அம்மா இறந்துபோன பிறகு நீண்ட நாட்களுக்கு நான் அம்மாவுடைய புடைவையைப் படுக்கையின் மேல் விரித்தால்தான் படுத்துக்கொள்வேன் என்று அடம் பிடிப்பேனாம். இந்தப் பழக்கத்தை மாற்ற என் அப்பா ரொம்பச் சிரமப்பட்டுப் போனாராம். அது குழந்தையாக இருந்தபோது. பத்துப் பன்னிரண்டு வயதுச் சிறுவனா யிருக்கையில் அப்பாவுடைய யூனிஃபார்மை எடுத்துப் போட்டுக் கொண்டு விடுவேன். தொளபுளா வென்று இருக்கும். அப்போ அப்பா இன்ஸ்பெக்டர். க்ரீஸ் போய் விட்டது, கசங்கிவிட்டது என்று அப்பா தவியாய்த் தவிப் பார். ஆனால் என்னைக் கோபித்துக் கொள்ள அவருக்கு மனம் வராது.''

இப்படி அவன் சகஜமாக உரையாடியதும் 'அசட்டுப் பிசட்டென்று பேசினோமோ' என்ற எண்ணத்தில் ஏற்பட்ட பதற்றமெல்லாம் நீங்கப் பெற்றவளாய் மீனா சிரித்தாள். முதல்தரமான ஒரு கச்சேரியில் சங்கதிகள் உதிர்வதைக் கேட்கும்போது ஏற்படும் சுகானுபவத்தை மீனாவின் சிரிப்பிலேயும் உணர்ந்தான் ரங்கன்.

'அம்மாவின் பெட்டியைக் குடைந்து இதை எடுத்துக் கட்டிக் கொண்டது எவ்வளவு நல்லதாயிற்று' என்று எண்ணிக்கொண்டாள் மீனா. பத்மநாபன் கூடச் சொன்னார்: ''அம்மாவுக்கென்று ஒன்றிரண்டு புடைவை களாவது விட்டு வையேன் மீனா'' என்று. அம்புஜம் உடனே, ''கட்டிண்டு போகட்டுமே, குழந்தைதானே!'' என்று பரிந்து பேசினாள். இதை நினைத்து உள்ளம் நெகிழ்ந்தாள் மீனா, இப்போது. 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு' என்பது போல் மிக உயர்ந்த ஸெண்ட் பாட்டில் ஒன்றும் அம்புஜத்தினிடம் உண்டு. 'ப்ரிமிடிவ்' என்ற பெயரில் பாரிஸ் மாக்ஸ் ஃபாக்டர் ஸ்தாபனம் தயாரித்தது அது. ''போதும்! போதும்! வீணடிக்காதே'' என்று

அம்புஜம் அலறும் வரையில் அதை எடுத்துத் தாராள மாகப் பூசிக் கொண்டிருந்தாள் மீனா. அதை வாசனை பிடித்ததுடன் அவள் மனத்தையும் படித்தவனாக ரங்கன் சொன்னான்: ''பிட்டுனியாவுக்கும் டாலியாவுக்கும் இத்தனை மணம் உண்டு என்று இதுநாள் வரையில் எனக்குத் தெரியாது!''

''உங்களுடைய உடையும் ரொம்ப ட்ரிம்மாகத்தான் இருக்கிறது'' என்று சொல்லக் கொள்ளை ஆசைப்பட்டாள் மீனா. ஆனால் வாய் வரவில்லை. அதற்குப் பதில், ''ஒரு வேடிக்கை பார்த்தீர்களா! இந்த மண் வாகு, இந்த சீதோஷ்ண நிலையின் சிறப்பு இவை காரணமாக இங்கே மலர்கள் ஏராளமாய்ப் பூத்துக் குலுங்குகின்றன. தோட்டம் போடுவது கொடைக்கானலில் சிரமமான காரியமே இல்லை. ஆனாலும் வாசனை உள்ள மலர்கள் ரொம்பக் குறைவு. பார்க்கத்தான் எல்லாம் கண்ணைப் பறிக்கின்றன'' என்றாள்.

''நிஜம்தான்'' என்றான் ரங்கன். இருவருக்கும் மேலே என்ன பேசுவதென்று நிறையத் தெரியும். அவர்கள் பரிமாறிக் கொள்ளக்கூடிய வார்த்தைகள் மலை மலையாக இரு மனங்களிலும் குவித்து சரியக் காத்திருந்தன. ஆனால் சரியவிட அவர்களுக்குப் பயம்.

**தா**ராளமாய் மனத்தில் உள்ளதையெல்லாம் கொட்டித் தீர்க்க உரிய காலம் வந்து விட்டதா இல்லையா என்று நிர்ணயிக்க முடியாததால் தயக்கம். மனங்கள் ஒன்றை ஒன்று ஏற்றுக் கொண்டுவிட்டன என்பது இருவருக்குமே நிச்சயமாகிப் போன விஷயம்தான் என்னும்போது இப்படி ஒரு வாய்ப் பூட்டை யார் எங்கிருந்து கொண்டுவந்து போட்டார்கள்?

"அப்பா வரவில்லையா?" என்று அவள் கேட்டது அந்தச் சந்தர்ப்பத்தில் அபஸ்வரமாக ஒலித்தது. ஒருவேளை அவனைத் தன்னுடன் இணைத்துச் சற்றுக் கட்டு மீறிய கற்பனையில் ஆழ்ந்ததால் குற்ற உணர்ச்சி வசப்பட்டு அவள் இயல்பாகப் பேச முடியாமல் திணறினாளோ என்னவோ? அப்படித்தான் இருக்க வேண்டும். ஏனெனில் ஜாதி வேற்றுமை பற்றிய எண்ணமோ, அது அவ்விருவரும் இணைசேர ஒரு தடையாக நிற்கலாம் என்ற நினைப்போ இருவருக்கும் இதுவரையில் தோன்றவேயில்லை.

'உங்களுடைய டிரஸ்ஸும் பிரமாதமாகத்தான் இருக்கிறது' என்று அவள் சொல்லியிருந்தால் அது நூற்றுக்கு நூற்றிப் பத்துச் சதவீதம் உண்மையாகத்தான் இருந் திருக்கும். ஆஜானு பாகுவான அவன் தோற்றம் யாரையும் இரண்டாவது தடவை திரும்பிப் பார்க்கச் செய்யும் சக்தி படைத்ததாகத்தான் இருந்தது. அளவான நெற்றிக்கு மேல் குபுக்கென்று ஊற்றாகப் பொங்கிய கேசம் அலை அலையாக நவீன பாணியில் முன்னால் வடிந்தது. அவன் அணிந்திருந்த டெர்ரிகாட் சட்டை, பாறை மேல் வழியும் நீர்போல் அவன் அகன்ற மார்பில் கீழிறங்கிச் சிறிய இடையில் பாண்டுக்குள் செருகப் பட்டிருந்தது. சட்டையில் மேலிருந்து கீழாகச் சிவப்பும் கறுப்பும் மஞ்சளுமாய் மெல்லிய கோடுகள் ஓடி அவன் உயரத்தைக் கூட்டிக் காட்டின. வயிற்றுப் பகுதியில் அந்தக் கோடுகள் சிறிதும் வளைந்து கொடுக்காமல் செங்குத்தாகவே சென்றன. ரங்கன் நன்றாகச் சாப்பிடக் கூடியவன் என்பதை நேருக்கு நேர் கண்டிருந்தாள் மீனா. ஆனால் அத்தனை 'கலோரி'களையும் அவன் தேகாப்பியாசத்தின் மூலம் வியர்வையாக வெளி யேற்றிக் கொண்டுமிருந்தான் என்பதை அவன் ஒட்டிய வயிறு சுட்டிக் காட்டிக் கொண்டிருந்தது.

"அப்பா இன்று வெளியே எங்கும் வரவில்லையாம். அறையிலேயே உட்கார்ந்து சாவகாசமாய்ப் படித்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லிவிட்டார்" என்றான் ரங்கநாதன். "மிஸ்டர் பத்மநாபன் எங்கே? உன் அம்மாவை யும் காணோமே?"

"அப்பா கூலிங்கிளாஸை மறந்து போய் அறையிலேயே வைத்துவிட்டு வந்துவிட்டார். அதை எடுத்துக் கொண்டு வருகிறேன் என்று அம்மா போனாள். கொஞ்ச நேரம் கழித்து, 'அவள் தேடிக் கொண்டிருக்கிறாள் போலிருக்கு; பார்த்துட்டு வரேன், இங்கேயே இருங்கோ' என்று சொல்லி விட்டு அப்பாவும் போனார். இரண்டு பேரும் போய் இருபது நிமிஷங்களுக்கு மேல் ஆகப் போகிறது." மீனா கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். "இதோ இன்னும் பத்து நிமிஷங்களில் பஸ்ஸும் புறப்பட்டு விடும். நாங்க இன்னைக்கு வெளியே போன மாதிரிதான்."

"நிதானமா வரட்டும். கறுப்புக் கண்ணாடியைத் தேடி எடுப்பதென்றால் சுலபமான காரியமா? நேரமாகத்தான் செய்யும்" என்றான் ரங்கன். குரலில் கிண்டல் எட்டிப் பார்த்தது. "அதுவும் மாமாவும் மாமியும் சேர்ந்து தேட ஆரம்பிச்சுட்டாங்கன்னா அவங்களுக்கு நேரம் போறதே தெரியாது!"

**க**லகலவென்று சிரித்தாள் மீனா. "இளைஞர்களுக்காகப் பெரியவர்கள் அநுசரித்துப் போவது பற்றி ஆயிரம் சொல் கிறார்கள். ஆனால் பெரியவர்களுக்காக இளம் வயதினர் எவ்வளவு தூரம் பக்குவமாக நடந்து கொள்ளுகிறார்கள் என்பது பற்றி யாருமே சிந்திப்பதில்லை" என்றாள்.

"மாமி ரொம்பக் கெட்டிக்காரி. கல்யாண வயதில் பெண் இருந்தும் இன்னமும் தன் கணவரைக் கட்டிப் போட்டு வைத்திருக்கிறாள் பார்! அது அன்புக் கயிறு. அதனால்தான் அறுபடாமல் இருக்கிறது!"

"என் அப்பா தங்கமான குணமுள்ளவராய் இருப்பதால் அவள் அவருக்கு அடிமையாகிக் கிடக்கிறாள் என்று ஏன் சொல்லக் கூடாது?" என்றாள் மீனா.

"இரண்டும்தான்" என்றான் ரங்கன். "ஒரு கையை வீசினால் சத்தம் வருமா?" என்று கேட்டவன், "அனு! விசு! வாங்க, போகலாம்" என்று அழைத்தான்.

"அப்பா வரட்டும்" என்றான் விசு.

"அப்பா வந்துடுவாங்க. நாம் போய்க்கிட்டே இருக்கலாம். பஸ் கிளம்பப்போகுது. ஹாரன் அடிச்சாச்சு, பாரு, நாம் சீக்கிரமாப் போய் அவங்களுக்காகப் பஸ்ஸை இரண்டு நிமிஷம் நிறுத்தி வைக்கலாம்."

எல்லோரும் கேட்டுக்கு வெளியே நின்ற பஸ்ஸை நோக்கி நடந்தார்கள்.

**கொ**டைக்கானலுக்கு வந்த தினத்திலிருந்து தன்னை அலங்கரித்துக் கொள்வதில் மீனாவின் சிரத்தை படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வந்திருப்பதை ரங்கன் கவனித்துத்தான் இருந்தான். அதெல்லாம் தனக்காகத்தான் என்பதும் அவனுக்கு நிதர்சனமாகத் தெரிந்திருந்தது. இதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக ஏதேனும் தான் கூற வேண்டும், செய்ய வேண்டும் என்று துடிப்புடன் காத்திருந்தான். அது அதிகப் பிரசங்கித்தனமாக அமைந்துவிடாமல் இயல்பான காரியமாகவும் இருக்க வேண்டும், நெஞ்சையும் தொட வேண்டும். அதற்கு இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் பஸ்ஸை நோக்கிச் சென்றபோது வழியில் ஒரு வேலி. அதில் மூங்கில் பிளாச்சுக்கள் லவலேசமும் தெரியாதவாறு ரோஜா, அடர்ந்த கொடியாகப் படர்ந்து கொத்துக் கொத்தாகப் பூத்துக் குலுங்கிக் கொண்டிருந்தது. வேலிக்கு அப்பால் மலர்த் தோட்டம். தோட்டமா அது? இல்லை, மலர்க் காடு!

*அரசி எலிஸபெத்தின் பெயரைத் தாங்கி நின்ற அரிய பெரிய கருஞ்சிவப்பு நிற ரோஜா முதல் நாம் அன்றாடம் பார்க்கும் சாதாரண ரோஜா வரையில் பல ரகங்கள், பல நிறங்கள். அவை தவிர வேறு பலப் பல விதமான மலர்ச் செடிகளும் பயிர் செய்யப்பட்டிருந்தன.*

*'ஹை ஜம்ப்' தாண்டிப் பழகியதாலோ என்னமோ ரங்கன் வெகு லாகவமாக அந்த வேலியைத் தாண்டி அப்பால் சென்றான். கண்ணிமைக்கும் நேரத்தில் ஒரு செக்கச் சிவந்த ரோஜாவைப் பறித்துக்கொண்டு இப்பால் பாய்ந்தான். கறுப்பு ஸ்வெட்டரைச் சரியாக அணியாமல் ஒரு சால்வை போல் ஒயிலாகத் தோள்களில் போர்த்திக் கொண்டிருந்த மீனாவை நெருங்கினான். "உன் கேசத்தோடு ஸ்வெட்டரும் கறுப்பாக இருப்பதால் தலையில் ஒரு பக்கமாக இந்த மலரைச் சூடிக் கொண்டால் எடுப்பாக இருக்கும்" என்று சொல்லியபடியே ரோஜாவைக் கொடுத் தான் ரங்கன். தன் இருகைகளையும் நீட்டி அம் மலரை வாங்கிக்கொள்கையில் அவன் கரத்தையும் சேர்த்துப் பற்றினாள் மீனா. பற்றிய கரத்தை இலேசில் விடுவதாகவும் இல்லை. அவன் வியப்பும் நிறைவுமாக அவளை ஏறிட்டுப் பார்த்தான் "ரோஜாக்கள் இதுமாதிரி ஆயிரக் கணக்கில் இருக்கின்றன. கொடுக்கிற கை தானே முக்கியம்" என்றாள் மீனா.*

*"ரங்கன் மாமா! பூப் பறிக்கக் கூடாதுன்னு போர்டு போட்டிருக்கு" என்றாள் அனசூயா.*

*"எச்சரிக்கைப் பலகைகள் எப்போதும் பொதுமக்களுக் காகத்தான்" என்றான் ரங்கன். "விசேஷத் தகுதி பெற்ற வர்கள் எச்சரிக்கையைப் புறக்கணிக்கலாம். 'உத்தரவின்றி உள்ளே வரக்கூடாது' என்று போட்டிருக்கும். என் அப்பா தயங்குவாரா? அவர்தான் டி.ஐ.ஜி. ஆச்சே!"*

"அது சரி ஆனால் நீங்க சாதாரண போலீஸ்காரர் கூட இல்லையே?" என்றாள் அனசூயா.

"நான் எனக்காகப் போகவில்லையே? உன் அக்காவுக் காகத்தானே வேலியைத் தாண்டினேன்!"

"அவள் ரொம்பப் பெரிய மனுஷியாக்கும்?"

"இல்லையா பின்னே? ஷி இஸ் எ பியூட்டி குவீன்" என்றான் ரங்கன். சொன்னவுடன், 'அப்பாடா! இந்த வார்த்தைகளைக் கூற ஒரு நல்ல சந்தர்ப்பம் அகப்படாதா என்று எத்தனை நாட்கள் காத்திருக்க வேண்டியிருந்தது" என நினைத்துக் கொண்டான்.

மீனா மெய்சிலிர்த்து நின்றாள்.

★ ★ ★

'கோக்கர்ஸ் வாக்'கில் பஸ் அரை மணி நேரம் நிற்கும் என்று டிரைவர் சொன்னான். அப்புறம் ஏரிக்குப் போகிறதாம். ஹோட்டலுக்கே சொந்தமான-அங்கு தங்கி யிருப்பவர்களின் சௌகரியத்துக்காக உள்ள-அந்த பஸ்ஸி லிருந்து இறங்கியவர்களில் பெரும்பாலோர், 'கோக்கர்ஸ் வாக்' என்ற அந்தக் குறுகலான நடை பாதையில் இந்த மூலையிலிருந்து அந்த மூலைக்கு விடுவிடுவென்று பத்து நிமிஷங்களில் நடந்து போய்விட்டார்கள். "அரை மணி நேரம் இங்கே எதற்குத் தாமதிக்கிறது?" என்று அவர்களில் சிலர் கேட்டுக்கொண்டார்கள். மீதமிருந்தவர்கள் நிதான மாக நடந்தபோதிலும் பஸ் ஹாரன் அடித்துக் கிளம்பப் போவதை அறிவிக்கும் முன்னர் போய்ச் சேர்ந்து விட்டார்கள். கடைசி ஆசாமியாகத் தென்பட்ட ஒருவர், பத்மநாபனை நோக்கி, "என்னங்க நீங்க வரலையா?" என்று விரைந்து சென்றுகொண்டே வினவினார்.

"நாங்க இன்னிக்கு ஏரிக்கு வரலை. டிரைவரிடம் சொல்லிடுங்கோ" என்று அவர் பின்னால் கத்தினார் பத்ம

நாபன். பிறகு ரங்கன் பக்கம் திரும்பி, "கொடைக்கானல், ஊட்டி என்று வந்துவிட்டு, பரக்கப் பரக்க எல்லாத்தையும் ஓடுகிற ஓட்டத்தில் பார்த்து முடிக்கிறதிலே எனக்கு நம்பிக்கை இல்லை. இரண்டு மூன்று இடங்களை நாம் காணாமலே இருந்து விட்டாலும் பாதகமில்லை. பார்ப்பதை நன்றாக ஆற அமர இருந்து மனசில் வாங்கிக் கொள்ளணும். என்ன சொல்கிறாய்?" என்றார்.

"ஐ அக்ரீ" என்றான் ரங்கன், மீனாவை ஊடுருவி நோக்கியபடி. "எனக்கென்னவோ இங்கு ஒரு காட்சியை நாள் முழுதும் என்ன, வாழ்நாள் முழுதும் பார்த்துக் கொண்டேயிருந்தாலும் அலுப்புத் தட்டாது என்றே தோன்றுகிறது."

'நிலைமை முற்றிவிட்டது' என்று எண்ணிக் கொண்டார் பத்மநாபன். மீனா-ரங்கன் விஷயத்தில் தாம் கொஞ்சம் அசட்டையாக இருந்துவிட்டது மிகப் பெரிய தவறா அல்லது மாபெரும் நன்மையா என்று அவருக்கே புரியவில்லை.

குழப்பத்திலிருந்து விடுபட அவர் கோக்கர்ஸ் வாக்கை யொட்டியிருந்த அற்புதமான காட்சிப் பக்கம் பார்வையைச் செலுத்தினார். அந்தக் குறுகலான நடைபாதை மூன்று நான்கு வளைவுகளைக் கொண்டது. ஒவ்வொரு வளை விலும் இயற்கைக் காட்சி மாறியது, ஒன்றையொன்று தூக்கியடிக்கும் வகையில். பாதையின் ஒரு பக்கம் மேடாக இருந்தது. அதன் மேல், வரிசையாகப் பாதை நெடுகிலும் விசாலமான தோட்டங்களுடன் கூடிய ஐந்தாறு வீடுகள்; நோயாளிகளுக்கென ஒருவிடுதி. பாதையின் மறுபக்கம் அதள பாதாளம். ஆறாயிரம் அடி பள்ளம்! பாதுகாப்புக் கென்று ஒரு முள் வேலிகூடக் கிடையாது!★

★ நாவல் எழுதப்பட்ட ஆண்டில். பிற்காலத்தில் வேலி அமைத்துள்ளனர்.

வேலி போடாததால் ஆபத்து அதிகம்தான் என்றாலும் வேலி போட்டிருந்தால் இயற்கையுடன் மனம் முழுமையாக ஒன்ற அது தடையாகத்தானிருந்திருக்கும் என்பதை மறுக்க முடியாது.

''இங்கிருந்து பைனாகுலர்ஸில் பார்த்தால் மதுரைகூடத் தெரியுமாம். என்னுடைய டெலி லென்ஸையாவது கொண்டு வந்திருக்கணும் நான். அதைக் காமிராவில் பொருத்தி உங்களுக்கு மதுரையைக் காட்ட முடிந்திருக்கும்'' என்று கூறியபடியே ரங்கன் தனது ஆஷாஹி பென்டாக்ஸ் காமிராவின் உறையை நீக்கிச் சில தடவைகள் 'கிளிக்' செய்தான். இயற்கைக் காட்சிகள், பத்மநாபன் குடும்பம் இவற்றோடு மீனா தனியாக ஒன்றிரண்டு 'ஸ்னேப் ஷாட்'டுகளில் சிக்கிக் கொள்கிற மாதிரியும் காமிராவைத் துரிதமாகவும் ஒரு நிபுணன் என்று அநுமானிக்கக்கூடிய வகையிலும் கையாண்டான். •

''பில்லர் ராக்ஸிலும் ராக் ஆஃப் விஷனிலும் நாம் பார்த்த காட்சிக்கும் இதற்கும் என்ன வித்தியாசம்? சொல்லு, பார்க்கலாம்!'' என்றார் பத்மநாபன்.

''நான் சொல்றேன்'', ''நான் சொல்றேன்'' என்று ஒவ்வொருவரும் ஒரு விஷயம் சொன்னார்கள். ஆனால் அம்புஜம்தான் முக்கியமான வேற்றுமையைக் குறிப்பிட்டாள். ''அங்கே கண்ணுக்கெட்டிய தூரம் மலை முகடுகளையும், காடுகளையும், பள்ளத்தாக்குகளையும் பார்த்தோம். இங்கே கண்ணுக்கெட்டிய தூரம் சமவெளியைப் பார்க்கிறோம்'' என்றாள்.

''கரெக்ட்'' என்று ஆமோதித்தார் பத்மநாபன். ''நடுநடுவே மண்மேடுகள் மாதிரி சில குட்டி மலைகள் தென்படுகின்றன பார்!''

''பேசிண்டே இங்கே நடக்கப்படாது! ஆபத்து! அதோ, பாருங்கோ அனு ஓரமாய்ப் போறதை!'' என்ற அம்புஜம்

அனசூயாவை அதட்டினாள். "அடியே! இந்தண்டை வா! ஓரமாப் போனால் காலை முறிச்சுடுவேன்!"

அவள் மிரட்டலில் குழந்தை பயந்ததால்தானோ என்னவோ அந்த அசம்பாவிதம் நடந்து விட்டது. "ஐயோ!" என்று எல்லோருடைய வாயிலிருந்தும் வார்த்தை வெளிப் பட்ட அதே சமயத்தில் அனைவருக்கும் பீதியில் வயிறு முதுகெலும்போடு சேர்ந்து ஒட்டிக் கொண்டது போலாயிற்று.

★ ★ ★

# 16. தேவதூதன்

அனசூயா விழுந்த இடத்திலிருந்து "அம்மா! அம்மா!" என்று கூச்சல் கேட்டதும் எல்லாருக்கும் ஒரு சில வினாடிகளுக்கு நின்று போன மூச்சு திரும்பவும் வந்தது.

ரங்கன், ஒரு போலீஸ்காரரின் மகன் என்பதை நிரூபிப்பது போல் கண்டிப்புடன் ஆனால் அமைதியாகப் பேசினான்:

"மீனா! மாமியையும் விசுவையும் பார்த்துக்கொள். இந்த இடத்தை விட்டு நீங்க மூணு பேரும் அசையக் கூடாது" என்று உத்தரவிட்டான். தோளிலிருந்து தொங்கிய காமிரா வைக் கழற்றி மீனாவிடம் தந்துவிட்டு, "வாங்க ஸார்!" என்று பத்மநாபனை அழைத்துக்கொண்டு சத்தம் வந்த எல்லைக்கு விரைந்தான்.

"என் காலைக் கெட்டியாகப் பிடிச்சுக்குங்க" என்று கூறிப் பாதையில் குறுக்கே விழுந்தான். அவன் தலை, கழுத்து, மார்பு என்று படிப்படியாக அந்தப் பாதை விளிம்பில், மலைச் சரிவில் இறங்கிக் கெண்டேயிருந்தது. அவன் உருவம் மறைய மறைய மீனாவுக்குத் தன் தங்கை யைப் பற்றிய துயரத்துடன் அவனைப் பற்றிய கவலையும் சேர்ந்துகொண்டு இரண்டு பாரமாக நெஞ்சை அழுத்த ஆரம்பித்தன. அம்மாவின் தோள்களில் முகம் புதைத்தாள். விசுவை ஒரு கையால் பற்றிய அம்புஜம், பாறையாகத் தன்னைச் சிரமப்பட்டு மாற்றிக்கொண்டாள். மனம்

மட்டும் பாகாய் இளகிக் கொதிவிட்டு, "குறிஞ்சி ஆண்டவனே! முருகா! காப்பாற்று!" என்று திரும்பத் திரும்பக் கூறிக் கொந்தளித்தது.

பத்மநாபன் ரங்கனின் கால்களைத் தரையோடு அழுத்திப் பிடித்துக் கொண்டார். அவன் கீழ்நோக்கி முன்னேற முயன்றபோது இலேசாகக் கரங்களைத் தளர்த்தினார். மற்றச் சமயங்களில் அவன் ஒரேயடியாகச் சரிந்து விடாதிருக்கத் தமது பாரத்தை அவன் கால்கள் மீது சுமத்தினார்.

"அனு! இதோ, நான் வந்துட்டேன் பாரு! பயப்படாதே!" என்று ரங்கன் கூறுவது பள்ளத்திலிருந்து கேட்டபோது மேலே இருந்தவர்களுக்குத் துளி நம்பிக்கை பிறந்தது. லவலேசம்தான். இன்னும் எத்தனை பெரிய கண்டங்களிலிருந்து அவர்கள் மீண்டு வரவேண்டும்! நினைத்தாலே குலை நடுக்கமாய் இருந்தது. 'அந்தப் பக்கத்தில் செங்குத்தான சரிவாயிராமல் சற்றுச் சாய்மானமாக உள்ளதா? அங்கே ஏதோ பாறையின்மேல் அனு விழுந்திருக்கிறாளா? காயம் படாமல் இருக்குமா அவளுக்கு? அல்லது அந்தச் சரிவில் ஏதோ புதர்களில் சிக்கிக் கொண்டிருக்கிறாளா? முட்கள் சிராய்த்து விட்டிருக்குமா? ஏதாவது ஒரு கிளையைப் பிடித்துத் தொங்கிக் கொண்டிருக்கிறாளோ? ரங்கனின் பிடியில் அவள் சிக்குவாளா? கைக்கெட்டும் தொலைவில்தான் அவள் இருக்கிறாளா? கைக்கு எட்டினால் அவள் புதரை விட்டுவிட்டு இவன் கரத்தைப் பற்றும்போது பதற்றமடையாமல் இருக்க வேண்டுமே? இருவரில் ஒருவர் சற்று நடுங்கினாலும் கை நழுவிவிட நிலைமை விபரீதமாக மாறிவிடுமே!

'ஐயோ! ஒன்றா இரண்டா? ஆறாயிரம் அடி பள்ளம்!... குறிஞ்சி ஆண்டவனே! முருகா!'

''அனு! பயப்படாதே, கண்ணூ! அந்தக் கிளையில் உன் பிடியைத் தளர்த்தாதே! நான் பிடிச்சுக்கறேன் உன் கையை. என்ன சரிதானா? அப்பா அம்மாகிட்டே கொண்டு போய்ச் சேர்ப்பிச்சுடறேன் உன்னை. நீதான் தைரியசாலியாச்சே! குட் கேர்ல்! குட் கேர்ல்!''

அவளுக்குத் தைரியம் சொல்லிப் பேசிக்கொண்டேயிருந்தான் ரங்கன் என்பது மேலே இருந்தவர்களுக்குப் புரிந்தது. அனுவுக்குத் தைரியம் ஏற்பட்டதோ என்னவோ, இவர்களுக்கு அணுவளவும் உண்டாகவில்லை.

''ஸார்! இன்னும் கொஞ்சம் இறங்கணும் நான்'' என்றான் ரங்கன். ஏற்கெனவே அவன் சரீரத்தில் பாதிப் பங்கு அந்தப் புறத்தில் தொங்கிக் கொண்டிருந்ததால் கட்டுமஸ்தான தேகம் உடையவனான அவன் பளுவைப் பத்மநாபன் உணரத் தொடங்கிவிட்டிருந்தார். ஆனால் தரையும் எடையில் ஒரு பங்கைத் தாங்கியதால் அவரால் சமாளிக்க முடிந்தது. இப்போது இன்னும் இரண்டு அங் குலம் கீழே தலைகுப்புற அவன் சரிகிறானே! பத்மநாபன் பல்லைக் கடித்துக்கொண்டு தம் பிடியை விடாதிருந்தார். நல்லவேளை, அவர் ஒரு காலை உதைத்து ஊன்றிக் கொள்ள வசதியாக ஒரு பாறை இருந்தது. ரங்கனுடைய இடுப்பும் அந்தப் பள்ளத்துக்குள் முழுமையாக மறைந்து விட்டது!

ஒரு குழந்தைக்கு வந்த ஆபத்து இப்போது இன்னும் இரண்டு பெரியவர்களையும் தொற்றிக் கொண்டிருப்பதை உணர்ந்தாள் அம்புஜம். பத்மநாபனின் பிடி சற்றுத் தளர்ந்தால், அல்லது பயத்தில் வியர்த்துவிட்ட உள்ளங்கை சற்று வழுக்கினால், அதே சமயம் பாறையை உதைத்துக் கொண்டிருக்கும் காலும் நிலைதடுமாறி விடலாம்!.... அவ்வளவுதான்... மூவருமே அதள பாதாளத்துக்குப்

பயணப் படக்கூடும்! 'குறிஞ்சி ஆண்டவனே! முருகா!'' அம்புஜத்தின் கண்கள் அவள் மாங்கல்யத்திலிருந்த சிவ லிங்கத்தை நீரால் அபிஷேகம் செய்தன.

''ஸார்! அனுவைக் கெட்டியாகப் பிடிச்சுக்கிட்டேன்! இனிமே மெல்ல என்னை மேலே இழுங்க! அவசரப் படாதீங்க! நிதானமா!'' என்றான் ரங்கன். பத்மநாபன் அவ்வாறே செய்தார். ரங்கனும் அவருடன் இயன்றமட்டும் ஒத்துழைத்தான். ஒரு கையால் அனுவைப் பிடித்துக் கொண்டே, இடக் கரத்தை மலைச் சரிவில் ஊன்றிப் பின் னோக்கி உடலை உந்தித் தள்ளினான். பத்மநாபன் முட்டுக் கொடுத்தாற் போல் தம் காலை ஊன்றிக் கொண்டிருந்த பாறை இலேசாய் அசைந்து கொடுப்பதைப் பார்த்தபோது குடல் நடுக்கம் ஏற்பட்டது அம்புஜத்துக்கு. ஆனால் தெய்வச் செயலால் அது இறுதிவரை இடம் பெயராமல் நிலைத்து நின்றது. ரங்கன் பாம்பாக இப்படியும் அப்படியும் நெளிந்து பின்னுக்கு வந்தான். ''அனு! இனிமேல் நீ அந்தக் கிளையைப் பிடிச்சுக்க வேண்டாம்! மேலே இருக்கே, அந்தப் புதரைப் பிடிச்சுக்கணும்! நான் உன்னை விட்டுட மாட்டேன், பயப்படாதே!'' என்றான் ரங்கன்.

அந்தப் பயங்கரச் சொப்பனம் மேலும் ஓரிரு நிமிஷங்களுக்கு நீடித்தது. இப்போது ரங்கன் இடது கையைச் சாலை விளிம்பில் நன்கு ஊன்றிக் கொண்டிருந் தான். இதுகாறும் தரையோடு தரையாக இருந்த அவன், இப்போது தவழும் குழந்தையின் நிலையில் தன் முழங் காலை மடக்கி உடலை உயர்த்தி யிருந்தான். வலது கரம் இன்னமும் பள்ளத்துக்குள்ளேதான் இருந்தது. மெல்ல மெல்ல அது உயர்ந்தபோது அனுவின் கேசமும் பிறகு நெற்றியும் முகமும் கழுத்தும் தோள்களும் படிப்படியாகத் தெரியலாயின.

அம்புஜம் அதற்கு மேல் அடங்கியிருக்க மாட்டாத வளாய், கண்களில் ஒற்றிக் கொண்டிருந்த தாலியை மார்பில் தவழ விட்டுப் புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக்கொண்டு ஓடினாள். அனசூயாவை அள்ளி எடுத்துக் கொண்டு சாலையின் பத்திரமான எதிர்ப் பக்கத் துக்கு வந்து கட்டி அணைத்து விம்மியபடியே முத்தமிட்டுக் கண்ணீர் சொரிந்தாள்.

பாண்ட்டையும் சட்டையையும் தூசி போகத் தட்டிக் கொண்டே ரங்கன் நிமிர்ந்தான். "உனக்கு நான் ரொம்பக் கடமைப் பட்டிருக்கிறேன், தம்பி!" என்று கூறிப் பத்ம நாபன் அவன் இரு கரங்களையும் எடுத்துத் தம் கண்களில் ஒற்றிக் கொண்டார். பட்ட சிரமத்தாலும் பயத்தாலும் பத்மநாபனுக்கு உடலெல்லாம் நனைந்திருந்தது. ஆயின் தன் உள்ளங் கைகளை ஈரமாக்கியது வியர்வை அல்ல; கண்ணீர்தான் என்பதை உணர்ந்தான் ரங்கன். "என்ன ஸார், இது!" என்றான் ரங்கன் கலக்கத்துடன்.

"ஆபத்தை ஏற்படுத்துகிற ஆண்டவன் உன்னை மாதிரி ஆபத்துதவிகளையும் சமயத்துக்கு அனுப்பி வைக்கிறாரே, அதுதான் அதிசயம்" என்றார் அவர்.

"ஆபத்துக்கு உதவ வேண்டியது எந்த மனுஷனுக்கும் கடமைதானே? ஆண்டவனுடைய தூதன், அது இதுன்னு சொல்லி நான் செய்ததைப் பெரிசு படுத்தாதீங்க. பெரிய கண்டம் அனுவுக்கு வந்தது; தப்பிப் பிழைச்சாள்; கடவுளுக்கு நன்றி செலுத்துங்க." அடக்கமாகப் பேசினான் ரங்கன்.

அனுவை மடியில் போட்டுக் கொண்டிருந்த அம்புஜமும், கைகளைப் பிசைந்து கொண்டிருந்த மீனாவும் திருதிரு வென்று விழித்துக்கொண்டு நின்ற விசுவும் இருந்த இடத்துக்கு மற்ற இருவரும் போய்ச் சேர்ந்தனர்.

இவர்களுக்கு முன் பின் அறிமுகமில்லாதவர்கள் யாரோ சிலர் அப்போது அந்தப் பக்கமாகப் போனார்கள். கலவரமடைந்த நிலையில் இவர்கள் இருப்பதைப் பார்த்துவிட்டு, "என்னங்க? என்ன ஆச்சு?" என்று வினவினார்கள்.

"ஒன்றுமில்லை, குழந்தை விழுந்துடப் பார்த்தா, தெய்வாதீனமா தப்பிச்சுட்டா. ஆனா எல்லாருமே ரொம்பப் பயந்துட்டோம்; அவ்வளவுதான்" என்றான் ரங்கன்.

"என்னங்க இதைப்போய் 'ஒண்ணுமில்லை, அவ்வளவு தான்'னு இலேசாச் சொல்லிட்டீங்க? ஜாக்கிரதையா இருக்கப்படாது? பூமியிலே பால் கொட்டிப் போச்சுன்னா பிறகு அள்ள முடியுங்களா?" என்றார் ஒருவர். மற்றொருவர் "குழந்தைங்களைக் கண்டிச்சுத்தான் வளர்க்கணும்; ரொம்ப இடம் தரப்படாது. தந்தால் இப்படித்தான் எதாவது இடைஞ்சல் பண்ணி வைக்கும்" என்றார்.

இவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டு அந்தக் கோஷ்டி போய்ச் சேர்ந்ததும், "இவர்களை யார் அறிவுரை வழங்க அழைத்தார்கள்?" என்று முணுமுணுத்தாள் மீனா.

ரங்கன் சூள் கொட்டினான். "ஏதோ அவங்களுக்கும் பொழுது போகணுமில்லே? சொல்லிட்டுப் போறானுங்க. இவன் சொன்னதைக் கேட்டதும் எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வருது. நானும் அப்பாவும் மலை ஏறி வந்துக் கிட்டிருந்தோமா? அப்போ வழியில் ஸில்வர் காஸ்கேட் கிட்டத்தில் கணவனும் மனைவியுமா அமெரிக்கர் இருவர் காரை நிறுத்திட்டுச் சாலை ஓரமா ஒரு மதகு மேல் உட்கார்ந்து பேசிக்கிட்டிருந்தாங்க. இன்னொரு பக்கம் சாலை ஓரச் சுவர்மேலே அவர்களோட பையன் நடந்துக் கிட்டிருந்தான். சர்க்கஸில் கயிற்றின் மேலே 'பாலன்ஸ்' பண்ணுவாங்களே அப்படி அவன் நடக்கிறான். அந்தப் பக்கம் அப்படி ஒண்ணும் ஆழம் இல்லே. அந்தத்

தைரியத்திலேதான் அவங்களும் மகனை அதுக்கு அனுமதிச்சிருக்காங்க போலிருக்கு. பஸ் நிற்கவே நாங்களும் சற்று இறங்கினோம், அருவி கொட்டற அழகைப் பார்த்து ரசிச்சிட்டுப் போகலாம்னு. அந்தச் சமயத்திலே இப்போ வந்தாங்களே இதே மாதிரிதான் சம்பந்தமில்லாத ஒருவன் பாய்ஞ்சு வந்து அந்தப் பையனை அலாக்காகத் தூக்கினான். நேரே அவன் பெற்றோரிடம் கொண்டுவந்து சேர்ப்பிச்சான். 'பிள்ளையை இப்படித் தனியா விட்டுட்டுப் பேசிக்கிட்டிருக்கீங்களே? விளுந்து வெச்சா என்ன கதி'ன்னு ஒரு குட்டிப் பிரசங்கம் நடத்திட்டுக் கிளம்பினான்.

"இவங்க அவனை விடலை. நிறுத்திவைச்சு, அவன் கண் எதிரே மறுபடியும் பிள்ளையை சாலையோரச் சுவர் மேலே நடக்கச் சொல்லி ஊக்குவிச்சாங்க. பையனும் நடந்தான். கைதட்டி பாராட்டினாங்க. அந்தாளு முகத்திலே ஈயாடலை. அவன் தன் அரை குறை இங்கிலீஷை விழுங்கிட்டுத் தமிழிலேயே அவங்களைத் தைரியமாய்த் திட்டித் தீர்த்துட்டுப் போய்ச் சேர்ந்தான்.

"அந்தக் குழந்தையோட அப்பா என்னைப் பார்த்து என்ன சொன்னார்னு நினைக்கிறீங்க? 'என் மகனுக்கு இது வரையில் பயம் என்றாலே என்னன்னு தெரியாமல் இருந்தது. இப்போ அவன் சொல்லிக் கொடுத்துட்டுப் போயிட்டான்' என்றார். நான் அசந்துட்டேன். ஆனா யோசிச்சுப் பார்த்தபோது அவங்களோட அந்த ஸைகாலஜியை என்னால் புரிஞ்சுக்க முடிஞ்சுது. எச்சரிக்கையா இருக்கணும்பாங்க; ஆனால் பயமுறுத்த மாட்டாங்க."

"அமெரிக்கர்கள் குழந்தைங்களை வளர்க்கற விதமே அலாதி" என்றார் பத்மநாபன். "அப்படித்தான் இன்றைக்கு அனுகூட பயப்படாமே தைரியமா இருந்தாளே, அமெரிக்கன் கேர்ல் மாதிரி! இல்லையாடா கண்ணா?" என்று மகளைக் கொஞ்சித் தேற்றினார்.

ஆனால் அனசூயாவோ தொடர்ந்து விசும்பி விசும்பி அழுது கொண்டுதானிருந்தாள்.

"குழந்தை ரொம்பத்தான் அரண்டு போயிட்டாள்" என்று சொல்லி, தளர்த்திய கரங்களை மீண்டும் அவளைச் சுற்றி இறுக்கிக் கொண்டாள் அம்புஜம். "வேண்டாண்டி, கண்ணூ வேண்டாம்!"

"எனக்கு ஒண்ணும் பயமில்லை" என்றாள் அனசூயா விம்மியபடியே.

"அதுதான் சமர்த்துக்கு அடையாளம். பயமில்லேன்னா பிறகு ஏன் அழறே? நிறுத்திடு" என்றான் ரங்கன்.

"நான் கீழே விழுந்துட்டதுக்காகப் பயந்து போய் அழலை மாமா! சித்தே முன்னாடி இந்தச் சரிவிலே மாட்டுக்காரப் பயல்கள் போறதைக்கூட நீங்க எனக்குக் காண்பிக்கலையா?"

"ஆமாம், ஆமாம்" என்றான் ரங்கன். இந்தக் கலாட்டா வில் அவன் அதை மறந்தே விட்டிருந்தான். ஆனால் சிறுமி அனு நினைவு வைத்திருந்தாள். கோக்கர்ஸ் வாக் என்ற அந்தப் பாதைக்குள் நுழைந்ததுமே முதன் முதலில் ரங்கனுடைய கவனத்தைக் கவர்ந்தது அந்த விஷயம்தான். ஆச்சரியத்துடன் அவன் அதை அனசூயாவுக்கும் சுட்டிக் காட்டியிருந்தான்.

"இந்த மலைச் சரிவு ஆறாயிரம் அடி ஆழம்! கிடுகிடு பள்ளம் என்று நாம் பயப்படுவோம். ஆனால் அதோ அந்த மாடுகளைப் பார்த்தாயா? தைரியமா இறங்கிப் போறது! அதோ, ஒரு கிழிசல் ஸ்வெட்டரைப் போட்டுண்டு, கையில் கோலோடு மாட்டுக்காரப் பயலும் சரிவில் இறங்கி நிற்கிறான் பார்! என்ன தைரியம்!"

'கோக்கர்ஸ் வாக்'கை யொட்டிய சரிவிலும் மாடு களுக்குத் தெரியும், எங்கே செங்குத்தான அதள பாதாளம்,

எங்கே சாய்மானம் என்று. அவை எப்படியோ நுண்ணறிவோடும் உள்ளுணர்வோடும் செயல்பட்டுச் சரிவில் ஓரிரு இடங்களில் மேயப் போய் ஒற்றையடிப் பாதைகளையும் ஏற்படுத்தியிருந்தன. அதுவும் சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்குப் புலப்படாது. ஆனால் மாடு சென்ற பிறகு மாட்டுக்காரச் சிறுவர்கள் அதைப் பின்பற்றத் தயங்க மாட்டார்கள். செங்குத்தான பள்ளம் என்றால் மாடு அங்கே இறங்காது என்பது அதனை மேய்ப்பவனுக்குத் தெரியும்.

ஆனால் அனசூயா விழுந்தது அப்படிப்பட்ட சாய்மானமான இடம் என்று சொல்ல முடியாது. செங்குத்தான சரிவுதான். இதை, அவளை விடுவிக்கத் துணிந்த ரங்கன் நன்கு பார்த்துணர்ந்திருந்தான். பக்கவாட்டில் ஒரு மரத்தின் கிளைகள் படர்ந்திருந்ததாலும், புதர்கள் அடர்ந்திருந்ததாலும்தான் பிழைத்தாள் அனசூயா. எடை குறைந்தவளாக இருந்ததால் அவை முறிந்து வளைந்து விடாது நிலைத்து அவள் கீழே செல்ல வழியில்லாமல் செய்தன; ஏந்திக் கொண்டன. அவள் இலேசானவளாய் இருந்ததால்தான் கிளையைப் பற்றிக் கொண்டபோது அது உடையவில்லை; புதர் வேரோடு பிடுங்கிக்கொண்டு வரவில்லை.

இவற்றை யெல்லாம் அறிந்திருந்தும் ரங்கன் இப்போது அவளை உற்சாகப் படுத்தும் நோக்கத்துடன் பேசினான்: "அதானே கேட்கிறேன், மாடுகளும் மாட்டுக்காரப் பயல்களும் அந்தச் சரிவிலே இறங்கறபோது அனசூயா பயப்படலாமா என்ன? ஷேம்! கண்களைத் துடைத்துக்கொள்!"

அனசூயாவின் அழுகை ஓயவில்லை. சொன்னாள்: "நான் விழுந்ததுக்காகக் கொஞ்சம்கூடப் பயப்படலை மாமா! நான்விழுந்த இடத்திலேயிருந்து கொஞ்ச தூரத்திலே பிரமீளா அக்காவோட அம்மா இருக்கா. அவளைக்

*கண்டுதான் பயந்தேன். அவள் என்னைக் கோபமா முழிச்சு முழிச்சுப் பார்த்தா!''*

*''யாரு? கனகமா?'' என்றாள் அம்புஜம் ஒன்றும் விளங்காமல்.*

*''ஆங்! கனகம் மாமிதான்! கனகம் மாமிதான் அவ பேரு!''*

*''குழந்தைக்கு ஏதோ பிரமை ஏற்பட்டிருக்காப் போல இருக்கு, விழுந்த அதிர்ச்சியிலே'' என்றார் பத்மநாபன்.*

*''முருகன் கோயிலுக்குப் போய் விபூதி வாங்கி இட்டால் சரியாப் போயிடும், கிளம்புங்க'' என்ற ரங்கன் அனுவைத் தூக்கித் தோளில் சாற்றிக் கொண்டான். ''அப்புறம் இன்னொரு நாளைக்கு சாவகாசமா இங்கே வந்துக்கலாம்.''*

*''வேண்டாம்! வேண்டாம்! இன்னொரு நாளைக்கு வேறு இங்கே வரணுமா? அனுபவிச்சது போதாதா?'' என்றாள் அம்புஜம்.*

*நடந்து கொண்டே பேச்சைத் தொடர்ந்தனர்.*

*''இருக்கட்டுங்க மாமி, ஒருதரம் பட்டாச்சுல்லே, இனிமே ஜாக்கிரதையா இருக்க மாட்டோமா? இரவு நேரத்திலே வரணும்.''*

*''கஷ்டம், கஷ்டம்! பகல்லே வந்து பறிதவிச்சதே போதும், ரங்கா!''*

*''அதுக்கில்லீங்க; ராத்திரி பெரிய குளத்திலும் இன்னும் சில சின்ன ஊர்களிலும் விளக்கு வைச்சப்புறம் இங்கே யிருந்து பார்த்தா ஏதோ நட்சத்திர மண்டலம் நமக்குக் கீழே இருப்பது போலத் தோன்றுமாம். அண்ணாந்து நோக்கினால் அங்கே நிஜமான நட்சத்திர மண்டலமும் காட்சி யளிக்கும்!''*

*''சுருக்கமா திரிசங்கு சொர்க்கத்திலே இருக்கிற மாதிரின்னு சொல்லேன் தம்பி!''*

"திரிசங்கு சொர்க்கத்திலேதான் இத்தனை நேரம் இருந்துட்டு வந்தாளே குழந்தை, போதாதா? அதென்னவோ இந்தப் பொண்ணுக்கேதான் திரும்பத் திரும்ப ஏதானும் வந்து சேர்றது."

ரங்கன் சிரித்தான். பத்மநாபனுக்கும் மீனாவுக்கும்கூடச் சிரிப்பு வந்துவிட்டது.

"சிரிங்கோ எல்லாருமா சேர்ந்துண்டு. எனக்கு ரத்தமே சுண்டிப் போற மாதிரி இருக்கு" என்றாள் அம்புஜம். "கெட்டியா பிடிச்சுக்கோடா கையை!" என்று விசுவை அதட்டினாள்.

"மாமா!" என்று ரங்கன் காதருகே குனிந்து ரகசியக் குரலில் பேசினாள் அனசூயா. "அங்கே கனகம் மாமி இருக்கான்னு சொன்னேனே? அவ செத்துப் போயிட்டா போலிருக்கு! ஆடாமே அசையாமே இருந்தா; ஆனா கண் கொட்டாமே என்னை முழிச்சுப் பார்த்தா! அதனால்தான் எனக்குப் பயமாப் போச்சு, அழுதேன்!"

எல்லாரும் சேர்ந்து சிரித்ததானது அவள் அழுகையை நிறுத்தி நாவையும் தளர்த்தி யிருந்தது.

"என்ன சொல்கிறாள் குழந்தை?" என்றார் பத்மநாபன்.

"ஒன்றுமில்லை. எனக்கும் அவளுக்கும் இடையில் ரகசியம்" என்றான் ரங்கன். "அப்படித்தானே?" என்று அனசூயாவைக் கேட்டான். "ஆமாம்" என்பது போல் அவள் அடி உதட்டைப் பற்களால் கடித்துக் கொண்டு தலையை மேலும் கீழுமாக அசைத்ததும், "யாருக்கும் சொல்லாதே!" என்றான்.

கீழே விழுந்த அதிர்ச்சியில் அவளுக்குப் பயங்கரமான பிரமை ஏதோ ஏற்பட்டிருக்கிறது. ஓரிரு நாட்களானால் சரியாகிவிடும்; முருகனின் பிரசாதமும் நம்முடைய பிரார்த்தனையும் உதவும் என்று எண்ணினான் ரங்கன்.

அவள் உளறுவதைக் கேட்டால் பெற்றவர்கள் மேலும் கலவரம் அடைந்து பதறுவார்கள். அதைத் தவிர்க்க விரும்பிய அவன், நடந்து கொண்டே அவள் காதோடு சொன்னான்: ''கண்ணு! பயங்கரச் சொப்பன மெல்லாம் ஞாபகம் வைச்சுக்கப்படாது! உடனே உடனே மறந்துடணும், என்ன?''

''ஆனால் இது சொப்பனம் இல்லையே மாமா, தூங்கறச்சேன்னா சொப்பனம் வரும்?''

''அப்படியானா ஒண்ணு செய். இதை என் அப்பாவிடம் சொல்லு. அவர்தான் பெரிய போலீஸ் ஆபீசராச்சே! அவர் எல்லாத்தையும் கவனிச்சுப்பார். அப்புறம் நீ நிம்மதியா இருக்கலாம்!''

''அது நல்ல ஐடியா, ரங்கன் மாமா! அதுக்காகத்தான் உங்ககிட்டே சொன்னேன். நீங்களே உங்க அப்பாகிட்டே இது பற்றிப் பேசிட்டாலும் போறும். இனிமே நான் அழமாட்டேன். எல்லாத்தையும் மறந்துடறேன்!''

''சமர்த்து!'' என்று அவள் கன்னத்தில் முத்தமிட்டான் ரங்கன். சமயோசிதமாகப் பேசி அவள் மனப் பிரமையைத் தான் அடியோடு போக்கி விட்டதில் அவனுக்குப் பரம திருப்தி.

**கோ**க்கர்ஸ் வாக் என்ற அந்த நடைபாதையின் முடிவுக்கு வந்துவிட்டார்கள். சுழல் 'கேட்' ஒன்று அங்கு இருந்தது. ஒவ்வொருவராய் அதில் புகுந்து கேட்டைத் தள்ளிச் சுழல வைத்து அப்பால் போக வேண்டும். குழந்தைகள் இருவருக்கும் அது ரொம்ப சுவாரசியமானதாக விளங்கியது. கேட்டைக் கடந்து இப்பால் வராமல் உள்ளேயே சுற்றிச் சுற்றி வந்து சிரித்தார்கள்.

''இதெல்லாம் நேருஜி வரப் போகிறார் என்பதற்காகச் செய்யப்பட்ட காரியங்கள்னு பேசிக்கிட்டாங்க''

என்றான் ரங்கன். "இரண்டு பக்கமும் சுழல் கேட் போட்ட துடன் பாதையையும் அழகாகச் செப்பனிட்டாங்களாம். நடுவிலே தாரும் அதுக்கு இரண்டு பக்கமும் சிமெண்டுமாக நாமம் போட்டதுபோல் பாதை நீளுது பாருங்க!"

"நேருஜி பார்த்து ரசிக்கக் கூடிய காட்சிதான்" என்றார் பத்மநாபன். "நமக்கு ஏற்பட்ட மோசமான அனுபவத்தை மறந்துட்டுப் பார்த்தோம்னா அது புரியும். பாரத நாட் டையே ஒரு காதலனுக்குரிய ஆவேசத்தோடு நேசித்தவர் நேருஜி. அந்த நங்கையின் ஓர் எழிலார்ந்த அங்கத்தை இங்கே பார்த்து ரொம்ப ரசித்திருப்பார்."

'பொயட்டிக்'கா பேசறீங்க! உங்க காவிய உள்ளத் துக்கு ஏமாற்றமளிக்காமல் இருப்பதற்காகவாவது அவர் இங்கே வந்திருக்கலாம். ஆனால் பாவம்! அவருக்குக் கொடுத்து வைக்கவில்லை. நேரமில்லை என்று இங்கே வராமலேயே திரும்பிப் போய்விட்டார் நேருஜி."

"ஆனாலும் அவர் வரப் போறார்ங்கறதாலே இந்த இடத்துக்கு நல்ல காலம் பொறந்தாப்போலே இருக்கு" என்றாள் அம்புஜம்.

"இப்படித்தான் பிரசிடெண்ட் வரப்போறார்ங்கறதாலே பழைய மாம்பலம் சாலைக்கே கூட ஒரு சமயம் நல்ல காலம் பொறந்தது!"

"பழைய மாம்பலம் சாலை ஒன்று புதுப்பிக்கப்பட்ட தென்றால் அது ரொம்பப் பெரிய விஷயம்தான்" என்று ரங்கனும் ஒப்புக்கொண்டான். பின்னர் கேட்டான்: "இந்தக் கோக்கர்ஸ் வாக் ஏற்பட்டு நூறு வருஷங்கள் ஆகிவிட்டன, தெரியுமா உங்களுக்கு? அதன் ஞாபகார்த்தமாகப் பாறை யிலே பெயரையும் வருஷத்தையும் செதுக்கி வைச்சிருக் காங்களே, கவனிச்சீங்களா?"

*"அது சரி, இதுக்கு ஏன் 'கோக்கர்ஸ் வாக்'குன்னு பேரு? அதைவிட 'க்ரோக்கர்ஸ் வாக்'குன்னு வைச்சிருக்கலாம். சாகப் போறவங்களுக்கு ஏற்ற நல்ல இடம்."*

*"அடேடே! அம்புஜம்! என்ன இன்னிக்கு இங்கிலீஷ் பொளக்கறது? அதுவும் இத்தனை பொருத்தமா 'பன்' பண்ணிப் பேசறயே!"*

*"எல்லாம் நானும் நாலு எழுத்துப் படிச்சவள்தான், ரொம்பக் கிண்டல் பண்ணாதீங்கோ!"*

"கோக்கர் என்று ஒரு கிறிஸ்துவப் பாதிரியார் இருந்தாராம் மாமி. அவர், தாம் ஆண்டவனுடன் மனத்தை இரண்டறக் கலக்க ஏற்ற ஏகாந்தமான இடமாக இதைக் தேர்ந்தெடுத்து வந்தாராம். பைபிளைக் கையில் பிரிச்சு வைச்சுக்கிட்டு அதில் கண்ணோட்டம் செலுத்தியபடியே சுற்றுப் புறத்தையும் கவனிச்சு நடப்பாராம். அவர் பாதம் பட்டுப் பட்டுத்தான் இந்தப் பாதையே ஏற்பட்டதாம். அதனால்தான் கோக்கர்ஸ் வாக்குன்னு பேர். நாளடைவில் எல்லாரும் வர ஆரம்பிக்கவே. ஒற்றையடிப் பாதை கொஞ் சம் கொஞ்சமாய் அகலமாயிற்றுன்னு சொல்லிக்கிறாங்க."

*"சரியான இடத்தைத்தான் தேர்ந்தெடுத்தார்"* என்றாள் *மீனா.* "ஐம்பது அறுபது மைல் தொலைவுக்குச் சமவெளி யைப் பார்க்கும்போது நம் மனமும் விரிந்து பரந்து உலகையே அணைப்பதுபோல் ஒரு விநோத உணர்வு ஏற்படுகிறது இங்கே."

*"ஒரு டாக்ஸியைப் பிடிச்சுக்கிட்டுக் கையோடு குறிஞ்சி ஆண்டவர் கோயிலுக்கு போய் வந்துடுவோமா?"* என்றார் பத்மநாபன்.

*"நீங்க அவசியம் அதைச் செய்யுங்க. மனசுக்கு நிம்மதியா யிருக்கும். நான் ஹோட்டலுக்குத் திரும்பிப் போறேன்.*

அப்பாவை ரொம்ப நேரம் தனியா விட்டுட்டு வந்தாச்சு'' என்றான் ரங்கன்.

அப்பாவுக்கும் பிள்ளைக்குமிடையில் பாசம் எத்தனை பலமான முடிச்சாக விழுந்திருந்தது என்பது பத்மநாபனுக்குத் தெரியுமாதலால் அவர் அவனைத் தங்களோடு வருமாறு வற்புறுத்தவில்லை.

அரை மணி நேரம் கழித்து, ஹோட்டலில் தங்கள் அறைக்குள்ளே, ''ஹல்லோ டாடி! வாட் நியூஸ்?'' என்று உற்சாகமாகக் கேட்டுக்கொண்டே நுழைந்த ரங்கன், ''ஒரு நியூஸுமில்லேன்னா என்னைக் கேளுங்க; நான் சொல்றேன், கதை கதையா!'' என்றான் உரக்க.

அடுத்த கணம் அவன் அங்கே ஒரு பெண்மணி கண் கலங்க அமர்ந்திருப்பது கண்டு திடுக்கிட்டுத் தயங்கினான். கூடவே 'சுவரொட்டிகளில் இந்த முகத்தை அடிக்கடி பார்த்திருக்கிறோம்' என்ற நினைவும் ஏற்பட்டது.

''வா, ரங்கன்! உனக்குப் பிரமீளாவைத் தெரிஞ்சிருக்குமே? இவங்க அம்மாவை இன்னிக்குக் காலையிலிருந்து காணோமாம். ரொம்ப மனசு தளர்ந்து போய் அழறாங்க. 'தேடிக் கண்டு பிடிக்கலாம், பயப்படாதீங்க'ன்னு தைரியம் சொல்லிக்கிட்டிருக்கேன்'' என்றார் நடராஜன்.

திகைத்துச் சிலையானான் ரங்கன். வாயடைத்துப் போனாலும், 'அப்படியானால் அனசூயாவுக்கு ஏற்பட்டது பிரமை இல்லையா?' என்று அவன் நெஞ்சம் வீறிட்டு அலறியது.

★ ★ ★

# 17. விடுமுறைக்கு விபத்து!

**த**ன் தகப்பனாரிடம் தனியாகப் பேசவேண்டும் என்று சொல்லி அவரை வாசலுக்கு அழைத்து வந்தான் ரங்கன். 'அப்படி என்ன ரகசியம்? அதுவும் மூன்றாவது நபர் ஒருவர் வந்திருக்கும்போது என்ன அவ்வளவு அவசரம்?' என்று நடராஜன் எண்ணிக் கொண்டார். அவன் செய்கை அவருக்குப் பிடிக்கவில்லைதான். ஆயினும் ரொம்ப முக்கியமான விஷயமாக இல்லாவிடில் தம் மகன் இப்படி அநாகரிகமாக நடந்துகொள்ள மாட்டான் என்பதும் அவருக்குத் தெரியும். ஆகவே, "எஸ்கியூஸ் மி" என்று பிரமீளாவிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு வாசலுக்கு வந்தார். "என்ன ரங்கா?"

"அப்பா! நீங்க பிரமீளாவோட அம்மாவைத் தேட வேண்டிய அவசியம் இல்லை. அவங்க இருக்கிற இடம் எனக்குத் தெரியும்!"

"ஓ! நீ அவங்களைச் சந்திச்சியா? நானும் பிரமீளாகிட்டே இதையேதான் சொன்னேன். 'மார்க்கெட் பக்கம் ஏதாவது ஷாப்பிங்குக்குப் போயிருப்பாங்க; சீக்கிரம் வந்துடு வாங்க'ன்னு. இதுக்குப் போய் இந்தப் பொண்ணு பயந்து காரைத் தானே ஓட்டிக்கிட்டு இங்கே வழியை விசாரிச்சுத் தெரிஞ்சுக்கிட்டு வந்திருக்கு."

"ஏன் டிரைவர் என்ன ஆனான்?" என்று கேட்டான் ரங்கன். ஸி.ஐ.டி.யின் மகனான அவன் சிந்தனைகளும்

ஒன்றிலிருந்து ஒன்று கிளைத்துப் படரவே செய்தன. கேள்விகளைப் போட்டு விஷயங்களைக் கிரகிப்பதும். எதையும் தர்க்கரீதியாக. அணுகுவதும் அவன் இயல்பாகவே ஆகிக்கொண்டு வருவதைத் தகப்பனாரும் கவனித்துத்தான் வந்தார். ஆனால் துப்பறியும் துறையில் அவனை ஈடுபடுத்து வது அவர் நோக்கம் இல்லையாதலால் அவனது இந்தத் திறமைக்கு அவர் என்றைக்குமே ஊக்கம் அளித்ததில்லை. அவன் பொறியியல் துறையில் வல்லுநனாகிச் சொந்தத்தில் தொழில் நடத்த வேண்டும் என்பது அவர் ஆசை. ஆனால் இப்போது இவனே நேரடியாக இந்தக் குழப்பமில்லாத மர்மத்தில்-பிரமீளாவின் அம்மா காணாமல் போன சிக்கலற்ற கேஸில்-சம்பந்தப் பட்டிருக்கிறபடியால் பொறுமையாகப் பதில் சொல்லிவிட வேண்டியதுதான் என்று தமக்குத்தாமே வேடிக்கையாக எண்ணிக்கொண்டு பதிலிறுத்தார்:

''டிரைவரோட பெண்டாட்டிக்கு உடம்பு சரி யில்லைன்னு தந்தி வந்ததாம். பார்த்துட்டு ஒருவாரத்திலே திரும்பி வந்துடறதாகச் சொல்லிட்டுப் போனானாம். இந்தப் பெண்ணுக்குப் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் அம்மா வைக் காணோம்னு ரிப்போர்ட் பண்ண மனசு வரலை. நான் கொடைக்கானல் வந்திருப்பதாகக் கேள்விப்பட்டு நேரே என்கிட்டேயே வந்துட்டாள். தன்னுடைய அந்தஸ்துக்கு என்கிட்டே வந்தால்தான் பொருத்தம் என்று நினைச்சாளோ? அல்லது என்னிடம் காரியத்தை ஒப்படைச் சுட்டா அவள் அம்மா சீக்கிரமா அகப்பட்டு விடுவாங் கன்னு எண்ணினாளோ; ஆகமொத்தம் ஒரே புலம்பல். 'என்கிட்ட சொல்லிக்காமல் அம்மா எங்கேயும் வெளியே கிளம்பறதில்லை; லஞ்ச் டைம் வரைக்கும் காத்திருந்து பார்த்தேன்; அம்மா திரும்பி வரலை; எனக்குச் சாப்பாடே இறங்கலை; காரைக் கிளப்பிக்கிட்டு வந்துட்டேன்'

என்கிறாள். எப்படியோ அவள் கவலையைத் தீர்க்கிற மாதிரி செய்தி கொண்டு வந்திருக்கே, உள்ளே வந்து தைரியம் சொல்லி அனுப்பு!''

''அப்பா! ஐ ஆம் ஸாரி. என்னைத் தப்பாய்ப் புரிஞ்சுக் கிட்டீங்க. உங்க ஹாலிடேக்கு மறுபடியும் ஆபத்து வந்துட்டதுன்னு நான் சொல்றேன்.''

அவர் நெற்றி சட்டென்று சுருங்கப் புருவங்கள் நெரிந்தன. அவன் கூறியதை அவர் சற்றும் ரசிக்கவில்லை. ஆயினும் ரங்கன் விளையாட்டாகப் பேசவில்லை என்பதும் அவருக்குப் புரிந்தது. கண்களை மூடிக்கொண்டு உண்மை களைப் பார்க்க மறுப்பதால், ஒதுக்கித் தள்ளுவதால் யாருக்கு என்ன லாபம்? கடமையைச் செய்வதிலிருந்து தாற்காலிகமாக விடுதலை பெறலாம்; ஆனால் அப்போதும் ஜெயிலிலிருந்து தப்பி வந்தவனின் மனநிலையில்தான் தவிக்க வேண்டியிருக்கும். அதைவிட எதிர்ப்படுகிற தொல்லையைச் சந்தித்துச் சமாளிப்பதே மேல்.

''ரங்கா! நேரடியாக விஷயத்துக்கு வா! எனக்கு அதிர்ச்சி அளிக்க வேண்டியிருக்குமோ என்று நீ தயங்கத் தேவை யில்லை.''

''கனகம் இருக்கும் இடம் எனக்குத் தெரியும்னு சொன்னேன். ஆனால் அவளை நான் சந்திக்கவில்லை. அனசூயாதான் பார்த்தாள்'' என்று தொடங்கி ரங்கன் சற்று முன்னால் கோக்கர்ஸ் வாக்கில் நடந்தவற்றைச் சுருக்கமாக எடுத்துரைத்தான்.

''அப்பா! அந்தப் பக்கம் ரொம்ப ஆழம்தான். ஆனால் தெய்வச் செயலாக அனசூயா தப்பிப் பிழைச்சாள். உடம் பிலே கொஞ்சம் ரத்தக் காயத்தோடு சரி. சற்றுக் கனமான பேர்வழியாக இருந்திருந்தால் கிளைகளும் புதர்களும் வளைந்து கொடுத்து வழி விட்டு அதள பாதாளத்துக்கு

அனுப்பி வைச்சிருக்கும். ஏன், அனசூயாவேகூட மலைச் சரிவின் ஓரமாகத் தடுமாறி விழுந்ததால்தான் இன்னும் முழுசா இருக்காள். கொஞ்சம் வேகமாகப் பாய்ஞ்சிருந் தால்-அதாவது அந்தப் புதர்கள் வளர்ந்திருக்கும் எல்லைக்கு அப்பால் போய் விழுந்திருந்தால் அவளைப் பறி கொடுத்துட்டுத்தான் நிற்போம். புதர்களும் ஒருசில சின்ன மரங்களின் கிளைகளும் மூன்று நாலு அடி நீளத்துக்குத்தான் அந்தச் சரிவில் பக்கவாட்டில் வளர்ந்திருக்கின்றன. எப்படியோ அவளைக் காப்பாற்றிவிட்டேன். ஆனால் அப்போகூட கனகத்தை நான் பார்க்கலை.''

''உன் முழுக் கவனமும் குழந்தையை மீட்பதிலேயே இருந்ததால் கவனிக்கத் தவறியிருக்கலாம்.''

''ஒருவேளை புதர்களும் மரக் கிளைகளும் என் பார்வை யிலிருந்து அவளை மறைத்திருக்கலாம். அனசூயா தொங்கிக் கொண்டிருந்த கோணத்திலிருந்து மட்டுமே அவள் உடலைப் பார்க்க முடியுமாக இருந்திருக்கலாம். அனசூயா மேலே வந்த பிறகு சொன்னாள், இவள் தொங்கிக் கொண்டிருந்த இடத்திலிருந்து கொஞ்ச தூரத்தில் கனகம் விழுந்து கிடப்பதாக. விழிகள் பிதுங்கிக் கொண்டிருப்ப தாயும் உடல் அசைவற்றுச் செத்துப் போனது போல் இருப்பதாயும்கூடச் சொன்னாள்.''

''என்ன கஷ்டம்! அந்தப் பக்கம் துருத்திக் கொண்டிருக் கிற பாறை எதன் மீதாவது விழுந்து கிடக்கிறாளோ, அல்லது துணி உலர்த்தியது போல் கனமான மரக்கிளை ஒன்றின் மேல் மடிந்து விழுந்திருக்கிறாளோ? இருந்தாலும் இரண்டு பேரும் கிட்டத்தட்ட ஒரே இடத்தில் விழுந்தது அதிசயம் தான். அதைவிட ஆச்சரியம் ஒரு குழந்தை உயிருடன் இருக்க, வயதான மற்றொருத்தி இறந்து கிடப்பது.''

''அனசூயாவைப் போல் கனகம் தவறி விழுந்திருப்பாள் என்று எனக்குத் தோன்றவில்லை, அப்பா!''

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"சரிதான், 'எலிமெண்டரி மை டியர் வாட்ஸன்' என்று நான் உங்களுக்கு விளக்குவதா?"

"பரவாயில்லை பேசு."

"மரணம் சம்பவிக்கக் கூடிய அளவு ஆழத்துக்குப் போகு முன்னரே கனகத்தின் உடல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. சரிவில் துருத்திக் கொண்டிருக்கும் ஒரு பாறை மேல் அவள் விழுந்திருப்பதாகக் கொண்டாலும் கைகால் முறிந்திருக் குமே ஒழிய உடனே மரணம் நேர்ந்துவிடாது. கூச்சல் போட்டு ரகளை செய்திருப்பாள். ஆகவே யாராவது அவளைக் கொன்றபிறகு அங்கே உருட்டித் தள்ளியிருக்க வேண்டும். ஆறாயிரம் அடி பள்ளம் என்று 'கைடு' புத்தகங் களில் படித்திருப்பதால் அத்தனை ஆழத்துக்கு உடல் சென்றுவிடும், அதை யாருமே கண்டுபிடிக்க முடியாது; கனகம் உயிரோடு இருக்கிறாளா அல்லது செத்தாளா என்றே தீர்மானமாகாதபோது அவளைக் கொன்றதாக நம் பேரில் சந்தேகம் ஏதும் ஏற்படாது, நிலைக்காது என்றெல் லாம் அவளைக் கொன்றவன் திட்டம் போட்டிருக்க வேண்டும். ஆனால் அத்திட்டத்தை நிறைவேற்றும்போது அந்த உடல் மரக்கிளையாலோ அல்லது பாறையாலோ தடுக்கப்பட்டுப் பத்துப் பன்னிரண்டு அடி ஆழத்திலேயே நின்று போகும் என்பதை அவன் கணித்திருக்க மாட்டான்."

"உன்னுடைய 'ரீஸனிங்' சரியாகத்தான் இருக்கு ரங்கன். ஆனால் கொலைகாரன் என்று குறிப்பிட்டாய். கொலை காரியாகவும் இருக்கலாம் இல்லையா?"

"நான் அவ்வளவு ஆழ்ந்து யோசிக்கலை, பேச்சுக்குச் சொன்னேன், அவ்வளவுதான்."

நடராஜன் தலையாட்டினார். "ரெச்சட் பிஸினஸ். இத்தனை அருவருப்புக்கும் இடையில் ஒரே ஒரு சின்ன

ஆறுதல். காஸ்ஃபீப் கிளப் பக்கத்திலே ராக் ஆஃப் விஷனிலேயிருந்து ஒரு போலீஸ்காரரைக் கயிற்றைக் கட்டி இறக்கவேண்டியிருந்தது, செத்துப்போன தினகரனைச் சோதிக்க. இங்கே அந்தத் தொல்லை இல்லை. ஆறேழு அடி ஆழத்தில்தான் அவள் விழுந்து கிடக்கணும்னு நீ சொல்கிறதாலே சுலபமா உடலை மேலே கொண்டுவந்து விடலாம்."

"அப்பா! கொலைகளை நீங்க நிறையப் பார்த்துட்டீங்க, நானும் உங்ககிட்ட வர்ற கேஸ்களையெல்லாம் நீங்க எப்படி விடுவிக்கிறீங்க என்கிறதைக் கவனிச்சுக் கிட்டே வந்திருக்கேன். இதனாலேயே நமக்கு மரத்துப் போயிடுச்சு. இறந்து போனவளோட மகள் உள்ளே உட்கார்ந்து தன் தாயாருக்கு நேர்ந்த கதி என்னன்னுகூடத் தெரியாமெ அழுதுக்கிட்டிருக்கா. நாம் அதை மறந்துட்டுக் 'கூலா' இந்தக் கேஸைக் கூறுபோட்டு ஆராய்ஞ்சுக்கிட்டிருக்கோம்!"

"நெசந்தான்" என்றார் நடராஜன். "இந்த விஷயத்தைப் பிரமீளாவிடம் நாம் மெல்லச் சொல்லிவிட வேண்டியது தான். நீ என்னைத் தனியா அழைச்சுக்கிட்டு வந்தபோதே ஏதோ விபரீதம்னு அவள் முடிவு கட்டியிருப்பாள். என்றாலும் உண்மை நிலவரம் தெரிஞ்சதும் அவள் புலம்பித் தீர்க்கும்போது அவளைச் சமாளிக்க உன் உதவியும் எனக்குத் தேவைப்படும். வா, போகலாம்."

இருவரும் மீண்டும் உள்ளே பிரமீளா காத்திருந்த அறைக்குள் சென்றனர்.

★ ★ ★

# 18. கொலைக்கானல்!

குறிஞ்சி ஆண்டவர் கோயில் சிறியதுதான். ஆயினும் அது துப்புரவாக இருந்ததால் விசேஷ அழகு பெற்றுத் திகழ்ந்தது. வெளி மதிளைத் தாண்டி உள்ளே நுழைந்ததுமே இதயத்துக்கு இதமளித்தது. பிராகாரத்தை வலம் வந்து அனசூயா பேரில் ஓர் அர்ச்சனையும் செய்து பிரசாதம் பெற்றுக் கொண்டார்கள். விசு ஒருவனைத் தவிர மற்ற அனைவரும் தனித் தனியே அனசூயாவுக்கு நெற்றியில் விபூதி இட்டுத் தலையிலும் இலேசாகத் தூவினர். அனசூயாவுக்கு இப்படி எல்லாரும் தன்னிடம் விசேஷ அக்கறை காட்டுவது சற்றுப் பெருமையாக இருந்தது.

வெளியே வந்தபோது ஒரு சாமியார் பழனிக் குன்றைக் காட்டுகிறேன் என்று சொல்லிக் காசு கேட்டார். மேக மூட்டமாக இருந்ததால் பழனி தெரியவில்லை. ஆயினும் அவர் காட்டிய திக்கு நோக்கிக் கும்பிட்டுவிட்டுச் சில்லறை கொடுத்தார் பத்மநாபன். அப்போது அவர் இருந்த மன நிலையில் பழனி இருந்த திசைக்கு நேர் எதிர்த் திசையைக் காட்டியிருந்தால்கூடக் கன்னத்தில் போட்டுக் கொண்டு காசும் கொடுத்திருப்பார். எமன் வாயிலிருந்து மகள் மீண்டதானது அவர் உள்ளத்தை அவ்வளவு தூரம் கலக்கி விட்டிருந்தது. இன்னொரு பக்கம் ஆண்டவனிடம் நன்றி உணர்ச்சியும் பக்தியும் பெருகிற்று.

''இங்கிருந்து பார்த்தால் பழனி தெரியும் என்கிறாரே, அதேபோல் கோக்கர்ஸ் வாக்கிலிருந்து பார்த்தால் மதுரை

தெரியுமாம்'' என்றாள் மீனா. ஏதோ ஒரு புத்தகத்தில் படித்த ஞாபகத்தில் அவள் பேசினாள். ''நாம்தான் அவசரப்பட்டு எதையும் பார்க்காமல் அங்கேயிருந்து கிளம்பி வந்து விட்டோம்.''

'கோக்கர்ஸ் வாக்குக்கு இன்னொரு தடவை வரலாம்' என்று ரங்கன் சொல்லி விட்டிருந்ததால் எப்படியாவது அவனுடைய அந்த ஆசை நிறைவேற வேண்டும் என்ற ஆர்வத்துடன் அவள் இருந்தாள். அவன் தனியே போய் வந்து விடலாம்தான். ஆனால் அவனோடுதான் இருக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் மீனவுக்கு இல்லாமலா போகும்? அப்பாவும் அம்மாவும் மீண்டும் அந்தப் பக்கம் எட்டிக்கூடப் பார்க்க மாட்டார்கள் என்று அவளுக்குத் தோன்றியதால் ஏமாற்றமும் ஏக்கமும் நெஞ்சைக் கவ்வின. ''பைனாகுலர்ஸ் இருந்தால்தான் மதுரையை அங்கே யிருந்து பார்க்கலாம்'' என்றார் சாமியார். ''ஆனால் ஒரு தடவை பார்த்த பிறகு வெறும் கண்ணுக்கே கூடத் தெரியும்!''

''அம்மா! கொஞ்ச நேரம் முன்னாடி நாம போயிருந் தோமே? அனு அக்காகூடக் கீழே விழுந்துட்டாளே! அந்த இடத்திலேயிருந்து பார்த்தபோது கார், லாரி, பஸ் எல்லாம் என்னோட பொம்மைக் கார் மாதிரி இருந்தது, குட்டி குட்டியா!'' என்றான் விசு.

''தேவலையே! எங்களைவிட நீதான் எல்லாத்தையும் சரியாக் கவனிச்சுப் பார்த்திருக்கே! இவ பண்ணின கலாட்டாவிலே அதெல்லாம் ஒண்ணும் என் கண்ணிலே தென்படவேயில்லை'' என்றாள் அம்புஜம்.

''கீழே, தூரத்தில் ரோடு வளைஞ்சு வளைஞ்சு போச்சும்மா. அதும் மேலே லாரி, கார் எல்லாம் வந்தது; நான் பார்த்தேன்'' என்றான் விசு மேலும் உற்சாகம் பெற்று.

"ஆதிசேஷனே வந்து மலைகளைச் சுற்றி வளைச்சுண்ட மாதிரிதான் உயரேயிருந்து சாலைகளைப் பார்த்தால் தோன்றும்" என்றார் பத்மநாபன்.

"நாம்தான் எதையுமே சரியாப் பார்க்கலையே?" என்றாள் மீனா மறுபடியும்.

"பார்க்காத போனால் என்ன? இந்தமட்டும் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போச்சேன்னு சந்தோஷப் படுவியா... என்னமோ குறைப்பட்டுக்கறியே?"

"தலைப்பாகைக்குக்கூட அதிகச் சேதமில்லை. அனுவின் உடம்பிலே கொஞ்சம் சிராய்ச்சிருக்கு, அவ்வளவுதான். ஹோட்டல் அறைக்குப் போய் பர்னால் தடவினால் சரியாப் போயிடும், சாயங்காலத்துக்குள்ளே" என்றாள் மீனா.

"இப்போ என்னமோ தைரியமாப் பேசிண்டு நடக் கிறோமே, அந்தச் சில நிமிஷங்கள் எப்படி ஜில்லிட்டுப் போச்சு உடம்பு" என்றாள் அம்புஜம்.

பத்மநாபன் கூறினார்: "சாயங்காலம் ஏரிப் பக்கம் போறச்சே கனகத்தை நேரிலேயே ஒரு தரம் இவளுக்குக் காண்பிச்சுட்டால் போறது; பிரமையெல்லாம் ஓடிப் போயிடும்."

"இப்போ அதை எதுக்கு மறுபடியும் ஞாபகப் படுத்தறேள்? குழந்தை அதை யெல்லாம் ஏற்கனவே மறந்துட்டுச் சமர்த்தாகத்தானே இருக்காள்" என்று கடிந்து கொண்டாள் அம்புஜம்.

**டா**க்ஸியில் ஏறுவதற்கு முன்னால் கடைசியாக ஒரு தடவை குறிஞ்சி ஆண்டவன் சந்நிதி இருந்த திசை நோக்கி கும்பிட்டாள் மீனா. கோயிலுக்குள் இருந்தபோது தங்கை யைப் பற்றிய நினைவு நீங்கலாக வேறு எதைக் குறித்தும்

சிந்திக்காத அவள், இப்போது கடைசி விநாடியில் தனக்கெனப் பிரார்த்தித்துக் கொண்டாள். சுயநலனுக்கான பிரார்த்தனைதான் என்றாலும் அதில் இன்னொரு ஜீவனையும் பின்னிப் பிணைத்ததும் அதே சுயநலம்தான்.

ஹோட்டலுக்கு வந்து சேர்ந்து டாக்ஸிக்குப் பணம் கொடுத்துவிட்டுத் திரும்பிய பத்மநாபன் பக்கத்தில் ஒரு காரின் கூரை மேல் பொருத்தப்பட்டிருந்த 'காரியரி'ல் பெட்டி படுக்கைகள் அடுக்கப்படுவதைப் பார்த்தார். அக்காரியத்தில் ஈடுபட்டிருந்தவர், பத்மநாபன் தங்கி யிருக்கும் அறைக்குப் பக்கத்து அறையில் இருப்பவர்தாம். அடுக்கிய சாமான்களை இப்போது கயிற்றைப் போட்டுக் கட்ட ஆரம்பித்திருந்தார் அவர். 'கணவன், மனைவி இரண்டே பேர். இரண்டு நாட்களுக்கு முன்னால்தான் வந்தார்கள். அதற்குள் கிளம்புவானேன்? ஒருவேளை விசுவும் அனுவும் அடிக்கும் லூட்டியைத் தாங்கமுடியாமல் தான் கிளம்பி விட்டார்களா? காரணம் அது வென்றால் வேறு அறை கேட்டுக் கொண்டு போகலாமே? ஊரை விட்டே புறப்படுவானேன்? பெட்டி பெட்டியாகச் சிறிய சிறிய கட்டடங்களை இந்த ஹோட்டலில் தனித் தனியே அமைத்திருப்பதால் மாற்று அறை கேட்டு நம்மைவிட்டு வெகுதூரம் போய்விடலாமே? ஒருவேளை வேறு அறை ஏதும் காலி இல்லை என்று முதலாளி தனராஜ் கூறிவிட் டாரோ? இவர் இவ்வளவு சீக்கிரம் புறப்பட நமது குழந்தைகள்தான் காரணம் என்றால் மன்னிப்புக் கேட்பது முறையல்லவா?''

இப்படியெல்லாம் எண்ணமிட்டவராக ஓரளவு வியப்புடன் பத்மநாபன் வினவினார்: ''என்ன ஸார்! கிளம்பியாச்சா அதற்குள்? வந்து இரண்டு நாட்கள்தானே இருந்தீங்க?''

"சீக்கிரம் எமலோகப் பட்டணத்துக்குப் போறதைவிடச் சீக்கிரமா சென்னைப் பட்டணத்துக்குப் போய்ச் சேருவது மேலில்லையா, ஸார்?" என்றார் அவர்.

அவர் கிருதக்காகப் பேசுவதாக நினைத்தார் பத்மநாபன். "ஏன் ஸ்வாமி கோவிச்சுக்கிறீங்க? சகஜமா கேட்டேன். பிடிக்கலைன்னா சொல்லிட்டுப் போங்களேன்" என்றார் மனத்தாங்கலுடன்.

"அடடா! எனக் கொண்ணும் உங்க பேரில் கோப மில்லை ஸார்! நான் இங்கே உள்ள நிலவரத்தைத்தானே சொன்னேன்? ஒரு வேளை உங்களுக்கு விஷயமே தெரியாதோ?"

"என்ன நிலவரம்? என்ன நடந்தது?"

"நிஜமாகவே நீங்க ஒண்ணும் கேள்விப்படலையா? ஸைக்கோ ஸாரநாதன் கொடைக்கானலுக்கு விஜயம் பண்ணியிருப்பது பற்றி ஊரெல்லாம் ஒரே பரபரப்பா இருக்கே? மினிஸ்டர் வந்தாக் கூட இத்தனை அமர்க் களப்படாது!"

"ஓ! அதைச் சொல்றீங்களா?" என்றார் பத்மநாபன். கோடைக்காலத்தில் சேரியில் பற்றிய நெருப்பு மாதிரி வதந்தி வேகமாகப் பரவுகிறது என்று எண்ணியவராகக் கேட்டார்: "நீங்கள் அந்த வதந்தியை நம்பறீங்களா? நான் டி.ஐ.ஜி. யையே நேரில் கேட்டேன். அவர் சிரிக்கிறார். ஏதோ அசந்தர்ப்பமாக ஒருவன் தற்கொலை பண்ணிக் கிட்டதாலே ஸைக்கோ ஸாரநாதன் கொடைக்கானலுக்கு வந்து விட்டதாக முடிவு கட்டிவிடறதா? பாமர ஜனங்கள் அப்படிப் பேசிக்கிட்டாலும் பரவாயில்லை. உங்களைப் போல நல்லாப் படிச்சவங்க..."

"மிஸ்டர்! ஒருத்தன் செத்துப் போனால் ஒரு வேளை தற்கொலையாக இருக்கும்னு முடிவு கட்டலாம். இங்கே

என்னன்னா ஹோட்டல் பொங்கலிலே முந்திரிப் பருப்பைத் தேடி எடுக்கறதை விடச் சுலபமா உடல்களைக் கண்டு பிடிச்சுக்கிட்டே இருக்காங்க. இதோட இரண்டாச்சு. ஒவ்வொண்ணுக்கும், 'தற்கொலை', 'தற்கொலை'ன்னு தபால்காரர் மாதிரி முத்திரை குத்தித் தள்ளறார் உங்க டி.ஐ.ஜி. சுத்த உபயோகமற்ற மனுஷர். இவருக்கெல்லாம் எப்படியோ பெரிய பெரிய பதவி கிடைச்சுப் போவுது.''

''இரண்டு உடல்களைக் கண்டெடுத்திருக்காங்கன்னா சொன்னீங்க? மறுபடியும் ஒரு மரணமா?''

''ஆமாம், டி.ஐ.ஜி. அதுக்குத்தான் போயிருக்கார். இன்வெஸ்டிகேஷனாம்! இவர் என்னத்தைத் துப்புத் துலக்கி வாழப் போறார்? பாதிப்போது இங்கே உட்கார்ந்து பூரியும் மசாலா கிழங்கும் விழுங்கிக்கிட்டிருக்காரு...''

டி.ஐ.ஜி.க்காகப் பரிந்து பேச வேண்டிய சமயம் அது வல்ல என்று உணர்ந்த பத்மநாபன், தம் கருத்தை மீனாவுக்கும் குறிப்பால் உணர்த்தினார். அவள் கோபத்துடன் சம்பாஷணையில் குறுக்கிட ஏதாவது ரசாபாசமாகப் போய்விடப் போகிறதே என்ற கவலை அவருக்கு.

''யார் ஸார், செத்துப் போனது?'' என்று கேட்கும் போதே யாராக இருக்கும் என்பதும் பத்மநாபனுக்குப் புரிந்து போயிற்று.

''கொஞ்ச நேரம் முன்னாடி வந்திருந்தீங்கன்னா அந்த சினிமா நட்சத்திரம், 'அம்மா! அம்மா!'ன்னு புலம்பிக் கிட்டே வந்து காரில் ஏறினதை நீங்க பார்த்திருக்கலாம்.''

''யாரு? பிரமீளாவின் அம்மா கனகமா காலமானது?'' பத்மநாபன் குடும்பத்தில் விசு நீங்கலாக அனைவரது உள்ளத்திலும் எழுந்த கேள்விக்குக் குடும்பத் தலைவர் ஒலி வடிவம் தந்தார். குடும்ப அங்கத்தினர்கள் அனைவரும், அவர்களையும் அறியாது ஒருவரை ஒருவர் நெருங்கி

ஒண்டிக் கொண்டனர். இனந் தெரியாத ஒரு பயம் தற்காப்பு உணர்ச்சியைத் தூண்டி அவர்களை ஒன்று கூட்டியது. "நான்தான் அப்பவே சொன்னேனே, அம்மா!" என்றாள் அனசூயா.

"பார்த்தீரா ஐயா! உம்ம குழந்தைக்கு நியூஸ் தெரிஞ்சிருக்கு, உமக்குத் தெரியலை. குடும்பத்தோடு வந்திருக்கீங்க; எதுக்கு ஆபத்தை விலைக்கு வாங்கணும்? ஊரைப் பார்க்கப் போய்ச் சேருங்க."

"என்ன ஸார் ஒரேயடியாகப் பயமுறுத்தறீங்களே!" என்றார் பத்மநாபன். உண்மையில் அவரே கொஞ்சம் கலங்கித்தான் போயிருந்தார். அனுவுக்குப் பிரமை ஏதோ ஏற்பட்டிருக்கிறது என்றல்லவா நினைத்தார்? உண்மையில் பிரமை, 'ஒன்றுமில்லை' என்று தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்ட மற்றவர்களுக்குத்தான் என்பது இப்போது வெட்ட வெளிச்சமாகி விட்டதே!

"அரை மணி முன்னாடி நீங்க இங்கே இருந்திருந்தால் இந்நேரம் நீங்களும் என்னைப் போலவே கண்ணில் தென் பட்டவங்களை யெல்லாம் பயமுறுத்திக் கொடைக்கானலை விட்டுக் கிளப்பிக் கிட்டிருப்பீங்க" என்றார் அந்த நபர். தொடர்ந்து, அவரே கூறினார்: "எத்தனையோ ஷூட்டிங்கு களிலே இதே மாதிரி 'அம்மா! அம்மா'ன்னு கதறி நடிச்சவள் தான். ஆனா இன்னைக்கு அலறித் துடிச்சாளே அந்த மாதிரி காமிரா முன்னாலே நடிக்க வருதா? நானும் என் ஒய்ஃபும் அந்தக் கண்ணராவியை நேரில் பார்த்தாச்சு; இன்னும் மூணு நாளைக்கு எனக்கு இராத் தூக்கமே கிடையாது!... அவளாலே காரை ஓட்ட முடியாது என்பதாலே டி.ஐ.ஜி. தம் மகனை உதவிக்கு அனுப்பி வைச்சார். ஹில்டனிலே தங்கியிருக்காளாமே? அவளும் அவனும் கிளம்பிப் போனதும் இவர் ஃபோன் செய்து தமக்கு ஜீப்பை வர வழைச்சுக்கிட்டாரு. போலீஸ்காரங்க ஈ மாதிரி வந்து

மொய்ச்சாங்க. பட்டாளமே வந்து நின்னாத்தான் என்ன? அந்த ஸைக்கோ அத்தனை பேருக்கும் கடுக்காய் கொடுத்திடுவான். ஒன்றா இரண்டா, நாற்பத்திரண்டு கொலைகளைச் செய்து கொட்டை போட்டவனாயிற்றே!''

இவ்வாறு கூறிவிட்டுத் தம் மனைவியையும் அருகில் இருத்திக் கொண்டு காரைக் கிளப்பினார் அந்த இரண்டு நாள் நண்பர். கணவனும் மனைவியும் ஸைக்கோ ஸாரநாதனிடமிருந்து தாங்கள் தப்பி ஓடுவதாக மனப்பூர்வமாக நம்புகிறார்கள் என்பதில் பத்மநாபனுக்குத் துளிக்கூட ஐயமிருக்கவில்லை.

சில விநாடிகளில் கார் கண்ணுக்கு மறைந்ததும், "இது கொடைக்கானல் இல்லே; கொலைக்கானல்!'' என்றாள் அம்புஜம்.

''அம்புஜம்! நீயுமா? நீயுமா நம்புகிறாய்?'' என்றார் பத்மநாபன்.

★ ★ ★

# 19. ஜொலிக்கும் நட்சத்திரம்

திரை வானில் படிப்படியாக மங்கி மறைகிற நட்சத்திரங்களும் உண்டு; ஒரே நிதானத்துடன் ஒளிர்ந்து கொண்டேயிருந்து ஒரு தருணத்தில் பளீரென்று கண்ணைப் பறிக்கிற மாதிரி பிரகாசித்து, அடுத்த கட்டத்தில் கப்பென்று இருண்டு போகிற நட்சத்திரங்களும் உண்டு. இந்த இரண்டு வகைகளில் பிரமீளாவின் திரை உலக வாழ்வு எவ்வாறு முடியும் என்பதை இன்று ஊகிப்பதற்கில்லைதான். சில காலத்துக்கு என்னால் 'திரைவானில் ஒரு புதிய நட்சத்திரம்' என்று அறிமுகமான அவள், இன்னும் புது மெருகு குன்றாமல் ஜொலித்துக் கொண்டுதான் இருந்தாள். அவளுடைய பிறந்தநாள், நேரம் அறிந்து ஜாதகத்தைக் கணித்து ஆராய்ந்த ஜோதிடர், கிரகச் சேர்க்கை பிரமாத மாக இருப்பதாகச் சொல்லி யிருந்தார். இத்தனை பிராபல்யம் அடைந்து பேரும் புகழும் செல்வமும் கொண்டு விளங்கும் இவளுடைய ஜாதகம் அசாதாரணமான ஒன்றாகத்தானே இருக்கும் என்பதால் அவர் அப்படிச் சொன்னாரோ, அல்லது ஜோதிடரின் வாக்கு பொய்க்கக் கூடாது என்பதற்காகத்தான் அவளிடம் செல்வம் கொழித்ததோ, எப்படியானாலும்-நாஸிக் அச்சுக்கூடத்தில் எக்கச்சக்கமாக அச்சான நோட்டுகளில் ஒரு கணிசமான பகுதி கறுப்பும் வெளுப்புமாகப் பிரமீளாவிடம் வந்து குவிந்து கொண்டிருந்தது.

வெளுப்புப் பணத்தை அவள் பாங்கில் போட்டாள்; கறுப்புப் பணத்தைப் பாதாள அறையில் பதுக்கினாள். வீடுகளையும் டீ எஸ்டேட்களையும் கேட்ட விலை கொடுத்து வாங்கினாள்; புடவைகளையும் நகைகளையும் விலை கேட்காமலேயே வாங்கினாள். அப்படியும் பணத் தைச் செலவழிக்க மார்க்கம் புரியாதபோது அவளுக்குப் 'போர்' அடித்தது. ஆனால் அவள் தாயாருக்கு மட்டும் இதை ஒப்புக் கொள்ள முடியவில்லை. 'பணத்தைக் கையாண்டு ஒருத்திக்குப் போர் அடிக்க முடியுமா? அழகுதான்!' என்று அங்கலாய்த்தாள் கனகம். 'ஐயோ! வருமான வரி என்று பிடுங்கிக் கொண்டு போகிறானே' என்று புலம்பினாள். 'போதாக் குறைக்குச் சொத்து வரி வேறாமே?' என்று வேதனைப்பட்டாள். கறுப்புப் பணம் வைத்திருப்பதாகச் சந்தேகித்து அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால், 'என்ன அநியாயம்! இப்படிப் படை எடுப்பார்களா? என் மகளுக்கு லக்ஷ்மி கடாட்சம் இருப்பது ஒரு பாவமா?' என்றாள். சில மாதங்கள் வரை 'ரெய்ட்' நடக்காமல் இருந்துவிட்டாலோ, 'அடடா! யாரும் 'ரெய்ட்' பண்ணவில்லையே; 'பிரமீளாவுக்கு மவுசு குறைந்து விட்டது, அதனால்தான் அவளிடம் கறுப்புப் பணம் இல்லை' என்று நாலு பேர் நினைத்து விடுவார்களே' என்பதாகக் கவலைப்பட்டாள்.

பிரமீளாவின் மாளிகை என மதிக்கத்தக்க பங்களாவில் பிரும்மாண்டமான படுக்கை அறையில் மிகப் பெரிய 'வார்ட்ரோ'பில் கணக்கற்ற புடைவைகள், கண்ணைப் பறிக்கும் வண்ணங்களில் தொங்கின. இரும்பு பீரோவில் ஏராளமான நகைகள் 'டால்' அடித்தன. நாலாபுறமும் அயல்நாட்டிலிருந்து வந்த முதல்தர நிலைக்கண்ணாடிகள் அவள் எழில் உருவத்தைப் பிரதிபலிப்பதில் பெருமை கொண்டன. 'பெட்ரூமி'ன் மையத்தில் இருந்தது ஒரு வட்டவடிவமான மாபெரும் கட்டில். ஒரு பட்டனை

அழுத்தினால் அது மெல்ல உயரும்; இன்னொரு பட்டனை அழுத்தினால் அது தளுக்காகக் கீழே இறங்கும், மற்றொரு பட்டனை அழுத்தினால் கட்டில் மெல்லச் சுழலும். படுக்கையில் புரள வேண்டுமானால் அதற்குக்கூடப் பட்டனை அழுத்தினால் போதும், மெத்தையில் அலைகள் கிளம்பிப் பிரமீளாவைப் புரள வைக்கும் என்று சொல்லிக் கொண்டார்கள்! அத்தனை ஏற்பாடுகள் அதில் உண்டு! அதில் படுத்திருப்பதோ மேகப் பொதியில் சயனித்திருப்பது போல்தான்! பிரமீளா நூற்றுப் பதினெட்டு பவுண்டு எடைதான் என்றாலும் அவளும்கூட இலவம் பஞ்சுப் பொதியில் வைத்த கிலோ கல்லைப் போல் அமுங்கிக் கிடப்பாள்.

அவளுடைய டிரஸ்ஸிங் டேபிளில் ஏராளமான 'மேக் அப்' சாதனங்கள் தவிர ஸெண்டு மட்டுமே நாற்பது வகைகள் இருந்தன. எந்த செண்டை என்றைக்குப் பூசிக் கொள்வது என்பது பற்றிப் பெரிய குழப்பம் ஏற்பட்டு வருகிறதென்றும் முந்நூற்று அறுபத்தைந்து வகை இருந்துவிட்டால் ஒவ்வொரு நாளும் ஒவ்வொன்று என்ற கணக்கில் வருஷம் முழுதும் வெவ்வேறு விதமாக மணக்கலாம் என்றும் அவள் அபிப்பிராயப்பட்டதாக ஒரு பத்திரிகை மகத்தான செய்தி வெளியிட்டு, அதற்கென்று அவள் ஸெண்டை 'ஸ்ப்ரே' செய்து கொள்ளும் கருவியில் உள்ள பல்பை அழுத்துவது போல் பிரத்தியேகப் புகைப் படம் எடுத்துப் பிரசுரித்துத் தன் வாசகர்களைப் பரவசப்படுத்தி யிருந்தது. அவள் ஸெண்டுகள் மட்டுமா? அவள் தாயார், நாய்க் குட்டி, அவள் கட்டில், அவள் செருப்புக்கள், ஜோஸியர், தையல்காரர் என்று இப்படி அவளுடன் தொடர்பு கொண்ட அஃறிணைப் பொருள்கள் மட்டுமின்றி மனிதர்களும் பிரசித்தி பெற்றனர்.

ஒரு மந்திர சக்திபோல் அனைவரையும் ஆட்கொண்ட அவளுடைய கவர்ச்சிகரமான அழகில் மக்கள் மயங்கினார்கள் என்றால், ஸ்டுடியோக்களில் தொழில் ரீதியில் அவளுடன் பழகியவர்களோ, அந்தக் கிளாமரை வழிபடவே செய்தார்கள். லைட்பாய் முதல் படாதிபதி வரை சிறிதும் பெரிதுமான தங்கள் மணிபர்ஸ்களை நிரப்பிக் கொள்ள அந்தக் கவர்ச்சிதான் உதவுகிறது என்பதை நன்றாக உணர்ந்து வணங்கினார்கள்.

இது ஒரு பக்கம் ஆனால் இந்த இனிய இசைத் தட்டுக்கு மறுபுறம் ஒன்று உண்டு என்பதும் அவளுக்குத் தெரியும். தான் எதிரே இருக்கும்போது பலவிதமாகவும் தன்னைத் திருப்திப்படுத்த, மகிழ்விக்க பயபக்தியுடன் நடந்து கொள்கிறவர்கள், தான் அப்பால் போனதும் இசைத்தட்டின் மறு பக்கத்தில் ஊசியை ஓடவிடுகிறார்கள். அப்போது எழுவது... இசையா அது? வசை! அவர்கள் வணங்கி வழிபட்ட அதே கிளாமர் இப்போது அதன் உயர் பீடத்திலிருந்து கீழே இறக்கப்பட்டது மட்டுமின்றிச் சாக்கடையில் அல்லவா புரட்டி எடுக்கப்படுகிறது! எவ்வளவு பச்சை பச்சையாகப் பேசுகிறார்கள்! எத்தனை விதமாகவெல்லாம் அவதூறுகளைப் போட்டி போட்டுக் கொண்டு அள்ளிச் சொரிகிறார்கள்! அதில்தான் அவர்களுக்கு எத்தனை இன்சுவை; ஆனந்தம்! திரையிலும், சில சந்தர்ப்பங்களில் நேரிலும், தன்னைப் பார்க்கும்போது பிரமித்து நிற்கும் சாமானிய மக்கள்கூட அவளுடைய அந்தக் கவர்ச்சிக் கதிர் வீச்சுக்கு உட்படாதபோது அடியோடு மாறித்தான் போய் விடுகிறார்கள். வாயில் வந்ததையெல்லாம் வளர்த்துப் பேசுகிறார்கள்.

இத்தகைய ஆபாசமான பேச்சுக்களைக் காது கொடுத்துக் கேட்க வேண்டிய துர்ப்பாக்கியம் நல்ல காலமாக அவளுக்கு ஏற்படட்டதில்லை. ஆனால் உண்மை நிலைமையை

அவள் காலே அரைக்கால் மில்லி மீட்டர்கூடப் பிசகாமல் கச்சிதமாக அளந்து வைத்திருந்தாள். தன்னைத் தானே அவள் ஏமாற்றிக் கொள்ளவில்லையே யொழிய, தான் இதையெல்லாம் உணராதது போலவே நடித்துப் பிறரை ஏய்த்து வந்தாள்.

இத்தகைய சூழலில்தான் அவளை ஒரு சந்தர்ப்பத்தில் பார்த்திபன் சந்தித்தான். காமிராமேன் சேகரின் நெருங்கிய நண்பன் என்று சொல்லிக்கொண்டு ஒரு நாள் ஷூட்டிங் கின்போது அவன் அறிமுகமானான். அவனது தோற்றத்தை விட அவனுடைய பேச்சும் சுபாவமும் பிரமீளாவை உடனடியாகக் கவர்ந்துவிட்டன.

கிட்டத்தில் நெருங்கிப் பிரமீளாவுடன் பழக வேண்டிய அவசியம் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது. சக நடிகர், ஒளிப்பதிவாளர், ஒப்பனையாளர், இயக்குநர் என்று பலர் அவளை அணுகித் தொட்டுப் பேசியும் இருக்கிறார்கள். அவ்வாறு நெருங்கி வர நேரிட்டபோது ஏதோ வேலைப் பாடுகள் மிகுந்த விலை மதிக்கமுடியாத ஒரு கண்ணாடிப் பாத்திரத்தைக் கையாள்வது போலத்தான் நடந்து கொள்வார்கள். எங்கே சற்றுக் கவனப் பிசகாக இருந்து விட்டால் அந்த அபூர்வப் பாத்திரம் கீழே விழுந்து நொறுங்கி விடுமோ? நம்மைப் பெரும்பழி சூழுமோ என்று அஞ்சியதுபோல் பழகினார்கள்.

ஆனால் பார்த்திபன் நடந்துகொண்ட விதத்தில் இயல் பாகவே ஒரு முரட்டுத்தனம் இருந்தது. அவன் பேச்சிலே ஓர் அலட்சிய அட்டகாசம் அழுத்தமாக இடம் பெற்றிருந்தது.

ஸ்டுடியோவில் தொழில் முறையில் தன்னிடம் தொடர்பு கொள்பவர்கள் அடக்கமாகப் பேசித்தான் அவள் கண்டிருக் கிறாள். சில சமயங்களில் பொதுமக்கள் அவளைச் சமீபிக்க நேரிட்டபோது பேசலாமோ கூடாதோ, அந்தத் தகுதி

நமக்கு உண்டோ இல்லையோ என்று தயங்குவதை அவள் கவனித்திருக்கிறாள். அவர்களுக்குள்ளேயே கசமுசவென்று பேசிக் கொள்வார்கள். கூட்டத்தில் தொலைவில் கண்ணுக்குத் தெரியாமல் இருந்துகொண்டு ஆபாசக் கூக்குரல் இட்ட ஓரிரு கோழைகளும் உண்டு. ஆயின் பார்த்திபன் இவர்களினின்றும் முற்றிலும் வேறுபட்ட வனாக இருந்தான்.

சேகர் அவனை அறிமுகம் செய்து வைத்த மறுகணமே அவன் கூறிய வார்த்தைகள் அவனுடைய தனித்தன்மையை நிரூபித்து அவளுக்கு அதிர்ச்சி வைத்தியமும் செய்தன. ''எல்லோரும் இன்றைக்கு ஷூட்டிங் பிரமாத சக்ஸஸ் என்று சொல்லி உங்களை வாழ்த்திவிட்டுப் போய்விட்டார்கள். ஆனால் நான் கும்பலோடு கோவிந்தா போடுகிறவன் இல்லை'' என்றான்.

''தனியாக இருந்தால்தான் போடுவீர்களாக்கும்!'' என்றாள் பிரமீளா. கோபத்துடன் கிளர்ந்த கிண்டலின் வேகத்தைப் புன்னகையால் தணித்தபடியே.

''பிரஹலாதனைப் பாடாய்ப் படுத்தியது போல் என்னைச் சித்திரவதை செய்தாலும் எனக்குத் தோன்று வதைத்தான் நான் சொல்வேன்.''

கலகலவென்று அவள் சிரித்தாள். ''உங்களை யாரும் துன்புறுத்தமாலேயே நீங்கள் உங்களுக்குத் தோன்றுவதைச் சொல்லலாம், ஸார்! திஸ் இஸ் எ ஃபிரி கண்ட்ரி!''

''சுதந்திர தேசமா? யார் சொன்னது? ஓர் உதாரணம் பாருங்கள்: என் உறவுக்காரர் ஒருவரை ஒரு வர்த்தகப் பிரமுகரிடம் ரொம்பச் சிபாரிசு பிடித்து 'அகவுண்டண்ட்' வேலைக்கு வைத்தேன். கொஞ்ச நாளைக்குப் பிறகு அந்தப் பிரமுகரைக் கேட்டேன். 'ஸார்! அவர் எப்படி வேலை செய் கிறார்? கணக்கு வழக்கெல்லாம் சரியாக வைத்துக் கொள்கிறாரா? உங்களுக்குத் திருப்தியாக இருக்கா?' என்று.

அதற்கு அவர் என்ன பதில் சொன்னார் தெரியுமா? 'அவனுக்கு அப்படி ஒண்ணும் சாமர்த்தியம் போதாது, அதனால்தான் எனக்குச் சௌகரியமாய் இருக்கிறது. கணக்கை நான் சொல்கிறபடி ஏன் என்று கேட்காமல் எழுதி விட்டுப் போய்விடுகிறான் பார்!''

பிரமீளா பெரிதாகச் சேகருடன் சேர்ந்து சிரிக்க அந்தச் சிரிப்பினூடேயே பார்த்திபன் தொடர்ந்தான்: ''இதே போல்தான் எல்லாத் துறைகளிலும். அவன் எஜமான னுக்குத் திருப்தி அளிப்பதுபோல் கணக்கு எழுதினான் என்றால், எழுத்தாளன் பத்திரிகை ஆசிரியருக்கு எது பிடிக்கும் என்று யோசித்துக் கதை எழுதுகிறான். பத்திரிகாசிரியரோ பத்திராதிபர் எந்த மாதிரிக் கதையைப் போட்டுப் பத்திரிகையின் விற்பனையை அதிகரிக்க விரும்பு வார் என்று பார்க்கிறார். நீங்கள் டைரக்டர் சொல்கிறபடி நடிக்கிறீர்கள்; டைரக்டரோ உங்களை எந்த உடை அணியச் செய்து எந்த விதமாகக் காட்டினால் மக்கள் பார்ப்பார்கள்; படாதிபதிக்குப் போட்ட பணத்துக்கு மேல் திரும்பி வரும் என்று யோசிக்கிறார். அரசியல்வாதி தான் எப்படிப் பேசினால் மேலிடத்திலிருந்து தமக்கு முதுகில் தட்டும் கையில் டிக்கெட்டும் கிடைக்கும் என்று எண்ணிப் பேசுகிறார். இதிலெல்லாம் சுதந்திர சிந்தனை எங்கே இருக்கிறது? சுதந்திர நாடு என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதோடு சரி! அநேகமாக நம் நாட்டில் எல்லோரும் தங்கள் தங்கள் அலுவலகத்துக்குள் நுழையு முன்னர் வாசலில் முதுகெலும்பைக் கழற்றிக் கோட் ஸ்டாண்டில் மாட்டிவிட்டு வந்தது போலத்தானே நடந்து கொள் கிறார்கள்?''

ஓர் அபூர்வப் பிறவியைப் பார்ப்பதுபோல் பாத்திபனை மலர மலரப் பார்த்தாள் பிரமீளா. ''என்ன சேகர்! உங்கள்

நண்பருக்கு யார் மேல் என்ன கோபம்? படபடவென்று பொரிந்து தள்ளுகிறாரே!''

''முதுகெலும்பு இல்லாத எல்லார் மீதும் கோபம்தான்'' என்று பார்த்திபன், சேகர் வாய் திறக்கக் காத்திராமல் தானே பதில் சொன்னான். ''இந்தப் படத்தில் நீங்கள் நடிக்க முன்வந்தீர்களே, அதற்காக உங்கள் பேரிலும் கோபம் தான்.''

சிரித்தபடியே, ''ஏன்? இந்தக் கதை நன்றாயில்லையா? அல்லது இந்தக் கதாபாத்திரம் எனக்கு ஏற்றதாயில்லையா?'' என்று கேட்டாள் அவள்.

எல்லாமே கோளாறுதான். ஏதோ மக்கள் இதை விரும்பிப் பார்ப்பார்கள், பணம் பண்ணலாம் என்ற நோக்கத்தில்தான் படம் எடுக்கிறார்களே ஒழியக் கலை உணர்ச்சி இதில் எங்கே இருக்கிறது?''

''சரிதான்! நீங்கள் அஸ்திவாரத்தையே அசைக்க ஆரம்பித்துவிட்டீர்கள்!'' என்றாள் பிரமீளா. ''திரைப் படங்கள் பணம் பண்ணாவிட்டால் இத்தனை ஸ்டுடியோக் களையும் மூடிவிட வேண்டியதுதான். இந்தத் தொழிலை நம்பி எத்தனை ஆயிரம் தொழிலாளர்கள் பிழைக்கிறார்கள் தெரியுமா?''

''அவர்களை வாழ வைக்கத்தான் படாதிபதிகள் ஆபாசப் படங்களாக எடுத்துத் தள்ளுகிறார்களாக்கும்! எத்தனை தாராள மனசு! ஆயிரம் பேரை வாழ வைக்க ஆறு லட்சம் மக்களின் மனங்களை விகாரப்படுத்துவது எவ்வளவு பெரிய தொண்டு!''

பிரமீளாவின் வியப்பும் திகைப்பும் இதற்குள் ஓரளவு நீங்கி, அதனிடத்தில் ஓர் ஆவல்-குறுகுறுப்பு குடிகொண்டு விட்டிருந்தது. அவள் நட்சத்திரப் பதவியை அடைந்த பிறகு இதுவரை யாருமே அவளை அதிருப்திக்கு உள்ளாக்க

நேரிடுமோ என்று கவலைப்படாமல் இவ்வளவு அழுத்த மாகவும் தைரியமாகவும் எதிர்த்துப் பேசி அவள் கேட்ட தில்லை. இது புதிய அனுபவமாக இருந்தது அவளுக்கு. "உங்கள் நண்பர் ரொம்பச் சுவாரசியமாகப் பேசுகிறார், சேகர்!" என்றாள் அவள் ஒளிப் பதிவாளரைப் பார்த்து.

சேகர் சொன்னான்: "பார்த்திபன் இப்படித்தான் படபட வென்று பேசுவான். ஆனால் இவனுக்கு யாரிடமும் விரோதம் கிடையாது. உயர்ந்த கலை உள்ளம் படைத்தவன்; நன்றாய்ப் படித்தவன். ஸ்டேட் பாங்கில் உத்தியோகம். பொழுதுபோக்காக நண்பர்களிடையில் நாட கங்களையும் திரைப் படங்களையும் விமர்சனம் செய்வான். பயமோ தயக்கமோ இல்லாத சிறந்த 'கிரிடிக்.' "

"இந்தத் தொழிலில் சம்பந்தப்படாமல் விலகி யிருந்து பார்ப்பவர்களுடைய அபிப்பிராயமும் நமக்குத் தேவை தானே சேகர்? அது நாம் வளர உதவத்தானே செய்யும்" என்றாள் பிரமீளா.

"படம் மோசம் என்று இவன் கருதினாலும் ஒரு காமிரா கோணம் நன்றாயிருந்ததென்றால் அதைப் பாராட்டுவான். இவனிடமிருந்து ஒரு 'பேஷ்' வாங்கிவிட்டால் எனக்கு ஒரு மாசம் டானிக் சாப்பிட்டு வந்ததுபோல் தெம்பாக இருக்கும். ஆனால் அந்த 'பேஷ்' இலேசில் வராது!"

"ஆங்கிலப் படங்களை அதிகம் பார்த்தால் சிரமம்தான்; 'என்ன ஸார் தமிழ்ப் படங்கள் எடுக்கிறார்கள்' என்று தூக்கி எறிந்து பேசிவிடுவார்கள்" என்றாள் பிரமீளா. "அந்த அளவுக்கு நாம் உயர இன்னும் ரொம்பக் காலம் ஆகும்."

"பார்த்திபன் சில ஆங்கிலப் படங்களைக்கூட நண்பர்கள் வட்டத்தில் நல்ல ஆதாரங்களோடு சாட ஆரம்பித்த போதுதான் எனக்கு உண்மையிலேயே இவனிடம் மதிப்பு ஏற்பட்டது" என்றான் சேகர்.

"ஆமாம். மேனாட்டிலும் மோசமான படங்கள் எடுக்கிறார்கள் என்பதில் நமக்கெல்லாம் ஓர் அல்ப திருப்தி" என்றான் பார்த்திபன், அசுவாரசியமாகச் சூள் கொட்டியபடி.

சிரித்தாள் பிரமீளா. "சற்று இருங்கள். நான் மேக்கப்பைக் கலைத்துவிட்டு வருகிறேன்" என்றாள்.

"அதைச் செய்யுங்கள்; எவ்வளவு சீக்கிரம் இந்த அசட்டுப் பிசட்டு உடையைக் களைந்தெறிந்து விட்டுப் புடைவை உடுத்துகிறீர்களோ, அவ்வளவுக்கு நல்லது" என்றான் பார்த்திபன்.

இடுப்புக்கு மூன்று அங்குலம் கீழே ஆரம்பமாகி முழங்காலுக்கு நாலு அங்குலம் மேலே முடிந்துவிட்ட ஒரு கால் சராய்; ஆண் பிள்ளைக்காகத் தைக்கப் பட்டதை இரண்டாக மடித்துக் கீழ்ப் பகுதியை வெட்டி எறிந்து விட்டதுபோல் தோன்றிய ஒரு சட்டை (அதிலும் மேல் இரண்டு பட்டன்களைத் தைக்க 'மறந்து' விட்டிருந்தான் தையல்காரன்); கல்யாணத்துக்கு மைசூர்ப்பாகைக் கூறு போடுகிற தாம்பாளத்தில் பருப்புத் தேங்காய்க் கூட்டைப் பற்ற வைத்தது போல் ஓர் அகலமான தொப்பி-இவற்றை அணிந்திருந்தாள் பிரமீளா. போதாக் குறைக்கு இடையில் ஒரு பெல்ட்டிலிருந்து இரு புறங்களிலும் கைத் துப்பாக்கிகள் வேறு தொங்கின.

தன்னைத் தானே ஒரு முறை தலை சாய்த்துப் பார்த்துக் கொண்ட பிரமீளா, கபடமில்லாமல் சிரித்துக் கொண்டே கூறினாள்: "நல்ல பெயர் வைத்தீர்கள், அசட்டுப் பிசட்டு உடையென்று!"

தனது பிரத்தியேக 'கிரீன் ரூ'மை நோக்கி நடந்த அவள், சற்றுத் தூரம் சென்றதும் ஒரு முறை திருப்பிப் பார்த்து, "போய் விடாதீர்கள், சீக்கிரமே சண்டையைத் தொடர லாம்" என்றாள்.

விட்டுக் கொடுக்காதது போல் அவள் அவ்விதம் சொன்னாளேயொழிய உண்மையில் சண்டை போட வேண்டும் என்றோ, வாக்குவாதம் செய்ய வேண்டும் என்றோ அவளுக்கு எண்ணம் இல்லை. அவன் பேசுவதைக் கேட்க வேண்டும், அவன் கருத்துக்களைப் புரிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம்தான் அவளுக்கு. பார்த்திபனால் திரை உலகைப் புரட்சிகரமான முறையில் திருத்திவிட முடியும் என்ற நம்பிக்கை அவளுக்கு லவலேசமும் இல்லை. அதற்கு இன்னும் எத்தனை தலைமுறைகள் ஆகுமோ? ஆனாலும் சிறந்த நடிப்பு, நல்ல கதை, நுணுக்கமான டைரக்ஷன் இவை யெல்லாம் பற்றி அவனுடன் உரை யாடித் தன் அறிவை வளப்படுத்திக் கொள்ளவும் மனத்தை விசாலப்படுத்திக் கொள்ளவும் அவள் விரும்பினாள். என்றாவது ஒரு நாள் அவனிடமிருந்து தன் நடிப்புக்கு ஒரு சபாஷ் பெற முடியுமா, பார்க்க வேண்டும் என்ற ஆசையும் தலைதூக்கியது.

அவளுடைய இந்த இரண்டாவது ஆசை - சபாஷ் பெற வேண்டும் என்ற ஆசை - இன்றுவரை நிறைவேறவில்லை. ஆனால் திரை உலகம் பற்றி - அத்துடன் சம்பந்தப்பட்ட பல்துறைக் கலை நுணுக்கங்கள் பற்றி அவர்கள் பல சந்தர்ப்பங்களில் நிறையப் பேசினார்கள்.

அவளுக்கு ஷூட்டிங் இல்லாத நாட்களில் அல்லது வேளைகளில் அவன் அவள் வீட்டுக்கு அவள் அழைப்பின் பேரில் போனான். மணிக் கணக்கில் பேசினான். அவள் ஆர்வத்தைப் பார்க்கையில் அவனுக்கும் முன்னைக் காட்டிலும் திரைப்படக் கலை ரகசியங்களைத் தெரிந்து கொள்வதில் ஈடுபாடு மிகுதியாகி விட்டது. 'டைரக்ஷண் டெக்னிக்', 'லைட்டிங் எஃபெக்ட்', 'தி ஆர்ட் ஆஃப் ஆக்டிங்' என்று பல புத்தகங்களை நூலகங்களிலும் புத்தகக் கடைகளிலும் தேடிப் பிடித்து வாசிக்க ஆரம்பித்தான்.

உலகப் பிரசித்தி பெற்ற டைரக்டர்கள், நடிக நடிகையரது வாழ்க்கை வரலாறுகளைப் படித்தான். தான் படித்தறிந்த புதுப் புது விஷயங்களைப் பிரமீளாவுக்குச் சொன்னான். வாரம் ஒரு முறையாவது இருவரும் சேர்ந்து சினிமாப் பார்த்துவிட்டு வந்து அதை அக்கு வேறு ஆணிவேறாகப் பிரித்துப் போட்டுத் தனித் தனியாக ஒவ்வொரு அம்சத்தையும் ஆராய்ந்து குறைகளையும் நிறைகளையும் கண்டுபிடித்தார்கள்.

பணமும் புகழும் தராத ஒரு மன நிறைவைப் பிரமீளாவுக்குப் பார்த்திபனின் பேச்சு அளித்தது. அவன் வார்த்தைகள் நெஞ்சைச் சுட்டன; அவன் பற்றிய இடம் வலித்தது. ஆனால் அந்தச் சூட்டிலேயே ஒரு தண்மையும் வலியிலேயே ஓர் இதமும் இருப்பதை அவள் உணர்ந்தாள். அவன் வாக்கிலே உண்மையும் பிடியிலே அன்பும் இருப்பது தான் இதற்குக் காரணம் என்று தெளிந்தாள்.

இவர்களுடைய இந்த நட்பும் பேச்சும் கனகத்துக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. எப்படியோ பார்த்திபன் பணம் பிடுங்கத்தான் வந்திருக்கிறான் என்ற எண்ணம் அவள் உள்ளத்தில் ஆழப் பதிந்துவிட்டது. பிரமீளாவைக் கல்யாணம் செய்துகொண்டு அவளையும் அவள் பணத்தையும் ஆளலாம் என்ற நோக்கத்தில்தான் அவன் அடிக்கடி வருகிறான் என்று நினைத்தாள். பிரமீளாவுக்கு அவனிடம் ஈடுபாடு அதிகமாக ஆக அவளுக்குக் கிலி பிடித்துக் கொண்டது. தன்னுடைய ஆதிக்கத்திலிருந்து இத்தனை செல்வமும் போய்விடுமோ என்று அவள் பயந்தாள்.

அவன் வருவதும், பேசுவதும், இருவரும் சேர்ந்து 'நைட் ஷோ' வுக்குப் போவதும் தனக்குப் பிடிக்கவில்லை என்று வெளிப்படையாகவே சொன்னாள். ''பேப்பரில் போடுவாங்க; சந்தி சிரிக்கும்'' என்று மிரட்டினாள். ஆனால்

அவள் கூறியதை மட்டுமின்றி அவளையேகூட அவர்கள் அலட்சியம் செய்தார்கள். தன்னை ஒரு துரும்பாக மதித்து அவர்கள் ஒதுக்கியது அவள் பீதியை அதிகமாக்கியது. பிரமீளாவிடம் தனக்கு இருந்த ஒரு செல்வாக்கு இப்படி நிமிஷமாகக் கரைந்து போகக் கூடும் என்றால் அவள் பணத்தின் மீது தனக்குள்ள ஆதிக்கம் பட்டென்று விட்டுப் போய்த் துண்டித்து விழ எத்தனை நாளாகும்?

அவள் காரசாரமாகவே பேச ஆரம்பித்தாள். அவன் இல்லாதபோது பிரமீளாவிடம் அவன் அயோக்கியன் என்றும், வஞ்சகன் என்றும் திட்டித் தீர்த்தாள். அவன் வந்திருக்கும்போதும் அவன் காதுபடவே தன் அதிருப்தியை வெளியிட்டுக் கொண்டாள். ''என்ன தம்பி? ஓவலுக்கு டயம் ஆயிடுச்சா? கொண்டு வரவா? ராத்திரி சாப்பாடு கொட்டிக்க இன்னும் ஒரு மணி நேரம் பாக்கி இருக்கே? அடுத்த அரை மணி அடிக்கறச்சே என்ன சாப்பிடறீங்க? பாதம்கீரா? இல்லே, கிரேப் ஜூஸா?'' என்று கேட்டாள் ஒரு நாள். அப்போது பிரமீளா அந்த அறையில் இல்லை.

''இந்தாங்கம்மா! இங்கே ஏன் நேரத்தை வீணடிச்சுக் கிட்டு நிக்கறீங்க? போய் இரும்புப் பெட்டியைத் திறந்து பணத்தை எண்ணிப் பாருங்க. நூறோ இருநூறோ குறையப் போகுது'' என்றான் பார்த்திபன்.

''அப்படி ஏதாவது குறைந்தால் அது உன் பாக்கெட்டுக் குத்தான் போயிருக்கும்'' என்றாள் கனகம்.

''ஏய் பணப் பிசாசு! நாவை அடக்கிப் பேசு!'' என்று எரிந்து விழுந்து விட்டு எழுந்து போக முற்பட்ட பார்த்திப னின் பாதங்களை மென்மையான இரு கரங்கள் பற்றின.

சம்பாஷணையின் கடைசிப் பகுதியைக் கேட்டுக் கொண்டே வந்துவிட்ட பிரமீளா, ''அம்மாவுக்காக நான் மன்னிப்புக் கேட்கிறேன், உட்காருங்கள்'' என்று கெஞ்சினாள்.

# 20. ரகசிய சந்திப்பு

**க**னகம் 'குய்யோ முறையோ' என்று கூச்சல் போட்டாள்; "ஐயய்யோ! இவன் காலில் விழுகிற அளவுக்குப் போயிட்டியேடி! என்னவோ மாய்மாலம் பண்ணி மயக்கிட்டானே, உன்னை? நான் என்ன செய்வேன்?"

"அம்மா! நீ ஒண்ணும் பண்ண வேண்டாம்! ஆ ஊ என்று கத்தாமல் வாயை மூடிக்கிட்டு இரு போதும்!"

"கேட்டுக்கோடா! கேட்டுக்கோ! உன் மனசு குளிர்ந்து போச்சா? என் பொண்ணு இன்னி வரைக்கும் என்னை எதிர்த்து ஒரு வார்த்தை சொன்னதில்லை; உன் போதனையாலே இப்போ பேசிட்டா!... சந்தோஷம் தானே, உனக்கு?"

"அம்மா! அவரைத் தாறுமாறாக ஏசாதே! நான் கேட்டுக்கிட்டுச் சும்மா இருக்க மாட்டேன். எப்போ இவ்வளவு தூரத்துக்கு வந்தாச்சோ, அப்போ மிச்சத்தையும் சொல்லிடறேன்; நல்லாப் புரிஞ்சுக்க. நான் இவரைக் கல்யாணம் செய்துக்கிடத் தீர்மானிச்சுட்டேன்! அதாவது இவர் என்னை ஏற்றுக்கிடறதாயிருந்தால்."

"அடப்பாவி!" என்று மகளிடம் பதில் கூறாமல் தொடர்ந்து திட்டித் தீர்த்தாள் கனகம். "என் குடியைக் கெடுக்க வந்தியா? அம்மாவையும் பெண்ணையும் பிரிச்சு வைக்கச் சூழ்ச்சி பண்ணிட்டியா? இவள் பணத்தை யெல்லாம் அபகரிக்கத் திட்டம் போட்டிருக்கியா?"

"கவலைப்படாதே, கனகம்! நான் கல்யாணத்துக்குச் சம்மதிச்சாத்தானே?" என்றான் பார்த்திபன். "எனக்கு உன் பணமும் வேண்டாம். உன் பெண்ணும் வேண்டாம்!"

"பார்த்தியாடி! இவன் என்னை அவமானப் படுத்திய தோடு உன்னையும் அலட்சியமாத்தான் பேசறான். நீ அவன் காலில் விழுந்து கெஞ்சினே. அவன் உன்னை வேண் டாம்னு எட்டி உதைச்சுத் தள்ளறான்! இப்படிப்பட்ட வனைப் போய் நீ தலை மேலே தூக்கி வைச்சுக்கிட்டுக் கூத்தாடறே! தம்பி! இதைத் தெரிஞ்சுக்க! நம்ம வீட்டு வாசல்லே வந்து நின்னு கூழைக் கும்பிடு போட்டு உள்ளே வரலாமான்னு கேட்கிறவங்கதான் எங்களுக்குப் பழக்கம்."

"அந்த முதுகெலும்பு இல்லாத ஆசாமிகளோடு என்னையும் சேர்த்துடாதீங்க, நான் போய் வரேன்" என்று புறப்பட்டான் பார்த்திபன்.

அவன் கரங்களைப் பற்றி நிறுத்தினாள் பிரமீளா. "அம்மா! இவர் ஏன் என்னைக் கல்யாணம் செய்துகொள்ள மாட்டேன் என்கிறார், தெரியவில்லையா உனக்கு? என் பணத்தின் மேல் இவருக்கு ஆசை இல்லை. அப்படி இருந்தால் உன் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் என்னைக் கல்யாணம் செய்து கொள்ளமாட்டாரா? அதிலிருந்து இவருடைய உயர்ந்த குணம் உனக்குப் புரிய வில்லையா? உன் சம்மதத்தையும் பெற்று சந்தோஷமாக நடக்க வேண்டும் எங்கள் திருமணம் என்று ஆசைப் படுகிறார் அம்மா!"

"இப்ப அப்படித்தாண்டி பேசுவான்! ஊரறியக் கழுத்திலே தாலி ஏறின அப்புறம் பேச்சும் நடத்தையும் வேறுவிதமாகத்தான் இருக்கும்."

"உன்னைப் போன்றவர் இல்லை அம்மா இவர். நீ என் பணத்துக்கு ஆசைப்பட்டு என் கல்யாணத்தைத் தடை செய்ய விரும்புகிறாய். இவர் பணத்தாசை இல்லாததால்

கல்யாணம் வேண்டாம் என்கிறார். நடுவில் நான் அகப்பட்டுக் கொண்டு தவிக்கிறேன்.'' விம்மி விம்மி அழுதாள் பிரமீளா. ''என்னிடம் உண்மையான பிரியம் உனக்கு என்றைக்கு இருந்திருக்கிறது? பாழும் பணம்தானே பிரதானம்!''

''ஏண்டி! நான் பணத்தாசை பிடித்தவளா? இவன் ஒருத்தன் தான் உன்னிடம் கலப்படமற்ற அன்பைச் சொரிகிறானா? சின்னக் குழந்தையாக இருந்த உன்னை வளர்த்து ஆளாக்கி, பேரும் புகழும் செல்வமும் அடையச் செய்த என்னைவிட நேற்று வந்த இந்தத் தறுதலைப் பயல் உனக்கு ஒசத்தியாப் போய்ட்டானா?''

''ஆமாம், அம்மா! அப்படித்தான். சற்று முன்னால் நீ சொன்னியே, வளர்த்து ஆளாக்கினேன் என்று! அதுதானே நிஜம்! பெற்று வளர்த்தேன் என்று என்றைக்காவது நீ வாய் விட்டுச் சொன்னதுண்டா? அதனால்தான் உனக்கு என் பேரில் பாசம் உண்டாக மாட்டேனென்கிறது. என் சந்தோஷத்தைவிடப் பணத்தையே பெரிதாக மதிக்கிறாய். நான் இவரைக் கல்யாணம் செய்து கொண்டால் அது கைநழுவிப் போய்விடப் போகிறதே என்று பயப்படுகிறாய்!''

**க**னகத்தை முன் எப்போதையும்விட அதிகமாக இப்போது பீதி கவ்விக்கொண்டது. 'அடிமடியிலேயே கையைப் போடுகிறாளே, இவள்! நான் இவள் தாயே இல்லை என்று நிரூபணமாகிவிட்டால் அப்புறம் சட்ட ரீதியாகக்கூட இவள் மீது நமக்குச் செல்வாக்கு இல்லாமல் போய் விடுமே!' வயிற்றிலும் வாயிலும் அடித்துக் கொண்டாள் அவள். ''எப்படியடி மனசு வந்தது, வார்த்தைகளால் என்னை வதைக்க? இத்தனை வருஷங்களுக்குப் பிறகு என் கண்மணி என்னை இப்படிப் பேச நேர்ந்ததே!

இதற்குக் காரணம் இந்தச் சண்டாளன்தானே!'' என்று கூறித் தலை மயிரைப் பிய்த்துக் கொள்பவள்போல் இழுத்துக் கொண்டு தரையில் உட்கார்ந்து ஓலமிடத் தொடங்கினாள்.

பார்த்திபன் பிரமீளாவிடம் சொன்னான்: ''இந்த மாதிரிச் சூழலில் நம் கல்யாணம் எப்படி நடக்க முடியும்? நாம் இனி அடிக்கடி சந்திக்காமல் இருந்தால்கூட நல்லது. இல்லாவிட்டால் இவளுக்கு ஹிஸ்டீரியா வந்துவிடும்! நான் போய் வருகிறேன். உன் அம்மாவை நல்ல வார்த்தை சொல்லித் தேற்று.''

சட்டென்று வழிமறித்து நின்று அவன் கரங்களைப் பற்றிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் பிரமீளா. ''அம்மா இப்படி அழுது புலம்புகிறாளே என்பதால் நீங்கள் என்னை வந்து பார்க்காமல் இருந்து விடாதீர்கள், அப்புறம் எனக்குச் சித்தம் கலங்கிப் போகும். இவளாவது ஹிஸ்டீரியா வந்தது மாதிரி அலறுகிறாள். எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும், உங்களைச் சந்திக்காமல் இருந்தால்! கல்யாணம் நடக்கிறதோ இல்லையோ, நீங்கள் அவசியம் வந்து போய்க் கொண்டிருங்கள். நாளடைவில் இவள் மனம் மாறுகிறதா, பார்ப்போம்.''

பார்த்திபன் அவ்வாறே அவள் விருப்பத்துக்கு இசைந்து நடந்துகொண்டான். ஆனால் கனகத்தின் மனம் இளகுவதாய் இல்லை. மாறாக இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு அவளுடைய கெடுபிடி முன்னிலும் அதிகமாகிவிட்டது. பிரமீளாவை யாருடனும் தனியேவிடாமல் கட்டிக் காத்தாள். இரண்டு வார்த்தைகளுக்கு மேல் பேச அனுமதிக்க மாட்டாள். அதுவும் திரைப் படத்தொழில் ரீதியில் தொடர்பு கொள்ளாத எவரிடமாவது அவள் சற்று நேரம் உரையாடி விட்டால், அவ்வளவுதான், கனகத்துக்கு ஒரே குலை நடுக்கமாகிவிடும். மாட்டை ஓட்டிப் போய்க் கொட்டிலில் அடைப்பதுபோல் இவளை 'வீட்டுக்குப் போகலாம்' என

விரட்டுவாள். ஆனால் பார்த்திபனிடம் மட்டும் அவள் ஜம்பம் சாயவில்லை. அவ்வப்போது அவனைக் குத்திக் காட்டுவது போல் அவள் பேசியதைக்கூட ஏதோ பைத் தியம் பிதற்றுகிறது என்ற ரீதியில் அவன் பொருட் படுத்தாமலிருந்து வந்தான். இவ்வாறு அவன் பொறுத்துக் கொண்டு போனதால் பிரமீளாவுக்கு அவனிடம் அன்பு மிகுதியாயிற்று.

ஒரு சமயம் ஷேக்ஸ்பியர் நாடகங்களிலிருந்து சில பகுதிகளை நடித்துக் காட்ட பிரிட்டனிலிருந்து ஒரு தம்பதி வந்திருந்தனர். பிரமீளாவை அவர்களுடைய கலை நிகழ்ச்சிக்கு ஷூட்டிங்கை ஒத்திப் போட்டுவிட்டாவது வரவேண்டும் என்று பார்த்திபன் வற்புறுத்தினான். அவன் கோரிக்கையை ஏற்றுக் கொண்டாள் அவள். உனக்கு ஒன்றும் புரியாது அம்மா என்று பிரமீளா எடுத்துக் கூறியும் கேளாமல் கனகம் உடன் வந்தாள். அவர்களைத் தனியே எங்கும் அனுப்புவதில்லை என்று அவள் இப்போது கங்கணம் கட்டிக் கொண்டிருந்தாள். ஆரம்பத்தில் இந்த விஷயத்தில் சற்று அசிரத்தையாக இருந்து சினிமா, நாடகம் என்று அவர்களைப் போக அனுமதித்ததால்தான் இத்தனை இறுக்கமான ஒரு பிணைப்பு அவர்களிடையே ஏற்பட்டு விட்டது. முடிச்சை அவிழ்க்க முடியாமல் சிரமப்படுகிறோம் என்று கனகம் தீர்மானித்தாள். ஆகவே, தானும் துணைக்குச் சென்று தொண்ணூறு கொட்டாவிகளை விட்டு விட்டு அவர்களுடனேயே திரும்பினாள். ''என்ன இழவு நாடகமோ இது. மறுபடியும் மறுபடியும் இதே இரண்டு பேர்கள்தானா? ஒரு ஸீனா ஸெட்டிங்கா உடைமாற்றமா ஒண்ணையும் காணோம்?'' என்றாள் காரில் வீடு நோக்கிச் செல்லும்போது.

"அதுதான் இவர்களிடம் தனிச்சிறப்பு. தங்கள் நடிப்புத் திறனால் நம்மைக் கவர்ந்தார்கள். பகட்டான ஆடை அலங்காரங்களாலோ காட்சி ஜோடனைகளாலோ நம்மை அசந்து போகச் செய்யவில்லை. ரசிகர்கள் எப்படி கை தட்டி மகிழ்ந்தார்கள்! உங்களுக்கும் புரிந்திருந்தால் ரொம்பப் பிடித்திருக்கும்" என்றான் பார்த்திபன்.

"அம்மா, வீட்டுக்குப் போனதும் அந்தக் கதைகளைச் சுருக்கமாகச் சொல்லி அவர்கள் நடித்துக் காட்டிய குறிப்பிட்ட பகுதிகளை மட்டும் படித்து விரிவாக அர்த்தம் சொல்கிறேன். அப்போது விளங்கும், இவர்கள் எப்பேர்ப் பட்ட நடிகர்கள் என்று." இப்படிப் பிரமீளா கூறினாள்.

"எனக்கு எதுக்கு அதெல்லாம்?" என்று அலுத்துக் கொண்டாள் கனகம். "நீ அநுபவிச்சால் சரி!"

"மெய்ம்மறந்து ரசித்தேன் அம்மா" என்றாள் பிரமீளா. இரவு நேரமான போதிலும் மவுண்ட்ரோட்டின் பிரகாச மான விளக்கொளி அவள் கண்களில் நன்றி ததும்புவதைப் பார்த்திபனுக்குக் காட்டிக் கொடுத்துவிட்டது. நாடகத்தில் பார்த்திபனுக்கு அருகே அவன் தோளை உரசியபடி உட்கார்ந்திருந்ததே, அவளுக்குக் கந்தர்வலோகத்தில் இருப்பது போன்ற இன்ப உணர்வைக் கொடுத்தது. போதாததற்கு நாடகமும் கந்தர்வலோகத்தில்கூட நடிக்கத் தக்க அளவுக்கு மிக உன்னதமாக அமைந்திருந்தது.

"ஒரு கறுப்புப் படுதா, தரையில் ஒரு ஜமுக்காளம் அதன் மையத்தில் ஒரு முக்காலி- இவ்வளவுதானே காட்சி ஜோடனை! இவற்றை மட்டும் வைத்துக் கொண்டு என்ன பாடுபடுத்திவிட்டார்கள்! ஆடம்பரமில்லாத சர்வ சாதாரண உடை அணிந்திருந்தபோதிலும் நடிப்புத் திறனால் எப்படி நம்மைப் பிரமிக்க வைத்து விட்டார்கள்!" என்று வியந்து பாராட்டினாள் பிரமீளா.

''அதைவிட முக்கியமான விஷயம் பல்வேறு கதாபாத்திரங்களாக அவர்களால் கண நேரத்தில் மாற முடிகிறது. பார்!'' என்றான் பார்த்திபன். ''இந்தக் காட்சியில் லேடி மாக்பெத்தாகத் தோன்றி அருவருப்பை நம் மனத்தில் ஏற்படுத்துபவள் அடுத்த காட்சியிலேயே அடங்காப் பிடாரி மனைவி காதரினாகத் தோன்றி நம்மைக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கிறாள். இப்படி மாறுவது எவ்வளவு சிரமம்?''

''ஆனாலும் அதை மிக எளிதாகச் செய்து வருகிறார்கள், இல்லையா?'' என்றாள் பிரமீளா.

''அப்படியில்லை! ரொம்பச் சிரமப் படுகிறார்கள். ஆனால் ரொம்பச் சுலபமாக நடிப்பது போல் காட்டிக் கொண்டு நம்மை ஏமாற்றுகிறார்கள். அங்கேதான் அவர்கள் மேதை பிரகாசிக்கிறது!''

''லேடி மாக்பெத் தன் கரங்களில் ரத்தக் கறை படிந்திருப்பதாகப் பிரமையில் ஆழ்ந்து போகிறாளே, அந்த இடத்தில் நிஜமாகவே ரத்தம் சொட்டுவது போல் நமக்குப் படுகிறது!''

''ஆமாம், நம்மவர்களாயிருந்தால் பஞ்சை, சிவப்பு இங்கியில் தோய்த்துக் கையோடு எடுத்து வருவார்கள் மேடைக்கு! அதே போலத்தான் ஹாம்லெட்டாக நடிக்கும் போது அவன் கையில் கத்தியே இல்லை. ஆனாலும் அவன் உணர்ச்சியுடன் பேசும்போது அவன் கையில் கத்தி இல்லாத குறையே தோன்றவில்லை.''

ஆச்சர்யம்தான்!'' என்றாள் பிரமீளா.

''மேநாடுகளில் இன்று இதைவிட ஒரு படி மேலே செல்கிறார்கள் பிரமீளா! சரித்திரகால நாடகங்களை இன்றைய நாகரிகத்தின்படி உடையணிந்து வந்து தைரியமாக நடிக்கிறார்கள். 'நடிப்புத்திறனாலும் முக பாவங்களாலும் வசனங்களை உணர்ச்சியுடன் பேசும்

அழகாலுமே எங்களால் ரசிகர்களைக் கவர முடியும். மற்ற ஒப்பனைகளின் உதவி ஏதும் தேவையில்லை' என்று சவால் விடுவதுபோல நடந்து கொள்கிறார்கள்!''

''அதுவல்லவா நடிப்பு!'' என்று பெருமூச்செறிந்தாள் பிரமீளா. ''நாம் என்னத்தைக் கிழிக்கிறோம் இங்கே?''

**போ**ர்ட்டிகோவில் வண்டி நின்றது. பேச்சைத் தொடர்ந்தபடியே கீழே இறங்கிப் பங்களாவுக்குள் சென்றார்கள்.

''ஏண்டி, உன்னை நீயே பழிச்சுக்கிறே? உனக்கு நடிப்புத் திறன் இல்லாததாலா மாறி மாறி புரொட்யூசர்கள் வந்து உன் காலடியில் பணத்தைக் கொட்டறாங்க?'' என்று கர்வம் கொப்புளிக்கப் பேசினாள் கனகம்.

''நடிப்புத் திறனை ஒருவருக்குச் சேரும் பணத்தைக் கொண்டு அளந்து விட முடியுமா, அம்மா?'' என்றான் பார்த்திபன். ''கத்தை, கத்தையாக நீங்க நோட்டை அடுக்கினாலும் நடிப்பு சொத்தைதான்!''

பிரமீளா இதைக் கேட்டுக் கலீரென்று சிரித்தாள். கனகம், ''என் வயிறு பற்றி எரியறது, இவன் பேசறதைக் கேட்டு! நீ சிரிக்கறே?'' என்றாள்.

''உண்மையைத்தானே அம்மா, இவர் சொல்கிறார்? நானும் நடிப்பதாகத்தான் பெயர் பண்ணுகிறேன். ஆனால் நான் அந்த நாளைய கிரேடா கார்போவோ அல்லது இந்த நாளைய சோபியா லாரெனோ இல்லை என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏன் ஒரு பத்மினிகூட இல்லைதான். இதை நீ உணராவிட்டால் போ, ஆனால் என்னை நானே ஏமாற்றிக் கொள்ளத் தயாராயில்லை.''

''எல்லாம் இவனோட சகவாசத்தால் வந்த வினை. என்னவோ 'பிரெய்ன் வாஷ்' என்பார்களே, அப்படி இவன் உன்னுடைய மூளையையே மழுங்கச் செய்துவிட்டான்!''

*"அம்மா! என் முகராசி இப்போ பணம் வந்து குவியறது. இன்னும் ஒன்றிரண்டு வருஷங்கள் போனால் என்னுடைய இந்த உருவத்துக்கும் முகத்துக்கும் மவுசு குறைஞ்சு போயிடும். என்னைவிட அழகான ஒருத்தி என்னைவிடக் கம்மியாக உடை அணிந்து காமிரா முன் தோன்றத் தயாராகி விடுவாள். அவள் என்னைவிட அதிகமாகப் பணம் கேட்பாள்! கொடுப்பார்கள்! அப்போது என்னைச் சீண்டுவார் இருக்க மாட்டார்கள்."*

*"ஆனால் சிறந்த நடிகை ஒருத்தி நடித்த திரைப்படத்தை இன்றைக்கு ஐம்பது அல்லது நூறு வருஷங்களுக்குப் பின்னும் திரையிட்டுப் பார்த்து ஆனந்திக்க வேண்டும் என்று மக்களுக்குத் தோன்றும்; அப்படி செய்வார்கள். பிரமீளா நடித்த படம் ஏதாவது ஒன்றாவது அந்தக் கௌரவத்தைப் பெறுமானால் அன்றைக்கு நான் பிரமீளா வின் காலைத் தொடத் தயார்"* என்றான் பார்த்திபன்.

*"டிரைவர் வீட்டுக்குப் போகணும்னு அவசரப்படறான். உனக்குப் பஸ் டாக்சி எதுவும் இந்த அகால நேரத்தில் கிடைக்காது. சீக்கிரமாய்ப் போய் வீட்டில் இறங்கிக்கிட்டு வண்டியை அனுப்பு"* என்றாள் கனகம்.

*"டிரைவருக்கு அவசரம்னா போகட்டுமே, அம்மா! இவரைச் சாப்பிடச் சொல்லாமல் விரட்டாதே"* என்றாள் பிரமீளா.

*"வாயை அலம்பிக்கிட்டு வாடி! இவன் ராத்திரி முழுவதும் இங்கேயே இருந்தால் டிரைவர் அதை ஊரெல் லாம் தமுக்கடிச்சுட்டு வந்துடுவான்!"*

*"அம்மா! ஊரிலே இப்போ என்னைப் பழித்துப் பேசாமலா இருக்கிறார்கள்? இவர் சிநேகம் எனக்குக் கிடைப்பதற்கு முன்னமேயே என்னை எவ்வளவோ இழித்தும் பழித்தும் நாவில் நரம்பில்லாமல் பேசி விட்டார்கள். புதுசாச் சொல்ல என்ன இருக்கு? இவர்*

இங்கேதான் சாப்பிடணும். அப்புறம் வேணுமானால் நானே காரோட்டிக்கிட்டுப் போய் இவரை வீட்டில் விட்டுட்டு வரேன். இல்லே இவர் சம்மதிச்சால் இங்கேயே படுத்திருந்துவிட்டு நாளைக்குப் போகட்டும், எனக்கு ஆட்சேபணை இல்லை.''

''வேண்டாம், பிரமீளா! நான் உன் திருப்திக்குச் சீக்கிரம் சாப்பிட்டு விட்டு உங்கம்மா திருப்திக்கு டிரைவரோடேயே வீட்டுக்குப் போயிடறேன். அவனுக்கு ஐந்தோ பத்தோ தந்துவிட்டால் காரை ஷெட்டில் விட்டுவிட்டு இரவு நேரம் கழித்து வீட்டுக்கு நடந்து போக நேர்ந்ததைப் பொருட் படுத்தமாட்டான்.''

பிரமீளா இதற்கு ஒப்புக் கொண்டாள். ஆனால் இரவு அங்கேயே அவன் தங்க வேண்டும் என்ற பிரமீளாவின் கோரிக்கை இருவர் மனங்களிலும் ஆசையை வளர்த்து விட்டது. யதேச்சையாகக் கூறப்பட்ட ஒரு யோசனைதான்; அதை அவனும் உடனே மறுதளித்து விட்டான்தான். ஆயினும் அந்த எண்ணம் தோன்றியபிறகு சுலபமாக அவர்களால் அதை மறந்துவிட முடியவில்லை. ஒருவரை யொருவர் பார்த்துக் கொள்ளும்போதும், பேசும் போதும், சிரிக்கும் போதும் அந்த நினைப்பு எழுந்து தொந்தரவு கொடுத்தது. அவர்கள் பேச்சிலே புதிய அர்த்தங்கள் தொனிக்க ஆரம்பித்தன. பார்வைகள் துணிந்து செயலாற்று மாறு அழைப்பு விடுத்தன. சிரிப்பிலே இன்ப ரகசியங்களை ஜாடையாகப் பகிர்ந்து கொண்டனர். இயற்கை வேகத்தால் கட்டுண்டு அவர்களின் எண்ணங்கள் ஒரு கட்டுக்கடங் காமல் எங்கெங்கோ சென்றன. அவள் அவனுக்குப் பிரேம் ஆனாள். அவன் அவளுக்குத் தீபன் ஆனான். தீபச் சுடர் பிரேமையைத் தீண்டித் தீய்த்துவிடத் துடித்தது. பிரேமை தீபச் சுடருள் ஐக்கியமாகிவிட ஏங்கியது. அந்த ஒரு தகிப்பினை வேண்டி நின்றது.

*கல்யாணப் பேச்சை யாருமே எடுக்கவில்லை. கனகம் அதற்குச் சம்மதிக்கவே போவதில்லை. ஒரே ரகளை பண்ணி விடுவாள். தனக்குக் கல்யாணம் ஆகிவிட்டால் அதனா லேயே திரைப்பட உலகில் தனக்கு மவுசு குறைந்துவிடும் என்று அந்தக் கல் நெஞ்சுக்காரி கணக்குப் போடுகிறாள் என்பது பிரமீளாவுக்குப் புரிந்தது. அவள் தன் சொந்தத் தாயார் இல்லை என்று நீண்ட நாட்களாகவே ஊகித்து வந்தாள் பிரமீளா. அது இப்போது ஊர்ஜிதமாவதாக அவளுக்குத் தோன்றியது.*

*முன்னொரு நாள் வயதான ஒருவர் தன் வீட்டுக்கு வந்ததும் அவரிடம் கனகம் பத்து ரூபாய் நோட்டுக்கட்டு ஒன்றினைக் கொடுத்து 'இந்தப் பக்கமே இனி எட்டிப் பார்க்கக் கூடாது' என்று கடிந்து கொண்டதும் அந்த நபர், 'பணத்துக்காக நான் வரலை அம்மா, குழந்தையை ஒரு தடவை கண்குளிரப் பார்த்துட்டுப் போகலாம்னுதான் வந்தேன்; வரேன்' என்று ஏமாற்றம் தொனிக்கும் குரலில் கூறிப் பணத்தை வாங்காமலேயே திரும்பியதும் அவளுக்கு நன்றாக நினைவிருந்தன.*

*மாடிப்படி அறைக்கு வந்தவள் வாசலில் வரவேற்பு அறையில் 'பேச்சுக் குரல் கேட்கவே தயங்கி நின்றாள். தன் பெயர் அடிபடுவது புரிந்தது. ஒருவேளை யாராவது ப்ரொட்யூஸர்-டைரக்டராக இருந்தால் புடைவையை மாற்றிக் கொண்டும் லேசாக மேக்அப்பைச் சரி செய்து கொண்டும் வருவது நல்லது என்று பட்டதால் இப்பா லேயே சற்று நின்றாள். அந்த மனிதர் எழுந்து போகும்போது வரவேற்பு அறை அலமாரியில் பதிக்கப்பட்டிருந்த நீண்ட நிலைக் கண்ணாடியில் அவர் முழு உருவமும் தெரிந்தது. முதுமைப் பருவத்தை எட்டிப் பார்க்கும் சாத்வீகமான முகம். பிரதிபலிப்பை ஒரு விநாடி நேரம்தான் பார்த்தாள் என்றாலும் அந்த முகத்தை இன்றளவும் பிரமீளா நன்றாக*

ஞாபகம் வைத்திருந்தாள். வருத்தத்துடன் அவர் எழுந்து சென்றதும் அவள் அவருக்காக பரிதாபப்பட்டு தன் தாயாரைக் கேட்டாள்: "யாரம்மா அது?"

"எவனோ பரதேசிப் பயல். இல்லையா, நைட் ஸ்கூல் நடத்தறேன், அன்னதானம் பண்ணறேன் என்று விதவித மாகச் சொல்லிக்கிட்டு எத்தனை பேர் வரானுக? பத்து ரூபாய் கொடுத்து அனுப்பிச்சேன்" என்று கூசாமல் பொய் சொல்லி விட்டுப் பிரிக்கப்படாத பத்து ரூபாய் நோட்டுக் கட்டுடன் உள்ளே சென்றுவிட்டாள் கனகம்.

அந்த மனிதரைப் பற்றிய ஏதோ ஒரு பயங்கர ரகசியம் அம்மாவுக்குத் தெரிந்திருக்கிறது. அதனால்தான் இவளால் அவ்வளவு சுலபமாக அவரைத் திருப்பி அனுப்பிவிட முடிந்தது என்று ஊகித்தாள் பிரமீளா. நெஞ்சை அழுத்திய பாச பாரத்தை இறக்கவும் முடியாமல் சுமக்கவும் முடியாமல் தள்ளாடியபடி வந்த வழியே அவர் போய்விட்டார். 'அந்த மனிதர்தான் அப்படி யென்றால் இவள் எதற்கு என்னை ஏமாற்ற முயல்கிறாள்?' என்று எண்ணியபோதே பிரமீளா வுக்குத் தன் தாயாரிடத்தில் மதிப்பு பெருமளவு குறைந்து விட்டது. எனினும் அந்தச் சம்பவத்தைப் பெரிதுபடுத்தாமல் வழக்கம் போல் அன்பாக இருந்துவந்தாள் அம்மாவிடம். ஆனால் இப்போது மகளின் மகிழ்ச்சியைவிடப் பணம்தான் முக்கியம் என்று கனகம் கருதுவதைப் பார்த்துச் 'சீ' என்று ஆகி விட்டது அவளுக்கு. பெற்ற வயிறாக இருந்தால் மகளுக்குக் கல்யாணம் என்றதும் அதில் அடித்துக் கொள்ளத் தோன்றுமா? ஒரு தடவை தடவிக் கொடுத்து விட்டுத் தடவிய விரல்களை முத்தமிடமாட்டாளா?

**க**ல்யாணம் என்ற வார்த்தையைக் கேட்டாலே ஹிஸ்டீரியா வந்த மாதிரி கூச்சல் போட்டாள் கனகம்: "எத்தனை டைரக்டர்கள், படாதிபதிகள் வீட்டுப்படி ஏறி

*இறங்கியிருக்கிறேன், உனக்காக? ஒரு சான்ஸ் உனக்குக் கொடுக்கச் சொல்லி எவ்வளவு தடவை மானத்தை விட்டுக் கெஞ்சிக் கேட்டிருக்கிறேன்!''*

*''ஆட்டைக் கொழுக்க வைக்கிறார்களே எதுக்கு அம்மா? அந்த மாதிரிதான் நீ என்னைப் பாடுபட்டு வளர்த்திருக்கிறாய்!''*

''பலி போடவாடி வளர்த்தேன்? ஏண்டி இப்படிக் கொடூரமாப் பேசறே?''

*''என்னைக் கொல்லவில்லை அம்மா! எனக்கென்று உள்ள உணர்ச்சிகளைக் கொன்றுவிட்டுப் பணம் பண்ணுகிற மிஷினாக நான் இயங்க வேண்டும் என்கிறாய். அதிர்ஷ்ட வசமா எனக்கு இரண்டு சினிமா சான்ஸ் ஆரம்பத்திலேயே கிடைச்சிருக்கலைன்னா நான், இப்போ எந்தத் தொழிலில் ஈடுபட்டு எந்த நிலையில் இருப்பேன் என்கிறதும் எனக்கு நல்லாத் தெரிஞ்சுதானிருக்கு. அதுவும் உன் கருணையால் தான் கிடைச்சிருக்கும்.''*

இதற்கு நேரிடையாகப் பதில் கூற இயலாத கனகம், ''இத்தனை கஷ்டப்பட்டுச் சம்பாதிச்ச பேரையும் புகழையும் உதறிப்புட மனசு வருதா உனக்கு? கல்யாணம் ஆனப்புறம் கையிலே கரண்டியைக் கொடுத்துச் சமையல் கட்டுக்கு அனுப்பிடுவான் உன் தீபன்!'' என்றாள்.

*''இருக்கட்டுமே அம்மா, அதனால் என்ன? திரை உலகம் என்னை நம்பியா உசிரைக் கையிலே பிடிச்சுக்கிட்டு இருக்கு? இன்னும் இரண்டு தலை முறைக்கு வேணும்கிற பணம் கொட்டிக் கிடக்கே, போதாதா? அவருக்குச் சமைச்சுப் போட்டுத்தான் பாக்கிக் காலத்தை ஓட்டிட றேனே? நடிக்கத்தான் வரலை சமைக்கவாவது வருதா பார்க்கலாமே!''*

என்ன வாதாடியும் பயனில்லை. எல்லா வாக்கு வாதங்களும் கடைசியில் ''நான் சம்மதிக்க மாட்டேன், மாட்டேன், மாட்டேன்!'' என்று கனகம் முத்தாய்ப்பு வைப்பதுடன் முடிந்தன.

இதற்கிடையில் சுடரும் விட்டிலுமாக, காந்தமும் இரும்புமாக, கொம்பும் கொடியுமாகப் பார்த்திபனும் பிரமீளாவும் நெருங்கி நெருங்கி வந்தார்கள். அதே சமயம் சுடரை அணைக்கும் நீராய், கொம்பை வெட்டி எறியும் அரிவாளாய், காந்தம் அதன் தன்மையை இழக்கச் செய்யும் சக்தியாய்க் கனகம் அருகிலேயே இருந்தாள்.

இனிமேலும் இந்தச் சித்திரவதையைத் தாள முடியாது என்ற நிலைக்கு இருவரும் வந்தபோது அவர்கள் கொடைக் கானலுக்குப் போகத் தீர்மானித்தார்கள். பார்த்திபன் முதலில் செல்வான். விடுமுறையைக் கழிக்க அங்கு வரும் எத்தனையோ சுற்றுலாப் பயணிகளில் ஒருவனாய் ஹில்டன் ஹோட்டலில் ஓர் அறையை எடுத்துக் கொள்வான். தன் அறை எண்ணை மட்டும் ஒரு தாளில் எழுதி உறையிலிட்டுப் பிரமீளாவுக்கு அனுப்பிவிடுவான். அவள் புரிந்து கொள் வாள். மற்றவர்கள் அதைப் பார்க்க நேர்ந்தாலும் அவர்களுக்கு ஒன்றும் விளங்காது.

மூன்று அல்லது நான்கு நாட்கள் கழித்துப் பிரமீளா, இடைவிடாத ஷூட்டிங்கில் களைத்துப் போய் ஓய்வு கருதி வருபவள் போல் கொடைக்கானலுக்கு வந்து, அதே ஹோட்டலில் அறை எடுத்தத் தங்குவாள். கனகமும் பின்னோடு வருவாள்தான். வந்துவிட்டுப் போகட்டும். அவள் கண்ணிலும் டிரைவர் கோபாலன் பார்வையிலும் மட்டும்படாமல் பார்த்திபன் கவனமாக இருக்க வேண்டும். அதற்கென்ன? பிரேமையில் மூழ்கித் திளைக்க அவன் அறைக்குள்ளேயே அடைந்து கிடக்கவும் தயார்தான்.

*அப்போது சிறையாகவா தோன்றும் அது? சாப்பாட்டை வேண்டுமானாலும் அறைக்கே வரவழைக்கலாமே!*

*கனகம் நன்றாகத் தூங்கிக் குறட்டை விடத் தொடங்கிய பிறகு பிரமீளா பார்த்திபனின் அறைக்கு வந்து சேர்ந்து கொள்ளலாம். அமைதியாக அனைவரும் உறங்கும் இரவு வேளையில் இதற்கு இடையூறு ஏதும் இராது. தப்பித் தவறி அவளைத் தாழ்வாரத்தில் யாரேனும் சந்திக்க நேர்ந்தாலும் மங்கலான ஒளியில் சட்டென்று அடையாளம் தெரியாது. மேலும் பிரமீளா இயல்பாக நடந்து கொண்டால் ஏதோ காரியமாகப் போகிறாள் என்றுதான் எண்ணுவார்கள்; வேறு விதச் சந்தேகம் எழாது*

*இந்தத் திட்டம் கச்சிதமாக நடந்தேறியது. ஆறு நாட்கள் அவர்கள் ஆனந்த பரவசத்தில் ஆழ்ந்திருந்தார்கள். ஏழாவது நாள் கனகம் விழித்தெழுந்து மகளைப் பின்தொடர்ந்து சென்று பார்த்திபனையும் பார்த்துவிட்டாள்!*

★ ★ ★

# 21. அவனுக்குள் ஓர் அசுரன்!

அமிர்தலிங்கம் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு தன் அறைக்குள் நுழைந்தபோது மணி ஒன்பது இருக்கும். 'ரூம் பாய்' அவன் பின்னாலேயே நுழைந்தான், ''நைட் லேம்ப்'பில் 'கெரசின்' இருக்கான்னு பார்த்துட்டுப் போறேன், ஸார்!'' என்று கூறியபடியே.

''இந்த சிம்னி விளக்கு ஒண்ணு எதுக்கப்பா? நான் உபயோகிக்கறதே இல்லை'' என்ற அமிர்தலிங்கத்தின் கண்களில் தென்பட்டது, சுவரில் மாட்டியிருந்த கோட் ஸ்டாண்டிலிருந்து தொங்கிய படுக்கை கட்டும் கயிறு. அதைக் கையில் எடுத்தான்.

''இருக்கட்டும், ஸார்! கொடைக்கானலில் எப்போ லைட் எரியும், எப்போ அணையும்னு சொல்ல முடியாது. பட்டினி கிடந்தவனுக்குக் கூழும் விருந்து. அதுமாதிரி கரண்ட் ஃபெயில் ஆனால் அப்போதான் இந்தச் சிம்னி விளக்கின் மகிமை தெரியும். மினுக்கு மினுக்குன்னு இது எரிஞ்சுக்கிட்டிருந்தால், ஏதோ ராத்திரி எழுந்திருக்கும்படி ஆச்சுன்னு வைச்சுக்குங்க, லைட் ஸ்விச்சை இருட்டிலே தடவித்தடவித் தேடிக்கிட்டு இருக்க வேண்டாம் பாருங்க!''

படுக்கை கட்டுவதற்காக அமிர்தலிங்கம் வைத்திருந்தது நல்ல மணிக்கயிறு. அதிக தடிமனும்இல்லை, ட்வைன் நூல் போல ரொம்ப மெல்லியதும் இல்லை. அதை இடக்கரத்தில் சுற்றுவதும் பிரிப்பதுமாய் இருந்தான் அவன். கண்கள் 'ரூம் பாய்'யின் கழுத்தைக் குறி பார்த்துக் கொண்டிருந்தன.

''எனக்கொன்றும் இருட்டென்றால் பயம் இல்லை அப்பா!'' என்றான் அமிர்தலிங்கம்.

''பயம் கிடையாதுன்னு சொல்கிற ஆசாமியைப் பத்து நாட்களுக்குப் பிறகு இப்போதுதான் ஸார் பார்க்கிறேன்'' என்றான் அந்தச் சிப்பந்தி. விளக்கைக் குலுக்கிப் பார்த்து மண்ணெண்ணெய் போதும் என்று கண்டுகொண்ட அவன், ''வத்திப் பெட்டி இரக்கா ஸார்? ஏத்திட்டுப் போறேன்'' என்றான்.

''வேணும்னா அப்புறமா நானே ஏத்திக்கிறேன்'' என்றான் அமிர்தலிங்கம். ''தைரியசாலியைப் பார்த்துப் பத்து நாட்கள் ஆச்சுன்னா என்ன அர்த்தம்? எதுக்கு எல்லோரும் பயப்படறாங்க?'' அவன் கரம் கயிற்றைத் தளர்த்தித் தொங்க விடுவதும் இழுத்து நேர் கோடாக நிற்கச் செய்வதுமாய் இருந்தது.

''பயமா? பயம்னு இலேசாகச் சொல்லிட முடியுமா? ஸைக்கோ ஸாரநாதனை நினைச்சுக்கிட்டால் எல்லாருக்கும் குலை நடுக்கமால்ல இருக்கு?... பால், ஓவல், எதுனாச்சும் வேணுமா ஸார்?''

''அதுதான் டி.ஐ.ஜி. சொல்லிட்டாராமே, 'ஸார நாதனாவது இங்கே வரவாவது? வீண் புரளி'ன்னு. அப்புறமும் எதுக்குப் பயந்து சாகணும்?''

''அந்தக் கையாலாகாத மனுஷன் வேறே என்ன ஸார் சொல்லுவார்? தமக்கு அந்த ஸைக்கோவைப் பிடிக்கத் துப்பு இல்லைன்னு ஒத்துக்குவாரா? வெறும் வெத்து வேட்டு! ஸாரநாதன் எந்த இடத்திலே எந்த ரூபத்திலே இருக்கா னோன்னு எல்லோரும் திகிலடைஞ்சு போயிருக்காங்க. ஏற்கனவே ரெண்டு கொலை விழுந்தாச்சு, அடுத்தாற்போல் யார் மேலே அவன் கை போடுவானோன்னு அவனவனும் தன் கழுத்தைத் தடவிப் பார்த்துக்கிட்டு இருக்கான். இந்த டி.ஐ.ஜி. என்னடான்னா பிக்நிக் போறார். கேட்டா லீவிலே

இருக்காராம்! நல்லா இருக்குதில்லையா கதை? நான் வரேன் ஸார்! குட் நைட்!"

"குட் நைட்!" இவ்வுலக வாழ்வுக்கே நிரந்தரமாக 'குட்நைட்' சொல்ல வேண்டிய கட்டத்தில் அல்லவா அவன் சில விநாடிகளுக்கு முன் நின்றான்! தன் பேச்சுத்தான் தன்னை மரணப் பிடியிலிருந்து மயிரிழையில் காப்பாற்றித் தந்தது என்பதை உணராமலேயே அந்தச் சிப்பந்தி போய்ச் சேர்ந்தான்.

**அ**மிர்தலிங்கம் தன் கரத்திலிருந்த கயிற்றை வட்டமாகச் சுற்றி நாலு வடமாக்கி மீண்டும் கோட் ஸ்டாண்டில் தொங்கவிட்டான். கதவைத் தாளிட்டு விட்டுச் சாத்தி யிருந்த கண்ணாடி ஜன்னல்களின் கெக்கிக ளெல்லாம் சரியாகப் பொருத்தப்பட்டுள்ளனவா என்று பரி சோதித்தான். திரைச்சீலைகளை இழுத்து மூடினான்.

ஆந்தைக் கண் மூக்குக் கண்ணாடியையும் டோப்பாவை யும் கழற்றி மேஜையின் மீது எறிந்துவிட்டுத் தாடி மீசையையும் பிய்த்துப் போட்டான். மழுமழு வென்றிருந்த கன்னத்தைத் தடவிக் கொடுத்துக் கொண்டான். அளவுக்கு மீறிய மன உளைச்சலால் வயதுக்கு ஒவ்வாத வகையில் விழுந்துவிட்ட வழுக்கையை ஒரு தடவை தடவினான். ஆனந்தமாக ஆகாயத்தில் மிதப்பது போலிருந்தது அவனுக்கு. 'டி.ஐ.ஜி. ஒருவர் எதையாவது பிதற்றிக் கொண் டிருந்தால் என்ன? மக்கள் நம்புகிறார்கள்-ஸாரநாதன் இங்கு இருக்கிறான், அவன் தான் இந்த இரண்டு கொலைகளையும் செய்திருக்கிறான் என்று.' சற்று முன் மணிக் கயிற்றை ஸ்பரிசித்தபோது முறுக்கேறிய உள்ளம் இப்போது தளர்ந்து இலேசாகியிருந்தது. 'நாற்பத்திரண்டு+ஒன்று, அதாவது டாக்டர் குஹா+கொடைக்கானலில் இரண்டு=நாற்பத் தைந்து. ஆனால் சே! அதில் ஒருத்தி பெண் பிள்ளையாகப்

போய்விட்டாள். தொலையட்டும். ஆணுக்கு நிகராக அட்டகாசம் பண்ணுகிறவள்தான் அவள் என்று ஊரில் பேசிக் கொண்டார்கள். அவளை ஒதுக்கி விட்டாலும் பாக்கி நாற்பத்தி நாலு!'

ஸாரநாதன் ஒரு துள்ளுத் துள்ளிப் படுக்கையில் விழுந்தான். அந்த உற்சாகத் தாக்குதலைத் தாள முடியாமல் கட்டில் கிறீச்சிட்டது. குப்புறப் படுத்துக்கொண்டு படுக்கைக் கும் தலையணைக்கும் இடையில் இருந்த சந்தில் தன் முகத்தை நுழைத்தான். 'ம்...ம்...ம்... அம்மா வின் கழுத்து... ம்... ம்... 'கண்களை மூடிக் கொண்டு மெல்லக் கன்னத்தை அந்த இடுக்கில் உரசினான். 'சே! அம்மாவின் கழுத்து இவ்வளவு சொரசொரப்பாவா இருக்கும்?' குபுக்கென்று நீர் பெருகியது அவன் கண்களில். விம்மலோ விசும்பலோ இன்றிக் கண்ணீர் உகுத்தான். அம்மாவுடைய கழுத்தின் மென்மையை அனசூயாவை அணைத்தபோது ஓரளவு ஸ்பரிசிக்க முடிந்தது. அதற்குள் அவள் வீறிட்டு அலறி ரகளை செய்து ரசனையைக் கெடுத்தே விட்டாள். ஸாரநாதன் சரேலென்று எழுந்து தன் பெட்டியில் எதையோ பரபரவென்று தேடினான். அது அகப்படத் தாமதமான போது அவன் பொறுமை இழந்து பெட்டியை அப்படியே தரையில் குப்புறக் கவிழ்த்தான். தரையில் விழுந்த துணிமணிகளைக் கிளறினான். அது அகப்பட்டு விட்டது. கிழிந்துபோன ஒரு ரவிக்கை. பட்டு ரவிக்கை. சாயம் மங் கிப் பொலிவிழந்து கிடந்த அதை அன்பாகத் தடவினான். விருட்டென்று அதைப் படுக்கையில் தலையணைக்கும் மெத்தைக்கும் இடையில் நறுவிசாக மடித்து வைத்து முன் போலவே தன் முகத்தை அந்த இடுக்கில் புதைத்து இலேசாக அசைத்துக் கன்னங்களை அப்பட்டில் தேய்த்துக் கொண் டான். 'ம்ம்ம்... என்ன சுகம்! அம்மா கண்ணூ! நாற்பத்தி நாலு ஆச்சு. போதாதா! இன்னும் இரண்டு பேரா! அவர்களையும் தீர்த்துக் கட்டிய பிறகு அதுவும் போதாது

இன்னும் இரண்டு என்பாய்! எனக்குத் தெரியாதா உன் ஜாலம்!' ஸாரநாதன் யாரோ கிசுகிசு மூட்டியது போல் சிரித்தான்! 'நானும் சரி என்று பழி வாங்கும் படலத்தைத் தொடர்வேன்!' அவன் சிரிப்பு நீடித்தது மேலும் சற்று நேரம்.

திடீரென்று அவன் எழுந்து டிரெஸ்ஸிங் டேபிள் முன்னே ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டான். மேஜை மீது இருந்த டோபாவை எடுத்துத் தலையில் வைத்துப் பார்த்தான். நிலைக் கண்ணாடியில் தெரிந்த உருவத்தை நோக்கி முகம் சிணுங்கி அதன்மேல் உமிழ்வது போல் பாவனை காட்டினான். டோபாவை மீண்டும் கழற்றிப் போட்டான். இப்போது நிலைக்கண்ணாடியில் தெரிந்த உருவத்தை நோக்கிப் புன்னகை செய்தான். 'உன் புகழ் கொடி கட்டிப் பறக்கிறதடா ஸாரநாதா! மகிழ்ச்சியில் நீ திளைத்துப் போ!' என்று வாய் விட்டுச் சொன்னான், தலையில் முன் வழுக்கையைத் தடவிக் கொடுத்தபடியே.

**நி**லை கண்ணாடியில் பிரதிபலித்த முகம் திடீரென்று சிறுத்துக்கொண்டே போயிற்று. அது தொலைவில் சென்ற தோடு அதன் முதுமையும் குறைந்து கொண்டே வந்தது. இளமை கூடி ஒரு சிறுவனின் முகமாகவே ஆகிவிட்டது. ஆனால் ஸாரநாதனின் முகத்தில் சற்று முன் நிலவிய புன்னகை இந்தச் சிறுவனின் முகத்தில் காணோம். ஏக்கம் அப்பிக் கிடந்தது. சோகம் தன் முத்திரையைப் பதித் திருந்தது.

இழைப்புளி போட்டு அச்சிறுவன் ஒரு மரக் கட்டையை இழைத்தான், நாற்காலி தயாரிக்க. கை சோர்ந்து சற்று நிற்கும்போது ஒரு முரட்டுக் கரம் அவன் காதைப் பிடித்து அழுத்தித் திருகியது. "விடுய்யா" என்று கோபத்தோடு முறைத்தான் சிறுவன்.

"ஏலே! ரோஷத்தைப் பார்க்கலையா?" என்று எகத்தாள மாகப் பேசினான் காப்பாளன். "திருடிப்பிட்டுச் சீர்திருத்தப் பள்ளிக்கு வந்து சேர்ந்த கழிசடைக்குத் தன்மானம் வேறு கேடா?"

"நான் திருடணும்னு ஆசைப் பட்டுத் திருடலையே? வேலையோ கூலியோ கிடைக்கல்லே. பசி எடுத்தது. வயிற்றை நிரப்பிக் கொள்ளத்திருடினேன். பின்னே சாவச் சொல்றியா?"

"செத்து ஒழிஞ்சால் தேவலையேடா! திருட்டுக் குணத்தைப் பரம்பரைச் சொத்தா வளர்த்துக்கிட்டே போறீங்களே! உங்க அப்பன் கொலைக் கேஸிலே சம்பந்தப் பட்டுப் பத்து வருஷங்கள் கம்பி எண்ணிட்டு வந்தான். பெண்டாட்டியை 'சோத்துக்கு என்ன பண்ணினே'ன்னு அவன் தட்டிக் கேட்டப்போ அவளும் உன் மாதிரிதான் பதில் பேசினாளாம். 'வயிற்றுப் பசியைத் தணிச்சுக் கிடத்தானே உடலை வித்தேன். அதிலே என்ன தப்பு'ன்னு கேட்டாளாம்!" சரேலென்று காப்பாளன் மேல் பாய்ந்தான் சிறுவன். அவன் முகத்தைக் கூரிய நகங்களால் பிராண்டி எடுத்துவிட்டான்.

"என் அம்மாவைப் பத்தித் தப்புத் தண்டாவா எதுவும் சொல்லாதே! கொன்னுப் போடுவேன்! கொன்னு!" என்று அலறினான்.

பலம் மிக்க கரங்கள் இரண்டு, சிறுவனின் வாழைத் தண்டுக் கைகளைப் பற்றின. முறுக்கிப் பின்பக்கம் கொண்டு சென்றன. வேதனை தாளாமல் அவன் வளைந்து திரும்பியபோது ஒரு தள்ளுத் தள்ளின. குப்புறத் தரையில் விழுந்தான் சிறுவன் ஸாரநாதன். மூக்கிலிருந்து ரத்தம் குபுகுபுவென்று பெருகியது. காப்பாளனின் கால் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள ஊறலெடுத்தது. உதைகள் தாராளமாய் விழுந்தன சிறுவனின் விலாவிலும்

முதுகிலும். "திருட்டு நாயே! என் மேலே கைவைக்கத் துணிஞ்சியா நீ! ஏலே! என் முகத்தை நீ பிராண்டிப்புட்டா உன் அம்மா பதிவிரதையாகிவிடுவாளா?"

சிறுவன் புரண்டு கொடுத்து அவன் கால்களைப் பற்றிக் கொண்டான். "அப்படிச் சொல்லாதீங்க ஐயா! அவள் உழைச்சுச் சம்பாதிச்சா. உள்ளங்கையெல்லாம் இங்கே கிடக்கிற தேக்குப் பலகை மாதிரி ஆயிருச்சு. எனக்காகத் தான் அவ்வளவு கஷ்டப்பட்டா."

கால்களை உதறி விடுவித்துக்கொண்டான் காப்பாளன். "அப்படிச் சொல்லாதே சொல்லாதேன்னு என்கிட்டே புலம்பி என்னடா புண்ணியம்? அதுதான் உன் அப்பனே கேட்டுப்பிட்டானே பத்து வருஷங்கள் எப்படிப் பதி விரதையா இருந்திருக்க முடியும்னு! அப்படி ஒரு கேள்வியை நிக்க வைச்சுத்தானே அவளைத் தூக்கிலே தொங்க விட்டான்! அக்கம் பக்கத்திலே எல்லார் காதிலும் அவன் போட்ட கூச்சல் விழுந்துச்சே! உன்னைக் கோர்ட்டிலே திருட்டுக் குற்றத்துக்கு விசாரிச்சபோது இந்த விவரமெல்லாமும் வெளி வந்து சந்தி சிரிச்சுப் போச்சே! இப்போ நான் கம்முன்னு இருந்துட்டா இதெல்லாம் இல்லைன்னு ஆயிடுமா?"

"அதெல்லாம் நிஜம் இல்லை ஐயா! என் அப்பா அநியாயமா அவளைச் சந்தேகிச்சுக் கூச்சல் போட்டாரு. அக்கம் பக்கத்திலே இருந்தவங்க அதைக் கேட்கப் போகப் பின்னாலே அப்படியே சாட்சியமும் சொல்லிட்டாங்க. அம்மா என்மேலே உசிரையே வைச்சிருந்தாங்க. அக்கிரம மான வழியிலே பணம் சம்பாதிச்சு என்னை அவமானத்துக் குள்ளாக்கு வாங்களா?" விசும்பி அழுதான் ஸாரநாதன்.

"களவாணிப்பயலே! சித்தே முன்னாடி புலி மாதிரி சீறிப்புட்டு இப்போ ஏன் பொம்புள்ளை மாதிரி அழுவுறே?

போடா, போய் வேலையைப் பாரு!" என்று அதட்டினான் காப்பாளன்.

இழைப்புளியை ஒரு கரத்தில் பற்றி எடுத்துக்கொண்டு, பின்னங்கைகளால் கண்களைத் துடைத்தபடி இழைக்கப்பட வேண்டிய மரம் இருந்த மேடையை நெருங்கினான் ஸாரநாதன்.

போகிற போக்கில் காப்பாளன் கடைசியாகச் சொன்ன கொடூரமான வார்த்தைகள் அவன் காதில் தெளிவாக விழுந்தன.

"நல்லாக் கேட்டு மனசிலே பதிய வைச்சுக்கடா! எப்போ கோர்ட்டிலே அவள் சோரம் போனவள்னு நாலு பேர் கூண்டிலேறிச் சாட்சி சொல்லிட்டாங்களோ, இனிமே அவளை மனசாலே நினைச்சுப் பார்க்கிற ஒவ்வொரு ஆம்பிள்ளைக்கும் அவள் தாசிதான்! தாசியேதான்! புரிஞ்சுதா?"

நன்றாகப் புரிந்தது ஸாரநாதனுக்கு, இந்தக் காப்பாளனை இன்றில்லாவிட்டாலும் இன்னொரு நாள் கொன்று தீர்த்துவிட வேண்டும் என்று. அப்படியே தன் தாயாரைத் தாசி என்று எண்ணக்கூடிய மனம் கொண்ட ஆண்வர்க்கம் முழுமையையுமே கொன்று குவித்து விட்டாலும் நல்லது தான்! தன் தாயின் அழகிய மென்மையான நீண்ட கழுத்தைக் கயிறு சுற்றி வளைத்ததுபோல் இந்த ஆண் வர்க்கமும் கழுத்தில் கயிறு இறுகச் சாக வேண்டும்! சாகத்தான் வேண்டும்!

**அ**வன் எந்த ஒரு சந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்தானோ, அது ஒரு நாள் கிடைத்தது. அவன் காப்பாளனைக் கொன்று விட்டு வேறு இரு காவலர்கள் கண்ணில் மண்ணைத் தூவி விட்டுச் சீர்திருத்தப் பள்ளியிலிருந்து தப்பி ஓடி வந்தபோது அவன் சிறுவனாக இருக்கவில்லை. வாலிபனாக விளங்கிய

அவன் மனம் அவனுக்கேற்பட்ட அலாதி அனுபவங்களின் விளைவாக முதிர்ச்சி அடைந்திருந்ததுடன் பேதலித்தும் போயிருந்தது. ஆனால் இந்த விகார குணம் சில தருணங்களில்தான் வெளிப்பட்டது. மற்ற சமயங்களில் அமைதியாக, முதிர்ச்சி அடைந்த மனத்தின் ஆளுகைக்கு அடங்கி நடந்துகொண்டது.

அவனுக்கு எங்கே போவது என்று தெரியவில்லை. சீர்திருத்தப் பள்ளியில் இருந்தவர்களைப் பார்க்க அவ்வப் போது பெற்றோர் அல்லது நெருங்கிய உறவினர் வருவ துண்டு. கடையில் வாங்கிய மிட்டாயோ அல்லது வீட்டில் செய்த தின்பண்டமோகூடக் கொண்டு வந்து தருவார்கள். ஆனால் ஸாரநாதனைத் தேடி யாருமே என்றைக்குமே வந்ததில்லை... யார் இருந்தார்கள் அவனுக்கு? அம்மா இறந்துவிட்டாள். அவள் மரணத்துக்குக் காரணமான அப்பா அன்று ஓடிப்போனவன்தான். போலீஸில் அகப் பட்டானா அல்லது செத்து ஒழிந்தானா ஒன்றும் தெரியாது. தெரிந்துகொள்ள வேண்டிய ஆர்வமோ அவசியமோ மகனுக்கு இல்லை. உறவினர் என்று யாருமே இல்லையோ அல்லது இருந்தும் சீர்திருத்தப் பள்ளியில் இருந்த அவனை வந்து காணப் பிடிக்கவில்லையோ, எப்படியானாலும் இன்று அவனுக்கென்று ஒருவரும் இல்லை, அவனுக்குத் தெரிந்தவரை.

அவன் ஊர் ஊராகப் போனான். எப்படியோ பம்பாய் சென்றடைந்தான். பகலோ, இரவோ, சில சமயம் பார்க் கிலோ, கடற்கரையிலோ நடைபாதையிலோ ஏகாந்தமான இடத்தில் அவனிடம் அப்பாவி எவனாவது அகப்பட்டுக் கொள்வான். அப்போது ஸாரநாதனின் அசுர குணம் குபீரென்று பொங்கி ரத்த நாளங்களில் பாயும். அவன் கரங்கள் பரபரக்கும். கண்கள் சிவக்கும். உதடுகள் துடிக்கும். ஒருவித வெறி அடக்க முடியாத வெறி அவனை

ஆட்டிப் படைக்கும். இரண்டு முழக் கயிறு-அழகான, உறுதியான, வழுவழுப்பான மணிக் கயிறு அவன் கரங்களில் நெளியும். அடடா! கழுத்து என்கிற அவயவம்தான் எத்தனை சௌகரியமாய் அமைந்திருக்கிறது, உயிரைப் பறிக்க வசதியாக! சில சமயம் அவனது மரணப் பிடிக்கு ஆளானவர்களின் சட்டைப் பையில் கொஞ்சம் பணம் அகப்படுவதும் உண்டு. அதைக் கொண்டு சிறிது காலம் ஓட்டுவான். மற்ற நாட்களில் கூலி வேலை செய்து பிழைப்பான். யோக்கியமானவனாக, நாணய மிக்கவனாக எல்லாராலும் விரும்பப்படுபவனாக நடந்து கொள்வான்-மறுபடியும் அந்த உந்துதல் தோன்றும்வரை; கரங்கள் மணிக்கயிற்றைக் கையாளத் தினவெடுத்துத் தவிக்கும்வரை!

★ ★ ★

ஸாரநாதன் விழித்தெழுந்தபோது தான் நிலைக் கண்ணாடி எதிரே அமர்ந்திருந்த கோலத்திலேயே, டிரஸ்ஸிங் டேபிள் மீது கரங்களை வைத்துத் தலையணையாக்கி, அதன் மேல் தலைசாய்த்துத் தூங்கி விட்டிருப்பதை உணர்ந்தான். அவன் காலைக் கடன்களை யெல்லாம் முடித்துக் கொண்டு அமிர்தலிங்கமாக மீண்டும் உருமாறி அறையை விட்டு வெளியேறி டைனிங் ஹால் பக்கம் வந்த போது, பத்மநாபன் கைக்குட்டையால் ஈரக் கையைத் துடைத்துக் கொண்டு வாசல்புறம் நின்று கொண்டிருந்தார். அவர் குடும்பமும் உடன் இருந்தது. "என்ன மிஸ்டர் அமிர்தலிங்கம், இவ்வளவு லேட்டு? முருகல் தோசை முதல் தரமாய் இருக்கு. ருசி பார்க்கிறீங்களா, இல்லே, கோழி முட்டையைத்தான் முழுங்கணுமா?"

"நீங்க விடற ஏப்பத்தைப் பார்த்தால் ஐந்து தோசைகளுக்குக் குறையாமல் உள்ளே இறங்கி யிருக்கும் போலிருக்கே!" என்றான் அமிர்தலிங்கம்.

"முதல்லே நாலு போதும்னுதான் நினைச்சேன். அப்புறம், இன்றைக்கு இருக்கோம், நாளைக்கு இருப்பது சந்தேகம்னு நினைவு வந்தது. இப்படிப் பட்ட நிலைமையில் கிடைக்கிற சந்தர்ப்பத்தை விடுவாளான்னு 'இனனொண்ணு போட்டுடுப்பா'ன்னுட்டேன்."

"போதும்! அழகு பறக்க என்ன பேச்சு" என்று தோளில் முகவாயை இடித்துக் கொண்டாள் அம்புஜம்.

"ஏன் ஸாரநாதனுடைய அடுத்த 'விக்டிம்'மா நீங்க மாட்டிக்குவீங்களோங்கற பயத்திலே பேசறீங்களா?" என்றான் அமிர்தலிங்கம். "ஒண்ணு வேணுமானா செய்ய லாம். 'இரண்டுக்குப் பின் எப்போதும் வேண்டாம்'னு போஸ்டர் அச்சடித்து இந்த ஊரிலே மூலைக்கு மூலை அந்த ஸைக்கோ கண்ணிலே படற மாதிரி ஒட்டி வைக்கலாம்!"

"அதிலேயும் முதல்வர் படத்தைப் போட மறந்துடப் படாது" என்றாள் அம்புஜம்.

"அப்படியாவது அவன் இரண்டு கொலைகளோடு நிறுத்திண்டு போய்ச் சேர்ந்தால் சரி. இதோ டி.ஐ.ஜி. வரார். அவரிடம் சொல்வோமா, போஸ்டர் ஐடியாவை?"

"அவசியம் சொல்லுங்க; அதோட அவர் மகனைக் கோந்து டப்பாவை எடுத்துக்கிட்டுப் பின்னோடு போகச் சொல்லுங்க!" என்றான் அமிர்தலிங்கம்.

"எதுக்குத் தாறுமாறாக ஒருத்தரைப்.பற்றி அவர் எதிரே இல்லாதபோது பேசணும்? 'ஹி இஸ் டுயிங் ஹிஸ் பெஸ்ட்' என்றாள் மீனா கண்களில் அனல் பறக்க.

"மிஸ்! இதை என்கிட்டே சொல்லிப் புண்ணியமில்லே. இந்த ஊரிலே இருக்கிற ஜனங்க அத்தனை பேரிடமும் போய்ச் சொன்னீங்கன்னா கோபத்தில் அவங்க ஆளுங்கு ஓர் அறை கொடுப்பாங்க; வாங்கிக்கிட்டு வந்து சேரலாம்!"

"என்ன? என்ன மகாநாடு நடக்கிறது, இங்கே?" என்று புன்னகையுடன் கேட்டுக் கொண்டே வந்தார் நடராஜன் டி.ஐ.ஜி. (ஸி.ஐ.டி.)

"உங்க பேரிலே ஊரிலே எல்லோரும் கோபமா இருக்காங்கன்னு பேசிக்கிட்டிருக்கோம்" என்றார் பத்மநாபன்.

"ஸாரநாதனை பிடிக்கத் தெரியலை. உதவாக்கரைப் பயல்'னு சொல்றாங்களாக்கும். சொல்லட்டும். பப்ளிக் ஸர்வண்ட்டாக வந்துட்டோம்னா இதுக்கெல்லாம் தயாராகத்தான் இருக்கணும். பீப்பிள் ஹேவ் எ ரைட் டு க்ரிடிஸைஸ்."

"அதுக்காக வரம்பு மீறிப் பேசறதா? நாமும் கேட்டுண்டு சும்மா இருக்கறதா?" என்றாள் மீனா கோபத்தோடு.

"தேங்க் யூ மீனா! நீ ஒருத்தி என் கட்சியில் இருந்தால் போதும், எதையும் தாங்கிப்பேன்" என்றார் நடராஜன்.

"இதையும் சேர்த்துத் தாங்கிக்கிங்க-நேத்து ஆனந்த கிரியிலே நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் நீங்க ஏன் ராஜிநாமா செய்யக் கூடாதுன்னு ஒருத்தன் கேட்டுட்டான்" என்றார் அப்போது அங்கு வந்து சேர்ந்த ஹோட்டல் முதலாளி தனராஜ். "இந்தக் கூட்டத்தில் மந்திரியும் கலந்து கிட்டார். அவர் இதை மறுத்தோ எதிர்த்தோ ஒரு வார்த்தைகூடச் சொல்லலை!"

"அதிலே ஆச்சர்யம் ஒண்ணுமில்லே" என்றார் பத்ம நாபன். "அந்த மாதிரி 'ஹெல்த்தி ட்ரெடிஷன்' ஒரு காலத் திலே இருந்தது. சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் ஏதாவது தப்புச் செய்தாலும் மந்திரிகள் பொறுப்பேற்றுக் கொண்ட கண்ணியமான காலம். அது மலை ஏறிப் போச்சு. இப்போ பொறுப்பைத் தட்டிக் கழிக்கிற சகாப்தம். யார் பேரிலே பழியைச் சுமத்திட்டு நாம பதவியிலே தொடர்ந்து ஒட்டிக் கலாம்னு பார்க்கிற காலம்!"

"பிளீஸ்! நோ பாலிடிக்ஸ்" என்றார் நடராஜன்.

"பாலிடிக்ஸ் வேண்டாம் ஸார், என் பிஸினஸ்ஸைச் சொல்லுங்க" என்று அழாத குறையாகப் பேசினார் தனராஜ். "பாதிப் பேருக்கு மேலே அறைகளைப் பயத்திலே காலி பண்ணிட்டுப் போயிட்டாங்க. இன்னும் சிலர் இன்னிக்குக் கிளம்பறதா நோட்டீஸ் கொடுத்துட்டாங்க."

"ஏன்னா! நாமும் கிளம்பிப் போயிடலாமே!" என்றாள் அம்புஜம்.

"நோ அம்மா! கூடவே கூடாது! ஒரு மர்டர் மிஸ்டரி யைப் பாதி படிச்சுண்டு இருக்கறச்சே புத்தகம் காணாமல் போன கதையாகிவிடும். கடைசி வரைக்கும் பார்த்துட வேண்டாமா, என்ன நடக்கிறதென்று?" இவ்வாறு கூறி விட்டு மீனா ரங்கனைப் பார்த்தாள். 'மர்மமுமில்லை. ஒரு மண்ணுமில்லை. எனக்கு அதிலெல்லாம் அக்கறை கிடையாது. உங்களோடு இன்னும் சில நாட்கள் தங்க வேண்டுமென்பதற்காகத்தான் இப்படிப் பேசுகிறேன், புரிகிறதா?' என்று அவள் கண்கள் அவனை வினவின.

இதைப் பத்மநாபனும் ஒருவாறு புரிந்துகொள்ளத்தான் செய்தார். 'அடி கள்ளி! எங்ககிட்டே அகதா கிரிஸ்டியோட அக்கா மாதிரி வீறாப்பாப் பேசிட்டு அவனைப் பார்த்துக் கண்சிமிட்டறயா?' என்று தமக்குள் எண்ணிக் கொண்டார்.

"இந்த வருஷம் எனக்கு எவ்வளவு நஷ்டம்னு இப்பவே என்னால் கணக்குப் போட்டுப் பார்க்க முடிகிறது" என்று தொடர்ந்து புலம்பினார் தனராஜ். "அதை நினைக்கறச்சே அந்த ஸைக்கோ அடுத்தாற் போல் பரலோகத்துக்கு அனுப்புகிற ஆசாமி நானாக இருக்கக் கூடாதா என்று கூடத் தோணுது!"

நடராஜன் அவர் முதுகில் தட்டிக் கொடுத்தார். "சீர் அப்! ஒண்ணும் குடி முழுகிப் போய்விடாது. இப்போ பயந்து

ஓடினவங்களுக்கு அதிகமாகவே திரும்பி வருவாங்க. ஸீஸன் முடிய இன்னும் இரண்டு மாதங்களுக்கு மேலேயே இருக்கே... அது சரி, இன்று பேரிஜம் போகுதா உங்க பஸ்? இல்லே, ஆளுங்க கம்மி என்று டிரிப்பைக் கான்ஸல் பண்ணிட்டீங்களா?''

''ஓர் ஆசாமியாயிருந்தாலும் பஸ் ஓடும். சாப்பிட இரண்டே பேர்தான் என்றாலும் அடுப்பு எரியும், இந்த ஹோட்டல்லே'' என்றார் தனராஜ், பெருமையுடன். ''பஸ் ரெடி... ஆனால் நீங்க போறீங்களா என்ன?'' என்று கேட்ட போது அவர் குரலில் தெம்பு இல்லை.

''கவலைப்படாதீங்க, தனராஜ்! நான் இன்னிக்கு பேரிஜம் போறதாலே இன்வெஸ்டிகேஷன் ஒண்ணும் தடைப்படாது. இன்னின்ன காரியங்களைச் செய்யணும்னு உத்தரவு போட்டிருக்கேன்... ஸைக்கோவோ, இல்லையோ, குற்றவாளிகள் நிச்சயம் கண்டுபிடிக்கப்பட்டுத் தண்டனை அடைவார்கள்'' என்றார் நடராஜன்.

★ ★ ★

# 22. "மஞ்சள் பத்திரிகையின் மகிமை!"

**ப**ஸ்ஸில் அதிகக் கூட்டம் இல்லை. ஹாப்பி ஹாலிடே ஹோட்டலில் இருந்தவர்களில் பெரும்பாலோர் அறைகளைக் காலி செய்துகொண்டு போய்விட்டதாலும் அந்த பஸ்ஸில் ஹோட்டலில் தங்குபவர்களன்றி வேறு யாரும் ஏற அனுமதிக்கப்படுவதில்லை என்பதாலும் பத்மநாபன், நடராஜன் குடும்பங்கள் தவிர வேறு நாலைந்து பேர்களே இருந்தார்கள். அவர்களில் அமிர்தலிங்கமும் ஒருவன். கழுத்திலிருந்து தொங்கிய நீண்ட ஜபமாலையை நெஞ்சுக்கு நேரே பிடித்துச் சக்கர வட்டமாகச் சுழற்றிக் கொண்டிருந்தான்.

விசுப்பயல் நின்ற நிலையிலிருந்தபடி தன் தலையால் அப்பாவின் இளம் தொந்தியை ஒரு தடவை முட்டித் தாக்கி விட்டுக் கேட்டான்: "அப்பா! நாம் எங்கே போகிறோம்? சொல்லு!"

"பேரீஜம்! அங்கே நிறையத் தண்ணி இருக்கு. பெரிய ஏரி!" என்றார் பத்மநாபன். "தெரிஞ்சுதா? பேரீஜம்!" குழந்தையுடன் பேசினாரே ஒழிய, அவர் மனமெல்லாம் நடராஜனிடம் கனகத்தின் மரணம் பற்றிய விவரங்களைக் கேட்டறிய வேண்டும் என்ற எண்ணத்திலேயே ஆழ்ந்திருந்தது.

தகப்பனார் கூறியதைக் கேட்ட விசுப் பயல் சற்று யோசித்தவனாகக் காணப் பட்டான். பின்னர், "அப்பா! நாம் ஜம் ஜம்முன்னு பேரீஜம் போறோம், இல்லே!" என்றான்.

குழந்தையுடைய இந்த மழலைக் கவிதை அதைக் கேட்ட அத்தனை பேரையும் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்த்தியது. கேட்காதவர்கள் சிரிப்பொலியால் ஈர்க்கப்பட்டு, 'என்ன என்ன' என்று கேள்வி போட்டுத் தெரிந்து கொண்டு ரசித்தார்கள்.

"இங்கே இன்னொரு 'ஜம்' இருக்கேடா. அதை மறந்துட்டியே?" என்றார் பத்மநாபன்.

"அம்புஜம்!" என்று கூச்சலிடாத குறையாக முந்திக் கொண்டு சொன்னாள் அனசூயா.

கிளுகிளுப்பு உண்டானவனாக விசு சிரித்தான். "ஜம் ஜம்! பேரீஜம்! அம்பு ஜம்! ஜம் ஜம்!" என்று ராகம் போட்டுச் சொன்னான். குழந்தையைப் பாசம் மேலிட வாரி அணைத்துக் கொண்டாள் தாய்.

**ம**கனைப் பார்த்துக் கொள்ளும் பொறுப்பிலிருந்து விடுதலை பெற்ற அடுத்த கணம், இதுதான் சமயம் என்று பத்மநாபன் டி.ஐ.ஜி. நடராஜன் பக்கத்தில் போய் உட்கார்ந்து கொண்டார். பேச்சுக் கொடுக்கவும் ஆரம்பித்து விட்டார்.

"ஏன் ஸார், திருச்சேறை பற்றிச் சொன்னேனே, போய்ப் பார்த்தீர்களா அவரை?"

நடராஜன் சிரித்தார். "அது ஒரு காலி டப்பா ஸார்! லொட லொடன்னு பேசுதே ஒழிய வெறும் வெகுளி. நான் போய் என்னை அறிமுகப் படுத்திக்கிட்டதுமே அவருக்குத் தொடை நடுக்கமாப் போச்சு. அப்புறம் விசாரணைக்கு வந்திருக்கிறதாச் சென்னதும் அழவே ஆரம்பிச்சுட்டார்!"

''நிஜமாகவா? கனகத்துக்காகக் கண்ணீர் விட்டு அழுதாரா அவர்? த்சொ த்சொ!'' என்று அனுதாபப்பட்டார் பத்மநாபன்.

''அவ செத்துப் போனதுக்காக அழலைங்க அவரு! பயத்திலே அழுதுட்டாரு! 'எனக்கும் கனகத்துக்கும் ஸ்நானப் பிராப்திகூடக் கிடையாது சுவாமி! என்னை விட்டுடும்' என்று சொல்லி மன்றாடினாரு!''

''புளுகறார் ஸார்! என்கிட்டே தீர்மானமாச் சொன்னாரே, பிரமீளா தம்முடைய மகள்தான் என்று!''

''சொல்லி யிருக்கலாம். இதுவும் ஒரு வகை ஸைக்கோ கேஸில் சேர்ந்ததுங்க. பிரமீளா ஒரு பெரிய ஸ்டார். அவளை க்ளாமர் சூழ்ந்துக்கிட்டிருக்கு. அவளோடு தனக்கு ரத்த சம்பந்தமே உண்டுன்னு சொல்லிக்கிடறதிலே ஓர் அசட்டு ஆசை, திருப்தி. நீங்க என்ன பிரமீளா கிட்டப் போய் விசாரிக்கவா போறீங்க, திருச்சேறைதான் உன் அப்பா வான்னு? அந்தத் தைரியத்திலேதான் 'விட்டு' அடிச் சிருக்கார்.''

''அப்படியானா அவர் என்கிட்டே தான் புளுகியிருக்கார் என்கிறேளா? எதுக்கு ஸார் அப்படிப் பொய் சொல்லணும்?''

''அதுதான் சொன்னேனே. மனோதத்துவ ரீதியிலே அதுவும் ஒரு வியாதிதான். பொய் சொல்வதே காரியம் சில பேருங்களுக்கு. தன்னைப் பற்றி நாலு பேர் உயர்வா எண்ணணும் என்கிற ஆசை. இது தாழ்வு மனப்பான்மையின் விளைவாக எழலாம். 'நேருஜி என்னோட இந்தக் கரத்தை இரண்டு கைகளாலேயும் சேர்த்துப் புடிச்சுக்கிட்டுக் குலுக்கினார்' என்பான். 'அண்ணாதுரை முதுகிலே தட்டிக் கொடுத்துப் பாராட்டினார்' என்பான். இல்லாத போனால் 'வைஜயந்திமாலாவை அவள் சின்னப் பாப்பாவா இருக்கிற போதிலிருந்தே தெரியும்; நான் போனால் 'வாங் கண்ணா'ன்னு சொல்லி டிபன் காப்பி கொடுக்கும்'

என்பான். இதுமாதிரி எத்தனையோ பேர்களை நான் பார்த்துட்டேன். திருச்சேறை உங்களிடம் சொன்னதைக் கேட்டுட்டு, 'அடேயப்பா இந்த ஆளு சின்ன வயசிலே இத்தனை விளையாட்டு விளையாடி யிருக்கிறாரா?' என்று நீங்க பிரமிச்சீங்களா இல்லையா? கொஞ்சம் பொறாமை கூட ஏற்பட்டிருக்குமே?"

"வாஸ்தவம்தான்" என்று கொஞ்சம் வெட்கத்தோடு ஒப்புக்கொண்டார் பத்மநாபன்.

"அந்த உணர்ச்சிகளை உங்களிடம் ஏற்படுத்தியதில் அவருக்கு ஓர் ஆனந்தம், சுகானுபவம் உண்டாகிறது. அவ்வளவுதான். நல்ல ஆரோக்கியமான மனதுள்ளவர்கள் இப்படி நடந்து கொள்ள மாட்டார்கள்."

பத்மநாபன் தலையாட்டினார். "வெறும் சவடால் பேர்வழின்னு சொல்றேள். கனகத்தைத் தாம் இதற்கு முன் பார்த்ததே இல்லை என்று அவர் சாதிப்பதை நீங்க நம்பறதாகவும் தெரியறது. நான் நெனச்சது என்னன்னா, பிரமீளாவிடம் குவிஞ்சுகிடக்கிற பணத்தைத் தகப்பனார் என்ற உரிமை கொண்டாடி அடையலாம் என்று திட்டம் போட்டு திருச்சேறை பஞ்சாபகேசன் அவர்களை நெருங்கி இருப்பார். அப்போ வாக்குவாதம் முற்றி கனகத்தின் மரணத்துக்கும் இவரே காரணமாகி யிருப்பார்ன்னு."

"அந்த மனுஷனாலே ஓர் எறும்புக்குக் கூடத் தீங்கு இழைக்க முடியாது, பத்மநாபன்! அனுபவபூர்வமா நான் பேசறேன். மனித மனங்களைப் படித்துப் படித்துப் பழக்கப் பட்டவன் நான்."

"அப்படியானா கனகத்தின் துர் மரணத்துக்குக் காரணம்தான் என்ன?"

"அதைக் கண்டுபிடிக்கத்தான் முயற்சி செய்துக்கிட்டிருக்கேன். நீங்க சொல்லுங்க, பிரமீளாவிடம் கனகம் ரொம்பக் கடுமையா நடந்துக்கிட்டாளா?"

"கடுமை என்கிற வார்த்தை போதாதே, அவள் சுபாவத்தை வர்ணிக்க" என்றார் பத்மநாபன். "இரண்டு வார்த்தை மகள் பேசு முன் தாயார்க்காரி, 'போகலாம் கிளம்பு, உம், புறப்படு'ன்னு எட்டுத் தடவை விரட்டுவாள். புதிய மனிதர்களை மகள் சந்திப்பதையே அவள் விரும்பவில்லைபோல் தோன்றியது. யாராவது நெருங்கிப் பழகி, இவளிடம் கொட்டிக் கிடக்கும் பணத்தை அடிச்சுண்டு போயிடப் போறாளேன்னு பயமா இருந்துதோ என்னவோ? மீனாதான் அவளுக்குப் பெயர் வைத்தாள் 'கடுவன் பூனை' என்று. அப்போ நான் அவளைக் கோவிச்சுண்டேன்; ஆனால் மீனா வைச்ச பெயர் பொருத்தமானதுதான். சந்தேகமில்லை."

"ம்ம்ம்..." என்று ஏதோ யோசனையில் ஆழ்ந்தார் நடராஜன்.

சற்று நேரம் காத்திருந்த பத்மநாபன் அவர் வாய் திறவாமல் இருக்கவே, பொறுமை இழந்தவராக, "நீங்க ஹில்டன் ஹோட்டலில் பிரமீளாவின் அறைக்குப் போயிருந்தேள் போலிருக்கே; சோதனை போட்டதில் ஏதாவது தடயம் அகப்பட்டதா?" என்று கேட்டார்.

"பத்மநாபன்! நீங்க டிராமடிக்கா நான் ஏதாவது சொல்லணும்னு எதிர்பார்க்கறீங்க, இல்லையா? கேட்டுக்குங்க, ஒரு துப்பாக்கி அகப்பட்டது."

"ஆ! துப்பாக்கி! கைத் துப்பாக்கி தானே? யாருடையது? ஒளித்து வைக்கப்பட்டிருந்ததா? எப்படி அதைக் கண்டு பிடிச்சேள்? விரல் ரேகை அடையாளம் அழியாமல் கர்ச்சீப்பை அதன்மேல் போட்டுத்தானே தூக்கினேள்?

முன்புறம் துவாரத்தில் பென்சிலை நுழைத்துக்கூட எடுக்கலாம்...''

நடராஜன் சிரித்தார். ''நிறைய டிடெக்டிவ் 'ஃபிக்ஷன்' படிப்பீங்க போல் இருக்கு. உங்களுக்கு ரொம்ப ஏமாற்ற மாய்த்தான் இருக்கும். இந்தத் துப்பாக்கி பயன்படுத்தப் படவே யில்லை. ஒரு தோட்டாக்கூட வெடிக்கப்படாமல் புது மெருகு குலையாமல் அப்படியே இருந்தது.''

காற்றுப் போன பலூன் மாதிரி தொய்ந்தார் பத்மநாபன். ''என்ன ஸார் நீங்க! ஆர்வத்தை நெருப்பாக் கிளறி விடறேள், கூடவே தண்ணீரைக் கொட்டி அணைக் கிறேள்.''

''அந்தத் துப்பாக்கி கனகத்துடையது'' என்றார் நடராஜன். ''அவள் பெட்டிக்கடியில் கிடந்தது. லைசென்ஸ் கனகத்தின் பெயரில்தான் வாங்கப்பட்டிருந்தது. வீட்டில் குவிந்து கிடக்கும் செல்வம் கொள்ளை போய் விடுமோ என்கிற பயத்தில் கனகம் ஒரு துப்பாக்கி லைசென்ஸ் வாங்கி வைச்சிருந்தாள் போலத் தோணுது. அவள் இறந்து விட்டதால் இனி லைசென்ஸ் பிரமீளா பேரில் மாறினால் ஒழிய அது அங்கே இருக்கக் கூடாதுன்னு முடிவு செய்து பறிமுதல் பண்ணிக்கிட்டு வந்துட்டேன்.''

''சரி சரி, அந்த வெடிக்காத துப்பாக்கி பற்றி யாருக்கு என்ன கவலை இப்போ? கனகம் கொலை செய்யப்பட் டாளா? யார் செய்தது? ஊரில் எல்லோரும் சொல்வதுபோல் ஸைக்கோ ஸாரநாதன்தான் செய்தானா அந்தக் காரியத்தை? இந்தக் கேள்விகளுக்குப் பதில் சொல்லுங்க.''

''பதில் தெரிஞ்சால் நான் இப்போ உங்களோடு பேரீஜம் வந்துக்கிட்டிருப்பேனா? குற்றவாளியைப் பிடிச்சு லாக் அப்பிலே போடுகிற காரியத்தில் ஈடுபட்டிருக்க மாட்டேனா? 'இந்த டி.ஐ.ஜி ஒரு இடியர்ட்டுன்னு நாலு

*பேர் சொல்றதைக் கேட்டுக்கிட்டிருக்கணும்னு என் தலையிலே எழுதியிருக்கான், பிரும்மா!"*

**ப**த்மநாபனுக்குப் பரிதாபமாக இருந்தது. "ஏன் ஸார்! நிஜமாகவே ஒரு சாட்சியம்கூட அகப்படவில்லை என்றா சொல்றேள்?" என்று கேட்டார் மிகுந்த பரிவுடன்.

"அகப்படாமே என்ன, பத்மநாபன்? நீங்கள் ரொம்ப உசத்தியான பத்திரிகை நடத்தறதாச் சொல்லிக்கறீங்களே; அதனாலே நான் கூறுவது உங்களுக்குப் பிடிக்குமோ என்னமோன்னு தயங்கிக்கிட்டிருக்கேன்."

"அது என்ன அவ்வளவு யோசிக்க வேண்டிய விஷயம்?"

"மஞ்சள் பத்திரிகையின் மகிமை!"

"என்னது? என்னது?"

"ஆமாம் ஸார்! மஞ்சள் பத்திரிகைகள் ஊரைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குகின்றன என்று நீங்க நினைக்கிறீங்க. ஆனால் அதனாலே போலீஸ் இலாக்காவுக்கு நன்மையும் சில சமயங்களில் ஏற்படுவதுண்டு. உதாரணமா இந்தப் பிரமீளாவை எடுத்துக்குங்க. இவளைப் பார்த்திபன் என்கிற ஒருவனோடு சம்பந்தப்படுத்தி ஒரே ஆபாசமாக எழுதியிருந்தது, 'சிவப்பு விளக்கு' என்கிற பத்திரிகை. அதனாலே பார்த்திபன் இவள் வீட்டுக்கு அடிக்கடி வந்து போய்க்கிட்டிருந்தான் என்பது எனக்கு ஞாபகம் வந்தது."

"ஐய்யய்யே! நீங்க அந்த மாதிரிப் பத்திரிகைகளெல்லாம் படிப்பேளா ஸார்?"

"என்ன செய்ய? நாங்க-போலீஸ் அதிகாரிங்க-பல பேருக்குத் தண்டனை வாங்கித் தரோமில்லையா? அதுக்குப் பதிலா எங்களுக்கு இந்த மாதிரி தண்டனைகள் சில விதிக்கப்பட்டிருக்கு!"

"சரி, சிவப்பு விளக்குத் தந்த தகவலின் அடிப்படையில் நீங்க என்ன செய்தேள்?"

"பிரமீளா ஹாப்பி ஹாலிடேயில், என் அறைக்கு வந்துட்டுப் போனதுமே மெட்ராஸுக்கு ஃபோன் போட்டு அந்தப் பார்த்திபன் பற்றிய விவரம் தெரிந்து கொள்ளச் சொன்னேன். ஸ்டூடியோ வட்டாரங்களில் என்னோட ஆட்கள் விசாரிச்சிருக்காங்க. காமிரா மேன் சேகர் என்பவன்தான் அவனைப் பிரமீளாவுக்கு அறிமுகப்படுத்தினானாம். சேகர்கிட்டே யிருந்து பார்த்திபனின் விலாசம் கிடைச்சுது. அங்கே போயிருக்கான் நம்ம ஆள். பார்த்திபன் வீட்டில் இல்லை. லீவில் உல்லாசப் பயணம் போவதாகச் சொல்லிட்டுக் கிளம்பினானாம். எங்கேன்னு சொல்லலியாம். வீட்டிலே இருந்தவங்க இப்படிக் கையை விரிச்சுடவே இரண்டு ஸி.ஐ.டி.ங்க மாறி மாறி டியூட்டி போட்டுக் கிட்டு வீட்டைக் கண்காணிச்சிருக்காங்க. இங்கே பிரமீளா தன் அம்மாவைக் காணோம்னு அழுதாளே, அதுக்கு மறுநாள் பார்த்திபன் டாக்ஸியில் தன் வீட்டு வாசலில் வந்து இறங்கியிருக்கான்..."

"ஸி.ஐ.டி. அவனை உடனே வளைச்சுக் காப்பு மாட்டிட்டார் இல்லையா?"

"உங்க அவசரத்துக்கு ஏற்பப் போலீஸ் இலாகா செயல்பட முடியாது ஸார்! இங்கே எதற்கும் 'ப்ரொஸீஜர்' உண்டு" என்று கூறிச் சிரித்தார் நடராஜன்.

"சரி சரி, மேலே சொல்லுங்கள். ஸி.ஐ.டி. விசாரித்திருப்பாரே? என்ன பதில் கிடைத்ததாம்?"

"தான் பங்களூரிலிருந்து வருவதாகக் கூறினானாம். 'அங்கே எந்த ஹோட்டலில் தங்கியிருந்தாய்?' என்று கேட்டதற்குப் 'பெயர் ஞாபகம் இல்லை, ஏதோ ரொம்பச் சின்ன ஹோட்டல், நான் என்ன உட்லண்ட்ஸிலோ

அசோகாவிலோ போய்த் தங்க முடியுமா என்ன?' என்று திருப்பிக் கேட்டானாம்.

" 'உன்னை அங்கே யாராவது அடையாளம் கண்டு கொள்வார்களா?' என்று கேட்டதற்கு, 'போய்ப் பார்த்த தால்தான் தெரியும்' என்றானாம். இப்படி இவன் கிருதக் காகப் பேசவே ஸி.ஐ.டி. திரும்பிவிட்டான். இவன் வந்து இறங்கிய டாக்ஸி நம்பரை ஸி.ஐ.டி. ஏற்கெனவே குறிச்சுக் கிட்டிருக்கான். அதைக் கொண்டு டிரைவரைக் கண்டு பிடிச்சு விசாரிச்சிருக்காங்க. 'இந்தக் கிராக்கியைக் காலமே எக்மோரில் பிடிச்சேன்' என்று டாக்சி டிரைவர் சொன்னா னாம். அவன் கிட்டே யிருந்து வாக்குமூலம் எழுதி வாங்கிக் கிட்டாங்க. பங்களூரிலிருந்து வருகிறவன் எழும்பூரில் எப்படி ரயிலில் வந்து இறங்குவான்?"

"வகையா மாட்டிண்டான்னு சொல்லுங்கோ!"

"டன்னுமில்லை டான்னுமில்லை" என்று கேலியாகப் பேசினார் நடராஜன். "இந்த மாதிரி அற்ப சாட்சியங்களை வைச்சுக்கிட்டுக் கொலை குற்றத்தை நிரூபிக்க முடியுமா? காமிராமேன் சேகரிடம் பார்த்திபனின் புகைப்படம் ஏதாவது கிடைக்குமான்னு பார்க்கச் சொல்லி யிருந்தேன். ஒண்ணு அகப்பட்டது. ஸெட்டுக்கு ஸ்டில் ஃபோட்டோ கிராபர் வந்திருந்தபோது மூணு பேரும் சேர்ந்து எடுத்துக் கிட்ட படம். ஆளுக்கு ஒரு பிரிண்ட் கொடுத்தாராம் ஃபோட்டோகிராபர். நடுவே பிரமீளாவும் அவளுக்கு இரண்டு பக்கத்திலும் சேகரும் பார்த்திபனும் நிக்கறாங்க. அந்தப் படத்தை இங்கே அனுப்பிவைக்கச் சொல்லி யிருக்கேன். அதில் பார்த்திபனைச் சுட்டிக் காட்டி இங்குள்ள ஹோட்டல்களில் விசாரிச்சுப் பார்க்கணும், தங்கியிருந்தானான்னு. ஏன், ஹோட்டல் ஹில்டனிலே கூட அவன் தங்கி யிருந்திருக்கலாம். தன் காதலியைக் கள்ளத் தனமாகச் சந்திக்க வசதியாத்தான் இருந்திருக்கும். வேறு

பெயரும் விலாசமும் தந்திருக்கலாம். ரிஜிஸ்டரில் அவன் பெயர் இல்லை. பார்த்துவிட்டேன்.''

''அது மட்டும் நிரூபணமாகிவிட்டால்...?''

''சந்தேகத்தின் பேரில் அவனை லாக் அப்பில் போடலாம். அப்போ கூட கேஸ் இல்லை. காதலனும் காதலியும் ஒரே ஹோட்டலில் தங்கி யிருந்தாங்க; கள்ளத்தனமாகச் சந்திச்சாங்க; பிரமீளாவின் தாயாருக்குப் பார்த்திபனைப் பிடிக்காது என்பது தவிர வேறு என்ன அழுத்தமான சாட்சியம் இருக்கு? இவன் அவளைக் கொன்றான் என்று நிரூபிக்கச் சாட்சியங்களை இனிமேல்தான் சேகரிக்கணும்.''

''அல்லது உருவாக்கணும்'' என்றான் அமிர்தலிங்கம்.

''ஓ! நீங்களும் கேட்டுக்கிட்டுத்தான் இருக்கீங்களா?'' என்றார் நடராஜன். ''நீங்க அந்த ஜபமாலையைச் சுழற்றுகிற வேகத்தைப் பார்த்து 'கௌ பாய்' ஆவதற்கு ஒத்திகை நடத்திக்கிட்டிருக் கீங்களோன்னு நினைச்சேன்!''

''நீங்க கோர்ட்டுக்குக் கேஸைக் கொண்டு போகும் போது நடத்திப் பார்க்கிற ஒத்திகையை விடவா?''

''தேவலாமே, கோர்ட், கேஸ், எல்லாத்திலேயும் அடிபட்டு அனுபவப்பட்டவர்போல் பேசறீங்களே'' என்றார் நடராஜன். அமிர்தலிங்கத்தின் முகம் கடுகாய்ச் சிறுப்பது கண்டு மகிழ்ந்தவராகத் தொடர்ந்தார்: ''ஒண்ணு மட்டும் புரிஞ்சுக்குங்க ஸார்! நீங்க சொல்ற மாதிரி கேஸ் ஜோடிப்பது சுலபம்தான். ஆனால் ஜோடிக்கப்பட்ட கேஸைக் கோர்ட்டிலே நிலைநாட்டுவது ரொம்பக் கஷ்டம். சுமாரான சாமர்த்தியமே உள்ள வக்கீல்கூட ஜோடிக்கப்பட்ட கேஸை சுக்கு நூறாக்கி விடுவார். அதனாலே பெரும்பாலும் நான் ஈடுபடுகிற வழக்குகளிலே எவ்வளவு தாமதமானாலும் பரவாயில்லை என்று உண்மைக் குற்றவாளியையே கண்டுபிடிச்சு விடறதுதான் வழக்கம்.''

''தாமதமானால் பரவாயில்லைன்னு நீங்க சொல்றீங்க. ஆனால் அதனால் எத்தனை குழப்பம் பாருங்க. ஸைக்கோ ஸாரநாதன்தான் இந்தக் காரியங்களைப் பண்ணிக்கிட்டிருக் கான்னு ஊரிலே எல்லாரும் பீதியடைஞ்சு நடுங்கிக்கிட் டிருக்காங்க.''

''அதுக்கு நான் என்ன செய்ய?'' என்றார் டி.ஐ.ஜி. ''ஸைக்கோ ஸாரநாதன் என்ற பெயருக்கு அத்தனை மகிமை!''

அமிர்தலிங்கம் அப்போது குனிந்தும் நிமிர்ந்து அட்ட காசமாகச் சிரித்ததானது தம்மைக் கிண்டல் செய்யத்தான் என்று வைத்துக் கொண்டாலும்கூட அதிகமாத்தான்பட்டது டி.ஐ.ஜி. நடராஜனுக்கு.

★ ★ ★

கனகத்தின் மரணம் பற்றிப் பேசிக்கொண்டே வந்த பத்மநாபனும் நடராஜனும் அவர்கள் பேச்சைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருந்த அமிர்தலிங்கமும் பஸ் செல்லும் சாலை எத்தனை மனோரம்மியமான இயற்கை எழிலி னூடே அமைக்கப் பட்டிருக்கிறது என்பதைக் கவனிக்கவே யில்லை. ஆனால் மற்றவர்கள் நன்றாகப் பார்த்ததுடன் ஒருவருக்கொருவர் சுட்டிக் காட்டியும் மகிழ்ந்தார்கள்.

எனினும் ஆரம்பத்தில் இவ்வாறு இருக்கவில்லை. பில்லர் ராக்ஸைத் தாண்டி மேலே போனதும் கொஞ்ச தூரத்துக்கு இரண்டு பக்கங்களிலும் ஏக்கர் ஏக்கராகக் காடுகள். விறகு கரிக்காகவும் செயற்கை நூலிழை தயாரிக்கும் தொழிலகத் தில் இயந்திரங்களின் அசுரப் பசிக்குத் தீனியாகவும் அழிக்கப்படுவதைக் கண்டு கண்ணீர் விடாத குறையாக வருந்தினார்கள். மனிதன் தன் சுயநலனுக்காக வானளாவிக் கம்பீரமாய் நின்ற மரங்களைக் கொடூர சிந்தையுடன் வெட்டிச் சாய்த்துக் கொண்டிருந்தான்.

இந்தக் கோரக் காட்சியைக் கடந்து அப்பால் போனதும் மலையும் மடுவும் வானமும் மேகமும் நிழலும் ஒளியும் பாறைகளும் நீரோடைகளும் கானகமும் வன விலங்கு களும் சேர்ந்து உருவாக்கிய ஒரு மாயாஜால உலகுக்குள் பிரவேசித்தார்கள். ஒரு பக்கத்து அழகைப் பார்த்து முடிப்ப தற்குள் சாலையில் ஒரு புதுத் திருப்பம் ஏற்பட்டுப் புது மாதிரியான அழகு தென்பட்டது. 'மீனாவை நான் புதுப் புதுக் கோணங்களில் பார்க்கும்போது புதிது புதிதாக அழகுகள் பளிச்சிடுவது போல' என்று எண்ணிக் கொண்டான் ரங்கன். இந்த எண்ணம் தோன்றியதும் சற்றுத் தொலைவில், ஆனால் பார்வையில் நன்றாகப் படுகிற மாதிரியும் பேசுவது தெளிவாகக் கேட்கும் தூரத்திலும் அமர்ந்திருந்த மீனாவை நோக்கிப் புன்னகை செய்தான். அவள் தன் முகம் சிவப்பதையும் புன்முறுவல் கிளர்ந் தெழுவதையும் தடுத்து நிறுத்த முயன்று படுதோல்வி கண்டாள். இளம் காதலர்களை இன்ப லோகத்துக்கு 'வருக, வருக' என்று அழைத்த இயற்கை, வரவேற்பு வளைவுகளை அமைத்ததுபோல் அப்போது பஸ் சென்ற சாலையானது தோற்றம் அளித்தது. இரு புறமும் விதவிதமான மரங்கள் தழைத்துச் சாலையில் நிழல் பரப்பித் தண்ணென்றிருந்த சூழலை மேலும் குளுமையாக்கி யிருந்தன.

ரங்கன் தன் கையிலிருந்த சிறிய தோல் பையைத் தட்டிக் காட்டினான். அதனுள்ளே சிறிய செஸ் போர்டும் காய்களும் இருப்பது மீனாவுக்கு ஏற்கெனவே தெரியும். ஆதலால் சொன்னான்: "பேரீஜம்மில் பஸ் ஒரு மணி நேர மாவது குறைந்தபட்சம் தாமதிக்கும். செஸ் ஆடலாம்."

"ஏன் ஒரு தடவை தோற்றது போதாதா?" என்று கேட்டாள் மீனா குறும்பாக.

"நீ ஒன்றும் என்னைத் தோற்கடிக்க வில்லை" என்றான் ரங்கன். "உன் அழகுதான் என்னை ஏமாற்றிவிட்டது. உன்

முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தால் காய்களை ஒழுங்காக என்னால் எப்படி நகர்த்த முடியும்?''

''நான் வேணுமானால் புடைவைத் தலைப்பால் இப்படி முகத்தை மூடிக் கொண்டு ஆடுகிறேன்'' என்று கூறிய மீனா கண்களுக்குக் கீழே புடைவைத் தலைப்பைக் கொண்டு சென்று மறைத்துக் காட்டினாள்.

''ஐயோ! இது அதைவிட ஆபத்து! அப்போ ஆட்டத்தைத் தான் கவிழ்த்தது உன் அழகு. இந்தக் கோலத்தில் நீ ஆளையே கவிழ்த்து விடுவாய்! அரேபியன் நைட்ஸில் வருகிற ராஜகுமாரி மாதிரி கண்களின் அழகை மட்டும் எடுத்துக்காட்டுவதாக அல்லவா இருக்கிறது இந்தக் கோலம்! தொலைந்தேன் நான்!''

**த**லைப்பை நழுவ விட்டு விட்டுக் கலகலவென்று சிரித்தாள் மீனா. கண்களில் நீர் முத்துக்கள் தோன்றி, பஸ்ஸின் உள்ளே புகுந்த ஒரே ஒரு ஒளிக் கிரணத்தைக் கவர்ந்து ஈர்த்துக்கொண்டு தகதகத்தன; உதிரும் வைரங் களாகக் கன்னங்களில் உருண்டன. அடி உதட்டின் ஓர் ஓரத்தை அவள் உள்ளுக்கு இழுத்துக் கடித்துக் கொண்டு வேறு புறம் பார்த்தாள். குனிந்து புடைவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

'இந்தப் பெண் எதற்கு இப்போது கண்ணீர் வடிக்கிறாள்?'' என்று புரியாமல் கலங்கிப் போய்விட்டான் ரங்கன். 'ஒரு வேளை நான் அளவுக்கு மீறி உரக்கவே பேசி விட்டேனோ? அது அவள் அம்மா காதில் விழுந்து அப் புறமாக மகளைக் கோபித்துக் கொள்ளப் போகிறாளோ? அதை எதிர்பார்த்துப் பயந்துதான் இப்போதே இவள் அழுகிறாளோ?' இவ்வாறெல்லாம் எண்ணிய ரங்கநாதன் அம்புஜத்தைக் கடைக்கண்ணால் பார்த்தான்.

ஆனால் அம்புஜம் இவர்களைக் கவனித்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை. இவர்களுடைய மனநிலையைப் புரிந்து கொள்ளாமலும் இல்லை அவள். 'ரொம்பத்தான் அசடு வழிகிறாள் இந்தப் பெண்' என்று தன் மகளைப் பற்றி எண்ணிக் கொண்ட அவள், இது பற்றித் தன் கணவரிடம் தான் பேச வேண்டுமே ஒழிய, இவர்களிடம் வாக்குவாதம் வளர்க்கக் கூடாது என்று கருதியவளாகப் பேசாதிருந்தாள். முதல் நாளிரவு தான், தன் கணவருடன் பேசிக் கொண் டிருந்ததை மீனாவும் தூங்குவதுபோல் பாசாங்கு செய்த படியே கேட்டுக் கொண்டிருந்திருக்க வேண்டும். அதனால் தான் இப்போது கண்ணீர் சிந்துகிறாள் என்று ஊகித்தாள் அம்புஜம். 'அப்போது நான் எழுப்பிய ஆட்சேபணைகளுக்கு மேலும் வலுவு கொடுத்து இன்றிரவு மீண்டும் அவரிடம் வாதாட வேண்டும்' என்று உறுதிப்படுத்திக் கொண்டாள். 'எவ்வளவுக் கெவ்வளவு சீக்கிரம் கொடைக்கானலிலிருந்து கிளம்புகிறோமோ அவ்வளவுக்கு நல்லது.' அடாத கொலைகள் ஒரு புறம், தகாத காதல் மறுபுறம்-இவ்விரண் டிலிருந்தும் தன் குடும்பம் தப்பித்துக் கரை சேரவேண்டுமே என்று அம்புஜத்தின் மனம் கவலையில் ஆழ்ந்தது.

★ ★ ★

# 23. அழகு மயமான சத்தியம்

நாலாபுறமும் மலைகள் சூழ்ந்திருக்க இடையில் அமைந்திருந்த பேரீஜம் ஏரி, மெய்யாகவே கண்கொள்ளாக் காட்சிதான்! அத்தனை பெரிது! பெரிய குளம் என்கிற ஊருக்கு இங்கிருந்துதான் தண்ணீர் போகிறது என்று பேசிக் கொண்டனர். விஸ்தீரணத்தில் வென்றாலும் எழிலில் கொடைக்கானல் ஏரியிடம் தோற்றுத்தான் போய்விட்டது. ஓர் 'ஆக்டோபஸ்' தன் கரங்களை விரித்தாற்போல் கொடைக்கானல் ஏரி பல திசைகளில் நிலத்தை ஊடுருவி, அதைச் சுற்றி அமைந்திருந்த பாதையிலும் அத்தனை வளைவுகளை உண்டாக்கி இருந்தது. பேரீஜம் ஏரி குழந்தை வரைந்த வட்டம் போல் சற்றுக் கோணல் மாணலாக இருந்ததுடன் சரி. ஆகவே, மொட்டையாகத்தான் இருந்தது. கொடைக்கானல் ஏரியைச் சுற்றிலும் நாலுபுறங் களிலும் நெடிதுயர்ந்த மரங்கள் வானை அளாவி ஒரு கம்பீரச் சூழலை உருவாக்கின. பேரீஜம் ஏரியைச் சுற்றிலும் புதர்களும் குட்டையான மரங்களும்தான் அதிகமாய் மண்டிக் கிடந்தன. வெறிச் சென்றுதான் தோன்றியது.

பஸ்ஸில் வந்தவர்கள் தனித்தனிக் கூட்டமாக இருவ ராகவும் மூவராகவும் பிரிந்து சென்றனர். சிலர் காலார ஏறிக் கரையோடு நடந்தார்கள். சிலர் நீரை ஒரு விரலால் துழாவக் கூடிய தொலைவில் துண்டை விரித்துப் போட்டு உட்கார்ந்தார்கள்.

அம்புஜம் பையிலிருந்து பெரிய ஃப்ளாஸ்கையும், பிஸ்கட் பெட்டியையும் எடுத்து ஒரு பாறையின்மேல் வைத்தாள். கழுகாக வந்து பிஸ்கட் டப்பாவைக் கொத்தினான் விசு. ''டேய்! எல்லாருக்கும் கொடுக்கணும்டா'' என்றாள் அம்புஜம். ''பெட்டியோடு நீட்டு, அவாளாவே எடுத்துப்பா.''

சற்றுத் தள்ளிப் பத்மநாபன், ரங்கநாதன், நடராஜன், அமிர்தலிங்கம் ஆகியோர் அமர்ந்திருந்தனர். அவர்களிடம் பிஸ்கட் டப்பாவை நீட்டினான் விசு. ஒவ்வொருவர் கரமும் உள்ளே நுழைந்ததும் ஞாபகமாக, ''கொஞ்சமா எடுத்துக்கணும்'' என்று எச்சரிக்கை விடுத்தான்.

''அவனுக்கு அவன் அம்மா சொல்வதை அப்படியே நமக்குத் திருப்பிப் படித்து விடுகிறான்!'' என்றார் பத்மநாபன் சிரித்துக்கொண்டே.

'' 'பெரிய பெரிய கைகளாக உள்ளே நுழைந்து அள்ளினால் தனக்கு என்ன மிஞ்சும்?' என்ற நியாயமான கவலை இருக்கத்தானே செய்யும்?'' என்றார் நடராஜன்.

பாலாடைக் கட்டியைச் சேர்த்துச் செய்த சீஸ்லிங் பிஸ் கட்டுகள் சின்னச் சின்னதாக ரொம்ப ருசியாக இருந்தன.

''காக்டெய்ல் பார்ட்டியின் போது உடைக்கப்பட வேண்டிய டப்பா இது'' என்றான் அமிர்தலிங்கம், பிஸ்கட் பெட்டியின் மேல் இருந்த படத்தை பார்த்து விட்டு. ''இந்தக் குளிருக்கு இதமாக இருக்கும். புரொஹிபிஷன் இப்போ இல்லாததால் டி.ஐ.ஜி.யை வைத்துக் கொண்டே தைரியமாக இதைச் சொல்லலாம்!''

''காப்பியோடு சேர்த்துக் கொரிக்கவும் ரொம்ப நன்றாக இருக்கும்'' என்றார் பத்மநாபன். சுடச் சுடக் காப்பி வழங்கினாள் அம்புஜம். டம்ளர்கள் இரண்டுதான் இருந்தன. ஏரி நீரில் சுத்தமாய்க் கழுவிவிட்டு மாறி மாறிச் சாப்பிட்

டார்கள். பத்மநாபன் தொடர்ந்து பேசினார்: "இந்தக் குளிருக்குக் காப்பி மட்டும் இதமா இல்லையா என்ன? எனக்கு யோகாசனம் கற்றுக் கொடுத்த குரு சொன்னார். "காப்பிப் பழக்கத்தை விட்டுடு, நூறு வயசு இருப் பாய்'ன்னு. நான் பதில் சொன்னேன்: 'காப்பி சாப்பிட் டுண்டு எண்பது பிராயம் வாழ்ந்தால் போமே'ன்னு."

சிரிப்புக்கிடையில் அமிர்தலிங்கம் கேட்டான்: "ஆயுசு என்றைக்கு முடியும்ன்னு யாருக்குத் தெரியுது? அதுவும் ஸாரநாதன் கொடைக்கானலில் இன்னும் சுதந்திரமாய்த் தானே திரிகிறான். எல்லாருமே இன்றோ நாளையோன்னு யோசனை பண்ணிக்கிட்டுத்தானே உட்கார்ந்திருக்கோம்?"

"இருந்தாலும் அப்படி ஒரு மனுஷன் இருப்பது ஆச்சரியம்தான்" என்றார் பத்மநாபன். "நாற்பத்திரண் டோடு மூன்றைக் கூட்டினால் நாற்பத்தைந்தாச்சு. இத்தனை கொலைகளைப் புரிந்துவிட்டு இன்னமும் வெறி அடங் காமல் ஒரு மனுஷனா? நான் ஒரு தடவை தெரியாத்தனமா டிராகுலா சினிமா பார்த்துட்டேன். அப்புறம் நாலு நாட்கள் தூக்கமே வரலே!"

அமிர்தலிங்கம் கிசுகிசு மூட்டியதுபோல் சிரித்தான்.

**அ**ம்புஜம் ஃப்ளாஸ்க்கைக் கழுவி வைத்து விட்டு விசுவை மடியில் போட்டுக் கொண்டாள். தூக்கம் கண்ணைச் சுழற்றியது அவனுக்கு. இமைகளை மூடுவதும் திறப்பதுமாய் இருந்தான். தூங்கி விட்டால் விஷமம் பண்ணவோ விளையாடவோ முடியாதே என்ற கவலை அவனுக்கு. தூங்குகிற அந்த நேரமெல்லாம் வீணாகிப் போவதாகக் கருதுவான். அனசூயா ஏரிக் கரையோடு மீன் களையும் பட்டாம் பூச்சிகளையும் பார்த்துக் கொண்டே நடந்தாள். "ஜலத்திலே இறங்கப்படாது. காலை முறிச்சுடு

வேன்'' என்று அவளை நோக்கி ஓர் அதட்டல் போட்டு வைத்தாள் அம்புஜம்.

பத்மநாபனின் கேள்விக்கு டி.ஐ.ஜி. நடராஜன் பதில் சொல்ல ஆரம்பித்தார். ''டிராகுலா படத்தைப் பார்த்துக் கஷ்டப்படுவதற்குப் பதிலாக டோனி கர்டிஸ் ஸைக்கோ வாக நடித்த படத்தைப் பார்த்திருக்கலாமே?'' என்றார் அவர். ''படத்தின் பெயர் மறந்து விட்டது. தவிர்க்க முடியாத ஓர் உந்துதலால் பல கொலைகளைச் செய்கிறான் அந்த ஸைக்கோ. அந்த உத்வேகம் ஏற்படுகின்ற சமயங் களுக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் ரொம்ப அன்பான கணவனாகவும் பாசமுள்ள தகப்பனாகவும் நடந்து கொள்கிறான். பொறுப்புடன் வேலை செய்து சம்பாதித்துக் குடும்பத்தை நடத்துகிறான். கடைசியில் பிடிபட்டு மனோதத்துவ நிபுணர்களிடம் ஒப்படைக்கப்படுகிறான். அவன் பேரில் நமக்கு அனுதாபமே பெருகுமளவுக்கு அத்தனை அழகாக நடித்திருந்தான் டோனி கர்டிஸ். உண்மைக் கதையாம் அது!''

''அவ்வளவு தூரம் போவானேன், அப்பா? பம்பாயி லேயே ராமன் ராகவ் கேஸ் அமர்க்களப்படவில்லையா இரண்டு வருஷங்களுக்கு முன்?'' என்றான் ரங்கன். இப்படிச் சொல்லிக் கொண்டே அவன் எழுந்தான். இடுப்பில் பேண்டைச் சரி செய்துகொண்டு அவன் மெல்ல நழுவி நடந்தான். சற்று முன்னால் மீனா தனிமையை நாடிச் சென்றதை அவன் கண்கள் கவனித்து விட்டிருந்தன. பஸ்ஸில் அவள் கண்ணீர் உகுத்ததன் காரணத்தைப் புரிந்து கொள்ள வேண்டும் என்று பரிவும் கனிவுமாக அவன் அவளைப் பின்தொடர்ந்தான். டிரான்ஸிஸ்டர் ரேடியோ வின் பாட்டொலி அவள் இருக்கும் இடத்தை அவனுக்குக் காட்டிக் கொடுத்தது.

இங்கே பேச்சுத் தொடர்ந்தது: ''சமீபத்தில்கூட நான் 'டைம்' பத்திரிகையில் ஒரு கட்டுரை படித்தேன்'' என்றார் நடராஜன். ''கலிபோர்னியா மாநிலத்தில் ஒரு நகரத்தில் கரோனா என்கிறவனை இருபத்தி ஐந்து கொலைகள் புரிந்ததற்காகப் பிடித்திருக்கிறார்கள். ஆனால் ஒருவிதத்தில் இவன் ரொம்ப 'டீஸண்ட்' பேர்வழி. பிரேதங்களை அப்படி அப்படியே போட்டுவிடுவதில்லை. தன்னால் கொல்லப் பட்ட ஒவ்வொருவரையும் ஆழக் குழிதோண்டிப் புதைத்து விட்டுத்தான் வருவான்! கல்யாணமாகி நாலு குழந்தைகள் அவனுக்கு. சுற்று வட்டாரத்தில் ரொம்பக் கௌரவமான மனிதன் என்று கருதப்பட்டவன். வயல்களில் வேலை செய்ய 'காண்ட்ராக்ட்' எடுத்து ஆட்களைத் திரட்டி வருவது அவன் தொழில். தவறாமல் சர்ச்சுக்குப் போகும் ரோமன் கத்தோலிக். இவன் மீது சுமத்தப்பட்ட குற்றங் களைக் கேட்டபோது இவன் மனைவி பிரமித்துவிட் டாளாம். 'எத்தனை பிரியமாக என்னிடமும் குழந்தை களிடமும் நடந்துகொள்வார்? அவரா இப்படி?...' என்று ஆச்சரியப்பட்டாளாம். ஆனால் அப்படிப் பட்டவன்தான் தான் இனி கொல்லப் போகிறவர்களுக்காக முன் கூட்டியே இரண்டு சவக்குழிகளைத் தயாரித்து வைத்திருந்தான்!''

''எனக்கு இன்னொரு நிகழ்ச்சிகூட நினைவுக்கு வருகிறது. அமெரிக்காவில் ஒரு பல்கலைக் கழகத்தின் மணிக்கூண்டின் மேல் ஏறி அங்கிருந்துகொண்டு வருவோர் போவோரை யெல்லாம் ஒரு காரணமுமின்றி டெலஸ் கோப் பொருத்தப் பட்ட துப்பாக்கியால் குறி பார்த்துச் சுட்டுத் தள்ளினானே, சார்லஸ் விட்மன்'' என்றார் பத்மநாபன்.

''ஏன், நர்ஸ்களுக்கான ஹாஸ்டலில் புகுந்து ஒரே இரவில் ஏழெட்டு நர்ஸ்களைக் கழுத்தை நெரித்துக் கொன்று போட்டானே ரிச்சர்ட் ஸ்பெக், ஞாபகமிருக்கிற தல்லவா? அதுவும் அமெரிக்காவில் நிகழ்ந்த கோரம்தான்!''

''போதும் ஸார்! போதும்!'' என்று கூறியபடி எழுந்தான் அமிர்தலிங்கம். ''ஸைக்கோ கேஸ்களை மாறி மாறி நீங்கள் சொல்வதைக் கேட்டால் எனக்கே பைத்தியம் பிடித்துவிடும் போலிருக்கிறது'' என்று கூறிவிட்டு அங்கிருந்து நகர்ந்தான்.

அவன் போனதும் நடராஜனுடன் தனித்து விடப்பட்ட பத்மநாபன், 'மீனா-ரங்கன் விவகாரத்தை இப்போது இவரிடம் பிரஸ்தாபித்தால் என்ன? என்று நினைத்தார். கூடவே, 'அம்புஜத்திடம் இன்னும் ஒரே ஒரு தடவை வாதாடிப் பார்த்து விடலாமே' என்றும் அவருக்குத் தோன்றியது. எனவே 'இவரிடம் அது பற்றிப் பேசுவதை இன்னும் ஒரு நாள் ஒத்திப் போடலாம்' என முடிவு செய்தார். 'பேசுங்கள் பேசுங்கள்' என்று அம்புஜம் ஜாடை காட்டியதையும் பொருட்படுத்தாமல் வாளா விருந்தார்.

★ ★ ★

இப்பால் சாலையை யொட்டினாற் போல் நிழல் படர்ந்திருந்த இடத்தில் வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்த ஒரு மரக் கிளை மேல் சோகச் சாயல் முகத்தில் இழையோட அமர்ந்திருந்தாள் மீனா. அந்த மரக் கிளையைப் போலவே அவள் காதலையும் வெட்டிச் சாய்க்கப் போகிறார்கள். காதலின் தலையில் கோடாலியைப் போடும் வேலையை இன்னும் இருபத்துநாலு மணி நேரத்துக்குப் பத்மநாபன் ஒத்திப் போட்டிருப்பதை அவள் அறியவில்லை. அதன் மரண ஓலத்தைக் கேட்க வேண்டிய தருணம் மிக நெருங்கி வந்து கொண்டிருப்பதாய் எண்ணியபோது அவளால் அதைத் தாங்கிக் கொள்ளவே முடியவில்லை 'பாவி ஸைக்கோ ஸாரநாதன் யார் யார் உயிரையோ பறிக்கிறானே, என் உயிரைக் கொண்டு போகக் கூடாதா?' என்று மனம் குமுறினாள். 'தற்கொலை செய்து கொள்ளத் தான் துணிவில்லை என்றால் அவனுமா உதவிக்கு வராமலிருக்க வேண்டும்?'

பக்கத்தில் இருந்த டிரான்ஸிஸ்டர் "மேரே ஸப்னோங்கீ ராணீ கப் ஆயேகீதூ!" என்று பொருத்தமில்லாமல் ஒரே உற்சாகத்துடன் முழங்கிக் கொண்டிருந்தது.

"என்ன இப்படித் தனியாக...?" என்று கேட்டுக் கொண்டே அங்கு வந்தான் ரங்கன்.

பெற்றோரின் பார்வையிலிருந்து மறைந்தும் ஆனால் கூப்பிடு தூரத்திலும் அவர்கள் இருந்தார்கள். டிரான்ஸிஸ்டர் ஒலி அவர்கள் பேச்சைப் பிறர் கேட்கவொட்டாமல் செய்ததன் மூலம் மனம் விட்டு உரையாட உதவிக்கொண்டிருந்தது.

"இனி வாழ்நாள் முழுவதும் தனியாக இருக்க வேண்டிய வள்தானே? ஒத்திகை பார்த்துக்கறேன்" என்றாள் மீனா.

'திக்'கென்றது ரங்கனுக்கு. "என்ன இப்படிப் பேசுகிறாய் மீனா? என்ன வந்துவிட்டது உனக்குத் திடீரென்று?"

"திடீரென்றுதான் விழுந்துவிட்டது, இடி விழுந்து விட்டது" என்று சொல்லி அடக்க மாட்டாமல் அழுது விட்டாள்.

"எப்பேர்ப்பட்ட இடியானாலும் நான் தாங்கிக் கொள் கிறேன் மீனா. நீ கவலைப்படாதே! பிளீஸ்! அழுகையை நிறுத்த மாட்டாயா? உம்?" என்று கேட்டபடி ரங்கன் தன் கரத்தை நீட்டி மென்மையான விரல்களை மெல்லப் பற்றி அகற்ற முயன்றான்.

"என்னைத் தொடாதீர்கள், ரங்கன்! என்னைத் தொடா தீர்கள்!" என்று பதறிக் கூறிய அதே நேரத்தில் அவனுடைய அகன்ற பெரிய உள்ளங்கைகளில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டாள் மீனா. எங்கே அவன் தன் கரத்தைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு விடுவானோ என்று பயந்தவளாகத் தன் முகத்தோடு ஒட்டியிருந்த அவன் கரங்களைச் சேர்த்துப் பிடித்துக் கொள்ளவும் செய்தாள்.

சொல் ஒன்றும் செயல் ஒன்றுமாக இருக்கக் கண்டு ரங்கன் புன்முறுவல் பூத்தான். அவள் தோள்மீது தலை சாய்த்தான் ஆறுதலாக.

"நான் உங்களுக்கு உரியவளாவேனா என்பது சந்தேகமாக இருக்கும்போது நீங்கள் என்னைத் தொடுவது எனக்குப் பயமாயிருக்கிறது" என்று கூறி அவன் உள்ளங் கைகளைக் கண்ணீர்க் குளமாக்கினாள் மீனா.

"இதென்ன அசட்டுச் சந்தேகம்? யார் நம்மைப் பிரித்து வைக்க முடியும்?"

"ஜாதி, குலம், கோத்திரம், நட்சத்திரம், ஜாதகம் என்றில்லையா ஐம்பெரும் பூதங்கள்? நமக்கு முதல் பூதமே முட்டுக்கட்டை போடுகிறதே!"

ரங்கன் சிரித்தான். "இதற்காகவா இப்படிப் பயப்படு கிறாய்? இதோ பார்! உன் அப்பா இது போன்ற விஷயங் களில் பரந்த மனப்பான்மை உடையவர் என்பது எனக்குத் தெரியும். கொஞ்ச நாட்கள் பழக்கத்திலேயே இதை நான் உணர்ந்திருக்கிறேன். என் அப்பாவும் அப்படித்தான். ஆக உன்னை நீயே ஏன் கஷ்டப்படுத்திக் கொள்கிறாய்? ஜாம் ஜாம் என்று நம் கல்யாணம் நடக்கும். துணிச்சலான காரியம் என்று பலரும் நம்மைப் பாராட்டவே செய்வார்கள்; கவலைப்படாதே!"

"பாராட்டைக் கொண்டு போய்க் கடலில் போடுங்கள்; நீராடட்டும். எனக்கு அன்புதான் முக்கியம்!"

"கடல் கொள்ளாத அளவுக்கு அது இருக்கிறது, மீனா. என்னை நம்பு."

"உங்களை நம்பாமலா இருக்கிறேன்? சமூகத்தை அல்லவா நம்பமுடியவில்லை?"

"சமூகம் என்று தனியே ஒன்று இருக்கிறதா மீனா? நாமே சமூகத்தின் ஓர் அங்கம்தானே? நாம் எப்படிச் சமைக்

கிறோமோ அப்படிச் சமூகம் அமையும். சமூகம் நம்மை மதிப்பது போல் நாம் நடந்து கொள்வோம். அப்போது நாம் மட்டுமில்லை, சமூகமே உயரும்.''

''நீங்கள் ஏதேதோ வாசாலகமாகப் பேசுகிறீர்கள். எனக்குச் சமாதானமாக வில்லை.''

''உன் குறை என்ன என்று தெரிந்தால் அல்லவா நான் சமாதானப் படுத்துவது சாத்தியம்? இடி விழுந்தது, சமூகம் சினந்தது என்று பொதுப்படையாக நீ பேசினால் நானும் பொதுவாகத்தானே பதில் கூற முடியும்?''

''குறிப்பிட்டுச் சொல்ல எனக்குத் தைரியம் வர வில்லையே?''

''வேண்டாம். நீ சொல்ல வேண்டாம். நானே உன் அப்பாவைக் கேட்டுத் தெரிந்து கொள்கிறேன்.''

''ஐயய்யோ! அது ஏதாவது விபரீதத்தில் கொண்டு போய் விட்டுவிடப் போகிறது. நானே சொல்லிவிடுகிறேன்'' என்ற மீனா, தயங்கித் தயங்கி, முதல் நாள் இரவு நடந்ததைச் சொன்னாள்.

குழந்தைகள் இருவரையும் படுக்க வைத்துவிட்டு வந்த அம்புஜம், மீனாவும் தூங்கிவிட்டாள் என்று நினைத்து விளக்கை அணைத்துவிட்டு முன்புறம் வராந்தாவுக்கு வந்தாள். 'நெவில் ஷுட்'டின் நாவல் ஒன்றில் ஆழ்ந்து போயிருந்த பத்மநாபனை அணுகினாள்.

''இதோடே இரண்டு மூன்று தடவை சொல்லியாச்சு; நீங்க காதிலே போட்டுக்கவே மாட்டேங்கறேள்'' என்று ஆரம்பித்து அவள் கூறியது இதுதான்:

ரங்கனும் மீனாவும் ஒருவரை யொருவர் நேசிக்க ஆரம்பித்து விட்டார்கள் போல் அவளுக்குத் தோன்றுகிறது. இதை முளையிலேயே கிள்ளி எறியவில்லை என்றால்

பின்னால் ஆபத்தாகப் போய்விடும். ஏதாவது எடாகூடமாக நடப்பதற்கு முன்னால் பத்மநாபன் நடராஜனிடம் பேச வேண்டும். அவர் மகன் இனி தங்கள் மகளை அணுகித் தனிமையிலோ பிறர் மத்தியிலோ பேசவே கூடாது என்று அவர் தடை விதிக்க வேண்டும். ஒன்று அவர் தம் மகனை ஊருக்கு அனுப்பி விடட்டும். அல்லது நாம் கிளம்பி விடலாம். ஆனால் கொடைக்கானலிலிருந்து கிளம்பி விட்டால் மட்டும் போதாது. சென்னை திரும்பிய பிறகு இவர்கள்-அதாவது மீனாவும் ரங்கனும்-ஒருவரையொருவர் சந்திக்க முயல மாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்? அதனால்தான் பத்மநாபன் நடராஜனிடம் 'கண்டிஷ'னாக இப்போதே கூறிவிட வேண்டும். இல்லாத போனால் நாளைக்கு நாலு பேர் மத்தியில் தலையைத் தொங்கப் போட்டுக்கொள்ளும்படியாகி விடும். நண்பர்கள் உறவினர்கள் எல்லோரும் கிண்டலும் கேலியுமாக வார்த்தைகளைக் கொட்டி அளப்பார்கள். சிறிசுகள் மீனாவும் ரங்கனும் இதையெல்லாம் லட்சியம் பண்ணாமல் போய் விடலாம். ஆனால் அம்புஜத்தால் தாங்கிக்கொள்ள முடியாது.

பத்மநாபன் தம் மனச்சாட்சியின் சார்பிலும் தமது மகள் சார்பிலும் வாதாடிப் பார்த்தார். அம்புஜம் ஒரே பிடிவாதமாக இருந்துவிட்டாள். "மீனாவுடைய எதிர்காலம் பற்றி உங்களுக்கு எவ்வளவு அக்கறை உண்டோ அத்தனை எனக்கும் உண்டு" என்று அடித்துப் பேசினாள். அவள் கொஞ்சம்கூட விட்டுக்கொடுக்காமல் உறுதியாக இருக்கவே, மறுநாள் பேரீஜம் போகும்போது நடராஜனிடம் இது விஷயமாகப் பேசுவதாக வாக்களித்தார் பத்மநாபன்.

இதையெல்லாம் தூங்குவது போல் பாசாங்கு செய்தபடியே கேட்டுக் கொண்டிருந்த மீனா, அந்த வினாடி முதல் தூண்டில் புழுவாகத் துடித்துக் கொண்டிருக்கிறாள்.

விவரம் தெரிந்து கொண்ட ரங்கன் அவளைவிட அதிகமாக இல்லாவிட்டாலும் அவள் அளவுக்கே தானும் மனம் பதைத்துப் புழுங்கினான். அதே சமயம் இத்தனை நேரமாக மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் இந்த விஷயத்தை மனசுக்குள்ளேயே வைத்திருந்து மருகி யிருக்கிறாளே என்பதால் மீனாவிடம் அனுதாபம் பொங்கியது அவனுக்கு. அதோடு, 'அம்புஜமா இப்படிச் சொன்னாள்?' என்ற ஆச்சரியம் இதயத்தைக் கவ்வியது.

அவன் கேட்டான்: "உன் அம்மாவா இப்படிச் சொன்னாள்? தாயில்லாத என்னை மகனாகச் சந்தோஷமாக ஏற்றுக் கொள்கிறதாக அன்றைக்குச் சொன்னாங்களே. என் வயதைப் பற்றிக் குறிப்பிட்டு அவள் வயதோடு அதை ஒப்பிட்டபோது 'ரங்கன் மாதிரி எனக்கு ஒரு பிள்ளை இருக் கான்னு சொன்னா நான் இப்பவே தொண்டு கிழவியாகி விடத் தயார்'னு சொன்னாங்களே, அதே அம்புஜமா?"

"அதே அம்புஜம்தான். ஆனால் உங்களை மகனாகத் தானே ஏற்றுக்கொள்கிறதாகச் சொன்னாள்? மருமகனாக இல்லையே? 'ரங்கன் என் பிள்ளையைப் போல' என்று சுலபமாகச் சொல்லும் வாய்க்கு 'மாப்பிள்ளை' என்று கூற வராது!"

"உன் தங்கையைக் காப்பாற்றிக் கொடுத்தேன் என்பதால் அன்றைக்கு எவ்வளவு தூரம் உன் அம்மா என்னை வாய் விட்டு வாழ்த்தினாங்க! நாமகூட அப்புறமா தமாஷாகப் பேசிச் சிரிச்சுக் கிட்டிருந்தோமே? அனுவைக் கைதூக்கிவிட நான் கோக்கர்ஸ் வாக்கில் தரையில் படுத்த போது உன் அப்பா என் காலைப் பிடிச்சுக்கிட்டார் இல்லையா? அதுக்கு நாம் வேடிக்கையாக என்ன விளக்கம் கொடுத்தோம்?"

" 'சின்னப் பெண்ணைக் காப்பாற்றிக் கரை சேர்த்துப் புண்ணியத்தை வாரிக்கட்டிண்டது போதாது, பெரிய

வளைக் கல்யாணம் பண்ணிண்டு என் கவலையைப் போக்குடாப்பா' என்று கெஞ்சிக் கேட்டுக் கொள்கிற வகையில்தான் அவர் உங்கள் கால்களைப் பிடிச்சுண்டதா நாம் தனியே இருக்கும்போது வியாக்கியானம் பண்ணிச் சிரிச்சோம்'' என்று சொல்கையிலேயே மீனாவின் செவ்விய இதழ்களில் சிரிப்பு இழையோடியது, பளபளக்கும் பிளம் பழத்தில் சூரிய ஒளிக் கீற்று ஒன்று தங்கி நர்த்தன மாடியது போல. அடுத்த வினாடி, "ரங்கன், இதை யெல்லாம் நாம் இனி எப்படி மறக்க முடியும்?'' என்று அவள் கேட்டபோது பொல பொலவென்று கண்ணீர் உகுத்தன நயனங்கள்.

"மறப்பதா? சாத்தியமில்லை!'' என்றான் ரங்கன். "உன் அம்மாதான் என்னை என்னவென்று நினைச்சுட்டாங்க? அவங்களுக்கு என்னைவிட உயர்ந்த ஜாதியிலே மாப் பிள்ளை கிடைக்கலாம். ஆனால் என்னைவிட உயர்ந்த ஒரு மனிதன் மாப்பிள்ளையாகக் கிடைக்க மாட்டான் மீனா! இது சத்தியம்! நான் தற்பெருமைக்காகச் சொல்லவில்லை. நிர்ப்பந்தம் ஏற்பட்டதால் பேசுகிறேன்.''

"மீனா உடல் சிலிர்த்து நிமிர்ந்தாள். அவள் கண்கள் பிர காசித்தன. "எனக்குத் தெரியும்! ரங்கன், எனக்குத் தெரியும்'' என்றாள், இதயம் நிரம்பி வழியும் ஆனந்தத்தோடு. "நீங்கள் குறிப்பிடும் இந்தச் சத்தியம்தான் எத்தனை அழகாக இருக்கிறது! அழகு மயமான இந்த சத்தியம் என் தாயாருக்கு ஏன் புலப்படவில்லை?''

"பார்க்க மறுக்கறாங்க மீனா. நான் பார்க்க வைப்பேன்! அதற்குக் காலம் வரும்!''

அவர்கள் பேச்சு மேலே தொடர முடியாது தடைப்படும் விதமாக ஒரு சலசலப்புச் சத்தம் கேட்டது. தாங்கள் தனிமையில் இருப்பதை வேவு பார்ப்பது போல் ஒளிந்திருந்து யாரோ கவனிக்கிறார்கள் என்று உணர்ந்தாள்

மீனா. 'சை! எதற்கு மறைந்திருந்து பார்க்க வேண்டும்? இங்கே நடக்கக் கூடாதது என்ன நடந்துவிட்டது? என்ன வேண்டுமோ நேருக்கு நேர் வந்து கேட்கட்டுமே?' என்று ஆத்திரப்பட்டவளாகச் சரேலென்று திரும்பினாள். புதர்களை விலக்கி வழி ஏற்படுத்திக் கொண்டு வந்ததால் சலசலப்பு உண்டான திசையில் அமிர்தலிங்கத்தின் முகம் ஒரு வினாடி தெரிந்தது. அது முன்னெப்போதையும் விட அதிகமான அருவருப்பைத் தரும் வகையில் விகாரமான பாவத்துடன் காணப்படுவதாக மீனாவுக்குத் தோன்றியது. அடுத்த கணம் அவன் விலக்கிப் பிடித்திருந்த கிளைகளை விட்டுவிடவே அவை சுயநிலைக்குத் திரும்பி; அவன் முகத்தை மறைந்து விட்டன. அவனும் திரும்பிப் போய் விட்டான் என்பதற்கான காலடி ஓசையும் கேட்டது.

பேரீஜம்மிலிருந்து கிளம்பி வழியில் வைகை அணையின் தொலை தூரக் காட்சியைப் பார்த்துவிட்டு, ஹோட்டலை நோக்கி வந்து கொண்டிருந்தார்கள். பஸ், பில்லர் ராக்ஸை நெருங்கியதும் சாலை ஓரமாக ஒரு திருப்பத்தில் நினைவுச் சின்னம் ஒன்று அமைக்கப்பட்டிருப்பதைப் பார்த்துவிட்டுப் பிரயாணிகளில் ஒருவர் கேட்டார்: "என்ன இது? ஏதோ எழுதியிருக்கே?"

"அதை நான் பில்லர் ராக்ஸுக்கு வந்திருந்தபோது விசாரிச்சேன்" என்றார் பத்மநாபன். "இங்கே ஒரு லாரி கவிழ்ந்தபோது ஒரு பெண்மணி இறந்து போனாளாம்! அவள் ஞாபகார்த்தமாக அதை வைத்திருக்கிறார்கள். ரோடே வளைஞ்சு வளைஞ்சுதான் போறதுன்னாலும் குறிப்பாக இந்த வளைவு காலை வாரி விட்டு விடக் கூடியதுதான். ரொம்ப ரிஸ்க்கி!"

" 'சக்கரத்தை வாரி விட்டு விடக் கூடியதுதான்' என்று சொல்லுங்கள்"-முதலில் பேசியவர் திருத்தப் பிரேரணை கொண்டுவந்துவிட்டுச் சிரித்தார்.

"ஆமாம்; இது ஒன்றுதான் பாக்கியிருந்தது. இதையும் கேள்விப்பட்டாகிவிட்டது" என்று முணுமுணுத்தாள் அம்புஜம். "இந்த ஊருக்கு வந்ததிலிருந்து கொலை, தற்கொலை, விபத்து என்றுதான் பேச்சு."

"ஏன் ஸார், கால்ஃப் கிளப் வந்து விட்டதே, நீங்க இறங்கிக்கலையா?" என்று கேட்டார் பத்மநாபன் அமிர்தலிங்கத்தைப் பார்த்து.

"டூ டயர்ட்!" என்றான் அவன். "பஸ்ஸிலேதான் போயிட்டு வந்தோம் என்றாலும் அசதியாகத்தான் இருக்கு. ஹோட்டலுக்கே வந்துடறேன்."

ஐந்தாறு நிமிஷங்களுக்குப் பிறகு பஸ் ஹோட்டல் கேட்டைத் தாண்டி உள்ளே நுழைந்தது. அதைப் பார்த்ததுமே காரியாலய அறையிலிருந்து முதலாளி தனராஜ் ஓட்டமும் நடையுமாக வந்தார். டி.ஐ.ஜி. கீழே இறங்கக் காத்திராமல் இவரே பஸ்ஸுக்குள் ஏறி அவரை அணுகினார். தமக்கு ஒரு முக்கியத்துவத்தை வரவழைத்துக் கொண்டு ரகசியமாகப் பேசுவது போல் ஆனால் பலர் காதில் விழும்படி சொன்னார்: "ஸார்! ஸைக்கோவைக் கண்டுபிடிச்சுட்டேன்! இங்கே வந்திருந்தான்!"

"என்னது!" என்ற ஆச்சரியக் குரல்களும், "என்னது?" என்ற கேள்விக் குரல்களும் பல கண்டங்களிலிருந்து எழுந்தன.

"எதற்காக ஐயா இப்படிப் பீதியைக் கிளப்பறீங்க, அனாவசியமாக? என்ன நடந்தது? ஆபீஸுக்கு வந்து நிதானமாகச் சொல்லுங்க" என்றார் நடராஜன்.

அவ்வாறே அவர் பஸ்ஸிலிருந்து இறங்கிக் காரியாலய அறைக்கு வரும் வரை காத்திருந்துவிட்டுத் தனராஜ் கூறினார்: "ஐந்து நிமிஷங்களுக்கு முன்னால்தான் அவன் இங்கே வந்தான். அறை ஏதாவது இருக்குமான்னு

கேட்டான். 'ஸீஸன் ரொம்ப டல்லு தம்பி; ஒண்ணுக்கு ரெண்டா வேணுமானாலும் அறைகள் தரேன்'னு சொல்லிக் கிட்டே ரிஜிஸ்தரை எடுத்து அவன் முன்னால் வைச்சேன். அந்தச் சமயம் பார்த்து உங்களைப் போலீஸ் ஸ்டேஷனி லிருந்து யாரோ டெலிபோனில் கூப்பிட்டாங்க. 'யாரு டி.ஐ.ஜி.யா? பேரீஜம் போயிருக்காரே! வர்ற நேரம்தான். வந்தவுடன் பேசச் சொல்றேன்'ன்னு சொல்லிவிட்டு ஃபோனை வைச்சேன். அதைக் கேட்டுக்கிட்டு இருந்தான் பாருங்க, முகம் வெளுத்துப் போச்சு. 'ஏன் ஸார்! டி.ஐ.ஜி. இங்கே தங்கி இருக்காறா?'ன்னு கேட்டான்.

"ஆமாம். ஒரு மாசம் லீவிலே ஓய்வுக்குன்னு வந்தார். பாவம் வந்ததிலிருந்து ஒண்ணு மாத்தி ஒண்ணு அவருக்கு வேலை வந்துக்கிட்டேயிருக்குன்னு நான் பேச்சை முடிப்ப தற்குள் அவன் பெட்டியைத் தூக்கிக்கிட்டுக் கம்பி நீட்டிட் டான். வெளியே கார் கிளம்பற சத்தம் கேட்டுச்சு."

"என்ன கார்? நம்பர் என்ன?" என்று டி.ஐ.ஜி. நடராஜன் கேட்கவும் தனராஜ் தலையைச் சொறிந்தார். அதற்குள் காக்கி உடை அணிந்த ஹோட்டல் சிப்பந்தி ஒருவன் கூறினான்: "எனக்குத் தெரியும் ஸார்! ஃபியட். பழுப்புக் கலர். நெம்பர் 3428."

"குட்" என்று அந்தப் பையன் தோளில் தட்டிக் கொடுத்துவிட்டு, போலீஸ் ஸ்டேஷனுக்கு ஃபோன் போட்டார் டி.ஐ.ஜி. நடராஜன்.

★ ★ ★

# 24. பேர் ஷோலா

"அப்பா! காலமே பேரீஜம் போறச்சேயே சொல்ல ணும்னு நினைச்சேன்; அம்மாவுக்கு இன்னிக்குப் பிறந்த நாள்!" என்றாள் மீனா.

"அதுக்கு என்ன பண்ணச் சொல்லறே? வண்ணப் போஸ்டர் அச்சடிச்சு ஒட்டும் அளவுக்கு என்னிடம் பணம் இல்லை" என்றார் பத்மநாபன்.

"அவர்கிட்டே போய் எதுக்குடி இதையெல்லாம் சொல் லறே? நான் என்ன பச்சைக் குழந்தையா கேக் வெட்டி பர்த் டே கொண்டாட?"

"என்னவோ சந்தோஷப்படுவேளாக்கும்னு நினைச்சுச் சொன்னேன். ரெண்டு பேரும் மூஞ்சியைத் தூக்கிக்கறேள்" என்றாள் மீனா. "எப்படியோ அப்பா, என் பாக்கெட் மணியிலே யிருந்து ஒரு பிரசெண்ட் வாங்கப் போறேன். அதுக்காவது வழிபண்ணு."

"ஆகட்டும், பார்க்கலாம்" என்றார் பதம்நாபன் காமராஜ் பாணியில்.

அப்போது ஹனிமூனுக்கென்று கொடைக்கானல் வந்து ஹாப்பி ஹாலிடேயில் தங்கியிருந்த ஒரு தம்பதி பத்ம நாபனின் உதவியை நாடினர். "பிளீஸ்! ஒரு 'கிளிக்' பண்றீங்களா?" என்று கேட்டுத் தன் காமிராவை அவரிடம் தந்தான் கணவன். அவர்கள் தாங்கள் தங்கியிருந்த அறைக்கு முன்னால் நின்று படம் பிடித்துக் கொண்டனர்.

"அறையின் மேலே உள்ள தொண்ணூற்றொன்பது என்கிற எண் படத்தில் விழணும் ஸார், அதைக் கவனிச்சிக்கிடுங்க" என்று கேட்டுக்கொண்டான் அவன்.

பத்மநாபன் அவர்கள் கோரிக்கையைப் பூர்த்தி செய்து வைத்தார். அப்போது அவருக்கு அனுசூயா கொண்டு வந்திருந்த காமிராவின் ஞாபகம் வந்தது. "ஏன் அனு! பாக்ஸ் காமிரா என்பதால் பெட்டிக்குள்ளேயே சதா பூட்டி வைக்கணுமா? நாலு படம் எடுக்கக் கூடாது? கொடைக் கானல் வந்ததற்கு ஞாபகார்த்தமாக இருக்குமில்லையா?"

"அதை வெளியே எடுத்தால் உடனே 'நான்தான் பட மெடுப்பேன்'னு விசு போட்டிக்கு வரான். உடைச் சுடுவான்."

"அதெல்லாம் ஒண்ணும் உடைக்க மாட்டான்; நீ கொண்டு வா சொல்றேன்!" என்றார் பத்மநாபன்.

"ரங்கன்தான் படம் எடுத்திருக்கானே; கேட்டால் உள்ளங்கை அகலத்துக்கு நாலு படம் தர மாட்டானா?" என்று சொல்லிக் கொண்டே இடுப்பிலிருந்து சாவிக் கொத்தை எடுத்து அம்புஜம் மீனாவிடம் தந்தாள். "என்னமோ தன் காமிராவில் டெலெஸ்கோப்பைப் பொருத்திக் காட்டறேன்னு வேறு அன்னிக்குக் கோக்கர்ஸ் வாக்கில் சொன்னான். அப்புறம் அதைப் பற்றி மூச்சுக்கூட விடலை."

அறைச் சாவியையும் பெட்டிச் சாவியையும் வாங்கிக் கொண்டு போய் அனுவும் மீனாவும் காமிராவுடன் திரும்பி வந்தபோது பத்மநாபன் அமிர்தலிங்கத்துடன் அளவளாவிக் கொண்டிருக்கக் கண்டனர்.

"அந்தக் குடுகுடுப்பாண்டியோடு அப்பா பேசிண்டிருக்கிற மாதிரி ஒரு ஸ்நாப் எடுத்துக்கோடி" என்றாள் மீனா.

"ஹிப்பி மாமா! இந்தப் பக்கம் பாருங்கோ! ஸ்மைல் பிளீஸ்!" என்றாள் அனு.

அமிர்தலிங்கம் திரும்பினான். காமிரா அவன் கண்களில் தட்டுப்பட்டது. திடும்மென்று அவனை இருள் கவ்விச் சூழ்ந்தது. அந்த இருட்டில், வெள்ளித் திரையில் தோன்றும் சினிமா போல, சிறைச்சாலைக்குள் தள்ளு முன்னர் போலீஸார் ஸாரநாதனை நேர்முகமாகவும் பக்கவாட்டி லும் படமெடுத்த காட்சியைப் பார்த்தான்.

இருள் விலகிய மறு கணம் அவன் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அனசூயாவின் கரத்திலிருந்த காமிராவைப் பிடுங்கிப் பக்கத்தில் பாறைகளைக் கொண்டு கட்டப் பட்டிருந்த சுவரில் ஓங்கி அறைந்தான். காமிரா உருத் தெரியாமல் நசுங்கியும் உடைந்தும் போயிற்று!

அனசூயா அழக்கூடத் தெம்பில்லாமல் திகிலடைந்து பிரமித்து நின்றாள்! அமிர்தலிங்கத்தின் உடல் பாதாதிகேசம் நடுங்கிக் கொண்டிருந்தது!

பேசுகிற சக்தி பெற்றதும் பத்மநாபன், "சீ! நீயும் ஒரு மனுஷனா? என் கோபத்தை முழுசாகக் காட்றதுக்கு முன்னாடி போயிடு இங்கிருந்து" என்று அமிர்தலிங்கத்தை விரட்டினார்.

அடுத்த கணம் மீனா அனசூயா அருகே மண்டியிட்டு அவளைக் கட்டி அணைத்துக் கொண்டாள். அவ்வளவு தான்; ஆதரவு கிடைத்ததும் அனசூயாவின் அழுகை ஒலி ஸைரன் ஊதுவது போல் பெரிதாகக் கிளம்பியது. அவளைச் சமாதானப்படுத்த எல்லாருமாகச் சேர்ந்து பெரும்பாடு பட்டதில், அமிர்தலிங்கம் நடுக்கம் தீராமலே அங்கிருந்து சிரமப்பட்டு நடந்து போனதை யாரும் கவனிக்கவில்லை.

★ ★ ★

**கொ**டைக்கானல் நகரம் முடிந்து, செங்குத்தாக மலை உயர்ந்து கானகமும் ஆரம்பிக்கும் ஓர் இடத்தில் அமைந் திருந்தது பேர்ஷோலா அருவி. ஒரு சோலையாக விளங்கிய அந்த இடத்தில் கிடைத்த சந்து பொந்துகளிலெல்லாம் சூரிய ஒளி ஊடுருவித் தரையில் ஜாலம் செய்தது.

''என்னவோ மாடர்ன் ஆர்ட் என்கிறார்கள்; அதில் மொபைல் ஆர்ட் என்றுகூட ஒரு வகை உண்டு. காற்றின் துணை கொண்டோ அல்லது விசையைப் பொருத்தியோ ஓவியம் அல்லது சிற்பத்தைச் சுழல வைப்பார்கள்; அல்லது ஏறி இறங்கச் செய்வார்கள். அந்த நூதன பாணியெல்லாம் இயற்கை விரிக்கும் இந்த மொபைல் ஆர்ட்டுக்கு ஈடாகுமா?'' என்று கேட்டார் பத்மநாபன், தரையில் தோற்றமளித்த ஒளிச் சித்திரத்தைச் சுட்டிக் காட்டி.

''நடமாடும் நூலகம், நடமாடும் மருத்துவ மனை மாதிரி இது ஒரு நடமாடும் கோலம்'' என்றாள் மீனா. காற்றில் கிளைகள் அசைந்தபோது சித்திரக் கோலம் சிரித்தபடியே புதுப் புது தினுசாக உருமாறிக் கொண்டிருந்தது.

அவர்கள் மேலே சென்றார்கள். அருவியை நெருங்க சிமெண்டு தளம் போடப்பட்ட குறுகலான பாதை இருந்தது. ஒருவர் தாராளமாக நடக்கலாம். இருவர் தோளோடு தோள் இடிக்கச் சற்றுச் சிரமப்பட்டு நடக்க லாம். காவல் இல்லாத காதலருக்கு அது சிரமமாகத் தோன்றாது. ஆனால் மீனாவுக்கும் ரங்கனுக்கும் பாதுகாப்பு பலமாக அல்லவா இருந்தது! அவர்கள் ஒருவர் பின் ஒருவராகவே சென்றார்கள்.

அருவி சற்றுத் தொலைவில் விழுந்து அங்கே ஓடையாக வந்து கொண்டிருந்தது. அதன்மீது ஒரு குட்டிப்பாலமும் அமைந்திருந்தது. காற்றிலே யுகலிப்டஸ் மணம். மரப் பாலத் தின் காப்புச் சட்டத்துக்கு அப்பால் பார்த்தால் சிற்றோடை பாறைகளில் முட்டி மோதிப் பன்னீர் தெளிப்பது போல்

*நீரை வாரி இறைப்பது தெரிந்தது. இந்த எழிலைச் சற்று நேரம் ரசித்து விட்டுப் பத்மநாபன் சொன்னார்: "நீருக்குத் தான் எத்தனை அழகு! நீர்நிலைக்கு ஓர் அழகு, நீரோட் டத்துக்கு ஓர் அழகு. தாரையாக அருவி கொட்டினால் அழகு, பனிக்கட்டியாய் நீர் உறைந்தால் தனி அழகு, வெண் பனியாகப் பொல பொலவென்று உதிர்ந்தால் அது ஓர் அலாதி அழகு!*

*"அணையைத் திறந்தால் தேக்கிவைக்கப்பட்ட நீர் பீரிட்டுப் பாய்ந்து ஒரு கம்பீரத்தை உணர்த்தும்; செயற்கை ஃபௌண்டனாக வைத்துவிட்டால் நமக்கு விளையாட்டுக் காட்டும்! சிறு தூறலாக விழுந்து கொஞ்சும்; பெருமழை யாகப் பொழிந்து தாக்கும்! முகத்தைக் கழுவிக் கொண்டு வந்தால் களைப்பைப் போக்கும், நா வறண்டு அருந்தினால் சாந்தி தரும். அடிப்படையில் எல்லாம் ஒன்றுதான்: ஜலம்-$H_2O$.*

*"தாமரையோ அல்லியோ படர்ந்த குளம் நாவலாசிரி யர்களுக்கு அலுக்காத சூழல்; ஏரி நீர் நிலையாக இருக்கும் போது அதில் பிரதிபலிக்கும் மரமும் வீடும் புகைப்படக் காரர்களுக்குத் தெவிட்டாத 'ஸெட்டிங்'. படகு செலுத்தும் போது சிற்றலைகள் கிளம்பி பிரதிபிம்பங்களைக் கலைக் கிறதே, அதைப் பார்ப்பதில் ஒரு ருசி இருக்கிறது. பேரலைகள் கடலில் பொங்கிச் சுருண்டு சரிந்து முன்னேறி வருவதைப் பார்ப்பதிலும் ஒரு சுவை இருக்கிறது. ஹொகனக்கல்லில் பார்க்கும் காவேரி நீர்தான் கொள்ளிடத் திலும் பாய்கிறது. அங்கே அடக்க முடியாத ஆவேசம்; இங்கே அது தணியப்பெற்ற அமைதி."*

*அவர் இப்படிச் சொல்லிக்கொண்டே போனது அவரைச் சூழ்ந்திருந்தவர்களுக் கெல்லாம் ஓர் இன்பக் கிளுகிளுப்பை ஏற்படுத்தியது.*

''நீர் நிலைக்கு ஓர் அழகு; நீர் ஓட்டத்துக்கு ஓர் அழகு என்பதுபோல் நீங்கள் எழுதினால் ஓர் அழகு, பேசினால் தனி அழகு!'' என்றான் ரங்கன்.

''அடடா! கொடைக்கானலுக்குக் கூடக் காக்காய் வந்து விட்டதே!'' என்றாள் மீனா. அன்று காலை ரங்கன் பேரீஜம்மில் அவளிடம் உறுதியாகப் பேசிய பிறகு அவள் புதுத் தெம்பும் உற்சாகமும் அடைந்திருந்தாள்.

அவள் கூறியதைக் கேட்டு எல்லாரும் 'கொல்'லென்று சிரித்தபோது ரங்கன், ''நான் மனப்பூர்வமாகச் சொன்னேன். இந்த மாதிரி அழகிய இடத்தையும் இவருடைய இதமான பேச்சையும் கேட்காமல் என் அப்பா ஸைக்கோ ஸாரநாதனைத் துரத்திக் கொண்டு போயிருக்கிறாரே, அதை நினைத்தால்தான் துக்கமாக இருக்கிறது'' என்றான்.

''அப்படி அவர் அடிக்கடி வெளியே போக நேர்ந்ததால் தான் நாம் நெருங்கி நெருங்கி வந்து விட்டோம்'' என்று அவனுக்கு மட்டும் கேட்கிற மாதிரி கூறினாள் மீனா. ''அவருக்கு வேலை வந்து சேராது போனால் நீங்கள் சதா அவரோட செஸ் ஆடிக் கொண்டிருந்திருப்பீர்கள். என்னை எங்கே திரும்பிப் பார்த்திருக்கப் போகிறீர்கள்?''

''உன்னைத் திரும்பிப் பார்க்க வேண்டிய அவசியமே இல்லை, மீனா! நான் கண்ணை மூடிக் கொண்டால்கூட உன்னைத்தானே காண்கிறேன்!'' என்று பதிலுக்கு அவனும் ரகசியம் பேசினான்.

''ரங்கா! கண் மண் தெரியாமல் விசு ஓடறான் பார்! என் காலெல்லாம் அசந்து கிடக்கு. அவனைக் கட்டி மேய்க்க வேண்டியது உன் பொறுப்பு'' என்றாள் அம்புஜம்.

சிறுவனின் கையைப் பிடித்துக் கொள்வதற்காக விரைந்து சென்றான் ரங்கன். அவனுக்கு உதவுகிற பாவனையில் மீனாவும் வேகமாக நடந்தாள். முரண்டு பண்ணின

அவனைச் சமாளிக்க இரண்டு பேர் தேவையாகத்தான் இருந்தது.

ரங்கனை முன்னால் அனுப்பிய அம்புஜம் கணவனைக் கேட்டாள்: "இவா ரெண்டு பேரும் அடிக்கடி கிசுகிசுத்துக் கறதைக் கவனிச்சேளா? இது எங்கே போய் முடியப் போறதோ தெரியலையே, ஆண்டவனே! இதுக்குத்தான் அந்த மனுஷன்கிட்டே பேசுங்கோ பேசுங்கோன்னு அடிச் சுக்கிறேன். கேட்க மாட்டேங்கறேள்; பேரீஜம்மில் வெட்டு ஒன்று துண்டு ரெண்டாச் சொல்லியிருக்கலாமில்லையா?"

"என்னை என்ன பண்ணச் சொல்லறே?" என்றார் பத்மநாபன். "அந்த மனுஷன் இங்கே நடந்த ரெண்டு கொலைகளுக்குக் காரணமான ஒருத்தனையோ அல்லது இரண்டு நபர்களையோ பிடிக்க முடியாமல் முழிக்கிறதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கு. இந்தச் சமயத்தில் காதல் பிரச்னையை வேறே கிளப்பி அவரைச் சங்கடப்படுத்து வானேன்னு தோணறது. ஒரு வழியா இந்தக் குழப்பமெல் லாம் தீர்ந்துட்டா அப்புறம் தயக்கமில்லாமல் பேசலாம்."

"அலை ஓய்ந்து சமுத்திர ஸ்நானமா? இந்த ஜன்மத்துக்கு நீங்க அவர்கிட்டே பேசப் போறதில்லை" என்றாள் அம்புஜம். "ஸைக்கோ ஸாரநாதனாவது பிடிபடறதாவது? அதுவும் இந்த மனுஷன் கிட்டேயா?"

"அதுதான் போயிருக்காரே ஜீப்பை எடுத்துண்டு; திரும்பி வந்தால் தெரிஞ்சுட போறது!"

"கையை விரிச்சுண்டுதான் வரும்" என்றாள் அம்புஜம் அழுத்தமாக.

**வி**சுவைத் தூக்கிக் கொண்டிருந்த ரங்கன், மீனாவோடு மேலே செல்லாமல் இவர்கள் வந்து சேர்ந்துகொள்ளக் காத் திருந்தான். அந்தப் பண்பு பத்மநாபனுக்குப் பிடித்திருந்தது.

“ஏன் மாமி! பேரீஜம் போயிட்டு வந்தப்புறம் ரெஸ்ட் எடுத்துக்கலையா? இப்படிக் களைச்சுப் போயிருக்கேளே!” என்றான் ரங்கன். களைப்பைவிடக் கவலைதான் மிகுதி அம்புஜத்துக்கு என்பதையும் அவன் அன்று காலையில் மீனா சொன்னதிலிருந்து புரிந்து கொண்டிருந்தான்.

“எனக்கு ஏதுடாப்பா ஓய்வு? ஹாலிடே யெல்லாம் இவாளுக்குத்தான். இங்கே வந்தாலும் எனக்குக் குழந்தை களைக் குளிப்பாட்டறதும், டிரெஸ் பண்ணறதும் துணி தோய்ச்சுப் போடறதும்தான் காரியம் சரியா இருக்கே” என்றாள் அம்புஜம் அலுப்பு தொனிக்க.

“நல்ல வேளை, சமைக்கிற ஜோலியாவது மிச்சமாச் சேன்னு நினைச்சுச் சந்தோஷப்படுங்க” என்றான் ரங்கன்.

“அதுக்கும் ஒண்ணும் குறைச்சல் இல்லே. இவர் நினைச்சுண்டால் காப்பி கேட்பார். பால் பவுடரும் நெஸ்கஃபேயும் வாங்கி வைச்சுண்டிருக்கேன். இந்தப் பயலுக்கு ஹோட்டல் சாப்பாடு ஒத்துக்காது. அதைக் குறைச்சு ஹிமா ஸூப் வாங்கித் தினமும் கொடுக்கிறேன். ரூமில் எலக்ட்ரிக் கெட்டிலையும் ஸ்டவ்வையும் மாறி மாறி உபயோகிச்சுண்டேதான் இருக்கேன். முதலாளி தன ராஜுக்குத் தெரிஞ்சா வாடகையை ஒசத்திப்பிடுவான்.”

ரங்கன் சிரித்தான். “காசிக்குப் போயும் கர்மம் தொலை யலை என்கிற கதைதான்!”

“ஏதோ எனக்குப் பரிஞ்சு பேசறதுக்காக நீ ஒருத்தனா வது இருக்கியே!” என்றாள் அம்புஜம்.

‘ஏது அம்மாவுக்கு ஐஸ் வைக்க ஆரம்பிச்சுட்டீங்க போலி ருக்கே’ என்ற பாவனையில் மீனா ரங்கனைப் பார்த்துப் புன்னகையை வீசினாள். அதனை எதிர் கொண்டழைக்க அவனிடமும் ஒரு குறு நகை உருவாகி வந்தது. இரண்டும் சந்தித்து இணைந்ததும் ஒரு ரசாயனச் சேர்க்கை ஏற்பட்டது

போலக் கலகலவென்ற சிரிப்பொலி பிறந்தது! ஆனால், 'நீ குழைஞ்சு பேசறதுக்காக நான் மசிஞ்சு போயிட மாட்டேண்டாப்பா' என்று அம்புஜம் முணுமுணுத்ததானது அந்தச் சிரிப்பொலிக் கிடையில் யாருக்கும் கேளாமல் மங்கி மறைந்து போயிற்று.

**ப**ஸ்ஸில் பேர்ஷோலா வருவதற்காக ஏறியதுமே, 'கடவுளே! அந்தப் பிள்ளை யாண்டான் இன்றைக்கு நம்மோடு வராமலிருந்து விட்டால் தேவலை' என்று மனசுக் குள் பிரார்த்தித்துக் கொண்டாள் அம்புஜம். அதே சமயம் 'குறிஞ்சி ஆண்டவனே! பஸ் கிளம்பப் போகிறது. சீக்கிரம் அவரை அனுப்பி வை!' என்று மீனா இறைஞ்சினாள். வள்ளி மணாளன் ஒரு காதலியின் இதய பூர்வமான பிரார்த்தனைக்குச் செவி சாய்க்காமலா இருப்பான்? அவன் அம்புஜத்தின் கோரிக்கையை ஏற்கவில்லை.

ரங்கன் ஏறியதும் அதுவரை அழுது வழிந்து கொண்டிருந்த அந்த பஸ், ராமனையும் சீதையையும் ஏற்றிச் சென்ற புஷ்பக விமானமாக மீனாவுக்கு மாறிவிட்டது. அது மட்டுமா? ருக்மிணியைக் கண்ணன் கவர்ந்து சென்ற தேஜோ மயமான ரதமாக ஒரு சமயத்திலும் சம்யுக்தையைப் பிருத்விராஜன் ஏற்றிக்கொண்டு கட்டி அணைத்தபடி பறந்து சென்ற பஞ்ச கல்யாணிக் குதிரையாக மற்றொரு சமயத்திலும் தோன்றியது!

புஷ்பக விமானத்தை விட்டு இறங்கி அவர்கள் வந்து சேர்ந்திருப்பது பேர்ஷோலா அருவிக்கா அல்லது கம்பன் வர்ணித்த சித்ரகூட பர்வதத்துக்கா?

.....

கொழித்த மாமணி அருவியோடு
இழிவன கோலம்
அழித்து மேவிய அரம்பயர்

அறல்புரை கூந்தல்
கழித்து நீக்கிய கற்பக நறுமலர்......

என்றல்லவா எழுதியிருக்கிறான்!

அரம்பயர் எங்கே? அவர்கள் கூந்தலை அவிழ்த்ததும் உதிரும் கற்பக மலர்கள் எங்கே? அருவி கிட்டே போய்ப் பார்த்தால் அல்லவா தெரியும்?

அருவியின் அருகே அரம்பயர் போன்று பிரமாதமான ஆடை அலங்காரங்களுடன் சிலர் இருக்கத்தான் செய்தார்கள். ஆனால் அவர்கள் அருவியில் நீராடிக் கொண்டிருக்கவில்லை. பக்கத்தில் இருந்த ஒரு மொட்டைப் பறையில் சில ஆடவர்களுடன் சேர்ந்து சீட்டாடிக் கொண்டிருந்தார்கள்! ஓடை நீர் அடித்துக் கொண்டு போய்விட முடியாத இடத்தில் ஆனால் நீருக்குள் அமுங்கிக் கிடக்கிற மாதிரியாக ஒரு தாழ்வான கூடையில் பாட்டில்களை அடுக்கி வைத்திருந்தார்கள்.

"இது பேர்ஷோலா இல்லே, இப்போதைக்கு இது பீர் ஷோலா!" என்றான் ரங்கன். "கூடை நிறைய பீர் பாட்டில்கள். இந்த நீரோடை இவர்களுக்கு ஃபிரிஜ் ஆகப் பயன்படுகிறது. தண்ணீர் ஐஸ் போலல்லவா இருக்கிறது!"

"பேஷ்!" என்றார் பத்மநாபன். மேலே செல்ல அவருக்குப் பிடிக்கவில்லை. நின்ற இடத்திலேயே துண்டை விரித்துப் போட்டு அமர்ந்தார். அருவி விழும் காட்சி அற்புதமாயிருந்தது.

"என்ன ரங்கன்! அப்பாவிடமிருந்து நீ கிளம்புகிற வரையில் நியூஸ் ஒண்ணும் வரவில்லையா?" என்று கேட்டார்.

"பேரீஜம்மிலிருந்து வந்ததும் அவசரம் அவசரமாக ஜீப்பை வரவழைத்துக் கொண்டு போனவர்தான். அப்புறம் ஆளைக் காணோம். ஃபோனும் பண்ணலை. ஆனால்

இன்று சாயந்திரம் பேர்ஷோலா புரோகிராம் இருப்பது அவருக்குத் தெரியும். 'நீ போயிட்டு வா! காரியம் முடிஞ்சுடுச்சுன்னா நான் ஜீப்பில் நேரே அங்கேயே வந்து இறங்கிக்கிடறேன். திரும்பி வரச்சே எல்லாரும் சேர்ந்து பஸ்ஸில் வந்திடலாம்'னு சொல்லிட்டுப் போனார்.''

''அது சரி. ஸைக்கோவுக்குக் கார் கூடவா உண்டு?'' என்று கேட்டாள் அம்புஜம்.

''தனராஜ் வர்ணிச்சதைப் பார்த்தால் ஏறத்தாழ பேப்பர் களில் வந்திருந்த அவன் படம் மாதிரித்தான் தோணிச்சு. எவனாவது ஏமாந்தவன் காரில் சாவியை வைச்சுட்டுப் போயிருப்பான். இவன் அதை எடுத்துக்கிட்டு வந்திருக்கலா மில்லையா?''

''டி.ஐ.ஜி.யை இந்த ஊரிலேயே வைச்சுண்டு இரண்டு கொலைகளைச் செய்தவன் இப்ப மட்டும் பயந்து ஓடுவானேன்?''

''எனக்கு என்ன தெரியுங்க? அப்பா வந்தால்தான் விவரம் புரியும். டி.ஐ.ஜி. இருக்கிற அதே ஓட்டலில் தானும் தங்கியிருந்து தன் கைவரிசையைக் காட்டறதுன்னா யோசனையாகத்தானே இருக்கும்?''

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கையிலேயே, ''ஹல்லோ மீனா! டிட் யூ ஹாவ் எ நைஸ் டைம்?'' என்று கேட்டுக் கொண்டே வந்தார் நடராஜன். ''இந்த மொட்டைப் பயல் என்ன சொல்றான்?'' என்று விசுவின் தலையைத் தடவிக் கொடுத்தவர் அனசூயாவை அன்புடன் வாரி அணைத்துக் கொண்டார்.

''ஸாம்ஸனுக்குத் தலைமுடி போனதும் சக்தி குறைஞ்சிடுச்சு. இவனுக்கு நேர் ஆப்போஸிட்! மொட்டை அடிச்சதும் அவன் விஷமம் அதிகமாயிடுச்சுன்னு மீனா சொல்றா'' என்றான் ரங்கன்.

*நடராஜனைச் சிரிக்கக்கூட விடாமல் பத்மநாபன் கேட்டார். "நீங்க போன காரியம் என்ன ஆச்சு? ஸைக்கோவைப் பிடிச்சுட்டீங்களா?"*

*"ஸைக்கோவா?" வார்த்தையை அவர் உச்சரித்தபோது கேள்விக் குறி மிதந்தது அதில்.*

*"பின்னே? ஸைக்கோவைப் பிடிக்கப் போறதாத்தானே சொல்லிட்டுத் தடபுடலாகக் கிளம்பினீங்க?"*

*"நான் எங்கே சொன்னேன் ஸைக்கோவைப் பிடிக்கப் போறதாக? அந்தத் தனராஜ் அல்லவா கத்தினான், 'ஸைக் கோவைக் கண்டு பிடிச்சுட்டேன் ஸார்! இங்கே வந்திருந்தான்!' என்று. எப்படி அந்த வதந்தி பரவியதோ என்னவோ? இங்கே எல்லோருக்கும் ஸைக்கோவைப் பற்றியே நினைப்பு. டி.ஐ.ஜி. பெயரைக் கேட்டதும் ஒருவன் பயந்து ஓடினால் அவன் அந்த ஸைக்கோவாகத்தான் இருக்கணும்னு தீர்மானம் பண்ணிட்டாங்க."*

*"அப்படின்னா ஸாரநாதனைப் பிடிக்கணும் என்கிற எண்ணத்தோடேயே நீங்க புறப்பட்டுப் போகலையா?"*

*"ஒரு நாளும் இல்லை. ஆனால் டி.ஐ.ஜி.க்குப் பயந்து ஓடறவன் யாரா இருந்தாலும் அவனைப் பிடிச்சு விசாரிக் கணும் என்கிற நோக்கத்திலே அவசரப்பட்டேன்."*

*காற்றுப் போன பலூன் மாதிரி ஆகிவிட்டனர் பத்ம நாபனும் மற்றவர்களும். 'சப்'பென்று போய்விட்ட சூழலுக்குக் காரம் ஏற்ற முற்பட்ட ரங்கன் கேட்டான்: "சரி, நீங்க துரத்திச் சென்ற ஆசாமியையாவது பிடிச்சீங்களா இல்லையா? அதைச் சொல்லுங்க."*

*"அதுக்கும் ரொம்பச் சிரமப்பட்டுப் போயிடுச்சு, ரங்கா! அறை எடுக்க வந்தவன் டி.ஐ.ஜி.ன்னு சொல்லக் கேட்டதும் ஓட்டம் பிடிச்சானென்றால் அவன் பிறபாடு இன்னொரு ஒட்டலுக்குப் போய்த் தங்கமாட்டான்; மலையை விட்டே*

இறங்கிவிடுவான்னு ஊகிச்சேன். எப்படின்னா நான் திரும்பி வந்ததும் அங்கு நடந்த விவகாரம் எனக்குத் தெரிய வரும் என்பதை அவனும் உணர்ந்திருப்பான். அதனாலே ஊரை விட்டே ஓடத்தான் பார்ப்பான். அவனைத் துரத்திக் கிட்டுப் போகலாம் என்பதற்காகக் கிளம்பினேன்; ஜீப்பிலே பெட்ரோல் இல்லை!''

''கெட்டுது போ!'' என்றாள் அம்புஜம். ''புறப்படறச் சேயே அபசகுனமா?''

''பங்க்குக்கு விடுடான்னேன். அங்கு போனால் பத்து கார் க்யூவிலே நிக்குது. ஒரு காருக்குப் போடக்கூட அவனிடம் பெட்ரோல் இல்லை. தலையைச் சொறியறான். மலைச்சுட்டேன். முதல் நாள் காலையிலேயே மலை ஏறி வரவேண்டிய பெட்ரோல் லாரி வரலையாம். பிரேக் டவுனாம். இன்று மாலையோ அல்லது நாளைக் காலையோ தான் வரும் என்று சொல்லிட்டாங்க. கொடைக் கானலுக்கே இந்த ஒரே ஒரு பங்க்குதான்! போலீஸ் ஸ்டேஷனிலே எமர்ஜென்ஸிக்கென்று இரண்டு டின் பெட்ரோல் எப்பவும் வைச்சிருக்கணும்னு புதுசா உத்தரவு போட்டேன்.''

''எனக்குத் தெரியும்; நான் அப்பவே சொல்லிட்டேனே! போன மச்சான் கதையாக இவர் கையை விரிச்சுண்டு தான் திரும்பி வருவார்னு'' - இப்படி மீனாவிடம் அம்புஜம் முணு முணுத்ததானது நடராஜன் காதிலும் விழத்தான் செய்தது.

''நல்ல வேளையா நான் இன்னும் அவ்வளவு மோசமா யிடலை அம்மா!'' என்றார் நடராஜன் அவளை நோக்கி. பகுத்தறிவை உபயோகிச்சால் எந்தச் சிக்கலையும் விடுவிக்க வழி கண்டுபிடிக்கலாம். வத்தலகுண்டுக்கு ஃபோன் பண்ணி அங்கிருந்து இன்ஸ்பெக்டரை ஜீப்பில் கிளம்பி விரைந்து வரச் சொன்னேன். எதிரே வரும் ஃபியட் கார்களை யெல்லாம் பார்த்துக்கிட்டு வாங்கன்னேன். நிறத்தையும்

நம்பரையும் குறிச்சுக்கிட்டார். புறப்பட்டு வந்து சுலபமாப் பிடிச்சுட்டார். இவன் மலையை விட்டு இறங்கி முடியலை. ஒரு மைல் பாக்கி. அப்போ ஜீப்பை எதிரே நடு ரோட்டில் நிறுத்தி மடக்கிட்டாங்க. வகையா மாட்டிக்கிட்டான்.''

''ஆசாமி யாரு? எதுக்கு அப்படிப் பயந்து ஓடினான்?'' என்றார் பத்மநாபன்.

''கள்ளக் கடத்தல் பேர்வழி. கனகசபைன்னு பேரு. ரொம்ப நாளாத் தேடிக்கிட்டிருக்கிற ஆசாமிதான்... பெட்டி ஒன்று கொண்டு வந்தானில்லையா? அது நிறைய அயல் நாட்டு மது. ஜானி வாக்கர், ப்ளாக் அண்டு ஒயிட், மார்டினின்னு மூணு ரகம்.''

''ஹாப்பி ஹாலிடேயில் பணக்காரப் பெரும் புள்ளிகள் நிறைய வருவாங்க, இந்தக் குளிர்ப் பிரதேசத்தில் அவர்களுக்குக் கதகதப்பூட்டி உதவலாமே என்கிற பெரு நோக்கோடு வந்திருக்கான் பாவம்'' என்றான் ரங்கன்.

''இப்பத்தான் மதுவிலக்கு கிடையாதே? இன்னும் எதுக்குக் கள்ளக் கடத்தல்?'' என்றாள் அம்புஜம்.

''புரொஹிபிஷனை எடுத்ததற்கப்புறம்தான் கள்ளச் சாராயம் காய்ச்சறதும், கள்ளக் கடத்தல் செய்யறதும் கூடுதலாப் போச்சு அம்மா! கடையிலே விக்கிற சாராயத்துக்கு எக்கச்சக்கமான வரி உண்டு. அதனால் அதன் விலை பல பேருக்குக் கட்டி வரதில்லை. கள்ளச் சாராயம் கொள்ளை மலிவு.''

''ஆகக்கூடி 'கள்ளச் சாராயமும் கள்ளக் கடத்தலும் அதிகமாகிப் போச்சுங்கறதாலேதான் மதுவிலக்கை ரத்து பண்ணிட்டோம்'ங்கற வாதம் செல்லாது இல்லையா?'' என்று பத்மநாபன் கேட்டார்.

''அது அரசியல் விஷயம். என்னை இழுக்காதீங்க!'' என்று டி.ஐ.ஜி. நழுவிக்கொண்டார்.

''ஏதோ யானையைப் பிடிக்கப் போறேள்னு நினைச்சோம். பூனையையாவது பிடிச்சுண்டு வந்தேளே! அந்த மட்டும் சந்தோஷம்'' என்றாள் அம்புஜம்.

''அது சரி, யானை கண்ணில் தென்பட்டால்தானே பிடிக்கலாம்'' என்ற நடராஜன், திடும்மென்று ஞாபகம் வந்தவராக, ''எங்கே உங்க ஹிப்பி நண்பரைக் காணோம்?'' என்று பத்மநாபனிடம் வினவினார்.

''இங்கே அருவியைப் பார்த்தால் குளிக்கணும்கிற ஞாபகம் வந்துடப் போவுதேன்னு ரூமிலேயே உட்கார்ந்திருக்கானோ என்னவோ?'' என்றான் ரங்கன்.

நடராஜன் ரங்கனுடன் சேர்ந்து சிரித்தார். மற்றவர்கள் சிரிக்கவில்லை. இரண்டு மணி நேரத்துக்கு முன்னால் ஓட்டலை விட்டுக் கிளம்பும்போது நடந்ததைப் பத்மநாபன் விவரித்தார்.

''சே! என்ன அநியாயம்! குழந்தையிடமா அப்படி நடந்துகொண்டான்?'' என்று அனசூயாவை அணைத்தார் நடராஜன். ''டோண்ட் வொர்ரி! நான் உனக்குப் புதுசா ஒரு காமிரா வாங்கித் தரேன்; ஆல்ரைட்?''

அனசூயா அழகாகத் 'தாங்க்ஸ்' சொல்லித் தன்னை அவரிடமிருந்து விடுவித்துக் கொண்டாள்.

நேரமாகி விட்டதென்று எல்லாரும் பஸ்ஸை நோக்கி நடந்தார்கள்.

★ ★ ★

# 25. பிறந்தநாள் பரிசு!

**ஹோ**ட்டலை நோக்கிப் பாதி தூரம் வந்த பிறகுதான் மீனர்வுக்குத் திடீரென்று ஞாபகம் வந்து சொன்னாள்: "அடடா! அம்மாவுக்குப் பிரெஸண்ட் ஒண்ணும் வாங்கலையே, நாம்!"

"எதுக்குப் பரிசு?" என்று நடராஜன் வினவினார்.

"அவளுக்கு இன்னிக்கு 'பர்த் டே'. பேர்ஷோலாவில் சற்று நேரம் இருந்துவிட்டு 'லேக்'குக்கு நடந்து வந்து விடுவதென்றும், அங்கே ஸ்பென்ஸரில் ஒரு பரிசு வாங்கிக் கொடுக்கிறது என்றும் அப்புறம் அங்கேயே இந்தப் பஸ்ஸுக் காகக் காத்திருந்து, நிறுத்தி ஏறிக்கொள்கிறது என்றும் தீர்மானிச்சோம். ஆனால் பேர்ஷோலாவின் அழகிலே மயங்கிட்டதாலும் பேச்சு சுவாரசியமாக நீண்டதாலும் இந்தத் திட்டம் மறந்தே போச்சு" பத்மநாபன் விளக்கினார்.

"உங்களுக்கென்ன வயசு இருபத்தைந்து, இருபத்தாறு இருக்குமா?" என்று நடராஜன் கேட்டார்.

"சரிதான் போங்கோ" என்றாள் அம்புஜம். முகம் 'குப்'பென்று சிவந்து போயிற்று. "என் பெண்ணுக்கே வயசு பதினெட்டாகப் போகிறது!"

"பைசா செலவில்லாமல் சரியான பரிசு நீங்க கொடுத் தாச்சு ஸார்!" என்றார் பத்மநாபன், டி.ஐ.ஜி.யை நோக்கி. "முப்பத்தாறு வயசுக்காரியைப் பார்த்து, 'இருபத்தாறு வயசு

இருக்குமா?' என்று கேட்பதைவிடப் பெரிய பரிசு வேறு என்ன இருக்கப் போகிறது?''

சிரித்துப் பேசிக்கொண்டே ஹோட்டலை வந்தடைந் தார்கள். அப்போது மணி ஏழு. ''நல்ல பசி எனக்கு; சாப்பிட்டுவிட்டே ரூமுக்குப் போகலாமே?'' என்றார் நடராஜன். முகத்தில் களைப்பு தெரிந்தது. நிம்மதியை நாடிவந்த இடத்தில் ஓய்வு என்று ஒதுங்கிய நேரத்தில் கடமை குறுக்கிட்டால் நியாயமாக ஏற்பட வேண்டியதை விடச் சோர்வு அதிகமாகவே இருக்கும் போலும்! ''என்ன மிஸ்டர் தனராஜ், சாப்பாட்டுக்கு நாங்க ரெடி!'' என்றார்.

''ஐந்து நிமிஷம் டயம் கொடுங்க, இலை போட்டுடச் சொல்றேன்'' என்றார் ஹோட்டல் முதலாளி. ''அது வரையில் ரிக்ரியேஷன் ரூமிலே பேப்பர் பார்க்கலாமே!''

''சாப்பாடு முதல் தரமாக இருக்கும்னு உத்தரவாதம் கொடுத்தீங்கன்னா பத்து நிமிஷம்கூடக் காத்திருக்கத் தயார்.''

''நம்ம ஹோட்டலில் இரண்டாந் தரம்னு சொல்லும்படி என்னைக்கு இருந்துச்சு? எப்பவுமே ஏ.ஒன் மீல்ஸ்தான்!''

''அதை நாங்கல்ல சொல்லணும்'' என்றார் டி.ஐ.ஜி. ''எனக்குத் தெரிஞ்ச அமைச்சர் ஒருவர் எதிரே இருக் கிறவனுக்குப் போடச் சொல்லி மாலையைக் கொடுத் தப்போ தமக்குத் தாமே போட்டுக்கிட்டார். அப்புறம் தான் புரிஞ்சுது அவர் கொஞ்சம் மிதப்பிலே இருந்தார்னு. அதுமாதிரி உங்களை நீங்களே தட்டிக் கொடுத்துக்கிட்டா எப்படி?''

''என்னை நானே பாராட்டிக்கிட்டது உண்மைதான் ஸார்! ஆனால் தண்ணி போடற பழக்கம் எனக்குக் கிடையாது.''

"அப்படின்னா நீர் இந்தக் காலத்தில் அமைச்சர் ஆவதற்கே லாயக்கில்லாதவர்னு அர்த்தம்!"

"இந்தக் கடைசி ஸ்டேட்மெண்ட் பத்மநாபன் சொன்னது; நான் சொல்லவில்லை! ஞாபகம் வைச்சுக் குங்க" என்றார் நடராஜன், சிரித்துக் கொண்டே. பின்னர், தனராஜின் தோள்களைப் பற்றி "இப்படி வாங்க" என்று தனியே அழைத்துப் போய்ச் சில விநாடிகள் பேசிவிட்டு வந்தார்.

அதற்குள் பத்மநாபன் குடும்பத்தினரும் ரங்கநாதனும் சாப்பாட்டு ஹாலைத் தாண்டி அப்பால் இருந்த பொழுது போக்குக்கான கூடத்தை அடைந்திருந்தனர். ரங்கனும் மீனாவும் பிங்பாங் ஆட ஆரம்பித்தார்கள். விசுவும் அனசூயாவும் கேரம் போர்டை ஒரு கை பார்க்கத் தீர்மானித்தார்கள். பத்மநாபன் 'ஹிந்து'ப் பத்திரிகையைக் கையில் எடுத்துக் கொண்டார். அம்புஜத்துக்கு ஆனந்த விகடனும் கடைசியாக வந்து சேர்ந்த நடராஜனுக்கு ஒரு பழைய கிழிந்துபோன இல்லஸ்ட்டிரேடட் வீக்லியும் அகப்பட்டன.

கால் மணி நேரம் கழித்துத் தனராஜ் வந்து சாப்பிட அழைத்துப் போனார். எல்லாரும் அமர்ந்ததும் ஸர்வர் ஒருவன் தூக்கை எடுத்துக்கொண்டு வந்தான். "இருடா! இருடா! அவசரப்படாதே, போயிட்டு அப்புறம் வா!" என்று அவனை விரட்டி அடித்தார் முதலாளி தனராஜ். பின்னர் தாமே சமையலறைக்குப் போய் ஒரு பாத்திரத் துடன் வந்தார். ஆவி பறந்தது.

"அம்மாவுக்கு இன்னைக்குப் பிறந்த நாள்னு கேள்விப் பட்டேன். நம்ம ஹோட்டலுக்கு வந்து தங்கியிருக்கிற போது நீங்க 'பர்த் டே' கொண்டாடறதில் எனக்கு ரொம்ப சந்தோஷம்" என்று கூறியபடியே சுடச் சுட ரவா கேஸரி

பரிமாறினார். "அவசரத்துக்கு இதைத்தான் செய்ய முடிந்தது" என்று குறைப்பட்டுக் கொள்ளவும் தவறவில்லை அவர்.

இலையில் நெய் மணம் கமகமத்தது. குங்குமப்பூ இங்கொன்றும் அங்கொன்றுமாய் எட்டிப் பார்த்தது. முந்திரிப் பருப்புக்கள் தாராளமாகவே விழுந்திருந்தன.

"நீங்க பண்ணின வேலையா இது? என்னடா தன ராஜைத் தனியா அழைச்சுண்டு போய் ரகசியம் பேசறா ரேன்னு யோசிச்சேன்" என்றாள் மீனா நடராஜனை நோக்கி.

அம்புஜத்துக்கு ரொம்பவும் வெட்கமாகப் போய் விட்டது. மனமும் நெகிழ்ந்துவிட்டது. "சாயந்திரம் கூட ஸைக்கோவைப் பிடிக்காமல் வெறுங் கையோடு திரும்பிய தாக உங்களைக் கேலி பண்ணிப் பேசினேன் நான்" என்று மன்னிப்புக் கேளாமல் கேட்டுத் தளும்பிய கண்ணீரை உடனடியாகத் துடைத்துக் கொண்டு சமாளித்தாள் அவள்.

"சேச்சே, இதெல்லாம் ஒரு தமாஷ்தானுங்களே! சாப்பிடுங்க! ஹாப்பி பர்த் டே!" என்றார் நடராஜன். மற்ற எல்லாரும் ஒரே குரலாக "ஹாப்பி பர்த் டே" கூறிவிட்டு 'ஸ்வீட்'டை ருசி பார்த்தார்கள். விசு, "ஹாப்பி பர்த் டே டு யூ!" என்று நீட்டி முழக்கிப் பாடவே ஆரம்பித்து விட்டான். அந்த மழலையைத் தடுத்து நிறுத்த யாருக்கும் மனம் வரவில்லை. அக்கம் பக்கத்து மேஜைகளில் அப்போதுதான் வந்து உட்கார்ந்தவர்கள் திரும்பித் திரும்பிப் பார்த்ததையும் பொருட்படுத்தாமல் அவனை உரக்கவே பாட அனுமதித்தனர். ஸர்வர் சுடச் சுடச் சப்பாத்தியும் ஸாகுவும் கொண்டு வந்தான். இதர அம்சங்களும் தொடர்ந்தன.

தனராஜ் இரண்டாவது தடவையாக ரவா கேசரிப் பாத்திரத்துடன் ஆஜரானார்.

"ஐயோ! இதுக்கு மேல் தாங்காது!" என்றாள் அம்புஜம். "ஏற்கனவே வெயிட் ஏறிண்டிருக்கு!"

"அட! இப்போ என்னங்க அதைப் பற்றிக் கவலை? மீனா விசாரப்பட்டாலும் அர்த்தம் உண்டு. அது வயசுப் பொண்ணு. உங்க எடை என்னவாயிருந்தாலும் பத்மநாபன் கண்களுக்கு நீங்க ரதிதானே! போடுங்க தனராஜ்! தைரியமாப் போடுங்க!"

"உங்களுடைய ஜீரண மாத்திரைகளுள் ஒன்றை விழுங்கி வைக்க வேண்டியதுதான்" என்றாள் அம்புஜம் தன் கணவனைப் பார்த்து.

அச்சமயம் தனராஜ் பத்மநாபனுக்குக் கேசரி போட்டுக் கொண்டிருந்தார். "சரிதான், இந்த ரேட்டில் போனால் ஜீரண மாத்திரையைக்கூட ஜீரணம் பண்ணச் சக்தி இராது!" என்றார் பத்மநாபன். ஆனால் கை நீட்டி மறுதளிக்க வில்லை அவர்.

"மீனா வெய்ட் ஏறுவது பற்றிக் கவலைப்படுவது நியாயம்" என்று அப்பா சொன்னார். அதனால் அவள் பங்கையும் சேர்த்து எனக்கே போட்டுடுங்க" என்றான் ரங்கன்.

"ஐயோ! உடம்புக்கு ஆகாது!" என்றாள் மீனா.

"இது கரிசனமா? சுயநலமா?" என்று ரங்கன் கேட்டதும் அவள் அடி உதட்டின் ஓர் ஓரத்தை உள்ளுக்கிழுத்துக் கடித்துக்கொண்டு வெட்கப்படாதிருக்கப் பெருமுயற்சி செய்து படுதோல்வி அடைந்தாள்.

"நீ ரங்கன் மாமா இல்லே! இனிமே நீ ஸ்வீட் மாமா!" என்றாள் அனசூயா. "உனக்கு ஸ்வீட் பிடிக்கும்; நீ ஸ்வீட்டாவும் இருக்கே!"

''தாங்க்யூ அனு!'' என்று கூறி அவன் மீனாவைப் பார்த்தான். 'தெரிந்ததா, நான் எப்படிப்பட்டவன் என்று?' என அவன் கண்கள் வினவின.

''ஊறுகாயைக் கொண்டு வாங்க; திகட்டறது!'' என்றாள் மீனா குறும்பாக.

இப்படி உல்லாசமாகப் பேசிச் சிரித்துக் கொண்டே அளவு தெரியாமல் சாப்பிட்டார்கள். பூஜை வேளையில் கரடி நுழைந்தாற்போல் ஓர் இன்ஸ்பெக்டர் அந்தச் சமயம் பார்த்து வந்து சேர்ந்தார். நேராக டி.ஐ.ஜி.யை நெருங்கி ஒரு சல்யூட் அடித்தார்.

நடராஜன் இங்கிதம் தெரிந்தவர். அவரை அந்த இடத்தில் பேச விடவில்லை. ''எக்ஸ்கியூஸ் மீ'' என்று கேட்டுக் கொண்டு எழுந்து வாசலுக்குப் போய்விட்டார்.

பால் போல் பொங்கிய அவர்கள் மகிழ்ச்சி குறைந்து போய்விடக் கூடாது என்றுதான் அவர் அப்படி நடந்து கொண்டார். ஆனாலும்கூட நீரைத் தெளித்த மாதிரி அடங்கித்தான் விட்டார்கள். இன்ஸ்பெக்டர் வந்ததும், இருவருமாகச் சேர்ந்து அப்பால் சென்றதும் அவர்கள் குதூகலத்தைக் குலைத்துவிட்டன.

தயிர் சாதத்தைப் பாதி சாப்பிட்டுக் கொண்டிருக்கும் போது எழுந்து போன டி.ஐ.ஜி. இரவு பன்னிரண்டு மணி வரையில் திரும்பி வரவில்லை. ஆனால் அதற்கு நீண்ட நேரம் முன்பாகவே செய்தி வந்துவிட்டது. ஹோட்டலின் காரியாலய அறைக்குப் போய் விவரம் கேட்டறிந்து கொண்டு பத்மநாபன் தாம் தங்கியிருந்த அறைக்குத் திரும்பியபோது குழந்தைகள் அயர்ந்து தூங்கி விட்டிருந் தனர்.

''என்ன ஆச்சு?'' என்று பரபரப்புடன் கேட்டாள் அம்புஜம்.

''ஏரியில் கரையோரமாகச் சவம் ஒன்று மிதந்ததாம். நீரில் பாதி நிலத்தில் பாதி என்று கிடந்ததாம். இருள் கவிஞ்சு சற்று நேரம் ஆகியிருக்கும் சமயம் யாரோ பார்த்துட்டுக் கூச்சல் போட்டார்களாம். அப்புறம்தான் டி.ஐ.ஜி.க்குத் தகவல் கிடைச்சுப் போயிருக்கார்'' என்று ஏதோ கனவில் பேசுகிறவர்போல் கூறிக்கொண்டு போன பத்மநாபன் திடீரென்று விழித்துக்கொண்டவர் போல் சொன்னார்: ''அம்புஜம்! உனக்கு யார் பிறந்த நாள் பரிசு கொடுத் தார்களோ இல்லையோ;-ஸைக்கோ ஸாரநாதன் கொடுத்து விட்டான்!''

அம்புஜம் விசும்பி விசும்பி அழ ஆரம்பித்துவிட்டாள்.

''அம்புஜம்! அம்புஜம்! நான் தமாஷா சொன்னேன்! ஸீரியஸ்ஸா எடுத்துக்காதே, பிளீஸ்!'' என்று இறைஞ்சுவது போல் கேட்டுக் கொண்டார் பத்மநாபன். அடுத்து அவரது வழக்கமான கிண்டல் எட்டிப் பார்த்தது: ''நாளைக்கே ஸ்பென்சரில் உனக்கு ஒரு காப்பிக் கொட்டை அரைக்கிற மிஷின் வாங்கி பிரஸெண்ட் பண்ணிடறேன்; எனக்கும் சௌகரியமா யிருக்கும்!''

''என்னைக் கேலி பண்ணினதுக்காக அழலை நான். எனக்கு அது பழகிப் போச்சு. ஆனா இப்போ எனக்குப் பயமா இருக்கு. உங்க வாயாலேயே இது ஸைக்கோ ஸாரநாதன் பண்ணின காரியம்னு சொல்லிட்டேள் இல்லையா?''

பத்மநாபனும் அப்போதுதான் அதை உணர்ந்து அதிர்ச்சி அடைந்தார். இதுகாறும் அவர் டி.ஐ.ஜி.யின் கூற்றுத்தான் உண்மை என நம்பி இவையெல்லாம் ஸைக்கோ செய்த கொலைகள் அல்ல என்றே சாதித்து வந்தார். இப்போது அவரையும் அறியாமல் அவரே ஊரார் கருத்தோடு, ஒத்துப் போய்ப் பேசியிருக்கிறார்!

"நாம் போயிடலாமே; நாளைக்கே போயிடலாமே!" என்று தவிப்புடன் சொன்னாள் அம்புஜம்.

பத்மநாபன் அவளை அணைத்து ஆறுதல் கூறினார்: "நம்ம ஒரிஜினல் பிளான்படியே இன்னும் மூணோ நாலோ நாள்தான் பாக்கி. ஃபர்ஸ்ட் க்ளாஸ் ரிஸர்வேஷன் ரெடியா இருக்கு. இப்போ அதைக் கான்ஸல் பண்ணிட்டு மூணாம் கிளாஸிலே அவதிப்பட்டுண்டு போறதைவிட முதலில் போட்ட திட்டத்தின்படியே திரும்பிடலாம். கொஞ்சம் பொறுத்துக்கோ."

கணவனின் அன்பில் கரைந்த அம்புஜம் தலையாட்டிச் சம்மதம் தெரிவித்தாள். ஆனால் இரவு முழுவதும் அவள் தூங்கவேயில்லை!

★ ★ ★

# 26. ப்ரையண்ட் பார்க்

ஏரியைச் சுற்றி அதிகக் கூட்டம் இல்லை. கொடைக் கானலுக்கு அவர்கள் வந்த தினம் எப்படி கலகல வென்றிருந்தது அந்தச் சூழல்! அதில் பாதிப் பேர் கூட இருக்க மாட்டார்கள் இன்று. வெறிச்சோடிப் போய்விட வில்லை என்றாலும் சர்க்கஸ் முடிந்து டேரா தூக்கப்பட்ட இடம் போல்தான் காட்சி தந்தது.

கொடைக்கானலில் சீசன் சமயத்தில் இந்த மாதிரி அதுவரை இருந்ததே கிடையாது என்று உள்ளூர்வாசிகள் சிலர் பேசிக் கொண்டார்கள்.

அன்று காலை தனராஜுும் ஒரு குரல் அழுதுவிட்டார் பத்மநாபனிடம்.

ஏரியில் நடந்த துர்மரணம் பற்றிய செய்தி காலையில் வேகமாய்ப் பரவியதும் மேலும் பத்து அறைகள் காலியாகி விட்டனவாம். 'நல்ல வேளை! நாமாவது திட்டத்தை. மாற்றிக் கொண்டு முன்கூட்டியே கிளம்பாமல் இருக் கிறோமே' என்று நினைத்துக் கொண்டார் பத்மநாபன். அம்புஜம் சொன்னபடி செய்திருந்தால் தனராஜுுக்கு ரொம்ப ஏமாற்றமாகியிருக்கும். அவர் தம் கஷ்டத்தைச் சொல்லி அழுவாவது ஓர் ஆசாமி வேண்டாமா?

பத்மநாபனுக்கு அனுதாபத்துடன் எல்லாருடைய குறைகளையும் கேட்டுக் கொள்ளும் சுபாவமும் இரக்க சிந்தையும் உண்டு. இது பல சந்தர்ப்பங்களில் சோதனை

யாகவும் முடியும். மலைமலையாகத் தமது கடுகத்தனைத் துன்பங்களை வர்ணிப்பவர்களிட மிருந்து தப்பித்துக் கொள்ள முடியாமல் திணறுவார்.

இப்போது சாலை ஓரத்தில் வேர்க் கடலை வாங்கி எல்லாருக்கும் விநியோகித்தவர், "ஏரிக் கரை என்ன? என் பர்ஸ்கூடத்தான் வெறிச் சென்றிருக்கிறது" என்றார் அம்புஜத்தைப் பார்த்து. மெய்யாலுமே மிகவும் மெலிந்து தான் விட்டிருக்கிறது அவருடைய மணிபர்ஸ் என்பதை அம்புஜமும் கவனித்தாள்.

"காப்பிக் கொட்டை மிஷின் வேணுமா? ஸ்பென்சரில் விசாரித்துப் பார்க்கட்டுமா?" என்றார் அவர் சற்றுப் பரிதாபமாக முகத்தை வைத்துக்கொண்டு.

"அதெல்லாம் ஒண்ணும் வேண்டாம். வீட்டில் இருப்பதையே நல்ல படியாக ரிப்பேர் பண்ணி வைக்கச் சொல்லிப் பக்கத்து வீட்டு மாமியிடம் சொல்லிட்டுத்தான் வந்திருக்கேன். விசுவுக்கு ஒரு ஸோப் பேக்கட்டும் புது ஸ்டாக்காக ஒரு ரொட்டியும் அமுல் வெண்ணெயும் வாங்கிண்டு வாங்கோ, போதும்."

"சரி, நீங்க இப்படியே பிரையண்ட் பார்க்குக்கு நடந்து போயிண்டிருங்கோ, வந்து சேர்ந்துக்கறேன்."

"எல்லாரும் ஒண்ணாவே போகலாமே!"

"அடடே! என்ன பயம்? ரங்கன் பின்னோடு இருக்கான். டி.ஐ.ஜி. மகன், சிங்கக் குட்டி! யார் என்ன பண்ணிடு வார்கள் உன்னை?"

"எங்களுக்காகவா, சொல்றேன்? நீங்க தனியா போறேளே!"

"அது கெட்டுது போ! இன்னொரு தடவை சொல்லாதே, வெட்கமாயிருக்கு!"-இப்படி கூறிவிட்டுப் பத்மநாபன் திரும்பி நடந்தார் ஸ்பென்ஸரை நோக்கி. அதற்கு நேர்

*எதிர்த்திசையில மற்றவர்கள் ப்ரையண்ட் பார்க்கைப் பார்க்க நடந்தார்கள்.*

*''ஊட்டியில் பொட்டானிகல் கார்டன் பார்த்திருக் கேளா? அது இந்த ப்ரையண்ட் பார்க்கைவிடப் பிரமாத மாக இருக்கும்!'' என்றான் ரங்கன்.*

*''உம்... எப்பவோ எங்களுக்குக் கல்யாணம் ஆன புதுசுலே ஒரு தரம் போயிருக்கோம். மீனாகூடப் பொறக் கலை அப்போ.''*

*''ஓ! ஹினிமூனா! ஏம்மா! எங்கிட்டே சொல்லவே இல்லையே நீ'' என்றாள் மீனா குறைப்பட்டுக் கொள்கிற தோரணையில்.*

*''ஆமாண்டி! ஹனிமூன் போயிட்டு வரேன்னு பொண்ணுகிட்டே சொல்லிண்டு கிளம்ப முடியுமாக்கும்! இது என்ன அமெரிக்காவா? பிரிட்டனா?''*

*''அமெரிக்காவில் மட்டும் அது எப்படிச் சாத்தியமாகக் கூடும் மாமி?''*

*''சரியான டியூப் லைட்!'' என்ற மீனா சிரித்துக் கொண்டே விளக்கினாள்: ''அங்கே டைவர்ஸ் பண்ணிட் டுப் புது ஆம்படையானோடே தேன் நிலவு கிளம்புவா, குழந்தைகளுக்கு டாட்டா சொல்லிட்டு. மூத்தது மற்றது களைக் கவனிச்சுக்கணும்.''*

*''அது சரி என்னமோ 'டியூப் லைட்' டுன்னியே, அப்படின்னா?'' -அம்புஜம் வினவினாள்.*

*இப்போது ரங்கன் சிரித்தான். ''ஒரு ஜோக்கைப் பளிச்சுன்னு புரிஞ்சுக்காம என்னதுன்னு கேட்கிறவங்களை ட்யூப் லைட்டுன்னு சொல்றது. அது எரியலாமா வேண்டாமான்னு கொஞ்ச நேரம் மினுக்கு மினுக்குன்னு யோசிக்கும். பிறகுதான் ஒளி சிந்தும், இல்லையா?''*

*"நீ விளக்கம் கேட்டதுக்காக உன்னை ட்யூப் லைட்டுன்னு சொல்றாளா இவள்! பொல்லாது! ரொம்பத் துளுத்துப் போயிடுத்து!"*

*"நீ டியூப் லைட்டுக்கே விளக்கம் கேட்டுட்டுயே அம்மா!" என்றாள் மீனா, அடக்க மாட்டாமல் சிரித்துக் கொண்டு.*

*"ஆமாண்டி! நானும் ரங்கனும் டியூப் லைட்டுகள்தான். நீதான் பெரிய மேதாவி, போ!"*

*"அவ கிடக்கிறா மாமி, விட்டுத் தள்ளுங்க. நம்மைக் கேலி பண்ணினதுக்குத் தண்டனையா அவளுக்கு டெலஸ் கோபிக் லென்ஸ் பொருத்தின காமிராவைக் காட்டற தில்லை இன்னைக்கு!" ஒரு குழந்தையைச் சமாதானப் படுத்துவது போல் இப்படி அம்புஜத்திடம் வேடிக்கையாக அவன் கூறினானே ஒழிய ப்ரையண்ட் பார்க்கைச் சென்றடைந்து, ஒரு மர நிழலில் போட்டிருந்த ஆசனத்தில் அமர்ந்து, ஆஷாஹி பென்டாக்ஸ் காமிராவில் இருந்த லென்ஸைக் கழற்றிவிட்டு டெலி லென்ஸைப் பொருத்தி யதும் காமிராவை முதலில் அவன் மீனாவிடம்தான் தந்தான். அதற்கு முன்பாக அம்புஜத்தின் கவனத்தைத் திருப்ப கோக்கர்ஸ் வாக்கில் தான் அவர்களை எடுத்திருந்த புகைப்படங்களை அவளிடம் கொடுத்தான். "அனசுயா வுக்கு இங்கேதானே ஒரு கண்டம் வந்து தெய்வாதீனமாகத் தப்பிச்சாள்? இந்தப் போட்டோக்களைப் பத்திரமா வைச்சிருந்து அவள் பெரியவளானப்புறம் காட்டணும்" என்றாள் அம்புஜம்.*

*"நீங்க வைச்சுக்கிடுங்க. நான் வேறே பிரிண்ட் போட்டுக் கறேன்" என்றான் ரங்கன்.*

*"அதோ அனுவும் விசுவும் குதிரை மேலே வராளே. எவ்வளவு கிட்டத்திலே தெரிகிறது!" என்றாள் மீனா. டெலிலென்ஸ் பொருத்தப்பட்ட காமிராவில் தொலைவில்*

வந்து கொண்டிருந்த அனுவும் விசுவும் பக்கத்தில் இருப்பது போல் தோன்றினார்கள்.

"எங்கே, நான் பார்க்கிறேன்" என்று அம்புஜம் சொன்னாள். காமிராவும் புகைப்படங்களும் கை மாறின.

குழந்தைகள் இருவரையும் தனியே அனுப்பவே அம்புஜத்துக்குத் தயக்கம் தான். ரங்கன் தைரியம் சொல்லி அனுப்பினான். குதிரைக்காரனையும் பத்திரமாக இருக்கும் படி எச்சரித்தான். "ரொம்ப தூரம் போக வேண்டாம்" என்றாள் அம்புஜம்.

ப்ரையண்ட் பார்க் எதிரே மட்டக்குதிரைகளை வைத்துக் கொண்டு, "பாப்பா! ஹார்ஸ் ரைட்! ஜாலி ரைட்" என்று கூறி ஆசை காட்டிக் கொண்டிருந்தனர் சிலர். ரங்கன் விசுவையும் அனுவையும் குதிரையின் மீது உட்கார வைத்து ஃபோட்டோ எடுக்க எண்ணினான். அதற்கென்று பத்து காசோ பதினைந்து காசோ கொடுத்து விடலாம் என்று தீர்மானித்து அவர்களை ஏறிக்கொள்ளச் செய்தான். படம் எடுத்தானதும் குழந்தைகள் இறங்க மறுத்தார்கள். "ஃபுல் ரவுண்ட் வேண்டாம், ஹாஃப் ரவுண்ட் போதும், பிளீஸ்!" என்றாள் அனு. விசுவும் பிடிவாதம் செய்தான்.

"அப்பா வரட்டும், அப்புறம் போகலாம்" என்று அம் புஜம் சொல்லிப் பார்த்தாள். அவளுக்குக் கலக்கமாயிருந்தது. நேற்று இரவு முதலே அவள் எதற்கெடுத்தாலும் பயந்து செத்துக் கொண்டிருந்தாள். ரங்கன் அவள் ஐயங்களைப் போக்கும் விதமாகப் பேசிய பின்னர், அரை மனத்தோடு சம்மதித்தாள்.

இப்போது டெலிலென்ஸ் பொருத்தப்பட்ட காமிரா மூலம் குழந்தைகள் திரும்பி வந்து கொண்டிருப்பதைப் பார்த்தபோது அவளுக்கு நிம்மதி பிறந்தது.

''உன் அப்பா வருகிறாரோ பார்க்கிறேன்'' என்று காமிராவை இப்படியும் அப்படியுமாய் நகர்த்தி சாலையைச் சலித்தெடுத்தாள். பத்மநாபனைக் காணோம். ''சீக்கிரம் வந்துட்டால் தேவலை. நாழியாறதே!'' என்றாள் அம்புஜம்.

''நாழியுமாகலை, ஒண்ணுமாகலை, இப்போதானே வந்தோம்?'' என்றாள் மீனா. ''பார்க்கைச் சுற்றிப் பார்க்கக் கூட ஆரம்பிக்கலை இன்னும்.''

ரங்கன் எழுந்தான். நீண்ட டெலிலென்ஸ் பொருத்தப் பட்ட காமிரா எதன் மீதும் இடித்து விடாமல் ஜாக்கிரதை யாகப் பிடித்துக் கொண்டு, ரோஜாச் செடிகள் ஏராளமாகப் பயிராகியிருந்த இடத்தை நோக்கி நடந்தான். அம்புஜமும் மீனாவும் பின் தொடர்ந்தார்கள்.

அந்த ரோஜாக்களில்தான். எத்தனை ரகங்கள்! எத்தனை நிறங்கள்! எத்தனை அளவுகள்! அவற்றுக்கு எத்தனை பெயர்கள்!

கரேல் என்று ஒன்று, காப்பிக் கொட்டை நிறத்தில் ஒன்று; செக்கச் செவேல் என்று ஒன்று; வெள்ளை வெளேர் என்று ஒன்று; மஞ்சளாக ஒன்று, மங்கிய ஊதா நிறத்தில் ஒன்று-இப்படி தினுசு தினுசாகப் பூத்துக் குலுங்கின.

''பலவித ஜாதிகளா யிருந்தாலும் எல்லாமே ரோஜாக்கள் தான் மாமி!'' என்றான் ரங்கன்.

ட்யூப் லைட்டாக இருந்து புரிந்து கொள்ளச் சிரமப்பட வில்லை அம்புஜம். பளிச்சென்று பதில் சொன்னாள்: ''எல்லாமே ரோஜாதான். ஆனால் எல்லாவற்றையும் எதற்கு வேணுமானாலும் பயன்படுத்துகிறோமா? தலையில் சூடிக் கொள்ளலாம், இந்த வெள்ளை ரோஜாவை, மணமாலை கட்டவா செய்கிறோம்?''

அம்புஜத்தின் சாமர்த்தியம் ரங்கனை அயர வைத்துத் துயரமும் தந்தது. அதை மறைத்துக்கொண்டு அப்பால்

சென்றான். ஃப்ளாக்ஸ் மலர்கள் கண்ணைப் பறிக்கும் பலவித நிறங்களில் காணப்பட்டதோடன்றிப் பலப் பல நிறங்களைத் தன்னகத்தே தாங்கி நின்ற தனித் தனிப் பூக்களும் இருந்தன.

"ஒட்டுப் போட்டு ஒட்டுப் போட்டுத்தான் இப்படி ஒரு பூவிலேயே பல நிறங்களைத் தோற்றுவிக்கிறார்கள். அழகாயில்லையா, என்ன?" என்றான் ரங்கன்.

"பேஷா இருக்கு" என்றாள், அம்புஜம். "ஆனால் எதுவும் ஓர் அளவோடு நிற்கணும். முந்தாநாள் பேப்பரில் ஒரு செய்தி வந்தது பார்த்தாயா? திருச்சூர் மிருகக்காட்சிச் சாலையிலே ஓர் அப்பா சிங்கத்துக்கும் அம்மா புலிக்கும் 'லைகர்' குட்டி பிறந்ததாம்! லயனுக்கும் டைகருக்கும் பிறந்ததால் அதை 'லைகர்' என்கிறார்கள். எவ்வளவோ நாகரிக முன்னேற்றம் அடைந்துவிட்டதாகச் சொல்லிக் கொள்கிறோம். ஆனால் இயற்கைக்கு விரோதமான இத்தகைய சிருஷ்டிகளை அநாகரிகத்தின் எல்லை என்றுதான் கருதுகிறேன். மனிதன் எதற்காக இப்படிப்பட்ட அசுரத்தனங்களில் ஈடுபட வேண்டும்?"

அம்புஜத்தை அத்தனை சுலபமாகத் தன் வழிக்குக் கொண்டு வர முடியாது என்று உணர்ந்தான் ரங்கன்.

சற்று அழுத்திவிட்டால் வாய் திறந்து மூடும் ஸ்நாப் டிராகன் மலர்கள், தாம்பாளம் போல் பெரிது பெரிதாகப் பல நிறங்களில் பூத்திருந்த தாலியாக்கள் ஆகியவற்றுக்கு அப்பால் மஞ்சள் பாப்பி செடிகள் தங்கத்தாலான சிறு மதுக் கிண்ணங்கள்போல் காட்சி அளித்தன. ஆனால் இவை இலேசானதால் பூங்காற்றில் மெல்ல அசைந்தன. "காகிதப்பூ போன்றிருந்தாலும் எத்தனை அழகு!" என்றாள் மீனா. "அதோ சிவப்பு நிறத்திலும் இருக்கின்றன!"

"அழகாயிருப்பவை பல, ஆபத்தானவையும் கூட" என்றான் ரங்கன். "இந்தப் பாப்பியிலிருந்துதான் போதைப்

பொருளான ஓபியம் எடுக்கிறார்கள். தெரியுமில்லையா? அதோ ஃபாக்ஸ் க்ளவ் மலர்களைப் பார்! லிட்டில் ஃபோக்ஸ் க்ளவ் (Little Folk's glove) என்பதுதான் ஃபாக்ஸ் க்ளவ் (Fox's glove) என்று மறுவிவிட்டதாம். சின்னச் சின்ன வனதேவதைகள் அணியும் கையுறைகள் போலத்தானே அவை தோன்றுகின்றன. மனோரயமேமாய் இல்லையா காண்பதற்கு? ஆனால் அதிலிருந்துதான் டிஜிடாலிஸ் என்கிற விஷம் இறக்குகிறார்கள். இவையே சிறிய அளவில் மருந்துப் பொருளாகவும் பயன்படுகின்றன.''

''ஆச்சரியம்தான்'' என்ற அம்புஜம், ரங்கா! குழந்தைகள் என்ன பண்ணுகிறார்கள், பார்!'' என்றாள்.

குதிரையை விட்டு இறங்கி வந்த அவர்கள் சற்று முன்னால்தான் அம் மூவருக்கும் 'டாட்டா' சொல்லிவிட்டு, எழில் மயமான தாமரைக் குளத்தைத் தாண்டி அப்பால் ஊஞ்சலும் சறுக்கு மரமும் இருந்த பசும்புல் வெளிக்குச் சென்றிருந்தார்கள். ரங்கன் காமிராவைத் தன் முகத்துக்கு எதிரே உயர்த்திப் பார்த்தான். ''சமர்த்தாக விளையாடு கிறார்கள் மாமி! கவலைப்பட வேண்டாம்'' என்றான். சட்டென்று அவனுக்கு இன்னொரு விஷயமும் காமிராவில் புலனாயிற்று.

நேற்றையதினம் அனசூயாவின் காமிராவை உடைத்துப் போட்டு அவள் கோபத்தையும் வருத்தத்தையும் சம்பா தித்துக் கொண்டிருந்த ஹிப்பி அமிர்தலிங்கம், இப்பொழுது கணப்பொழுதில் அவளுக்குச் சிநேகமாகி அவளுடன் விளையாடிக் கொண்டிருந்தான். நடந்து போனதை மறப்பது குழந்தைகளுக்குச் சிரமமில்லையே! அவன் எப்போது அந்தப் பூங்காவுக்குள் நுழைந்தானோ தெரியாது; இப்போது அனுவுக்கு ஊஞ்சல் ஆட்டி உதவியது நன்றாகத் தெரிந்தது.

இதை மற்ற இருவருக்கும் உணர்த்திய ரங்கன் தொடர்ந் தான்: ''அவனை அவள் ஃபோட்டோ எடுத்தாள் என்று கோபித்துக் கொண்டுதானே அவள் காமிராவை உடைத் தெறிந்தான்? இப்போ டெலிலென்ஸ் பொருத்திய இந்தக் காமிராவால் அவன் அறியாமலேயே அவனைப் படமெடுக் கிறேன்! என்ன செய்வான்? நீங்கள் யாரும் அவனிடம் விஷயத்தைச் சொல்லாதீர்கள். ரகசியமாகவே இருக்கட்டும். 'என்லார்ஜ்மெண்ட்' போட்டு அவனுக்குக் காட்டித் திகைக்க வைக்கப் போகிறேன்!''

ரங்கன் காமிராவை 'ஃபோக்கஸ்' செய்து 'டைம் அட்ஜஸ்ட்' பண்ணி 'கிளிக்' பண்ணினான். சில வினாடி களுக்குப் பிறகு அமிர்தலிங்கம் தன் முகம் நன்றாகத் தெரிவதுபோல் சற்று நகர்ந்ததும் மற்றொரு கிளிக். ஐந்து நிமிஷங்களுக்குள் பத்துப் பன்னிரண்டு படங்கள் எடுத்து விட்டான் ரங்கன்.

'ஒன்றிரண்டு படங்கள் போதாவா? அந்த ஹிப்பியைப் போய் எதற்கு இத்தனை படங்கள் எடுக்க வேண்டும்?' என்று எண்ணிக்கொண்டாள் மீனா.

★ ★ ★

# 27. இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா!

**தி**ண்டுக்கல்லில் 'பரமகுரு எண்டர்பிரைஸஸ்' ரொம்பப் பிரபலம். பரமசிவமும் குருசாமியும் அந்நிறுவனத்தின் பாகஸ்தர்கள். வருஷத்தில் ஏழெட்டு லட்சம் ரூபாய் வரை பணம் புரளுகிற பெரிய கம்பெனியாக வளர்ந்து விட்டது. ஆனாலும் வரிகளெல்லாம் கொடுத்தது போக லாபம் என்று இருவரும் பங்கு பிரித்துக்கொள்வது 'டர்ன் ஓவ'ரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் சொற்பம்தான். எனினும் மோட்டார் சைக்கிள் முதல் பற்பசை வரை பல பொருள்களுக்கு ஏஜென்ஸி எடுத்துப் பரமசிவமும் குருசாமியும் ஊக்கத்துடன் வியாபாரம் செய்தார்கள். பரமசிவத்துக்குக் குருசாமியைவிடப் பத்துப் பதினைந்து வயது அதிகம். இவருக்குச் சுமார் நாற்பது என்றால் அவருக்கு ஐம்பத்தைந்தோ ஆறோ இருக்கும்.

கொஞ்ச நாட்களாகப் பெரியவருக்குக் குருசாமியிடம் நம்பிக்கை குறைந்துவிட்டது. வியாபாரம் பெருகியதும் குருசாமி 'தாம் தூம்' என்று செலவு செய்ய ஆரம்பித்திருந்தான். டின்னர், காக்டெய்ல் பார்ட்டி என்றெல்லாம் பணத்தை வாரி விட்டான். பரமசிவம் நயமாகச் சொல்லிப் பார்த்தார். சின்னவன் சிரித்தான். "உங்களுக்கு மாடர்ன் பிஸினஸ் மெதட்ஸ் தெரியலை. குண்டுச் சட்டியில் குதிரை ஓட்டிக்கிட்டிருந்த காலம் மலை ஏறிடுச்சு. நான் என்ன

*தண்டச்சோறா போடுகிறேன்? பிஸினஸ் டின்னர்தான் அவ்வளவும். சாப்பிட்டுக்கிட்டே வியாபாரத்தை அபி விருத்தி பண்ணறது பற்றித்தானே பேசறோம்?"*

*"அது சரி, நாலு நாட்கள் முன்னாடி ஒரு கேஸ் பீர் வாங்கியிருக்கியே, அதுவும் வியாபார நோக்கில்தானா?"*

*"பின்னே? நாம் ஏஜென்ஸி எடுத்திருக்கிற கம்பெனிக் காரங்க பம்பாயிலே யிருந்தும் கல்கத்தாவிலே யிருந்தும் வர்றாங்க. அவங்களுக்குக் கோலி சோடா ஒடைச்சுத் தரச் சொல்றீங்களா? அதிலேருந்து விடுபட்டு வர காஸ் மாதிரி நம்ம வியாபாரமும் புஸ்ஸுன்னு போயிடும். அவங் களோடே நாம பண்ணிக்கிட்ட 'காண்ட்ராக்ட்' முடியற சமயம் வேறே நெருங்கிக்கிட்டிருக்கு."*

*பரமசிவத்துக்கு இதில் நியாயம் இருப்பதாகப் பட வில்லை. வியாபாரம் செழிக்க நம்பிக்கையும் நாணயமும் தான் முக்கியம் என்ற கொள்கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தவர் அவர். இப்போது நாணயம் குருசாமியை விட்டுப் போய்விட்டது. இரண்டு டின்னர் கொடுத்துவிட்டு ஆயிரம் ரூபாய் கம்பெனிக் கணக்கில் எழுதினான் அவன். அவருக்குத் தெரியும், குறைந்தது ஐந்நூறாவது அவன் பாக்கெட்டில் போட்டுக் கொண்டிருப் பான் என்று. ஒரு கேஸ் பீரோ, அரை கேஸ் விஸ்கியோ வாங்கினால் ஒரு வேளைக்கு வரும் விருந்தினர் அத்தனை யையும் குடித்துத் தீர்த்து விடுவது சாத்தியமில்லை. பாக்கி குருசாமி வீட்டில் ஃபிரிஜ்ஜில் அடைக்கலம் புகுந்து அடுத்த பத்து இருபது நாட்களுக்கு இவனுக்கும் இவனது ஆப்த நண்பர்களுக்கும் கண்டு வருகிறது என்பது பரமசிவத்துக்கு நன்றாகப் புரிந்தது.*

*பழகின தோஷத்தால் பெரியவருக்குச் சட்டென்று துண்டித்துக் கொண்டு போய்விடவும் பிடிக்கவில்லை.*

'திருந்த மாட்டானா' என்று ஏங்கினார்; பிரார்த்திக்கவும் செய்தார்.

ஒரு நாள் மளிகைக் கடைச் செட்டியார் வந்திருந்த போது "இரண்டாயிரத்துச் சொச்சம் பாக்கி நிற்கிறதே, கவனிக்கப்படாதா?" என்று கேட்டு வைத்தார் பரமசிவம்.

"செக்குப் போட்டு அனுப்பி இரண்டு வாரம் ஆச்சுங் களே" என்றார் செட்டியார். "அப்புறம் தம்பிக்கு ஃபோன் பண்ணி வந்து சேர்ந்துதான்னுகூடக் கேட்டுக்கிட்டேனே!"

"அப்படியானா சரி. நான் பழைய ஞாபகத்திலே சொல் றேன் போலிருக்கு" என்று சட்டெனப் பேச்சைத் திசை திருப்பி விட்டார் பரமசிவம். செட்டியார் எதிரே அவர் குருசாமியை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. அவர் போன பிறகு பரமசிவம் கணக்குப் பேரேட்டையும் பாங்கு பாஸ் புத்தகம், சலான் புத்தகம் முதலானவற்றையும் ஆராய்ந்தார். குறிப்பிட்ட அந்தத் தொகை வரவு வைக்கப்படவில்லை. பாங்குக்குச் சென்றார் பரமசிவம்.

கம்பெனிக்கு எந்த பாங்கில் கணக்கு உண்டோ அதே பாங்கில் குருசாமிக்கும் பரமசிவத்துக்கும் தனித் தனி, தனி நபர் கணக்குகளும் இருந்தன. பாங்க் மானேஜருக்கு பரமசிவத்தினிடம் ரொம்ப மதிப்பு. "நானே உங்களுக்கு ஃபோன் பண்ணிக் கேட்கணும்னு இருந்தேன்" என்று தொடங்கிய அவர், கம்பெனி பெயரில் வந்த சில செக்குகளைக் குருசாமி தனது சொந்த கணக்கில் போட்டுக் கொண்டான் என்ற தகவலைச் சொன்னார்.

குருசாமி ஏதேதோ தீய பழக்கங்களுக்கு அடிமையாகி விட்டான் என்பது பரமசிவத்துக்குப் புரிந்தது. அதனால் அவனுக்குக் கம்பெனியிலிருந்து தர்ம நியாயமாகக் கிடைக்கும் தொகை போதவில்லை. தில்லுமுல்லுகளில் பெரிய அளவில் இறங்கிவிட்டான்.

கம்பெனி சார்பில் பாகஸ்தர்களில் யாரேனும் ஒருவர் கையெழுத்துப் போட்டால் போதும் என்ற ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தது. 'அகவுண்ட் பேயி' என்று போடாமல் விடப்பட்ட செக்கின் பின்புறம் பணத்தைக் குருசாமியிடம் கொடுக்கவும் என்று எழுதிக் குருசாமியே கம்பெனி சார்பில் கையெழுத்திட்டுத் தன் கணக்கில் கட்டிக் கொண்டான்; பின்னர் ரூபாயாகவும் பெற்றுச் சென்றான்.

"மேற்கொண்டு இதை நான் அனுமதிக்க முடியாது" என்றார் பாங்க் மானேஜர். "ஏதோ ஒரு தடவை இரண்டு தடவைன்னா பரவாயில்லை. 'போகட்டும்'னு விடலாம். இதோடு மூன்று நாலு தடவை ஆயிடுச்சு. உங்க சம்மதத்தின் பேரில்தான் இப்படி செய்ததாக அடிச்சுச் சொல்றான். என்னை இதுபோன்ற தர்மசங்கடங்களில் இழுத்து விடாதீர்கள் மிஸ்டர் பரமசிவம்.

இவ்வாறு அங்கலாய்த்துக் கொண்ட பாங்க் மானேஜரை, இனி இப்படி நேராமல் தாம் கவனித்துக் கொள்வதாக சமாதானப் படுத்திவிட்டு திரும்பினார் பரமசிவம். தாம் ஏமாந்து போனது பற்றி அவர் அவ்வளவாகக் கவலைப்படவில்லை. பணம் நஷ்டமாயிற்றே என்றும் வருத்தப்படவில்லை. குருசாமி இப்படியாகி விட்டானே என்றுதான் விசனித்தார். சொந்தச் சகோதரன் போல் பழகி விட்டிருந்த அவனை அவர் வற்புறுத்திக் கொடைக்கானலுக்கு அழைத்துப் போனார். 'ஹெவன்லி லாட்ஜி'ல் தங்கிப் புத்திமதி சொன்னார். அவன், தான் தனியே பிய்த்துக் கொண்டு போகத் தயார் என்றான். கம்பெனியைத் துண்டாடவா அவனை இங்கு அவர் அழைத்து வந்தார்? அன்பாக அறிவுரைகள் வழங்கினார். "உனக்கு என்ன நேர்ந்தது? என்ன சங்கடத்தில் சிக்கிக் கொண்டிருக்கிறாய்? என்னிடம் சொல்லு; அண்ணனாக எண்ணிக் கொள்" என்றார் பரமசிவம். குருசாமிக்குப் போர் அடித்தது.

அவனுடைய அலுப்பையும் சலிப்பையும் நீக்கத்தானோ என்னவோ அன்று மாலை சந்திராவை அவர்கள் சந்திக்க நேர்ந்தது. ஒரே ஒரு மாலை நேர அனுபவம்தான். ஆனால் அந்தச் சிறு பொழுதுக்குள் என்னவெல்லாம் நடந்து விட்டன!

சுமார் ஐந்தரை மணிக்குப் பரமகுரு நிறுவனத்தின் பாகஸ்தர்கள் இருவரும் ஒரு படகை எடுத்துக் கொண்டு ஏரியில் மிதந்து சென்றார்கள். அந்த உல்லாச வேளையிலும் பரமசிவத்துக்குக் கம்பெனியின் நினைவுதான்; குருசாமி திருந்த வேண்டுமே என்ற கவலைதான். அந்த எண்ணத்தில் அவர் பேசிக் கொண்டே போனார். துடுப்புப் போட்ட குருசாமி எதையும் காதில் வாங்கிக் கொள்ளவேயில்லை. அவர் உபதேசம் பண்ணப் பண்ணக் கையிலிருந்த துடுப்பாலேயே அவர் மண்டையில் ஒரு போடு போட்டால் என்ன என்றுகூட எண்ணினான். அந்தத் தருணத்தில் ஏரியின் எல்லையில் கலகலப்பான பேச்சும் சிரிப்பும் அமர்க்களப் பட்ட தானது அவன் கவனத்தைக் கவர்ந்தது. அவன் கண்கள் கரையோரச் சாலையில் ஆர்ப்பாட்டம் செய்து கொண்டிருந்த என்.ஸி.ஸி. பெண்கள் கோஷ்டியை வட்டமிட்டுச் சுழன்றன. படகை அவன் கரையை நோக்கிச் செலுத்தலானான்.

கண்ணாடித் திரையில் பார்வை ஊடுருவுவது போல் அவன் மனத்தைச் சுலபமாகப் படித்துவிட்டார் பரமசிவம். 'அந்தப் பெண்களிடம் ஏதாவது வம்பு வளர்க்க முடியுமா என்று சோதிக்கத்தான் செல்கிறான் இவன். சே! அவர்களும் இவனுக்குச் சளைத்தவர்களாகத் தோன்றவில்லையே! ஈடு கொடுக்கக் கூடியவர்களாகத்தான் தென்பட்டார்கள்!'

அவருக்கு இக்காலத்திய அல்ட்ரா மாடர்ன் கல்லூரி மாணவிகளிடம் அவ்வளவாக மதிப்புக் கிடையாது. நங்கமான பெண்கள் எவ்வளவோ பேர் இருக்கத்தான்

செய்தார்கள். ஆனால் அடக்கத்தை அடிமைத்தனத்தோடு குழப்பிக் கொண்டு அநேகர் தவறிழைக்கிறார்கள் என்று அவர் கருதினார். பாரத நாட்டையே ஒரு பெண் ஆளும் போது யாரேனும் பெண் சுதந்திரத்தை மதிக்கத் தயங்கு வார்களா? ஆனால் அந்தச் சுதந்திரம் பல தருணங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்று அவர் கருதினார். ஆடை அணி அலங்காரங்களில் மட்டுமல்ல; பெரிய நகரங் களில் சாலையில் ஒருவன் தனியே காரிலோ, மோட்டார் சைக்கிளிலோ சென்றால், இன்றையக் கல்லூரிப் பெண்கள் கொஞ்சம்கூடக் கூச்சமின்றி அவனைத் துணிந்து லிஃப்ட் கேட்குமளவுக்கு அடக்கம் இழந்துவிட்டார்கள். இவன் தான் யாராவது தன்னை ஒரு பெண்ணுடன் சேர்த்துப் பார்த்துவிட்டு ஏதாவது கதை கட்டிவிடப் போகிறார்களே என்று பயந்து நிற்காமல் ஓட்டிச் செல்ல வேண்டிய வனாயிருக்கிறான்! அப்படிப் போகிறவனை 'ஸ்குவேர்' என்றும் கோழை என்றும் இவர்கள் கேலி செய்தார்கள். சுதந்திரமென்பது அடக்கமின்மை அல்ல என்று இவர் களுக்கு யார் எடுத்துச் சொல்வது? தமது வயது காரண மாகவோ அல்லது பெண் குலத்திடம் உண்மையான அக்கறை கொண்டிருந்ததாலோ எவ்வாறாயினும் சரி, பரமசிவத்தின் அபிப்பிராயம் இதுவாகத்தான் இருந்தது. அதுவும் இன்றைக்கு அவர் இந்த என்.ஸி.ஸி. பெண்களைப் பார்த்துவிட்டுத் தலையில் அடித்துக் கொள்ளப் போனவர் ரொம்பப் பிரயத்தனப்பட்டுத் தம்மைக் கட்டுப் படுத்திக் கொண்டார்.

"ஏற்கெனவே அடக்கத்துக்கு டாட்டா சொல்லியாச்சு; இன்னும் ராணுவ உடையோடு நடையும் பயின்று துப்பாக் கியும் பிடிச்சாச்சுன்னா அப்புறம் சுட்டுப் போட்டாக் கூடப் பெண்மைக் குணம் எதுவும் எட்டிப் பார்க்காதே! பெரிய வங்க வகுத்த நாலு வகை லட்சணங்களுக்கும் முழுக்குப்

*போட்டாச்சு!" என்று இவர் குருசாமியிடம் கூறிக் கொண் டிருக்கும் போதே படகு கரையை மிகவும் நெருங்கி விட்டது.*

*"தாத்தா! என்னையும் படகில் ஏற்றிக்கிடறீங்களா?" என்று சாலைப் புறமிருந்து கேட்ட குரல் அவரைத் திடுக்கிட வைத்தது. முகம் சிவக்க நிமிர்ந்து பார்த்தார் பரமசிவம்.*

*கரையிலிருந்த ஏழெட்டுப் பெண்களில் மற்றவர்களைக் காட்டிலும் செழிப்பான தோற்றமுடைய ஒருத்திதான் எல்லாருக்கும் முன்னால் நின்று அவரை அந்தக் கேள்வியும் கேட்டிருக்கிறாள்! தமக்குக் கொஞ்சம் தலை நரைத்து விட்டது என்னவோ உண்மைதான்; ஆயினும் இவ்வளவு பெரிய பெண், மொழுமொழுவென்று ஐந்தரை அடி உயரம் வளர்ந்து விட்டிருப்பவள், தன்னைத் தாத்தா என்று அழைக்கும் அளவுக்குத் தனக்கு வயதாகி விட்டதா? பரமசிவத்தை அவமானம் பிடுங்கித் தின்றது. பல்லைக் கடித்துக்கொண்டு அவர் கோபத்தை விழுங்க முயன்றார்.*

*இதற்கிடையில் குருசாமி அட்டகாசமாகச் சிரிக்க ஆரம்பித்து விட்டான். படகைக் கொக்கி போட்டது போலக் கரைப் பக்கம் இழுத்துக் கொள்ளவும், நிலத்தைக் குத்திப் படகை நீரில் தள்ளிக்கொள்ளவும் ஒவ்வொரு படகிலும் ஓர் ஆயுதம் உண்டு. அதைப் பயன் படுத்திப் படகைக் கரையில் முட்டிக்கொண்டு நிற்கச் செய்தான் சின்னவன். பக்கத்தில் நின்றவளைப் பார்த்துச் சொன்னான்: "இந்தப் படகு இரண்டு பேர் ஏறத்தான் ஏற்பட்டது. பேத் திக்குத் தாத்தா மடியில் உட்கார ஆசைன்னா தாத்தாவுக்கு ஆட்சேபணை இல்லை!"*

*உடனிருந்த தோழிகள் அவளை 'ஹோ ஹோ ஹோ' என்று ஒரேயடியாக 'வாரி' விட்டார்கள். முதலில் துடுக் காகப் பேசியவளுக்குக் குருசாமி விட்ட சவாலை ஏற்பதா*

வேண்டாமா என்ற தர்மசங்கடமான ஒரு நிலை ஏற்பட்டுப் போயிற்று.

"ஏம்மா குழந்தை பயமா இருக்கா?" என்றான் குருசாமி.

'ஹோ! ஹோ!' என்ற ஏளனக் கூக்குரல் மறுபடியும் அவள் சிநேகிதிகளிடமிருந்து கிளம்பியது. அவளால் இதைப் பொறுக்க முடியவில்லை. "தாத்தா பக்கத்தில் இருக்கிறப்போ எனக்கென்ன பயம்?" என்று கேட்டபடி படகில் இறங்கிவிட்டாள். குருசாமி வேண்டுமென்றே அச்சமயத்தில், கொக்கி போட்டது போல் படகைக் கரையோடு இழுத்துப் பிடித்திருந்த கூரிய ஆயுதத்தை உள்ளுக்கு இழுத்துக்கொள்ளவே, படகு ஒரேயடியாக அசைந்தாட அவள் பரமசிவத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள், தான் தண்ணீரில் விழுந்து விடாதிருக்க.

ஏற்கெனவே வெலவெலத்துப் போயிருந்த பரமசிவம் மேலும் தவித்துப் போனார். தாலி கட்டிய மனைவியைத் தவிர அவர் இத்தனை ஆண்டுகளில் வேறு ஒரு பெண்ணைத் தவறிக்கூடத் தொட நேர்ந்ததில்லை. சமீப காலமாக அவர் தம் மனைவியைக்கூட அதிகமாக நெருங்கியதில்லை. இப்போது இந்தத் திடீர் ஸ்பரிசத்தினால் இன்பமயமான உணர்ச்சி அலைகள் உடல் முழுதும் ஜிவ்வென்று பாய்ந்தன. அதே சமயம் சொல்லி முடியாத கூச்சமும் அருவருப்பும் அடைந்தார். அந்தப் பெண்ணோ அவர் சற்று வயதானவர் என்பதால் ரொம்ப சுவாதீனமாக நடந்து கொள்வதுபோல் காட்டிக் கொண்டு அவருக்குப் பக்கத்தில் இடித்த மாதிரி உட்கார்ந்து "ஒகே! போகலாம்!" என்றாள்.

மற்றொரு படகில் இருந்தபடி இதையெல்லாம் கவனித்துக் கொண்டிருந்த போட் கிளப்பைச் சேர்ந்த ஒரு படகுக்காரன் கூறினான்: "நீங்க செய்யறது நியாயம் இல்லீங்க. ஒவ்வொரு படகிலும் எத்தனை பேர் ஏறறாங்கன்னு

பார்த்துத் துறையிலே பணம் வசூல் பண்ணறாங்க. அங்கே இரண்டு பேருக்குக் காசு கொடுத்துட்டு இங்கே வந்து மூணாவது நபரை ஏற்றிக்கிடலாமுங்களா?''

பரமசிவத்துக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. 'இந்தப் பெண் என்னைக் கேலி செய்ததோடு என் பக்கத்தில் உட்கார்ந்து அவமானப்படுத்துவது பற்றிய நியாய அநியாயம் இவன் கண்ணுக்குத் தென்படவில்லை; ஒரு ரூபாய் பணத்துக்காகப் புலம்புகிறான்!' என்று நினைத்தார். கூடவே, 'அவன் கடமையை அவன் செய்கிறான்; இதற்கு அதிகமாகப் பேச அவனுக்கு அதிகாரம் ஏது?' என்ற எண்ணமும் எழுந்தது.

அந்தப் பெண் தன் நெஞ்சின் வலது புறம் இருந்த பாக்கெட்டிலிருந்து ஐந்தாறு நூறு ரூபாய் நோட்டுக்களை எடுத்து இடது புறம் இருந்த பாக்கெட்டில் போட்டுக் கொண்டாள். ''நான் நினைத்தால் இந்தப் போட் கிளப்பையே விலைக்கு வாங்கிவிடுவேன்; இவன் பிச்சைக் காசு நூறு பைசாவுக்குக் கண்ணீர் விடறான்'' என்று கூறிச் சிரித்தாள்.

பரமசிவத்துக்கு ஆத்திரமே மூண்டுவிட்டது. பணத் திமிர் எத்தனையோ பேரிடம் இருந்து அவர் கண்டதுண்டு. ஆனால் அது இத்தனை அசிங்கமான முறையில் வெளிப் பட்டு அவர் இதுவரையில் பார்த்ததில்லை. குருசாமியோ அவள் கூற்றை ரொம்பவும் ரசித்தான் என்பது தெரிந்தது. ''போட்டீங்களே ஒரு போடு!'' என்று பலமாகத் தலை யாட்டி அவளை ஆமோதித்து விட்டு விசையுடன் துடுப்பு வலித்தான்.

போட், கிளப்பைச் சேர்ந்த படகுக் காரனும் அதிகமாக ஏதும் வம்பு வளர்க்காமல் போய்விட்டான்.

**க**ரையில் இருந்த என்.ஸி.ஸி. பெண்களின் கண்களில் அந்தப் பக்கம் வந்த இரண்டு மூன்று குதிரைக் காரர்கள் தட்டுப்பட்டு விட்டார்கள். அவ்வளவுதான்; தங்களில் யார் யார் முதலில் குதிரை சவாரி செய்வது என்று போட்டியிட ஆரம்பித்தனர். வென்ற மூவர் குதிரைகள் மீது ஆரோகணித் ததும் அம்மூவரில் யார் குதிரையை வேகமாகச் செலுத்த முடியும் என்பதில் மீண்டும் போட்டி ஏற்பட்டது. சாலையி லிருந்த காக்கி உடையினர் சத்தம் போட்டு ஆர்ப்பாட்டம் செய்யக் குதிரைகள் ஓட்டம் எடுத்தன. பரமசிவம் குதிரை சவாரி செய்யும் மூன்று பெண்களையும் நோக்கினார். அதற்கு முன்னால் அவர்கள் குதிரை ஏற்றம் பழகியவர்கள் அல்ல என்பது பார்த்த மாத்திரத்தில் தெரிந்தது. அக் கலையை நன்கு பயின்றதால் ஏற்படும் லாவகமோ ஒயிலோ நளினமோ ஏதுமில்லாமல் அவர்கள் 'திங்கு திங்கு' என்று எழும்பி விழுந்தபடி சென்றார்கள். 'கண்ணறாவி' என்று அவர் வாய் முணுமுணுத்தது. பெண் இனத்தின் மீதே அவருக்குக் கட்டுக்கடங்காத கோபம் பெருகியது.

இதற்குள் குருசாமி படகைச் செலுத்திக் கொண்டு ரொம்ப தூரம் வந்துவிட்டான். அவனுக்கு இந்தப் பெண்ணை எதிரே வைத்துக் கொண்டு படகைச் செலுத்து வது ஒரு கிளுகிளுப்பை அளித்தது என்பதைப் பரமசிவம் அவன் முகத்தைப் பார்த்தே நன்றாக உணர்ந்துகொண்டார். இவளையும் இவளுடைய தோழிகளையும் போலவும் இவர்களையும்விட மோசமாகவும் சில பெண்கள் நடந்து கொள்வதால்தானே ரொம்ப ரொம்ப யோக்கியமாக இருந்த குருசாமி போன்றவர்கள்கூடக் கெட்டு அலை கிறார்கள் என்று எண்ணினார். ஓர் ஆவேசமே ஏற்பட்டு அவருக்கு நெஞ்சை அடைத்தது. கரங்கள் நடுங்கின.

"கொடைக்கானலில் எத்தனை நாட்கள் காம்ப் சந்திரா?" என்று குருசாமி கேட்டான். அவள் சிநேகிதிகள் அவளைப்

பெயர் சொல்லி அழைத்ததை அவன் கேட்டுக் கவனத்தில் வைத்திருந்தான்.

"ஒரு வாரம்" என்றாள் சந்திரா. "வந்து ரெண்டு நாள் ஆச்சு. ஒய்வே கிடைக்கலை. டிரில்; மார்ச், ரைப்பிள் ப்ராக்டீஸுன்னு மாற்றி மாற்றி உசிரை வாங்கிக் கிட்டிருக்காங்க."

"ஓகோ! அதனால்தான் இன்னைக்குக் கொஞ்சம் ஓய்வு கிடைச்சதும் உற்சாகம் கரை புரண்டு ஓடுதாக்கும்?"

"ஆமாம்; எங்களுக்குன்னு வந்து வாய்ச்சிருக்கிற கமாண்டண்ட் ரொம்பக் கறார் பேர்வழி. வதக்கி எடுத்துப் புடுவான். ஆஃப் டைம் கிடைச்சதும் ஒரே குஷி எங்களுக்கு. தலைகால் புரியலை."

"ஆனந்தகிரிக்குப் பக்கத்தில் தான் காம்ப் போட் டிருக்கீங்க போலிருக்கே? அங்கிருந்து பார்த்தால் பெருமாள் மலை நல்லாத் தெரியும். அதன் உச்சிக்கு 'ஹைக்கிங்' போயிட்டு வாங்க. ஐம்பது பேர் கிளம்பினீங்கன்னா ஒருத்தர் உச்சியை அடைந்தால் பெரிய காரியம்."

"போதும், போதும்! இப்போ எங்க ஆஃபீஸர் எங்களைப் பிராணனை வாங்கறதையே சமாளிக்க முடியலை."

**ப**ரமசிவம் குறுக்கிட்டார். "சரிதான்! எல்லைப் பாது காப்புக்கு அனுப்பிச்சால் பன்னிரண்டாயிரம் அடி உயர முள்ள இமயமலைச் சிகரங்களில் ஏறணுமே! பெருமாள் மலைக்கே பயந்தால் எப்படி? மட்டக் குதிரை ஓட்டத்தி லேயும் தாத்தாவுக்குப் பக்கத்தில் வெட்கப்படாமல் உட்காருவதிலேயும் வீரத்தைக் காட்டினால் போதுமா?"

சந்திராவுக்காகக் குருசாமி பதில் சென்னான்: "எல்லைக்கு அனுப்பிப் பார்க்கட்டும்! சீனாக்காரன் பொம்பளைங்களைப் பார்த்ததுமே பல்லை இளிச்சுத்

துப்பாக்கியைத் தொங்கப் போட்டுடுவான்! அப்புறம் வெற்றி இவங்களுக்குத்தான்!''

சந்திரா ஒரேயடியாகச் சிரித்தாள். ''ரொம்ப ஃபன்னியா பேசறீங்க, ஸார்!'' என்றாள்.

''இதென்ன பிரமாதம்? உடம்பிலே கொஞ்சம் உஷ்ணம் ஏறிச்சுன்னா இதைவிட அபாரமான ஜோக்குகளெல்லாம் தோணும். ஆனால் இந்த மனுஷன்தான் இங்கே வந்ததி லிருந்து ஒரு சொட்டுத் தண்ணி உள்ளே செலுத்தவிடாமல் குறுக்கே நிற்கிறார். கிக் இல்லாத கொடைக்கானல் சொத்தைக் கானல்தான் என்றால் கேட்டால்தானே?''

சந்திரா பரமசிவத்தை முதுகில் தட்டிக் கொடுத்தாள். ''தாத்தா! ரொம்பக் கண்டிப்புக் காட்டாதீங்க. அது உங்களுக்கே ஒருவேளை ஆபத்தாக முடிஞ்சாலும் ஆச்சரியப்படறதுக்கில்லே! என்னோட டாடிக்கு ஒருத்தன் இந்த மாதிரிதான் சும்மா சும்மா உபதேசம் பண்ணிக் கழுத் தறுத்தான். ஒரு நாளைக்கு அவன் வீட்டுக்கு வந்திருந்த போது என் அப்பா, 'ஆப்பிள் ஜூஸ் சாப்பிடுங்க'ன்னு கொடுத்தார். அவ்வளவுதான்; மறுநாளே திரும்பி வந்துட்டான். 'பட்டணம் முழுதும் தேடி அலைஞ்சேன். நீ கொடுத்த மாதிரி ஆப்பிள் ஜூஸ் ஒரு இடத்திலும் கிடைக்கலைடா; கொஞ்சம் தயவுபண்ணு' என்றான்! 'லாகர்ன்னு கேட்டா கிடைக்கும்'னு என் அப்பா விளக்கின பிறகுதான் அவனுக்கு விஷயம் புரிஞ்சுது. புரிஞ்சு என்ன பண்ணறது? ருசி கண்ட பூனையாகி விட்டானே!''

இப்படிப் பேசிக்கொண்டே மிதந்ததில் சந்திராவுக்கு நேரம் போனதே தெரியவில்லை. திடுதிப்பென்று இருட்டிக் கொண்டு வந்தது. ''அடடா ரொம்ப லேட் ஆயிடுச்சே! நான் கேம்புக்குத் திரும்பணுமே. நேரம் தப்பிப் போனால் பாட்டுக் கேட்கணுமே?'' என்றாள் சந்திரா. ''கரையோர மாக என்னை இறக்கி விட்டுடுங்க, ஓட்டம் பிடிக்கிறேன்!''

குருசாமி அவள் விருப்பத்துக்கு இசைந்து நடந்து கொண்டான். படகு கரை தட்டியதும், அவள் டாட்டா சொல்லிவிட்டுச் சாலையில் விரைந்து சென்று கண்ணுக்கு மறைந்தாள்... "நமக்கும் லாட்ஜ் இங்கேயிருந்து கிட்டம் தான். போகலாம்" என்றான் குருசாமி.

"படகு?" என்று கேட்டார் பரமசிவம்.

"போட் கிளப் ஆளுங்க யாராவது வந்து கொண்டு போய்க்கிடுவாங்க, இருள் கவிந்து வரும் சமயமாகி விட்டால் தங்கள் தங்கள் வீடோ அல்லது ஹோட்டலோ இருக்கும் இடத்துக்குச் சமீபம் கரையோரமாகப் படகை விட்டுட்டுப் போறது இங்கே சகஜம்தான்" என்று சொல்லி ஒரு மரத்தின் வேரோடு படகை இழுத்துக் கட்டினான் குருசாமி.

"நீ போ! நான் கொஞ்சநேரம் பொறுத்து வரேன்" என்றார் பரமசிவம். "எனக்கு மனசு சரியில்லை; இப்படியே இந்தப் பெஞ்சில் சற்று நேரம் உட்கார்ந்திருந்து விட்டு வரேன்."

"ரொம்ப நேரம் தாமதிக்காதீங்க. பனி உங்களுக்கு ஒத்துக்காது" என்று கூறிவிட்டுக் குருசாமி நகர்ந்தான். ஆளை விட்டால் போதும் என்றிருந்தது அவனுக்கு. லாட்ஜில் பெட்டிக்கடியில் திறக்கப்படாத விஸ்கி பாட்டில் ஒன்று முழுசாக இருந்ததானது அவன் நடையைத் துரிதப் படுத்தியது.

**ப**ரமசிவம் பெஞ்சில் கூனிக் குறுகி அமர்ந்தார். குருசாமி தம்மையும் கம்பெனியையும் ஏமற்றியதோடு அல்லாமல் அது பற்றி அலட்சியமாகப் பேசியது அவருக்கு ரொம்ப மன வேதனையை அளித்திருந்தது. மேலும் அந்தப் பெண் சந்திரா வேறு இன்றைக்கென்று வந்து சேர்ந்தாள். குருசாமி எதிரே தம்மைக் கிண்டல் செய்ததோடு, அவன் பக்க

மாகவே சேர்ந்து கொண்டு தம்மை இளக்காரமாகப் பேசி அவமதித்தாள். 'சே! பெண்ணா அவள்! ராட்சசி! அழகி வேஷம் போட்டிருக்கும் சூர்ப்பனகை!'

தற்செயலாக அவர் பார்வை படகில் அவள் உட்கார்ந் திருந்த இடத்துக்குப் பக்கத்தில் விழுந்தது. மழுங்கிய ஒளிச் சூழலிலும் அங்கே ஏதோ பளபளக்கிறதே என்ன அது? எழுந்து வந்து அதைக் கையில் எடுத்துப் பார்த்தார். அவள் தலையில் அணியும் தொப்பி, உலோகத்தாலான என்.ஸி.ஸி. சின்னத்துடன் காணப்பட்டது. கரையோரமாக நின்ற படியே மெல்ல விரல்களால் அந்தத் தொப்பியைத் தடவினார். 'அரக்கியானாலும் அழகிதான்' என்று அவர் உள்ளம் எடை போட்டது. 'குறு குறுப்பான கண்கள், விஷமப் புன்னகை, எடுப்பான தோற்றம். சீ! எப்படி யெல்லாம் அவள் என்னை இன்று அவமானப்படுத்தி விட்டாள்! இப்போது மட்டும் அவள் என் கையில் அகப் பட்டால்...' அவர் விரல்கள் தலைப்பாகையைக் கசக்கின.

''தாத்தா! என்ன இப்படித் தனியாக நின்னுக்கிட் டிருக்கீங்க? லாட்ஜுக்குத் திரும்பலையா?'' என்ற குரல் கேட்டதும், தம் காதுகளையே நம்ப முடியாதவராகத் திரும்பினார் பரமசிவம். 'சந்தேகமே யில்லை! சந்திரா தான்! அந்தச் சூர்ப்பனகையேதான்!

'இதிகாச நாயகர்கள் இதிகாச காலத்தில் சூர்ப்பனகை யிடம் ரொம்பக் கௌரவமாக நடந்து கொண்டார்கள். ஆனால் இந்த நாள் சூர்ப்பனகைகளை அப்படி யெல்லாம் இலேசாகத் தண்டித்து விட்டுவிடக் கூடாது! ஆசையை மூட்டிவிட்டு அப்புறம் சாதுவாக மாறிக் கையை விரிப்பது எவ்வளவு விபரீதமான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இவர்களுக்கு உணர்த்த வேண்டும்!' அல்ட்ரா மாடர்ன் அலங்காரிகள் அனைவருக்கும் ஏகப் பிரதிநிதி யாகச் சந்திரா அவர் முன்னே நின்றாள் அப்போது.

*'இவளுக்குப் பாடம் கற்பித்தால் அவர்கள் அத்தனை பேரையும் பழி வாங்கியதாகாதா? "முடியுமா?" என்று சவால் விட்டு ஏளனமாய் நோக்குபவர்களுக்கு '"முடியும்" என்று நிரூபித்துக் காட்டி விட்டால்தான் அவர்கள் கொட்டம் அடங்கும்!'*

"இதைத் தேடிக் கொண்டுதானே வந்தாய்?" என்று தொப்பியைக் காட்டினார் பரமசிவம்.

"ஓ! அவசரத்தில் இதையும் மறந்து விட்டேனா?" என்று கேட்டபடி கரத்தை நீட்டினாள் சந்திரா.

நீண்ட கரத்தைப் பற்றி இழுத்தார் பரமசிவம். எதிர் பாராத தாக்குதலில் அவள் திகைத்து வாய் திறந்து காற்றை உள்ளுக்கு இழுத்தாள். பிரிந்த உதடுகள் மீண்டும் மூடிக் கொள்வதற்குள் அவர் அவளை ஏரிக் கரையோரம் பசும் புல் தரையில் கிடத்திவிட்டார். "ருத்திராட்ச பூனையே!" என்று வைத அவள் வாய் மேலும் கூச்சலிடாதபடி பரமசிவத்தின் இடக் கரம் அழுத்திப் பொத்திக் கொண்டது. வலக் கரம் தனிமையையும் இருளையும் துணை கொண்டு திரிய ஆரம்பித்தது.

★ ★ ★

# 28. வெள்ளி அருவி

**வ**ன தேவதைகள் அம் மலைக்குப் பின்னால் இருந்து கொண்டு வெள்ளித் துகள்களைச் சொரிகிறார்களோ என்று அந்த அருவி கொட்டுவதைப் பார்த்தபோது எண்ணத் தோன்றியது. 'ஸில்வர் காஸ்கேட்' என்ற பெயர் ரொம்பப் பொருத்தம்தான். இயற்கை தன் எழிலையெல்லாம் காட்டிச் சிரிக்கும் அந்தச் சூழலின் அருகே சில ஆளுயர மண் பொம்மைகளையும் செயற்கையாக ஒரு பொங்கு புனலை யும் வைத்து அசிங்கப்படுத்தி யிருந்தார்கள். உல்லாசப் பயணிகளுக்குச் சிற்சில சௌகரியங்களைச் செய்து கொடுப்பது நல்லதுதான். ஆனால் குபேர பட்டணத்தில் குடிசை எதற்கு? நீண்டு தழைத்து வளர்ந்துள்ள மயில் தோகைக்கு ரிப்பன் வைத்துக் கட்டி அழகு படுத்தவா வேண்டும்?

இந்த இடத்துக்குப் பிக்நிக் வந்திருந்த பத்மநாபன்-நடராஜன் குடும்பங்கள் ரொம்ப உற்சாகமாக இருந்தன. ஒரு கொலையைப் பற்றிய சிக்கலைத் தீர்த்துவிட்டதில் நடராஜனுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி மற்றவர்களையும் தொத்திக் கொண்டிருந்தது. அவர்கள் நண்பன் அமிர்த லிங்கம் மட்டும் எதையோ பறிகொடுத்து விட்டாற்போல் முகத்தை வைத்துக் கொண்டிருந்தான். ஹாப்பி ஹாலிடேயி லிருந்து அந்த ஹோட்டல் பஸ்ஸிலேயே வந்திருந்த வேறு சிலரும் ஆங்காங்கே அருவியிலிருந்து சற்றுத் தொலைவிலும் அல்லது அதற்கு மிக அருகிலும் தனித்தனிக் குழுவாக

அமர்ந்து அளவளாவியபடியே தாங்கள் கொண்டு வந்திருந்த சிற்றுண்டியை ஒரு கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

மலைச் சாரலில் நெடிதுயர்ந்து வளர்ந்திருந்த யூகலிப்டஸ் மரம் ஒன்றைச் சுட்டிக் காட்டினார் நடராஜன். "மீனா! உன்னால் ஊகிக்க முடியுமா, அதற்கு எத்தனை வயசு என்று?"

"அதன் பருமனையும் உயரத்தையும் பார்த்தால் நூறு, ஏன் இருநூறு வருஷங்கள்கூட இருக்கலாம் என்று தோன்றுகிறது" என்றாள் மீனா.

"நூறு, இருநூறு வயதான மரங்கள் உண்டு; ஆனால் இங்குள்ள யூகலிப்டஸ்களுக்கு அத்தனை வயதாகவில்லை மீனா. திரும்பிய பக்கமெல்லாம் யூகலிப்டஸ் மரங்கள் இருப்பதைப் பார்த்து நீ அவை இந்த மண்ணுக்கே சொந்தமானவை என்று நினைத்து விட்டாய் போலிருக்கிறது. உண்மையில் யூகலிப்டஸ் மரங்கள் இங்கு அயல்நாட்டிலிருந்து கொண்டு வரப்பட்டவைதாம். நூறு வருஷங்களுக்கு முன்னால் தான் இந்த மண்ணுக்கு அறிமுகமாயின. அதனால் இங்கே உள்ள மிக மிக வயதான மரங்களுக்கே நூறு வயசுக்கு மேல் இராது! ஆனாலும் இப்போதுதான் அவை வாலிபப் பருவத்தை எட்டிக் கொண்டிருப்பதாகக் கருதலாம். ஆஸ்திரேலியாவில் முந்நூறு நானூறு அடி உயரம் வரை வளருமாம்! இங்கே அத்தனை உயரம் வளர முடியாததற்குக் காரணம் வேர் கீழே ஊடுருவிப் போக மண் ஆழம் போதவில்லை; பாறை தடுக்கிறது."

"அப்பா! இன்னொரு விநோதத்தையும் சொல்லுங்கள், அதன் இலைகளைப் பற்றி" என்று நினைவூட்டினான் ரங்கநாதன்.

"வெந்நீரில் சற்று நேரம் போட்டு வைத்திருந்து குளித்தால் சுற்றி அலைந்த அலுப்பெல்லாம் ஓடிப் போய்

*விடுகிறது'' என்றாள் அம்புஜம். ''அதைத்தானே சொல்கிறாய் ரங்கா?''*

*''இவன் குறிப்பிடுவது அதை இல்லே. 'யூகலிப்டஸ் மரங் களின் இலைகள் ஒன்றுக்கொன்று வித்தியாசப் படுவதை நீங்கள் பார்த்திருக்கிறீங்களா?' என்று கேட்கிறான். ஆஸ்திரேலியாவிலிருந்து இங்கே வந்த பிறபாடு இந்த சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப இலைகளின் உருவமே மாறி விட்டிருக்கிறது! அதனால் இரண்டு விதமான இலைகளுடன் யூகலிப்டஸ் மரங்களை இங்கே காணலாம்!''*

*''ப்ளம் செடிகூட மேனாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு இங்கே பயிரானதுதானே?'' என்று கேட்டார் பத்மநாபன்.*

*''ஆமாம், இந்தச் சீதோஷ்ண நிலை ஏறத்தாழ மேனாட்டுக் குளிர்ப் பிரதேசங்களுக்கு ஒத்ததாக இருப்பதால் அங்கிருந்து பலவிதமான பழமரங்களையும் மலர்ச் செடிகளையும் கொண்டு வந்து நட்டிருக்கிறான் வெள்ளைக்காரன்.''*

*''நீங்க சொல்லலைன்னா நான் நம்பியே இருக்க மாட்டேன்'' என்றாள் அம்புஜம். ''உயரம் உயரமா விண்ணை முட்டற மாதிரி வளர்ந்திருக்கிற இந்த மரங்கள் நம் நாட்டைச் சேர்ந்தவையில்லை என்றால் எப்படி நம்புவது? காலம் காலமா இங்கே இருந்தவைன்னுதான் தோணும்.''*

*''தோற்றத்தாலே ஏற்படுகிற மயக்கம் அது. இமய மலையை எடுத்துக்கிடுங்க; உலகத்திலேயே பெரிய மலைச் சிகரங்கள் அங்கேதான் இருக்கு. ஆனால் நான் சொல் றேன், இமயமலை கொடைக்கானல் மலைக்குத் தம்பிதான்; அண்ணன் இல்லே!''*

*''நிஜமாகவா!'' என்று முகவாயில் கை வைத்துக் கேட்டாள் அம்புஜம்.*

''ஆமாம்! இமயமலையில் அகப்படும் பாறைகளை விடக் கொடைக்கானல் மலையில் கிடைக்கும் பாறைகள் பழைமையானவை என்று விஞ்ஞானிகள் நிரூபிக்கிறாங்க!''

''ஆச்சரியமாயிருக்கே! கொலை பண்ணினது யாருன்னு நீங்க நிரூபிச்சதுதான் பெரிய ஆச்சரியம்னு நினைச்சேன். இந்த மலையைப் பற்றி நீங்க சொல்றது அதையும் தூக்கி அடிக்கிறதா இருக்கு.''

''நான் எதையும் பிரமாதமா சாதிச்சுடலீங்க. சந்தர்ப்ப வசத்தால் இந்தக் கேஸ் சுலபமா முடிஞ்சு போச்சு; அவ்வளவுதான். அந்த நகைக் கடைக்காரர், தெருக் கூட்டற ஆறுமுகத்துக்கு நூறோ, இருநூறோ கொடுத்துட்டு இரண்டாயிரம் ரூபாய் பெறுமானம் உள்ள புரூச்சை அமுக்கியிருக்கலாம். ஆனால் அவர் நாணயஸ்தனாக இருந்தார். புரூச்சைக் கொண்டு வந்து போலீஸ் ஸ்டேஷனில் ஒப்படைச்சுட்டார். அப்படி அவர் செய்திருக்கலைன்னா நான் என்னத்தைக் கண்டுபிடிச்சிருக்க முடியும்?''

''என்ன நடந்தது? விவரமாகத் தான் சொல்லுங்களேன்'' என்றாள் மீனா கதை கேட்கும் ஆர்வத்துடன்.

''ரங்கா! குழந்தைகள் பேரில் ஒரு கண் இருக்கட்டும். நான்பாட்டுக்கு வாயைத் திறந்துண்டு கதை கேட்டுண்டிருப்பேன். இதுகள் பாட்டுக்குப் போகக் கூடாத இடத்துக்குப் போய் வைக்கும்'' என்று முன்னெச்சரிக்கையாகச் சொல்லி விட்டு அம்புஜம் காதைத் தீட்டிக் கொண்டாள், நடராஜன் கூறுவதைக் கேட்க. பத்மநாபனும் சற்று நெருங்கி உட்கார்ந்தார்.

★ ★ ★

**ஹா**ப்பி ஹாலிடேயிலிருந்து கிளம்பி டி.ஐ.ஜி. (ஸி.ஐ.டி) நடராஜன் டவுனில் போலீஸ் ஸ்டேஷனுக்கு வந்து சேர்ந்தபோது இரவு மணி எட்டரைக்கு மேல்

இருக்கும். பிரேதப் பரிசோதனை முடிந்து டாக்டர் 'ரிப்போர்ட்' எழுதிக் கொண்டிருந்தார். அந்த ஆசாமி நீரில் மூழ்கிச் சாகவில்லை என்றும், யாரோ அவனை மண்டையில் பலமாக அடித்திருக்கிறார்கள் என்றும் குத்துக் காயமும் இலேசாகப் பட்டிருப்பதாகவும் சொன்னார். அதன்பின் உடல் உருட்டித் தள்ளப்பட்டிருக்க வேண்டும். அப்படிப் புரட்டித் தள்ளுமுன்பாகவே உயிர் பிரிந்திருக்க லாம்; அல்லது அடி வாங்கியபோது மயங்கி விழுந்தவன் ஏரியில் தலையிலிருந்து இடுப்பு வரையில் முங்குமாறு தள்ளப்பட்ட பிறகு செத்துப் போயிருக்கலாம். எப்படி யானாலும் இது விபத்து இல்லை; கொலைதான்.

அவர் கூற்றுக்கு வலுவளிப்பதுபோல் இன்ஸ்பெக்டர், அவ்விடத்திலேயே கரையோரமாகப் புல் தரையில் கண்டெடுக்கப்பட்ட கூரிய ஆயுதத்தைக் காட்டினார் டி.ஐ.ஜி.க்கு. படகைக் கரை யோரமாகக் கொக்கி மாட்டினாற்போல் இழுத்துக் கொள்ளவும் கரையைவிட்டு, அப்பால் தள்ளிக்கொள்ளவும் பயன்படும் ஆயுதம் அது. சுமார் நாலடி நீளமுள்ள கழியின் முனையில் கூர்மையான கொக்கி பொருத்தப்பட்டிருந்தது. இரத்தக் கறையும் தெரிந்தது.

இறந்து போனவரின் பர்ஸ்ஸில் 'விஸிட்டிங் கார்ட்' இருந்ததானது இன்னாரென்று அடையாளம் கண்டு கொள்ள உதவியது. அந்த விலாசத்தில் உறவினருக்குத் தகவல் தெரிவிக்கச் சொல்லிவிட்டுப் போட் கிளப்பைச் சேர்ந்த சிலரை விசாரித்தார் நடராஜன். அங்கு பணம் வசூல் செய்யும் நபர் பரமசிவத்தோடு ஒரு நண்பரும் படகில் ஏறிக் கொண்டது நினைவிருப்பதாகச் சொன்னான். அந்த நண்பர் கரையிலிருந்து என்.ஸி.ஸி. பெண் ஒருத்தி யுடன் வம்பு வளர்த்ததாயும் அவளைப் படகில் ஏற்றிக் கொண்டதாயும் படகோட்டி ஒருவன் கூறினான். அந்தப்

பக்கமாக வேறொரு குடும்பத்துக்காகத் தன் படகைச் செலுத்திக் கொண்டு வந்தபோது இதைப் பார்த்ததாகவும், உரிய பணம் கட்டாமல் இடையில் ஒருவரைப் படகில் ஏற்றிக்கொள்வது தவறு என்று தான் சுட்டிக் காட்டிய தாகவும், ஆனால் அவர்கள் தன் பேச்சை அலட்சியம் செய்ததாகவும் சொன்னான்.

போட் கிளப்பைச் சேர்ந்த இவ்விருவரும் கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் இன்ஸ்பெக்டர், கொடைக்கானலில் உள்ள பல லாட்ஜுகளுக்கும் என்.ஸி.ஸி. கேம்ப்புக்கும் போய் விசாரித்துக் கொண்டு வரப் போலீஸ்காரர்களை அனுப்பினார். பரமசிவம் என்பவரோடு சேர்ந்து வந்து அவருடன் ஒரே அறையில் தங்கியுள்ள நண்பரை ஹெவன்லி லாட்ஜில் கண்டுபிடிப்பது அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கவில்லை. அதேபோல் என்.ஸி.ஸி. கேம்பில் விசாரித்தபோது போட் கிளப்புக்குப் போய் டிக்கெட் எடுக்காமல் வேறோரிடத்தில் படகேறி உல்லாசப் பவனி வந்த பெண்ணைப் பற்றித் தெரிந்து கொள்வதும் போலீஸாருக்கு எளிதாகவே இருந்தது. சந்திராவையும் குருசாமியையும் அழைத்துக் கொண்டு வந்துவிட்டார்கள். இருவரையும் தனித் தனியே விசாரித்தார் நடராஜன்.

"பணம் செலுத்தாமல் படகு ஏறியதற்காக என்னை கண்டிக்கப் போறீங்கன்னு நினைச்சுக்கிட்டு வந்தேன். மர்டர் கேஸுன்னு இங்கே வந்தப்புறம்தான் புரியுது" என்று கூறிக் கண்கலங்கினாள் சந்திரா. பரமசிவத்தைத்தான் கிண்டல் செய்தது வாஸ்தவம் என்று ஒப்புக் கொண்டாள். "குருசாமியின் போக்கும் தோழிகளின் தூண்டுதலும் அதற்கு அநுசரணையாக இருந்தன. ஆனால் மனப்பூர்வமாக அவருக்கு நான் ஒரு தீங்கும் நினைக்கவில்லை" என்று கூறி அவள் அழுதாள். "இருட்டிக் கொண்டு வருகிற சமயத்தில்,

'நேரமாகிவிட்டதே, இப்படியே கரையோரமா என்னை இறக்கிவிட்டுடுங்க'ன்னு கேட்டுக்கிட்டேன். தரையில் கால் பாவியதும் கேம்ப்பை நோக்கி ஓட்டமும் நடையுமாகப் போனேன். பரமசிவத்திடம் தமாஷா பேசினதுக்கு மன்னிப்பாவது கேட்டிருக்கலாம். அவசரத்தில் அதுவும் தோணலை. இப்போ அவர் செத்தே போயிட்டார். என்னை எப்படி மன்னிப்பார்?''-இவ்வாறு கேட்டுவிட்டுச் சந்திரா தொடர்ந்து விசும்பிக் கண்ணீர் உகுத்தாள்.

குருசாமி சந்திரா கூறிய நிகழ்ச்சிகளையேதான் திரும்பவும் விவரித்தான். ''சந்திரா போனபிறகு, 'நாமும் படகை இங்கேயே விட்டுட்டு லாட்ஜுக்கு நடந்து போயிடலாம்' என்றேன். பரமசிவம், 'நான் அப்புறம் வருகிறேன், நீ போ' என்று சொல்லி என்னை அனுப்பிவிட்டுப் பெஞ்சில் உட்கார்ந்து கொண்டார். இப்படிக் கொலை நடக்கும்னு தெரிஞ்சிருந்தால் நான் அவரை விட்டுப் பிரிந்து போயே இருக்க மாட்டேன்'' என்றான்.

''அவர் பரமசிவம், நீங்க குருசாமி. பரமகுரு என்டர் பிரைஸஸ் என்று இவரோட விசிட்டிங் கார்டிலே போட்டிருக்கே, நீங்க ரெண்டு பேரும் வியாபாரத்தில் கூட்டாளிங்களா?'' என்று நடராஜன் கேட்டார்.

''ஆமாம்.''

''உங்களுக்கிடையில் ஏதாவது தகராறு உண்டா?''

''அப்படி ஒண்ணும் இல்லையே!''

''பொய் சொல்லாதீங்க! பரமசிவம் தமது பாக்கெட் டைரியில் எல்லாம் எழுதி வைச்சிருக்கார்'' என்று மேஜையின் மீது கிடந்த ஒரு டைரியைச் சுட்டிக் காட்டினார் நடராஜன்.

உண்மையில் அந்த டைரியிலிருந்து அவருக்கு எந்த விதமான உபயோகம் மிக்க தகவலும் கிடைக்கவில்லை.

பரமசிவம் எழுதியிருந்த சிலச் சில வரிகளும் தண்ணீர் பட்டுக் கலங்கித் தெளிவற்றிருந்தன. ஆயினும் 'பார்ட்னர் ஷிப் கன்ஸர்ன்' என்று வந்துவிட்டால் வெளிக்குக் காட்டிக் கொள்ளாது போனாலும் உள்ளூற பாகஸ்தர்களுக்கிடையே ஏதாவது மனஸ்தாபம் இருக்கத்தான் செய்யும் என்பது மனங்களைப் படித்தறிந்த நடராஜனுக்குத் தெரியுமாதலால் ஊகமாக மிரட்டிக் கேட்டார். மேலும் பர்ஸ் பறி போகாத திலிருந்து அது திருட்டுக்காக நடந்த கொலையல்ல; பகைமை பாராட்டி நடந்த கொலை என்று தெளிவாகி யிருந்தது. அல்லது ஸைக்கோ ஸாரநாதன் செய்த வேலை யாக இருக்க வேண்டும். ஊர் மக்களின் தீர்ப்பை ஒதுக்கி வைத்துவிட்டுப் பகைமை பாராட்ட யாருக்கு என்ன காரணம் இருக்கக்கூடும் என்று ஆராயப் புகுந்தார் நடராஜன்.

டைரியில் விவரம் எழுதப்பட்டிருக்கிறது என்றதும் குருசாமி பயந்துவிட்டான். அதன் அடிப்படையில் கம்பெனியின் பேரேடுகளைப் பறிமுதல் செய்து புரட்டிப் பார்க்க டி.ஐ.ஜி.க்கு எத்தனை காலம் ஆகும்? ஓர் ஆடிட் டரை அனுப்பி அலசச் சொன்னாலும் ஆயிற்று. ஆகவே தான் அநாவசியச் செலவு செய்ததாகப் பரமசிவம் குறைப் பட்டுக் கொள்வது உண்டு என்று ஒப்புக் கொண்டான் அவன்.

"அநாவசியச் செலவு என்றால்? எதற்கு? எப்படி?"

"அடிக்கடி பார்ட்டி கொடுக்கிறேன் என்பார்."

"வெட்டா? ட்ரையா?"

"வெட்தான்."

"இப்போ போலீஸ்காரங்க உங்களை வந்து கூப் பிட்டப்போ கூட நீங்க லாட்ஜிலே..."

*"விஸ்கிதான் சாப்பிட்டுக்கிட்டிருந்தேன். இன்னும் கேட்டா விஸ்கியைத் தாராளமா ஊத்திக்கிட்டேன்; அப்புறம் பெரிய டிரிங்க்கா அடிக்கக் கூடாதுன்னு மனசு கிடந்து தவிக்கவே சோடாவைக் குறைச்சுட்டேன்!"*

*"ஏனய்யா உங்க பார்ட்னர் செத்துக்கிடக்கான்; நீங்க ஜோக் அடிக்கிறீங்களா? வெட்கமாயில்லை?"*

*"நான் தமாஷ் பண்ணலை. குடிக்கிறது தப்புங்கிறது மாதிரி நீங்க பேசினீங்க. எனக்கு ரோஷம் வந்து பதில் சொன்னேன்."*

*"குடிக்கிறது குற்றமில்லே. ஆனால் கொலை செய்யறது குற்றம்தான். கொலை விலக்கு இன்னும் ரத்தாகலே!"*

*"ஐயோ ஸார்! அபாண்டமாக என் மேலே பழி சுமத்தாதீங்க" என்றான் குருசாமி.*

*"அபாண்டம் என்னய்யா இதில்? கம்பெனிப் பணத்தை நீங்க கையாடியிருக்கீங்க. எக்கச்சக்கமாச் செலவு பண்ணி யிருக்கீங்க. பெரியவருக்குப் பிடிக்கலை; கண்டிச்சு இருக் கார். உங்களுக்கு எரிச்சல். உணர்ச்சி வசப்பட்டு அவரை அடிச்சுக் கொன்னுட்டீங்க. அப்போ இருட்டு. அக்கம் பக்கம் யாருமில்லே. அதனாலே வேறே யார் பேரிலாவது சந்தேகம் ஏற்படட்டுமேன்னு நினைச்சு லாட்ஜுக்குத் திரும்பிட்டீங்க. நடந்ததை மறக்க விஸ்கி பாட்டிலைத் திறந்துட்டீங்க."*

*"கிடையவே கிடையாது ஸார்! நான் சொன்னதுதான் நிஜம். 'நான் கொஞ்ச நேரம் இருந்துட்டு வரேன் நீ போ'ன்னு சொல்லி அவர் என்னை அனுப்பிச்சுட்டார். அப்புறம் என்ன நடந்துச்சோ எனக்கொண்ணும் தெரியாது."*

*"அதுக்கென்ன, ஃபிங்கர் பிரிண்ட் பரிசோதனைக்கு இந்த ஆயுதத்தை அனுப்பி வைச்சால் உண்மை புரிஞ்சு போகுது" என்றார் நடராஜன்.*

பாவனையில் அவர் அலட்சியமாய் இருந்தாரே ஒழிய அவர் மனத்துக்குத் தெரியும் விரல் ரேகை அடையாளத்தால் ஒன்றையும் நிரூபிக்க முடியாது என்று. ஏனெனில் படகு செலுத்தும் போதே அந்த ஆயுதத்தைக் குருசாமி பலமுறை கையாண்டிருப்பான். ஆகவே இவன் விரல் ரேகை பதிந்திருப்பதால் இவன்தான் கொலை செய்தான் என்று உறுதியாகக் கூற முடியாது. வேறு யார் விரல் ரேகை அடையாளமாவது இருக்கிறதா என்று பார்க்கலாம். ஆனால் சமீப காலமாகப் போட் கிளப்புக்கு வந்துள்ள ஆயிரக் கணக்கானவர்களில் எத்தனை நூறு பேர் அந்த ஆயுதத்தைப் பயன்படுத்தினார்களோ? பரமசிவத்தை மண்டையில் அடித்துக் கொலை செய்தவன் கெட்டிக்காரனாக இருந்தால் அந்த ஆயுதத்தின் பிடியைத் துடைத்து விட்டுக் கூடப் போயிருப்பான், விரல் ரேகை அடையாளம் ஏதும் அகப் படாதபடி. துப்பறியும் நாவல்களில்தான் இதையெல்லாம் கற்றுத் தந்து விடுகிறார்களே?

குருசாமி பரமசிவத்தைக் கொல்லக் காரணம்-மோடிவ்-இருக்கிறது. ஆனால் அவன்தான் கொலை செய்தான் என்று நிரூபிக்கச் சாட்சியங்கள் இல்லை. கெட்டிக்கார வக்கீல் ஒருவன் ஐந்தே நிமிஷங்களில் போலீஸ் கேஸைத் தவிடு பொடியாக்கி விட்டுக் குருசாமியை விடுவித்து அழைத்துப் போய்விடுவான். ஆயினும் ஊர் வாயை அடைக்கவேணும் இப்போதைக்குக் குருசாமியை அரஸ்ட் பண்ணி வைப்பது தான் நல்லது.

நடராஜன் நீண்ட பெருமூச்சு விட்டார். அடுத்தடுத்து மூன்று கொலைகள் நடந்துவிட்டன. எதையும் நிரூபிக்கத் தம்மால் முடியவில்லை. பம்பாயில் போலீஸ் காவலிலிருந்து தப்பிய ஸைக்கோ ஸாரநாதன்தான் கொடைக்கானலுக்கு வந்து இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கை வளர்வதில் அதிசயமென்ன?

இங்கிலீஷ் கிளப்புக்கு அவரும் ரங்கனும் டென்னிஸ் ஆடப் போனபோது அந்தப் பெண்மணி 'நறுக்'கென்று கேட்டாளே அதில்தான் என்ன தப்பு?

வியர்வையை டர்க்கி டவலால் துடைத்தபடி களைப்பைப் போக்கக் 'கோக்'கை அவர்கள் உறிஞ்சிக் கொண்டிருந்தபோது லுங்கி அணிந்திருந்த அந்த நவநாக ரிகப் பெண்மணி வந்தாள். "என்ன மிஸ்டர் நடராஜன்! இந்த ஸைக்கோவைப் பிடிச்சு உள்ளே தள்ள உங்களால் முடியலையா? இரண்டு கொலைகள் பண்ணிட்டானே?" என்றாள்.

"இவை ஸைக்கோ செய்தவை யில்லை மேடம்! பேட்டர்ன் மாறுபடுகிறது!"

அந்தப் பெண்மணி அவரை ஒரு துரும்பாக மதித்துப் பார்த்தாள். பணச்செருக்கும் உயர்மட்ட வாழ்க்கையும் சேர்ந்து அளித்த கர்வம் மிக்க குரலில் கூறினாள்: "மிஸ்டர் நடராஜன்! நான் கொலைகளைப் பற்றிப் பேசறேன்; மர்டர்! நீங்க 'பேட்டர்ன் பொருந்தலை'ங்கறீங்க. இது என்ன ஃபேஷன் பரேடா? யூ ஆர் டீலிங் வித் எ ஸைக்கோ!"

அப்போது நடராஜனுக்குக் கோபம் வந்தது. கண்ணியம் மிக்க மனிதர்கள் வந்து போகும் அந்த இடத்தில் ரசாபாச மாக ஏதும் நடந்துவிட வேண்டாம் என்பதால் பல்லைக் கடித்துக் கொண்டு மகனுடன் வெளியேறி விட்டார். இப்போது யோசித்துப் பார்க்கும்போது அன்று அவள் அடித்துச் சொன்னதில் குற்றமில்லை என்று பட்டது. அவளைப் போன்றவர்கள் கட்டும் வரியைத்தானே நாம் கைநீட்டிச் சம்பளமாகப் பெறுகிறோம்? தட்டிக் கேட்க அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்று நினைத்தார். ஸைக்கோ ஸாரநாதன்தான் இந்தக் கொலைகளைச் செய்கிறான் என்ற எண்ணம் மக்களிடை பரவாமல் தடுக்க

நம்மால் என்ன செய்ய முடிந்தது? ஆக, அவள் மீது கோபப்பட்டுப் பயன்?

நடராஜன் என்றுமில்லாத விதமாக இன்றைக்குச் சோர்ந்து போய்விட்டார். தம்மைத் தாமே அந்தச் சோர்வி லிருந்து உசுப்பி எழுப்பிக் கொண்டவராக நிமிர்ந்தார். குருசாமியை லாக்அப்பில் தள்ள மேற்கொள்ள வேண்டிய சம்பிரதாயச் சடங்குகளைக் கவனிக்குமாறு எஸ்.ஐ.க்கு உத்தரவிட்டார். இரவு நேரமாதலால் சந்திராவைத் தனியே அனுப்பாமல் தாமே என்.ஸி.ஸி காம்ப்பில் விட்டு விட்டு ஹோட்டலுக்குத் திரும்பினார்.

மறுநாள் மத்தியானத்துக்கு மேல் டி.ஐ.ஜி. நடராஜன் போலீஸ் ஸ்டேஷன் பக்கம் போய், ''ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று விசாரித்தபோது எஸ்.ஐ. செல்லப்பன், ''கொலைக் கேஸுக்குச் சம்பந்தப்பட்டு ஒன்றுமில்லை'' என்றார்.

''அப்படின்னா பரமசிவத்தின் மரணத்துக்குச் சம்பந்தப் படாத விசேஷம் இருக்கிறதாகும்'' என்றார் நடராஜன்.

''பெரிய காரியம் ஒன்றுமில்லீங்க. நம்ம டவுன்ஷிப்பில் சம்பளம் வாங்குகிற ஸ்வீப்பர் ஆறுமுகம் இன்னைக்குக் காலையிலே ஏரிக் கரையோரமா குப்பைகளைப் பொறுக்கிக் கூடையில் நிரப்பிக் கிட்டிருக்கும்போது ஒரு புருச்சைக் கண்டெடுத்திருக்கிறான். அதை நேரே இங்கே கொண்டு வந்திருக்கணும் அவன். அது டால் அடிக்கிறதைப் பார்த்து ஆசைப்பட்டுட்டான். காசாக்க நினைச்சுச் சாந்தி ஜுவெல்லர்ஸ் அம்பலவாணன் செட்டியாரிடம் கொண்டு போய்க் காட்டியிருக்கான். அவர் 'இதன் மதிப்பை உடனே சொல்றதுக்கில்லை. நாளைக்கு வா! பார்த்துப் பணம் தரேன்'னு சொல்லி அவனை அனுப்பிச்சுட்டார். பிறகு நேரே என்னிடம் வந்தார். 'பெரிய வைரம்; இரண்டாயிரம்

ரூபாய்க்குக் குறையாது. அதைக் கட்டியிருக்கிற தங்கத்தின் மதிப்பு வேறே இருக்கு'ன்னு கணக்கா என்னிடம் ஒப்படைச்சுட்டுப் போயிட்டார். ரசீது கொடுத்து வாங்கி வைச்சிருக்கேன்'' என்று கூறி முடித்த இன்ஸ்பெக்டர் செல்லப்பன், அதை எடுத்து வந்து காட்டினார்.

சற்று நேரம் அதைத் திருப்பித் திருப்பிப் பார்த்த நடராஜன், ''இதைத் தொலைத்து விட்டவர்கள் இதுவரை வந்து ரிப்போரட் பண்ணலைன்னா சொல்றீங்க!'' என்று வினவினார்.

''வருவாங்க, வருவாங்க. இதெல்லாம் இங்கே சகஜம். பர்ஸ், பேனா, தோடு, ரிஸ்ட்வாட்ச் எல்லாம் தொலைச்சுட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்கு வரவங்க இந்த ஸீஸன் டயத்திலே ரொம்ப அதிகம். நீங்க இது பற்றி கவலைப்பட வேண்டாம். ஆறுமுகத்தைக்கூட நான் கூப்பிட்டுக் கண்டிச்சுட்டேன். நல்ல ஆளுதான். ஏதோ அந்த விநாடியிலே கொஞ்சம் மனசு அலை பாய்ஞ்சிருக்கு. தொலையறான்னு விட்டுடுங்க.''

''அவனைப் பற்றி நான் கவலைப் படலை செல்லப்பன்! இது மிகவும் விலை உயர்ந்த வைரம். காணோம் என்றதும் நியாயமாகப் பதறி அடிச்சுக்கிட்டுப் போலீஸ் ஸ்டேஷனுக்கு ஓடி வந்திருக்கணும், இதைத் தொலைச்சவங்க. ஏதோ காரணமாகத்தான்... பயந்து, தயங்கி வராதிருக்காங்க... அந்தப் பெண் சந்திரா பாக்கெட்டில் நூறு ரூபாய் நோட்டுக்களாக வைத்திருந்தாள் என்று குருசாமி சொன்னாரில்லையா? பணக்கார வீட்டுப் பெண்....''

''இந்த புரூச் அவளுடையதாக இருக்கலாம்னு நினைக்கறீங்களா? இது தொலைந்து போனதை அவள் ஏன் தெரியப்படுத்தலை நமக்கு?''

''மறுபடியும் கூப்பிட்டு விசாரிச்சால் அது புரிஞ்சு போகுது. நீங்க போய் அவளைக் கையோடு அழைச்சுக்கிட்டு வாங்க,'' என்று உத்தரவிட்டார் நடராஜன்.

# 29. செண்பகனூர்

‘‘இரண்டாவது தடவையாகச் சந்திராவை அழைச்சுக் கிட்டு வந்ததும் அவளுக்கு வெலவெலத்துப் போயிடுச்சு. உண்மையைக் கக்கிட்டா’’ என்றார் நடராஜன்.

‘‘நேரமாகிவிட்டது, என்.ஸி.ஸி. காம்ப்புக்குத் திரும் பணும்னு போனவள் புரூச்சைக் காணோம் என்று உணர்ந்ததும் அதைத் தேடிண்டு மறுபடியும் ஏரிக்கரை பக்கம் வந்திருக்கிறாள் இல்லையா?’’ என்று அம்புஜம் கேட்டாள். ‘‘இருட்டிக் கொண்டு வரும் நேரமானாலும் ஒரு தடவை தேடிப் பார்த்துடலாம்னு தோணறது இயற்கை தானே! பத்தா பதினைஞ்சா, இரண்டாயிரம் ரூபாய் ஆச்சே!’’

‘‘நிசம்தான். படகிலிருந்து கரைக்குப் பாய்ந்தபோது கீழே விழுந்திருக்கலாம்னு அனுமானிச்சு வந்தாளாம். அதற்குள் குருசாமி பரமசிவத்திடம் விடைபெற்றுக்கிட்டுப் போயிட் டான். பெரியவர் மட்டும் தனியே இருந்திருக்கார். ‘என்ன தாத்தா! லாட்ஜுக்குத் திரும்பலையா?’ என்று கேட்ட சந்திராவிடம், ‘இந்தத் தொப்பியைத் தேடித்தானே வந்தே’ன்னு பதில் கேள்வி போட்டாராம். படகில் தாம் கண்டெடுத்த அவள் தொப்பியைக் கொடுக்கப் போனாராம். அதைத் தேடிக்கிட்டு அவள் வருவாள் என்று எதிர் பார்த்தே அவர் குருசாமியை அனுப்பி விட்டுக் காத்திருந்திருக்காலாம்.

" 'ஓகோ! அவசரத்தில் இதையும் மறந்து விட்டுட்டுப் போயிருக்கேன்'னு கூறி இவள் தொப்பியைத் திரும்பப் பெறக் கையை நீட்டினாளாம்..."

"அப்புறம்?"

"அப்புறம் நடந்ததை மீனா எதிரே விவரிக்க எனக்குக் கஷ்டமாயிருக்குது" என்றார் நடராஜன். "அனுவுடைய கவனமும் நான் சொல்கிற கதையில்தான் இருக்குது. அதனாலே அந்த வேலையை நான் எழுத்தாளர் ஸாரிடம் விட்டுடறேன். அவர் நாசூக்காகக் கூறுவார். இங்கு பஸ்ஸில் வரும்போதே அவர்கிட்டே சகலத்தையும் தெரியப்படுத் திட்டேன் நான்." அச் சம்பவத்தைத் தமது மக்களுக்கு எடுத்துரைக்கும் பொறுப்பை அந்தக் குடும்பத்தின் தலைவர் மீதே சுமத்தி விட்டுக் கண்யமாக ஒதுங்கிக் கொண்டார் நடராஜன்.

பத்மநாபன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார், முக்கியத்துவம் பெற்றவராக.

" 'தாங்க்யூ பட்டி (buddy)' என்று அவருக்குச் சொல்லி விட்டு ரன்னிங் காமெண்டரியை நீங்க தொடரலாம்" என்றாள் மீனா.

"வாய்விட்டுச் சொல்லும்படியான விஷயம் இல்லைங் கறதால்தானே தயங்கறார் நடராஜன். நீ ரன்னிங் காமெண்டரி கேட்கிறே, போக்கிரி!" என்றார் பத்மநாபன். எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

பத்மநாபன் சிறிது யோசித்து விட்டுச் சுருக்கமாகக் கூறினார்: "பரமசிவத்துக்கு ரொம்ப அல்ட்ரா மாடர்ன் பெண்களைக் கண்டால் வெறுப்பாம். இதைக் குருசாமி பிற்பாடு சொல்லியிருக்கிறான், இவரிடம்..." பத்மநாபன் நடராஜனைச் சுட்டிக்காட்டி விட்டுத் தொடர்ந்தார்: "நமது பண்பாட்டைக் குலைக்க வந்தவர்கள் என்று நவநாகரிக

*மாகச் சிங்காரித்துக் கொள்கிறவர்களைப் பற்றி பரமசிவம் நினைத்து நினைத்து, அந்த வெறுப்பிலேயே சதா உழன்று, அதன் பயனாகத் தன்னுடைய மனத்தையே விகாரப் படுத்திக் கொண்டிருக்க வேண்டும். அதனால் ரொம்ப ஸோஷியலாகத் தொட்டுப் பேசிப் பழகிய சந்திராவிடம் தமது கோபத்தை, யாரும் எதிர்பார்க்க முடியாத நூதன மான விதத்தில் வெளிப்படுத்தி யிருக்கிறார். அதாவது பண்பாட்டிலிருந்து அவள் ஒரு சாண் சறுக்கினால் தாம் ஒரு முழம் சறுக்கிக் காட்ட வேண்டும்; அப்போதுதான் அவளும் அவளைப் போன்றவர்களும் படிப்பினை பெறுவார்கள் என்று நினைத்துச் செயல்பட்டிருக்கிறார். மனித மனம் எவ்வளவு விசித்திரமானது பாருங்கள்! ரொம்பக் கண்ணிய மானவர் என்று பெயரெடுத்த பரமசிவம் சந்திராவிடம் கேவலமாக நடந்து கொண்டதற்கு இதுதான் காரணமாக இருக்க வேண்டும் என்று நடராஜன் ஊகிக்கிறார். அதில் தவறு இருப்பதாகவும் எனக்குத் தோன்றவில்லை. தனிமை யும் இருளும் சேரவே அவருக்குத் தைரியம் அதிகரித்து அல்ட்ரா மாடர்ன் அழகிகள் சமூகத்தைப் பழிவாங்கும் படலத்தைத் தொடங்கியிருக்கிறார். புல் தரையில் தள்ளப் பட்டு மல்லாந்து கிடக்கையில் சந்திரா தன் கற்பைக் காத்துக் கொள்வது எப்படி என்று புரியாமல் தவித்தபோது நீண்ட அவள் கரத்தில் ஏதோ ஒரு கழி தட்டுப் பட்டிருக்கிறது. படகைக் கொக்கி போட்டாற்போல் கரைக்கு இழுக்க உதவும் ஆயுதம் அது. அதைப் பயன்படுத்திப் பெரும் பாரமாகத் தன்மீதிருந்த பரமசிவத்தைத் தலையில் தாக்கி யிருக்கிறாள். அவர் இறந்துவிட்டார். சந்திரா அவரைப் புரட்டிக் கரையோரமாக நீரில் தள்ளிவிட்டு எழுந்து தன்னைச் சுதாரித்துக் கொண்டு என்.ஸி.ஸி. கேம்ப்புக்குத் திரும்பிச் சென்றுவிட்டாள்.*

"போலீஸார் கூப்பிட்டு விசாரித்த போது தான் இரண்டாவது தடவையாக ஏரிக் கரைப் பக்கம் வந்ததை அவள் கூறவேயில்லை. புரூச் காணாமல் போனதையும் வெளியிடவில்லை."

"பாவம், அந்தப் பெண்ணுக்கு என்ன தண்டனை கொடுக்கப் போறேள்?" என்று கேட்டாள் அம்புஜம்.

"அதைத் தீர்மானிக்க வேண்டியது நீதிபதிதான். நான் என்ன சொல்ல? ஆனால் அவள் தன் மானத்தைக் காத்துக் கொள்ளத்தான் இப்படிச் செய்தாள் என்பதால் தண்டனை இலேசானதாகத்தான் இருக்கும்."

"குருசாமி? அவருக்கு ஒண்ணும் தண்டனை கிடையாதா?" என்று வினவினாள் மீனா. "அத்தனை தகிடு தத்தம் பண்ணியிருக்காரே!"

"கிடைக்கும். தங்கள் தகப்பனாரை ஏமாற்றி மோசடி செய்ததாகப் பரமசிவத்தின் வாரிசுகள் வழக்குத் தொடுப் பாங்க. கம்பெனி லா சட்டப்படி அரசாங்கமே நடவடிக்கை எடுக்கலாம்."

"ஆனாலும் ரொம்ப அழுத்தம் ஸார் நீங்க! கேஸைக் கச்சிதமா முடிச்சுட்டு அடக்கமா உட்கார்ந்திருக்கேள், பால் பொங்கினதும் பாத்திரத்தை இறக்கி வைச்சுட்ட மாதிரி."

"ஆடம்பரமா நெஞ்சை நிமிர்த்திக்கிட்டுப் போக ராஷ்டிரபதி தங்கப் பதக்கத்தையா வைச்சுக்கிட்டுக் காத்திருக்கார் எனக்காக? ஏதோ நம்ம கடமையைச் செய்யறோம். சில சமயம் சுலபமா முடியுது, சில சமயம் இழுக்கடிக்குது."

"உங்களை நீங்களே ஏன் குறைச்சுப் பேசிக்கறேள்? சாமர்த்தியமாகத்தானே விடுவிச்சிருக்கேள் இந்தப் புதிரை?"

"நியாயமான பெருமையை ஏற்றுக்கிட நான் தயங்கலை, அம்மா! அந்தப் புரூச்சுக்கும், இந்தக் கொலைகேஸுக்கும் சம்பந்தம் இருக்கலாம்னு ஊகிச்சேன் பாருங்க. அப்படி

இணைச்சுப் பார்த்ததுதான் என் கெட்டிக்காரத்தனம். அந்த அளவுக்குச் சக்தி இருக்கிறதாலேதான் நான் டி.ஐ.ஜியாகப் பதவி உயர்வும் படிப்படியாகப் பெற்றிருக்கேன். ஆனால் அம்பலவாணன் செட்டியார் பணத்தாசைக்கு அடிமையாகி நகையைப் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு வராமலே இருந்திருந்தால் நான் என்னத்தைச் சாதித்திருக்க முடியும்? நம் திறமையோடே கடவுள் அருளும் வேண்டும். அது அம்பலவாணன் மூலம் செயல்பட்டது.''

''இதே மாதிரி மற்ற ரெண்டு கொலைகளுக்கும் மர்ம முடிச்சுக்களைப் பாந்தமா அவிழ்த்துடுங்கோ.''

''அவிழ்க்க முடியலைன்னா கத்திரிச்சுப் புடுவோம்!'' என்று கூறியபடியே நடராஜன் எழுந்தார். ''எங்கே நம்ம நண்பர் அமிர்தலிங்கத்தைக் காணோம்?'' என்று கேட்ட படியே சுற்றுமுற்றும் பார்த்தார். எங்குமே அவன் தென்பட வில்லை. நடராஜன் சிரித்தார். ''பார்த்தீங்களா, பத்மநாபன்! ஃபேரிஃபால்ஸிலும் பேரீஜம்மிலும் புதிர்களை விடுவிக்க முடியவில்லை என்று நான் சொல்லிக்கிட்டிருந்த போது எத்தனை ஆர்வமாகக் கேட்டான்? என் தோல்விகளை அறிந்து ரசித்தவனுக்கு என் வெற்றிகளை ஏற்றுக்கிட முடிய வில்லை. தன் பாட்டுக்குக் கிளம்பிச் சென்றுவிட்டான்'' என்றார்.

எல்லாரும் பஸ்ஸில் ஏறிக் கொண்டார்கள். அமிர்த லிங்கத்துக்காகக் காத்திருக்க வேண்டாம் என்று பிரயாணிகள் எல்லாருமே ஏகமனதாகத் தீர்மானித்தார்கள். டிரைவர் மட்டும் ஐந்து நிமிஷங்கள் தாமதித்து, ''பாம், பப்பாம்'' என்று பல்ப் ஹாரனை நிமிஷத்துக்கு ஒரு தடவை வீதம் அழுத்தி எச்சரித்த பிறகுதான் புறப்பட்டார். ''அப்புறம் என் மேலே தப்பு சொல்லப்படாது பாருங்க'' என்று விளக்கமும் கொடுத்தார்.

செண்பகனூர் தபால் நிலையத்தினருகே பஸ் நின்றது. இந்தியாவிலேயே மிகச் சுத்தமான தபால் நிலையம் என்று பெயர் பெற்றிருக்கிறது இது. பக்கத்திலிருந்த ஸேக்ரட் ஹார்ட் காலேஜைச் சேர்ந்த ஒரு பாதிரி இதனை நிர்வகித்து வந்தார். சிறிய தபால் நிலையம்தான் ஆனால் அந்த இலாகாவுக்கே பெருமை தரக்கூடிய வகையில் திறம்பட நடத்தியதுடன் சுத்தமாகவும் அழகாகவும் வைத்திருந்தார்.

கல்லூரி, கிறிஸ்துவப் பாதிரிமார்களாக விளங்கப் பயிற்சி அளிப்பதாகும். பி.ஏ. பட்டத்துக்கு இணையான எஸ்.ஜே. (ஸொஸைட்டி ஆஃப் ஜீஸஸ்) என்ற பட்டத்தைப் பெறுகிறார்கள் இதில் தங்கிப் படிப்பவர்கள்.

"இந்தக் கல்லூரிக்குள் பெண்கள் நுழைய அனுமதி கிடையாது" என்றார் நடராஜன். "உள்ளே பழங்காலத்திய அபூர்வமான நூல்கள் பல இருக்கின்றன. பத்திரிகையாளர் பத்மநாபன் அவற்றைப் பார்க்க விரும்பலாம். போய் வரட்டும். நாம் தோட்டத்தில் உலாத்திக்கிட்டு இருப் போம்" என்றார்.

"ஐயோ! பழங்காலப் புத்தகங்கள் என்றாலே எனக்கு அலர்ஜி" என்றார் பத்மநாபன். "பக்கங்கள் தொட்டால் பொடியாகிப் பொல பொலவென்று உதிரும். தூசி நெடி மூக்கில் ஏறித் தும்மல் வரவழைக்கும். அப்புறம் ஜலதோஷம், தலைவலி என்று ஒரு வாரம் அவஸ்தைதான்!"

"அன்னம் பத்திரிகை துணை ஆசிரியர், இப்படிச் சொன்னீங்கன்னு தெரிஞ்சாலே பாதிரிமார்கள் வருத்தப் படுவாங்க. பார்த்துவிட்டு வந்து அருமையான கட்டுரை எழுத வேண்டாமா?"

"நான் லீவிலே வந்திருக்கேன், சுவாமி! ஆளை விடுங்க."

"நான்கூட லீவிலேதான் வந்தேன்" என்று தமக்குத் தாமே பரிதாபப்பட்டுக் கொண்டு பெருமூச்செறிந்தார்

நடராஜன். பின்னர் மீனாவிடம் சொன்னார்: "இந்தத் தோட்டத்திலே இரண்டு விசேஷம். சிலர் பல தேசத்து ஸ்டாம்புகளைச் சேகரிப்பாங்க, வேறு சில பேர் பல நாட்டு நாணயங்களைச் சேகரிப்பாங்க. அது மாதிரி இங்கே விதம் விதமான ஃபர்ன் செடிகளையும் தினுசு தினுசான ஆர்கிட் செடிகளையும் வரவழைத்து வளர்க்கிறாங்க."

தபால் நிலையத்துக்குப் பக்கத்தில் ஒரு சிறு மியூஸியமும் உருவாக்கியிருந்தார்கள், பாதிரிமார்கள். அங்கு, சுற்று வட்டாரத்தில் அந்த மலைப் பிராந்தியங்களில் கிடைக்கும் மிருகங்கள் உயிருள்ளன போலவே தத்ரூபமாய்க் காட்சி யளித்தன. ஒவ்வொன்றுக்கும் ஏற்ற சூழ்நிலையையும் அழகாகச் செயற்கை முறையில் சிருஷ்டித்திருந்தார்கள்.

**வி**சுவும் அனசூயாவும் மியூஸித்தை விட்டு வரமாட்டே னென்றார்கள். அவர்களைப் பத்மநாபன் பொறுப்பில் விட்டு விட்டு நடராஜன், மீனாவையும், ரங்கனையும் அழைத்துக் கொண்டு ஸேக்ரட் ஹார்ட் கல்லூரி தோட்டத்தைப் பார்த்து வரப் புறப்பட்டார்.

"நானும் மீனாவோடே போயிட்டு வரேன்" என்று கணவரிடம் சொல்லிக் கொண்டு அம்புஜமும் கிளம்பினாள். மீனாவைத் தனியே அவர்களுடன் அனுப்ப அவள் தயங்கு வதைப் பத்மநாபன் புரிந்துகொண்டு தலையாட்டினார்.

ஃபர்ன், ஆர்க்கிட் ஆகிய செடிகள் இருந்த இடத்துக்கு நிழல் தரும் மரங்கள் கூரை விரித்திருந்தன. தண்ணென்றி ருந்தது சூழல். கீழே எல்லாம் காய்ந்த இலைச் சருகுகள். சரசர என்று ஒலி எழுப்பியபடி அவற்றின்மீது நடப்பதே ஒரு சுகானுபவமாக இருந்தது. "ஆர்கிட் மலர்களுக்கு இப்போது ஸீஸன் இல்லை போலிருக்கிறது, ஒன்றிரண்டு புஷ்பங்கள்தான் இருக்கின்றன" என்று சுட்டிக்காட்டினார் நடராஜன்.

"போதும்! போதும்! இதற்கு மேல் இருந்தால் தாங்க முடியாது. இந்த ஒன்றிரண்டு பூக்களே இத்தனை அழகாக இருக்கே!" என்றாள் மீனா.

தொட்டிகளில் விதம் விதமான ஃபர்ன் செடிகளைச் சேகரித்து வைத்திருந்த இடத்துக்கு வந்தார்கள். "இந்தச் செடிகளைப் பற்றி நீ படித்திருப்பாயே மீனா!" என்று ஆரம்பித்தார் நடராஜன். "பாசி வகைகளுக்கும் விதை யோடுகூடிய மரம் செடி கொடிகளுக்கும் இடைப்பட்ட ஒரு நிலை இந்த ஃபர்ன் - நீர் வாழ்வனவற்றுக்கும், நிலத்தில் வாழ்வனவற்றுக்கும் இடைப்பட்ட நிலையில் தவளை இருப்பதாகச் சொல்கிறோமே, அந்த மாதிரி!"

"இதைவிட ஒரு நல்ல உதாரணம் வேணும்னா நான் சொல்கிறேன் மீனா!" என்றான் ரங்கன். "கட்டைப் பிரம்மச்சாரிகளுக்கும் கல்யாணமான கிருகஸ்தர்களுக்கும் இடையில் காதலித்துக் கஷ்டப்படுகிற இனம்னு ஒண்ணு இருப்பதில்லையா? அப்படி ஓர் இரண்டும்கெட்டான் நிலையில் உள்ளவை இந்த ஃபர்ன் செடிகள்!"

மீனா தலை குனிந்து கொண்டாள். நடராஜன் திடுக்கிட்டவராகச் சரேலென்று அம்புஜத்தை நோக்கினார், 'உங்களுக்கு ஏதாவது புரிகிறதா?' என்று வினவும் தோரணையில்.

அம்புஜம் கலவரத்துடன் அவரைப் பார்த்து இலேசாகத் தலையசைத்தாள். 'இது கூடாது, முடியாது' என்று உணர்த்துகிற பாவம் அவள் முகத்தில் தெரிந்தது. ஆனால் அதே சமயம் அவள் கண்கள் இலேசாகக் கலங்குவதையும் கவனித்துவிட்டான் ரங்கன்.

'மாமி கொஞ்சம் கொஞ்சமாக வழிக்கு வருகிறாள்' என்று எண்ணிக் கொண்டான் அவன்.

★ ★ ★

# 30. அடிபட்ட புலி

அன்றிரவு டி.ஐ.ஜி. நடராஜனும் அவர் மகனும் ரொம்ப முக்கியமான ஒரு காரியத்தில் ஈடுபட்டிருந்தார்கள். "அப்பா எனக்கு ஏதோ வேலை வைச்சிருக்காராம், நான் செஸ் ஆட உங்கள் அறைக்கு இப்போ வர்றதுக்கில்லை" என்று சாப்பாட்டின்போது ரங்கன் மீனாவிடம் சொல்லிவிட்டு வந்திருந்தான். மாலையில் ஸ்டூடியோவிலிருந்து என்லார்ஜ் மெண்டுக்குக் கொடுத்திருந்த நெகடிவ்களையும் கறுப்பு-வெளுப்பு புகைப்படங்களையும் பெற்று வந்திருந்தான் அவன். அவற்றைத் தகப்பனும் பிள்ளையும் இப்போது ஆராய்ந்தார்கள். எல்லாமே ஹிப்பி அமிர்தலிங்கத்தின் படங்கள். பல கோணங்களில் எடுக்கப்பட்டவை. "ப்ரையண்ட் பார்க்கில் நீ இவற்றை எடுத்தது அவனுக்கு நிச்சயமாகத் தெரியாதில்லையா?" என்று கேட்டார் நடராஜன். "அம்புஜமோ மீனாவோ சொல்லியிருக்க மாட்டாங்களே?"

"நிச்சயமா சொல்லி யிருக்க மாட்டாங்க. திடீரென்று இந்தப் படங்களை அவனிடம் காட்டி அவனை ஆச்சரி யத்தில் ஆழ்த்தப் போவதாய் அவங்களை நம்ப வைச்சிருக் கேன். அனுவுடைய காமிராவை அவன் உடைத்ததால் அவங்களுக்கும் தாபம்தான். ஆகவே, என் பேச்சைத் தட்ட மாட்டாங்க."

''சரி, இந்த இரண்டு படங்களையும் செலக்ட் பண்ணி யிருக்கேன். ஒண்ணை நீ டச்-அப் பண்ணு. இன்னொன்றை நான் கவனிச்சுக்கறேன்.''

ஓவியர்களுக்குத் தேவையான பிரஷ், வர்ணங்கள் முதலானவற்றை எடுத்து மேஜையின் மேல் பரப்பினான் ரங்கன். ஸ்டுடியோவில் என்லார்ஜ்மெண்ட்களைப் பெற்ற பிறகு, ஸி.எல்.எஸ். புக் ஷாப்புக்குள் நுழைந்து ஓவியர் களுக்கான சில உபகரணங்களையும் பெற்று வந்திருந்தான். கறுப்பு நிறத்தில் வெள்ளை கலந்து சாம்பல் நிறமாக்கிப் பிரஷ்களை அதில் தோய்த்தெடுத்துப் புகைப்படங்களில் தங்கள் திறமைகளைக் காட்டத் தொடங்கினர் இருவரும். அவர்கள் எதிரே ஸைக்கோ ஸாரநாதனின் புகைப்படம் அச்சான பழைய தினசரி ஒன்று இருந்தது.

காரியத்தில் கருத்தாக இருந்துகொண்டே கேட்டான் மகன்: ''இவன் ஸைக்கோ ஸாரநாதனாக இருக்கலாம் என்று எதனால் தீர்மானிச்சீங்க அப்பா?''

''நான் ஒரு முடிவுக்கும் வரவில்லை. ஊகம்தான். போலிகளைப் பார்த்துப் பார்த்துப் பழகிய என் கண்களுக்கு இவன் தோற்றமே நிம்மதி அளிப்பதாய் இல்லை.''

''தாடியைப் பிடிச்சு ஓர் இழுப்பு இழுத்தால் புரிஞ்சு போகுது.''

''அதாவது சினிமாவிலும் நாடகத்திலும் போலீஸ் அதிகாரிகளா நடிக்கிறாங்களே அந்த மாதிரி என்னையும் நடந்துக்கச் சொல்றே இல்லையா?'' என்று கேட்டு நடராஜன் சிரித்தார். ''அது நிஜத் தாடியாக இருந்து தொலைத்து, இவன் என் மேலே மான நஷ்ட வழக்குத் தொடுத்தால் என் கதி என்ன? பணக்கார வீட்டுப் பிள்ளை மாதிரி பணம் அவன் கையில் புரளுது. பத்மநாபனுக்குக் கூட அவனிடம் அதனால்தான் மதிப்பு.''

"வழக்குத் தொடுத்தானானால் பதவி பறி போயிடுமா?"

"அதோட அவமானம் வேறே சூழும். அதனால்தான் இந்தக் காரியத்தில் இறங்கியிருக்கேன்."

"அவன் தோற்றம் மட்டும்தான் உங்கள் சந்தேகத்துக்குக் காரணமா அப்பா? அனசூயாவின் காமிராவை அவன் உடைத்தது...?"

"அதுவும் விநோதமாத்தான் இருந்துச்சு. சாதாரணமா புகைப்படம் என்றதும் புன்னகையுடன் போஸ் கொடுக் கிறவங்களைத்தான் நாம் கண்டிருக்கிறோம். இவன் ஏன் தன்னை யாரும் படமெடுப்பதை விரும்பலை? அத்தனை தூரம் ஆத்திரம் அடைவானேன்?"

"சிறையிலே அடைச்சப்போ படமெடுத்தாங்களே அந்த நினைவு வந்துடுச்சோ என்னமோ?" என்று ரங்கன் கூறினான், தினசரியில் அச்சாகியிருந்த புகைப்படத்தை பிரஷ்ஷின் அடிவாரத்தால் தட்டிக் காட்டி.

"மூன்றாவதாக ஒரு காரணமும் இருக்கிறது, ரங்கா! கொலை செய்தவர்கள் யார் என்று என்னால் கண்டுபிடிக்க முடியாதபோது அவன் என் கையாலாகாத் தனத்தைப் பார்த்து ரசித்துச் சிரித்தான். ஆனால் இன்றைக்குப் பரம சிவம் கொலை வழக்கை நான் 'ஸால்வ்' பண்ணிட்டேன் என்றதும் அந்த விவரத்தைத் தெரிந்துகொள்ள இஷ்ட மில்லாமல் போய்விட்டான்."

"அதாவது...?"

" 'ஸைக்கோவின் காரியம் இந்தக் கொலைகள்' என்று மக்கள் எண்ணுவதை இவன் விரும்பி வரவேற்கிறான். ஸைக்கோ செய்த கொலைகள் அல்ல என்ற உண்மை பரவுவதை வெறுக்கிறான்."

"அதனால்...?"

''நான் ஸைக்கோவாக இருந்தால் என் மனம் என்ன எண்ணும் என்று நினைப்பது அசட்டுத்தனம். ஆனாலும் சில சமயங்களில் அசட்டுத்தனமான யோசனைகள் மாபெரும் சாதனைகளுக்கு வழிவகுத்திருப்பதைச் சரித்திரமும் விஞ்ஞானமும் நமக்கு எடுத்துச் சொல்கின்றன....''

''சுற்றி வளைக்காதீங்க அப்பா. 'தி ஆர்ட் ஆஃப் டிடக்ஷன்' என்பது பற்றிச் சொற்பொழிவா நிகழ்த்தறீங்க? யூ ஆர் டாக்கிங் டு யுவர் ஸன்!''

கிண்டலைச் சிரித்து ஒதுக்கிவிட்டுத் தொடர்ந்தார் நடராஜன்: ''ஊரிலே எல்லாரும் இவை ஸைக்கோ செய்த கொலைகள் என்ற நினைப்பில் நடுங்கிக் கொண்டிருந்தால் அதிலே இவனுக்கு ஒரு மன நிம்மதி, திருப்தி நிலவலாம். அந்தத் திருப்தி நீடிக்கும் வரையில் இவனுக்குத் தானே கொலைகள் செய்ய வேண்டும் என்ற பரபரப்பு ஏற்படா திருக்கலாம்.''

''உங்க ரீஸனிங் கரெக்ட் அப்பா. ஆனால் இப்போ நீங்க ஒரு சிக்கலை நீக்கிட்டீங்க. பாக்கி இரண்டு முடிச்சுக் களையும் அவிழ்த்துக் கொலை செய்தவங்களை உள்ளே தள்ளிடறீங்கன்னு வைச்சுப்போம். அப்போ இந்த ஸைக்கோ மீண்டும் கொலை செய்யணும் என்கிற மன உளைச்சலுக்கு உள்ளாவானே!''

''அது மட்டுமில்லை, ரங்கா. முன்னைவிட உக்கிரமாகச் செயல்படுவான்! அடிபட்ட புலியா மாறிடுவான்! இதுவரை அடங்கிக் கிடந்த கொலை வெறி சீறிப் பாயும்! ஆனால் ஒன்று... இவன் ஸைக்கோவாக இருந்தால்தானே அப்படி நடந்து கொள்ளப் போகிறான்...?''

''இனி அந்தச் சந்தேகத்துக்கே இடமில்லை அப்பா! இதோ பாருங்க!'' என்று ரங்கன் அதுவரையில் தான் சாம்பல் நிற வர்ணத்தைக் குழைத்துப் பிரஷ்ஷினால் டச்-

அப் செய்து கொண்டிருந்த புகைப்படத்தை அவர் எதிரே மேஜையின் மேல் போட்டான்.

தாம் செய்திருந்த வேலையையும் அவனுடைய காரியத்தையும் ஒப்பிட்டு நோக்கிய நடராஜன் சொன்னார்: "என்னைவிட நீ சிறந்த ஆர்டிஸ்ட்தான்!"

பத்திரிகையிலிருந்து சைக்கோ ஸாரநாதனின் உருவத்துக்கும் புகைப்படத்தில் இருந்த அமிர்தலிங்கத்தின் உருவத்துக்கும் இடையில் இப்போது அதிக வித்தியாசம் இல்லை. ஏறத்தாழ ஒரே மாதிரிதான் இருந்தன. அமிர்த லிங்கத்தின் தாடி மீசை, அடர்ந்த தலைமயிர், மூக்குக் கண்ணாடி,மணிமாலை எல்லாம் மறைந்துவிட அவன் இப்போது சிறைச் சாலை உடை தரித்து, கிட்டத்தட்ட சைக்கோ ஸாரநாதன் மாதிரியே வழுக்கைத் தலையுடன் காட்சி தந்தான்.

அதைப் பார்த்தபடியே, "உம்... உம்..." என்று முகவாயைத் தடவியபடி அமர்ந்திருந்தார் நடராஜன்.

"இன்னும் என்ன யோசனை அப்பா? பிடித்துத் தள்ளுங்க, உள்ளே!" என்றான் ரங்கன்.

"உணர்ச்சிகள், ஊகங்கள் இவற்றின் அடிப்படையில் போலீஸ் இலாக்கா செயல்படக் கூடுமானால் எங்கள் வேலை எவ்வளவோ எளிதாகிவிடும், ரங்கா! ஆனால் சட்டம் உணர்ச்சிகளைக் கவனி, ஊகங்களைச் சோதித்துப் பார் என்றுதான் சொல்கிறது. சாட்சியங்களின் அடிப் படையில்தான் நடவடிக்கை எடுக்க அனுமதிக்கிறது. இதனால் குற்றவாளிகள் சிறிது காலம் கும்மாளி போட லாம். ஆனால் போலீசுக்கு இந்தக் கட்டுப்பாடு இல்லாது பேனால் அராஜகத்துக்கு இடமளித்ததாகிவிடும். மக்கள் போலீஸாரிடமிருந்து பாதுகாப்பு பெறுவதற்குப் பதில் பயப்படும்படியான நிலை உருவாகிவிடும்.

*"சரி, இப்போ என்ன செய்யப் போறீங்க?"*

*"அடிபட்ட புலின்னு சொன்னேன் இல்லையா? அதைச் சீண்டிவிட்டுத்தான் வேடிக்கை பார்க்கணும்!"*

*"வேடிக்கையா இது? வினை!"*

*"இங்கே வலையும் விரித்திருப்போம் ரங்கா!" என்றார் டி.ஐ.ஜி., ஸி.ஐ.டி. நடராஜன்.*

★ ★ ★

# 31. ஆதவன் ஆராய்ச்சி நிலையம்

**கொ**டைக்கானலில் உள்ள ஆதவன் ஆராய்ச்சி நிலையம் சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப் பட்டது. ஆசியாவிலேயே மிகத் தொன்மையான ஆய்வுக் கூடம்.

இது சூரியனை யொட்டிய பௌதிக சாஸ்திரத்தை ஆராய்வதுதான் இதன் முக்கிய பணி என்றாலும் 'புதிய நட்சத்திர'ங்களை உன்னி நோக்குவது வால் நட்சத்திரங் களைப் பற்றி அறிவது போன்ற காரியங்களும் நடக்கின்றன.

'ஆப்ஸர்வேட்டரி' என்று அழைக்கப்படும் இந்த விஞ்ஞானக் கூடத்துக்குப் பத்மநாபன் குடும்பம் ஹாப்பி ஹாலிடேயில் தங்கியிருந்த வேறு சில குடும்பங்களுடன் பஸ்ஸில் வந்து சேர்ந்தது. அந் நிலையத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ரொம்ப உற்சாகத்தோடு அங்கு நடக்கும் பரிசோதனைகளை விளக்கிச் சொல்லிக் கொண்டிருந்தார். புரிந்து தலையாட்டினார்கள் ஒரிருவர். புரியாவிட்டாலும் திறந்த வாய் மூடாமல் கேட்டார்கள் சிலர். 'நமக்கு ஒன்றும் புரியாது' என்று தீர்மானித்துக் கொண்டு வெளியே தோட்டத்துக்கு வந்துவிட்டார்கள் பலர்.

பத்மநாபன் குடும்பமும் இந்தக் கடைசி ரகத்தைச் சேர்ந்ததாகத்தான் விளங்கியது. ரங்கனும் நடராஜனும் அவர்களுடனேயே இருந்தார்கள். வான சாஸ்திரத்தைவிட அந்த ஆய்வுக் கூடத்தைச் சுற்றிலும் நடந்திருந்த தோட்ட

சாஸ்திர ஆராய்ச்சியில் அதிக ஈடுபாடு காட்டினார்கள் மீனாவும் ரங்கனும்.

"பூந்தோட்டமா இது? பூங்காடு!" என்றார் பத்மநாபன். நடைபாதை ஓரம் வரப்பாக அடுக்கியிருந்த பாறைகளுள் ஒன்றின் மேல் அமர்ந்தார்.

அனசூயா அவர் மடி மேல் கைகளை ஊன்றிச் செல்லமாக அவர் முகத்தை ஏறிட்டு நோக்கிக் கூறினாள்: "அப்பா! இந்தப் பூக்களுக்கெல்லாம் இத்தனை அழகழகான வர்ணங்கள் எப்படிக் கிடைக்கின்றன, தெரியுமா?"

"எப்படி?" என்று அவள் திருப்திக்காகக் கேட்டார் பத்மநாபன், ஆவலைக் குரலில் தேக்கி.

"வானவில் தரையைத் தொடுமோன்னோ; அந்த இடத்துக்கு வன தேவதைகள் போவா. அதிலேயிருந்து வழியும் நிறங்களை டப்பாக்களிலே அள்ளிண்டு வருவா. அப்புறம் இங்கேயும் அங்கேயுமா பறந்து போய் பிரஷ் ஷினாலே எல்லாப் பூக்களுக்கும் பெய்ண்ட் பண்ணிடுவா. ஆனா அவாளை நாம் பார்க்க முடியாது. ஏன்னா அவா ஃபேரீஸ்; கண்ணுக்குத் தெரிய மாட்டா!"

"நீ படிச்ச கதைப் புத்தகத்திலே இப்படி எழுதியிருக்கா அனு? அழகான கற்பனைதான்!" என்றார் பத்மநாபன் மகளை முதுகில் தட்டிக் கொடுத்தபடியே.

நடராஜன் வினவினார்: "ஏன் ஸார், இந்த ஆப்ஸர் வேட்டரியில் நடப்பதை யெல்லாம் விவரமா எடுத்துச் சொல்லிக் கிட்டிருக்காரே அங்கே ஒருத்தர்; நீங்க கேட்க வேண்டாமா?"

"கொஞ்ச நேரம் நின்னு பார்த்தேன். ஒண்ணும் புரியலே!" என்றார் பத்மநாபன்.

"இத்தனை பச்சையாக உண்மையைச் சொல்லக் கூடாது ஸார், நீங்க! புரிஞ்ச மாதிரி தலையாட்டி விட்டாவது

வரணும். உங்க ஃபிரண்டு ஹிப்பி அமிர்தலிங்கம் கால் கடுக்க நின்னு கேட்கிறானே. தனக்கு என்ன புரியுதுன்னு நினைச்சுக்கிட்டிருக்கான் அவன்? நீங்களாவது சிரமத்தைப் பார்க்காமல் கொஞ்சம் சிரத்தை எடுத்துக்கிட்டீங்கன்னா விஷயத்தைக் கிரகிச்சுப்பீங்க. அப்புறமா ஏதாவது இதைப் பற்றி எழுதலாம், பத்திரிகையிலே.''

''ஆமாம்!'' என்றாள் அம்புஜம் கிண்டலாக. ''தப்புந் தவறுமா ஏதாவது எழுதுவார்; அதைச் சுட்டிக்காட்டி நாலு கடிதாசுகள் வரும். அதையும் பிரசுரிப்பார்! பேசாமெ கதை எழுதறதோட நிறுத்திக்கலாம்.''

''கதை எழுதறது மட்டும் அத்தனை சுலபமா என்ன?'' என்றான் ரங்கன்.

''நன்னா கேளு, ரங்கா! இவ என்னிக்கு 'வாயைத் திறந்து எதுவும் பேச மாட்டேன்; 'சாப்பிட வரலாம்'ன்னு சொல்ற தோடே நிறுத்திக்கறேன்'னு சத்தியம் பண்ணறாளோ, அன்னைக்கே நானும் கதை எழுதறதோடே நிறுத்திக்கிறதா சபதம் பண்ணறேன்!'' என்றார் பத்மநாபன்.

''உங்க ஒய்ஃப் இப்படிச் சொல்லிட்டதுக்காவாவது நீங்க ஒரு சவாலா ஏற்றுக்கிட்டுப் பிரமாதமா ஒரு கட்டுரை எழுதணும், இந்த ஆப்ஸர்வேட்டரியைப் பற்றி!'' என்றார் நடராஜன். ''போங்க, போய் அந்த உதவாக்கரை ஹிப்பியை இந்தப் பக்கம் விரட்டி அடியுங்க. அவன்கிட்டே கொஞ்சம் பேசணும் எனக்கு.''

ஏதோ ஒரு முக்கியமான திட்டம் அல்லது காரணம் இருக்கவேதான் நடராஜன் தம்மைக்கூட வேலை வாங்கத் துணிகிறார் என்று பத்மநாபன் முடிவுக்கு வந்தார். அவர் கருத்துப்படியே சென்று அமிர்தலிங்கத்திடம் ஏதோ சால்ஜாப்பு கூறித் தமது குடும்பத்தினர் இருந்த பக்கமாக அனுப்பி வைத்தார். ஆனால் சில நிமிஷங்களுக்கு மேல்

அவரால் அங்கு விளக்க உரையைக் கவனமாகக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. அமிர்தலிங்கத்திடம் நடராஜன் என்ன பேசுகிறார் என்று அறிந்துகொள்ளும் ஆவல் பீறிட்டது. ஆகவே அவர் சற்று நேரத்துக்கெல்லாம் மெல்ல நழுவிக் கட்டடத்தைவிட்டு வெளிப்பட்டுத் தோட்டத் துக்கே வந்துவிட்டார்.

''என்ன அமிர்தலிங்கம் ஸார்!'' என்று அவனை சகஜமாக அழைத்துப் பேசத் தொடங்கினார் நடராஜன். ''நேற்று ஸில்வர் காஸ்கேட் கிட்டே எல்லோரும் உட்கார்ந்திருந் தப்போ, நான் பரமசிவத்தைக் கொன்றது யாருன்னு விளக்கிக்கிட்டிருக்கேன்; நீங்க மெல்ல நழுவி விட்டீங்களே!''

''தற்பெருமைக் காரங்களை எனக்குக் கட்டோடு பிடிக்காது'' என்றான் அமிர்தலிங்கம்.

''அப்படி இல்லையே? நான் ரொம்ப அடக்கமா இருக்கிறதால்ல அம்புஜம் அம்மாகூட நினைக்கிறாங்க!''

''இப்படி நீங்க சொல்லிக்கிடறதே தற்பெருமைதான்!''

''இருக்கட்டும், ஸார்! தற்பெருமையாகவே இருக்கட் டும். இன்னைக்கு நீங்களும் என் வீர தீரப் பிரதாபங்களைக் கொஞ்சம் கேளுங்க! நான் புதிரை விடுவிக்க முடியாமல் தவிக்கிறதா சொன்னப்போ எத்தனை தூரம் ரசிச்சுக் கேட்டுக்கிட்டிருந்தீங்க; எப்படி அட்டகாசமா சிரிச்சுச் சந்தோஷப்பட்டீங்க? இப்போ என் வெற்றிகளையும்தான் கேளுங்களேன்!''

''கையிலே விலங்கு மாட்டி உட்காரவைச்சுப் பேசினாத் தான் அது நடக்கும்'' என்றான் அமிர்தலிங்கம், அலட்சிய மும் கோபமும் கலந்த குரலில்.

"அதற்கு அவசியமில்லை, ஸார்! நட்புரிமையோடே என் கையைக் கொக்கி போட்டாற்போல் உங்க கரத்தோடு பிணைச்சுக்கிட்டாலே போதும்" என்றார் நடராஜன்.

கண்ணிமைக்கும் நேரத்தில் சொன்னதை அவர் செய்தும் காட்டினார். அவனால் ஓர் அங்குலம்கூட அசைய முடியாதபடி கண நேரத்தில் தம் பக்கத்தில் அவனைக் கட்டிப் பிடித்தாற்போல அமர்த்திக் கொண்டார்.

"நேற்று பரமசிவத்தின் மரணத்துக்கு அந்த என்.ஸி.ஸி. பெண் சந்திராதான் காரணம் என்று விளக்கினேனா? இன்றைக்குப் பாக்கி இரண்டு கொலைகளைச் செய்தது யாருன்னும் கண்டு பிடிச்சுட்டேன்! சொல்றேன், கேட்டுக் குங்க" என்று ஆரம்பித்தார்.

சொல்லி வைத்தாற்போல் கணக்காக இந்தத் தருணத்தில் பத்மநாபன் அவர்களுடன் வந்து சேர்ந்து கொண்டு விட்டார் கதை கேட்க.

ரங்கனும் மீனாவும் அடிக்கடி பிறர் அறியாதவாறு ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள். கண்கள் காதல் கதை பேசிக் கொண்டிருக்கையிலேயே அவர்கள் செவிகள் நடராஜன் விவரித்த மர்மக் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தன.

★ ★ ★

# 32. முடிச்சு அவிழ்ந்தது!

**பி**ரமீளா தன் தாயாரின் உடலோடு சென்னைக்குச் செல்ல அனுமதித்தார் நடராஜன். ஈமக் கடன்களைச் சென்னையில் நடத்துவதுதான் உசிதம். அதற்குத் திரை உலகமே திரண்டு வரும். யாராவது வராது போனால் ஆபத்து! ஏனெனில் பிரமீளாவுக்கு ஆறுதல் கூற இன்னின்ன பிரபல நட்சத்திரங்கள் வரவில்லை என்று கண்டுபிடித்துக் கூறி, ஏன் வரவில்லை என்பதற்கான ஹேஷ்யங்களையும் பத்திரிகைகள் வெளியிடும். ஏதாவது விரும்பத் தகாத வதந்திகள் பரவிவிடப் போகின்றனவே என்று பயந்து கொண்டே அத்தனை நடிகர் நடிகையரும் வருவார்கள். அவர்களைப் பார்க்க ரசிகர்களின் பெருங்கூட்டம் மொய்க்கும். எமனுக்கே சற்று நடுக்கம் ஏற்படும் அளவுக்கு மயானம் திமிலோகப்படும்!

பிரமீளாவின் கவர்ச்சிப் படம் ஒன்றினை வெளியிட மற்றொரு சந்தர்ப்பம் கிடைத்ததில் பத்திரிகை உலகம் மகிழும். 'பிரபல நட்சத்திரம்-பிரமீளாவின் தாய் மரணம்' என்று கொட்டை எழுத்தில் தலைப்புப் போட்டு ஃபோட்டோவுக்குக் கீழ், 'மரண மடைந்தவரின் மகள் பிரமீளா' என்று விளக்கம் கொடுக்கும்!

இதையெல்லாம் உத்தேசித்துத்தான் பிரமீளாவைச் சென்னை செல்ல அனுமதித்தார் நடராஜன். அவள் டிரைவர், பெண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்து போய்விட்டிருந்தானாதலால், சென்னை வரையில் அவள் காரை ஓட்டிச் செல்லப் போலீஸ் டிரைவர் ஒரு

வரையே ஏற்பாடு செய்து தந்தார். துணைக்கு இன்னொரு போலீஸ்காரரையும் ஏற்றி அனுப்பினார்.

ஆனால் இவ்வாறு போக அனுமதி அளிக்குமுன்னர் போலீஸ் சார்பில் ஒரு டாக்டர் கனகத்தின் உடலைப் பரிசோதிக்குமாறு ஏற்பாடு செய்தார். 'மண்டையில் இரண்டு இடங்களில் யாரோ பலமாக அடித்திருக்கிறார்கள்' என்று டாக்டர் தம் அபிப்பிராயத்தைத் தெரிவித்தார். படக்கூடாத இடத்தில் பட்டுவிடவே, அவள் உடனே மரணம் அடைந்திருக்கிறாள். கோக்கர்ஸ் வாக் சரிவில் விழுந்ததால் மரணம் நேர்ந்திருக்க முடியாது. ஏனெனில், சரிவில் துருத்திக் கொண்டிருந்த ஒரு பாறை காரணமாய் ரொம்ப ஆழத்துக்குப் போகுமுன்னரே அவள் உடல் தடுத்து நிறுத்தப்பட்டுவிட்டது. யாரோ அவளை அடித்துக் கொன்றபிறகு அங்கே சடலத்தைக் கொண்டுவந்து உருட்டி விட்டிருக்கிறார்கள். அதள பாதாளத்துக்கு உடல் போய் விட்டால் யார் கண்ணிலும் தட்டுப்படாது; உடலே கண்டுபிடிக்கப் படாதபோது யார் மீதும் கொலைக் குற்றம் சுமத்த முடியாது-இந்த நோக்கத்தில் கொலை செய்தவன் செயல்பட்டிருக்கிறான். ஆயின் அவன் எண்ணம் ஈடேற வில்லை. ரங்கன் ஊகமாகத் தன் தந்தையிடம் கூறியதைத் தான் டாக்டரும் இப்போது உறுதிப்படுத்தினார்.

ஒரு மஞ்சள் பத்திரிகையில் பிரமீளாவுக்கும் பார்த்தி பனுக்கும் இடையில் தொடர்பிருந்ததாகத் தான் படித் திருந்ததை யொட்டி சென்னைக்கு, ஃபோன் போட்டு விசாரணைக்கு ஏற்பாடு செய்தார் நடராஜன். பெங்களூரி லிருந்து தான் வருவதாக ஸி.ஐ.டி.யிடம் சொன்ன பார்த் திபன், உண்மையில் எழும்பூரில் ரயிலைவிட்டு இறங்கிய தாக டாக்ஸி டிரைவரின் வாக்குமூலம் உணர்த்தியது. இதைத் தொடர்ந்து பார்த்திபனின் போட்டோவைப் பெற்று அனுப்பும்படி நடராஜன் தமது இலாகாவினருக்கு டெலிபோனில் கட்டளையிட்டார். அந்தப் புகைப்படமும் கொடைக்கானலுக்கு வந்து சேர்ந்தது.

அதை எடுத்துக் கொண்டு போய்ச் சில ஹோட்டல்களில் விசாரித்தார் நடராஜன். ஹில்டனில் அவன் தங்கியிருந்த தாக உறுதிப்பட்டது. ஆனால் பெயர், விலாசம் எல்லா வற்றையும் மாற்றி ரிஜிஸ்தரில் எழுதியிருந்தான். பிரமீளா வும் அவள் தாயாரும் தங்கியிருந்த அதே ஹோட்டல்! அந்த ஆசாமி தன் அறையை விட்டு எங்கும் வெளியே போனது கிடையாது என்றுகூட ரூம் பாய் ஒருவன் ஞாபகம் வைத் திருந்து கூறினான். பிரமீளா தன் தாயாரைக் காணோம் என்று அழுது கொண்டு நடராஜனிடம் வந்த அதே தினத்தில்தான் பார்த்திபனும் அறையைக் காலி பண்ணிக் கொண்டு போயிருக்கிறான்.

கனகம் அறியாதவாறு அவன் அங்கு தங்க வேண்டும் என்றும் அறை எண்ணை மட்டும் தனக்குத் தெரிவிக்க வேண்டும் என்றும் சொல்லியிருப்பாள் பிரமீளா. பின் னோடு இவளும் தன் தாயாருடன் வந்து சேர்ந்திருப்பாள். காதலர்கள் ரகசியமாய்ச் சந்தித்திருப்பார்கள். எதிர்பாராத விதமாகக் கனகத்துக்கு உண்மை அம்பலமானபோது, அவள் ஆத்திரமடைந்து பார்த்திபன் அறைக்குப் போய் அவனைத் தாறுமாறாக ஏசியிருப்பாள். பார்த்திபன் கோபத்தில் இன்னது செய்கிறோம் என்று அறியாமல் அவளை அடித்துக் கொன்றிருப்பான். பிறகு அவள் கொலை செய்யப்பட்டாள் என்பதையே மறைத்துவிடக் கருதி, இரவு நேரத்தில் கோக்கர்ஸ் வாக்குக்கு உடலைப் பிரமீளாவின் காரில் ஏற்றி வந்து உருட்டித் தள்ளியிருப்பான். ஆனால் அந்தக் கிடுகிடு பள்ளத்தாக்கில் பக்கவாட்டில் நீட்டிக் கொண்டிருந்த ஒரு பாறை உடலைத் தடுத்துத் தாங்கி அவன் ஆசையில் மண்ணைப் போட்டு விட்டது.

இந்த விதமாக ஊகித்துப் பார்த்திபனைப் பிடித்து லாக்கப்பில் போடுமாறு உத்தரவிட்டார் டி.ஐ.ஜி. ஸி.ஐ.டி. நடராஜன்.

கூட்டளையிட்டு விட்டாரே ஒழிய உள்ளூற உதறல் தான் அவருக்கு. ஏதோ ஊகத்தின் பேரில்தானே அவனைக் கைது செய்திருக்கிறோம்? இவன்தான் கனகாவைக் கொன்றான் என்பதற்கோ காரில் உடலை ஏற்றிச் சென்றான் என்பதற்கோ என்ன சாட்சியம் இருக்கிறது? தாயும் மகளும் தங்கியிருந்த ஹோட்டலிலேயே பார்த் திபனும் தங்கியிருந்தான் என்பதற்கு அதிகமாகத் தம்மால் என்னத்தை நிரூபிக்க முடியும்? இப்படியெல்லாம் எண்ணிக் கவலைப்பட்டுக் கொண்டிருந்தார். பெண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று தந்தி வந்ததாகக் கூறிச் சென்ற பிரமீளாவின் டிரைவர் ஒருவேளை அப்படிப் பொய் சொல்லிவிட்டுப் போயிருப்பானோ? அவனே திரும்பி வந்து இந்தக் காரியத்தைச் செய்திருப்பானோ என்றுகூட நினைத்து மனம் குழம்பினார்.

இந்தத் தருணத்தில்தான் எதிர்பாராத விதமாக ஒரு திருப்பம் நிகழ்ந்தது. ஈமச் சடங்குகளெல்லாம் முடிந்து ஓரிரு நாட்கள் வரையில் பிரமீளா துயரில் ஆழ்ந்திருந்தாள். உள்ளம் தாயாரைச் சுற்றியே வட்டமிட்டது. அவள் தன்னை வளர்க்கப் பட்ட பாட்டையும் ஒரு நட்சத்திர மாகப் பிரகாசிக்கச் செய்ய எடுத்துக் கொண்ட பிரயாசை களையும் நினைத்து நினைத்துக் கண்ணீர் உகுத்தாள். மூன்றாம் நாள் அவளால் தனிமையைப் பொறுக்க முடியவில்லை. துயரைப் பகிர்ந்து கொள்ளவும் ஆறுதல் தரவும் அவள் பார்த்திபனின் துணைக்காக ஏங்கினாள். 'பார்த்திபன் ஏன் வரவில்லை? கரித்துக் கொட்ட அம்மா கூட இல்லாதபோது அவர் வர ஏன் தயங்க வேண்டும்? ஒருவேளை பயப்படுகிறாரா? கொடைக்கானலில் நடந்த நிகழ்ச்சிகளுக்காகச் சென்னையில் தன்னைச் சந்திக்க அவர் ஏன் அஞ்சவேண்டும்? மாறாக நாங்கள் ஒருவரை ஒருவர் சந்திக்காமல் இருந்தால் அல்லவா சந்தேகம் எழும்?''

இவ்வாறு எண்ணி அவள் காமிரா மேன் சேகருக்கு ஃபோன் செய்து அவர் நண்பரான பார்த்திபனைப் பற்றிக் கேட்டாள். சேகர் கூறிய பதில் அவளைப் பேரதிர்ச்சிக்கு உள்ளாக்கியது. கனகத்தைக் கொன்றதாகச் சந்தேகித்துப் பார்த்திபனை லாக்கப்பில் வைத்திருக்கிறார்கள்!

உடனே ஃபோனை வைத்துவிட்டுப் பிரமீளா புறப்பட்டு விட்டாள், ஐ.ஜி. காரியாலயத்துக்கு. அவள் இன்னும் சற்றுத் தாமதித்துச் சேகருடன் பேசியிருந்தாளானால், போலீஸார் இன்னும் பார்த்திபன் மீது வழக்கு ஏதும் பதிவு செய்ய வில்லை என்றும் விசாரணைக்குத் தான் லாக்கப்பில் வைத்திருப்பதாகச் சொல்கிறார்கள் என்றும் அவன் கூற அறிந்து கொண்டிருந்திருப்பாள். வழக்குப் பதிவு செய்யாத போது லாக்அப்பில் வைத்திருப்பது தவறு என்று வாதம் புரிந்து அவனை விடுவிக்க ஒரு வக்கீலின் துணையுடன் தான் முயன்று வருவதையும் சேகர் கூறியிருப்பான். ஆனால் பிரமீளா அவசரப்பட்டு விட்டாள். விநாடிப் போதும் தாமதியாமல் காரைக் கிளப்பிக் கொண்டு நேரே ஐ.ஜி.யிடம் போய்க் கண்ணீரும் கம்பலையுமாய் நின்று பார்த்திபனை விடுவிக்குமாறு மன்றாடினாள். நடந்ததை யெல்லாம் சாங்கோபாங்கமாகத் தான் எடுத்துரைத்து விடுவதாகச் சொன்னாள்.

ஐ.ஜி. சமிக்ஞை செய்ததின் பேரில் அக் காரியாலய ஸ்டெனோ ஒருவர் அடக்கமாய் வந்து சற்று ஒதுக்குப் புறமாய் அமர்ந்து கடமையே கண்ணாகச் செயலாற்றினார். பிரமீளா கூறிய வார்த்தைகள் ஒவ்வொன்றும் சுருக் கெழுத்தில் பதிவாயின. அவள் கூறியவை டி.ஐ.ஜி. நடராஜனின் ஊகத்துக்கு முற்றிலும் மாறுபட்டிருந்தன.

“ஆறு இரவுகளை நாங்கள் சொர்க்கலோகத்தில் இருப்பது போன்ற உணர்வுடன் ஆனந்தமாகக் கழித்தோம்” என்று ஆரம்பித்தாள் பிரமீளா. “இல்லை, அப்படிச் சொல்வதுகூடப் பொருந்தாது. ஏனென்றால், சொர்க்கம்

என்பது இத்தனை இன்ப மயமாக இருக்குமா என்று நாங்கள் ஐயப்பட்டதுண்டு. ஆனால் ஏழாவது இரவு இதற்கு முடிவு ஏற்பட்டுவிட்டது. என் தாயார் நான் அறியாதவாறு என்னைப் பின் தொடர்ந்து பார்த்திபனின் அறைக்கு வந்து விட்டாள்...''

விம்மலும் விசும்பலும் அவள் பேச்சைத் தடைப் படுத்தவில்லை; தொடர்ந்தாள்: ''நான் கதவைத் திறந்ததும் இருளில் அவர் குரல் கட்டில் இருந்த திசையிலிருந்து கேட்டது. 'பிரேம்!' என்று அழைத்தார் அவர். எப்போதுமே 'பிரேம்' என்றுதான் கூப்பிடுவார். பெருமூச்சை வெளிப் படுத்துவது போல் நீட்டி உச்சரித்து, இலேசான நடுக்கத் துடன் கூடிய குரலில் அழைக்கும்போது வற்றாத காதலும் தீராத தாகமும் அதில் தொனிக்கும். மீண்டும் 'பிரேம்! பிரேம்!' என்று அவர் அவசரப் பட்டார். 'அடாடா! கொஞ்சம்கூடப் பொறுமையே கிடையாதா?' என்று நான் பொய்க் கோபத்தோடு கேட்டுக் கதவைச் சாத்தத் திரும் பினேன். ஆனால் வாசலில் ஒரு கரிய உருவம் நிற்பதை இருட்டில் உணர்ந்ததும் என் சப்த நாடிகளும் ஒடுங்கி விட்டன. 'எத்தனை நாட்களாக இந்த நாடகம்?' என்று கேட்டுக் கொண்டே என் தாயார் உள்ளே வந்து விளக்கைப் போட்டாள். ரௌத்திராகாரமான அவள் தோற்றமும் அவள் கையில் பிடித்திருந்த துப்பாக்கியும் எனக்கு குலை நடுக்கத்தை ஏற்படுத்தின. திருடனுக்குப் பயந்து அவள் வாங்கி வைத்திருந்த துப்பாக்கி இப்போது என் காதலனைக் குறி பார்த்துக் கொண்டிருந்தது. 'அயோக்கிய ராஸ்கல்! இன்றைக்கே நான் பிடிபட்டுத் தூக்குத் தண் டனை அடைந்தாலும் பரவாயில்லை; என் பெண்ணைக் கெடுத்த உன்னைக் கொல்லாமல் விடமாட்டேன்!' என்று சொல்லிக் கொண்டே அவரை நோக்கி இரண்டடி எடுத்து வைத்தாள். உண்மையில் தன் பெண் கெட்டுப் போய் விட்டாள் என்பதிலொன்றும் அவளுக்கு அக்கறை இல்லை.

ஏனென்றால் பிரபல நட்சத்திரமாவதற்கு முன்பு நான் அவள் வற்புறுத்தலுக்கு இணங்கியே கெட்டுப் போனவள் தான். அப்போது ஆணையிட்டவள் இப்போது தடை விதிக்கக் காரணம், இது உடல் உறவோடு நிற்கிற விஷய மல்ல, உள்ளத்தாலும் நாங்கள் பிணைந்து விட்டோம் என்பதுதான். நான் அவளுடைய உடைமையாக இருக்கும் வரைதான் என் செல்வத்தின் மீது அவள் ஆதிக்கம் செலுத்த முடியும். இன்னொருவரின் உடைமையாகி விட்டால் அப்புறம் அவர் சொற்படிதான் நான் கேட்பேன். இந்த எண்ணத்தில்தான் அவள் ஆத்திரம் கொண்டு பார்த் திபனைச் சுடப் போனாள். அப்புறமாகப் பிடிபட்டாலும் தான் இந்தக் கொலையைச் செய்யவே இல்லை என்று வக்கீல் வைத்து வாதாடி ஜெயிக்கலாம் என்ற எண்ணம்கூட அவளுக்கு இருந்திருக்கலாம். ரொம்ப நாட்களாகவே அவள் பார்த்திபனைத் திட்டுவதும் ஏசுவதுமாக இருந்தாள். இன்று துப்பாக்கியாலேயே குறி பார்த்தாள். அவள் இந்தக் காரியத்தை நிறைவேற்றிவிடுவாள் என்றே எனக்குத் தோன்றியது. என்னைப் பயம் கவ்விக் கொண்டது. எப்படி யாவது பார்த்திபனைக் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் அங்கே இருந்த ஒரு டேபிள் லாம்ப்பை எடுத்து அதன் அடிவாரத்தால் என் தாயாரின் தலையில் ஓங்கி அடித்துவிட்டேன். அந்த வினாடியே அவள் தரையில் பேச்சு மூச்சின்றி விழுந்துவிட்டாள். ஒரு முனகல் கூட எழவில்லை. இதுதான் நடந்தது...''

ஐ.ஜி.யிடம் இவ்வாறு விவரித்துவிட்டு, பிரமீளா மேலே பேச முடியாமல் கரங்களில் முகத்தைப் புதைத்துக் கொண்டு புலம்பினாள், ''அம்மா. இந்தப் பாவியை மன்னிச்சுடு அம்மா!'' என்று.

★ ★ ★

# 33. கதை முடிந்தது!

அமிர்தலிங்கத்துக்கும் பத்மநாபன் குடும்பத்துக்கும் நடந்த கதையை விவரித்துக் கொண்டிருந்த நடராஜன் கூறினார்:

''பிரமீளாவின் வாக்குமூலத்தை ஸ்டெனோ ஒருவர் ஷார்ட் ஹாண்ட் நோட்டில் அப்படியே பதிவு செய்துக் கிட்டார். அதில் மட்டுமின்றி அதையே டைப் செய்தும் பிரமீளாவின் கையெழுத்தை வாங்கிக் கிட்டாங்க, ஐ.ஜி. ஆஃப் போலீஸ் காரியாலயத்திலே.

''இன்று காலைதான் ஐ.ஜி. எனக்கு ஃபோன் செய்தார். 'கேஸ் முடிஞ்சு போச்சு, இனிமே இது பற்றிக் கவலைப் படாதே'ன்னு சொன்னவர்,-கன்கிராஜுலேட் பண்ணிட்டு, 'இன்னும் ஒரு வாரம் கொடைக்கானலில் இருந்துட்டு வாங்க; இதுவரை நீங்க டியூட்டியில் இருந்ததாகவே வைச்சுக்கிடலாம்' என்றார்.''

''தேவலாமே, ரொம்ப நல்ல மாதிரியா இருப்பார் போலிருக்கே'' என்றாள் அம்புஜம்.

''நல்லவர்தான்'' என்று தலையாட்டிய நடராஜன் தொடர்ந்தார்: ''அப்புறம் நான் அவரைக் கேட்டேன், 'பிரமீளா தன் தாயாரை அடித்ததாகச் சொன்னாளே, எத்தனை தடவை அந்த டேபிள் லாம்பின் அடிவாரத்தால் தாக்கினாளாம்?' என்று.''

"என்ன, மறுபடியும் ஒரு முடிச்சு விழுந்துடுத்தா?" என்று கேட்டார் பத்மநாபன்.

"புதுசா யாரும் போடலை; ஏற்கெனவே இருக்கிற மணிமுடிச்சைப் பக்குவமா படிப்படியா அவிழ்த்துக்கிட்டு வரேன். அவ்வளவுதான்; பாக்கியையும் கேளுங்க" என்றார் நடராஜன்.

'எத்தனை தடவை அடித்தாய்?' என்ற கேள்வியை ஐ.ஜி. பிரமீளாவைப் பார்த்துக் கேட்கவில்லை. ஆனால் வாக்கு மூலத்தில் அவள் 'அடித்தேன்' என்றுதான் சொல்லியிருந் தாளே ஒழிய, கீழே விழுந்தவளை இரண்டாம் முறையாகத் தாக்கியதாகக் கூறவில்லை. அப்படி நடப்பதும் சாத்திய மில்லை. தன் தாயாரை ஒரு தடவை அவள் ஆத்திர மடைந்து தாக்கியிருக்கலாம். ஆனால் அவள் பேச்சு மூச்சின்றிக் கீழே விழுந்ததும் பிரமீளாவுக்குச் சுய உணர்வு திரும்ப வந்து, 'ஐயோ! இப்படிச் செய்து விட்டோமே' என்றுதான் தோன்றியிருக்குமே தவிர மறுபடியும் அடிப்ப தென்பது சாதாரணமாய் நடக்கக் கூடியதில்லை.

ஆனால் கனகத்தின் உடலைப் பரிசோதித்த டாக்டர் அவள் தலையில் இரண்டு இடங்களில் பலமான அடிபட்டிருப்பதாக நடராஜனிடம் கூறியிருந்தார். அந்த இரண்டாவது காயம் அவள் உடலைக் கோக்கர்ஸ்வாக் மலைச் சரிவில் உருட்டித் தள்ளியபோது ஏற்பட்டிருக்க லாம்; அல்லது...

"எதற்கும் நீங்க அந்தப் பார்த்திபனைக் கொஞ்சம் வகையா கவனிக்கிறது நல்லது. ரத்தக் கறையோடு ஒரு பாறை அகப்பட்டதாகச் சொல்லிப் பாருங்களேன்" என்று யோசனை தெரிவித்தார் நடராஜன், ஐ.ஜி.யிடம். அவர் கருத்துப்படி, பிரமீளாவையும் அழைத்துக் கொண்டு ஐ.ஜி.யே நேரில் போனார், பார்த்திபனிடம். 'பிரமீளா தன் குற்றத்தை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் எழுதிக்

கொடுத்து விட்டாள்' என்றதும் பார்த்திபன் அவளுக்காக ரொம்பப் பரிதாபப்பட்டான்.

"அடடா! ஏன் இப்படிச் செய்தாய் பிரமீளா? என்னைக் காப்பாற்றும் நோக்கத்துடனா? என்னை இவர்கள் என்ன செய்திருக்க முடியும்? கொடைக்கானலில் நீங்கள் தங்கியிருந்த அதே ஹோட்டலில் நானும் வேறு ஓர் அறையில் மாற்றுப் பெயரில் தங்கியிருந்தேன் என்பதற்கு அதிகமாக இவர்கள் என்ன பழி சுமத்த முடியும்? இவர்களுக்கு எந்தவிதமான சாட்சியமும் இல்லாதபோது இன்னும் ஒரு வாரத்தில் என்னை விடுவித்திருப்பார்கள். நான் உன்னிடம் ஓடோடியும் வந்திருப்பேன். அதற்குள் அவசரப்பட்டு உண்மையை ஒப்புக்கொண்டு உன் எதிர்காலத்தையே வீணடித்துக் கொண்டுவிட்டாயே!" என்று கண்கலங்கி அனுதாபப்பட்டான்.

"இவளுடைய எதிர்காலம் பற்றி ஒன்றும் கவலை இல்லை" என்றார் ஐ.ஜி. "ஏனென்றால் இவள் குற்றத்தை ஒப்புக் கொண்டு வாக்குமூலம் கொடுத்திருந்த போதிலும் நாங்கள் இவள் மீது வழக்குத் தொடுக்கப் போவதில்லை!"

"அப்படியா? இதென்ன விநோதம்? போலீஸார் தங்கள் கடமையைச் செய்ய வேண்டாமா?" என்றான் பார்த்திபன்.

"எங்கள் கடமை உனக்கு மரண தண்டனை பெற்றுத் தருவதுதான்!"

**பா**ர்த்திபன் பிரமித்தான்; பின்னர் சிரித்தான். "விளையாடுகிறீர்களா? பிரமீளாவின் வாக்குமூலத்தைப் பெற்றுக் கொண்ட பிறகுமா என்மீது சந்தேகம் தீரவில்லை?"

"ஆமாம், இவள் ஒரு தடவைதான் தன் தாயாரைத் தாக்கியதாகச் சொல்கிறாள். ஆனால் கனகத்தின் உடலைப் பரிசோதித்த டாக்டர் தலையில் இரண்டு பலத்த காயங்கள் பட்டிருப்பதாகக் கூறுகிறார். கனகம் விழுந்து கிடந்த இடத்

துக்குப் பக்கத்திலேயே உரித்த தேங்காய் அளவுக்கு ஒரு பாறை கிடைத்தது. அதில் ரத்தக் கறையும் படிந்திருக்கிறது. அந்தப் பாறை அவள் தலையில் அடிபட்டிருந்த இடத்துக்குச் சரியாகப் பொருந்தவும் செய்தது. டாக்டர் சாட்சியம் சொல்வார் இதற்கு. அந்தப் பாறையில் ரத்தக் கறை மீதாக ஒரிரு விரல் ரேகை அடையாளங்களும் கிடைத்தன. அவை உன் விரல் ரேகைகள் தாமா என்று இப்போது பரிசோதனைகள் நடந்து கொண்டிருக்கின்றன!''

இவ்வாறு ஐ.ஜி. கூறியதும் பார்த்திபன் முகம் வெளிறி விட இடிந்து போனவனாய் அமர்ந்தான். பக்கத்திலேயே இருந்த அவன் வக்கீல், ''நீ ஒண்ணும் இப்போ பேசாதே, பேச வேண்டிய அவசியமில்லை'' என்று எச்சரித்தார். ஆனால் அவர் குரலிலேயே நம்பிக்கை தொனிக்கவில்லை.

பார்த்திபன், ''இனிமேல் ஒண்ணும் பிரயோசனமில்லை ஸார்!'' என்றான் வக்கீலைப் பார்த்து.

திடீரென்று பிரமீளா, ''அடப்பாவி! கொலைகாரா! என் அம்மாவைக் கொன்றுவிட்டாயே! சண்டாளா!'' என்றெல் லாம் அவனை வையத் தொடங்கிவிட்டாள். கூடவே விம்மி விம்மி அழவும் செய்தாள். என்ன நடந்திருக்க வேண்டும் என்பது அவளுக்குப் புரிந்துவிட்டது.

பார்த்திபனுக்கு ரோஷம் பொத்துக் கொண்டது. ''ஏன், நீ உன் அம்மாவைத் தலையில் அடித்தது அவளைச் சிரஞ்சீவியாக்கவா? நான் அவளை அடித்தது மட்டும் கொலை என்று தோன்றுகிறதா?''-இப்படி அவன் சீறினான்.

''ஐயோ! உன்னை அவள் துப்பாக்கியால் சுட வந்ததால் தானே நான் அவளைத் தாக்கினேன்? உன் உயிரைக் காக்கத்தானே அப்படிச் செய்தேன்? அதற்கும், அவள் மயக்கம் தெளிந்து எழுந்த பிறகு நீ இரண்டாவது தடவை யாக அவளை அடித்துக் கொன்றதற்கும் வித்தியாசம்

இல்லையா?'' என்று கேட்டுத் தலையில் படீர் படீரென்று போட்டுக் கொண்டாள் பிரமீளா.

''ஆமாம்! சரியாகத்தான் ஊகித்து விட்டாய் பிரமீளா'' என்றான் பார்த்திபன், தலை குனிந்தபடியே. ''அவள் மீண்டும் விழித்தெழுந்து நம் அன்புக்குக் குறுக்கே நிற்பது எனக்குப் பிடிக்கவில்லை. அதனால்தான் கோக்கர்ஸ் வாக் ஓரமாய்க் கைக்குக் கிடைத்த ஒரு பாறையை எடுத்து அவள் தலையைப் பலம் கொண்ட மட்டிலும் தாக்கினேன்!''

பார்த்திபன் கூறியவற்றையெல்லாம் பக்கத்து அறையில் ஒரு டேப்ரிக்கார்டர் பதிவு செய்து கொண்டிருந்தது. போதாக்குறைக்கு ஒரு ஸி.ஐ.டி. யும் குறிப்பெடுத்துக் கொண்டிருந்தார்.

''காதலுக்கு மட்டும்தானா அவள் குறுக்கே நின்றாள்? பிரமீளாவின் பணத்தை நீ அடையவும் அவள் தடையாக இருந்தாள் அல்லவா?'' என்று ஐ.ஜி. கேட்டார்.

''அதுவும்தான்!'' என்றான் பார்த்திபன்.

''மோசக்காரா! துரோகி! நய வஞ்சகமாக எவ்வளவெல்லாம் பேசினாய்?'' என்று பிரமீளா பொரிந்து தள்ளினாள்.

''உன்னை மனமாரக் காதலிப்பதாக நான் சொன்னதிலொன்றும் பொய்க் கலப்பே கிடையாது. பிரமீளா! ஆனால் நீ வேறு, உன் பணம் வேறு என்று நான் பிரித்துப் பார்த்ததில்லை என்பதும் உண்மைதான்'' என்றான் அவன்.

மேற்படி நிகழ்ச்சிகளை விவரித்து விட்டு டி.ஐ.ஜி., ஸி.ஐ.டி. நடராஜன் பொருமிதத்துடன் கூறினார்: ''இரண்டு மணி நேரம் கழித்துச் சென்னையிலிருந்து ஐ.ஜி. மறுபடியும் எனக்கு ஃபோன் போட்டுப் பேசினார். 'உங்க ஊகம் பிசகில்லை; பார்த்திபன் எல்லாத்தையும் ஒப்புத்துக் கிட்டான்'னு சொன்னார்.''

ஆர்வத்துடன் கேட்டுக் கொண்டிருந்த பத்மநாபன் குடும்பத்தினரிடமிருந்து ஒரே சமயத்தில் பல கேள்விகள் பிறந்தன.

நடராஜன் சிரித்துக் கொண்டே, "ஒவ்வொரு கேள் விக்கா பதில் சொல்லிக்கிட்டு வரேன். முதலில் பத்மநாபன் ஸார் கேட்கட்டும்!" என்றார்.

"ஐ.ஜி., பார்த்திபனிடம் சொன்னதில் எவ்வளவு தூரம் நிஜம்?" என்று வினவினார் பத்மநாபன்.

" 'உரித்த தேங்காய் அளவுக்கு, ரத்தக் கறையுடன் ஒரு பாறை அகப்பட்டது' என்று சொன்னாரே அதுவும், அது சம்பந்தப்பட்ட இரு விஷயங்களும்-அதாவது அந்தப் பாறை காயத்தில் சரியாகப் பொருந்தியிருந்தது என்பதும் விரல் ரேகை அடையாளம் அகப்பட்டது என்பதும்-மட்டும் பொய்தான். ஆனால் வள்ளுவர் என்ன சொல்லியிருக்கிறார் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்க."

"புரைதீர்ந்த நன்மை பயக்குமெனில் பொய்யும் மெய்யேயாகும்" என்றாள் மீனா.

"அடுத்த கேள்வி?"-அம்புஜத்தைப் பார்த்தார் நடராஜன்.

"ஹோட்டலில் அடிவாங்கிக் கொண்டு மயங்கி விழுந்த கனகம், கோக்கர்ஸ் வாக்குக்கு எப்படி வந்து சேர்ந்தாள்? கதையின் அந்தப் பகுதி விட்டுப் போச்சே!"

"இது நல்ல கேள்வி, கொஞ்சம் விவரமாகத்தான் சொல்லணும்" என்று ஆரம்பித்தார் நடராஜன்.

மிக அருகில் இருக்கும் போதே தன் கண்களில் மண்ணைத் தூவிவிட்டுக் கள்ளத்தனமாகப் போய்ப் பார்த் திபனைத் தனிமையில் தன் மகள் சந்தித்து வந்திருக்கிறாள்; பல நாட்களாகவே இந்த நாடகம் நடந்து கொண் டிருக்கிறது என்பதையும் இவை உரையாடலோடு நிற்காமல் உடலுறவு கொள்ளும் சந்திப்புகள் என்பதையும் நொடிப்

பொழுதில் புரிந்து கொண்டுவிட்ட கனகத்துக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. உணர்ச்சி மிகுதியினால் அவளுக்குத் தொண்டை எழும்ப மறுத்தது. பார்த்திபனை ஏசியபோதும் குரல் கரகரத்துக் கம்மியே இருந்தது. அதனால் அக்கம் பக்கத்து அறைகளிலிருந்து யாரும் விழித்தெழுந்து வரவில்லை.

பிரமீளா டேபிள் லாம்ப்பின் அடிவாரத்தால் தாக்கிய போதும் அவள் கண்டத்திலிருந்து கூக்குரல் ஏதும் எழ வில்லை. கணப் போதில் அவள் நினைவிழந்து சரிந்தாள்; தரையில் பேச்சு மூச்சின்றிக் கிடந்தாள். அவள் இறந்து விட்டாள் என்றே பிரமீளாவும் பார்த்திபனும் முடிவு கட்டி விட்டார்கள். பிரமீளா அதிர்ச்சி நீங்கப் பெற்றதும் விம்மி அழத் தொடங்கினாள்.

பார்த்திபன் அவசரம் அவசரமாகக் கட்டிலைவிட்டு இறங்கி வந்து அறைவாசல் கதவைச் சாத்தினான். பிறகு பிரமீளாவை ஆசுவாசப்படுத்தினான். ''அழாதே பிரேம்! பக்கத்து அறையில் இருப்பவர்கள் கேட்டுவிட்டு, என்ன ஏது என்று விசாரிக்க வந்துவிடப் போகிறார்கள்'' என்றான் கெஞ்சுகிற குரலில்.

''வந்தால் வரட்டும்; தாயாரைக் கொன்ற இந்த மகாபாவியைப் போலீஸில் ஒப்படைக்கட்டும். தூக்கிலே தொங்குகிறேன்'' என்றாள் பிரமீளா, மனம் நொந்து போய்.

''பிரேம்! தயவுசெய்து நான் சொல்வதைச் சற்றுக் கேளேன்'' என்று பரபரப்புடன் அவள் முகவாயைப் பிடித்துக் கொண்டு மீண்டும் இறைஞ்சினான் பார்த்திபன். தொடர்ந்து பேசினான்: ''கொலைக் குற்றத்துக்காக மரண தண்டனை பெற்றாலும் பாதகமில்லை, பிரேம். அதைத் தாங்குவது அவ்வளவு கஷ்டமில்லை. ஆனால் தாயாரைக் கொன்ற பழியல்லவா உனக்கு வந்து சேரும்? ஊரார் எப்படியெல்லாம் ஏசுவார்கள் உன்னை! மேலும் நீ

காதலனுடன் உறவுகொள்ள அவன் அறைக்குக் கள்ளத் தனமாக நடு இரவில் வந்தாய் என்பதுமல்லவா எல்லாத் தினசரிகளிலும் வெளிவந்துவிடும்! எவ்வளவு அவமானம்! உன் உணர்ச்சிகளை யாராலும் புரிந்து கொள்ளவே முடியாது. உன் தாயார் பெரிய தியாகியாகிவிடுவாள், உலகத்தின் கண்களில். நீ ஒரு பயங்கரப் பெண் பேய், அரக்கி என்றெல்லாம் வர்ணிக்கப்படுவாய்! தூக்கிலே தொங்குவது பெரிய விஷயமில்லை; இந்த அவமானங்களை யெல்லாம் எப்படிப் பொறுத்துக் கொள்வாய், சொல்லு!''

பிரமித்துப்போன பிரமீளா மெல்லத் தலையசைத்து இந்த ஏச்சுப் பேச்சுக்களைத் தாங்கிக் கொள்ளத் தன்னால் முடியாது என்பதை உணர்த்தினாள்.

''அப்படியானால் நான் சொல்கிறபடி செய், பிரேம்!'' என்றான் பார்த்திபன். ''பேசாமல் வந்த வழியாகவே திரும்பிப் போய் உன் அறையில் படுத்துக் கொள். அம்மா கொண்டு வந்த துப்பாக்கியைப் பின்னோடு எடுத்துப் போய், அது முன்பு இருந்த இடத்திலேயே வைத்துவிடு. நாளை பிற்பகலில் போலீஸாரிடம் போ. டி.ஐ.ஜி.கூட இங்கு வந்து ஹாப்பி ஹாலிடேயில்தான் தங்கியிருக் கிறதாகக் கேள்வி. அவரிடமேகூடப் போகலாம். காலையில் உன் அம்மா 'ஷாப்பிங்' என்று கால் நடையாகக் கிளம்பினாள் என்றும், திரும்பி வரவேயில்லை; என்ன ஆனாளோ தெரியவில்லை என்றும் கவலைப்படுவது போல் பேசு. மற்றவற்றை நான் கவனித்துக் கொள்கிறேன். உன் கைப் பையில் கார் சாவி இருந்தால் அதை மட்டும் கொடுத்துவிட்டுப் போ. அதன் உபயோகம் முடிந்ததும் காரிலேயே வைத்துவிடுகிறேன். நீ எடுத்துக் கொள்ளலாம். என்ன, புரிந்ததா? நல்லவேளையாக உன் டிரைவர் கோபாலன் பெண்டாட்டிக்கு உடம்பு சரியில்லை என்று

தந்தி வந்து புறப்பட்டுப் போயிருக்கிறான். இல்லாவிட்டால் அவனைச் சமாளிக்க வேறு யோசனை பண்ண வேண்டும்!''

''நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று பயத்தில் நடுங்கிய குரலில் கேட்டாள் பிரமீளா.

அவன் சுருக்கமாகத் தன் திட்டத்தை விவரித்தான். ''உம், சீக்கிரம்!'' என்று துரிதப்படுத்தினான். அவள் விதியே என்று தன் மனத்தைத் தேற்றிக் கொண்டு அவன் சொற்படி நடந்தாள். அவள் தன் அறைக்குத் திரும்பிச் சென்றதை யாரும் பார்க்கவில்லை. படுக்கையில் விழுந்து விடிய விடிய அழுதாள்.

**பி**ரமீளா கொடைக்கானலுக்கு வந்த பிறகு கனகம் அல்லது கோபாலன் கண்களில் பட்டுவிடக் கூடாதென்ப தற்காகப் பார்த்திபன் தன் அறையை விட்டு அதிகமாக வெளியே எங்கும் போகவில்லை. ஆனால் பிரமீளா வந்து சேர்வதற்கு முன், இரண்டு நாட்கள் நன்கு சுற்றிப் பார்த்திருந்தான். கோக்கர்ஸ் வாக்கில் கனகத்தின் உடலை உருட்டிவிட்டு விட்டால் எலும்புகளைக் கூடப் பொறுக்க முடியாது; கொலை நடந்தது என்றே யாரும் எண்ண இடமில்லை. அப்படியே உடல் கண்டெடுக்கப்பட்டாலும் 'விபத்து; சறுக்கி விழுந்து விட்டாள்' என்றுதான் கருதுவார்கள். அதற்கேற்றாற்போல் பிரமீளாவும் போலீஸில் 'தாயாரைக் காணோம்' என்று புகார் கொடுத்திருப்பாள். அதே நேரம் இவனும் மலையைவிட்டு இறங்கிக் கொடைக் கானல் ரோடு ஸ்டேஷனில் சென்னை செல்லும் ரயிலுக் காகக் காத்திருப்பான்.

இப்படி ஒரு சில நிமிஷங்களில் தீர்மானித்துவிட்ட பார்த் திபன் கனகத்தின் உடலைத் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டும் சில இடங்களில் இழுத்துக் கொண்டும் ஹோட்டல் வாசலை நோக்கிச் சென்றான். தப்பித் தவறி

யாராவது பார்த்துவிட நேர்ந்து கையும் களவுமாய்ப் பிடி பட்டால் அப்போது, பிரமீளா செய்த காரியம் இது என்று உண்மையைச் சொல்லித் தான் தப்பித்துக் கொள்ளலாம் என்ற எண்ணமும் அவன் மனத்தின் அடிவாரத்தில் இருந்து, அதுவே அவனுக்குத் திட்டத்தைத் தொடரத் துணிவையும் தந்தது.

அதிர்ஷ்டம் அவன் பக்கம் இருந்தது. யாரும் எதிர்ப்பட வில்லை. ரிஸப்ஷன் கவுண்டரில் ஒருவன் அமர்ந்து தூங்கிக் கொண்டிருந்தான். வாசல் கதவு சாத்தி இருந்தது. ஆனால் சாவி அதற்குரிய துவாரத்திலேயே இருந்தது. ஓசைப்படுத் தாமல் செயல்பட்டான் பார்த்திபன். வெளியே வரிசையாக நிறுத்தப்பட்டிருந்த பல கார்களிடையே பிரமீளாவின் காரைச் சுலபமாகக் கண்டுபிடித்தான். நிலவொளி இருந்தது என்பதோடு அயல்நாட்டில் உருவான பெரிய காரை அடையாளம் கண்டுகொள்வது கடினமாயுமில்லை. ஒன்றிரண்டு அம்பாஸிடர் கார்களில் குளிருக்கு அடக்க மாகக் கண்ணாடிகளை உயர்த்தி விட்டு விட்டு டிரைவர்கள் உறங்கிக் கொண்டிருந்தார்கள். கண்ணாடிகளை உயர்த்திய போது அவர்கள் குளிரோடு சப்தத்தையும் வெளியே நிறுத்திவிட்டார்கள்.

சுற்றுவட்டாரத்தில் மலைகளெல்லாம் நிலாவை எட்டிப் பிடித்து விழுங்கிவிட ஆசை கொண்ட அசுரர் போல் சிகரங் களை உயர்த்திக் கொண்டு நின்றன. ஆனால் அவற்றின் முயற்சி படுதோல்வி அடைய, அம்புலி கவலை சிறிதும் இன்றித் தன் காதலனை நோக்கிற்று. காதலி சொரியும் அன்பெனும் நிலவொளியில் குளித்து ஏரி நீர்ப்பரப்பு மோன மயக்கத்தில் ஆழ்ந்து கிடந்தது.

மனோரம்மியமான இந்தச் சூழலில் மகா பயங்கரமான காரியத்தைச் செய்து கொண்டிருந்தான் பார்த்திபன். 'கேட்' டைத் திறந்துவிட்டு வந்தான். உயர்ந்த அயல்நாட்டுத்

தயாரிப்பான பிரமீளாவின் கப்பல் மாடல் கார், கதவு களைத் திறந்து மூடியபோதும் எஞ்சினைக் கிளப்பிய போதும் அதிகமாகச் சத்தப்படுத்தவில்லை. வழுக்கிக் கொண்டு விரைந்தது. பின் ஸீட்டில் கனகம் கிடத்தப் பட்டிருந்தாள்.

நடராஜன் கதையை நிறுத்தினார்.

''இரவு நேரமானதால் கோக்கர்ஸ் வாக் பக்கம் ஜனநடமாட்டம் இருந்திருக்காது. காரிலிருந்து கனகத்தை இறக்கி இழுத்துக் கொண்டு போயிருப்பான்'' என்றாள் அம்புஜம்.

''அந்தச் சமயம் அவள் மயக்கம் தெளிந்து விழித்துக் கொண்டு, 'நான் எங்கே இருக்கேன்? பிரமீளா எங்கே?'ன்னு ஏதாவது கேட்டிருப்பாள். 'இத்தனை பாடு பட்டு இவளை இங்கே கொண்டு வந்தபிறகு மறுபடியும் உயிரோடு திருப்பி அழைத்துச் செல்வதா? திட்டத்தைக் கடைசிவரையில் நிறைவேற்றி விடுவோம்' என்று முடிவு செய்து பார்த்திபன் ஒரு பாறையை எடுத்து அவளை தீர்த்து விட்டான்'' என்றார் பத்மநாபன்.

''பிறகு அவள் உடலையும் அவளை அடிக்கப் பயன் படுத்திய கல்லையும் மலைச் சரிவில் உருட்டி விட்டான். கல் அதள பாதாளத்துக்குப் போய்விட்டது. உடல் கீழே செல்லாமல் ஒரு பாறை தாங்கித் தடுத்து நிறுத்திவிட்டது. அதுவே அவன் திட்டத்தை ஐந்தாண்டுத் திட்டமாக்கி விட்டது-அதாவது படுதோல்வி அடையச் செய்துவிட்டது!'' என்றாள் மீனா.

''பாலிடிக்ஸில் சிக்கிக்காமல் பேசறேன்'' என்ற நட ராஜன் தொடர்ந்தார்: ''தன் திட்டம் பிசுபிசுத்து விட்டதை உணராமலேயே அவன் காரை மறுபடி ஹோட்டலுக்கு ஓட்டிச் சென்றான். கர்ச்சீப்பை எடுத்துக் காரில் விரல்

*ரேகைகள் பதிந்திருக்கக்கூடிய இடங்களைத் துடைத்தான். தன் அறைக்குப் போய்ப் படுத்துக் கொண்டான். அதிகாலையில் ஹோட்டல் அறைக்குக் கணக்குத் தீர்த்துவிட்டு மலையிலிருந்து இறங்கிவிட்டான்.''*

*கதையை இப்படி அவர் முடித்து வைத்ததும் அம்புஜம் தன் கணவரைப் பார்த்துச் சொன்னாள்: ''தான் ஒரு முதல்தரமான நடிகை என்பதைப் பிரமீளா எப்படி நிரூபிச்சிருக்கா பார்த்தேளா? நடராஜன் ஸாரையே ஏமாற்றி விட்டாளே!''*

*''அதில் அதிசயமில்லை; அவள் தொழிலே அதுதானே!'' என்றார் பத்மநாபன். ''ஆனால் திருச்சேறை நடிச்சதைச் சொல்லு! அவள் தகப்பன் தான்தான் என்று என்னை நம்ப வைச்சுட்டானே!''*

*''கனகம் பிரமீளாவின் சொந்தத் தாய் இல்லையாம். யாரோ ஏழைப் பிராமணன் கனகத்திடம் தன் குழந்தையை விட்டுவிட்டுப் போயிருக்கிறான். 'அதனால்தான் அம்மாவுக்கு என்னிடம் ஓர் ஆத்மார்த்தமான அன்பு கடைசிவரை ஏற்படவேயில்லை' என்று பிரமீளா கூறியிருக்கிறாள்'' என்றார் நடராஜன். ''ஒரே ஒருநாள் இவளைப் பெற்ற தகப்பன் வந்தபோது கனகம் ஆயிரம் ரூபாய் பணத்தைக் கொடுத்து விரட்டினாளாம். 'நான் பணத்துக்காக வரலை; குழந்தையைப் பார்க்கக்கூடாதுன்னு சொல்லிட்டீங்க. நான் வரேன்'னு கிளம்பிட்டானாம். வரவேற்பு அறையில் இருந்த நிலைக் கண்ணாடியில் பிரதிபலித்த அவன் உருவத்தை ஒன்றிரண்டு விநாடிகளுக்குத் தான் பார்த்தாளாம் பிரமீளா. அது முதல் அவளுக்கு ஒல்லியா, உயரமா, உச்சிக் குடுமியோடே காட்சி தருகிற வயசான பிராமணன் யாரையாவது பார்த்தால் பரிவு உணர்ச்சி பொங்கி எழுமாம். அதனால் தான் திருச்சேறையிடமும் அத்தனை பிரியமாகப் பேசியிருக்கிறாள்.''*

"சரி, இந்தக் கதை முடிஞ்சுது; தினகரனைப் பற்றியும் சொல்லிடுங்கோ" என்றாள் அம்புஜம்.

"ஆதவனை ஆராயும் இந்த நிலையத்தில் வைத்து நாம் அல்பாயுசில் மடிந்த தினகரனை ஆராய வேண்டாம்! ஏரிக் கரைக்குப் போகலாம். அதோ நம்ம பஸ்ஸும் கிளம்பிடுச்சு" என்றார் நடராஜன்.

★ ★ ★

# 34. மனங்கள் மகிழ்ந்தன!

"கொடைக்கானலில் அண்மைக் காலத்தில் நிகழ்ந்த மூன்று துர் மரணங்களுக்கும் ஸைக்கோ ஸாரநாதன்தான் காரணம் என்ற வதந்திக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை என்று போலீஸ் ஐ.ஜி. இன்று தெரிவித்தார். அந்தக் கொலைகளைச் செய்ததாகக் கருதப்படும் மூன்று நபர்களைச் சிறைப்படுத்தியாகி விட்டதென்றும் விரைவில் அவர்கள் மீது வழக்குத் தொடுக்கப்படும் என்றும் அவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்."

-இவ்வாறு ஒரு செய்தி முதல் நாள் மாலையும் அன்று காலையும் தினசரிகளில் வெளியாகியிருந்தது. இதைப் படித்த பிறகு திருச்சி, மதுரை, திண்டுக்கல் போன்ற நகரங் களிலிருந்து பலர் தைரியம் பெற்றுக் கொடைக்கானலுக்கு வந்து சேர்ந்திருக்கலாம். அல்லது கூட்டம் அதிகரித்திருப்ப தாகப் பத்மநாபனுக்கு ஒரு பிரமை ஏற்பட்டுமிருக்கலாம். எப்படியானாலும் இன்று மாலை ஏரிக் கரை அழுது வடியாமல் கலகலப்புடன் விளங்குவதாக அம்புஜத்துக்கும் அவருக்கும் தோன்றியது. ஒரு வேளை ஒன்றன்பின் ஒன்றாக நடராஜன் மர்மங்களைத் தெளிவுபடுத்தி வர அவர்கள் மனம் இலேசாகி மகிழ்ந்ததன் பிரதிபலிப்பைத் தான் அவர்கள் ஏரிப் பக்கம் குழுமியிருந்த மக்களிடமும் கண்டார்களோ என்னமோ?

சென்று போன நாட்களைப் பற்றிக் கனவு காணும் மாஜி சினிமா நட்சத்திரங்கள்; புது மணம் புரிந்து கொண்டு

தங்களைத் தவிர மற்ற எல்லாவற்றையும் மறந்துவிட்டிருக்கும் தம்பதிகள்; குழந்தைகளின் நச்சரிப்புக்கு இணங்கி மலை வாசஸ்தலத்தை நாடி வந்துவிட்டுத் தண்ணீராகப் பணம் செலவழிகிறதே என்று கவலையுடன் கணக்குப் போட்டபடி யிருந்து சந்தோஷப்படத் தெரியாமல் தவிக்கும் பெற்றோர்கள்; உயர்ந்த உத்தியோகம் பார்த்து ஓய்வு பெற்றபின் பொழுதுபோக்குக்காகக் கொடைக்கானல் வந்த பெரும் புள்ளிகள்; கோடைகாலத்தில் கொடைக் கானல் வந்தால்தான் பெருமை என்று எண்ணிக்கொண்டு வந்த தனவந்தர்கள் என்று இப்படியாகப் பலரகப்பட்ட வர்களைத் தாங்கிக் கொண்டு படகுகள் இங்குமங்குமாக ஏரியில் மிதந்து சென்று கொண்டிருந்தன. ரொம்ப லாகவ மாகத் துடுப்புப் போட்டுச் சிலர் படகுகளை அனாயாச மாகச் செலுத்திக் கொண்டு போனார்கள். கற்றுக்குட்டிகள் திணறினார்கள். இருந்த இடத்திலேயே சுற்றிச் சுற்றி வந்து சோதித்தது ஒரு படகு; கரை தட்டி நின்று கழுத்தறுத்தது மற்றொன்று. வேறொரு படகில் போய் மோதிக்கொள்ள ரோஷத்தோடு பாய்ந்தது இன்னொன்று. 'உனக்காச்சு, எனக்காச்சு, விட்டேனா பார்!' என்று சிலர் தீவிரமாகத் துடுப்புப் போடுவதில் வெற்றி காண முயல, இரவு வெந்நீர்விட்டு உருவி விடவேண்டியதுதான் என்று நினைக்குமளவுக்குக் கை வலித்தது.

"ஒவ்வொரு படகிலும் ஒரு ரகசிய அறையில் டேப் ரிக்கார்டரை மறைத்து வைத்துவிட வேண்டும்! அற்புதமான கதைகள் கிடைக்கும்" என்றார் பத்மநாபன்.

"அப்படி ஒரு ஜேம்ஸ்பாண்ட் வேலை செய்யறதுக்கு உங்களுக்கு வசதி இருக்குன்னு வைச்சுக்கிட்டால்கூடச் சட்டப்படி மற்றவங்க அந்தரங்கங்களைத் தெரிஞ்சுக்கறது குற்றம்-வயோலேஷன் ஆஃப் ப்ரைவஸி" என்றார் நடராஜன்.

*''எத்தனை கதைகள் சொல்லி யிருக்கார் ரங்கனோட அப்பா, இங்கே நாம் வந்ததிலேயிருந்து? அதையெல்லாம் விட்டுவிட்டுப் போகாத ஊருக்கு வழியைத் தேடறேளே'' என்றாள் அம்புஜம்.*

*''எழுத்தாளர்களுக்கு அப்படித் தாம்மா தோணும்'' என்றாள் மீனா. '' 'ஐயோ! எத்தனை விதமான மக்கள், எத்தனை தினுசு தினுசான கதைகளைப் பேசிக்கிறா! எல்லாத்தையும் கேட்க முடிஞ்சால் எவ்வளவு சுவாரசிய மான கதைகள் எழுதலாம்'னு நினைப்பா. வெய்யில் காய்ஞ்சா உன் மனசு கிடந்து அடிச்சுக்கலையா, 'அடடா! வெய்யில் வீணாப் போறதே! கையிலே காசும் உடம்பிலே தெம்பும் இருந்தா வடாம் பிழியலாமே'ன்னு? அப்படித் தான் இதுவும்னு வைச்சுக்கோயேன்!''*

*கிண்டலை ரசித்துச் சிரித்து விட்டு அம்புஜம் நடராஜனைப் பார்த்துக் கூறினாள்: ''தினகரனைப் பற்றிச் சொல்லுங்கோ, கேட்போம்.''*

*''ஐந்து நிமிஷம்! நான் ஸ்பென்ஸருக்குப் போயிட்டு வந்துடறேன்; அப்புறம் ஆரம்பிக்கலாம் கதையை'' என்று கூறி விட்டு வேகமாய் நடந்தார் பத்மநாபன். போட் கிளப்புக்கு எதிர்க் கரையில், சாலையோரம், மர நிழலில், புல் தரையில் துண்டையும், கர்சீப்பையும் பிரித்துப் போட்டுக் கொண்டு மற்றவர்கள் அமர்ந்து பத்மநாபன் திரும்பி வரக் காத்திருக்கத் தொடங்கினர். அமிர்த லிங்கத்தை நடராஜன் விடுகிற வழியாக இல்லை. தம் பக்கத்திலேயே எதோ பேச்சுக் கொடுத்தவாறு இருத்திக் கொண்டார். ஹாப்பி ஹாலிடே ஹோட்டல் பஸ்ஸில் வந்த பிறருக்கு இவர்களிடம் நெருக்கமான நட்பு ஏற்படவில்லை யாதலால் அவரவர்களும் தனித் தனியே பிரிந்து தத்தமக்குப் பிடித்தமானபடி படகு செலுத்தவோ, பிரயண்ட் பூங்காவில்*

மலர்களை ரசிக்கவோ அல்லது மட்டக் குதிரைகள் மீது சவாரி செய்யவோ சென்றனர்.

ரங்கனுக்கும் மீனாவுக்கும் இருப்புக் கொள்ளவில்லை. மறுநாள் பத்மநாபன் குடும்பம் மலையை விட்டிறங்கிச் சென்னை நோக்கிப் பயணத்தைத் தொடங்கவிருந்தது. 'நாளை பிரிந்தால் மீண்டும் சந்திக்க முடியுமா? எங்கு? எப்போது?' என்ற பிரச்னைகள் பெரிய கேள்விக் குறிகளை மாட்டிக் கொண்டு அவர்கள் முன் நின்றன. தனிமையில் பேச இருவரும் துடித்தவாறு தக்க சந்தர்ப்பத்தை எதிர் நோக்கி யிருந்தனர்.

பத்மநாபன் சற்று நேரத்தில் விசுப் பயலுக்காக ரொட்டி, அமுல் வெண்ணெய், ஹிமா வெஜிடபிள் சூப் பொட்டலம் முதலியவற்றுடன் வந்து சேர்ந்தார்.

"என்ன நீங்க போன வேகத்தைப் பார்த்தா ஸ்பென் ஸரையே விலைக்கு வாங்கிடப் போறதாக நினைச்சேன்; ரொட்டிதான் வாங்கினீங்களா?" என்றார் நடராஜன்.

"நீங்க சொல்லப் போற கதையைக் கேட்கும்போது சுவா ரசியத்தை அதிகரிக்க முந்திரிப் பருப்பும் வேர்க்கடலையும் வாங்கிண்டு வந்திருக்கேன். ஆளுக்குக் கொஞ்சமாக் கொரிக்கலாம்" என்றார் பத்மநாபன்.

"அதோ அந்தக் காரிலே உட்கார்ந்து பேசிண்டிருக் காளே, அந்த அம்மாவுக்குக்கூட வேர்க்கடலை வாங்கணு மாம்; 'நூறு ரூபாய்க்குச் சில்லறை இருக்குமா'ன்னு கேட்டாள்" என்றாள் அம்புஜம்.

"ஐயோ பாவம்! கொடுத்தால் போச்சு" என்றார் பத்மநாபன்.

"கொடுக்கிறதாகத்தான் சொன்னேன். 'வீட்டுக்காரர் ஸ்பென்ஸருக்குப் போயிருக்கார்; திரும்பி வரட்டும், வாங்கித் தரேன்' என்றேன்."

''ஸ்பென்ஸருக்கு எதுக்குப் போயிருக்கேன்னு சொல்லிட்டியா என்ன?''

''அதைச் சொல்லுவேனா? வேர்க் கடலை வாங்கச் சில்லறை வேணும்னு நூறு ரூபாய் நோட்டை நீட்டற அவளோட டம்பத்திலே அரைக்கால்வாசியாவது எனக்கு இருக்காதா? ஸ்பென்ஸருக்கு நீங்க போயிருக்கிறதாகச் சொன்னவுடனேயே அவள் புது மதிப்போடே என்னைப் பார்த்தா. முக்கால் ரூபாய் ரொட்டி வாங்கத்தான் அங்கு போனதாகச் சொல்லிக் கௌரவத்தைக் குறைச்சுப் பானேன்?''

''அதானே கேட்டேன். அப்புறம் பள்ளத்தாக்கிலே தினகரன் விழுந்த மாதிரி நம்ம மதிப்பும் பாதாளத்தை நோக்கிச் சரிஞ்சுடாதா?''

நடராஜன் சொன்னார்: ''இப்படியெல்லாம் ஒளிவு மறைவு செய்தாவது ஒவ்வொருவர் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்ள நினைக்கிற இக்காலத்திலே மானம் கப்பலேறுவதைப் பற்றிக் கொஞ்சமும் கவலைப்படாத சிலரும் இருக்கத்தானே செய்யறாங்க! மருதாசலமும் வனஜாவும் இதற்கு நல்ல உதாரணம்!''

''கொஞ்சம் இருங்கோ, பிளீஸ்!... என்று கேட்டுக் கொண்ட அம்புஜம் சில்லறையைக் கொடுத்து நோட்டு வாங்கி வரப் போனாள். அவள் திரும்பி வந்து அமர்ந்து 'உம்' கொட்டும் வரையில் நடராஜனும் பொறுத்திருந்து பின்னர் தொடர்ந்தார்.

★ ★ ★

# 35. சாட்சியம் கிடைத்தது!

சுற்றுலா பஸ்ஸில் வந்து கால்ஃப் கிளப் அருகே இறங்கிய பயணிகள் 'தற்கொலை' முனையைப் பார்த்துவிட்டு வந்தார்கள். பின்னர், 'ஹில்டாப் ரோட்' என்று பெயர்ப் பலகை தாங்கி நின்ற மேட்டுப்பாங்கான சாலையில் ஏறத் தொடங்கினார்கள். அந்தக் குன்றின் உச்சியில் இருந்த விசாலமான 'தீர்க்கதரிசனப் பாறை'யை அடைய. கொஞ்ச தூரம் ஏறியிருப்பார்கள். உயரே 'வீல்' என்ற ஒரு கூக்குரல் கேட்டது. என்னமோ ஏதோ என்று ஓடிச் சென்று பார்த்தால், பாதுகாப்பு ஏதுமற்ற அந்தப் பாறை விளிம்பி லிருந்து ஒருவன் அதள பாதாளத்தில் விழுந்து கிடப்பது தெரிந்தது. பீதி, வேண்டாத வம்பில் மாட்டிக் கொண் டோமோ என்ற தயக்கம், அவனைக் காப்பாற்ற முடியுமா என்ற கவலை இவையெல்லாம் மனத்தில் ஒரே சமயத்தில் கிளர்ந்தெழ அவசரம் அவசரமாய்த் திரும்பிக் கீழே இறங்கி வந்தார்கள். கால்ஃப் கிளப் வாசலில் 'கோக்' உறிஞ்சிக் கொண்டிருந்த அமிர்தலிங்கமும் இவர்களுடனேயே குன்றின் மீது ஏறிச் சென்று ஒருவன் விழுந்து கிடப்பதைப் பார்த்துவிட்டு இவர்களுடனேயே திரும்பியும் வந்தான். கீழே இறங்குகையில் இவர்கள், மருதாசலமும் வனஜாவும் தங்கள் எதிரே மெல்ல மேலே ஏறி வருவதைப் பார்த்தார்கள்.

தற்கொலை முனையிலிருந்து மற்றவர்களுக்கு முன் பாகவே கிளம்பி நகரை நோக்கிச் செல்லும் பிரதான

சாலையில் சற்றுத் தூரம் நடந்து விட்டு இப்போதுதான் திரும்புவதாக அவர்கள் சொன்னார்கள். அவ்விருவர் இடையேயும் இருந்த தொடர்பு எல்லோரும் அறிந்த ஒன்றுதான் என்பதால் தனிமையில் இப்படிச் சற்றுத் தூரம் சென்று திரும்ப அவர்கள் எண்ணியது இயல்பான காரியமாகவே மற்ற அனைவருக்கும் பட்டது.

இதனால்தான் விழுந்து கிடப்பது தினகரன் என்பதும் அவன் வனஜாவின் கணவன் என்பதும் தெரிந்தபிறகும் வனஜா மீதோ அல்லது அவள் ஆசை நாயகன் மருதாசலம் மீதோ நடராஜனால் குற்றம் சுமத்த முடியவில்லை. அவர்கள் ஹில் டாப் ரோட்டில் பாதி தூரம்கூட ஏற வில்லை; தீர்க்கதரிசனப் பாறைமீது அடியெடுத்து வைக்கவே யில்லை என்பதை எடுத்துரைக்க இருபதுக்கு மேற்பட்ட சாட்சிகள் இருந்தபோது தினகரனுடைய மரணத்துக்கு அவர்களை எப்படிக் காரணஸ்தர்களாக்க முடியும்?

மாண்டு போனது தினகரன் தான் என்று முடிவானதும் வனஜா தலையில் அடித்துக் கொண்டு அழுது புலம்பினாள். ஆனால் அவள் தினகரன் போய்விட்டானே என்பதற் காகவோ, தன் கணவன் இறந்துவிட்டானே என்பதற் காகவோ அழவில்லை; விதவை என்ற சொல் தன்னிடம் வந்து ஒட்டிக் கொண்டு விட்டதே என்பதற்காகத்தான் அழுதாள் என்பது நன்றாகப் புரிந்தது நடராஜனுக்கு. விதவையான பிறகும் அவள் முன்போலவே தொடர்ந்து 'விளையாடத்' தயாரா யிருக்கலாம். ஆனாலும் 'விதவை' என்ற அந்தச் சொல்லை அவள் விஷம் போல் எண்ணி வெறுத்தாள். தனக்கிருந்த 'கிளாமர்' போய்விடும் என்று பயந்தாள்.

இப்படிப்பட்ட அற்பமான ஜீவன் தான் அவள் என்பது தெரிந்தும் அவள் மீதோ அல்லது மருதாசலத்தின் மீதோ எந்த நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை, சாட்சியம்

இல்லாததால். ஆகவே எல்லாரிடமும் விலாசங்களை எழுதி வாங்கிக் கொண்டு அனுப்பிவிட்டார் நடராஜன்.

தற்கொலையாக இருக்கலாம் என்று கருதவே சந்தர்ப்பச் சூழ்நிலைகள் இடமளித்த போதிலும் சுலபத்தில் திருப்தி காணாமல் பிரிதொரு நாள் மகன் ரங்கனையும் அழைத்துக் கொண்டு தீர்க்க தரிசனப் பாறைக்குச் சென்றார் நடராஜன், நன்கு ஆய்ந்து பார்க்க எண்ணி.

மெய் சிலிர்க்க வைத்த மகோந்நதமான இயற்கைக் காட்சியில் அவர் மனம் நீண்ட நேரம் லயித்துவிட்டது. கலை உணர்வைக் கட்டுப்படுத்திக் கொண்டு, கடமை உணர்வைத் தட்டி எழுப்பினார். சுற்றுமுற்றும் உன்னிப் பாய்க் கவனித்தார். ஒரு பக்கத்தில் சில புதர்களின் கிளைகள் ஒடிந்திருப்பது போல் தோன்றியது. இது இயற்கையில் ஏற்பட்டதா? அல்லது யாராவது இந்த அடர்ந்த புதர்களை விலக்கி வழி ஏற்படுத்திக் கொண்டு சென்றார்களா? ரங்கனின் 35 மி.மி. ஆஷாஹி பென்டாக்ஸ் கிளிக் கிளிக்கென்று இயங்கியது. புதர்களும் கிளைகளும் ஒடிந்தும் நொறுங்கியும் மிதிபட்டும் கிடந்த பகுதியில் இவர்களும் சென்றனர். முட்கள் குத்தின, கிளைகள் குறுக்கிட்டன. அடர்ந்து வளர்ந்த மல்பெரி புதர்களும் இதர செடிகளும் முன்னேற்றத்தைத் தடை செய்தன. ஆனாலும் ஆங்காங்கே யாரோ முன்பு இங்கு மெல்லிய கிளைகளை ஒடித்தும் புதர்களை விலக்கிக் கொண்டும் சென்றிருக் கிறார்கள் என்பதற்கான தடயங்களும் கிடைத்தன. ரங்கனின் காமிராவுக்கு நிறைய வேலை இருந்தது. அப்புறம் நடராஜனின் மனம் துள்ளி மகிழத்தக்க ஒரு காட்சி தென்பட்டது. முள்புதர் ஒன்றில் சிவப்பு நிற ஜார்ஜெட் துணித் துண்டு சிக்கித் தொங்கிக் கொண்டிருந்தது. சந்தேகமேயில்லை! அது வனஜா உடுத்தியிருந்த புடவை யின் நிறமேதான்! அதே ரகத் துணிதான்!

படம் பிடித்தான் ரங்கன். டயரியில் தாம் கண்டன வற்றைக் குறித்துக் கொண்டார் நடராஜன். பிறகு அந்தத் துணியை முள்ளிலிருந்து விடுவித்து எடுத்துக் கொண்டார். மல்பெரிப் புதர்களையும் பைன் மரங்களையும் அடர்ந்து வளர்ந்திருந்த இதர சில செடிகளையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து போனால் கொடைக்கானல் நகரை நோக்கிச் செல்லும் பிரதான சாலையை அடைந்து விடலாம்; அங்கிருந்து மீண்டும் குன்றின் அடிவாரத்துக்கு, அதாவது ஹில்டாப் ரோட் ஆரம்பமாகும் இடத்துக்கு வந்து விடலாம் என்பதை நடைமுறையில் ரங்கனும், அவரும் செய்து பார்த்து உறுதிப்படுத்திக் கொண்டனர்.

அன்றே ஒரு ஸ்டுடியோவில் ஃபிலிமை அவசரமாகக் கழுவிப் புகைப்படங்கள் தயாரிக்கச் சொல்லிப் பெற்றுக் கொண்டு மறுநாள் மதுரைக்குச் சென்றார் நடராஜன்.

வனஜாவின் வீட்டுக்குப் போய் அவள், அன்று கொடைக் கானலில் கட்டிக்கொண்டிருந்த புடவையைப் பறிமுதல் செய்தார். அது கிழிந்திருப்பதையும் கிழிந்த பகுதியில் தாம் கொண்டு வந்திருந்த துண்டுத் துணி சரியாகப் பொருந்துவதையும் தக்க சாட்சியத்தைப் பக்கத்தில் வைத்துக் கொண்டு தீர்மானித்தார். பின்னர் அவளையும் மருதா சலத்தையும் பிரதான போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்து வந்து விசாரித்தார்.

" 'விசாரிப்பது' என்றால் போலீஸ் பரிபாஷையில் அர்த்தமே வேறே. தெரியுமில்லையா?" என்றார் நடராஜன்.

"தெரியும்; ஆனா நீங்களா மருதாசலத்தை விசாரிச்சேள்? அதைத்தான் நம்ப முடியலை! ஒரு எறும்புக்குக் கூடத் தீங்கு செய்யக் கூடியவராய்த் தோணலையே உங்களைப் பார்த்தால்!" என்றாள் அம்புஜம்.

"சின்ன விஷயங்களுக்குச் சினந்துக்கிட மாட்டேன்; பெரிய தவறுகள் என்றால் தடி எடுக்கவும் தயங்க

மாட்டேன்!'' என்றார் நடராஜன். ''ரங்கனைக் கேட்டுப் பாருங்க. ஒரு சமயம் சினிமாவுக்குப் போயிட்டு வந்துட்டு எங்கிட்டே அடி வாங்கினான். 'பெற்ற பிள்ளையை இப்படி அடிக்க மனசு வந்ததா உனக்கு'ன்னு என்னைக் கோவிச்சுக்கிட்டவர் பல் டாக்டர்! ஆமாம், ரங்கன் நேரே அவரிடம்தான் போக நேர்ந்தது! சினிமாவுக்குப் போனான்னு அடிக்கலை; பொய் சொல்லிட்டான். அதுக்குத்தான்.''

இந்தத் தருணத்தில் பத்மநாபன், அம்புஜம் ஆகிய இருவரது கண்களும் இயல்பாக ரங்கனைத் தேடின. அவன், மீனா இருவருமே குழந்தைகள் அனு, விசு ஆகியோரைக் கவனித்துக் கொள்ளும் சாக்கில் மெல்ல அப்பால் நழுவிச் சென்று அந்தரங்கமாகப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்த்தார்கள்.

அவ்விளம் காதலர் இந்த வட்டத்திலிருந்து மெல்லக் கழன்று கொண்டு போனதைக் கதை கேட்கும் சுவாரசியத்தில் அவர்கள் கவனிக்கவில்லை. இப்போதோ தொடர்ந்து கதையைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக மீனாவும் ரங்கனும் தனித்துப் பேசிக் கொண்டிருப்பதை அவர்கள் பொருட்படுத்தவுமில்லை! வேண்டா வெறுப்புடன் கதை கேட்ட அமிர்தலிங்கம் மட்டும் அவர்களைப் பொறாமைக் கண்களோடு பார்த்தான். அவனை அப்பால் போக நடராஜன் விட்டால்தானே?

''சரி, மேலே சொல்லுங்கோ. மருதாசலத்தை நீங்கள் விசாரிக்கிறபடி விசாரிச்சபோது என்ன தெரியவந்தது?'' என்று அம்புஜம் அடக்க முடியாத ஆவலோடு கேட்டாள்.

''நடுங்கிட்டான். 'நான் நல்ல உத்தியோகத்திலே இருக்கேன்; என்னை விட்டுடுங்க. ஏற்கெனவே இவளோடு சேர்ந்து சுத்தறதாலே எனக்குக் கெட்ட பேரு. இன்னும்

கம்பி எண்ணிட்டு வந்தால் ரொம்பக் கஷ்டம்; உத்தி யோகமே போயிடும். நானும் என் குடும்பமும் நடுத் தெருவிலே நிற்கும்படியாகி விடும்' அப்படி இப்படின்னு மன்றாடினான். 'நீ உண்மையை உள்ளபடி சொல்லு. உனக்கு எந்த அளவுக்கு உதவு முடியும்னு பார்க்கிறேன்' என்றேன். அவன் சொன்னது ரொம்ப விசித்திரமா யிருந்தது'' என்றார் நடராஜன்.

★ ★ ★

# 36. சிக்கல் தீர்ந்தது

மருதாசலம், டி.ஐ.ஜி. ஸி.ஐ.டி. நடராஜனிடம் கூறியது:

வனஜாவும் நானும் மற்றவர்களுக்கு முன்னால் ஹில்டாப் ரோட்டில் ஏறிப் போய் அங்கே தீர்க்கதரிசனப் பாறையில் சில நிமிஷங்களை ஏகாந்தமாகக் கழிக்க எண்ணி விரைந்தோம். உச்சியை அடைந்ததும் வனஜாவை என் அருகில் இழுத்து அணைத்துக் கொண்டேன். திரும்பிய பக்கமெல்லாம் மலைச் சிகரங்களும் கானகங்களும் மட்டுமே கண்களுக்குத் தென்பட்ட அந்த இடத்தில் நாங்கள் இருவர் மட்டுமே அத்தருணத்தில் இருந்ததானது, ஆண்டவன் ஆதமையும் ஈவாளையும் படைத்து உலகில் உலவ விட்ட அந்த ஆதிநாளை எனக்கு நினைவூட்டியது. இதை நான் வனஜாவிடம் சொன்னபோது, அவள் சிரித்து இன்னும் நெருங்கி வந்து ஒண்டிக் கொண்டு, "ஒரே ஒரு வித்தியாசம் இருக்கிறதே!" என்று ரகசியம் பேசும் குரலில் கூறினாள்.

நாங்கள் ஆடை புனைந்திருப்பதைத்தான் அவள் குறிப்பிடுகிறாள் என்பது எனக்குப் புரிந்துவிட்டது. சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்த வேகத்தில் ஆசைகளும் சிலிர்த் தெழுந்தன. அவள் வதனத்தை நோக்கி என் முகம் கீழிறங் கிய அதே சமயம் என் கண்கள் ஒரு மரத்தின் மறைவி லிருந்து வெளிப்பட்ட தினகரனைப் பார்த்துவிட்டன. வீட்டை வெறுத்துவிட்டு அன்றிரவு ஓடிப் போனவன் கொடைக்கானலுக்கு வந்திருப்பான் என்று நாங்கள் சிறிதும்

எதிர் பார்க்கவில்லை. அப்படியே வந்திருந்தாலும் நாங்கள் இருவரும் தனிமையை நாடி வந்த அதே இடத்துக்கு அதே நேரத்தில் அவனும் வந்து, ஒளிந்திருந்து எக்கச்சக்கமான ஒரு நிலையில் எங்களைப் பார்த்துவிட்டுத் திடுதிப்பென்று வெளிப்பட்டதை என்னென்பது? விதி அல்லது கடவுள் சித்தம் என்றுதான் அதைக் குறிப்பிடவேண்டும்.

''ஆபாசப் பைசாசங்களே!'' என்று கத்திக் கொண்டு அவன் வெறி பிடித்தவன்போல் கண்கள் சிவக்க எங்களை விழித்துப் பார்த்தபடி விரைவாக முன்னேறி வந்தான். ''தீர்க்க தரிசனப் பாறை என்ற இந்தப் பெயர்கூட உங்கள் உள்ளத்தில் உயர்ந்த எண்ணங்களைத் தோற்றுவிக்க வில்லையா? மலைகளும், பள்ளத்தாக்குகளும், கானகங் களும் மிகுந்த இந்த மாட்சிமை மிக்க இடம் உங்களுக்கு ஆண்டவனின் அலவிலா விளையாட்டை நினைவுபடுத்த வில்லையா? இங்கு வந்து நின்று இந்தக் காட்சியைப் பார்த்த பிறகும் உங்கள் உள்ளங்களில் மட்டரகமான எண்ணங் களே எழ வேண்டுமா? உங்களைப் போன்றவர்கள் இந்த உலகில் வாழவே தகுதியற்றவர்கள்'' என்று கனத்த குரலில் கூறியபடி எங்களை நோக்கி நகர்ந்தான்.

பேயையோ பிசாசையோ பார்த்துவிட்டது போல் நாங்கள் மிரண்டோம். சொல்லுக்கேற்பச் செயலிலும் ஈடுபடுவான்; நிச்சயம் எங்களைப் பள்ளத்தாக்கில் தள்ளிவிட ஓடிவந்து மோதப் போகிறான் என்பது அவன் கோபாவேசமான முகத்தைப் பார்த்த உடனே தெரிந்தது. பீதியுடன் நாங்கள் நிற்கையில், எங்களைப் பாதுகாத்துக் கொள்ளத் தயாராகையில் எதிர்பாராத அச்சம்பவம் நிகழ்ந்தது.

**தீ**ர்க்கதரிசனம் பெற அந்தப் பாறைக்கு வந்த யாரோ ஒருவன் வயிற்றுப் பசியையும் மறக்காமல் தணித்துக்

கொண்டு வாழைப் பழத்தை விழுங்கிவிட்டுத் தோலினைப் போட்டிருக்கிறான். ஓடிவந்த தினகரனின் செருப்பு அதில் அழுந்தியது. அடுத்த கணம் வழுக்கி விட்டுவிடவே, அவன் 'வீல்' என்று கூக்குரலிட்டவாறே, தலை குப்புறப் பள்ளத்தாக்கில் விழுந்தான். நாலு வினாடிகள் அவன் கத்தியதானது மேலும் இரண்டு வினாடிகளுக்கு மலைச் சரிவுகளில் எதிரொலித்தது.

அந்தச் சத்தத்தைக் கேட்டுவிட்டு எங்களுடன் வந்த இதர சுற்றுலாப் பயணிகள் அவசரம் அவசரமாக உச்சிக்கு வருவார்கள் என்று எதிர்பார்த்தேன். அவர்கள் நாங்கள் இரு வரும் அங்கிருப்பதைக் கண்டால் என்ன நினைப்பார்கள்? கீழே விழுந்தவனின் உடல் மேலே கொண்டு வரப்பட்டு, அவன் தினகரன் என்பதையும் தெரிந்து கொண்டதும் என்ன முடிவுக்கு வருவார்கள்? நாங்கள்தான் அவனைத் தள்ளி விட்டோம் என்றுதான் எல்லோரும் தீர்மானிப்பார்கள். முன்கூட்டியே தெரிந்தோ அல்லது யதேச்சையாகவோ தினகரன் அங்கு வந்து எங்களைப் பார்த்துவிட்டான்; வாக்குவாதம் நடந்தது. எங்கள் காதலுக்கு இடையூறாக இருக்கும் தினகரனைக் கொன்றுவிட எண்ண நாங்கள் இருவரும்தான் அவனைப் பள்ளத்தாக்கில் தள்ளி விட்டோம்- இப்படித்தான் யாருக்குமே தோன்றும். தற்செயலாக வாழைப்பழத் தோலில் சறுக்கி விழுந்து விட்டான் தினகரன்-ஆக்ஸிடெண்ட்-என்று சொன்னால் யாரும் நம்ப மாட்டார்கள். இப்படிச் சில விநாடிகளுக்குள் நான் யோசித்து வனஜாவிடமும் என்னுடைய கருத்தைக் கூறினேன்.

இருவருவமே பயந்து போனோம். ஓடிவிடத் தீர்மானித் தோம். பாதையோடு இறங்கினால் எதிரே நண்பர்கள் வந்து கொண்டிருப்பார்கள். ஆகவே வேறு வழியாகத்தான் போக வேண்டும்... பாதைக்கு ஒரு புறம், ப்ளம், பேரிக்காய்

தோட்டம். மறைப்பு இல்லை. எல்லோரும் நாங்கள் ஓடுவதைப் பார்க்க இயலும். இன்னொரு புறம் அடர்ந்த காடு. மறைந்து செல்ல வேண்டுமானால் அதனூடேதான் போக வேண்டும். நாங்கள் புதர்களையும் செடிகளையும் விலக்கி வழி ஏற்படுத்திக் கொண்டு விரைந்தோம். நகரை நோக்கிச் செல்லும் பிரதான சாலையை அடைந்து அங் கிருந்து திரும்பி மீண்டும் ஹில்டாப் ரோட்டின் ஆரம்பக் கட்டத்துக்கே வந்து சேர்ந்தோம். பெருமூச்சு வாங்கியது. கஷ்டப்பட்டு அடக்கிக்கொண்டு இயல்பாக இருப்பது போல் நடித்தோம். அந்த அவசரத்தில் புடவை சற்றுக் கிழிந்ததை நாங்கள் கவனிக்கவில்லை.

''இதுதான் மருதாசலம் கூறிய கதை'' என்று சொல்லி நிறுத்தினார் நடராஜன்.

''இதை நீங்க நம்பறேளா? வாழைப் பழத் தோலாவது சறுக்கி விடவாவது? சின்னப் பசங்களுக்கு எழுதற கதை மாதிரின்னா இருக்கு?'' என்றார் பத்மநாபன்.

''நானும் இதையேதான் கேட்டேன். யாருக்கய்யா காது குத்தறே? அந்தப் பக்கம் முழுதும் போலீசார் நல்லா தடயம், சாட்சியம் ஏதாவது அகப்படுமான்னு தேடினாங்களே. சின்ன விஷயமானாலும் அலட்சியப் படுத்தாமல் என் கிட்டே வந்து சொல்லணும்னு உத்தரவு போட்டிருந்தேனே. வாழைப்பழத் தோல் கிடந்ததாக ஒரு கான்ஸ்டபிள்கூடச் சொல்லலையே?'' என்றேன்.

''அதுக்கு மருதாசலம் என்ன பதில் வைச்சிருந்தான்?'' என்று பத்மநாபன் வினவினார்.

''தினகரன் விழுந்தபோது அந்தத் தோலும் பள்ளத் தாக்கில் விழுந்துடுச்சாம்! 'அது எங்கே போய் எந்தப் புதர் அல்லது மரக் கிளையில் சிக்கிக் கொண்டதோ தேடிக் கண்டுபிடிக்கிற காரியமா?' என்று மருதாசலம் என்னைத் திருப்பிக் கேட்டான்!''

"பிறகு?" என்றாள் அம்புஜம்.

"'பொய்! அத்தனையும் பொய்!' என்று சொல்லி அவனை இன்னும் கொஞ்சம் கவனிச்சேன்!"

"அதாவது உதைச்சேள்."

"ஆமாம்! 'என்னை எவ்வளவு வேணுமானாலும் அடிங்க; ஆனால் நான் அடிவாங்கினதா வெளியிலே மட்டும் சொல்லிடாதீங்க'ன்னு மருதாசலம் கெஞ்சினான்! பெரிய மனுஷனாம் அவன்! தலைகுனிய நேரிடுமாம்! அப்படி அவன் கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவசியமே இல்லை; ஏன்னா ரூல் பிரகாரம் அவனை அடிக்கவோ, உதைக்கவோ எனக்கு அதிகாரம் கிடையாது. அதிகார எல்லையை மீறித்தான் நான் நடந்துக்கிட்டேன். அதைப் போய் நான் வெளியே சொல்வேனா? இப்போ கூட உங்ககிட்ட இதை ரகசியமா காப்பாத்துவீங்க என்கிற நம்பிக்கையில்தான் பேசறேன்."

"கதையா எழுதினாக் கூடப் பெயரை மாற்றிடுவேன் இல்லையா? அதனால் கவலைப்பட வேண்டாம் நீங்க" என்றார் பத்மநாபன்.

"கிடக்கு, மேலே சொல்லுங்கோ" என்று பொறுமை இழந்து துரிதப் படுத்தினாள் அம்புஜம்.

"அவனை நான் அடிச்சதை வனஜாவினால் தாங்கிக்க முடியலை. 'நான் நெசத்தைச் சொல்லிடறேன். அவரை விட்டுடுங்க' என்றாள். அவள் உண்மை என்று சத்தியம் செய்து கூறியது மருதாசலத்தின் கதையைவிட விநோத மாய் இருந்தது" என்றார் நடராஜன்.

**வ**னஜா சொன்னது:

நான் நடத்தை கெட்டவள்தான்; அதை இனிமே உங்க கிட்டே ஒளிச்சு மறைச்சு ஆகப்போறது ஒண்ணுமில்லே.

கணவனைக் கொன்ற பழி என்னைச் சூழாமல் இருந்தால் போதும். ஒருவனுக்கு ஒருத்தி அல்லது ஒருத்திக்கு ஒருவன் என்கிறது என்னைப் பொறுத்தவரையில் சரிப்பட்டு வராது என்பதை எங்கள் கல்யாணத்துக்குப் பிறகுதான் என் கணவர் புரிஞ்சுக்கிட்டார். அதனாலே மனசு ஒடிஞ்சு போய் அடிக்கடி 'தற்கொலை செய்துக்கப் போறேன்; செத்துப் போயிடப் போறேன்' என்றெல்லாம் பேசுவார். நானும் திமிராகவே பதில் சொல்லி யிருக்கேன். ''செய்யுங்க, ஆனால் அப்படிச் செய்யும்போது ஒரு கடிதாசு எழுதிப் பாக்கெட்டில் வைச்சுக்கிடுங்க. இல்லாதபோனால் கொலை நடந்ததாக யாருக்காவது சந்தேகம் ஏற்படப் போகுது!'' இப்படி நிர்த்தாட்சண்யமாக நான் பதில் சொல்லி யிருக்கேன். அன்று நான் இவரை (மருதாசலத்தை) வீட்டுக்கு அழைத்து வந்து உபசரித்தது அவருக்குப் பிடிக் கலை. வீட்டை வெறுத்துக் கிளம்பியவர் சாந்தி தேடிக் கொடைக்கானல் வந்திருக்கிறார்; தற்கொலை முனையைப் பார்த்திருக்கிறார். ஏற்கனவே அடிக்கடி எழுகிற தற்கொலை எண்ணம் ஸூயிஸைட் பாயிண்டைப் பார்த்ததும் உறுதிப் பட்டிருக்கிறது. ஹில்டாப் ரோட்டில் ஏறி வந்து உயிரை விட யோசித்திருக்கிறார். அதே சமயம் நாங்கள் இருவரும் மேலேறி வந்திருக்கிறோம். மறைந்திருந்து பார்த்திருக்கிறார். நாங்கள் நெருங்கி உறவாடி அன்யோன்யமாகப் பேசிக் கொள்வதைக் கண்டதும் இனித் தாமதிக்கவே கூடாதென்று பள்ளத்தாக்கில் பாய்ந்துவிட்டார். அவர் பாக்கெட்டைச் சோதித்தபோது தற்கொலை செய்து கொள்வதாகக் கடிதம் ஏதாவது அகப்பட்டிருக்குமே?''

''இப்படி ஒரு கேள்வி கேட்டுவிட்டுத்தான் நிறுத் தினாள் வனஜா'' என்றார் நடராஜன்.

பத்மநாபனும் அம்புஜமும் ஏககாலத்தில், ''அழகுதான்'' என்றனர். ''கதைகள் ஒன்றை யொன்று தூக்கி அடிப்பன வாக அல்லவா இருக்கின்றன?'' என்றார் பத்மநாபன்.

''நானும் இந்தக் கூற்றை ஒப்புக் கொள்ளவில்லை. 'கப்ஸா அடிக்காதே! தற்கொலைக் கடிதாசு எதுவும் அவன் பாக்கெட்டில் இல்லை. அப்படியே தற்கொலை செய்துக் கிடணும்னாலும் அவன் வீட்டிலேயே உத்தரத்தில் தொங்க லாமே; இதற்காக கொடைக்கானலுக்கு வரணுமா என்ன?' என்றேன்.

''அப்போ வனஜா அழுது புலம்பி என் காலைப் பிடிச்சுக்கிட்டா. 'இதுதான் உண்மை; நம்புங்க. அவர் தற்கொலைதான் செய்துக்கிட்டார், ஆனால் எங்க பேரிலே கொலைக் குற்றம் விழணும் என்பதற்காகவே கடிதாசு ஒண்ணும் எழுதி வைக்காமல் இருந்ததோடு எங்க எதிரி லேயே பள்ளத்தாக்கில் பாய்ந்து பழி தீர்த்துக்கிட்டிருக் கிறார். எங்களை விட்டுடுங்க. நாங்க கொலை பண்ணலை' என்று கண்ணீர் பெருக்கிக் கூறினாள்.''

''கடைசியிலே நீங்க என்ன பண்ணினேள்?'' -அம்புஜம் முடிவைத் தெரிந்துகொள்ளும் ஆவலுடன் வினவினாள்.

''தினகரனைப் பள்ளத்தாக்கில் தள்ளி மருதாசலம் கொலை செய்ததாகவும் அதற்கு வனஜா உடந்தையாக இருந்ததாகவும் கேஸ் போட்டிருக்கேன். கொலை செய்ய வேண்டும் என்று முன்கூட்டியே இவங்க திட்டம் போடலைன்னாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் வாக்குவாதம் முற்றியது என்பதும் இவர்களது தகாத காதலுக்கு இடை யூறாக இருந்த தினகரனைத் தீர்த்துக் கட்ட நினைத்துக் கணப்போதில் உணர்ச்சி வசப்பட்டு மருதாசலம் செயல் பட்டு விட்டான் என்பதும் போலீஸ் தரப்பு கேஸ்.''

நடராஜன் இவ்வாறு கூறியதும், ''நான் கேட்கிறேன் என்று தப்பா நினைக்காதீங்க'' என்று முஸ்தீப்புடன் அம்புஜம் ஒரு கேள்வியைப் போட்டாள்: ''ஒருவேளை அவங்க சொன்னதே நிஜமாக இருந்துவிட்டால்?''

"எது நிஜம்? மூன்று விதமாகப் பேசியிருக்காங்க. வாழைப் பழத் தோல் என்பது முதல் விளக்கம். தற்கொலை-பாக்கெட்டில் கடிதாசு இருக்கும் என்பது இரண்டாவது விளக்கம். இவர்கள் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட வேண்டும் என்பதற்காகவே பள்ளத்தாக்கில் பாய்ந்து பழிவாங்கிவிட்டான் என்பது மூன்றாவது விளக்கம். எது உண்மை?"

"இரண்டாவது விளக்கத்தை விட்டு விடலாம். தற் கொலைக் கடிதம் ஏதும் அவன் பாக்கெட்டில் இருக்க வில்லை என்பது நமக்குத் தெரியும். முதல் அல்லது மூன்றாவது விளக்கத்தில் உண்மை இருக்குமானால்?" என்று பத்மநாபன் ஐயம் எழுப்பினார்.

"அதைக் கோர்ட்டார் தீர்மானித்து விடுதலை தரட் டுமே? வேண்டாம் என்கிறேனா நான்? விடுதலை பெற்றா லும் இந்த வழக்கு ஓர் அதிர்ச்சி வைத்தியமாகப் பயன்பட்டு எதிர்காலத்தில் அவர்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வைக்கும்."

"ஒருவேளை அவர்கள் விளக்கம் உண்மையாக இருந்து, தீர்ப்பு போலீஸ் தரப்புக்குச் சாதகமாக இருந்துவிட்டால்? அநியாயமாக இருவருக்குத் தண்டனை கொடுத்ததாகாதா?" - இது அம்புஜம்.

"அநியாயம் என்னம்மா இதில்? அதிகபட்சம் ஆயுள் தண்டனை கிடைக்கப் போகிறது. ஆனால் மருதாசலமும் வனஜாவும் பண்ணியிருக்கிற அக்கிரமத்துக்கு அடுத்த ஜன்மத்துக்கும் சேர்த்து அவர்களுக்கு இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கலாம்!" என்றார் நடராஜன்.

"அது என்னவோ உண்மைதான்" என்று கூறிக் கொண்டே எழுந்தார் பத்மநாபன். "பஸ் புறப்படும் நேரமாகிவிட்டது; கிளம்புங்கள்" என்றார்.

★ ★ ★

# 37. 'இன்றிரவு..!'

**பெ**ரியவர்கள் கொலையா, தற்கொலையா என்ற விவாதத்தில் ஈடுபட்டிருந்தபோது மீனாவும் ரங்கனும் குழந்தைகள் அனுவையும் விசுவையும் கவனித்துக் கொள்கிற சாக்கில் மெல்ல நழுவியிருந்தனர்.

சற்று அப்பால் போனதும் மீனாவின் கண்களிலிருந்து அடக்க மாட்டாமல், தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது. அதைப் பெற்றவர்கள் பார்த்துவிடப் போகிறார் களே என்ற பயத்தில் அவள் அவர்களுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். ரங்கன் இரு கைகளையும் நீட்டி அவள் முகவாயை ஏந்த வேண்டும்; கண்ணீரைத் துடைக்க வேண்டும் என்று துடியாக இருந்தான். ஆனால் அவனும் தகப்பனாருக்குப் பயந்து தன் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்திக் கொண்டான். இருவருமே பெற்றோரிடம் மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்த தால் அவர்களுக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்ற தயக்கம் சதா உடனிருந்தது. சகஜமாகப் பழகிய போதிலும் அடக்கத்தையும் அனுசரித்தனர்.

'' 'சொல்கிறேன், கேட்கிறேன்' என்று நாட்களைக் கடத்தி விட்டீர்கள். நாளை நாங்கள் சென்னை திரும்பு கிறோம். பிறகு உங்களை எங்கே, எப்போது சந்திக்கப் போகிறேன்?'' என்றாள் மீனா.

''என்னவோ சந்திர மண்டலத்துக்கே போய்விடப் போகிறவள் மாதிரி பேசறயே? அங்கே போனாலும்

பூவுலகுடன் வினாடிக்கு வினாடி தொடர்பு வைத்துக் கொள்ள முடிகிற காலம் இது. எதுக்கு அனாவசியக் கவலை? கல்யாணம் முடிந்த கையோடு ஹனிமூனுக்கு நாம் கொடைக்கானலுக்கே வரப் போகிறோம், பார்!''

வெட்கத்தில் கன்றிச் சிவந்த கன்னங்கள் அவன் சுவைத்துத் தின்ற ப்ளம் பழங்களை நினைவூட்டின. ஏரித் தண்ணீரை இடக் கரத்தால் சிறிதளவு அள்ளி வீசினாள் அவள், பொய்க் கோபத்தோடு. புன்னகை மலர்ந்தது; கண்ணீரும் அதிகரித்தது!

''என்னிடம் பேசறதிலே ஒண்ணும் குறைச்சல் இல்லே! உங்க அப்பாவிடம் சொல்லணும் என்கிறபோது மட்டும் நாக்கு மேலண்ணத்தில் ஒட்டிக் கொள்றதாக்கும்! கூடவே, 'பெற்றவர்களுக்குத் தெரியாமல் நாம் ஆசைகளை வளர்த்துக்கிடறதும் கோட்டைகள் கட்டறதும் தப்பு'ன்னும் நீங்களே சொல்றேள். இப்படி நீங்க சொல்றதைக் கேட்கும் போதெல்லாம் எனக்குப் 'பகீ'ரென்றிருக்கிறது.''

''ஒரு பயமும் வேண்டாம் மீனா! என் அப்பா மறுத்துச் சொல்லவே மாட்டார். ஆட்சேபிக்க என்ன இருக்கிறது? ஜாதி என்கிற ஒரு சொல்லை மறந்து விட்டால் நம் கல்யாணம் நடந்தேறத் தடை என்ன?''

''நாம் மறந்து விடலாம்; ஆனால் மறக்க வேண்டிய வர்கள் மறக்கணுமே!''

''ஒரு வேளை உன் பெற்றோர்கள் தயங்கினாலும் அவர்களை வழிக்குக் கொண்டு வரும் பொறுப்பை என் அப்பாவே ஏற்றுக்கொள்வபர், பார்! உன்னை மருமகளாக அடையக் கொடுத்து வைத்திருக்க வேண்டுமே அவருக்கு! கடைசிவரை வாதாடிப் பார்க்காமல் விடமாட்டார்!''

''இதெல்லாம் நீங்கள் ஊகமாகச் செல்வதுதானே? அவருக்கு இன்னும் விஷயமே தெரியாதே?''

''எதற்கும் சமயம் வரணும், மீனா! பக்குவமாகப் பேசணும்.''

''அந்த வேளை எப்போ வரும்?''

''நேரம் நெருங்கிக்கிட்டுத்தான் இருக்கு. இங்கு நடந்த மூன்று கொலைகளும் ஸைக்கோ ஸாரநாதன் செய்தவை என்ற வதந்தி பரவலாகப் பரவி யிருந்தது. இப்போ அதற்கு முடிவு கட்டிவிட்டார். ஐ.ஜி. இவரை ஃபோனில் பாராட்டி, 'இதுவரை கொடைக்கானலில் 'டியூட்டி'யில் இருந்ததாக நினைச்சுக்கிடுங்க. ஒரு வாரம் பத்து நாள் ஓய்வாக இருந்து விட்டு வாங்க'ன்னு சொல்லி இருக்கார். இல்லேன்னா நாங்களும் நாளைக்குக் கிளம்பியிருக்க வேண்டியதுதான். இனி அவர் மன நிம்மதியோடு இருப்பார் என்பதால் நான் துணிந்து நம் விஷயத்தைப் பற்றி அவரிடம் பேசலாம்.''

''அப்படியானால் இன்றைக்கு ராத்திரி அவரிடம் பேசி விடுங்கள்; நாளை நாங்கள் புறப்படு முன் அவர் மனசை அறிந்து எனக்குத் தகவல் சொல்லுங்கள். என்னோட அப்பா அம்மாவிடம் அப்புறமாகப் பேசிக் கொள்ளலாமென்றா லும் உங்க அப்பாவின் ஆதரவு நமக்கு உண்டு என்ற அளவுக்காவது தெம்பு பெற்றுச் சென்னை செல்கிறேன் நான்!''

''உன் கோரிக்கை நியாயமானதுதான் மீனா! ஆனால் அதில் ஒரு சங்கடம் இருக்கு'' என்றான் ரங்கன்.

''என்ன அது? சொல்லுங்கள்!''

''அதைச் சொல்ல எனக்கு உரிமை இல்லை மீனா, ரகசியம்!''

சரேலென்று மீனாவின் முகம் வெளுத்தது. ''சரி, நான் போகிறேன்; அம்மா ஏதாவது நினைத்துக் கொள்ளப் போகிறாள்'' என்று எழுந்தாள்.

பெற்றவர்கள் பார்த்து விடுவார்களோ என்ற எண்ணம் சிறிதும் இன்றி விருட்டென்று அவள் கரத்தைப் பற்றி விட்டான் ரங்கன். தானியங்கு முறையில் செயல்பட்டு விட்டது அவன் கை. அவள் மீண்டும் உட்கார்ந்த மறு வினாடி தவற்றை உணர்ந்ததுபோல் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டான்-புத்தம் புதிய ரோஜாப் பூ மாலையை வருடிய சுகானுபவத்துடன்தான்!

"மீனா! நீ என்னை நம்பவில்லை என்று தோன்றுகிறது!"

"தவறு! நீங்கள்தான் என்னை நம்பவில்லை. அதனால் தானே காரணத்தைக் கூற யோசிக்கிறீர்கள்?"

"நம்புகிறேன் மீனா! நம்பிச் சொல்கிறேன். ஆனால் தயவுசெய்து இந்த ரகசியத்தை வேறு யாரிடமும் வெளி யிட்டு விடாதே! அப்புறம் என் அப்பாவுக்கு என்னிடம் உள்ள மதிப்பு தவிடு பொடியாகி விடும்" என்ற ரங்கன் தொடர்ந்தான்:

"இங்கு நேர்ந்த மூன்று துர்மரணங்களுக்கும் ஸைக்கோ ஸாரநாதன் பொறுப்பல்ல என்று என் அப்பா நிச்சயமாக நம்பினாலும் ஸைக்கோ ஸாரநாதன் கொடைக்கானலுக்கு வந்திருப்பதாகவே கருதுகிறார். அவனை இன்றிரவு கையும் களவுமாகப் பிடிக்கத் திட்டம் போட்டிருக்கிறார். அதனால் தான் சொன்னேன், நம் விஷயத்தை அவரிடம் இன்றிரவு கூற முடியாதென்று. இன்றிரவு அவர் விரிக்கும் வலையில் அவன் சிக்கிவிட்டால் பிறகு நாளை சாவகாசமாக, அமைதியாக அவரிடம் பேசுவேன்."

"ரங்கன்! ஸைக்கோவைப் பிடிக்கும் இந்தத் திட்டத்தில் உங்களுக்கும் பங்கு உண்டா?" என்று பரபரப்புடன் கேட்டாள் மீனா.

"அப்பாவுக்கு உதவுவேன் மீனா!"

"ரங்கன்! ஜாக்கிரதையாக இருங்கள் ரங்கன்! பிளீஸ்! பிளீஸ்!" என்றாள் மீனா நாத் தழுதழுக்க.

# 38. புலி பாய்ந்தது!

அன்றிரவு உணவை முடித்துக் கொண்டு சாப்பாட்டுக் கூடத்தை விட்டுத் திறந்தவெளிக்கு வந்தபோது பத்ம நாபனின் பற்கள் தந்தி அடிக்க ஆரம்பித்தன.

"என்னவோ இன்றைக்குக் குளிர் ரொம்ப அதிகமா இருக்கிறாப் போலத் தோன்றுகிறது" என்றார்.

"நியாயமா டி.ஐ.ஜி. ஸார் மர்மங்களையெல்லாம் விடுவிச்சுக் குற்றவாளிகளைப் பிடிச்சுட்டதாலே குளிர் விட்டுப் போயிருக்கணும் உங்களுக்கு!" என்றான் அமிர்த லிங்கம்.

"நாளைக்கு நாங்க ஊர் திரும்பறோம். மிஸ்டர் அமிர்தலிங்கம்! உங்களைச் சந்திச்சுப் பழக நேர்த்ததிலே ரொம்ப மகிழ்ச்சி" என்றார் பத்மநாபன்.

அனுவின் காமிராவை அவன் உடைத்தபோது அவன் பேரில் கோபம் ஏற்பட்டிருந்ததென்னவோ உண்மைதான். ஆனால் மறுநாளே அவன் ப்ரையண்ட் பார்க்கில் அன சூயாவுடன் சிறுபிள்ளைபோல் விளையாடிக் கொண்டிருந் தான் என்பதை அறிந்ததும் அவர் கோபம் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது. சிறுமி அனசூயா தன் வயதுக்கேற்ற இயல்புப்படி சட்டென நடந்ததை மறந்து விடவே, இவரும் அந் நினைவை ஒதுக்கித் தள்ளிவிட்டார். அமிர்தலிங்கம் பணத்தைத் தண்ணீராகச் செலவிட்டுக் கொண்டிருந்ததானது அவனிடம் மதிப்பை உயர்த்திச்

சுமுகமான உறவு நிலவ உதவியது. அவன் வாரிவிட்டுக் கொண்டிருப்பது பிதுர்ரார்ஜிதச் சொத்தோ அல்லது உழைப்பும் திறமையும் சம்பாதித்துத் தந்த பணமோ அல்ல; டாக்டர் குஹாவிடமிருந்து கொள்ளையடித்து வந்த ரூபாய் நோட்டுக்கள் என்பது பாவம், பத்மநாபனுக்கு எப்படி தெரியும்?

''நடுவிலே ஏதாவது அசம்பாவிதமா நடந்திருந்ததுன்னா அதை மனசிலே வைச்சுக்காதீங்க; சென்னைக்கு வரப்போ அவசியம் நம்ம வீட்டுக்கு வாங்க'' என்று உபசாரமாகச் சொன்னார் 'அன்னம்' பத்திரிகை துணை ஆசிரியர்.

''ஓ எஸ்!'' என்றான் அமிர்தலிங்கம். ''எப்படியும் மீனா வின் கல்யாணத்துக்கு வரவேண்டியவன்தானே நான்?'' இப்படிக் கேட்டவன் ரங்கனை நோக்கியபடி, ''சீக்கிரம் நடந்திடு மில்லையா?'' என்றான். ''அழைப்பிதழ் அனுப்பத் தவறாதீங்க!'''

**த**ம்மிட மிருந்து பார்வையைத் திருப்பி ரங்கனை நோக்கி அவன் பேசியதன் உட்கருத்தைப் பத்மநாபன் புரிந்து கொண்டார். ஆயினும் அதை உணர்ந்ததாகக் காட்டிக் கொள்ளாமல் ''உங்க விலாசமே தெரியாதே எனக்கு'' என்றார். ''யோசித்துப் பார்த்தா ஆச்சரியமாகக் கூட இருக்கு. இரண்டு வாரங்களுக்கு மேலே பழகி யிருக்கோம். ஆனாலும் இன்னும் உங்களைப் பற்றி ஒரு விவரமும் எனக்குச் சொல்லலை நீங்க!''

''பணக்காரனுக்குப் பிள்ளையாகப் பிறக்கிற பாக்கியம் பண்ணினதாலே கடந்த இரண்டு வருஷங்களுக்கு மேலா கவே என் விலாசம் 'கேர் ஆஃப் திஸ் ஆர் தட் ஹோட்ட' லாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனாலும் டோண்ட் ஒர்ரி, நியூயார்க்கிலே இருந்தால்கூட மீனா மேரியேஜ்ஜுக்கு ஜம்போவிலே பறந்து வந்துவிடுவேன்.''

"அது சரி; நியூயார்க்கில் நீங்க இருக்கும்போது மீனா வுக்கு இங்கே கல்யாணம் நடக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்? ஏதாவது விலாசம் கொடுத்தால்தானே?"

"அதென்ன அப்படிச் சொல்லிட்டீங்க? ஸஹாரா பாலைவனமானாலும் பத்மநாபன் மகள் கல்யாணம்னா விஷயம் அங்கே எட்டாமல் போகுமா?"

"ஏற்கெனவே குளிர் நடுக்குகிறது. இன்னும் ஐஸ் வேறே வைக்கறேள்!" என்றார் பத்மநாபன், விலாசம் தர அவன் விரும்பவில்லை போலும் என்று எண்ணியவராக.

"குட் நைட்" என்று கூறிப் பிரிந்தான் அமிர்தலிங்கம்.

"நாங்களும் வரோம்" என்று விடைபெற்றார் நடராஜன். "நாளைக்கு நீங்க புறப்படுவதற்கு முன்னால் பார்க்கலாம்."

தகப்பனாரைப் பின்பற்றி நடந்த ரங்கநாதன் ஒரு முறை திரும்பி மீனாவை நோக்கினான். சாப்பாட்டுக் கூடத்து வாசலில் விளக்கொளியில் மீனாவின் கண்கள் நீர்த் திரை யிட்டு மின்னுவதானது பளிச்சென்று தெரிந்தது. அந்த ஒளிச் சிதறலினூடே அவள் பார்வை 'ஜாக்கிரதை! ஜாக்கிரதை! எனக்காக ஆயிரம் தடவை ஜாக்கிரதை!' என்று கெஞ்சுவது புரிந்தது.

★ ★ ★

**தா**ங்கள் தங்கியிருந்த அறையை நெருங்கியதும், "சாவி யார்கிட்டே இருக்கு?" என்றார் பத்மநாபன்.

வராந்தாவில் கண்ணாடிக் கதவின் பூட்டைத் திறந்து விட்டு, உடைந்திருந்த பகுதி வழியே கையை நுழைத்து உள் பக்கம் போட்டிருந்த தாழ்ப்பாளையும் திறந்தாள் மீனா.

"தேவலாம்; 'வேறு கண்ணாடி பதிக்கிறேன்' என்று சொல்லிச் சொல்லியே கடைசி வரையில் சமாளித்து

விட்டார் தனராஜ்'' என்றார் பத்மநாபன். ''நாம கிளம்ப வேண்டிய சமயமே வந்துடுத்து.''

''திருடன் வந்தால் கண்ணாடி ஒரு பிரமாதமா? உடைத்து நொறுக்கிக் கையை உள்ளே விட எத்தனை நேரமாகும்?'' என்று மீனா கேட்டாள்.

''உடைக்கிற சத்தமாவது கேட்குமில்லையா?''

''உங்களுக்கா?'' என்றாள் அம்புஜம். ''குறட்டை விட ஆரம்பிச்சால் பூகம்பம் வந்தால்கூடத் தெரியாதே!''

''இது வராந்தாதானே அப்பா? அறைக்குத் தனிக் கதவு இருக்கே. அதை உள் பக்கம் தாளிட்டுக் கொண்டு தானே படுக்கிறோம்?''

''யார் இல்லைன்னா? ஒண்ணுக்கு இரண்டா கதவும் தாழ்ப்பாள்களும் இருந்தால் பத்திரம்தானே என்கிறதால் சொன்னேன். போதாக் குறைக்கு இந்த ஓட்டை வழியா ரத்தத்தை உறைய வைக்கிற மாதிரி சில்லுன்னு காற்று அடிக்கிறது.'' பெரிதாகக் கொட்டாவி விட்டார் அவர்.

''அம்புஜம்! உனக்கு ஏமாற்றம் அளிக்க நான் விரும்பலை. கண்ணை அசத்தறது. படுத்துண்டு குறட்டை விடறேன்'' என்றார்.

''உங்களுக்கு என்ன? தொப்புன்னு விழுந்துடுவேள். நான் இனிமே வெந்நீர் போட்டு இதுகளுக்கு ஹார்லிக்ஸ் கரைச்சுக் கொடுத்து, அதைச் சாப்பிட இவா பண்ணுகிற சண்டித்தனத்தைச் சமாளிச்சு, படுக்கையிலே வைச்சு அமுக்கித் தட்டிக் கொடுத்து, கதை சொல்லித் தூங்கப் பண்ணறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிடறது'' என்ற அம்புஜம் மின்சாரக் கெட்டிலில் நீரை நிரப்பிப் பிளக்கைச் செருகினாள்.

''என்னுடைய அனுதாபங்களைக் குறட்டை ஒலி மூலமாகத் தெரிவிச்சுக்கறேன்'' என்றார் பத்மநாபன்.

பின்னர் அம்புஜம் வெந்நீருடன் சேர்ந்து தளைக்கப் போகிறாளே என்று அஞ்சியவராக, "மீனா! அம்மாவுக்கு உதவி பண்ணு" என்று ஒப்புக்குச் சொல்லிவிட்டுக் கட்டிலில் படுத்தார். நடுத்தர வயதும் பலமான சாப்பாடும் அவரைச் சீக்கிரமே நித்திரை லோகத்துக்கு அழைத்துச் செல்லும் வாகனமாயின.

**மீ**னா அப்பாவின் பேச்சை இலட்சியம் பண்ணாமல் ஒரு கதைப் புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொண்டு படுத்தாள்.

"படுத்தாதீங்கோ. நாலு வைச்சுடுவேன்" என்ற மிரட்டல் ஒலி சில நிமிஷங்களில் எழுந்தது. "கதை சொல்லணும்" என்று உத்தரவாதம் வாங்கிக் கொண்டு ஹார்லிக்ஸைக் குடித்து முடித்து அனுவும் விசுவும் தாயாருக்கு இரண்டு புறத்திலும் படுத்தனர். அனுவின் வலது காலும் விசுவின் இடது காலும் தாயார் மீது பாசத்துடன் விழுந்து இறுகின.

"ஒரே ஒரு ஊரில் ஒரு ஈ இருந்ததாம் அதுக்குத் தன் பேர் மறந்து போச்சாம். ஒரு கன்னுக்குட்டிக் கிட்டே போய்க் கொழு கொழு கன்றே..." இப்படியாகக் கதை கூற ஆரம்பித்த அம்புஜம், "இந்தா மீனா! படிச்சது போதும்; வாசற் கதவைச் சாத்திட்டு, விளக்கை அணைச்சுட்டுப் படுத்துக்கோ" என்றாள்.

"ஆகட்டும்" என்றாள் மீனா. அவள் படித்துக்கொண்டா இருந்தாள்? 'பிரமை பிடித்தது போல் எதுக்குடி உட்கார்ந் திருக்கே? என்று தாயார் கேட்கப் போகிறாளே என்பதற்காக ஒரு புத்தகத்தைப் பிரித்து நெஞ்சுக்கு மேலே நிறுத்திக் கொண்டிருந்தாளே ஒழிய, அவள் மனமெல்லாம் ரங்கனிடம் அல்லவா இருந்தது? 'அவருக்கு ஏதாவது ஆபத்து நேருமோ? என்ன திட்டம் வைத்திருக்கிறார்கள் அப்பாவும் மகனும்? ஸைக்கோ ஸாரநாதனைப் பிடிக்க

இரவில்தான் கிளம்ப வேண்டுமா? எங்கே இருக்கிறான் அவன்? ஜீப்பில் ஏறிப் போவார்களா? சத்தம் கேட்குமே அவர்கள் புறப்படும்போது; எழுந்து போய்ப் பார்க்கலாமா? அது அவருக்குப் பிடிக்குமோ என்னமோ?' இவ்வா றெல்லாம் பலவாறாக யோசித்தபடியிருந்தாள் மீனா.

"...கோல் வளர்த்த கொடி மரமே, கொடி மரத்தில் இருக்கும் கொக்கே, என் பேர் என்ன?" என்று கதை கூறிக் கொண்டு போன அம்புஜம், பக்கத்து மேஜையின்மேல் இருந்த டிராவல் அலாரம் கடிகாரத்தைப் பார்த்தாள். "மணி பத்தரையாகி யிருக்கு இதுகள் தூங்க" என்று அலுத்துக் கொண்டவள், தன் மீது கனத்துக் கொண்டிருந்த கால்களை விலக்கிவிட்டு ஒருக்களித்துப் படுத்தாள்.

திடும்மென்று விளக்கு அணைந்தது. "மறுபடியும் கரண்ட் ஃபெயிலியர் போலிருக்கு" என்றாள் அம்புஜம், தூக்கத்தில் தடித்த குரலில். "இங்கே தங்கியிருந்த பதினாறு ராத்திரிகளில் பத்து ராத்திரிகளுக்குக் குறையாமே மின்சாரத் தடை!"

"உம்" என்றாள் மீனா.

"இதுக்காகவே சிம்னி விளக்கு ஒண்ணு வைச்சிருப் பானே; ஏத்தறியா?"

"உம்" என்றாள் மீனா அசுவாரசியமாக.

"கதவைச் சாத்தியாச்சா?" என்ற போது அம்புஜத்தின் நாக் குழறியது; கண்ணிமைகள் கனத்தன.

"உம், உம்!" என்றாள் மீனா அசிரத்தையாக.

கதவு திறந்துதானிருந்தது, மீனாவின் கண்களும் திறந்தே இருந்தன, இருளிலும்.

★ ★ ★

**வி**ளக்கு அணைந்தபோது அமிர்தலிங்கம் ஏற்கனவே ஸாரநாதனாக மாறிவிட்டிருந்தான். அவன் டோஃபா, பவர் இல்லாத மூக்குக் கண்ணாடி, பொய்த் தாடி மீசை, மணிமாலை எல்லாம் டிரெஸ்ஸிங் டேபிள்மீது இருந்தன. ஹிப்பி பாணி உடை கட்டில் மேல் கிடந்தது. கொடைக் கானல் கடைத் தெருவில் தான் துணி வாங்கித் தைத்திருந்த ஒரு பைஜாமா ஜிப்பாவை அணிந்து, வழுக்கைத் தலையை ஒரு தடவை தடவி விட்டுக் கொண்டவன். மற்றொரு கடையில் தான் வாங்கியிருந்த புத்தம் புதிய நன்கு முறுக் கேற்றப் பட்ட நாலு முழம் மணிக் கயிற்றைப் பெட்டியைத் துழாவி எடுத்தான்.

அது இப்போது அவன் கரத்தை விடுவிடுவென்று சுற்றி வளைத்தது. அதே வேகத்தில் பிரிந்து கொள்ளவும் செய்தது. அந்த வேகத்துக்கு ஏற்ப அவன் மனத்திலும் ஒரு குமுறல் வினாடிக்கு வினாடி அதிகரித்துக் கொண்டுபோயிற்று. கடைசியில் 'இந்தச் சுமையை இனியும் தாங்கிக் கொண் டிருக்க முடியாது; ஒரு வடிகாலைத் தேட வேண்டியதுதான் என்ற நிலைக்கு அவன் வந்துவிட்டான். அடக்கமாட்டாத ஒரு வெறி உந்தித் தள்ள அவன், நெஞ்சை இறைக்கச் செய்த சிறிய சிறிய பெருமூச்சுக்களுடன் தன் அறையை விட்டு வெளியேறியபோது மணி பன்னிரண்டு.

★ ★ ★

**அ**றைக்குத் திரும்பிய நடராஜனும் ரங்கனும் துரிதமான ஆனால் ஒருவித நிச்சய புத்தியுடன் பரபரப்பின்றிச் செயல்பட்டனர். ஜவுளிக் கடை ஒன்றில் ஸூட் அணிந்து அலங்காரமாக நின்ற ஆண்மகன் சிலைகள் இரண்டினை அவசரத் தேவை என்று சொல்லி டி.ஐ.ஜி. இரவல் கேட் டிருந்தார். அவர் கோரியதை இல்லை என்று கூறக் கடைக் காரருக்குத் துணிவு வருமா, என்ன? அன்று பிற்பகல் அவர்கள் ஆப்ஸர்வேட்டரிக்கும் ஏரிக்கும் போயிருந்த

போது, நடராஜனின் உத்தரவுப்படி போலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் இடுப்பு வரையிலான அப் பொம்மைகளை நன் றாகத் தாள் போட்டுச் சுற்றிக் கொணர்ந்து அவர் அறையில் வைத்துவிட்டுப் போயிருந்தார். இதற்கெனவே தம் அறைச் சாவியை ரிஸப்ஷனில் கொடுத்துச் சென்றிருந்தார் நடராஜன்.

அந்தப் பெரிய பொட்டலம் இப்போது பிரிக்கப்பட்டு, பொம்மைகள், நடராஜன்- ரங்கன் ஆகியோருக்குப் பதில் அவர்களுடைய நைட் டிரஸ்களை அணிந்த கோலத்தில் கட்டில்களில் படுத்திருந்தன. இடுப்புக்குக் கீழே இரு தலையணைகளை வைத்துப் போர்த்தியிருந்தனர். வராந்தா கண்ணாடிக் கதவு, உள்ளே அறையின் வாசல் கதவு இரண்டையும் திறந்து வைத்துவிட்டு, நாலு செல் டார்ச் நன்றாக வேலை செய்கிறதா என்று பரீட்சித்தார் டி.ஐ.ஜி. கைத் துப்பாக்கியையும் சரிபார்த்துக் கொண்டார்.

"இனி விளக்குகளை யெல்லாம் அணைத்து விட்டுக் காத்திருக்க வேண்டியதுதான்" என்றார். அறையின் வாசல் கதவோரமாக நாற்காலியை இழுத்துப் போட்டு மறைந்த வாறு அமர்ந்தார். "நீ பாத்ரூமில் ஒரு ஸ்டூலைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திரு, ரங்கன்! அந்தக் கதவும் திறந்தே இருக்கட்டும்" என்றார்.

"பாத்ரூம் வழியாக உள்ளே வரக் கொல்லைப்புறக் கதவு ஒன்றிருக்கிறதே" என்றான் ரங்கன்.

"அதை நன்றாக இழுத்துச் சாத்தித் தாழ்ப்பாள் போட்டுவிடு! வாசல்புறமாக அவன் வருவதைத்தான் நான் விரும்புகிறேன்."

"அதாவது ஸாரநாதன் வடிவில் ஆபத்து வருவதாயின் அது முதலில் உங்களைத் தாண்டித்தான் வர வேண்டும்; என்னைக் கடந்து அல்ல; அப்படித்தானே?"

அவன் குரலில் தொனித்த ஆதங்கம், கரிசனம் இரண்டையும் புரிந்துகொண்டு மகிழ்ந்தவர் அதை வெளிக்காட்டாது, "நான் என் கடமையைச் செய்கிறேன்" என்றார் நறுக்குத் தெரித்தாற்போல்.

அவர் ஆக்ஞைப்படி விளக்குகளை அணைத்துவிட்ட ரங்கன், "பேசலாமா, கூடாதா?" என்று வினவினான்.

ரேடியம் டயல் கொண்ட தம் கைக் கடிகாரத்தை நடராஜன் பார்த்தார். மணி ஒன்பதரை. "இன்னும் அரை மணி நேரம் பேசலாம், தப்பில்லை. ஹோட்டலில் சந்தடி அடங்க அத்தனை நேரமாகும். மேலும் அமிர்தலிங்கமும் இப்போதுதானே தன் அறைக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறான்?"

"அவன்தான் ஸாரநாதன்னு நீங்க ஊகிக்கிறீங்க; ஆனால் தீர்மானமாகத் தெரியாதபோது அவனைக் கைது செய்ய முடியலை. இத்தனை நாட்களா இங்கு நடந்த கொலைகள் எல்லாம் ஸைக்கோ செய்தவை என்ற வதந்தி பரவியிருந்ததால் அவனுக்குப் போலியான ஒரு மனத்திருப்தி இருந்துவந்தது; கொலை செய்யணும்கிற வெறி அடங்கிக் கிடந்தது. இப்போ அவனுக்கு இருந்த ஒரு மன நிறைவை உடைச்சு எறிஞ்சுட்டீங்க. அதனால் கொலை வெறி மறுபடியும் பொங்கும், அடிபட்ட புலியாச் சீறிக்கிட்டு இங்கே பாய்வான்னு எதிர்பார்க்கறீங்க; அப்படித்தானே?"

"ஆமாம், ரங்கா! அவனைச் சீண்டி விடத்தானே அந்தண்டை இந்தண்டை போக விடாமல் தோள் மேல் கை போட்டுப் பக்கத்திலேயே உட்கார வைச்சு, என் துப்பறியும் திறனையும் வெற்றிகளையும் பறைசாற்றிக்கிட்டிருந்தேன்! அவன் மன நிம்மதியைக் குலைத்த என்மேலே அவனுக்கு ஆத்திரம் பொங்கி எழும். இன்னும் சற்று நேரத்தில் நம்மில் ஒருவரையோ அல்லது இருவரையுமோ கொலை செய்யும்

நோக்கத்துடன் இங்க வருவான். முதலில் ஒரு பொம்மையின் கழுத்தில் கயிற்றைச் சுற்றி வளைத்து இறுக்குவான். அப்போ டார்ச் லைட் அடித்துக் கையும் மெய்யுமா அவனைப் பிடிச்சுடலாம். வேஷம் அம்பலமாயிடும்!''

கடிகார முள் சுற்றி வந்து கொண்டிருந்தது. ரங்கனின் சிந்தனையும் அங்கு நிகழ்ந்த சம்பவங்களைச் சுற்றியே வளைய வந்தது. சற்று நேரம் பொறுத்துக் கேட்டான்: ''அப்பா! ஊரிலே எல்லாரும் இந்த மூன்று கொலைகளையும் ஸைக்கோ ஸாரநாதன்தான் செய்தான் என்று நம்பிய போது நீங்கள் மட்டும் எப்படி தீர்மானமாக 'இல்லை' என்று சொன்னீங்க?''

''ஸைக்கோவின் கொலைகளுக்கு ஒரு 'பாட்டர்ன்' உண்டு ரங்கா! அவன் ஆண்களை மட்டுமே கொலை செய்வான். பெண்களைத் தொடுவதில்லை. கழுத்தில்தான் அவன் கொலை வெறி செயல்படும். வேறு எந்த அவயவத்தையும் குறி பார்க்க மாட்டான். கயிற்றைக் கொண்டு கழுத்தைச் சுற்றி வளைத்து இறுக்கித்தான் கொல்வான். கத்தியோ, துப்பாக்கியோ பயன்படுத்தியதேயில்லை. இப்படி ஒரே விதமாகக் கொலைகளைப் புரிய அவன் வாழ்க்கையில் ஏதோ சம்பவம் நிகழ்ந்து அவன் மனத்தைப் பேதலிக்கச் செய்திருக்க வேண்டும். இங்கு நடந்த மூன்று கொலைகளிலும் இந்த ஒருமைப்பாட்டினைக் கொஞ்சமும் காணோம். அதனால்தான் நான் நிச்சயமாக இருந்தேன்.''

''உறுதியாக நீங்கள் சொல்லியும் ஜனங்கள் நம்ப மறுத்துட்டாங்களே!''

''சந்தர்ப்பச் சூழ்நிலைகள் அப்படி அமைந்துவிட்டன. நான் இங்கே வந்த சமயம் 'ஸைக்கோ தப்பிவிட்டான், தமிழகத்துக்கு வந்திருக்கலாம்' என்று தினசரிகளில் செய்தி வந்தது. அதற்கேற்றாற்போல் ஒரு மரணமும் நிகழ்ந்து விட்டது. நான் ஸைக்கோவைப் பிடிக்கத்தான் வந்திருக்

கிறேன், ஆனால் அதை மறைக்க லீவில் வந்திருப்பதாகச் சொல்கிறேன் என்று மக்கள் எண்ணிவிட்டார்கள். தொடர்ந்து மேலும் இரு மரணங்கள். குற்றவாளிகள் இன்னும் பிடிபடாத நிலை. ஆகவே ஸைக்கோவைக் கைப்பற்ற முடியாத நான், என் கையாலாகாத் தனத்தை ஒப்புக்கொள்ள மனமின்றி இக் கொலைகள் ஸைக்கோ செய்தவையல்ல என்று சாதிக்கிறேன் என்பதாக மக்கள் நினைத்தார்கள், பேசினார்கள்.''

''இருந்தாலும் அடுத்தடுத்து இங்கே மூன்று கொலைகள் நிகழ்ந்தது ஆச்சரியம்!''

''குறிஞ்சிப்பூ உனக்குத் தெரியுமே, ரங்கா! பன்னிரண்டு வருஷங்களுக்கு ஒருமுறைதான் பூக்கும். அதேபோலத் தான் இந்தச் சம்பவக் கோவையும். எப்போதோ ஒரு முறை இப்படி நேர்கிறது. அடுத்தடுத்து மூன்று கொலைகள் நடந்ததைச் சற்று யோசித்துப் பார்த்தால் புரிந்து கொள்வது சிரமமில்லை. தினகரன் விழுந்து இறந்தபிறகு அது ஸைக்கோ செய்த காரியம் என்ற வதந்தி பரவிவிட்டது. அந்த வதந்தியே மேலும் சில கொலைகள் நடக்கத் தூண்டு தலாக இருந்திருக்கலாம்.''

''எப்படிச் சொல்கிறீர்கள் அப்பா?''

''கொலை செய்ய வேண்டும் என்கிற எண்ணம் பலருக்கு இருக்கும்; துணிவு வராது! ஆனால் சந்தேகம் ஸைக்கோ மீதுதான் விழும், நாம் தப்பித்துக் கொள்ளலாம் என்ற நம்பிக்கை எழும்போது தைரியம் பிறக்கிறது. இந்த மூன்று கொலைகளுக்குக் காரணமானவர்களைப் பிடிப்பதில் இன்னும் கொஞ்சம் காலதாமதம் ஆகியிருந்தால் மேலும் ஓரிரு கொலைகள்கூட விழுந்திருக்கும்!''

நேரம் சென்றது. கைக் கடிகாரங்களின் டிக்டிக் ஒலி தெளிவாகக் கேட்டது.

''அப்பா!''

''இனி நாம் பேசுவது நல்லதல்ல, ரங்கா!''

''அமிர்தலிங்கம் உண்மையில் ஹிப்பியாகவே இருந்து இங்கு இன்றிரவு வராமல் போய்விட்டால்?''

''விடிய விடியக் கண் விழித்துக் காத்திருந்து பார்த்து விட்டு, அவனை ஸாரநாதன் என்று சந்தேகித்ததற்காக நாளை காலை மானசீகமாக அவனிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்ள வேண்டியதுதான்!''

''முன்புகூட ஸாரநாதனைப் பிடிக்கப் போலீஸார் திணறித் திண்டாடித்தான் போனார்கள், ஏன்?''

''அதைப் புரிந்து கொள்வதில் சிரமமே இல்லை, ரங்கா! கொலை வெறி ஏற்படும்போதுதான் அவன் பயங்கர மனிதன். கொலை வெறிகளுக்கிடையில் உள்ள கால கட்டத்தில் அவன் மிக மிக நல்லவன் என்பது மட்டுமல்ல; ரொம்ப ரொம்பச் சாமர்த்தியசாலி! கேடி எப்போதும் கேடிதான். முரடன் எப்போதும் முரடன்தான். ஆனால் ஸைக்கோ அப்படியல்ல. அவன் குணம், தோற்றம், நடை, உடை, பாவனை எல்லாம் அடியோடு மாறிப் போய் விடுகிறது. தெரிந்ததா காரணம்?''

''உம்'' என்றான் ரங்கன்.

நீண்ட நேரம், மிக மிக நீண்ட நேரம் அங்கே மௌனம் நிலவியது. ரங்கனுக்கு அலுப்புத் தட்ட ஆரம்பித்தது. பக்கத்தில் இருந்த ஃப்ளாஸ்கிலிருந்து மூடிக் கோப்பையில் டீ ஊற்றிக் கொண்டான்.

''வீல்!'' என்று சத்தம் கேட்டது! தொடர்ந்து அதே குரல் மலைச் சிகரங்களுக்கெல்லாம் எட்டி எதிரொலிக்கிறாப் போல மீண்டும் எழுந்தது! தீனமாகவும் இருந்தது; பீதி நிறைந்தும் ஒலித்தது!

அலறல்தான் என்றாலும் காதலியின் குரலைக் கண நேரத்தில் கண்டுகொண்டான் ரங்கநாதன். பதறித் துடித்து எழுந்த வேகத்தில் ஃப்ளாஸ்க், கோப்பை எல்லாம் எட்டப் போய் விழுந்து உடைந்தன. மேனி சிலிர்க்கத் திகைத்து நின்றான், கண்ணிமைக்கும் நேரம். அடுத்த வினாடி. "அப்பா! உங்கள் கணக்குத் தப்பாப் போச்சு! மீனாவுக்கு ஆபத்து!" என்று கூச்சலிட்டுக்கொண்டே இருளில் தட்டுத் தடுமாறி ஓடினான். இடித்துக் கொண்டதையும் தடுக்கி விழுந்ததையும் பொருட்படுத்தாமல் பத்மநாபன் குடும்பத் தினரின் அறை இருந்த திக்கு நோக்கி மின்னலெனப் பாய்ந்தான்!

★ ★ ★

# 39. வேஷம் கலைந்தது!

மனத்தால் மட்டுமின்றித் தோற்றத்தாலும் சைக்கோ ஸாரநாதனாக மாறிய அமிர்தலிங்கம், தன் அறையை விட்டு வெளியே வந்து கதவைச் சாத்தினான். அவன் கரத்தில் நெளிந்த கயிற்றுக்குச் சுற்றி வளைக்க ஒரு கழுத்து தேவைப் பட்டது. அது குறிப்பிட்ட ஒரு நபரின் கழுத்தாகத்தான் இருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. ஓர் ஆண் மகனின் கழுத்து அகப்பட வேண்டும், அவ்வளவுதான். அந்த ஆண்மகன் மூச்சு முட்டித் திணறி இறப்பதைத் தன் புலன்களால் ஸாரநாதன் உணர்ந்து சுகிக்க வேண்டும். மனத்தில் சுமையாகத் தேங்கிய வெறிக் குவியல் பீறிட்டுக் கொண்டு வெளிவந்துவிட, அவன் இலேசாகி, மேகப் பொதியாக ஆகாயத்தில் மிதப்பது போன்ற உணர்வைப் பெற வேண்டும். அவன் அந்த ஓட்டலில் இருந்த எந்த அறைக்கு வேண்டுமானாலும் சென்று, கதவைத் தட்டி, திறக்க வருபவனின் கழுத்தைக் கயிற்றால் சுற்றி வளைக்கத் தயார். வெளியே வராமல் உள்ளிருந்தபடியே "யார் அது?" என்று வினவினால் "தந்தி வந்திருக்கு ஸார்!" என்பது போன்ற ஏதேனும் ஒரு பொய்யைச் சமயோசிதமாகச் சொல்லவும் அவனுக்குத் தெரியும். கொலை நடந்து முடிந்த பிறகுதான் அவன் பிடிபடாமல் தப்பிச் செல்வதற்கான உபாயங்கள் பற்றி யோசிக்க முடியும். தன் அறைக்கே யாரும் அறியாமல் திரும்ப வந்து ஹிப்பியாக உருமாறி மறுநாள் அதிகாலையில் ஒன்றும் தெரியாதவனைப் போல்

அறையைக் காலி செய்துகொண்டு போய்விடலாம். அதற்கு முன்னால் போலீஸார் விஷயமறிந்து வந்து விட்டார்களென்றாலும் ஓட்டலில் தங்கியிருக்கும் அனைவரது அறைகளையும் சோதனையிட வேண்டும் எனத் தீர்மானித்துச் செயல்பட்டார்கள் என்றாலும், 'தான் அமிர்தலிங்கம் அல்ல, ஸாரநாதன் தான்' என்று காட்டிக் கொடுக்கக் கூடிய சிறு சாட்சியம் இருப்பினும் அதை அவர்கள் வருமுன்னால் அழித்து விடக்கூடிய சாமர்த்தியம் அவனுக்கு உண்டு. கொலை புரிந்துவிட்டுத் தன் அறைக்குத் திரும்புமுன்னரே யாராவது அவனைக் காண நேர்ந்து விட்டாலோ இப்போதுள்ள இந்தக் கோலத்திலேயே அவன் இருளோடு கலந்து ஓடி மறைவான்; வேறு ஊரை அடைந்து வேஷத்தை மாற்றிக் கொள்வான்; அல்லது கொடைக் கானலைச் சுற்றியுள்ள கானகங்களில் விலங்கு போலச் சில காலம் வாழ்க்கை நடத்தவும் அவன் தயாராகி விடுவான். என்ன செய்வானோ, அது அவன் கொலை வெறி அடங்கிய பின்னர்தான் அவனுக்கே தெரியவரும். இப்போதைக்கு அவன் சிந்தனை, செயல் இரண்டும், கொலை செய்ய வேண்டும் என்ற ஒரே நோக்கில் ஒன்றி ஒருமுகப் பட்டிருந்தன.

ஆனாலும் ஹோட்டல் அறைகளுள் ஏதேனும் ஒன்றின் வாசலில் நின்று கதவைத் தட்டாமல், பத்மநாபன் அறையை நாடி அவன் கால்கள் இயல்பாக அவனை இட்டுச் சென்றதற்கு வலுவான காரணம் ஒன்று இருந்தது. சில தினங்களுக்கு முன்னால் பத்மநாபன் ஹோட்டல் அதிபர் தனராஜிடம், "எங்கள் அறை வராந்தாக் கதவில் கண்ணாடி உடைந்திருக்கிறது; திருடன் வந்தால் அதன் வழியே கையை விட்டு உட்புறம் இருக்கும் தாழ்ப்பாளைச் சுலபமாகத் திறந்து விடுவான்" என்று சொல்லிக் கொண்டிருந்தது அவன் மனத்தில் பசுமையாக இன்னும் இருந்ததால் அவன் நிதான

மாக ஆனால் நிச்சயபுத்தியுடன் அவர் அறையை நோக்கிச் சென்றான். மற்ற அறைகள் என்றால் உட்புறக் கதவு, வராந்தாக் கதவு என்று இரு கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே இருப்பவர் இவனிடம் சிக்க வெளியே வர வேண்டும். பத்மநாபன் அறையில் ஒரு கதவை இவனே திறந்து விடலாம். உட்புறக் கதவைத் தட்டும்போது உள்ளே இருப்பவரை எழுப்ப அதிகமாகச் சத்தத்தைக் கிளப்ப வேண்டியிராது. அக்கம் பக்கத்து அறைகளில் உள்ளோர் விழித்துக்கொள்ள மாட்டார்கள். இந்த எண்ணம் அவனையும் அறியாமல் ஸாரநாதனின் உள்ளத்தில் வேலை செய்துதான் அவனை அங்கு போக வைத்தது.

**கை**யோடு எடுத்து வந்திருந்த டார்ச் விளக்கின் ஒளியில் உடைந்த கண்ணாடியைப் பார்த்தான் ஸாரநாதன். பாம்பு நெளிவது போல் கையை உள்ளே லாகவமாகச் செலுத்தித் தாழ்ப்பாளைத் தடவித் தேடிக் கண்டுபிடித்தான். ஒரு 'கீங்' ஒலிகூட எழுப்பாமல் கதவு திறந்துகொள்ள, வராந்தாவில் அடியெடுத்து வைத்தான். அப்போது அவனுக்குப் பேரானந்தத்தையும் ஓரளவு வியப்பையும் அளித்த காட்சியைக் கண்டான். வராந்தாவை அடுத்து இருந்த அறைக் கதவு 'வருக, வருக' என்று இவனைக் கைநீட்டி வரவேற்பது போல் திறந்தே கிடந்தது!

டார்ச் லைட் ஒளி அறையின் நாலாபுறமும் சுற்றிச் சுழன்று பத்மநாபன் படுத்திருக்கும் கட்டிலை அவனுக்குக் காட்டிக் கொடுத்தது. அசுரப் பசி கொண்டவன் போல் அவன் தன் வெறியைத் தணித்துக் கொள்ள விரைந்தான்.

"யாரு? என்ன?" என்ற இரண்டு கேள்விகளைப் பீதியும் குழப்பமும் நிரம்பிய குரலில் நாக்குளறக் கேட்டார் பத்ம நாபன். அதற்கு மேல் அவரால் குரலெழுப்ப முடியாதபடி

*மின்னலெனச் செயல்பட்டு விட்டன, ஸாரநாதனின் கரங்கள்.*

★ ★ ★

**ஸா**ரநாதனைப் பிடிக்க அப்பாவும், பிள்ளையும் ஏதோ திட்டம் போட்டிருக்கிறார்கள் என்பதை அறிந்ததிலிருந்து, அவர்களுக்கு ஏதேனும் ஆபத்து நேருமோ என்று பயந்து கொண்டிருந்த மீனாவுக்கு இலேசில் தூக்கம் வரவில்லை. "வாசல் கதவைச் சாத்திவிட்டுப் படு" என்று அம்புஜம் சொன்னதையும் அலட்சியப்படுத்தி விட்டுக் கட்டிலில் புரண்டு கொண்டிருந்தாள்; தூங்கும்போது சாத்திக் கொண்டால் போயிற்று என்ற நினைப்பில். நீண்ட நேரம் கழித்து இயற்கை வயப்பட்ட கண் இமைகளில் நித்திரை பாரமாக இறங்க அவை தாழ்ந்தன. ஆனால் மீனா தூங்கி விட்டாள் என்றும் சொல்ல முடியாது. இமைகள் மூடியிருந்தபோதிலும் தனக்குக் கண்கூசுவதை உணர்ந்தாள். ஸாரநாதனின் டார்ச் விளக்கு ஒளி சற்று நேரம் தன் முகத்தைத் தாக்கியதுதான் காரணம் என்பதை அறியாத வளாக, மின்சாரத் தடையால் அணைந்த விளக்குகள் மீண்டும் எரிய ஆரம்பித்துவிட்டன என எண்ணினாள். 'சரி, எழுந்து விளக்கை அணைத்து விட்டு, வாசல் கதவையும் சாத்திவிட்டு வந்து படுக்கலாம்' என்று தீர்மானித்தாள்.

அதே சமயம், "யார்? என்ன?" என்று வாய் குளறத் தன் தகப்பனார் கேட்பது அவள் செவிக்கு எட்டியது. 'சொப் பனம் கண்டு பிதற்றுகிறாரோ?' என்று யோசித்தவளாகக் கட்டிலில் உட்கார்ந்த நிலைக்கு வந்து கண் விழித்துத் திரும்பிப் பார்த்தாள்.

மின் விளக்குகள் இன்னும் எரிய ஆரம்பிக்கவில்லை தான். ஆனால் மங்கிய டார்ச் லைட் ஒளியே போது மானதாக இருந்தது, அவளைச் சொல்லி முடியாத பீதியில்

ஆழ்த்த. 'உடம்பிலுள்ள ரத்தமெல்லாம் உறைந்துவிட நான் ஒரு ஜடப் பொருளாகி விட்டேனா? கை காலை அசைக்க முடியாவிட்டால் போகட்டும்; கண்டத்திலிருந்து குரல் கூடவல்லவா எழும்ப மாட்டேனென்கிறது? ஸாரநாதனைப் பிடிக்க அவர்கள் எங்கோ ஏதோ திட்டம் போட்டுக் கொண்டிருக்கையில் அவன் இங்கேயல்லவா வந்து நிற்கிறான்! ஐயோ! பயத்தில் என் வாய் இப்படி அடைத்துப் போய்விட்டால் அப்பா என் கண் எதிரே கொலை செய்யப்படுவதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருந்த பெரும் பாவம் அல்லவா என்னைச் சூழும்! மற்றவர்கள் நினைப்பது கிடக்கட்டும், அப்புறம் என்னை நானே எப்படி மன்னித்துக் கொள்வது? நான் கூச்சலிட்டே ஆக வேண்டும். ஆண்டவனே! எனக்கு அந்தச் சக்தியைக் கொடு! பெரு முயற்சி செய்து மீனா 'வீல்' என்று கூக்குரலிட்டாள். ஒருமுறை ஓசை வெளிப்பட்ட பிறகு அடுத்தடுத்து வீறிட்டு அலறுவது கடினமாக இல்லை.

★ ★ ★

**தீ**னமான குரலில் பீதியுடன் எழுந்த அந்தக் கூக்குரல் ஓட்டலில் தங்கியிருந்த எத்தனையோ பேருடைய காதில் விழுந்தது. அவர்களில் பலர் குரல் வந்த திக்கு நோக்கி ஓடியும் நடந்தும் வரத்தான் செய்தார்கள். ஆனால் சகலருக்கும் முன்னால் வந்தவன் ரங்கநாதன். அடுத்த ஓரிரு வினாடிகளுள் உள்ளே பாய்ந்தவர் நடராஜன்.

"மீனா! மீனா!" என்று ஆசுவாசப் படுத்தும் குரலில் உரக்க அவள் பெயரைச் சொல்லி அழைத்ததுடன், அவளைக் கட்டி அணைத்து முதுகில் தட்டிக் கொடுத்தும், தலையை வருடிக் கொடுத்தும் ஆறுதல் அளித்தான் ரங்கன்.

அம்புஜம் கட்டிலை விட்டு எழுந்திருக்காமலே, "ஐயோ! ஐயோ!" என்று பயத்தில் கண்களை இறுக மூடிக்கொண்டு

கத்தி ரகளை செய்தாள். அனசூயா எழுந்து உட்கார்ந்து காரணம் தெரியாமலேயே 'ஓ' வென்று அழுதாள். விசுவின் தூக்கம் மட்டும் கலையவே யில்லை.

இடக் கரத்தில் பெரிய டார்ச் லைட்டும் வலக் கரத்தில் சிறிய துப்பாக்கியுமாக உள்ளே வந்திருந்த நடராஜன், "ஸாரநாதா! உன் வேஷம் அம்பலமாகிவிட்டது. பத்ம நாபனை விட்டுவிடு!" என்றார் அதிகாரத் தொனியில்.

ஆனால் ஸாரநாதனின் காதில் அவர் கோரிக்கை ஏறியதாகவே தெரியவில்லை. டார்ச் விளக்கொளி பத்ம நாபன் முகத்தில் விழுகிற மாதிரி அருகிலிருந்த ஒரு ஸ்டூலின் மீது வைத்துவிட்டு அவன் தன் படுபாதகச் செயலில் இறங்கியிருந்தான். பத்மநாபனின் முகம் போகிற போக்கை, உடல் துடிக்கிற துடிப்பை, விழிகள் பிதுங்குகிற அவலத்தை, மூச்சு முட்டித் திணறுகிற கோரத்தை, உயிர் சிறிது சிறிதாக விடைபெறுகிற காட்சியை யெல்லாம் அவன் அணு அணுவாக ரசித்துக் கொண்டிருந்தான். அவன் வெறி இந்த உச்ச கட்டத்தினை அடைந்த பிறகு சுற்றுச் சூழலை உணர்கிற சக்தியே அவனுக்கு இராது என நடராஜன் உணர்ந்திருந்தார். இனி அவனால் தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாது. காரியம் முழுமையாக முடிந்த பிறகுதான் அவன் புலன்கள் வேறு எதையும் கிரகிக்கும் திறனைத் திரும்பப் பெறும்.

ஆயினும் இன்னும் ஒரே ஒரு சந்தர்ப்பம் அவனுக்குக் கொடுத்துப் பார்க்கத் தீர்மானித்தார் நடராஜன். "ஸார நாதா! சுட்டுவிடுவேன் உன்னை! பத்மநாபனை விட்டு விடு!"

அவன் காதுகள் பத்மநாபனின் மூச்சு படிப்படியாக அடங்குவதைத் தவிர வேறு எதைக் கேட்டன? கண்கள்

பத்மநாபனின் முகத்தில் கொஞ்சம் கொஞ்சமாக நீலம் படர்வதைத் தவிர வேறு எதைப் பார்த்தன?

இனி வினாடி தாமதித்தாலும் பத்மநாபன் பிழைப்பது அரிது என உணர்ந்த நடராஜன், துப்பாக்கி பிடித்த வலக் கரத்தின் ஆள்காட்டி விரலை அழுத்தினார். மீண்டும் மீண்டும் அழுத்தி மூன்று தோட்டாக்களை ஸாரநாதனின் உடலில் பாய்ச்சினார்.

வெடிச் சத்தம் கேட்டு விழித்துக் கொண்டு மலங்க மலங்க எல்லாரையும் பார்த்தான் விசு.

ஸாரநாதன் பிணமாகி விழுந்தான்.

★ ★ ★

# 40. போய் வருகிறோம்!

"**போ**ய் வருகிறோம் மிஸ்டர் தனராஜ்! கொடைக் கானலையும் உங்கள் ஓட்டலையும் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாது எங்களால்" என்றார் பத்மநாபன்.

"அடுத்த ஸீஸனுக்கு வாங்க. இந்தத் தடவை ஏற்பட்ட கசப்பான அநுபவங்களை அடுத்த 'ட்ரிப்'பில் மறந்துட லாம்."

"அவசியம் வர வேண்டியதுதான்" என்றார் பத்மநாபன்.

"பணம்?" என்று கேட்டாள் அம்புஜம். "கொட்டிக் கிடக்கிறதா? ஏதோ அந்த மகானுபாவன் உங்க புத்தகத்தை மொழிபெயர்க்கும் உரிமையை வாங்கிண்டு மூவாயிரம் ரூபாய் தந்தான். இந்தப் பயணத்துக்கு உதவியது."

"தேசிய புத்தக நிறுவனத்தைச் சொல்றையா? அடுத்த வருஷம் எனக்கு சாகித்ய அகாதமி பரிசே வரும்; கவலைப் படாதே!" என்றார் பத்மநாபன். பின்னர் ஏதோ நினைத்துக் கொண்டவர் போல், "நடுவில் யாராவது புகுந்து தர்ஜுமா பண்ணினாலொழிய நிச்சயம் கிடைக்கும்!" என்றார்.

"ஆக மொத்தம் பரிசு கிடைக்கப் போறதில்லை! அதுக்கு இப்பவே சப்பைக்கட்டும் போட்டாச்சு!"

தனராஜுடன் மீனா, பத்மநாபன், அம்புஜம் எல்லாருமே சேர்ந்து சிரித்தார்கள்.

"என்ன பலமான சிரிப்பு?" என்று கேட்டுக் கொண்டே வந்தார் நடராஜன் கம்பீரத் தோற்றத்துடன். அந்தச் சிம்ம

நடைக்குக் கொஞ்சமும் குறையாத விதத்தில் பின்னா லேயே ரங்கன் வந்தான் ராஜா போலே. அவன் கண்கள் இப்போது அலாதியான ஒரு தைரியத்துடன் மீனாவைக் கவ்வி ருசிக்க ஆரம்பித்திருந்தன. ஓர் ஆபத்துக்குத் தான் என்றாலும் அவளைக் கட்டி அணைத்து விட்டதானது இந்தத் தெம்பை அவனுக்கு அளித்திருக்கலாம். அந்த அனுபவத்தில் உடல் முழுதும் அவனுக்குப் பரவி யிருந்த கதகதப்பு இன்னமும் அடங்கின பாடில்லை!

"ராத்திரி நல்லாத் தூங்கினீங்களா? தனராஜ் உங்களுக்கு வேறு நல்ல அறை கொடுத்தாரே?"

"தூக்கம்னா என்னன்னு ஞாபகம் வரவே இன்னும் இரண்டு நாட்களாகும்" என்றார் பத்மநாபன். "நீங்க வேறே இந்தக் குளிரைக்கூட யோசியாமல் பச்சைத் தண்ணியை என் மேலே கொட்டிட்டேள்!"

"பின்னே மயங்கிக் கிடந்த உங்களை எழுப்ப வழி?"

"ஆரம்பத்திலிருந்தே அந்த ஹிப்பியை ஒரு வேஷக் காரன்னு நினைச்சு வெறுத்தவள் நான் ஒருத்திதான். அதுக்காக அப்பாவிடம் எவ்வளவு 'பாட்டு' கேட்டிருக் கேன்!" என்றாள் மீனா.

"அது சரி, ரங்கன் சொல்றதைப் பார்த்தால் உங்க திட்டம் பிசகிட்டாப் போல் இருக்கே? நீங்க வேறு எங்கேயோ வலை விரிச்சிருக்க, உங்களால் சீண்டி விடப்பட்ட புலி வேறே எங்கேயோ பாய்ஞ்சுடுத்தே!" என்றார் பத்மநாபன் நடராஜனை நோக்கி.

"உண்மைதான்; நான் தப்புக் கணக்குத்தான் போட் டுட்டேன். இங்கு நடந்த கொலைகள் ஸைக்கோ செய்தவை யல்ல என்று நிரூபணமானதும் அதுவரையில் அடங்கிக் கிடந்த ஸாரநாதனின் கொலை வெறி பிரவாகமாகப் பொங்கும் என்று நான் எதிர்பார்த்தது வரை சரி. ஆனால்

அவன், வதந்தியை உடைத்து விட்டதற்காக ஆத்திரம் அடைந்து என்னைத்தான் தாக்குவான் என்று எதிர்பார்த்த தில் தவறு செய்துவிட்டேன். சாதாரண மனிதனா யிருந்தால் பழி வாங்கும் எண்ணம் எழுவது இயல்பு. ஆனால் ஸைக்கோவின் நிலை வேறு. ஓர் ஆண்மகனைக் கொல்ல வெறி எழுகிறதேயன்றி இன்னாரைக் கொல்ல வேண்டும் என்று குறிப்பாகச் சிந்திப்பதில்லை. அதனால் தான் அவன் நேரே உங்க அறைக்கு வந்துவிட்டிருக்கிறான்!''

''போகட்டும், நாங்க ஊர் திம்பறதுக்கு முன்னாடி உங்களிடம் தனியாக இரண்டு வார்த்தைகள் பேசணும்'' என்ற பத்மநாபன், ''அம்புஜம், நீயும் வாயேன்'' என்று சொல்லிக் கொண்டே அவரை அப்பால் அழைத்துப் போனார்.

பெற்றவர்கள் எதைப் பற்றிப் பேசப் போகிறார்கள் என்பது மீனாவுக்கும் ரங்கனுக்கும் தெரியாமல் இல்லை. அவர்கள் எடுக்கும் முடிவு நல்லபடியாக இருக்க வேண்டுமே என்று குறிஞ்சி ஆண்டவனை வேண்டிக் கொண்டாள் மீனா. எதனாலோ முன்போல அவளால் ரங்கனை ஏறிட்டு நேருக்கு நேராகப் பார்க்க முடியவில்லை. தலைகுனிந்தே பேசினாள்:

''காதலியிடமும் கட்டிய மனைவியிடமும் எதையும் ரகசியமாக வைக்கப் படாது என்பது இதற்காகத்தான். நீங்க ஸைக்கோவைப் பிடிக்கணும்னு போட்டதிட்டத்தை ரகசியமாகவே காப்பாற்றி யிருந்தால் நான் நிம்மதியா தூங்கியிருப்பேன். ஒருவேளை அப்பாவைக் காப்பாற்ற முடியாமலேகூடப் போயிருக்கலாம்!''

''என் அப்பாகூட இதுவரை ரகசியமாயிருந்த ஒரு விஷ யத்தைப் புரிஞ்சுக்கிட்டுத்தான் இதோ வரார்'' என்றான் ரங்கன்.

*அதற்கு ஏற்றாற்போல் அவரும் நெருங்கி வந்து, "என்ன ரங்கா இது? இவங்க ரெண்டு பேரும் என்னைக் கேலி பண்ணும்படியான நிலையில் கொண்டு வைச்சுட்டே? 'டி.ஐ.ஜி. (ஸி.ஐ.டி) பதவி வகிக்கிறீங்க; சொந்த மகன் காதல் வயப்பட்டு விட்டான்னு தெரியலையே உங்களுக்கு?' என்கிறாங்க. துப்பறியும் தொழிலுக்கே அவமானம் நேர்ந்து போச்சாம்!" என்றார்.*

*"உண்மையாகவே நீங்க கொஞ்சம்கூடச் சந்தேகிக்க வில்லையா அப்பா?"*

*"செண்பகனூர் கல்லூரித் தோட்டத்தில் நீ நடந்து கிட்டதையும் பேசியதையும் பார்த்தப்போ சந்தேகம் தட்டிச்சு. ஆனால் அடுத்தடுத்து ஏதேதோ வேலைகள் வரவே இதில் சிந்தனை செல்லலை."*

*"ரங்கா! நான் தீர்மானிச்சுட்டேன், ஜாதி, குலம்னு தடை ஒண்ணும் சொல்லிண்டிருக்கப்படாதுன்னு. நான் பெற் றெடுத்த குழந்தையைக் காப்பாற்றியவன் நீ. நான் கட்டிய கணவனைக் காத்துத் தந்தவர் உன் அப்பா. அதற்குப் பிரதியாக நான் என்னதான் செய்யப்படாது?" என்றாள் அம்புஜம்.*

*ரங்கன் விருட்டென்று அம்புஜத்தைத் தலைநிமிர்ந்து நோக்கினான். உறுதியான குரலில் கம்பீரமாகப் பேசினான்: "அம்மா! நீங்க ஏதோ கைம்மாறு செய்வது போல் மீனாவை எனக்குத் தரவேண்டாம். 'ரங்கன் என்கிற மனிதன் நல்லவன்; யோக்கியன்; உங்கள் பெண்ணைச் சந்தோஷ மாக வைத்துக்கொள்வான்' என்று உண்மையில் உங் களுக்குத் தோன்றினால் மீனாவை என்னிடம் ஒப்படை யுங்கள். இல்லாவிட்டால் வேண்டவே வேண்டாம்!"*

*சட்டென்று அம்புஜம் ரங்கனை நெருங்கி, அவன் வலக் கரத்தை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு ஈரமாக் கினாள். "ரங்கா! நான் ரொம்பப் படிச்சவள் இல்லே. எந்தச்*

சந்தர்ப்பத்தில் எதைப் பேசணும்னு தெரியாம இப்படித்தான் ஏதாவது சொல்லிவைப்பேன். உன் உயர்ந்த குணம் பற்றி நான் இனிமேல் யாரைப் போய் விசாரிக்கணும்? மீனா உன்னை அடையப் பாக்கியம் பண்ணி யிருக்கணும்னு எனக்கு நன்னாப் புரியறது. உன்னை அவள் சந்திச்சது ஆண்டவன் சோதனையோன்னு ஆரம்பத்தில் நினைச்சேன்; ஆண்டவன் கருணைன்னு இப்போ உணர்ந்துட்டேன்.''

நடராஜன் இடைமறித்தார்: ''ரங்கன்! கண்டதும் காதல் என்பார்களே அதுமாதிரி மீனாவும் நீயும் சந்திச்சுப் பதினைஞ்சோ, பதினாறோ நாட்கள்தான் ஆகுது. இதற்குள் நாம் எல்லோருமாகச் சேர்ந்து ஒரு தீர்மானத்துக்கு வரது சரியில்லை. இன்னும் இரண்டு வருஷங்கள் போகட்டும். உங்க இரண்டு பேருடைய படிப்பும் முடியட்டும். அதன் பின்னரும் உங்கள் காதல் இதே அளவுக்குத் தீவிரமாக இருந்தால் கல்யாணத் தேதி பற்றி யோசிக்கலாம்.''

''இரண்டு வருஷங்கள் என்ன; இரண்டு யுகம் காத்திருப் போம்!'' என்றாள் மீனா.

''ஏய்! நீ எழுத்தாளர் மகள் என்கிறதை நிரூபிக்கிற மாதிரி பேசறே. என்னால் அவ்வளவு காலம் காத்திருக்க முடியாது!'' என்றான் ரங்கன்.

எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள். அதனூடே நடராஜன் குரலை உயர்த்தி, போலீஸ் அதிகாரி என்ற ஹோதாவில் பேசுவது போல் கண்டிப்புடன் கூறினார்: ''இந்த இரண்டு வருஷங்களும் நீங்க அடிக்கடி சந்திக்கலாம்; ஆனா அது பெரியவங்க முன்னிலையில்தான் நடக்கணும்!''

★ ★ ★

'**ஸ்மி**யிஸைட் பாயிண்ட்' அருகே, கால்ஃப் மைதானத் தில் அப்பாவும் பிள்ளையும் விளையாடிக் கொண்டிருந்

தார்கள். கால்களை அகட்டிப் பந்துக்கு இருபுறமும் வைத்து, கால்ஃப் க்ளப்பைக் கையில் கச்சிதமாகப் பிடித்து, உடலை இலேசாக அசைத்துக் குறி பார்த்துக் கொண்டு பின்னர் க்ளப்பை உயர்த்தி 'விஷ்ஷ்' என்று ஒலி எழுப்புகிறாற்போல் வேகமாகக் கீழே கொணர்ந்து பந்தைத் தாக்கினார் நடராஜன். பந்து 'ஜிவ்'வென்று மேலே கிளம்பி, அவர் எதிர் பார்த்த திக்கில் ஓர் அரை வட்டம் அடித்து இறங்கியது.

"பியூட்டிஃபுல் ஷாட்!" என்றான் ரங்கன். இருவரும் பந்து இருந்த திசை நோக்கி நடந்தார்கள். அப்பாவின் பக்கத்தில் இப்படிப் போகும்போது ரங்கன் கேட்டான்: "அப்பா! என்னை தப்பா நினைக்காதீங்க. ஆனால் ஒரு சந்தேகத்தைத் தெளிவுபடுத்திக்காமல் இருக்க என்னால் முடியவில்லை. ஸாரநாதனை நீங்க கொன்றுதான் இருக்க வேண்டுமா? பத்மநாபனைக் காப்பது ஒன்றுதான் நோக்கம் என்றால், உங்க துப்பாக்கியின் அடிவாரத்தைக் கொண்டு ஸாரநாதனின் தலையில் சரியான இடத்தில் நீங்க ஒரு தட்டுத் தட்டி யிருந்தால் போதுமே? அவன் மயங்கி விழுந்திருப்பான். அவனைச் சிறைப்படுத்தி யிருக்கலாம், இல்லையா?"

நடராஜன் தொண்டையைக் கனைத்துக் கொண்டார். ஓர் இக்கட்டான நிலையில் சிக்கிக்கொண்ட பாவம் முகத்தில் தெரிந்தது.

"ரங்கன்!" என்று ஆரம்பித்து மறுபடியும் தொண்டையைக் கனைத்துக் கொண்டு இலேசான தடுமாற்றத்துடன் பேசினார்:

"உனக்கு மட்டும் சொல்றேன், ரங்கா! பிளீஸ் கீப் இட் எ ஸீக்ரெட்! ஸாரநாதனை மறுபடியும் விசாரணைக்குக் கொண்டுவர எனக்கு விருப்பமில்லை. அவன் நலனுக்காக வாதாடுவதாகச் சொல்லிக்கொண்டு தனக்குப் பிராபல்யத்தைத் தேடிக்கொள்ள மறுபடியும் ஒரு வக்கீல் வருவான்.

மனோதத்துவ நிபுணரையும் அழைப்பான். நீதிபதி, ஸாரநாதனுக்கு மனோவியாதி என்பதால் தூக்குத் தண்டனை விதிக்கமாட்டார். ஆயுள் தண்டனை அடைந்து சிறைவாசம் செய்கிறவன், மறுபடியும் கொலை வெறிக்கு உள்ளாகும்போது, ஏமாந்து போய் அவனிடம் அகப்பட்டுக் கொள்ளும் ஒரு சிறைச்சாலை சிப்பந்தியைத் தீர்த்துக் கட்டிவிடலாம் அல்லது சக கைதி ஒருவனை அல்பாயுசில் எமனுலகுக்கு அனுப்பி வைக்கலாம். ஏன், மீண்டும் ஒரு முறை அவன் போலீஸ் காவலிலிருந்து தப்பி ஓடிவிட்டா லும் வியப்பதற்கில்லை.

''இம்மாதிரி யெல்லாம் நேர்வதைத் தவிர்க்கத்தான் நான் அவனைச் சுட்டுவிட்டேன். ஆனால் உன்னைத் தவிர வேறு யாராவது இதுபற்றி என்னைக் கேட்டால், ஒரு தீர்மானத் துடன் நான் செயல்பட்டதாகச் சொல்ல மாட்டேன். பத்மநாபனைக் காக்க வேண்டுமே என்ற கவலையும் அவசரமும் மேலோங்கிய அந்தத் தருணத்தில் துப்பாக்கியை இயக்குவதைத் தவிர எனக்கு வேறொன்றும் தோன்ற வில்லை என்றுதான் விளக்கம் தருவேன்!''

ரங்கன் யோசித்துக் கொண்டே நடந்தான் தகப்ப னாருடன். அரை நிமிஷம் கழித்து, ''நீங்க செய்ததுதான் சரின்னு எனக்குத் தோணுது அப்பா!'' என்றான்.

''தாங்க்யூ, மை ஸன்! தாங்க்யூ!'' என்றார் நடராஜன், டி.ஐ.ஜி., ஸி.ஐ.டி.

★ ★ ★

# முடிவுரை

நடராஜனையும் ரங்கனையும் மலை மேலே விட்டு விட்டுப் பத்மநாபன் குடும்பம் புறப்பட்டது. வளைந்து நெளிந்து சென்ற சாலை வழியே கீழே இறங்கிய பஸ், இடையில் ஒரு சிற்றூரில் சில நிமிஷங்கள் நின்றது. மலைப் பாதையின் முடிவுக்கு அவர்கள் இன்னும் வந்து விடவில்லை. இரு புறமும் பசுஞ் சோலைகள்-மா, பலா, வாழை என்று பலவிதத் தோப்புக்கள். பஸ்ஸின் ஓசை நின்றதும் பட்சி ஜாலங்களின் பலவிதமான குரல் ஒலிகளைக் கேட்க முடிந்தது. இத்தனை நாட்களாகத் தான் உணர்ந்தறியாத குதூகல த்வனியுடன் அந்தப் பட்சிகள் சப்தம் எழுப்புவதாக மீனாவுக்குத் தோன்றியது.

ஆனந்தம் பிரவாகமாகப் பொங்கும் மீனாவின் உள்ளத்துக்கு இனி காண்பன, கேட்பன எல்லாமே ஒரு புதிய எழிலுடனும், முன்னிலும் அதிகமான இனிமை யுடனும்தானே விளங்கும்! பட்சிகளின் குரலொலிகளை அவள் தனித் தனியே எண்ண ஆரம்பித்தாள். குறைந்த பட்சம் ஆறு விதமான பறவைகள் அவ்விடத்தில் இருப்ப தாகக் கணக்கிட்டாள்.

பத்மநாபன் திடீரென்று எதையோ நினைத்துக் கொண் டவர் போல் சிரித்தார்.

''எதற்குச் சிரிக்கிறேள்? சொல்லி விட்டுச் சிரியுங் களேன்'' என்றாள் அம்புஜம்.

''நம்ம திருச்சேறையை நினைச்சுண்டேன் சிரிப்பு வந்துடுத்து! அவர் ஒரு கல்யாண விருந்தின்போது என்ன பண்ணினார் தெரியுமா? பால் பாயஸத்தை உள்ளங்கையில் வாங்கி வாங்கிப் பாக்கெட்டிலே விட்டுண்டார்!''

''நிஜமாகவா? இப்படி யாராவது பண்ணுவாளோ?'' என்றாள் அம்புஜம்.

கல்யாணம் என்ற சொல்லைக் கேட்டதுமே மீனாவுக்கு உடலெல்லாம் புல்லரித்தது.

''காரணம் இல்லாமல் போகலை'' என்று கதையைத் தொடர்ந்தார் பத்மநாபன்: ''வயிறு சரியில்லைன்னு சொல்லியிருக்கார். யாரோ ஒருத்தன் விஷமத்தனமாக 'இந்தாரும் லேகியம்'னு உருட்டித் தந்திருக்கான். அதில் அபின் கலந்திருப்பது தெரியாமல் ஒண்ணுக்கு ரெண்டாச் சாப்பிட்டுட்டார்!''

''அப்புறம் என்ன, பாயஸத்தைப் பாக்கெட்டில் மட்டுமா, பையில் கூட நிரப்பிண்டு போகலாம்னு தான் தோணும்!'' என்று கூறிச் சிரித்தாள் அம்புஜம்.

பஸ் நகர்ந்தது.

''நான் சொல்றது ரொம்ப நாட்கள் முன்னாடி. நாலு நாட்கள் கல்யாணம் நடந்த காலம்'' என்றார் பத்மநாபன்.

''நாலு நாட்கள் இல்லா விட்டாலும் உங்க பெண்ணுக்கு ரெண்டு நாள் கல்யாணமாவது நடத்தி யாகணும், நினைவிருக்கட்டும்.''

''நல்ல வேளை; இரண்டு வருஷங்கள் டயம் இருக்கே, அதுக்குள்ளே பணம் காசுக்கு ஏதாவது ஒரு ஏற்பாடு பண்ணினால் போச்சு.''

மீனாவுக்குத் தானும் ரங்கனும் மணக் கோலத்தில் நிற்கும் காட்சி மனத் திரையில் ஓடியது.

அதே சமயம், அனசூயா தன் கையிலிருந்த டிரான் ஸிஸ்டர் ரேடியோவை முடுக்கிவிட, சொல்லி வைத்தாற் போல் திருச்சி வானொலி நிலையத்திலிருந்து காருகுறிச்சி அருணாசலத்தின் நாதஸ்வர இன்னிசை கன ஜோராகக் கேட்டது!

"அக்காவுக்கு கல்யாணம் வரப் போறதோன்னோ, அதுக்குத்தான் ரேடியோலே டும்முடக்கா வைச்சிருக்கா!" என்றான் விசு.

மேனி சிலிர்க்க ஆனந்த பரவசமாகி அவனைக் கட்டி அணைத்து முத்தமிட்டாள் மீனா.

**முற்றும்**